ஸ்ரீ குருகிருபா விலாஸம்



ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின்
திவ்ய மஹிமைகளை எடுத்துக்காட்டும்
கட்டுரைகளின் தொகுப்பு

மூன்றாம் பாகம்

எழுதியவர்கள்:
பல அறிஞர்களும் பக்தர்களும்

1927ம் ஆண்டில் கோயமுத்தூரில் ஸ்ரீ ஆசார்யர்கள் முதல் முறையாகத் தமிழில் அருளிய உபந்யாஸங்களும் அடங்கியது

வெளியிடுவோர்:
சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் பக்தர்கள்
சார்பில்
ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ப்ரஹ்ம வித்யா டிரஸ்ட்

புதிய பதிப்பு
2009

Sri Gurukripa Vilasam (Volume III)
Essays on the greatness of
H.H.Sri Chandrasekhara Bharathi Mahaswamigal &
His benedictory lectures (In Tamil)

New Edition : 2009

Published by:
Sri.K.Narayanaswami
"Srikanta Vilas"
5, Brindavan Street,
Mylapore, Chennai-600 004
Phone: 044-2498 5946
(Also, Vidyaranyapuram, Sringeri-577 139)

On behalf of:
Sri Chandrasekhara Bharathi Brahma Vidya Trust (Regd.)

Sponsored by:
Sri. Suresh Krishnamurthy, U.S.A.

Computer Composing:
Sri.S.P.Venkata Kannan, Chennai-33, Ph: 94441 56275

Supervision & Coordination:
Sri.E.R.Ravikumar

Offset Printing:
Sri.K.Narasimhan, Aaral Graphics, Ph: 044-2361 5979

ஸமர்ப்பணம்

சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு
ஶ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளின் ஸன்னிதியில்
இந்தப் பதிப்பு பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்யப்படுகிறது

பொருளடக்கம்

பதிப்புரை

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ நவரத்னமாலிகா

ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இயற்றியது

சிஷ்யர்களின் அனுபவங்கள்

பக்கம்

1. ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் 21
2. டாக்டர் ஸ்ரீ C.P.இராமஸ்வாமி ஐயர் 66
3. காசி ஸ்ரீ ஸச்சிதானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் 68
4. ''அருள் தீக்ஷை'' 111
5. ஸ்ரீ M.S.மந்திரேசுவர சர்மா 132
6. ஸ்ரீ K.சங்கரநாராயண ஐயர் 139
7. ''வித்யார்த்தி'' 145
8. களக்காடு ஸ்ரீ S.இராமநாராயண ஐயர் 149
9. காருகுறிச்சி ஸ்ரீ இராமநாத சாஸ்திரிகள் 156
10. கடயநல்லூர் ஸ்ரீ V.S.மணி ஐயர் 159
11. வத்தலகுண்டு ப்ரஹ்மஸ்ரீ நாராயண பாகவதர் 163
12. கோவை ஸ்ரீ V.A.கிருஷ்ணமூர்த்தி ஐயர் 170
13. ''சிஷ்யர்'' 181
14. ஸ்ரீ T.V.விசுவநாத ஐயர் 184
15. ஸ்ரீ S.G.நரஸிம்மய்யா 188
16. ஸ்ரீ T.L.வேங்கடராம ஐயர் 196
17. ஸ்ரீ K.பாலசுப்ரமண்ய ஐயர் 199
18. ஸ்ரீ K.நாராயணஸ்வாமி 203
19. ஸ்ரீ ''குருபாதசேகரன்'' .... 236(i)
20. ஸ்ரீ ''குருபாதஹ்ருதயன்'' .... 236(xi)

ஸ்ரீ ஆசார்யர்கள் அருளிய உபந்யாஸங்கள்

அருளுரை - 1 .... (13.06.1927) 241
அருளுரை - 2 .... (14.06.1927) 258
அருளுரை - 3 .... (15.06.1927) 278
அருளுரை - 4 .... (18.06.1927) 298
அருளுரை - 5 .... (23.06.1927) 312

பதிப்புரை

''ஸ்ரீ குருகிருபா விலாஸம்'' என்ற தலைப்பில் இது மூன்றுவது புத்தகம். ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்தின் 34-வது பீடாதிபதியாகவும் தவச்சிரேஷ்டர், ஞானி, அவதூதர், ஜீவன்முக்தர் என்றெல்லாம் போற்றி வணங்கப்பட்டு விளங்கியவருமான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் மஹிமைகளைப்பற்றி ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் எழுதியிருந்தவையெல்லாம் தொகுக்கப்பட்டு முதல் புத்தகமாக வந்தது. இரண்டாவது புத்தகத்தில் ஸ்ரீ ஞானநந்த பாரதீ ஸ்வாமிகள் ஸ்ரீ ஆசார்யர்களைப்பற்றி தமிழில் எழுதியிருந்ததெல்லாம் பதிப்பிக்கப்பட்டன.

இந்த மூன்றும் புத்தகத்தில் மற்ற அறிஞர்களும் பக்தர்களும் தங்கள் அனுபவபூர்வமாக எழுதியிருந்த கட்டுரைகள் எல்லாம் அடக்கப்பட்டுள்ளன. தவிர, 1927ம் ஆண்டில் ஸ்ரீ ஆசார்யர்கள் முதன்முதலாக தமிழ் பேசும் மாநிலத்தில் காலடி எடுத்து வைத்தவுடன் கோயமுத்தூரில் தமிழிலேயே வழங்கிய அபூர்வமான உபந்யாஸங்கள் இந்த மூன்றும் புத்தகத்தில் தனிப்பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகையால் முதல் இரண்டு புத்தகங்களும் எவ்வளவு மதிப்பு மிகுந்தவையாக அமைந்தனவோ அப்படியே இந்த மூன்றும் புத்தகமும் அமைந்துள்ளது. இவைகளுடன், தனிப்புத்தகங்களாக வந்துள்ள ''தேன் மொழிகள்'', ''உபதேச ரத்னமாலா'' என்ற தலைப்புகளுடன் ஏற்கெனவே வெளிவந்துள்ள இருபுத்தகங்களையும் சேர்த்துக் கொண்டால், இதுவரை ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஸம்பந்தமாக தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ள எல்லா விஷயங்களும் இந்த ஐந்து புத்தகங்களில் அடங்கி விடுகின்றன என்று கூறிவிடலாம்.

இந்தத் தொண்டில் எங்களுக்கு ஆர்வமும் உற்சாகமும் அளித்துள்ள பல அன்பர்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இளமையிலேயே மெய்ஞான வழியில் காலடி எடுத்துவைத்து அனேக இளைஞர்களுக்கு ஆதர்ச புருஷராக விளங்கும் ஸ்ரீ R.M. உமேஷ் அவர்களின் வழிகாட்டுதல் எங்களுக்கு பூரணமாக இருந்திருக்கிறது. அவருக்கு எங்கள் வணக்கமும் மனம் நிறைந்த நன்றியும் உரித்தாகுக.

எங்கள் உயர்நத நண்பர் ஸ்ரீ G. இராமசுப்ரமணியன் அவர்கள் இந்தப் புத்தகம் முழுவதையும் அச்சேறுவதற்கு முன் பார்வையிட்டு நுணுக்கமான விஷயங்களை எடுத்துக்காட்டி, சீர்த்திருத்தி மெருகேற்றியுள்ளார். எங்கள் உத்தம நண்பர் ஸ்ரீ E.R. இரவிகுமார் உண்மையான குருபக்தர்; நுண்மையான அறிவுள்ளவர்; எடுத்துக்கொண்ட எந்தக் காரியமும் சீராகவும் பிழையின்றியும் செய்யப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அவர் அயராது உழைத்து இந்தப் புத்தகத்தை வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்விருவரையும் நாங்கள் எப்போதும் நன்றியுணர்ச்சியுடன் நினைந்து போற்றுவோம்.

புத்தகம் அழகாக அமைவதற்கு அச்சிடுபவரின் அழகுணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் இன்றியமையாதவை. அந்த உயர்ந்த குணங்கள் நிறைந்து இருப்பவர் Aaral Graphics உரிமையாளர் ஸ்ரீ K. நரஸிம்மன் அவர்கள். இந்தப் புத்தகம் அவருடைய வேலைத் திறனுக்கு சிறந்த சான்ருக அமைந்துவிட்டது. அவருக்கு எங்கள் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

நல்ல எண்ணங்கள் தோன்றுவதும், உயர்ந்த குறிக்கோள்கள் அமைவதும், அவைகளுக்கு ஏற்ப தன்னுசை எதுவுமின்றி செயல்படுவதும், அதில் வெற்றி காண்பதும் எல்லாம் நம் குருநாதரின் அனுக்ரஹ பலத்திஞல்தான் ஏற்படுகின்றன. அவருடைய பாதகமலங்களைப் போற்றி இந்த மலரையும் அவர் முன்னிலையில் ஸமர்ப்பணம் செய்கிருேம்.

01.03.2005 பக்தர்கள் சார்பாக
வித்யாரண்யபுரம் **கே. நாராயணஸ்வாமி**
சிருங்கேரி

❄



ஶ்ரீ சந்திரசேகர பாரதீ நவரத்னமாலிகா

ஜகத்குரு ஶ்ரீ பாரதீதீர்த்த ஸ்வாமிகள் இயற்றியது

1) श्रीमच्चन्दिरशेखरभारत्यभिधानमाश्रये यमिनम् ।
निरवधिसंसृतिनीरधिमग्नजनोद्धरणबद्धदीक्षं तम् ॥ १ ॥

ஶ்ரீமச்சந்திரசேகர பாரத்யபிதாநம் ஆச்ரயே யமிநம் ।
நிரவதி ஸம்ஸ்ருதி நீரதிமக்ன ஜநோத்தரண பத்த தீக்ஷம் தம் ॥

'ஸம்ஸாரம்' என்ற எல்லையற்ற ஸமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜனங்களைக் (கைதூக்கிக்) கரைசேர்க்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஶ்ரீமத் சந்திரசேகர பாரதீ என்ற யதிசிரேஷ்டரை சரணமடைகிறேன்.

2) काषायाम्बरपरिवृतं ईषत्स्मितवदनमिष्टदातारम् ।
शेषाख्येयगुणालिं भूषायितशमदमादिकं वन्दे ॥ २ ॥

காஷாயாம்பர பரிவ்ருதம் ஈஷத்ஸ்மித வதநம்
இஷ்டதாதாரம் ।
சேஷாக்யேய குணாளிம் பூஷாயித சமதமாதிகம் வந்தே ॥

அவர் காஷாய வஸ்திரத்தை அணிந்திருப்பவர். முகத்தில் புன்னகை தவழக் காட்சியளிப்பவர். வேண்டுவதையெல்லாம் கொடுப்பவர். சமம், தமம் போன்ற குணங்களே தமக்கு பூஷணங்களாக உடையவர். (ஆயிரம் தலைகளைப் படைத்த) ஆதிசேஷனால் மட்டுமே அவருடைய உயர் குணங்களை வர்ணிக்க முடியும். (இப்படிப்பட்ட) அவரை வணங்குகிறேன்.

3) गाङ्गझरीसमवाचं स्वाङ्गत्विण्णिर्जिताच्छगाङ्गेयम् ।
माङ्गलिकमाश्रयेऽहं जाङ्गलिकं भवमहाविषस्येशम् ॥ ३ ॥

காங்கஜரீஸமவாசம் ஸ்வாங்கத்விண்ணிர்ஜிதாச்ச
காங்கேயம் ।
மாங்கலிகமாச்ரயே அஹம் ஜாங்கலிகம் பவமஹா
விஷஸ்யேசம் ॥

அவருடைய தேககாந்தி பொன்னையும் மிஞ்சக் கூடியது. அவருடைய வாக்கின் பெருக்கு கங்கையின் பிரவாஹத்திற்கு ஸமமானது. 'ஸம்ஸாரம்' என்ற கடுமையான விஷத்திற்கு மாற்றை அளிக்கக்கூடிய

பெரிய விஷவைத்தியர் அவர். அந்த மங்கள மூர்த்தியை சரணமடைகிறேன்.

4) करुणामृतसरिदीशं गुरुणाऽपि स्तुत्यमतुलधीयुक्तम् ।
तरुणारुणवदनाब्जं च नृणां गम्यं तमाश्रये सततम् ॥ ४ ॥

கருணாம்ருத ஸரிதீசம் குருணா அபி ஸ்துத்யம்
அதுலதீயுக்தம் ।
தருணாருண வதநாப்ஜம் ச ந்ருணாம் கம்யம் தமாச்ரயே
ஸததம் ॥

அவர் கருணாம்ருத கடல் போன்றவர். (தம்) குருவினாலும் போற்றப்பட்டவர். அவருடைய புத்தி தீக்ஷிண்யம் அஸமானமானது. அவருடைய முக கமலம் உதிக்கின்ற கதிரவனை நிகர்த்தது. எல்லா ஜனங்களுக்கும் ஸௌலப்யமானவர். எக்காலத்திலும் அவரை நான் ஆசிரயிக்கிறேன்.

5) अतिवेलमधुरभाषितमतितरलस्वान्तमखिलवन्द्यपदम् ।
यतिवर्यं हृदि कलये मतिमान्द्यस्यापनुत्तये सततम् ॥ ५ ॥

அதிவேல மதுரபாஷிதம் அதிதரள ஸ்வாந்தம் அகில
வந்த்யபதம் ।
யதிவர்யம் ஹ்ருதி கலயே மதிமாந்த்ய அபநுத்தயே
ஸததம் ॥

எப்பொழுதும் அவருடைய பேச்சு மதுரமாக இருக்கும். அவருடைய உள்ளமோ நளினமானது.

அவருடைய சரணயுகளத்தை அனைவரும் வணங்குவர். புத்தியின் மந்தத் தன்மை நீங்குவதற்காக அவரை என் ஹிருதயத்தில் இருத்திப் போற்றுகிறேன்.

6) पालितनिजभक्ततर्ति शीलितवेदान्तगूढतत्त्वं तम् ।
मीलितलोचनयुगलं लालितभुवनत्रयं नमामि सदा ॥ ६ ॥

பாலித நிஜபக்தததிம் சீலித வேதாந்த கூடதத்த்வம் தம் ।
மீலிதலோசனயுகளம் லாலிதபுவனத்ரயம் நமாமி ஸதா ॥

தம்மை அண்டும் பக்தர்கள் அனைவரையும் அவர் காப்பாற்றுபவர். வேதாந்தத்தின் மறைபொருளை நன்கு அறிந்தவர். இரு கண்களையும் மூடி தியானத்தில் ஆழ்ந்திருப்பார். மூவுலகங்களுக்கும் பிரியமானவர். அவரை நான் எப்பொழுதும் வணங்கிக் கொண்டேயிருக்கிறேன்.

7) राकाशशिनिभवक्त्रं पाकारिप्रमुखकीर्त्यचारित्रम् ।
आकाशकेशभक्तं शोकापहमाश्रये गुरूत्तंसम् ॥ ७ ॥

ராகாசசிநிப வக்த்ரம் பாகாரி ப்ரமுக கீர்த்ய சாரித்ரம் ।
ஆகாசகேச பக்தம் சோகாபஹம் ஆச்ரயே குரூத்தம்ஸம் ॥

அவருடைய முகம் பூர்ண சந்திரன் போன்றது. அவருடைய (தூய்மையான) சரித்திரமோ இந்திரன் முதலான தேவர்களாலும் புகழப்படுகிறது. ஆகாயத்தைத் தன் கேசமாக உடைய அந்த பரமேச்வரனின் பரம பக்தர்

அவர். நம் சோகத்தையெல்லாம் அகற்றி விடக்கூடிய அந்த உத்தம குருவை நான் சரணமடைகிறேன்.

8) तापारण्यकृशानुं भूपालकवन्दनीयपदयुगलम् ।
पापापहनामानं शापानुग्रहसमर्थमहमीडे ॥ ८ ॥

தாபாரண்ய க்ருசானும் பூபாலக வந்தநீய பதயுகளம் ।
பாபாபஹ நாமானம் சாபானுக்ரஹ ஸமர்த்தமஹமீடே ॥

ஜனங்களின் தாபம் என்பது ஓர் அரண்யம் போன்றது. அந்த அரண்யத்தையே அழித்துவிடக்கூடிய அக்னி அவர். அவருடைய நாமத்தை உச்சரித்த மாத்திரத்திலேயே சகலபாவங்களும் விலகிவிடும். அவரால் அனுக்ரஹமும் செய்ய முடியும், சாபமும் அளிக்க முடியும். அப்படிப்பட்ட பெரும்சக்தியைப் பெற்றுள்ள (மஹாபுருஷரை) நான் வணங்குகிறேன்.

9) शङ्करदेशिकविरचितपीठाधिपमालिकामहारत्नम् ।
प्रणमामि चन्द्रशेखरभारत्यभिधानदेशिकं हृदये ॥ ९ ॥

சங்கரதேசிக விரசித பீடாதிப மாலிகா மஹாரத்னம் ।
ப்ரணமாமி சந்த்ரசேகரபாரத்யபிதான தேசிகம்
ஹ்ருதயே ॥

ஆதிசங்கரபகவத்பாதர்களால் தொடுக்கப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பது ''ஸ்ரீ சாரதா பீடாதிப மாலிகா'' என்ற ஹாரம். அந்த ஹாரத்தில் உள்ள

ரத்னங்களில் ஒரு மஹாரத்னமாக விளங்குபவர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ என்ற பெயருடைய ஆசார்யர். அவரை என் ஹிருதய கமலத்தில் இருத்தி நமஸ்கரிக்கிறேன்.

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்

சிஷ்யர்களின் அனுபவங்கள்



ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

1

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

ஒரு நாள் ஸ்ரீ நரஸிம்ஹ மந்திரத்தை ஜபம் செய்து முடித்தவுடன், அந்த மந்திரத்தை எனக்கு என் குருநாதர் (ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) முதன் முதலில் உபதேசம் செய்தபோது நடந்த சில அதிசயங்கள் நினைவுக்கு வந்தன. என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று.

அந்த மந்திரத்தை எனக்கு உபதேசம் செய்கையில் உபதேசக் கிரமத்தில் அதற்கு உரிய தியான சுலோகத்தை குருநாதர் எனக்கு கற்பித்தார். அவர் அதைச் சொல்லிக் கொண்டேவர நானும் அந்த சுலோகத்தை வரிவரியாகச் சொல்லிக்கொண்டே வந்தேன்.

அப்போது என் உள்ளத்தில் ஸ்ரீ நரஸிம்மருடைய உருவம் எழத் தொடங்கியது. அந்த சுலோகத்தில் அவர் எப்படி வர்ணிக்கப்பட்டிருக்கிறாரோ அப்படியே என் மனதிலும் காட்சியளிக்கத் தொடங்கினார்.

எந்த ரூபமுமில்லாமல் ஸச்சிதாநந்த ஸ்வரூபமாக இருக்கும் பகவான்தான் சிவனாகவும் அம்பாளாகவும் விஷ்ணுவாகவும் தோன்றுகிறார். ஸ்ரீ விஷ்ணுதான் நரஸிம்மராக அவதரித்தார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

இந்த சுலோகத்தில், லக்ஷ்மிபதியான அவர் எப்படி வர்ணிக்கப்பட்டிருக்கிறார் என்றால் சக்ராயுதத்தைக் கையில் ஏந்தியவராக, ஆதிசேஷனைக் குடையாகக் கொண்டு பாற்கடலில்

மத்தியில் இருக்கிறுர் என்று முதலில் கூறப்படுகிறுர். இதெல்லாம் விஷ்ணுவிற்குப் பொருந்தும். ஆனுல் இதே சுலோகம் அவரை மேலும் வர்ணிக்கும்போது மூன்று கண்களே உடையவராகவும், கையில் பிஞகம் என்ற வில்லே ஏந்தியவராகவும், சந்திரனின் ஒளி போன்ற வெண் நிறத்தவராகவும் இருப்பதாகக் கூறுகிறது. இந்த வர்ணனையெல்லாம் சிவனுக்குத்தான் பொருந்தும்.

ஸத்யஞான ஸுகஸ்வரூபம்
அமலம் க்ஷீராப்தி மத்யஸ்திதம்
யோகாரூடம் அதிப்ரஸன்ன வதனம்
பூஷா ஸஹஸ்ரோஜ்வலம் ।
த்ரயக்ஷம் சக்ர பிஞக ஸாபய வரான்
பிப்ராணம் அர்க்கச்சவிம்
சத்ரீபூத பணீந்த்ர இந்து தவளம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் பஜே ॥

இந்த தியான சுலோகம் விஷ்ணுவிற்கும் சிவனுக்கும் பேதமில்லாததைக் காட்டுகிறது. இந்த அபூர்வமான தியான சுலோகத்தை எனக்குக் கற்பித்தவுடன் என் குருநாதர் (மெம் ப்ருத்வ்யாத்மனே) போன்ற பஞ்ச உபசார மந்திரங்களே உபதேசிக்கத் தொடங்கினுர். அவர் கூறிக் கொண்டே வருவதும் நான் அவைகளேத் திருப்பிச் சொல்லுவதும் சில விஞடிகளில் முடிந்துவிட்டன.

ஆனுல் நானே என் மனதில் பிரஸன்னமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த நரஸிம்மமூர்த்திக்கு மானஸிகமாக சந்தனம், புஷ்பம், தூபம், நைவேத்யம் இவைகளேக் கல்பித்து சாவகாசமாக அர்ப்பித்துக் கொண்டிருந்தேன். நைவேத்யம் செய்யும்போது மானஸிகமாக விதவிதமான பக்ஷ்யங்களே ரத்னங்கள் பதிக்கப்பட்ட தாம்பாளத்தில் வைத்துக்கொண்டு ஸ்ரீ நரஸிம்மருடைய வாயில் ஊட்டிவிட்டேன். அவர் மென்று மென்று சாப்பிட மேலும் மேலும் ஊட்டிவிட்டுக் கொண்டே இருந்தேன்.

இப்படி என் மனஸிற்குள் நான் செய்து கொண்டிருந்த பூஜை அரைமணி நேரம் நீண்டுவிட்டதாக எனக்குத் தோன்றியது. ஆனுல் அதே சமயத்தில் வெளியே எனது குருநாதர் எனக்குக் கற்பித்துக்

கொண்டிருந்த மந்திரங்களையும் நான் அவரைப் பார்த்து சொல்லிக் கொண்டும் இருந்தேன்.

இந்த பஞ்சோபசார பூஜை முடிந்தவுடன் எனது குருநாதர் எனக்கு ஸ்ரீ நரஸிம்ஹ மூல மந்திரத்தை உபதேசிக்கத் தொடங்கினர். அச்சமயத்தில் அவர் தம்முடைய வலது உள்ளங்கையை என் தலையில் வைத்தார். அவர் அப்படிச் செய்தது அதுவே முதல் தடவையாகும். இதற்கு முன்னால் ஸ்ரீவித்யா, ஸ்ரீமேதா தக்ஷிணமூர்த்தி மந்திரங்களை உபதேசம் செய்தபோதெல்லாம் அவர் அப்படிச் செய்யவில்லை.

மூலமந்திரத்தை முதல் தடவை உபதேசித்தவுடன் நான் அதைத் திருப்பிச் சொன்னேன். அந்த சமயத்தில் ஒரு விந்தை நடந்தது. எனது ஆசார்யர்கள் என் தலைமேல் வைத்த கையை சட்டென்று எடுத்துவிட்டார். உடனே இரு கைகளையும் சேர்த்து கூப்பிக்கொண்டு (அஞ்ஜலிபந்தமாக வைத்துக் கொண்டு) பக்திப் பரவசமாக என்னையே உற்று நோக்கத் தொடங்கினர். அதைக் கண்ட எனக்கு மூச்சே நின்றுவிட்டது போலத் தோன்றியது.

அதுவரை என் மனதில் பிரகாசித்துக் கொண்டிருந்த ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹரின் உருவம் சட்டென்று மறைந்துவிட்டது. ஆனால் அதே பகவான் எனக்குள்ளே அந்தர்யாமியாக வியாபித்து விட்டதை நான் அனுபவிக்கத் தொடங்கினேன். அவர் அப்படி அந்தர்யாமியாக ஆனது உள்ளங்கை நெல்லிக்கனி போல் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அந்த அனுபவத்தில் என்னுடைய பிராணன், மனஸ், புத்தி, உடல், இந்திரியங்கள் எல்லாம் என்னைச் சேர்ந்தவை என்ற எண்ணம் அறவே நீங்கிவிட்டது. அவையெல்லாம் என்னுள் அந்தர்யாமியாக இருந்த பகவானைச் சேர்ந்தவை என்றே எனக்குத் தோன்றியது. இத்தனை அனுபவத்திற்கும் இடையே ஸ்ரீ ஆசார்யர்கள் கைகூப்பிக் கொண்டு என்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்ததையும் தொடர்ந்து பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்.

பிறகு ஸ்ரீ நரஸிம்மருடைய உருவம் என் மனத்தில் மீண்டும் எழத் தொடங்கியது. என் மனமும் பழைய நிலைக்கு மீண்டும்

திரும்பியது. ஆனால் அந்தக் கணம் முதல் நான் ஸ்ரீ நரஸிம்மருடன் நெருங்கி ஒன்றிவிட்டதை தெரிந்துகொண்டு விட்டேன்.

ஸ்ரீ ஆசார்யர்கள் அஞ்ஜலிபந்தமாக வைத்துக் கொண்டிருந்த தம் கைகளை விலக்கிக் கொண்டு மேலும் இருமுறை மூலமந்திரத்தை எனக்கு உபதேசித்தார்.

மந்திர உபதேசம் பூர்த்தியானவுடன் அவர் என்னிடம் கூறினார்.

''நீ மூல மந்திரத்தை ஒருதரம் உச்சரித்தவுடன் உன்னுடைய இடத்தில் சாட்சாத் ஸ்ரீ நரஸிம்மரே பிரத்யக்ஷமாக வீற்றிருப்பதைக் கண்டேன். அதனால்தான் உன் தலையில் வைத்திருந்த கையை எடுத்துவிட்டேன். அவரை கைகூப்பி வணங்கினேன். பிறகு அவருடைய உருவம் மறைந்து உன் உருவம் மறுபடியும் தோன்றியபோது உபதேசத்தைத் தொடர்ந்தேன். ஆனால் கவனமிருக்கட்டும். இங்கு இன்று நடந்ததையெல்லாம் அந்த பகவானுக்கே அர்ப்பணம் செய்துவிடு.''

எனக்கு ஸந்யாஸம் கொடுப்பதற்கு முன் ஸ்ரீ ஆசார்யர்கள் எனக்கு ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ பத்மபாதர் இவர்களுடைய சரித்திரங்களின் முக்கியமான கட்டங்களில் ஸ்ரீ நரஸிம்மர் எப்படி தோன்றி அனுக்ரஹம் செய்திருக்கிறார் என்று சொன்னார். மேலும், என்னுடைய பரமேஷ்டி குரு ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ, பரமகுரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஆகியவர்கள் எப்படி ஸ்ரீ நரஸிம்ஹரிடம் தீவிரமான பக்தி வைத்திருந்தார்கள் என்பதையும் எடுத்துக் கூறினார்.

ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹ கருணாரஸ (கராவலம்ப) ஸ்தோத்திரத்தை எனக்குக் கற்பித்து மனப்பாடம் செய்யும்படி கூறினார்.

எனது ஆசார்யர்களுக்கு சிவன்தான் இஷ்ட தெய்வம். எனக்கு ஸ்ரீ நரஸிம்ஹரிடம் இருந்த விசேஷ பக்தியைக் கண்டு எனது குருநாதர் ''நீ ஒரு வைஷ்ணவன்!'' என்று என்னைப் பரிஹாஸம் செய்வதுண்டு.

மற்றொரு நாள் காலையில் ஸ்ரீ ஆசார்யர்களின் ஆஹ்னிக காலத்தில் அவரைத் தரிசனம் செய்வதற்காகச் சென்றேன்.

நமஸ்காரம் செய்து எழுந்தவுடன் அவர் என்னிடம், ''நீ ஆஹ்னிக காலத்தில் ஜபம் செய்கிருயல்லவா, அப்போது அந்தந்த மந்திரங்களுக்கு உரிய அந்தந்த தியான சுலோகங்களின் பிரகாரம்தானே மூர்த்தி தியானம் செய்கிருய்?'' என்று கேட்டார்.

நான் 'ஆமாம்' என்று பதிலளித்தவுடன் ''அப்படியானுல் அந்தத் தியானத்தை எப்படித் தொடங்குகிருய்?'' என்று கேட்டார்.

அந்தக் கேள்வியின் தாத்பர்யம் எனக்கு சட்டென்று விளங்கவில்லே. ஏனென்ருல், ஜபத்தின்போது அதற்கு உரிய மூர்த்தி என் ஹ்ருதய கமலத்தில் இருப்பதாகத்தான் நான் பாவித்து வந்தேன். அதற்கு முன்ஞல் நான் எதையாவது விசேஷமாகச் செய்யவேண்டுமா என்பதை நான் அறிந்திருக்கவில்லே.

ஆகையால் நான், ''தியான சுலோகத்தில் வர்ணித்துள்ளபடியே அந்த மூர்த்தி என் ஹ்ருதயத்தில் எட்டு தளங்களுடைய ஒரு சிவப்புத் தாமரைப் புஷ்பத்தின்மேல் பிரஸன்னமாக இருப்பதாகப் பாவித்துக்கொண்டு ஜபமாலேயை கையில் எடுத்துக்கொண்டு நேராக ஜபம் செய்யத் தொடங்கி விடுவேன். அப்போது என் கண்களே முழுவதாகவோ பாதியாகவோ திறந்து வைத்துக் கொள்வேன்'' என்று பதிலளித்தேன்.

ஸ்ரீ ஆசார்யர்கள் ''தியானத்தின்போது உன் மனம் இங்கும் அங்கும் அலேயாமல் இருக்கலாம். ஆஞலும் சுற்றுப்புறங்களேயும் உன் சரீரத்தையும் பற்றி பிரக்ஞை உனக்கு இருந்துகொண்டுதான் இருக்கும். அப்படித்தானே?'' என்று கேட்டார்.

நான் 'ஆமாம்' என்று பதிலளித்தவுடன் ''ஆஹ்னிக காலத்தில் செய்ய வேண்டிய ஜப தியானங்களேத் தவிர மற்ற காலங்களிலும் மூர்த்தித் தியானம் செய்வதற்கு உனக்கு விருப்பம் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''நிச்சயமாக அதை நான் செய்ய விரும்புகிறேன்'' என்று பதிலளித்தேன்.

அப்போது அவர் என்னேத் தம் அருகில் அமரச் செய்து இப்படிக் கூறிஞர்.

''எந்த தியானத்தையும் தொடங்க ஒரு சுலபமான வழி இருக்கிறது. தியானத்தின்போது ஜபமாலே தேவையில்லே. தேவதா

மூர்த்தியை மனதில் உருவகப்படுத்தி ஹ்ருதய கமலத்தில் இருப்பதாக பாவித்துக் கொள்வதற்குப் பதிலாக, முதலில் புருவ மத்தியின் மேல் பார்வையை செலுத்த வேண்டும். அந்த சமயத்தில் 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தைப் போன்று ஏதாவது ஒரு மந்திரத்தை ஜபிக்கலாம்.'' அச்சமயம் புருவ மத்தியின் மேல் திருஷ்டியை எப்படிச் செலுத்துவது என்று செய்து காட்டினர்.

பிறகு தொடர்ந்தார்: ''கண்களை மேல்நோக்கித் திருப்பும்போது இமைகளை பாதி மூடிக் கொள்ளலாம். எனக்கு அது சௌகரியமாக மட்டுமல்லாமல் நல்ல பலன் அளிப்பதாகவும் இருக்கின்றது. அந்தச் சமயத்தில் புருவ மத்தியில் 'சுருக்'கென்று (Tingling) சுண்டியிழுக்கும் உணர்ச்சி உண்டாகும். அந்த இடத்தில் ஒரு ஜோதியிருப்பதாக சிறிது நேரம் பாவனை செய்து எந்த மூர்த்தியைத் தியானம் செய்ய உத்தேசித்துள்ளாயோ அந்த மூர்த்தியை அந்த ஜோதியின் மத்தியில் ஆவாஹனம் செய்ய வேண்டும். அப்போது உன் முழு கவனமும் அந்த தேவதா மூர்த்தியின் மேல் இருக்க வேண்டும். இதே முறையை நித்தியப்படி ஜப காலங்களிலும் அனுஷ்டிக்கலாம்'' என்று உபதேசித்தார்.

ஸ்ரீ ஆசார்யர்கள் உபதேசித்த இந்த தியான முறையை நான் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தில் முதன் முதலாக அனுஷ்டித்துப் பார்த்தேன்.

அந்தச் சமயம் அம்பாள் முகத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த ஒரு ரத்னம் குத்துவிளக்கு ஒளியில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அதையே பார்த்தேன். என் பார்வையின் கோணத்தைச் சிறிது மாற்றிக் கொண்டபோது நீலமாக ஒளிர்ந்து கொண்ட அது பச்சையாக மாறியது. மறுபடியும் மாற்றிக் கொண்டபோது மீண்டும் நீலமாக ஒளிர்ந்தது. நான் அதையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு கண்களை பாதி மூடிக்கொண்டு என் திருஷ்டியை புருவ மத்தியின் மேல் திருப்பினேன். அதே சமயம் பிரணவ மந்திரத்தை மனதிற்குள் ஜபித்து வந்தேன்.

சிறிது நேரத்தில் புருவ மத்தியில் 'விண்'ணென்று சுண்டியிழுக்கும் வலியேற்பட்டது. அது கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாயிற்று. அப்போது ஒரு மிக அழகிய நீல ஒளிவட்டம் தோன்றியது. அது அம்பாளின் ஆபரணத்திலிருந்து புறப்பட்ட நீல

ஒளி மாதிரியே இருந்தது. ஒரு சிறிய அளவில் அம்பாளின் விக்ரஹம் அந்த ஒளிவட்டத்திலிருந்து புறப்பட்டு என் ஹிருதய கமலத்தில் இடம் பெற்றதாக நான் பாவித்தேன். அந்த உருவம் அவ்வளவு விரைவாகத் தோன்றியதும் தெளிவாக இருந்ததும் என்னை வியப்பில் ஆழ்த்தியது. என் கவனம் முழுவதும் அந்த உருவத்தின் மேல் தான் இருந்தது. நான் பிரணவ ஜபத்தை நிறுத்திவிட்டேன். சுமார் அரை மணி நேரம் நான் உடலையும் சுற்றுப்புறத்தையும் மறந்திருந்தேன். எனது ஆசார்யர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த தியான முறை, மூர்த்தியை மனதில் உருவகப்படுத்திக் கொள்வதை எளிதாக்கி விட்டது மட்டுமல்லாமல் என் முழுக் கவனத்தையும் அதன்மேல் செலுத்த உதவியது.

பிரகரண நூலான விவேகசூடாமணியில் பகவத்பாதாள் குருவின் மஹிமையை மிகச் சுவையாக எடுத்துரைத்துள்ளார்.

சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ
வஸந்தவல்லோகஹிதம் சரந்த: ।
தீர்ணாஸ்ஸ்வயம் பீமபவார்ணவம்
ஜனாஹேதுநாऽ ன்யானபி தாரயந்த: ॥

(வசந்த காலத்தைப் போல் மக்களுக்கு நன்மை புரிபவர்களாய் ஸஞ்சாரம் செய்யும், சாந்தமாகவும், மஹான்களாகவும் உள்ள ஸத்புருஷர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் பிறப்பு, இறப்பென்னும் பயங்கரமான கடலைத் தாங்கள் கடந்துவிட்டு, எந்தவிதமான காரணமும் இல்லாமல், மற்றவர்களையும் தாண்டச் செய்கிறார்கள்.) என்று அவர் கூறியுள்ளார்.

ஒரு நீர் நிலையை நாம் கடக்க விரும்பி, படகின் அருகில் சென்று, படகோட்டியிடம் அவன் நம்மை ஏற்றிச் செல்லுவானா என்று கேட்டால், அவன் அதற்குச் சம்மதிக்கிறான். ஆனால் தனது வேலையை முடித்தவுடன் அதற்கான கட்டணத்தை அவன் கேட்கிறான். ஆனால் குருவானவர், இவ்வாறெல்லாம் எதையும் கேட்பதில்லை.

அவர் பிறப்பு, இறப்பென்னும் கடலை தானும் தாண்டிவிட்டு, மற்றவர்களையும் கடக்கச் செய்கிறார். என்ன காரணம்? அவரது

மனம் மற்றவர்களுக்கு நன்மையைச் செய்வதிலேயே தீவிரமாக இருக்கிறது.

வசந்த காலம் தொடங்குகையில் மக்கள் மகிழ்ச்சி கொள்கிறுர்கள். மகிழ்ச்சியைக் கொடுப்பதற்கு எந்தவிதமான பிரதிபலனே வசந்தகாலம் எதிர்பார்க்கிறது? ஒன்றுமேயில்லே. மக்களே மகிழ்விப்பதே அதன் இயற்கையாகும். அதுபோல் மற்றவர்களுக்கு நன்மையைச் செய்வது உயர்ந்த முனிவர்களின் இயல்பாகும். இப்படிப்பட்ட ஒரு குருவிடமிருந்து கற்றுக் கொள்ளும் ஒருவன் மிகுந்த பாக்கியசாலி ஆவான்.

இத்தகைய குருவின் இலக்கணம் என்ன? பகவத்பாதாள் பின்வருமாறு விவேகசூடாமணியில் கூறுகிறுர்.

ப்ரஹ்மாகாரதயா ஸதா ஸ்திததயா நிர்முக்தபாஹ்யார்த்ததீ -
ரன்யாவேதிதபோக்யபோககலனே நித்ராலுவத்பாலவத் ।
ஸ்வப்னலோகிதலோகவஜ்ஜகதிதம் பச்யன்க்வசில்லப்ததீ -
ராஸ்தே கச்சிதனந்தபுண்யபலபுக்தன்ய: ஸ மான்யோ புவி ॥

(அளவற்ற புண்ணியத்தின் பலனே அனுபவிப்பவரும், பரம் பொருளின் வடிவில் தமது புத்தி எப்போதும் நிலேபெற்ற காரணத்தால், புத்தியைப் பொறுத்தவரை வெளிப்பொருட்கள் முழுவதுமாக நாசமற்றுவிட்ட நிலேயில் இருப்பவரும், தூங்குபவனேப்போலவோ ஒரு குழந்தையைப் போலவோ, மற்றவர்கள் நிவேதிப்பதை (உதாரணத்திற்கு உணவையோ, நீரையோ) அனுபவித்துக் கொண்டிருப்பவரும், எப்போதாவது ஒரு சமயம் மனம் பரம்பொருளின் நிலேயிலிருந்து வெளியில் வரும்போது இவ்வுலகத்தைக் கனவில் தோன்றும் உலகம்போல (வெறும் தோற்றம் போல) நோக்குகிறவருமான ஒரு பாக்கியசாலியாக அவர் உள்ளார். இவ்வுலகத்தில் அவர் போற்றத் தகுந்தவர்.)

சாஸ்திரங்களின் கூற்றுப்படி மனமானது தான் எப்பொருளேச் சிந்திக்கிறதோ, அந்தப் பொருளின் வடிவத்தை எடுத்துக் கொள்கிறது. பொருட்களின் வடிவைப் பெற்றுக் கொண்டு நமது மனம் எப்போதும் அலேந்து கொண்டிருக்கிறது. ஆனல், உள்

திரும்பிய மனம் பரம்பொருளின் வடிவாகவே உள்ளது. அதாவது, அத்தகைய மனம் குணங்களும் உருவமும் அற்றதும் ஸச்சிதானந்த வடிவமானதுமான பரம்பொருளிடமே ஒருநிலை பெற்றிருக்கின்றது.

ஆனந்த வடிவை எப்போதும் ஏற்றுக் கொண்டிருக்கும் மனமானது வெளிப் பொருட்களின் வடிவைப் பெற்றுக் கொள்வதற்கு எந்தவிதக் காரணமுமில்லை.

ஞானியின் மனமானது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் போன்ற வடிவங்களில் இருந்து வாசனைகள் உட்பட முழுவதும் விடுதலை பெற்றது. அதாவது, அவர் எல்லாவிதமான வெளிப்பொருள்களைப் பற்றிய சிந்தனையினின்றும் விடுபட்டவர். அவரிடம் அதைச் சிந்திப்பதற்கான வாஸனைகூட இருப்பதில்லை.

அப்படியானால் அவருக்கு உலக நடவடிக்கை ஒன்றுமேயில்லையா என்று கேட்டால் கிருஷ்ணர் கூறியுள்ளபடி ஒரு முனிவருக்கு எந்த ஒரு செயலையும் செய்வதற்கான தேவை இல்லாவிட்டாலும் மற்றவர்களின் புண்ணிய பலன் காரணமாகச் சில நடவடிக்கைகள் ஏற்படலாம். ஒருவன், முனிவரிடம் வந்து அவரை ஏதாவது செய்யுமாறு வேண்டிக் கொள்ளலாம்.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது. மக்கள் எந்தச் செயலைச் செய்யுமாறு வேண்டிக் கொண்டாலும் அவை எல்லாவற்றையும் முனிவர் செய்வாரா என்பதே அது. இல்லையென்பதே இதற்குப் பதிலாகும்.

ஏன் ஒரு தத்துவஞானி தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது? ஞானம் உதிப்பதற்கு முன்னரே வளர்க்கப்பட்டிருந்த வாஸனைகள் மிகவும் தூய்மையானதால், அவனது மனதிற்கு தவறான ஒரு செயலைச் செய்யத் தோன்றுவதேயில்லை. ஆகையால் தத்துவஞானி ஒருவன் எந்த ஒரு தீய செயலையும் செய்வதேயில்லை.

ஒருவேளை அவர் முறையற்ற செயல் ஏதாவது செய்தால், அது அவரருகே உள்ள மற்றவர்களின் தீய நடத்தையின் காரணத்தினால் தானிருக்கும். ஆகவே அந்தச் செயல் அவரைத் தூண்டியவர்களுக்குத்தான் சேரும்; தீயசெயல் செய்ய சிறிதும் விருப்பில்லாத அவருக்கும் அச்செயலுக்கும் தொடர்பில்லை.

அன்யாவேதிதபோக்யபோககலன:

முனிவர், உணவு முதலான எவை தேவையோ அந்த அனுபவங்களை மற்றவர்கள் தெரிவிப்பதன் மூலம் பெறுபவராய் உள்ளவர்.

நித்ராலுவத்பாலவத்

ஒருவர் யோகத்தின் தலையாய நிலையான ஸமாதியில் இருக்கையில், மனதால் சில சமயங்களில் உலக அனுபவ நிலைக்கு இறங்கிவர இயலாது. அத்தகைய சமயத்தில், ஒருவன் அந்த முனிவரிடம் சென்று அவரை உலுக்கி எழுப்பிவிட்டு ''இதைச் செய்ய வேண்டும்'' என்று குறிப்பிட்டால், அவர் மறதி வந்தவரைப் போல பதில் சொல்லுவார். நாம் ''நான்'' என்று பொதுவாகக் குறிப்பிடுவதை முனிவர் ''இந்த உடல்'' என்று கூறுகிறார். ஏன்? ஏனென்றால் உடல் விஷயத்தில் இருக்கக்கூடிய அபிமானம் அவருக்கு அகன்றுவிட்டது. எது குறித்து ''தான்'' என்ற எண்ணம் இருக்க வேண்டுமோ, அது குறித்தே அந்த எண்ணம் ஏற்பட்டு விட்டது. அதாவது அவர் தன்னை ஸச்சிதானந்த வடிவமான ஆத்மா என்று உணர்ந்து கொள்கிறார்.

உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள் அரைத் தூக்கத்தில் தங்கள் அன்னையர் கொடுக்கும் உணவை உண்பர். எனினும், காலையில் எழுந்தவுடன் தாங்கள் அவ்வாறு உண்டனர் என்று அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை.

இதேபோல் தத்துவத்தை அறிந்த ஒருவர், தனக்கு சேவை செய்ய வரும் பக்தன் அல்லது சீடனுடைய மனதில் எழும் விருப்பப்படியே அவர்கள் கொடுத்த உந்துதலின் பேரில், அரைத் தூக்கத்திலிருக்கும் ஒரு மனிதன் தூண்டப்பட்டால் நினைவிழந்து செயலில் ஈடுபடுவதைப் போலவோ, தான் எந்தவிதமான முயற்சியும் எடுக்காவிட்டாலும், உணவு ஊட்டப்படும் ஒரு குழந்தையைப் போலவோ ஏதாவது ஒரு செயலில் ஈடுபடுவார்.

ஸ்வப்னலோகிதலோகவஜ்ஜகதிதம் பச்யன்க்வசில்லப்ததீ:

ஒரு ஞானி தான் ஸமாதி நிலையில் இல்லாத சமயங்களில் எவ்வாறு உலகைக் காண்பார்? எப்போதாவது மனம் ஸமாதியிலிருந்து இறங்கும்போது அவர் உலகை ஒரு

கனவைப்போல் பார்ப்பார். அவர் மனம் இருப்பது வேறிடத்தில்; ஆத்மாவினிடத்தில். ஆனுல் எப்படியோ அவர் செயலில் ஈடுபடுகிருர்.

எனது குருநாதரின் வாழ்க்கையில் இருந்த ஒரு சிறப்பு அம்சம் என்னவென்ருல், அவர் தத்துவ ஞானத்தை வேறு ஒருவருடைய உபதேசம் மூலம் பெறவில்லை. அர்ஜுனன்,

அயதி: ச்ரத்தயோபேதோ யோகாச்சலிதமானஸ: ।
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி ॥

(கிருஷ்ணு! சிரத்தையிருந்தும் முயற்சி செய்யாமலும், யோகத்தில் வெற்றி பெருமல் அதிலிருந்து தவறிய மனம் உள்ளவனுமான ஒருவன் என்ன முடிவை அடைகிருன்?) என்று கேட்டான்.

அதற்குப் பகவான்,

சுசீனும் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே ॥
அதவா யோகினுமேவ குலே பவதி தீமதாம் ।
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜன்ம யதீத்ருசம் ॥
தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம் ।

(யோகத்தில் தோல்வியுற்றவன் தூய்மை மற்றும் செல்வம் வாய்ந்தவர்களின் இல்லத்தில் பிறக்கிருன். இல்லாவிடில், மதிநுட்பம் வாய்ந்த யோகிகளின் குலத்தில் பிறக்கிருன். இத்தகைய பிறவி இவ்வுலகத்தில் கிடைப்பது என்பது உண்மையிலேயே மிகக் கடினம். இங்கு அவன் முற்பிறவியில் பெற்ற அறிவை அடைகிருன்.) என்று பதிலளித்தார்.

எனது குருநாதரின் விஷயத்தில், அவரது அந்தர்முக நிலையானது, ஸந்யாஸம் பெற்று, சாஸ்திரங்களைப் படித்து மற்ற ஆன்மீக ஸாதனைகளைக் கடைப்பிடித்து வந்ததற்குப் பிறகு ஏற்படவில்லை. அவருடைய பிறப்பிலிருந்தே அது இருந்து வந்தது.

சிறுவனுக இருக்கையில் அவர் கடைக்குச் செல்ல வேண்டியிருந்தது. வீட்டு விஷயங்களில் ஈடுபாடின்றி இருந்தாலும் அவர் தமது பெற்ரோரின் தேவையை மனதில் கொள்ள வேண்டியிருந்தது. 'மூக பஞ்சசதீ' என்று ஒரு ஸ்தோத்திரம்

உள்ளது. அவர் அதைச் சிந்தனை செய்வது வழக்கம். அம்பாளைப் போற்றும் அப்பாடல்களின் கருத்தில் அவரது சிந்தனையின் ஆழம் எத்தகையது என்றால், சில சமயங்களில் தம்மை அறியாமலேயே அதைப் பற்றிச் சிந்தனை செய்தவாறே அவர் கடையைக் கடந்து மிகத் தூரம் சென்று ஊரின் முடிவையே அடைந்து விடுவார். அங்கு அவர், ''நான் எங்கு வந்துவிட்டேன்? ஓ... நான் நகர எல்லையைக் கடந்து வந்து விட்டேனே!'' என்று உணர்ந்து பிறகு அவர் கடைக்குத் திரும்பி, தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு அவற்றை வீட்டில் சேர்ப்பார்.

இத்தகைய உள்புறம் திரும்பிய மனமுள்ளவரான ஒருவரை யாராவது பார்க்க முடியுமா? கடைகளைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பமோ, பொருட்களை வாங்க வேண்டும் என்பதில் தீவிரமோ அவருக்கு இருக்கவில்லை. ''பொருட்களை அதிகமாக வாங்குவதற்கு அவரிடம் பணமும் இல்லை. பின் என்னதான் அவரது மனோபாவம்? ''பொருட்களை வாங்குவது செய்யப்பட வேண்டிய ஒன்று. ஆகவே நான் அதைச் செய்தாக வேண்டும். எனினும் எனக்கு இருக்க வேண்டிய மனோநிலை ஒன்று உள்ளது. நான் அதிலிருந்து தவறவே கூடாது'' என்பதே அவரது உறுதியான கருத்தாக இருந்தது.

இளமையில், அவருக்கு ஈச்வர பூஜை செய்யும் பழக்கம் இருந்தது. உடல், வாக்கு மற்றும் மனத்தினால் செய்யப்படும் வழிபாடுகளில் மனதால் செய்யப்படும் வழிபாடு உயர்ந்தது. எனது குருநாதருக்கு உடலினால் செய்யும் வழிபாட்டிற்குத் தேவையான பொருட்கள் இருக்கவில்லை. அவர் வார்த்தைகளினால் வழிபட்டிருந்தால் மற்றவர்கள் அவரது உரத்த வழிபாட்டிற்குத் தடையாக இருந்திருக்கலாம். எனினும் மனதைக் கடவுளுக்கு அர்ப்பணித்துவிட்டு மனதால் இறைவனை வழிபடுவதற்கு என்ன தடையிருக்கிறது? மனதை அடக்கி வைத்திருப்பது கடினம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. மனதைத் தம் வசம் வைத்திருந்த எனது குருநாதர், மஹாப் பிரதோஷம் (த்ரயோதசியில் மாலைப்பொழுது) ஒவ்வொன்றின் போதும் இறைவனுக்கு மானஸிகமாக பூஜையைச் செய்வது வழக்கம்.

எவ்வாறு அவர் பூஜை செய்தார்? எந்தவிதமான பொருட்களுமின்றி கீழ்வரும் சுலோகத்தில் கூறப்பட்டவாறு அவர் பூஜை செய்தார்.

ச்ரத்தாநதீ விமலசித்தஜலாபிஷேகைர்
நித்யம் ஸமாதிகுஸுமைரபுனர்பவாய

(மீண்டும் பிறந்து விடாமலிருப்பதற்காக, சிரத்தையாகிய நதியின் புனித மனமாகிய நீரினுல் அபிஷேகமும், இடைவிடாத ஸமாதியாகிய மலர்களினுல் அர்ச்சனையும்.)

சிருங்கேரியில் வித்யாசங்கரருக்கு ஆலயம் உள்ளது. அந்த ஆலயம் மிகவும் மனதைக் கவர்வதாக இருக்கிறது. அங்கு தூண் ஒன்றின் அடியில் மஹாப் பிரதோஷத்தன்று மாலை ஆறு மணிக்கு அமர்வது மிகச் சிறந்தது.

எனது குருநாதர் மாலை 7.00 அல்லது 7.30 மணி வரை அங்கேயே அமர்ந்து வெளியுலகத்தின் உணர்வேயில்லாமல்,

ரத்னை: கல்பிதமாஸனம்...

(இரத்தினங்களாலான இருக்கையை உனக்காக நான் மனதால் கல்பித்து...) என்று சிந்தித்துக் கொண்டிருப்பது வழக்கம். பின்பு மானஸிகமாக இறைவனுக்கு நைவேத்யம் அளித்து, தீபாராதனை செய்வார்.

மானஸிக பூஜையின் சிறப்பு குறித்து மஹாபாரதத்தில் ஒரு கதை உள்ளது. சிவராத்திரியென்று எல்லோரும் பூஜை செய்து கொண்டிருந்தனர். ஆனுல் பீமன், வசதியாகச் சாய்ந்து கொண்டிருந்தான். அர்ஜுனனும் மற்றவர்களும் ''இன்றைக்குக்கூட இவன் தனது இயல்பான, தூங்கும் பழக்கத்தை விட்டுவிட மறுக்கிருனே'' என்று எண்ணி வருத்தமுற்றனர். கிருஷ்ணர், பீமன் உண்மையில் என்ன செய்து கொண்டிருந்தான் என்பதை எடுத்துக்காட்ட விரும்பி அர்ஜுனனைக் கைலாசத்திற்கு அழைத்துச் சென்ருர். செல்லும் வழியில் அவர்கள் சிவனுக்காக பில்வ இலைகள் கொண்டு செல்லப்படுவதைக் கண்டனர். ''இவ்வளவு பில்வ இலைகளை ஏன் கொண்டு செல்கிறீர்கள்?'' என்ற கேள்விக்கு, இலைகளைச் சுமந்து கொண்டிருப்பவர்கள் ''ஒருவர் சிவனின் மீது இடைவிடாது இலைகளைக் குவிக்கிருர். அவற்றை நாங்கள் சுமக்கிருேம். இதுதான் எங்களுக்குத் தெரியும். மக்கள் ஒவ்வொரு இலையாக அளிக்கும்போது ஒரு மரத்தினடியில் அமர்ந்திருக்கும் இந்த அர்ச்சகர் பீமன், மரம் மரமாக பில்வ இலைகளை அளித்துக்

கொண்டிருக்கிருர். அத்தகைய புண்யசாலியான மனிதர் அவர்'' என்று பதிலளித்தனர். அர்ஜுனன், ''நானும் பூஜை செய்தேனே!'' என்று குறிப்பிட்டபோது, ''நீ என்ன அளித்தாயோ அவை அந்த மரத்தடியில் இருக்கின்றன. மனதால் இந்த மனிதர் அர்ப்பித்தது அளவற்றது. நீ அளித்தது, நீ சரியாக எவ்வளவு இலைகளை உண்மையில் அளித்தாயோ, அவ்வளவேதான்'' என்று பதில் கிடைத்தது.

மானஸிக பூஜை மிகவும் உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. இளமையில் எனது குருநாதர் இத்தகைய மானஸிக பூஜையை மிகச் சிறப்பாகச் செய்தார். அவரது பூஜையைப் பற்றிக்கூட நிறைய சொல்வதற்கு இருக்கிறது.

எனது குருநாதர் பீடாதிபதியானதற்குப்பின் பல பக்தர்கள் அவரிடம் வருவர். அவர்கள், ''மஹாஸ்வாமிகளே, நாங்கள் நாடுபவை கிடைக்க வேண்டும் என்று எங்களை ஆசீர்வதியுங்கள்'' என்று வேண்டிக் கொள்வர். ஆயினும், பல சமயங்களில் எனது குருநாதர், வேண்டிய பதில்களைத் தாமாகவே பக்தர்கள் தங்கள் குறைகளைப் பற்றி எதுவும் சொல்லாதபோதே கொடுத்து விடுவார். நான் அப்போது சிறுவனுக இருந்தேன். ஒரு நாள் அவர் பக்தர்களுக்கு விளக்கங்களைக் கொடுத்துவிட்டு அவர்களைச் செல்ல அனுமதித்துவிட்ட பின் நான் அவரிடம், ''மஹாஸ்வாமிகளே, உங்களிடம் மக்கள் விளக்கங்களைக் கோர வரும்போது, அவர்கள் வேண்டிக் கொள்வதற்கு முன்னரேயே நீங்கள் பதிலளித்து விடுகிறீர்கள். இது எவ்வாறு?'' என்று கேட்டேன். அவர், ''இதில் விசேஷம் ஒன்றுமில்லை. ஈச்வரன் பிரேரணையைக் கொடுக்கிருன். நான் அவனுடைய விருப்பத்தின்படி நடக்கிறேன். இவ்வாறிருக்கையில், எது அவனுடைய மனதில் இருக்கிறதோ, அது தானுகவே எனது நாவிற்கு வந்து விடுகிறது. நான் எவ்வித முயற்சியும் செய்யத் தேவையில்லை'' என்ருர். அவர் இப்படிப்பட்ட ஸித்தியை அடைந்த மஹாபுருஷர்.

அவரது வைராக்யம் எவ்வளவிற்கு உயர்ந்ததென்ருல், அவர் பீடாதிபதியாக இப்படிப்பட்ட பெரிய மடத்தில் வாழ்ந்தாலும் தாம் இங்கு வாழ்பவர் என்று எண்ணம்கூட வைத்துக் கொள்ளவில்லை.

கரதலபிக்ஷஸ்தருதலவாஸ:

(உணவிற்கு கையும், வாழ்வதற்கு மரத்தடியும் உள்ளவர்)

இப்படிப்பட்ட மனோபாவத்துடன்தான் அவர் மடத்திலிருந்து வந்தார். எனினும் தார்மீகக் காரியங்கள் மற்றும் பக்தர்களுக்கு நன்மை தரும் செயல்கள் போன்றவற்றின் விஷயத்தில், அவர் கீதையில் கூறியுள்ளபடி நடந்து வந்தார்.

ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன ।
நானவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி ॥

(பார்த்தனே! மூவுலகங்களிலும் நான் செய்ய வேண்டும் என்பது எதுவுமில்லை; மேலும் அடையாதது எதையும் அடைய வேண்டியதுமில்லை. ஆனாலும் நான் செயல்களில் ஈடுபடுகிறேன்.)

யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ।
மம வர்த்மானுவர்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச: ॥
உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் ।

(பார்த்தனே! நான், சோம்பலின்றி எப்போதும் செயலில் ஈடுபடாவிட்டால், மக்கள் எல்லா விஷயங்களிலும் எனது வழியைப் பின்பற்றுவர். நான் செயலை மேற்கொள்ளாவிட்டால், இந்த உலகங்கள் அழிவுபட்டு விடும்.)

எனது குருநாதர் மற்றவர்களை மனதில் கொண்டு, பின்வருமாறு கருதினார்.

''நீங்கள் எல்லோரும் என்னை ஒரு பெரிய பீடாதிபதியென்று பட்டம் கொடுத்துள்ளீர்கள். நான் பூஜை செய்து அதிலிருந்து பலன் பெற வேண்டியிருந்தாலும், வேண்டாவிட்டாலும் நான் பூஜை செய்யத் தவறினால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? 'ஸ்வாமிகளே பூஜை எதுவும் செய்வதில்லை. ஆனாலும் அவர் நம்மை பூஜை செய்யுமாறு மீண்டும் மீண்டும் கூறுகிறார். அவரே செய்ய விரும்பாத ஒன்றை நாம் ஏன் செய்ய வேண்டும்?' என்று கூறுவீர்கள். ஆகவே எனக்குத் தேவையானாலும், தேவையில்லாவிட்டாலும் நான் பூஜை செய்துதான் ஆக வேண்டும். பிறகு மக்களும், 'பெரியவரே பூஜை செய்கிறார். அவருக்கு அது தேவைப்படலாம் அல்லது தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் நமக்கு அது தேவை. ஆகவே நாம் செய்ய வேண்டும்' என்று நினைத்து பூஜை செய்வர்.'' ஆகவே,

உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் ।

என வரும் சொற்களைப் போல, தாம் ஞான மார்க்கத்தில் நிலைத்திருந்தாலும், அவர் கர்மாக்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்.

எனது குருநாதர் மஹாபுருஷர் என்பது அவர் காலத்தவராயிருந்து, அவரைத் தரிசித்தவர்களின் அனுபவத்தால் அவர்களுக்குத் தெரியும்.

எவ்வாறு ஒருவர் ஒரு மஹாபுருஷர் அல்லது பெரியவர் ஆகிறார்? பல முற்பிறவிகளில் சேர்க்கப்பட்ட நல்வாஸனைகள் ஒரு குறிப்பிட்ட பிறவியில் வெளித்தெரியும்போது அந்த மனிதர் மஹாபுருஷர் ஆகிறார்.

தாம் ஹம்ஸமாலா: சரதீவ கங்காம் மஹௌஷதிம் நக்தமிவாத்மபாஸ:

(அன்னப் பறவைகள் எவ்வாறு சரத்காலத்தில் கங்கையை நாடுகின்றனவோ, எப்படி சிறந்த மருத்துவ மூலிகை தனது ஒளியை இரவில் மீண்டும் பெறுகிறதோ... அதுபோல முற்பிறவியில் செய்யப்பட்டது இப்பிறவியில் வெளித்தெரிகிறது.)

கதேऽபி வயஸி க்ராஹ்யா வித்யா ஸர்வாத்மனா புதை: ।
யத்யபி ஸ்யான்ன பலதா ஸுலபா ஸாऽன்யஜன்மனி ॥

என்று மனு கூறியிருக்கிறார்.

(வித்யையானது புத்திசாலிகளால் அவர்களுக்கு வயதாகி விட்டாலும், முழுமனதுடன் கிரஹித்துக் கொள்ளப்பட வேண்டும். அது இப்போது எவ்விதப் பயனையும் அளிக்காமற் போக நேர்ந்தாலும், மற்றொரு பிறவியில் அதற்குப் பலன் கிடைத்துவிடும்.)

ஆகவே நாம் ஓர் ஆத்ம ஞானியைப் பார்க்கும்போது, ''இந்த மனிதர் தனது முற்பிறவியிலேயே ஸத்புருஷராக இருந்திருக்க வேண்டும். எனினும் தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனை அடைவதில் - மோக்ஷம் அடைவதில் - ஏதோ ஒரு தடை ஏற்பட்டதன் காரணமாக அவர் மீண்டும் பிறந்ததினால் நம் முன் இப்போது உள்ளார்'' என்று ஊகிக்கிறோம்.

எனது குருநாதர் பிறப்பிலிருந்தே உள் திரும்பிய மனதுள்ளவர். எவ்வளவு லௌகிக விஷயங்களின் நடுவிலிருப்பினும் அவர் ஆத்மாவைப் பற்றி ஒருபோதும் மறக்கவில்லை. மேலும் அவரது மனம் எப்போதும் அவரது குறிக்கோளிலேயே நிலைத்து இருந்தது.

எனது குருநாதர் இளமையிலிருந்தே இராமாயணத்தைப் பாராயணம் செய்யும் பயிற்சியை வைத்துக் கொண்டிருந்தார். இராமாயணத்தைப் பாராயணம் செய்யும் முறையில், பாராயணத்தின் தொடக்கத்தில் சில சுலோகங்களைப் படிப்பதும் அடங்கும். இத்தகைய ஒரு சுலோகம் பின்வருமாறு :

யத்ர யத்ர ரகுநாதகீர்த்தனம் தத்ர
தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் ।
பாஷ்பவாரிபரிபூர்ணலோசனம் மாருதிம்
நமத ராக்ஷஸாந்தகம் ॥

(எங்கெல்லாம் இராமரைப் பற்றிய கீர்த்தனம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் தமது உள்ளங்கைகளைத் தலையின் மீது இணைத்துக் கூப்பிக் கொண்டவாறு இருப்பவரும், கண்களில் (ஆனந்தக்) கண்ணீர் சொரியுமாறு இருப்பவருமான, இராக்ஷஸர்களை அழிக்கும் ஹனுமானை வணங்கு.)

இராம பக்தரான ஹனுமானின் இயல்பு என்ன? இராமரைப் பற்றிய உபன்யாஸம் எங்கெல்லாம் நடைபெறுகிறதோ, அந்த எல்லா இடங்களிலும்அவர் வந்து அமர்ந்து கொள்கிறார். இராமநவமி தினத்தன்று ஒரே சமயத்தில் நூறு வெவ்வேறு இடங்களில் உபன்யாஸங்கள் நடந்தால், அவர் என்ன செய்வார்? அவர் நூறு இடங்களிலும் அமருவார்.

நாம் ஹனுமானைப் பற்றிய இந்தச் சுலோகத்தைப் படித்துப் பொருளை உணர்ந்து இருக்கிறோம். ஆனாலும் ஹனுமான் வந்து போவார் என்று நம்பிக்கை கொள்வதில்லை. எனது குருவின் கருத்தோ மிகச் சுவையானது. அவர் கருதினார்: ''ஹனுமான் வரும்போது அவரை அமர்த்தும் முறை என்ன? நாம் ஒரு மரப்பலகையின் மீது அமர்ந்து பாராயணம் செய்கையில், அவர் தரையின் மீது அமர்ந்து கேட்க வேண்டும் என்பது சரியா? மேலும் நாம், நமது புத்தகங்களை மூடும்போது அவர் வெறுமனே எழுந்து

போகவேண்டும் என்பதும் சரியா? அவருக்கு மரியாதையும் உட்காருவதற்கு ஓரிடமும் தரப்பட வேண்டாமா?''

இந்த விஷயத்தைப் பற்றிச் சிந்தித்த எனது குருநாதர் ''நானே மரப்பலகையின் மீது அமரும்போது அவருக்கும் ஒரு மரப்பலகை இடப்பட வேண்டும்'' என்று முடிவு செய்தார். ஹனுமானுக்காக ஒரு மரப்பலகையை வைத்துவிட்டு, ஹனுமார் அங்கு அமர்ந்திருக்கிறார் என்ற உணர்வுடன் இராமாயண பாராயணம் செய்தார். ஒருவர் அவரிடம் வந்து, ''சிறுவனே! எதற்கு இங்கு ஒரு மரப்பலகையை வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டபோது, பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

''இது ஆஞ்ஜநேயருக்காக''

''ஆஞ்ஜநேயரை இங்கு காணவில்லையே?''

''அவரை உங்களால் பார்க்க முடியாமற் போகலாம். ஆனால்

யத்ர யத்ர ரகுநாதகீர்த்தனம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் ।

அவர் இங்கு தமது கரங்களைத் தலைமீது கூப்பிக் கொண்டு அமர்ந்திருக்கிறார்.''

''நீ என்ன முட்டாள்தனமாகப் பேசுகிறாய்?''

''பெரியவர்களின் சொற்கள் பொய்யாகுமா? ஹனுமானின் ஸாந்நித்யம் பற்றிய இந்த சுலோகத்தை நாம் தினமும் பாராயணம் செய்வதில்லையா?''

சுலோகம் உண்மையென்பதில் எனது குருநாதருக்கு இருந்த நம்பிக்கையின் அளவு இங்கு நமக்குத் தெளிவாகிறது. அவரது சிரத்தைதான் என்னே!

குழந்தைப் பருவத்திலிருந்தே எனது குருநாதர், எனது பரம குருநாதரிடம் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹா ஸ்வாமிகளிடம்) பக்தி கொண்டிருந்தார். ஏழையாய் இருந்ததால், அவருக்குத் தம் குருவிடம் சுதந்திரமாகச் செல்வதற்கோ விரும்பியதைத் தெரிவிப்பதற்கோ தைரியமோ வாய்ப்போ இருக்கவில்லை. அவரது விருப்பம் என்னவென்றால், ''எப்படியாவது குருவின் பாதுகைகள் என் வீட்டில் எனக்கு இருந்து, அவற்றை

நான் பூஜிக்க முடிந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்?'' என்பதே. அப்போது ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது.

வேறு ஊரைச் சேர்ந்த ஒரு மனிதர் சிருங்கேரிக்கு வந்து எனது பரமாசார்யாளிடம் பக்தியுடன் பல நாட்கள் சேவை செய்து குருவின் அருளுக்குப் பாத்திரமாஞர். இறுதியில் அவர் கிளம்பும் சமயம் வந்தபோது, அவர் ''மஹாஸ்வாமிகளே, உங்களுடைய பாதுகைகள் எனது வீட்டில் இருந்தால், நான் சிரேயஸ்ஸை அடைவேன். தயவுசெய்து எனக்கு அவற்றை அருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். குரு, அம்மனிதர் மீது கருணைகூர்ந்து பாதுகைகளைக் கொடுத்தார். அம்மனிதர் பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு தான் தங்கிக் கொண்டிருந்த எனது குருநாதரின் வீட்டிற்கு வந்தார்.

புறப்படும்போது, அந்த மனிதர் தனது உடைமைகளை எடுத்துக் கொண்டார். எனினும் வயதானவராதலால், அவர் பாதுகைகளைப் பற்றி மறந்துவிட்டு அவைகளை எடுத்துச் செல்லாமற் போய்விட்டார். அவரால் திரும்பி வருவதும் சாத்தியமில்லை. அந்த நாட்களில் சிருங்கேரிக்குப் பேருந்தின் வருகை அபூர்வம். எனது குருநாதர் என்ன செய்திருக்க முடியும்? அவர் ''நான் பாதுகைகளைப் பெற அவ்வளவு ஆசைப்பட்டேன்.

பங்கோருபரி கங்காப்ரவாஹ:

வெறுமென அமர்ந்திருக்கும் ஒரு முடவனின் மேல் கங்கை நீர் தாஞகவே பாய்ந்து விழுந்தது போலல்லவா பாதுகைகள் என்னிடம் வந்தன'' என்று கருதிஞர்.

அந்த நாட்களில் சிருங்கேரியில் மேற்படிப்புக்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. அதற்காக ஒருவன் வேறெங்காவது செல்ல வேண்டியிருந்தது. எனது குருநாதர் அவரது பெற்ருேருக்கு ஒரே பிள்ளை. அவர்கள் அவரிடமிருந்து பிரிவதை விரும்பவில்லை. அவர் சிருங்கேரியை விட்டு வேறெங்காவது உயர்நிலைப் பள்ளிக்காகச் சென்றிருந்தால், அவர்கள் அவரை பிரிய வேண்டியிருந்திருக்கும். அவர் பிறப்பதற்கு முன்னரே, அவரது அன்னை பல குழந்தைகளைப் பெற்றிருந்தாள். ஆனல் அவர்கள் நீண்ட காலம் வாழவில்லை. எனது குருநாதரும் சிறுவயதிலேயே இறந்துவிடக் கூடாது என்ற

எண்ணத்தினால், அவரது பெற்றோர் அவரை ஸ்ரீகண்ட சாஸ்திரியின் வீட்டில் ''நீங்கள் இந்தப் பையனைத் தயவுசெய்து பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி விட்டுவிட்டனர்.

முற்பிறவிகளில் செய்த நல்வினைப் பயனால், எனது குருநாதர் மடத்தின் பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்து ஸம்ஸ்கிருதம் படிக்கும் வாய்ப்பைப் பெற்றார். எல்லோரும், ஒரு வகுப்பை ஒரு வருடத்திற்குப் படிப்பதுதான் வழக்கம். ஆனால் எனது குருநாதர் ஒவ்வொரு வருடமும் இரு வகுப்புகளைத் தாண்டினார். ஆனாலும்.

ந குரோ: துக்ககர:

அவர் ஆசிரியரை வருத்தமுறச் செய்யவில்லை. அவருக்கு எதையும் ஒருமுறை கற்றுக் கொடுத்தாலே போதும். அதைப் புரிந்து கொள்வார். மேலும், மடத்தின் வேத பாடசாலையின் நான்காவது வகுப்பில் அவர் தாம் படிப்பதோடு, மற்ற கீழ் வகுப்பு மாணவர்களுக்குக் கற்றுத் தரவும் ஆரம்பித்தார். அவரது ஆசிரியர் அவரிடம் ''நீயே பாடங்கள் எடுக்க வேண்டும், நீ நன்றாகக் கற்றுத் தருகிறாய்'' என்று சொல்வதுண்டு. இவ்வாறு ஆசிரியருக்கு உதவுவது மூலம் அவரை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்தார்.

அந்த நாட்களில் சிருங்கேரியில் புத்தகங்கள் கிடைப்பது அரிது. அவர் தமது அழகிய கையெழுத்தினால் பல புத்தகங்களின் விஷயங்களைப் பிரதி எடுத்துக் கொள்வார். 'தாது ரூப மஞ்ஜரி'' என்று ஒரு ஸம்ஸ்கிருத புத்தகம் உள்ளது. அவர் எடுத்துள்ள பிரதி, அச்சடித்த புத்தகத்தைப் போல் உள்ளது. அச்சுப் பிரதியில் ஒரு பக்கத்திற்கு எத்தனை எழுத்துக்கள் இருக்குமோ அதே அளவு எழுத்துக்கள் இதிலும் உண்டு. அவரது பிரதி என்னிடம் உள்ளது. இவ்வாறு அவர் மிகுந்த சிரத்தையோடு பயின்றார்.

அவர் எனது பரமகுருவான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்தியோடிருந்தார். எவ்வாறு அவர் குருவின் பாதுகைகளைப் பெற்றார் என்று நான் எடுத்துச் சொன்னேன். அவரது குருநாதரிடத்தில் அவர் வைத்திருந்த சிரத்தையையும் பக்தியையும் காட்டும் இன்னொரு நிகழ்ச்சியும் உள்ளது.

எனது பரமகுரு யாத்திரைகள் மேற்கொள்வதுண்டு. அவர் மாணவர்களையும், ஆசிரியர்களையும் பரீட்சை செய்வது வழக்கம்.

ஒரு சமயம், ஒரு யாத்திரைக்குக் கிளம்பும் முன் அவர் ''ஒரு சுலோகத்தின் நான்காம் பாதத்தை நான் கூறுகிறேன். முதல் மூன்று வரிகளை நீங்கள் இயற்றி, அத்துடன் சேர்த்தால் நான் மகிழ்ச்சியுறுவேன்'' என்று பண்டிதர்களிடம் கூறினுர்.

எனது குருநாதரின் குணநலன் எப்படிப்பட்டதென்ருல், தமது குருவின் அதரங்களிலிருந்து எந்தச் சொற்கள் வந்தனவோ அவற்றை மிகுந்த சிரத்தையுடன் ஞாபகம் வைத்திருப்பார். அவர் ''குருநாதர் ஆசிரியர்களுக்காக ஏதோ ஒரு விஷயத்தைக் கொடுத்திருக்கிருர்'' என்று எண்ணினுர். அதை மனதில் வைத்துக் கொண்டார். அந்த நான்காவது பாதம் இப்படி அமைக்கப் பட்டிருந்தது.

முத்ரா காசன முக்திதானநிபுணு நித்ராதி ஜாகர்தி வா ॥

இதன் பொருள் : ஓர் உருவம் முன்னுல் அமர்ந்திருக்கிறது. அவர் தூங்குகிருரா அல்லது விழித்துக் கொண்டிருக்கிருரா? இந்த சந்தேகத்திற்கு ஒரு காரணம் இருக்கிறது.

முக்திதான நிபுணு - இவர் முக்தியையும் அளிக்கவல்லவர். எனினும் வடிவத்தைப் பார்க்கையில், அவர் உபதேசம் கொடுத்துக் கொண்டிருக்கிருரா அல்லது உறங்கிக் கொண்டிருக்கிருரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பரமகுரு இந்தச் சுலோகத்தைப் பூர்த்தி செய்யுமாறு கூறிவிட்டு யாத்திரைக்குக் கிளம்பினுர். எனது குருநாதர், ''என்னுல் சுலோகத்தை முழுமை செய்ய முடிகிறதா பார்க்கிறேன்'' என்று எண்ணினுர். அதை முழுமை செய்வதில் வெற்றியடைந்த அவர் அந்த முழு சுலோகத்தைத் தம்முடன் வைத்துக் கொண்டார்.

யாத்திரையில் இருக்கும்போது, பாடசாலை மாணவர்களின் விடைத்தாள்களைக் கேட்டு, வாங்கி அவற்றை நன்கு பார்த்து, மாணவர்களின் தகுதியை நிர்ணயிப்பது குருவின் வழக்கம். அவர் அவ்வாறு விடைத்தாள்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், எனது குருநாதரின் விடைத்தாள்களையும் பார்த்தார். ''இந்த நரஸிம்ஹ சாஸ்திரி மிகுந்த புத்திசாலியாக இருக்கிருன்'' என்ற எண்ணம் அவருக்கு வந்தது. யாத்திரையை முடித்துவிட்டு அவர் பெலகோலாவுக்கு அருகில் முகாம் செய்தார். மஹாஜனங்கள் அங்கு

சென்று அவருக்கு மரியாதைகள் அளித்து தரிசித்தனர். எனது குருநாதரும், தம் குருவின் தரிசனத்திற்காக அங்கு இருந்தார்.

பரமகுருநாதர், ''நான்கு வருடங்களுக்கு முன் உங்களிடம் சுலோகம் ஒன்றை நிறைவு செய்வதற்காகக் கொடுத்திருந்தேனே? யாரெல்லாம் அதை முடித்துவிட்டீர்கள்?'' என்று கேட்டார். எனது குருநாதர் மற்றவர்கள் போலல்லாமல் அதை நிறைவு செய்து விட்டாலும், அவ்வாறு சொல்வதற்கு வெட்கமும், பயமும் அடைந்தார். ஆனால் அருகிலிருந்த ஒருவர், ''இந்தப் பையன் செய்திருக்கிறான்'' என்று கூறினார். பரமகுருநாதர் ''இந்தப் பையன் செய்திருக்கிறானா! அதைப் படி'' என்று கூறினார்.

எனது குரு தக்ஷிணாமூர்த்தியிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். எனது பரமாசார்யாளும் சிவபக்தி கொண்டவர். அவர் சிவனைத் துதிக்கும் வகையில் அந்த சுலோகத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென முயன்றார். ஆனால் அவர் இயற்றியது விஷ்ணுவைக் குறித்து அமைந்துவிட்டதால், தமது சுலோகத்தைக் குறித்து சற்றே அதிருப்தியுற்றார் அவர். ஆனால் எனது குருநாதர் கொடுக்கப்பட்ட பகுதியை தக்ஷிணாமூர்த்தியாகிய சிவனைக் குறித்து அமையும்படி நிறைவு செய்திருந்தார்.

க்ஷோணீப்ருத்வரஸானுவர்திவடவ்ருக்ஷாதப்ரதேசஸ்திதா
முத்ராபுஸ்தகமௌனயுக் சமயுதா நாஸாக்ரத்ருஷ்டிஸ்ஸதா ।
பாராசர்யஸுகாதிமான்முனிவரான்ஸம்போதயந்தீ பரம்
முத்ரா காசன முக்திதானநிபுணா நித்ராதி ஜாகர்தி வா ॥

க்ஷோணீப்ருத்வரஸானுவர்திவடவ்ருக்ஷாதப்ரதேசஸ்திதா

தக்ஷிணாமூர்த்தி இமயமலையின் மீது வாழ்கிறார். அங்கு ஒரு கல்லால மரம் இருக்கிறது. அந்த மரத்தினடியில் அவர் அமர்ந்திருக்கிறார்.

முத்ராபுஸ்தகமௌனயுக் சமயுதா நாஸாக்ரத்ருஷ்டிஸ்ஸதா ।

ஒரு கையில் அவர் (கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரலின் நுனிகள் சேர்ந்திருக்குமாறும், மற்ற விரல்கள் நேராக இருக்குமாறும் அமையும் அறிவைக் குறிக்கும் முத்திரையான) சின் முத்திரையைக் கொண்டிருக்கிறார். மற்றொரு கரத்தில் ஒரு

புத்தகத்தைக் கொண்டிருக்கிருர். அவர் புலன்களை வென்றவராதலால் அவரது உடலானது முழுவதும் அசைவற்றிருக்கின்றது. ''கேஞபி காமேன தபச்சசார'' 'ஏதோ ஒன்றினை விரும்பி தவம் செய்தான்'' என்ற காளிதாசன் வாக்கியத்தைப் போல், இறைவன் தவம் செய்கையில் தமது கண்பார்வை மூக்கின் நுனியைப் பார்க்குமாறு உள்ளார். அவரது கண்கள் முக்கால்வாசி மூடியவாறு இருக்கின்றன. அவை சிறிதே திறந்திருக்கின்றன. அவரது உடலில் எந்த ஒரு செயலும் நடைபெறவில்லை. ஆகவே பார்ப்பதற்கு அவர் உட்கார்ந்தவாறு தூங்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது.

ஆனுலும் அவர் உண்மையில் தூங்கிக்கொண்டு தானிருக்கிருர் என்று சொன்னுல் இந்நிலையைப் பின்வரும் வரியோடு பொருந்த வைக்க முடியாது.

பாராசர்யஸுதாதிமான்முனிவரான்ஸம்போதயந்தீ பரம்

பரம் என்ருல் எல்லாவற்றிலும் உயர்ந்த ப்ரஹ்மம். தக்ஷிணுமூர்த்தியைப் பற்றி, ''*குரோஸ்து மௌனம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்து சின்னஸம்சயா: ॥*'' (குருவின் விளக்கம் மௌனம் மூலம் உள்ளது. ஆனுல் சீடர்களுடைய சந்தேகங்கள் கிழித்தெறியப்படுகின்றன) என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிஷ்யன் எந்தவிதமான கேள்வியையும் கேட்கத் தேவையேயில்லை. குரு எந்த ஒரு பதிலையும் சொல்லத் தேவையில்லை. குருவின் முன்னுல் ஒரு சீடன் அமர்ந்திருக்கும்போது சக்தி பாதம் ஏற்பட்டு விடுகிறது. அதாவது குருவிடமுள்ள சக்தியானது சீடனின் மீது இறங்குகிறது. சந்தேகங்களைப் பொருத்தவரை :

பித்யதே ஹ்ருதயக்ரந்திச்சித்யந்தே ஸர்வஸம்சயா: ।

(இதயத்தின் முடிச்சுகள் அறுக்கப்படுகின்றன. மற்றும் அனைத்து சந்தேகங்களும் கிழித்தெறியப்படுகின்றன.)

தஸ்மின்த்ருஷ்டே பராவரே ॥

ஒருவன் பரம்பொருளைப் பார்த்த மாத்திரத்திலேயே இவை தாமாக நிகழ்கின்றன. தக்ஷிணுமூர்த்தி தமது அருளினுலேயே, சுகர் முதலியவர்களின், தத்வத்தை அறிய வேண்டுமென்ற ஆசையைப்

பூர்த்தி செய்து, அவர்களுக்கு ஞானத்தை அளிக்கிறார். தக்ஷிணாமூர்த்தியின் (சுகர் போன்ற) சீடர்கள் என்ன சொல்கிறார்கள்? ''நான் உங்களது ஸந்நிதிக்கு வந்தபோது எனது எல்லா சந்தேகங்களும் நீக்கப்பட்டு விட்டன. பரம்பொருளின் ஞானம் பற்றிய உபதேசம் கிடைத்து விட்டது.''

தக்ஷிணாமூர்த்தி உபதேசிக்க வேண்டுமானால் அவர் விழித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஆதலால்,

முத்ரா காசன முக்திதானநிபுண நித்ராதி ஜாகர்தி வா ॥

ஞானத்தைத் தரவல்ல இந்த வடிவில் இருப்பவர் தூங்குகிறாரா அல்லது விழித்துக் கொண்டிருக்கிறாரா என்று என்னால் கூற முடியவில்லை.

இதுதான் சுலோகத்தின் கருத்து.

எனது பரமகுரு மிகவும் மகிழ்ந்து, ''இந்தப் பையன் இவ்வளவு சாமர்த்தியசாலியாக இருக்கிறான். நான் சிவனைக் குறிக்குமாறு சுலோகத்தை நிறைவு செய்ய நினைத்தேன். ஆனால் அது நடக்கவில்லை. ஆனால் இந்தப் பையன் அதைச் செய்துவிட்டான்'' என்று நினைத்தார். அவருடைய கடாக்ஷம் எனது குருவின்மேல் விழுந்தது.

எனது குருநாதருக்கு ஸந்யாஸ யோகம் இருந்தது. ஆனால் தமது குருநாதருடைய கரத்தின் ஸ்பர்சத்தினால் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை அவர் பெறவில்லை. எனினும் குரு, சீடனை உபதேசிக்கும் முறை பலவிதப்படும். த்ருஷ்டி தீக்ஷா அல்லது கடாக்ஷத்தின் மூலம் தீக்ஷை, ஸ்பர்சதீக்ஷா அல்லது தொடுவதன் மூலம் தீக்ஷை, மானஸிகதீக்ஷா அல்லது மனதினாலேயே உபதேசிப்பது என்பவை அவை.

வ்யாதிதேச ஸ சதுர்தசவித்யா ஸத்ய ஏவ மனஸா கிரிநாம்னே ॥

சங்கர பகவத்பாதாள், தமது மனதினாலேயே 14 வித்யைகளையும் தமது சீடனான கிரிக்கு உபதேசித்தார். ''மனத்தினாலேயே'' என்றால் பாட வகுப்புகள் இன்றி என்று பொருள். பகவத்பாதாள், ''இந்த அறிவை இவன் பெறட்டும்'' என்று வெறுமனே நினைத்தார். இவ்வாறு அருள் செய்தால்,

குருவுக்கு ஆசி கொடுக்கும் சக்தியுமிருந்தால், அந்த சக்தியானது சீடனின் மீது இறங்கி அந்தச் சீடன் ஞானத்தை அடைகிறுன். இது உறுதி.

எனது குருவின் விஷயத்தில் என்ன நிகழ்ந்தது? எனது பரமகுரு தமது உடலின் கார்யம் முடிந்துவிட்டது என்று கருதியவுடன் ஸ்ரீகண்ட சாஸ்திரி மூலம் எனது குருவிற்குச் சொல்லி அனுப்பினுர். நான் எனது குருநாதரை அழைக்கச் செய்தது பற்றி பின்னர் விவரங்கள் தருகிறேன். அவர் ''நான் நரஸிம்ஹ சாஸ்திரிக்கு ஸந்யாஸம் கொடுப்பேன்'' என்று ஸங்கல்பித்தார்.

இவ்வாறு ஒரு ஸங்கல்பம் செய்யப்பட்டது என்பது எப்படித் தெரியவருகிறது? பின்வரும் விவரங்கள் இதைக் காட்டுகின்றன. ஒவ்வொரு நாள் மாலையிலும், எனது பரமகுரு சிருங்கேரியில் ஆச்ரமத்திலிருந்து பார்க்கும் தூரத்திலுள்ள மலை ஒன்றின் உச்சியில் உள்ள காலபைரவர் கோவிலுக்குச் செல்வதுண்டு. வழியில் அந்த்யாக்ஷரீ சுலோகங்களைச் சொல்லிக் கொண்டு செல்வது அவர் வழக்கம். அந்த்யாக்ஷரீ சுலோகங்களில், ஒரு சுலோகத்தின் கடைசி எழுத்தானது அடுத்த சுலோகத்தின் முதல் எழுத்தாக இருக்க வேண்டும். மேலும், சில சாஸ்திர விஷயங்களையும் பற்றி குருவானவர் பேசிக் கொண்டு செல்வார். ஒரு நாள் மாணவர்களான மார்க்கண்டேய ப்ரஹ்மச்சாரி, சிவானந்தர் மற்றும் எனது குருநாதர் ஆகியோர் அவருடைய தரிசனத்திற்காகச் சென்றனர். அவர், அவர்களைத் தம்மோடு காலபைரவர் ஆலயத்திற்கு வருமாறு அழைத்தார். கோவிலில் அமர்ந்து எனது குருநாதரின் முகத்தைப் பார்த்தவாறு பின்வரும் மூன்று சுலோகங்களை அவர் கூறினுர்.

ஸம்ஸாரநாமகஸரிந்நாதோத்தரணே தவாஸ்தி யதி வாஞ்ச்சா ।
மாமக ச்ருணு மத்வசனம் ச்ருதிமஸ்தகஸம்மதம் ஹிதோதர்கம் ॥

ப்ரவிதாய ஸசிகவபனம் சித்த்வா யக்ஞார்த்தமாத்ருதம்
ஸூத்ரம் ।
ஸ்வீக்ருதபாரமஹம்ஸ்ய: ஸ்திரதரஸாதனசதுஷ்டயோபேத: ॥

ச்ரத்தாபக்தியுதாத்மா ப்ரவிசாரய தத்த்வமாத்மன: ஸுசிரம் ।
ஸத்குருமுகாம்புஜாதஸ்ரவதாகமசீர்ஷ வாக்யபீயூஷை: ॥

(குழந்தாய்! உனக்கு ஸம்ஸாரக் கடலைக் கடக்க வேண்டுமென்ற ஆசை இருந்தால் பிறகு, உபநிஷத்துக்கள் கூறியதற்கேற்ப உள்ளதும், பின்னர் பயனைத் தருவதுமான எனது உபதேசத்தைக் கேள். உனது தலையை சிகையோடு மழித்துவிட்டு, யாகங்களைச் செய்வதற்காக அணியப்பட்ட (புனித) நூலை அறுத்தெரிந்துவிட்டு ஸந்யாஸத்தைப் பெற்றுக் கொள். நான்கு விதமான தகுதிகளுடன் மிக உறுதியாக இருந்து, சிரத்தையுடனும் பக்தியுடனுமிருந்து ஸத்குருவின் தாமரை முகத்திலிருந்து பொழியும் அமிருதம் போன்ற மொழிகளின் மூலம் நீண்டகாலம் ஆத்மதத்வத்தை விசாரம் செய்.)

அவர் யாருக்காக இந்தச் சுலோகங்களைத் தாம் கூறினுர் என்று சொல்லாவிட்டாலும், சொல்லும்போது அவர் எனது குருவைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆகவே எனது குருநாதர் மனதினுல் தீக்ஷை பெற்ருர். மேலும், அவர் அச்சொற்களிலுள்ள உபதேசத்தைப் பெற்ருர். அவர் ''யாருக்காக குருநாதர் இந்த சுலோகங்களைக் கூறினுர்? அவை சிவானந்தருக்கு ஏற்றவையல்ல. மார்க்கண்டேய ப்ரஹ்மச்சாரி என்னுடன் இருந்தார். ஆனுல் அவருக்கும் அச்சுலோகங்கள் ஒத்து வராது. ஆகவே எனது குருநாதர் இதையெல்லாம் எனக்காகத்தான் கூறினுர். எனது குருநாதர் கூறிய சொற்களை ஞாபகத்தில் கொள்கிறேன்'' என்று நினைத்தார். அவற்றை மனப்பாடம் செய்தார். தம் குருநாதர் என்ன சொல்லியிருந்தார் என்பதை அவர்தான் எனக்குச் சொன்னுர். அந்த சுலோகங்களை நான் பிரதி எடுத்துக் கொண்டேன்.

எனது பரமகுரு, எனது குருநாதரிடம் அவருக்கு ஸந்யாஸம் கொடுக்கத் தாம் விரும்பியதையோ, அவரைத் தம் வாரிசாகத் தேர்ந்தெடுக்கத் தாம் விரும்பியதையோ கூருமல், எனது குருவின் முகத்தைப் பார்த்தவாறு சிறந்த அறிவுரை கொண்ட அந்த சுலோகங்களைக் கூறினுர். இதன் மூலம் எனது குருநாதரின் மனதில் பக்குவத்தை வரச் செய்தார்.

எனது பரமகுரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் கட்டளைக்கிணங்க, எனது குருநாதர் ஸந்யாஸத்திற்கு முன் சிருங்கேரியிலுள்ள ஸத்வித்யா ஸஞ்ஜீவினி பாடசாலையில் பயின்ருர். எனது பரமகுருநாதர், விஜயயாத்திரை ஒன்றை முடித்துக் கொண்டு சிருங்கேரி திரும்புமுன் பெங்களூர்

மஹாராஜனங்களின் புண்யவசத்தினுல், ஒரு சிறந்த கல்வி ஸ்தாபனத்தை பெங்களூரில் 'பாரதீய கீர்வாண ப்ரௌட வித்யாபிவர்தினீ பாடசாலா' என்ற பெயருடன் ஆரம்பித்து வேதாந்த மற்றும் பூர்வமீமாம்ஸா பண்டிதர்களை, மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காக நியமித்தார். எந்தெந்த மாணவர்களையெல்லாம் அங்கு முதல் குழாமாகப் படிக்க அனுப்ப வேண்டும் என்ற கேள்வி எழுந்தபோது, சிருங்கேரியில் படித்துக் கொண்டிருந்த மிகவும் புத்திசாலியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்தார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் எனது குருநாதரும் ஒருவர்.

அவரை அனுப்புவதற்குமுன் எனது பரமகுருநாதர் அவருக்கு நீலகண்ட த்ரயாக்ஷரீ என்ற ஒரு மஹாமந்திரத்தை உபதேசித்தார். பிறகு ''நீயும், உன்னிடம் அறிவு பெற்றுக் கொள்ளும் மாணவர்களும், இறைவனின் அருளைப் பெற இது வழிகோலும்'' என்று கூறினுர்.

எனது குருவின் பெற்றோர்க்கு வேறு குழந்தைகள் இருக்கவில்லை. ஆதலால், எனது பரமகுருநாதர் அவர்களையும் எனது குருநாதரோடு பெங்களூருக்கு அனுப்பினுர். எனது குருநாதர் கிளம்புவதற்கு முன், எனது பரமகுருநாதர் அவரிடம், ''நீ படித்துக் கொண்டிருக்கிருய். அதைப் பணத்திற்காகச் செய்யக்கூடாது. அறிவை சம்பாதித்துக் கொள்வதற்காக படிக்க வேண்டும். ஆத்மாவை அறிவதுதான் உயர்ந்த அறிவு. அது உனக்கு வரவேண்டும். அதற்காகத்தான் நான் உன்னை சாஸ்திரங்களில் மேற்படிப்புக்காக அனுப்புகிறேன். ஆத்ம ஞானத்தைப் பெறுவதற்கு, குருவிடமிருந்து தத்துவத்தை சிரவணம் செய்வது, கற்பிக்கப்பட்டதைச் சிந்திப்பது, தத்துவத்தின் மீது மனதை ஒருநிலைப்படுத்துவது ஆகியவை மிகவும் இன்றியமையாதவை. எனினும் சிரவணமும் மனனமும் பலனைத் தருவதற்கு மனம் பவித்திரமாக இருக்க வேண்டும். மனம் பவித்திரமாவதற்கு, சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களை ஒழுங்கான முறையில் கடைப்பிடிப்பது அவசியம். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களை ஒருவன் புரிந்துகொள்ள, பூர்வமீமாம்ஸா சாஸ்திரமானது மிகவும் பயன்படும். ஆகவே முதலில் பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தைப் பெங்களூரில் ஒரு மாணவனுக இருந்து படி'' என்று அறிவுரை கூறினுர்.

அச்சமயத்தில் எனது பரமகுருநாதர் ஒரு சுலோகத்தையும் கூறினுர்; அது பலருக்கும் தெரிந்த ஒன்று. அது

வித்யா விவாதாய தனம் மதாய சக்தி: பரேஷாம் பரிபீடனுய ।
கலஸ்ய ஸாதோர்விபரீதமேதஜ்ஞானுய தானுய ச ரக்ஷணுய ॥

(கொடியவன் ஒருவனது கல்வி விவாதத்திலும், செல்வம் அகந்தையிலும், சக்தியானது மற்றவர்களைத் துன்புறுத்துவதிலும் முடிகிறது. இதற்கு நேர்மாருக, நல்லவன் ஒருவனது கல்வி அறிவைப் பெறுவதற்காகவும், செல்வம் தானத்திற்காகவும், சக்தி துன்பப்படும் ஒருவனை காப்பதற்காகவும் ஆகும்.)

சிறிய ஊரான சிருங்கேரியிலிருந்து எனது குருநாதர் பெரிய நகரமான பெங்களூருக்கு வந்தார். அவருக்கு கடைகளுக்குச் செல்வதிலும் பொருட்கள் வாங்குவதிலும் பரிச்சயம் மிகக்குறைவு. பெங்களூரில் இராமராயர் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு எனது குருநாதர் மீது மிகுந்த விசுவாஸம் ஏற்பட்டது. எனது குரு உள்திரும்பிய மனதுள்ளவராகவும், நன்னடத்தையில் ஈடுபாடு உள்ளவராகவும், ஆசையற்றவராகவும் இருந்தார். இத்தகைய ஒருவரைக் கண்டால் யாருக்குத்தான் மகிழ்ச்சி ஏற்படாது? இராமராயர், எனது குருநாதருக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ததால், எனது குருநாதருக்கு பெங்களூரில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

சிருங்கேரியில் எனது குருநாதர் ஒவ்வொரு பிரதோஷ தினத்தன்றும், வித்யாசங்கரர் ஆலயத்தில் உட்கார்ந்து சிவமானஸ பூஜா ஸ்தோத்திரத்தில் கூறியுள்ளபடி ஈச்வரனின் மானஸிக பூஜையைச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பெங்களூரில் அத்தகைய பூஜைக்காக அவர் எங்கு சென்று அமர்வது? மடத்திற்கு சற்றுத் தொலைவாகவும் தனியாகவும் உள்ள ஓர் இடத்தை அவர் விரும்பினுர். கவிபுரத்திலுள்ள கங்காதரேஸ்வரர் ஆலயத்திற்கு அவர் சென்ருர். இப்போது அந்த இடம் முன்புபோல் ஒதுக்குப்புறமானதாக இல்லை. மக்கள் தொகை அதிகமுள்ள இடத்தின் நடுவேயுள்ளதாக ஆகிவிட்டது. முன்பு யாராவது அங்கு சென்று அமர்ந்தால், நகரத்தை விட்டு ஏதோ கிராமத்திற்குச் சென்றது போலிருக்கும். அங்கு அமர்ந்து கொண்டு எனது குரு மானஸிக பூஜை செய்வது வழக்கம்.

சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மாக்களில் பரிச்சயம் ஏற்படுவதற்காக பூர்வமீமாம்ஸா சாஸ்திரம் கற்கப்படுகிறது. அந்தப் பாடங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றுஅவரது குருநாதர் அவருக்குக் கூறியிருந்தார். அதன்படி அவர் பல மணிநேரம் பட்ட தீபிகா போன்ற மீமாம்ஸா புத்தகங்களைப் படிப்பதில் செலவிட்டார். குருநாதருக்கு வைத்யநாத சாஸ்திரி என்ற ஒரு மீமாம்ஸா சிரோன்மணி மூலம் பாடம் பயிற்றுவிக்கப்பட்டது. மீமாம்ஸா சிரோன்மணி என்பது அவரது பட்டம் மட்டுமல்ல. உண்மையிலேயே அவர் ஒரு சிறந்த மீமாம்ஸகர். அவரிடம் படிப்பது எவ்வளவு சுவையானது என்பதை மற்றொரு பண்டிதரால்தான் உணர்ந்து கொள்ள முடியும்.

எனது குருநாதர் பெங்களூரில் படித்துக் கொண்டிருக்கையில், எனது பரமகுருநாதர் தமது கடைசி யாத்திரையை முடித்துக் கொண்டு சிருங்கேரிக்குத் திரும்பினார். எனது பரமகுரு, ''இந்த தேஹம் இனி இருக்காது. நான் என்ன செய்ய வேண்டுமோ, அதை முடித்துவிட்டேன். ஆகவே நான் சாரதா பீடத்திற்கு வாரிசு நியமிக்கும் எனது கடைசி கடமையைச் செய்ய வேண்டும்'' என்று எண்ணினார். பிறகு அவர் எனது குருநாதருக்குச் சொல்லியனுப்ப நினைத்தார். அவர் மடத்தின் சர்வாதிகாரியான ஸ்ரீகண்ட சாஸ்திரியைக் கூப்பிட்டு, நான் ஒரு சிஷ்யரை வாரிசாக ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். நீ என்ன நினைக்கிறாய்?'' எனக் கேட்டார்.

''எதற்கு அவசரப்பட வேண்டும்?''

''எனக்கு அந்த எண்ணம் வந்தது. அதனால் உன்னிடம் சொன்னேன். யாரை நியமிக்கலாம் என்று நீ கருதுகிறாய்?''

சாஸ்திரி ஒரு பெரிய பண்டிதரின் பெயரைக் கூறினார். குருநாதர், ''இந்த பீடத்தில் ப்ரஹ்மசாரிகள் மட்டும்தான் ஸந்யாஸம் பெற்று அலங்கரித்து வருகிறார்கள். இதன் நடுவில் ஒரு க்ருஹஸ்தனைப் பற்றி ஏன் குறிப்பிடுகிறாய்? அவருக்கு என்னென்ன லௌகிக பந்தங்கள் ஏற்படுமோ, தெரியாது. ஆகவே அவர் தகுந்தவரல்ல'' என்று குரு கூறினார். அடுத்தபடியாக சாஸ்திரி, மிகுந்த புத்திசாலி ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டார். குருநாதர், ''அவருக்கு ஸந்யாஸம் கொடுப்பதைவிட பீடம் நிரப்பப்படாமல் இருப்பதே மேலானது'' என்றார்.

''ஏன்? அவர் நல்ல குடும்பத்தில் பிறந்திருக்கிறுர். மேலும் நம் எல்லோருக்கும் தெரிந்தவர்.''

''சும்மா இரு. அவருடைய நடத்தையே சரியில்லை. வேறு பெயர்கள் தேவையில்லை. நரஸிம்ஹனை அழைத்துவா.''

''அவர் நெடுந்தொலைவில் இருக்கிறுரே.''

''நான் சொல்வதுபோல் செய்.''

அங்கிருந்த கிருஷ்ணசாஸ்திரி, பெங்களூருக்கு வந்து எனது குருநாதரின் பெற்றேரிடம் இடப்பட்டிருந்த கட்டளை பற்றித் தெரிவித்தார். எனது குருநாதர், அவருடைய பெற்றேர்களின் ஒரே புதல்வன். ஆகவே அவர்களுடைய மனம் ஒப்பவில்லை. ஆனுலும் கிருஷ்ணசாஸ்திரி, ''இது குருவின் ஆக்ஞை'' என்று கூறியிருக்கிறுர். ''இதைவிட இங்கு வேறு என்ன பெரிது?'' என்று அவர்கள் சிந்தித்தனர். இத்தகைய உயர்ந்த ஸ்வபாவம் அவர்களுடையது.

''எங்களது மனம் முழுவதுமாகச் சமாதானம் அடையாவிட்டாலும், குருவின் ஆக்ஞைக்கு முன் நாங்கள் எதுவும் சொல்வதற்கில்லை. குருவின் கட்டளையை அனுஸரித்து நீங்கள் விரும்புவதைச் செய்யுங்கள்'' என்று கூறினர்.

எனது குருநாதர் தாமே ஒரு பண்டிதர்; அவர் பட்ட தீபிகாவின் பல பாகங்களை முடிக்கும்வரை மீமாம்ஸம் பயின்ருர். அவர் சுமார் 18 வயதானவராக இருந்தார். ஆகவே தாமே யோசனை செய்து முடிவெடுக்கும் அளவிற்கு வயது வந்தவர். ஆயினும் அவர் எந்த ஒரு கேள்வியையும் கேட்கவில்லை. ''எனது குருநாதர் என்னை சிருங்கேரிக்கு வருமாறு கட்டளையிட்டிருக்கிறுர். ஆகவே நான் செல்ல வேண்டும்.'' இதைத்தான் அவர் நினைத்தார். ''எனது பெற்றேர் என்ன ஆவார்கள்? எனது வருங்காலம் என்ன ஆகும்?'' என்ற எண்ணங்கள் எல்லாம் அவருடைய மனதில் எழவில்லை.

அந்த நாட்களில் பெங்களூரிலிருந்து சிருங்கேரி செல்லுகையில் பாதி தூரத்தை இரயில் மூலமாகவும், மீதி தூரத்தை மாட்டு வண்டியின் மூலமாகவும் கடக்க வேண்டியிருந்தது. கிருஷ்ண சாஸ்திரியும் அவரும் மாட்டு வண்டியில் செல்லும்போது, எதிர் திசையிலிருந்து வேறு ஒரு மாட்டு வண்டி வந்தது. அதிலிருந்த மடத்துச் சிப்பந்தி ஒருவன், கிருஷ்ண சாஸ்திரியைக்

கண்டவுடன் கண்ணீர் சிந்தத் தொடங்கினர். கிருஷ்ண சாஸ்திரி, ''ஏன் அழுகிறீர்?'' என்று கேட்டார்.

''நான் என்ன சொல்வது?''

கிருஷ்ண சாஸ்திரிக்கு பயமேற்பட்டு, ''என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''குரு... தனது பூத உடலைத் தியாகம் செய்துவிட்டார்.''

கிருஷ்ண சாஸ்திரி மிகுந்த அதிர்ச்சியுற்றார். அவரது மனம் ஸ்தம்பித்துப்போய் அவருக்கு என்ன செய்வதென்றே தெரியாமற் போய்விட்டது. அவர் எனது குருநாதரைக்கூட மேற்கொண்டு என்ன செய்வது என்று கேட்டார். எனது குருநாதரின் இடத்தில் வேறு யாராவது அந்த இடத்தில் இருந்திருந்தால், ''இப்போது போவதற்கு என்ன தேவையிருக்கிறது'' என்று சொல்லியிருப்பார். வேறு ஒருவர் அங்கு இருந்திருந்தால் இதேபோல் வேறு ஏதாவது எண்ணம் வந்திருக்கும். எனது குருநாதரோ, ''எனது குரு எனக்குச் சொல்லி அனுப்பியுள்ளார். இவர் என்னை அழைத்துச் செல்கிறார். இவர் பெரியவர்; குருவின் கட்டளையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்'' என்று மட்டும் நினைத்தார்.

எனது குருநாதர் சிருங்கேரியை அடைந்த பிறகு, சாஸ்திர விதிகளின்படியும் மடத்தின் சம்பிரதாயப்படியும் ஸந்யாஸம் கொடுக்கப்பெற்று, பீடாதிபதி ஆக்கப்பட்டார். அச்சமயம் மைசூர் மன்னராக இருந்த மும்முடி கிருஷ்ணராஜ உடையார் இதை ஆமோதித்து தேவையான உதவிகளைச் செய்தார்.

அச்சமயத்தில் எனது குருநாதர், ''யாருடைய ஸங்கல்பத்திற்காக நான் இங்கு அழைத்து வரப்பட்டேனோ, அவரே இங்கு இல்லை'' என்று நினைக்கவில்லை. ''நான் அழைத்து வரப்பட வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக நான் வந்து ஸந்யாஸம் பெற்றுக் கொண்டிருக்கிறேன்'' என்பதே அவர் கருத்தாக இருந்தது.

பீடாதிபதியாக இருப்பதில் நிறைய கஷ்டங்கள் உள்ளன. நிறைய வியவஹாரங்கள் இருக்கின்றன. அவையெல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தால் ஒருவனுக்கு ஓடிவிடத்தான் தோன்றும். எனது குருநாதருக்கு ஒருபோதும் அத்தகைய சிந்தனை இருக்கவில்லை.

''அச்சமயத்தில், மனத்தை திசைதிருப்ப போதிய காரணங்களிருந்தன. ஆனால் எனக்கு ஒரு விக்ஷேபமும் இருக்கவில்லை. குருவின் விருப்பப்படி என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம் என்று நான் எண்ணினேன்'' என்று அவரே கூறியுள்ளார்.

பிறகு அவர் ந்யாய விற்பன்னர்களில் சிறந்தவரான விரூபாக்ஷ சாஸ்திரியை தனக்கு பாடம் எடுக்குமாறு ஏற்பாடு செய்தார். காலை வேளைகளில் அத்வைத வேதாந்தத்தையும், மாலை வேளைகளில் ந்யாய சாஸ்திரத்தையும் கற்று வந்தார். மூன்று வருடங்களுக்குள்ளேயே அவர் இரு சாஸ்திரங்களையும் முடித்துவிட்டார். மடத்தின் பீடாதிபதி பரம்பரையில் வந்த ஞானம் மற்றும் தவப்பிரவாஹத்தில் தமது பங்கைச் சேர்த்தார். இத்தகைய ரீதியில் எனது குருநாதர் சாஸ்திரங்களைக் கற்று சாரதா பீடத்தை அலங்கரித்து வந்தார்.

எனது பரம குருநாதர் உயிருடனிருந்தபோது, பல பக்தர்கள் அவரிடம் மிகுந்த பக்தி செலுத்தி வந்தனர். அவருடைய கல்வியையும், தவத்தையும், கருணையையும் பார்த்து அவர்கள் ''இத்தகைய ஒருவரை இனி பார்க்க முடியுமா? பீடத்தின் புகழ் இனியும் நிலைத்திருக்குமோ?'' என்று ஐயமுற்றனர். பலருக்கு அத்தகைய சந்தேகங்கள் இருந்தன. எனினும் எனது குருநாதரைப் பார்த்த பிறகு, இவரும் ''எத்தகைய பண்டிதர்! தத்வத்தில் நிலைபெற்றுவிட்ட எத்தகைய மனிதர்! புலன்களை அடக்கியவர்! உள்திரும்பிய மனமுள்ளவர்!'' என்று உணர்ந்து தங்களது சந்தேகங்கள் எல்லாம் நீங்கப்பெற்றனர்.

காளிதாசன், *ப்ரவர்திதோ தீப இவ ப்ரதீபாத்* என்று கூறியிருக்கிறான்.

ஒரு விளக்கானது இன்னொரு விளக்கை ஏற்றினால், இந்த இரு விளக்குகளுக்கும் என்ன வேறுபாடிருக்கும்? எவன் அந்த இரண்டாவது விளக்கை ஏற்றினானோ அவன்தான், ''நான் இதை ஏற்றினேன்'' என்று அறிவான். பார்ப்பவர்களைப் பொறுத்தவரையில் இரண்டு விளக்குகளுக்கும் இடையில் எந்த ஒரு வேறுபாடும் காண முடியாது. இதுபோலத்தான் எனது பரமகுருநாதர் மற்றும் எனது குருநாதர் விஷயத்திலும் இருந்தது. எனது குருநாதரின் ஆன்மீகச் சக்தியினால் அவர் புகழ் வளர்ந்தது.

பிறகு அவர் யாத்திரையில் கிளம்பினுர். யாத்திரையை ஏற்பாடு செய்த ஸ்ரீகண்ட சாஸ்திரியே சந்தேகப்பட்டு, ''இவர் தமது குருவின் ஸந்நிதியில் நீண்ட காலம் இருந்ததில்லை. பல மக்களுடன் பழகியதில்லை. நான் இந்த யாத்திரைக்கு இவரை அழைத்துச் செல்கிறேன். கடவுளே, எல்லாம் நல்லபடியாக நடந்தேறுமாறு பார்த்துக் கொள்வது உனது செயல்'' என்று பிரார்த்தித்துக் கொண்டார். ஆனுல் மக்கள், யாத்திரையின்போது எனது குருநாதர் செய்த உபந்யாசங்கள், அவர் செய்த சாஸ்திர வாக்யார்த்த விசாரம், அவரது ஈச்வர பூஜை முதலியவற்றைப் பார்த்து,

சம்போர் மூர்த்திச்சரதி புவனே சங்கராசார்யரூபா

(சிவனின் வடிவம் இவ்வுலகில் சங்கராசார்யாளின் உருவத்தில் சஞ்சரிக்கின்றது.)

என்ற மாதவீய சங்கர விஜயத்தின் வார்த்தைகளையே நினைவு கூர்ந்தனர். ''நாங்கள் சங்கர பகவத்பாதாளின் காலத்தில் இருந்திருக்கவில்லை. ஆனுல் அவர் இதுபோல்தான் இருந்திருக்க வேண்டும்'' என்று எண்ணினர்; அதன் மூலம் மகிழ்ச்சியுற்றனர்.

தமாம்ஸி த்வம்ஸந்தே பரிணமதி பூயானுபசம:
ஸக்ருத்ஸம்வாதேऽபி ப்ரதத இஹ சாமுத்ர ச பலம் ।
அத ப்ரத்யாஸங்க: கமபி மஹிமானம் விதனுதே
ப்ரஸன்னுனும் வாச: பலமபரிமேயம் ப்ரஸூவதே ॥

(அறியாமை அழிக்கப்படுகிறது. மிகுந்த அமைதி கிடைக்கிறது. ஒரே ஓர் உரையாடலும் இம்மையிலும் சாவின் பிறகு வரும் மறுமையிலும் பலனளிக்கிறது. நெருங்கிய தொடர்பு ஒருவிதமான நன்மையைத் தருகிறது. புனிதமானவர்களின் சொற்கள் அளவற்ற பலனைத் தருகின்றது.)

ஒருவன் ஒரு மஹாத்மாவின் ஸந்நிதியில் இருக்க நேர்ந்தால்,

ஸக்ருத்ஸம்வாதேऽபி ப்ரதத இஹ சாமுத்ர ச பலம்

(ஓர் உரையாடல்கூட இம்மையிலும் மறுமையிலும் பலனளிக்கும்) என்று கூறப்பட்டுள்ளது.

ஒரே ஒரு நாள், அத்தகைய ஒருவரோடு உரையாடுவதற்கு ஒரு வாய்ப்பை ஒருவன் பெற்ருனேயானுல், அவரது சொற்கள்

உத்தமமான பலனை அளிக்கும். தங்களது துன்பங்கள் தீர வேண்டுமென்பதற்காக பலர் எனது குருநாதரிடம் செல்வது வழக்கம். சில சமயம் தங்களது ஆசையை அவர்களால் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், ''எனது பிரச்னையை என்னால் தெரியப்படுத்த முடியவில்லை'' என்ற எண்ணத்தோடு வெளியேறுவர். எனினும் அவர்கள் வீட்டுக்குச் செல்லுகையில் தங்களது மனதிலிருந்து வருத்தம் போய்விட்டது என்று உணர்வர். இது அனுபவத்தினால் தெரிந்த விஷயம்.

ஒரு மஹானிடம் மதிப்புக் கொண்டு ஒரு காரியத்தை மேற்கொண்டுவிட்டு, பின்னர் அவ்வாறு மேற்கொண்டது நிறைவேறுமா, நிறைவேருதா என்ற சந்தேகம் எழ வாய்ப்பு ஏற்பட்டால், மனமானது வருத்தமுறும். எனது குருநாதர் ஆசையற்றிருந்தார். ஆகவே, எனது பரமகுருநாதரால் அழைக்கப்பட்டபோது சிருங்கேரிக்குச் செல்லும் வழியில், தமது குரு தேஹத்தை துறந்துவிட்டார் என்று கேள்வியுற்றதும், ''நான் எனது குருநாதரின் கட்டளைக்கேற்ப வந்திருக்கிறேன். என்ன நடக்கப் போகிறது என்று நான் சிந்திக்க வேண்டியதில்லை'' என்ற ஒரே எண்ணம் மட்டும் அவரிடம் இருந்தது. அவரே இவ்வாறு பின்னால் கூறியிருக்கிறார். அவரது மனம் சற்றளவும் தடுமாறவில்லை.

அஹங்காரம் என்பது மனிதனின் முதல் எதிரி. அகந்தையுள்ளவன்,

அஹமத்யாபயே ஸகலப்ரபஞ்சம்

(நான் அனைத்து உலகிற்கும் கற்பிக்கிறேன்) என்று கருதும் அளவிற்குப் போய்விடுவான். எனது குருநாதர் பூரணமான பண்டிதராக இருந்தாலும், அவருக்கு சிறிதளவும் அகந்தை இருக்கவில்லை. ஆயினும், யாராவது ஒருவர் அவரிடமிருந்து பதில் அவசியம் என்ற நிலையை உருவாக்கினால், தமக்கு பதில் சொல்லத் தெரியும் என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

ஜானன்னபி ச மேதாவீ ஜடவல்லோக ஆசரேத்

(அறிந்திருந்தாலும்கூட மேதாவியானவன் ஒரு மந்தபுத்தியுள்ளவனைப் போல் நடந்து கொள்ள வேண்டும்.)

ஒருவன் நிறைய அறிந்திருக்கலாம். ஆனாலும் அவன் தனது அறிவை விளம்பரம் செய்யக்கூடாது. இதுதான் அவருடைய மனோபாவம். எனினும் அவர், மற்றவர்களின் நன்மைக்காக யாத்திரைகளை மேற்கொண்டார். ஞானத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக பலருக்கும் உபதேசித்து அவர்களை ஆத்ம ஞானத்தில் நிலைக்குமாறு செய்து, அவர்களின் வாழ்க்கையை ஸார்த்தகப்படுத்தினார். பகவான் பின்வருமாறு கூறியிருக்கிறார் :

சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதினோऽர்ஜுன ।
ஆர்தோ ஜிக்ஞாஸுரர்த்தார்தீ ஞானீ ச பரதர்ஷப ॥

(அர்ஜுனனே! பாரதர்களில் முதல்வனே! நான்குவிதமான புண்ணியசாலிகள் என்னை வழிபடுகின்றனர் - நலிவுற்றவன், ஞானத்தை நாடுபவன், செல்வத்தை விரும்புபவன், தத்துவத்தை அறிந்தவன்.)

இதில் கூறப்பட்டதுபோல் நான்குவிதமான மக்கள் அவரை நாடினர். அவர் நலிவுற்றவர்களின் துன்பங்களை நீக்கினார். ஞானத்தை விரும்பியவனுக்கு அதனைக் கொடுத்தார், செல்வத்தை நாடியவனுக்குச் செல்வத்தை அருளினார், ஞானியானவனை தான் என்றே கருதினார். அதாவது ஞானி ஒருவன் வந்தபோது அந்த ஞானிக்கும் அவருக்கும் அவரைப் பொறுத்தவரையில் ஒரு பேதமும் இருக்கவில்லை. எப்படி?

த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணு:

(ஒரே விஷ்ணு உன்னிடமும், என்னிடமும் மற்ற இடத்திலும் உள்ளார்.)

இத்தகைய பேதமில்லாத நிலையை அவர் கொண்டிருந்தார். நீண்டகாலம் மடத்தில் சாரதாம்பாளுக்குச் சேவை செய்து திருப்தி அடைந்தார். பிறகு அவர் பீடாதிபதியின் வியவஹாரச் சுமையை இறக்கினால்தான், தாம் ஆத்மஞானத்தை அடைந்தது ஸார்த்தகமாகும்; இல்லாவிட்டால், நிறைய விக்ஷேபங்கள் ஏற்படும் என்று நினைத்தார். ஆகவே அவர் ஒரு சிஷ்யனுக்கு ஸந்யாசம் கொடுத்து அவனுக்கு பயிற்சியளிக்க ஸங்கல்பித்தார். அவ்வாறே ஸ்ரீகண்ட சாஸ்திரியிடம் தெரிவித்தார். ஈச்வர ப்ரேரணையினால் ஸ்ரீகண்ட சாஸ்திரி என்னை சிருங்கேரிக்கு அழைத்துச் சென்றார்.

ஆரம்பத்தில் எனது குருநாதர்,

ஆசாவசாதஷ்டதிகந்தராலே தேசாந்தரப்ராந்தமசாந்தபுத்திம் ।

என்று தொடங்கும் சிவன் மீதுள்ள சுலோகத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தார். என்னை அதை மனப்பாடம் செய்ய வைத்தார். பிறகு அவர் ஸந்யாசம் கொடுத்தார். அச்சமயம் அவர் ஸ்ரீகண்ட சாஸ்திரியிடம், ''இனிமேல் நான் பல்லக்கில் உட்காரவோ, விழாக்களுக்கு வரவோ மாட்டேன்'' என்றார். சாஸ்திரி, ''இதெல்லாம் என்ன? இப்போது என்ன செய்வது?'' என்று வியந்தார். எனது குருநாதரின் கருத்து, ''நான் ஒரு ஸ்வாமிகளைத் தேர்ந்தெடுத்து இருக்கிறேன். ஆகவே நான் ஏன் எந்த ஒரு விழாவிற்கும் வரவேண்டும்?'' என்று இருந்தது. ஸ்ரீகண்ட சாஸ்திரி, ''இந்த முடிவு நல்லோர்களுக்கு ஸம்மதம் அல்ல. நான் உங்களது உயர்ந்த வைராக்கியத்தை அறியலாம். ஆனாலும், மடத்தில் பின்பற்றப்படும் உலக வழக்குப்படி நீங்கள் அரச உடைகளை அணிந்து கொண்டு உங்கள் சீடருடன் வரவேண்டும்'' என்று கூறினார். பின்னர், எனது குருநாதர், ''ஓ, ஆகவே உலகத்திற்காக அப்படி நான் வரவேண்டும். அப்படித்தானே! சரி'' என்று கூறினார். இதை நான் எனது குருநாதரிடமிருந்து கேட்டிருக்கிறேன். ஸ்ரீகண்ட சாஸ்திரியும் அவ்வாறே சொன்னார். அவரது வைராக்யத்தின் அளவு எல்லையற்றது. பீடாதிபத்ய வியவஹாரங்களை எந்த அளவிற்குச் சுமையாகக் கருதினார் என்றால், எனக்கு ஸந்யாசம் அப்போதுதான் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் எனக்குப் பயிற்சி அளித்திருக்கக்கூட இல்லை. அந்த நிலையிலும்கூட ''நான் ஒருவரை மடத்தின் செயல்களை நிர்வகிப்பதற்கு தயார் செய்துவிட்டேன்'' என்று நினைத்துவிட்டார் குருநாதர்.

சாஸ்திர வாக்யார்த்த சபை நடக்கும்போது யாராவது ஒருவர் எதையாவது புதிதாகப் பேசினால் அவர் மிகவும் மகிழ்ச்சியுறுவது வழக்கம். சதகோடி என்று தர்க்க நூல் ஒன்று உள்ளது. ஒரு சமயம் அதனுடைய சில வாக்யங்களின் கருத்துக்களில் வாக்யார்த்தம் நடந்தது. அந்நூலில், ஸத்பிரதிபக்ஷம் என்னும் ஒரு தோஷம் விளக்கப்படுகிறது. ஏதாவது ஓர் ஆதாரத்தினால் எழுப்பப்படும் ஒரு யூகம் இன்னொரு ஆதாரத்தினால் மறுக்கப்படும்போது, முதல் காரணம் ஸத்பிரதிபக்ஷம் என்ற குற்றமுடையதாக ஆகும். உதாரணத்திற்கு, ''ஒலி அழிவற்றதாகும், அது கேட்கப்படுவதால்''

என்று சொல்லலாம். ஒலியின் அழிவற்ற தன்மை, ''ஒலி அழியக்கூடியது. ஏனென்றால், அது குடம் போன்ற ஒரு காரியம்'' என்பதால் மறுக்கப்படுகிறது. இங்கு ''கேட்கப்படுவது'' என்ற முதல் ஆதாரம் குற்றமுள்ளதாக இருக்கிறது. இந்த குற்றம் ஸத்பிரதிபக்ஷமாகும்.

இந்த நூலில் அபாவம் (இல்லாமை) மற்றும் பேதம் (வேறுபாடு) என்பவைகள் மூலம் ஸத்பிரதிபக்ஷம் பற்றிய குறிப்பு வருகிறது. பின்வரும் நிகழ்ச்சி இதைப்பற்றியது.

எனது குருநாதர் ஆரம்ப காலத்தில் நான் சபையில் சாஸ்திர வாக்யார்த்தத்திற்குப் பேசவேண்டிய விஷயத்தை மனப்பாடம் செய்யுமாறு செய்தார். நான் எதை பேசப் பயிற்சி பெற்றிருந்தேனோ அதையே பேசினால்கூட அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். சதகோடியைப் பற்றிய எனது பேச்சில் ஒரு சமயம் நான், அபாவம் - அதன் விளக்கம் சம்பந்தப்படட பரிஷ்காரங்களைக் (குறைநீக்கத்தை) கூறி முடித்தேன். எனினும், அதில் ஒரு குறை ஏற்படுகிறது. ஆகவே, இந்த விஷயம் குறித்து நான் ஆழமாக சிந்தித்து ''பேதத்தை'' அந்த விளக்கத்திற்குள் சேர்த்தேன். நான் இவ்வாறு பேச ஆரம்பித்தபோது எனது குருவின் முகம் சிறியதாகப் போயிற்று. ஒருவேளை, புதிதாக நான் பேச இருந்த விஷயம் என்னவாக இருக்குமோ என்று அவர் நினைத்திருக்கலாம். எனினும், நான் சரியாகத்தான் விளக்கிக் கொண்டிருந்தேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் மேற்கொண்டு உரையாற்றியபோது, எனது குருவின் முகம் இன்பப் புன்னகை பூத்து பிறகு அவரது கண்கள் களிப்பினால் ஒளிர்ந்தன. அவர் மிகுந்த மகிழ்ச்சியுற்றார்.

சபை முடிந்து திரும்பும்போது அவர், ''இந்த புது தோஷ பரிஹாரத்தை யார் சொன்னார்?'' என்று கேட்டார். ''யாரும் சொல்லவில்லை. ஸந்நிதானம் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு, நான் மேலும் கற்பனை செய்து பார்த்து அபாவம் மற்றும் பேதம் ஆகிய இரண்டையும் சேர்த்துக் கொண்டு விட்டேன்'' என்று பதிலளித்தேன். இதற்கு அவர், ''இதை விரூபாக்ஷ சாஸ்திரி கூறியிருக்கிறார். எனினும், அது எனது ஞாபகத்திற்கு வரவில்லை. நீங்கள் அதைச் சொன்னது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியுற்றேன்'' என்றார். உண்மையில் அன்றைய தினம் அவர் எவ்வளவு

மகிழ்ச்சியுற்ருர் என்ருல் என்னை அவருடைய ஸந்நிதியிலிருந்து போகவே விடவில்லை. அடுத்தவரிடம் துளி அறிவைக் கண்டாலும் அவர் மிகுந்த மகிழ்ச்சி பெறுவது உண்டு.

நாம் எவ்வாறு நடந்து கொண்டாலும் நம்மைச் சுற்றி ஏதாவது நல்லவையோ, தீயவையோ நடக்கும் என்று உணர்ந்திருந்தார் குருநாதர். அது எனது குருநாதரின் ஓர் இயல்பு. அப்போது நான் சிறுவனாக இருந்தேன். தயக்கமின்றி வேண்டியவற்றைப் பேசுவேன். அவர் என்னிடம், ''நீங்கள் இவ்வாறு பேசக்கூடாது'' என்று எனக்கு அறிவுரை கூறியதுண்டு. ஆனாலும், அத்தகைய சூழ்நிலையில் வெறுமெனக் கண்டுகொள்ளாமலிருப்பதும் கடினம். மந்த்ரேஸ்வர சர்மா எனது குருநாதரிடம், ''உங்களுடைய தாக்ஷிண்யத்தினுல் நீங்கள் நிறைய துயரம் அனுபவித்து விட்டீர்கள். உங்களது சீடர் எப்படி?'' என்று கேட்டார். அதற்கு எனது குருநாதர், ''அவர் என்னைப் போலல்ல. அவர் எப்போதும் கவலையற்றும் சந்தோஷமாகவும் இருக்கிருர்'' என்ருர். அது அப்படித்தான்.

நான் மரங்களின் மீது ஏறி மற்றும் நீச்சலடித்து மகிழ்வேன். எனினும், எனது நீச்சல் அவருக்கு கவலையைத் தந்தது. அவர் கூப்பிட்ட பின்னர் நீரிலிருந்து வெளிவருவது சற்றே தாமதப்படுத்தினுலும் அவர், ''ஓ... என்ன நடக்கப் போகிறதோ?'' என்று நினைப்பார். ஆபத்தான சூழ்நிலைகளும் எனக்கு நேர்ந்திருக்கின்றன. ஆபத்து மிக்க நீர்நிலைகளில்கூட சுதந்திரமாக நீச்சலடிப்பதை அந்த வயதில் என்னுல் தவிர்க்க இயலவில்லை. நதியைப் பார்த்தவுடன் அதில் குதிக்காமல் என்னுல் இருக்க முடியாது. ஆனுல் நீச்சலுக்குப் பிறகுதான் ''ஏன் குதித்தோம்'' என்று உணர்வேன். எனக்கு ஏற்பட்ட ஆபத்து மிக்க சூழ்நிலைகளைக் கண்டு எனது குருநாதர், ''நதிக்குள் போகாதே'' என்பார். நான் அவரிடம் கீழ்ப்படிதலுடன், ''ஆமாம், மஹாஸ்வாமிகளே! நீங்கள் சொல்வதுபோலவே நான் செய்வேன்'' என்று பதிலளிப்பேன். ஆயினும் தண்ணீரைப் பார்த்தவுடன், இதையெல்லாம் நான் மறந்துவிடுவேன். ''ஏன் நீச்சலடித்தாய்?'' என்று கேட்கப்பட்டால், அன்றும் எப்படிப் பொய் பேசுவது என்பதை அறியாத நான், ''தண்ணீரில் பயப்படுவதற்கு காரணமான எதையுமே நான் செய்யவில்லை'' என்று பதிலளிப்பதுண்டு. அவர், ''பயமோ, நீச்சலோ இதில் எதுவுமே தேவையில்லை'' என்று கூறுவார்.

இந்நாட்களில் நான் நீச்சலுக்குச் செல்வதில்லே. மாருக, வேறு யாராவது சுதந்திரமாக நீச்சலடித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தால், ''ஏன் இப்படி அநியாயமாக தண்ணீருக்குள் செல்கிருய்?'' என்று கேட்பேன். இளமையில் நான் வேறுவிதமாக இருந்தேன். என் குரு எத்தகைய மிகுந்த பரிவோடு என்னே வளர்த்தார் என்ருல், தாம் பரம்பொருளில் நிலேபெற்றிருந்தாலும், எனக்கு நதியில் ஆபத்து வரலாம் என்று அவர் கவலேயுறுவதுண்டு.

பல கஷ்டங்கள் மடத்தில் வந்தபோது நான், ''மடத்தில் எதற்காக தங்க வேண்டும்?'' என்று கேட்டேன். அதற்கு அவர் வேடிக்கையாக, ''நீங்கள் இங்கு தங்க வேண்டியிருப்பது உங்களுடைய பிராரப்தம்'' என்று கூறுவார். ''இவ்வாறு செய்வதில் கஷ்டமிருக்கிறதே'' என்று நான் கூறியபோது ''பிரச்னேகளிலிருந்து நீங்கள் ஓடிப்போனுல், விவேகத்திற்கு என்ன வேலே இருக்கிறது? நெருக்கடியான நிலேமை ஒன்றை அனுபவிப்பதன் மூலம், அதற்கு காரணமாக இருந்த முற்பிறவியின் கர்மா பலனேத் தந்து தீர்ந்து போகட்டும். ஒருவன் விரும்பிய முடிவை அடைவதில் பிரச்னேகளே அனுபவிக்க வேண்டியிருந்தாலும், தான் எடுத்துக் கொண்ட காரியத்தை முடிப்பவன்தான் உண்மையான மனிதன். நீங்கள் கஷ்டங்களிலிருந்து ஓடிவிட்டால், அது பாராட்டத்தக்கதாக இருக்காது.

ப்ராரப்யதே ந கலு விக்னபயேன நீசை:
ப்ராரப்ய விக்னவிஹதா விரமந்தி மத்யா: ।
விக்னை: புன: புன: ப்ரதிஹன்யமானு:
ப்ராரப்தமுத்தமஜனு ந பரித்யஜந்தி ॥

(கீழ்த்தரமானவர்கள் இடையூறுகளுக்குப் பயந்து, எதைச் செய்ய வேண்டுமோ, அதை துவங்குவதில்லே. நடுத்தரமானவர்கள் எதைச் செய்ய வேண்டுமோ, அதை இடையூறுகள் ஏற்பட்டால் விட்டுவிடுகின்றனர். உயர்ந்த மனிதர்கள், கஷ்டமான சூழ்நிலேகளால் மீண்டும் மீண்டும் தடுக்கப்பட்டாலும், தாங்கள் எடுத்துக் கொண்டதை கைவிட்டு விடுவதில்லே.)

ஒரு காரியத்தை எடுத்துக் கொள்ளாமலிருப்பது ஒன்று. இப்போதோ காரியம் கையில் இருக்கிறது. இன்பமோ துன்பமோ

இருக்கட்டும். காரியம் முடிக்கப்பட வேண்டும்'' என்று கூறினார். இவ்விதம் மிகுந்த ஈடுபாட்டுடன் என்னை அவர் வளர்த்து வந்தார்.

அவரது மனம் எப்படியிருந்தது? இது பின்வரும் அறிவுரையிலிருந்து தெளிவாகிறது. சிருங்கேரியில் ந்ருஸிம்ஹ வனத்தில் இருக்கும்போது, நான் தினமும் சாரதாம்பாள் ஆலயத்திற்குச் சென்று அங்கேயே சிறிது நேரம் இருப்பது வழக்கம். திரும்பி வருகையில், எனது குருநாதர் ஒரு சமயம், ''நீங்கள் நதியைக் கடந்து வந்திருக்கிறீர்கள். என்ன எண்ணம் உங்களது மனதில் எழுந்தது?'' என்று கேட்டார்.

''என்ன எண்ணமா?'' என்று வியப்புற்ற நான் ''நான் பார்த்த பொருட்கள் பல'' என்று பதிலளித்தேன்.

''என்ன புதிதாக இருந்தது?''

''ஒன்றுமில்லை. கண்ணுக்குத் தெரிந்தவற்றைப் பார்த்தேன்.''

''எதெல்லாம் கண் பார்வையில் தென்படுகிறதோ அதையெல்லாம் பார்க்க வேண்டுமா?''

''பொருட்களைப் பார்க்காமல் இருப்பதற்காக கண்களை மூடிக் கொண்டால் பிறகு நடப்பதே முடியாதே!''

''நீங்கள் பார்க்க வேண்டும். ஆனாலும் பார்க்காமலும் இருக்க வேண்டும்.''

''அது எப்படி ஸாத்தியமாகும்?''

இதற்கு அவர், ''*ஆத்மாம்போதேஸ்தரங்கோऽஸ்மயஹமிதி கமனே*''.

(நடந்து செல்கையில், ''ஆத்மா என்னும் கடலில் நான் ஓர் அலை'' என்று சிந்திக்க வேண்டும்.) ''இவ்வாறுதான் இருக்க வேண்டும்'' என்று கூறினார்.

நாம் உட்கார்ந்திருக்கும் நிலையிலிருந்து எழுந்து நடக்கத் துவங்குகையில், ''நான் நடந்துகொண்டு எங்கோ செல்கிறேன்'' என்ற சிந்தனை இருக்கக் கூடாது. ஆத்மாவென்னும் பெரிய சமுத்திரத்தில் ஓர் அலை எழுந்துள்ளது. அந்த அலை முன்னேக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அலைக்கும் கடலுக்கும் இடையில் எந்த

ஒரு வேறுபாடுமில்லை. நடக்கையில் ஒருவன், ஆத்மாவாகிய கடலில் தான் ஓர் அலை என்று சிந்திக்க வேண்டும் - ''நான் ஆனந்தமாகிய கடலில் ஓர் அலை.''

நான் அவரது அறிவுரை குறித்து வியந்தேன். அவர் தொடர்ந்தார். ''எப்போதுமே - ஒருவனுடன் பேசிக் கொண்டிருக்கும்போதுகூட - இந்த எண்ணத்தை மீண்டும் மீண்டும் மனதில் கொள்ள வேண்டும்.''

ஒருவன் உட்கார்ந்திருக்கும்போது எத்தகைய எண்ணம் இருக்க வேண்டும்? அவர் கூறினுர் :

... பாவயன் ஆஸனஸ்த்த:
ஸம்வித்ஸூத்ரானுவித்தோ மணிரஹமிதி வாடஸ்மி

(உட்கார்ந்திருக்கும்போது ''நான் சைதன்யம் என்னும் நூலில் கோர்க்கப்பட்டுள்ள மணி'' என்று சிந்தித்துக் கொண்டு) ''ஞானம் என்ற நூலில், மணி ஒன்று கோர்க்கப்பட்டிருக்கிறது. அந்த மணியை அகற்ற முடியாது. நூலானது அறுக்க முடியாத சைதன்யத்தினுல் ஆனது. நான் அந்த மணி.'' இத்தகைய ரீதியில் சிந்தனை செய்யப்பட வேண்டும்.

...இந்த்ரியார்த்தப்ரதீதௌ
த்ருஷ்டோடஸம்யாத்மாவலோகாதிதி

எப்போதெல்லாம் ஒரு பொருள் பார்க்கப்படுகிறதோ அப்போது அந்தப் பொருளைப் பார்ப்பதில் கவனம் இருந்துவிடக் கூடாது. ''ஆஹா, சைதன்யமானது இயற்கையாக பொருளின் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. ஆனுல், இப்போது பொருட்களோடு தொடர்புடையதுபோல் சைதன்யம் தோன்றுகிறது. ஆத்மாவின் பூர்ணத்துவம் அதிகரித்திருக்கிறது. ஓர் அடியை வாங்கினுல் நமக்கு உடலின் உணர்வு துல்லியமாகத் தெரிகிறது. இதேபோல் பொருட்கள் பார்க்கப்படுகையில் குறிப்பாக ஆத்மாவின் இருப்பு தெரிகிறது. சாதாரணமாகக்கூட நமக்கு உடலின் உணர்வு இருக்கிறது. ஆனுல் நாம் அடிக்கப்பட்டால் இந்த உணர்வு அதிகமாகிறது. இதேபோல் சைதன்யமானது எப்போதும் இருந்தாலும், ஆத்மாவின் தரிசனம், பொருட்கள் பார்க்கப்படும்போது சிறப்பாக ஏற்படுகிறது.''

படுத்துக் கொண்டிருக்கையிலோ ''*சயனவிதௌ மக்ன ஆனந்தஸிந்தௌ*'' என்று சிந்தனை செய்ய வேண்டும். அதாவது ''நான் இப்போது ஆனந்தக்கடலில் மூழ்கியுள்ளேன்'' என்று சிந்திக்க வேண்டும். மேலும் இத்தகைய சிந்தனையைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும். அது மிகவும் நல்லது. சாதாரணமாக படுத்துக் கொண்டிருந்து தூங்கப் போவதற்கும், தானாகவே சிந்தனைகளை அகற்றிக் கொண்டு தூக்கத்தில் ஆழ்வதற்கும் உள்ள வித்யாசத்தை யார் வேண்டுமானாலும் பரீட்சை செய்து பார்க்கலாம். படுத்துக் கொண்ட நிலையில் ஆனந்தகரமான உணர்வை வரவழைத்துக் கொண்டு பின் அதையே தூக்கம் ஆட்கொள்ளும் வரை நீடிக்கச் செய்ய வேண்டும். இவ்வகையாக தூங்கச் செல்வதில் கிடைக்கும் மிகுந்த இன்பம் சில நாட்கள் பயிற்சி செய்து அனுபவிக்கப்பட்டால் தெளிவாகத் தெரியும்.

அந்தர்நிஷ்டோ முமுக்ஷு: ஸ கலு தனுப்ருதாம் யோ நயத்யேவமாயு: ॥

எவன் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை இத்தகைய ரீதியில் நடத்துகிறானோ, அவன் மனிதர்களிலேயே உள்திரும்பிய மனமுள்ள, மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன் ஆவான்.

இத்தகைய ரீதியில் தனது வாழ்வைக் கழிப்பவன், மனிதர்களுள் திடமான, உள்திரும்பிய மனமுள்ள, மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன். ஆகவே நடக்கையிலும், உட்கார்ந்து கொண்டிருக்கையிலும், படுத்துக் கொண்டிருக்கையிலும்கூட நாம் இவ்வாறுதான் நமது வாழ்க்கையை நடத்த வேண்டும். இந்த அறிவுரையைத்தான் எனது குரு எனக்கு அளித்தார்.

எனது பரமகுருநாதர் ஆத்மவித்யா விலாஸத்தை ஒவ்வொரு பிரதோஷத்தன்றும் படிப்பதில் மிகுந்த சிரத்தையுடன் இருந்தார். எனது குருநாதருக்கும் இத்தகைய பழக்கம் இருந்தது. ஆத்மவித்யா விலாஸத்தின் சுலோகங்களைப் பற்றிய சிந்தனை ஆத்மானுபவத்தை, பெருமளவிற்கு கொடுக்கின்றது. எனது குருநாதரின் வாழ்நாளில் நான் என்றாவது ஒரு நாள் ஆத்மவித்யா விலாஸத்தைப் படிக்கத்

தவறினுல் அவர் ''படி'' என்று கூறுவார். ஒருமுறை அவர், பின்வரும் சுலோகததின் பொருளேக் கேட்டார்.

ஜனிவிபரீதக்ரமதோ புத்த்யா ப்ரவிலாப்ய பஞ்சபூதானி ।
பரிசிஷ்டமாத்மதத்த்வம் பச்யன்னுஸ்தே முனி: சாந்த: ॥

(நிலம், நீர், தீ, காற்று, வெளி என்னும் பஞ்சபூதங்களேயும் தாங்கள் தோன்றிய முறைக்கு நேர்மாருன முறையில் புத்தியினுல் லயம் செய்த பிறகு, எஞ்சியிருப்பதான ஆத்மாவையே பார்த்துக்கொண்டிருப்பவராய், முனிவர்அமைதியுடன் இருக்கிருர்.)

ப்ரவிலாப்ய பஞ்சபூதானி

என்ருல் பஞ்சபூதங்களே லயமாக்குதல் என்று பொருள். நிலத்தின் ஒரு மாறுதலான சர்க்கரை ''நீர்'' என்ற பூதத்தில் கரைகிறது. ஆனுல் சர்க்கரையைப் போன்று நிலத்தின் மாறுதல்களாய் உள்ள கல், மண் முதலியவை அவ்வாறு கரைவதில்லே. இதுதான் மேலோட்டமாகப் பார்த்தால் தோன்றும் பொருள். இதை உணர்ந்த அவர் தாமே இதன் கருத்தை விளக்கினுர். அவர் பகவத்பாதாளின் ப்ரஹ்மானுசிந்தனத்தில் வரும் கீழ்க்காணும் சுலோகத்தை மேற்கோள் காட்டினுர்.

ப்ருதிவ்யப்ஸு பயோ வஹ்னௌ வஹ்னிர்வாயௌ நபஸ்யஸௌ ।
நபோऽப்யவ்யாக்ருதே தச்ச சுத்தே சுத்தோऽஸ்ம்யஹம் ஹரி: ॥

(நிலம் நீரிலும், நீர் தீயிலும், தீ காற்றிலும், காற்று ஆகாசத்திலும் லயமாக்கப்பட வேண்டும். இந்த ஆகாசமும் பஞ்சபூதங்களின் வெளித்தோன்ருத காரணமான ஒன்றில் சேர்க்கப்பட வேண்டும். அந்த வெளித்தோன்ருத ஒன்று சுத்தமான பரம்பொருளில் சேர்க்கப்பட வேண்டும். நான் அனேத்தையும் லயப்படுத்தும் அந்த சுத்தமான பரம்பொருள்.)

ப்ரவிலாப்ய (பஞ்சபூதானி)

மண் நீரில் கரைவதில்லே. ஆனுல், இந்தக் கரைதலேப் பற்றி இங்கு பேசப்படவில்லே. வேறென்ன? ப்ரபஞ்சத்தின்

பஞ்சபூதங்களின் உற்பத்திக்கு நேர் எதிரிடையான முறையில், ஒரு காரியம் அதன் காரணத்தில் சேர்கிறது. அந்தக் காரணம், அதனுடைய காரணத்தில் சேர்கிறது. நிலத்துக்கு, அதன் காரணமான நீரைத் தவிர வேறு இருப்பு இல்லே. இவ்வாறு அறிவதுதான் ப்ரஹ்மானுசிந்தனத்தில் நேரடியாகவும், ஆத்மவித்யா விலாஸ சுலோகத்தில் ஸூக்ஷ்மமாகவும் பேசப்பட்ட, நீரில் பூமியை லயமாக்குதல் ஆகும். நீருக்கு, அதன் காரணமான தீயைத் தவிர வேறு இருப்பு கிடையாது. இதுதான் நீரைத் தீயில் லயமாக்குதல் ஆகும். கடைசியில் மூலகாரணமான ஆத்மாதான் லயத்தின் க்ரமம் முடிந்த பிறகு மீதமாக நிலேத்திருக்கிறது. இத்தகைய ஆத்ம சிந்தனே,

பரிசிஷ்டமாத்மதத்த்வம்

என்ற ஆத்மவித்யா விலாஸ சுலோகத்தின் வார்த்தைகளில் குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிந்தனே செய்வதிஞல் என்ன விளேவு ஏற்படுகிறது? ப்ரஹ்மானுசிந்தனத்தில்,

க்ஷணம் ப்ரஹ்மாஹமஸ்மீதி ய: குர்யாதாத்மசிந்தனம் ।
தன்மஹாபாதகம் ஹந்தி தம: சூர்யோதயோ யதா ॥

(ஒருவன், ஒரு கணத்திலாவது தனது ஆத்மாவை சிந்தித்து ''நான் ப்ரஹ்மம்'' என்று எண்ணுவானேயாஞல், அந்த எண்ணம், எவ்வாறு சூரிய ஒளி இருளே நீக்குகின்றதோ அதேபோல் அவனுடைய மிகப்பெரிய பாவத்தை அழிக்கிறது.)

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் என்னிடம் ''ஆத்மவித்யா விலாஸத்தின் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளபடி இத்தகைய ரீதியில் சிந்தனே செய்யுங்கள்'' என்ருர். தமது விளக்கத்தால் அதில் சுவாரஸ்யத்தை உண்டாக்கிஞர். அவர், சாஸ்திரம் கற்பிக்கப்படும்போது, ஒவ்வொரு வரியாக விளக்குவது ஒரு வழி என்று கூறிஞர். இன்ஞெரு வழி, வரிகளுடன் ஒருவனுடைய சொந்த அனுபவத்தையும் சேர்த்து விளக்குவது ஆகும். அவருடைய உபதேசத்தில் இதை நன்கு காணலாம். அது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

எனது குருநாதர் பரம்பொருளை அறிந்தவர். அவர் எந்த ஒரு விளைவையோ, காரணத்தையோ எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அவர் உலகிற்கு நன்மை உண்டாகும் வகையில் தமது வாழ்வை நடத்தினார். இத்தகைய ஒருவரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக் கொள்வது, அவரது திருநாமத்தை நாம ஸங்கீர்த்தனம் செய்வது, அவர் தம் வாழ்க்கையில் காட்டியவற்றை சிறிதளவுக்காவது நமது வாழ்க்கையிலும் நடைமுறைக்குக் கொண்டு வருவது - இவை நம் சிரேயஸ்ஸிற்கான வழிகளாகும்.

(கன்னடத்தில் நிகழ்த்திய உபந்யாஸங்களிலிருந்தும் உரையாடல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டது.)

நன்றி : ஸ்ரீ ஆர்.எம். உமேஷ் அவர்கள்

2

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

டாக்டர் ஸ்ரீ C.P. இராமஸ்வாமி ஐயர்

இந்தியரின் உயர்சிந்தனை, தத்துவஞானம், வாழ்க்கையின் லக்ஷியம் ஆகிய இவைகள் ஆதிசங்கராச்சார்யாரால் எவ்வளவு மேன்மையடைந்தது என்ற வரலாற்றின் உண்மையை பலதடவை நான் பேசியும், எழுதியுமிருக்கிறேன். ஒரு பக்கம் பிரபஞ்சத்தைப் பற்றிய பெரும் பிச்சினைகளைத் தீர்க்கும் வேதாந்தியின் மறுக்க முடியாத சித்தாந்தப்பற்றும், மற்றொரு பக்கம் பரமனுடைய ஸகுண பாவத்தில் உள்ளம் பொங்கிவரும் பக்தியும் அவரிடம் கலந்தே காணப்படுகின்றன. தர்க்கவாதத் திறமையும், இன்பக் கவிதா சக்தியும், சலிக்காமல் வெற்றிபெறும் விவாதச் சாமர்த்தியமும், மாபெரும் நிர்மாண சக்தியும் அவரிடம் ஒருங்கே கூடியுள்ளன. நாடெங்கும் விஜய யாத்திரை செய்து நான்கு திசைகளிலும் மடங்களை நிறுவி தன் சமயக் கொள்கையைப் பாதுகாத்தும், பரவச் செய்தும் தன் ஆற்றலை விளக்கியிருக்கிறார். உலகெங்கும் வியாபிக்கும் பல சமய ஸ்தாபனங்களில் சில சமயம் தகுதி வாய்ந்த பெருந்தகையோர் காணப்படினும், மற்றும் சில சமயம் தகுதி யற்றவர்களே நிர்வகித்து வந்திருக்கிறார்கள். ஆனால் சங்கராச்சார்யாரால் நிறுவப்பட்ட மடங்களில் - அதிலும் தென்னாட்டில் - கல்வியறிவும், அருட்செல்வமும் படைத்த குருக்களே ஆட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள்.

பற்றற்ற ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டு பரத்தில் மனதை லயப்படுத்திய சிருங்கேரி பூர்வாசாரியார் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் பிரம்மவித்துக்களுக்கொரு லக்ஷிய புருஷராகவே

விளங்கினர். இருந்தாலும் பொது மக்களின் மனோபாவத்தை நன்கு அறிந்தவரே. ஸமய ஸம்பந்தமானவைகளில் மட்டுமல்லாமல் லௌகிக நடத்தையிலும் பலருக்கு நல்லுபதேசம் செய்திருக்கிறார். ஸனாதன தர்மக் கொள்கையில் ஆர்வம் கொண்டவராயினும், பிற சமயக் கொள்கைகளையும், பிற வாழ்க்கை முறைகளையும் நன்கு அறிந்தவரே. மேல்நாட்டாரின் மனோபாவத்தை நுணுக்கமாகவும், துவேஷ மனப்பான்மையில்லாத வகையிலும் அவர் அறிந்திருந்தார். ஆதிசங்கரரின் ஜன்ம ஸ்தலமாகிய காலடிக்கு நான் அவரை அழைத்தது நாட்டின் வரலாற்றில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சியின் காலம். ''திருவிதாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனம்'' அமுலுக்கு வந்த தருணம். அவர் காலடிக்குப் போவதை பலர் விரும்பவில்லை. எதிர்ப்பை மதியாமல் விஜயம் செய்தார். 'பின்தங்கின மக்களின்' (Backward Communities) நிலைமையை யறிந்து அவர்கள்பால் ஸ்ரீஸ்வாமிகள் கொண்ட பேரன்பும் அருளும் பலருக்கு மனமாற்றத்தைத் தந்தன.

சிருங்கேரி மடத்தின் குருக்களுக்கு ஆழ்ந்த பாரமார்த்திக ஞானத்துடன் லௌகிக ஞானமும் வேண்டும். இவர் பீடாதிபத்யத்தின் முன் பகுதியில் இவ்விரண்டும் இவரிடம் பொலிந்தன. பிற்காலத்தில் உலக விவகாரங்களை ஒழித்து தவமுனியாகவே ஒழுகி மக்கட்கு நல்வழி காட்டி வந்தார். எல்லோரையும் ஆகர்ஷிக்கும் ஆத்மீக சக்தி வாய்ந்த இவர் பாரமார்த்திக நிலையின் ஒலியில் சஞ்சரித்து வந்தார் என்பது நெருங்கிப் பழகிய சிலருக்குத் தெரியும். சில சமயம் உலகத் தோற்றங்களுக்கு மாறுபட்டு வெகுவாகக் கடந்து நின்ற இவர் நிலையை அறியாத பலர் இவருக்குச் சித்தப்பிரமை யென்றும் எண்ணினார்கள். ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகளைப் போன்ற மஹான்களுடைய மக்கள் மனதைக் கவரும் சக்திப் பெருக்கு, அவர்கள் இயற்றிய நூல்களிலும் உபதேசங்களிலும் மட்டுமல்லாமல், அவர்களுடைய பொலிவு வாய்ந்த இயல்பு, புனிதமான சீலம், முதலியவைகளிலும் காணப்படும்.

3

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக
காசி ஸ்ரீ ஸச்சிதானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்
1959ம் ஆண்டு இயற்றியது

ओं नमः परमहंसास्वादितचरणकमल चिन्मकरन्दाय भक्तजन-
मानसनिवासाय जगद्गुरुवराय श्रीचन्द्रचूडाय ।

चिरान्मग्नेनाऽन्तः प्रकृतिविषमे जन्मजलधौ
मया पुण्यैर्लब्धो गुरुरमृतचिन्तामणिरहो ।
यदीयाभिर्गोभिर्विशदमधुराभिर्वितिमिरे
स्वसंपूर्णे यस्मान्निरवधिसुखे धामनि रमे ॥

சிராந் மக்னேநாந்த: ப்ரக்ருதிவிஷமே ஜந்மஜலதௌ
மயா புண்யைர் லப்தோ குருரம்ருதசிந்தாமணிரஹோ ।
யதீயாபிர் கோபிர் விசதமதுராபிர் விதிமிரே
ஸ்வஸம்பூர்ணே யஸ்மாந்நிரவதிஸுகே தாமநி ரமே ॥

(ஸ்வாராஜ்யஸித்தி - கைவல்யபிரகரணம் - சு.26)

(ராகம், த்வேஷம், ஜரை, மரணம், நரகம் முதலிய பயங்கர முதலைகளுடன் கூடிய கோரமான ஸம்ஸாரக் கடலில் அனாதி காலமாக மூழ்கி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு பாக்ய வசத்தால் ஸத்குரு என்னும் மோக்ஷ பலத்தை கொடுக்கும் ஸர்வோத்க்ருஷ்டமான சிந்தாமணி மஹாரத்னம் கிடைத்தது. அந்த ஸத்குருநாதருடைய குளிர்ந்த கடாக்ஷங்களினாலும், உபதேசாம்ருத வசனங்களாலும், அக்ஞான இருளற்ற அபரிச்சின்ன ஸுகரூபமான

ஆத்ம ஸ்வரூபத்தில் ஸௌக்யமாக இருக்கிறேன். என்னே என்னுடைய பாக்யம்! நான்தான் தன்யதன்யன்!)

யோகீந்த்ரர்களான ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மமே மறுபடியும் அவதரித்து வந்தாரோ! அல்லது மிருகங்கள் போல் ஜனன மரண ப்ரவாஹத்தில் அகப்பட்டுக் கொண்டு மிகவும் கஷ்டப்படும் நம்மைப் பார்த்து, கருணையால் மனம் உருகி அந்த மஹானுபாவரான ஜடபரதரே மறுபடியும் தன் இச்சையால் சரீரத்தை க்ரஹித்து வந்தாரோ! அல்லது அத்வைத குருபரம்பரை என்னும் நல்முத்துமாலையில் நடு மணியாக விளங்கும் பாகவத பரமாசார்யரான அந்த சுகாசார்யரே அபிநவ ரூபத்தோடு த்ருக்கோசரராஞரோ! அல்லது, கைலாஸ வாஸியும் கருணைக் கடலுமான அந்த சங்கரரே மறுபடி காஷாய தண்டங்களுடன் அவதரித்து வந்தாரோ - என்று ஸஜ்ஜனங்கள் ஆச்சர்யத்தினாலும், ஆனந்தத்தினாலும், உத்ஸாஹத்தினாலும், ச்ரத்தா பக்திகளினாலும் பலவிதமாக நினைக்கும்படி சுமார் எழுபது வருஷங்களுக்கு முன் ஸ்ரீ சிருங்கேரி க்ஷேத்திரத்தில் லோகபாவனமான ஒரு திவ்ய ஜ்யோதி உதித்தது. அது துங்கபத்ரா நதிக்கரையில் துங்க பத்ரமான (உயர்ந்ததும் உறுதியுமான) ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு பத்ர பீடத்தில் 42 வருஷகாலம் (1912-1954) விளங்கி, பிறகு வெளிப்பார்வைக்கு மறைந்து பக்தர்களுடைய ஹ்ருதயரங்கத்திலேயே நிரந்தரமாக வஸித்து வருகிறது. சில வருஷகாலம் அதிகமாக பகிரங்கப்படுத்திக் கொள்ளாமல் உள்ளடங்கியே இருந்து, பிறகு ஜகஜ்யோதியாக விளங்கிற்று. இவ்விதம் அந்த ஜகஜ்யோதி வெளிப்பார்வைக்கு மறைந்து பக்தர்களுடைய ஹ்ருதயரங்கத்திலேயே வஸிக்க ஆரம்பித்து, இன்றைக்கு ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன.

தபோமூர்த்திகளும் பரமபூஜ்யர்களுமான ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் (குரு ஸ்தானத்திலிருக்கும் பெரியவர்களை பெயரிட்டு நிர்தேசம் செய்யும் வழக்கம் இல்லை. பக்தியினாலும், கௌரவத்தினாலும் அவரை, ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹா ஸ்வாமிகளை, மஹாஸந்நிதானம் என்று நிர்தேசம் செய்வதே வழக்கம்) பவ்ய விக்ரஹம், பாதகமலங்கள், கருணாரஸ பரித கடாக்ஷங்கள், திவ்யோபதேசாம்ருத வசனங்கள் - முதலியவைகளுக்குள் ஏதாவது ஒன்றை எக்காலத்திலாவது ஸ்மரணம் செய்வதே சிரேயஸ்கரமாகும். அதிலும் குருபக்தி

பரிதர்களான ஸஜ்ஜனங்களுக்கு அந்த ஸத்குருநாதருடைய திவ்ய முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்திருக்கும் வாக்கைக் கொண்டே அவரை அனுஸந்தானம் செய்து ஆராதிப்பது ரொம்பவும் விசேஷம். ஆகையால் அந்த மஹாஸந்நிதானத்தின் திருவாக்கை இப்பொழுது அனுஸந்தானம் செய்வோம்.

स्थितेऽनुकंपामकरन्दपूर्णे जगद्गुरोः पादसहस्रपत्रे ।
किमन्यतो धावसि चित्तभृङ्ग प्रयाहि तत्रैव रमस्व नित्यम् ॥

ஸ்திதேநுகம்பாமகரந்தபூர்ணே
ஜகத்குரோ: பாதஸஹஸ்ரபத்ரே ।
கிமந்யதோ தாவஸி சித்தப்ருங்க
ப்ரயாஹி தத்ரைவ ரமஸ்வ நித்யம் ॥

- பாதாவலம்பன ஸ்துதி 1

நரஸிம்ஹ சாஸ்திரிகள் (மஹாஸந்நிதானத்தின் பூர்வாச்ரமத்தின் பெயர்) தங்கள் குருநாதருடைய ஆக்ஞையை சிரஸாவஹித்து பரீதாவி வருஷம் (1912) சைத்ர க்ருஷ்ண ஷஷ்டி, பானுவாரம் அன்றைய தினத்தில் துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்து தக்ஷிணாம்நாய சிருங்கேரி பீடத்தின் வ்யாக்யான ஸிம்ஹாஸனத்தில் ஏறி ஜகத்குரு (ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமி)களாக விளங்கினார். வ்யாக்யான ஸிம்ஹாஸனத்தில் ஏறின பிறகு முதல் கார்யமாக அவர் தங்கள் குருநாதரான ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவ அபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமி ஸன்னிதானத்தின் அதிஷ்டானத்திற்குச் சென்றார். புதிய ஜகத்குருநாதாள் தங்கள் குருநாதாளுக்கு தண்ட ப்ரணாமங்களைச் செய்து புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கும்பொழுது பொங்கிவரும் பக்தியால் பரவசரானார். அவருடைய சரீரம் ஸ்தப்தமாகி விட்டது. கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பெருகி சரீரத்தில் மயிர்கூச்சல் ஏற்பட்டது. வாக்கு கத்கதமாயிற்று. அந்த அநிர்வசனீயமான ஸந்தர்ப்பத்தில் அவர் திருமுகத்திலிருந்து சப்தாத்மிகையான ஸ்ரீ சாரதை 'பாதாவலம்பன ஸ்துதி' என்னும் உருவத்தோடு வெளிக்கிளம்பினாள். அந்த 'பாதாவலம்பன ஸ்துதி'யின் முதல் சுலோகமே இது.

ஸர்வாபய தக்ஷிணையைக் கொடுத்து, தங்களை ஆச்ரயிக்கும் பக்தர்களை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து தூக்கி எடுத்து அத்வைத

ஸிம்ஹாஸனத்தில் இவ்விதமே உட்கார்த்துவோம் - என்பதைக் காண்பிப்பதுபோல் வ்யாக்யான ஸிம்ஹாஸனத்தில் ஏறி உட்கார்ந்த பிறகு, ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் திருமுகத்திலிருந்து முதன் முதலில் வெளிவந்த அமிருத வாக்கு இது. ஸ்ரீ ஸத்குருநாதாளை அனுஸந்தானம் செய்ய இந்த ச்லோகம் எல்லா விதத்திலும் மிகப் பொருத்தமாக உள்ளது.

இங்கு சிலருக்கு ஒரு ஸந்தேஹம் ஏற்படலாம். அதாவது : ''அவருடைய வாக்கினுலேயே அவரை ஆராதிப்பது உசிதமாகுமா? ஒருவர் வீட்டுக் கொல்லைப் பூங்காவிலிருந்து புஷ்பங்களையும் பழங்களையும் பறித்து அவருக்கே கொடுப்பதும், ஒருவருக்கு தானம் கொடுப்பதாகச் சொல்லி அவருடைய பையிலிருந்தே பொருளை எடுத்து அவருக்கே கொடுப்பதும் அனுசிதம் அல்லவா! என்று''. ஆனுல் இவ்விதம் ஸந்தேஹப்பட வேண்டியதில்லை. இது ஒரு புதிய வழியும் அல்ல; அனுசிதமானதும் அல்ல. இவ்விதம் செய்வது சாஸ்திர சம்மதமே. பெரியோர்களுடைய ஆசாரமும் இதில் இருக்கிறது. இம்மாதிரி . கார்யத்தை பகவத்பாதாசார்யரே செய்திருக்கிருர். இதைக் காட்டிலும் உயர்ந்த சிஷ்டாசாரம் இருக்கமுடியுமா? ''கர்ம விஷயத்திலோ, நடைமுறை விஷயத்திலோ ஸந்தேஹம் ஏற்பட்டு. நம்மால் தீர்மானம் செய்ய முடியாமலிருந்தால், அந்த விஷயத்தில் அந்த தேசத்திலும், அந்த காலத்திலும் இருக்கும் சாந்தர்களும் ஆசையற்றவர்களுமான பெரியோர்கள் நடக்கும் முறையைப் பார்த்து அவ்விதமே நாமும் நடந்துவர வேண்டும்'' என்று ச்ருதி மாதா நமக்கு ஹிதோபதேசம் செய்கிருள்-

अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात् । ये तत्र ब्राह्मणाः संमर्शिनः । युक्ता आयुक्ताः । अलूक्षा धर्मकामाः स्युः । यथा ते तत्र वर्तेरन् । तथा तत्र वर्तेथाः ।

பகவத்பாதாசார்யர்களைக் காட்டிலும் சிஷ்டர் ஒருவர் உண்டா! அவரை 'शिष्टाग्रणीः' *சிஷ்டாக்ரணீ:* (சிஷ்டர்களில் முதன்மை யானவர்) என்று பத்மபாதாசார்யரே கூறியிருக்கிருர். சிஷ்டர்களில் முதல்வரான பகவத்பாதாசார்யரே இவ்விதம் செய்திருக்கிருர். பகவத்பாதாசார்யாள் இவ்விதம் செய்திருக்கிருர் என்பது மட்டுமல்லாமல், அதைத் தவறுதல் அல்ல என்று யுக்திகளால்

ஸமர்த்தனம் பண்ணியிருக்கிருர். ஸௌந்தர்யலஹரி என்னும் ஸ்தோத்திரத்தில் அம்பாளை 99 ச்லோகங்களால் அவர் ஸ்துதித்து பிறகு கீழ்க்கண்ட ச்லோகத்தைச் சொல்லி ஸ்தோத்திரத்தை முடிக்கிருர் -

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधि:
सुधासूतेश्चन्द्रोपलजललवैरर्घ्यरचना ।
स्वकीयैरंभोभि: सलिलनिधिसौहित्यकरणं
त्वदीयाभिर्वाग्भिस्तव जननि वाचां स्तुतिरियम् ॥

ப்ரதீபஜ்வாலாபிர் திவஸகரநீராஜனவிதி:
ஸுதாஸூதேச்சந்த்ரோபலஜலலவைரர்க்யரசநா ।
ஸ்வகீயைரம்போபிஸ்ஸலிலநிதி ஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர் வாக்பிஸ்தவ ஜனனி வாசாம் ஸ்துதிரியம் ॥

''ஹே தாயே, நீ வாக்கிற்கு ஜனனீ. எல்லா வாக்கிற்கும் நீயே மூலஸ்தானமாக இருக்கிருய். உன்னை ஸ்தோத்திரம் செய்ய எனக்கு வேறு என்ன வஸ்து இருக்கிறது? உன் வாக்கினுலேயே உன்னை நான் ஸ்தோத்திரம் செய்திருக்கிறேன். உன்னைச் சேர்ந்த வாக்கை ஸ்தோத்திரரூபமாக உனக்கே அர்ப்பணம் செய்வது ஒருவருடைய பொருளை எடுத்துக்கொண்டு அதையே அவருக்கு அர்ப்பணம் செய்வதுபோல் அனுசிதம் என்று தோன்றலாம். ஆனுல், ஹே ஜனனீ, நான் என்ன செய்வேன்? வேறு வழி இல்லையே! ஆகையால் உன் வாக்கினுலேயே உன்னை ஸ்தோத்திரம் செய்திருக்கிறேன். ஸங்க்ராந்தி, ரதஸப்தமி முதலிய தினங்களில் சூரியனைப் பூஜை செய்யும்பொழுது கற்பூர தீபாராதனை காண்பிக்கிருர்கள். சூர்ய பகவான் தேஜோராசி ஸ்வரூபன். ஸர்வ ப்ரகாசங்களுக்கும் அவனே மூலபூதன். அவனுக்கு கற்பூரம் ஏற்றி தீபாராதனை செய்வதில்லையா! சந்திரனுடைய கிரணம் படும்பொழுது சந்திரகாந்த சிலையிலிருந்து அம்ருதத் திவிலைகள் கொட்டுகின்றன. அவ்விதம் சந்திரகாந்த சிலையிலிருந்து சொட்டும் அம்ருத பிந்துக்களால் அம்ருதத்திற்குப் பிறப்பிடமான சந்திரனுக்கு அர்க்யத்தைக் கொடுப்பதில்லையா! ராமேச்வரத்தில் ஸேது ஸ்னனம் செய்யும்பொழுது ஸமுத்திர ஜலத்தாலேயே ஸமுத்திர ராஜாவிற்கு அர்க்கியம் கொடுப்பதில்லையா! பிறகு காசீ க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கே கங்கா பூஜை செய்யும்பொழுது கங்கா

ஜலத்தினலேயே அவளுக்கு ஸ்னேபசாரம் செய்வதில்லையா! அவ்விதமே ஏ தாயே, உன் வாக்குகளாலேயே நான் உன்னை ஸ்துதி செய்திருக்கிறேன் - என்று பகவத்பாதாசார்யாள் சொல்லியிருக்கிறார்.

புரந்தரதாஸர் என்னும் கன்னட தேசத்திலிருந்த பக்தரும் இந்த அபிப்ராயத்தையே,

'केरेय नीरनु केरेगे चेल्लि वरव पडेयिरि काणिरो'

கேரேய நீரனு கேரேகே சேல்லி வரவ படேயிரி காணிரோ

என்று பதத்தில் பாடியிருக்கிறார்.

லௌகிக வ்யவஹாரத்தில் இவ்வித நடவடிக்கை அனுசிதம் ஆகலாம். ஒருவருடைய பொருளை எடுத்துக் கொண்டு அவருக்கு அதையே அர்ப்பணம் செய்வது உயர்வாகத் தோன்றாது; வாஸ்தவம். ஆனால் பகவதாராதனை விஷயத்தில் இது எப்படியும் தவிர்க்க முடியாதது என்பது கொஞ்சம் விசாரித்தால் தெரியவரும். நாம் பூஜை செய்யும் பொழுது பகவானுக்கு அர்ப்பணம் செய்யும் பத்ரம், புஷ்பம், பழம் முதலிய எல்லாப் பொருள்களும் அவருடையதே தவிர வேறு அல்ல. எந்தக் கருவிகளால் அவனை ஆராதிக்கிறோமோ, அந்த கை, கண், மனது, புத்தி முதலியவைகளையும் நாம் அவனிடமிருந்துதான் பெற்றிருக்கிறோம். இந்த உத்தமமான மனித சரீரத்தையும் அவனே கொடுத்திருக்கிறான். நாம் மூச்சு விடுவதும் அவன் அநுக்ரஹத்தால்தான். அவன் கிருபையினால்தான் நம் மனதில் அவனை ஆராதிக்க வேண்டும் என்ற இச்சையும் உண்டாகிறது. நாம் நிற்கும் இடம், குடிக்கும் ஜலம், சாப்பிடும் ஆகாரம், மூச்சு விடும் காற்று, நமக்கு இடைவெளி கொடுக்கக்கூடிய ஆகாசம் - இவைகள் எல்லாம் அவனுடையவைகளே. அவனே அவைகளை உண்டுபண்ணியிருக்கிறான். உண்மையில் நாம்கூட அவனைக் காட்டிலும் வேறு அல்ல! இன்னும் பார்க்கப்போனால் இராவணனுடைய கொடுமை, கம்ஸனுடைய பயம், சிசுபாலனுடைய வைரம் முதலியவைகள்கூட அந்த பகவானால் உண்டுபண்ணப்பட்டவைகள்தான். பதினான்கு லோகங்களிலும் அவனுடையது அல்லாமல் ஒரு துரும்புகூட கிடையாது. இப்படி இருக்க, பகவானுக்குச் சொந்தமில்லாமல் இருக்கும் பொருளால்

அவனை ஆராதிப்பது என்பது ஸர்வதா (सर्वथा) அஸம்பாவிதம் - எவ்விதத்திலும் முடியாத கார்யம். ஆகையால் பகவத் விஷயத்தில் இந்த ஸந்தேஹத்திற்கு இடமேயில்லை.

இனி கீழே கூறிய சுலோகத்தின் கருத்து என்ன என்பதை கொஞ்சம் பார்ப்போம். ''ஏ மனதாகிய வண்டே! காருண்யம் என்னும் புஷ்பரஸத்தால் நிறைந்திருக்கும் ஸ்ரீ ஜகத்குருநாதருடைய பாதகமலம் இருக்கும்பொழுது வேறு இடத்தில் எதற்காக பறக்கிருய்? அந்த பாதகமலத்திற்கே சீக்கிரம் போய்ச்சேர். அங்கேயே எப்பொழுதும் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிரு.''

மஹாஸந்நிதானம் இந்த சுலோகத்தைச் சொல்லும் பொழுது தம்முடைய குருநாதாளின் பாதகமலத்தை மனதில் வைத்துக்கொண்டு சொன்ஞர். நாம் இந்த மஹாஸந்நிதானத்தின் பாதகமலத்தையே மனதில் வைத்துக் கொண்டு சொல்லுகிருேம். அவ்வளவுதான் வித்யாஸம்!

இந்த சுலோகத்தில் மஹாஸந்நிதானத்திற்கு தங்கள் குருநாதாளின் சரணுரவிந்தங்களில் இருந்த எல்லையற்ற பக்தியானது ஸ்பஷ்டமாக வெளியாகிறது. நம் மஹா ஸந்நிதானத்தின் பரவைராக்யம், எல்லையற்ற கருணை, ஒப்பற்ற தைவ பக்தி, அபார பாண்டித்யம், உஜ்வல குருபக்தி முதலிய அனந்த குணங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அமூல்ய ரத்னம்போல் பிரகாசித்தாலும், அந்த குணங்களின் கூட்டத்தில், ரத்ன மாலையின் நடுவில், விலைமதிக்க முடியாததும் ஒப்புயர்வற்றதுமான கௌஸ்துப மணிபோல் - அவருடைய உஜ்வல குருபக்தியானது விளங்கிக் கொண்டிருந்தது என்று சொல்லலாம்.

ச்ரேயஸ் ஸாதனேபாயங்களில் பக்தியே - அதிலும் குருபக்தியே மிகவும் உயர்ந்ததும் ஸுலபமானதுமாகும்.

ஸ்ரீமத் சங்கரபகவத்பூஜ்யபாதாள்,

मोक्षकारणसामग्र्यां भक्तिरेव गरीयसी ।

(மோக்ஷகாரணஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ)

(மோக்ஷத்திற்கு ஸாதனமான பொருள்களில் பக்தியே மிகவும் உயர்ந்தது) என்று அழகாகச் சொல்லியிருக்கிருர்.

ஸ்ரீமத் பாகவதத்திலும் கபிலவாஸுதேவர் தம் தாயான தேவஹூதியம்மாளுக்கு தத்வோபதேசம் செய்யும்பொழுது,

भक्तिः सिद्धेर्गरीयसी ।

(பக்தி: ஸித்தேர்கரீயஸீ)

என்று சொல்லியிருக்கிறார். இந்த வாக்யத்திற்கு 'பக்தி மோக்ஷத்திற்கு முக்கியமான ஸாதனம்' என்று அர்த்தம் கொள்ளலாம். ஸித்தி என்னும் பதத்திற்கு மோக்ஷம் என்று அர்த்தம். सिद्धेः (ஸித்தே:) என்பது 6 வது வேற்றுமையுள்ள பதம் என்று வைத்துக் கொண்டால் सिद्धेः मोक्षस्य என்று முன்கூறிய அர்த்தம் கிடைக்கும். அல்லது सिद्धेः என்பதை 5 வது வேற்றுமைப் பதமாக வைத்துக் கொண்டு सिद्धेः मोक्षात् என்று சொன்னால் 'மோக்ஷத்தைக் காட்டிலும் பக்தியே உயர்ந்தது' என்றும் அர்த்தம் சொல்லலாம். முதலில் கூறிய அர்த்தத்தை நன்கு உபபாதனம் செய்து அதையே பொருத்தமுள்ளதாகச் செய்யலாம். ஆனால் இப்பொழுது அது நமக்கு ப்ரக்ருதமில்லாததால் அந்த விஷயத்தில் நாம் நுழைய வேண்டாம்.

எதுவரை இந்த ஜீவன் நித்யமான, சுத்தமான, புத்தமான, பரமானந்தமான, அத்விதீயமான பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை 'अहं ब्रह्मास्मि' (அஹம் ப்ரஹ்மாஸ்மி) என்று அபேதமாக ஸாக்ஷாத்காரம் பண்ணவில்லையோ, அதுவரை இவன் துன்பம் தீராது. இவன் ஸம்ஸாரபந்தம் நீங்காது. அதாவது, ஞானம் இல்லாமல் மோக்ஷம் இல்லை என்பது நிச்சயம். ஆனால் அந்த ஞானம் பக்தியினாலேயே உண்டாகிறது. பக்தி இல்லாமல் ஞானம் எக்காலத்திலும் ஏற்பட முடியாது. பக்தியே ஞானத்திற்கு மூலமந்திரம். ஸ்ரீமத் பாகவதத்தில்,

श्रेयःसुतिं भक्तिमुदस्य ते विभो क्लिश्यन्ति ये केवलबोधलब्धये ।
तेषामसौ क्लेशल एव शिष्यते नान्यद्यथा स्थूलतुषावघातिनाम् ॥

ச்ரேயஸ்ஸ்ருதிம் பக்திமுதஸ்ய தே விபோ
க்லிச்யந்தி யே கேவலபோதலப்தயே ।
தேஷாமஸௌ க்லேசல ஏவ சிஷ்யதே
நாந்யத் யதா ஸ்தூலதுஷாவகாதிநாம் ॥

(பாகவதம், 10-14-4)

என்னும் சுலோகத்தில் இது ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கௌமாராவஸ்தையை அடைந்ததும் நந்தகோபர் கன்றுக்குட்டிகளை மேய்க்கிற பொறுப்பை அவனிடத்தில் ஒப்படைத்தார். அவன் தினமும் காலையில் எழுந்து மற்ற கோபகுமாரர்களுடன் கன்றுக்குட்டிகளை காட்டுக்குக் கொண்டுபோய் அங்கு மேய்த்து மறுபடி சாயங்காலம் திரும்பி வருவான். கோபகுமாரர்களுடன் ஆடுவது, பாடுவது, ஓடுவது, தாண்டுவது, சாப்பிடுவது, குடிப்பது, நடுநடுவே பலவித ஆபத்துக்களிலிருந்து அவர்களையும் கன்றுக்குட்டிகளையும் காப்பாற்றுவது, இவ்விதம் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு நாள் பிருந்தாவனத்தில் பூதனை, பகாஸுரன் இவர்களுடைய தம்பியான பெரிய பாம்பு உருவங்கொண்ட அகாஸுரனை ஸம்ஹாரம் செய்து, கோபகுமாரர்களையும் கன்றுக்குட்டிகளையும் காப்பாற்றி, அந்த கோபகுமாரர்களுடன் கன்றுக்குட்டிகளை மேய்த்துக் கொண்டு ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்தான். மத்யான வேளை வந்தது. எல்லோருக்கும் கொஞ்சம் களைப்பு ஏற்பட்டது. பசியும் உண்டாயிற்று. அப்பொழுது அவர்கள் ஒரு ஸரோவரத்தினருகில் வந்தார்கள். அதன் கரையில் ஒரு மணல்மேடு இருந்தது. அதன் இரண்டு பக்கங்களிலும் செழிப்பாக வளர்ந்த மரங்களாலும் அவைகளின் நிழலாலும் அந்த இடம் மிகவும் ரமணீயமாக இருந்தது. கிருஷ்ணன் கோபகுமாரர்களைப் பார்த்து, 'நண்பர்களே! பாருங்கள். இந்த மணல்மேடு எவ்வளவு அழகாக இருக்கிறது. எல்லோருக்கும் பசியாக இருப்பதால் இங்கேயே நாம் சாப்பிடுவோம். கன்றுக்குட்டிகள் ஜலம் குடித்து பக்கத்திலேயே செழிப்பாக வளர்ந்திருக்கும் பச்சைப் புல்லை மேய்ந்து கொண்டிருக்கட்டும்' என்று சொன்னார். எல்லோரும் ஆனந்தமாக அதை வரவேற்றனர். கன்றுக்குட்டிகளுக்கு ஜலம் காட்டிவிட்டு புல்லை மேயவிட்டார்கள். பாலகர்களெல்லோரும் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த கட்டு சாதத்தை எடுத்துக்கொண்டு மணல் மேட்டில் சாப்பிடுவதற்கு உட்கார்ந்து கொண்டார்கள். கிருஷ்ணன் தன்னை எல்லோரும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் பார்க்கும்படியாக (सर्वतोक्षिशिरोमुखः) எங்கும் கண்களையும் முகத்தையும் உடையவராக நடுவில் உட்கார்ந்து கொண்டான். கோபகுமாரர்கள் அவனைச் சுற்றி வட்ட வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள். கிருஷ்ணனுக்கு நேர்

எதிரிலேயே அவன் அவனுக்கு இடம் கிடைத்தது என்று எல்லா கோபகுமாரர்களும் ஸந்தோஷப்பட்டார்கள். சிலர் வாழை, பலாசம், தாமரை முதலிய இலைகளைக் கொண்டு வந்து சாப்பிடுவதற்காக பரப்பிக் கொண்டார்கள். சிலர் தாமரை முதலிய பெரிய பெரிய புஷ்பங்களைக் கொண்டுவந்து சாப்பிடுவதற்காகப் பரப்பிக் கொண்டார்கள். சிலர் துளிரை வைத்துக்கொண்டார்கள். சிலர் தாங்கள் கொண்டு வந்திருந்த பாத்திரங்களையே வைத்துக் கொண்டார்கள். சிலர் மரப்பட்டைகளைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டார்கள். இன்னும் சிலர் அகலமான கல் பாளங்களைக் கொண்டுவந்து போஜன பாத்திரமாக வைத்துக் கொண்டார்கள். எல்லோரும் தன் தன் கட்டுச்சாதத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து மற்றவர்களுக்குக் கொடுத்தும், அவர்கள் கொடுத்தை வாங்கிக் கொண்டும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டும் சாப்பிட்டார்கள். அந்த சமயத்தில் கிருஷ்ண பரமாத்மாவின் அழகு கண்கொள்ளாக் காக்ஷியாக இருந்தது. அதை ஸ்ரீ சுகாசாரியாள் ஓர் அழகான சுலோகத்தால் வர்ணித்திருக்கிறார்.

बिभ्रद्वेणुं जठरपटयोः शृङ्गवेत्रे च कक्षे
वामे पाणौ मसृणकबळं तत्फलान्यङ्गुळीषु ।
तिष्ठन् मध्ये स्वपरिसुहृदो हासयन् नर्मभिः स्वैः
स्वर्गे लोके मिषति बुभुजे यज्ञभुग्बालकेळिः ॥

பிப்ரத் வேணும் ஜடரபடயோ: ச்ருங்கவேத்ரே ச கக்ஷே
வாமே பாணௌ மஸ்ருணகபளம் தத்பலாந்யங்குளீஷு ।
திஷ்டந் மத்யே ஸ்வபரிஸுஹ்ருதோ ஹாஸயன் நர்மபி: ஸ்வை:
ஸ்வர்கே லோகே மிஷதி புபுஜே யக்ஞபுக் பாலகேளி: ॥

(பாகவதம்: 10-13-11)

புல்லாங்குழலை இடுப்பில் கட்டிக் கொண்டிருந்த வஸ்திரத்திற்கும் வயிற்றிற்கும் இடையில் சொறுகிக் கொண்டிருந்தார். இடது கக்கத்தில் கொம்பையும், பிரம்பையும் இறுக்கிக் கொண்டிருந்தார். இடது உள்ளங்கையில் யசோதை அம்மாள் ப்ரீதியோடு தானே உறைகுத்தின தயிர் விட்டுப் பிசைந்து கட்டிக் கொடுத்திருந்த தயிர்சாத கபளமும், அந்தக் கைவிரல் சந்துகளில் அநேகவிதமான ஊறுகாய், வடாம், முரப்பா

முதலியவைகளுமிருந்தன. இந்த வேஷத்துடன் கோபகுமாரர்களின் நடுவிலுட்கார்ந்து விநோதமாகப் பேசிக்கொண்டு, யக்ஞபுருஷனுன பரமாத்மா கௌமார லீலையை காட்டிக் கொண்டிருந்தார். தேவதைகள் எல்லோரும் அந்த லீலையை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ப்ரஹ்மாவிற்குக் கொஞ்சம் ஸந்தேகம் வந்தது! என்ன இது! ஸாமான்யமான ஒரு ராஜகுமாரனே தெருப்பையன்களோடு பந்து, கோலி விளையாடமாட்டானே! அப்படியிருக்க, அனந்தகோடி ப்ரம்மாண்ட நாயகனுன பராத்பர பரப்ரஹ்ம புருஷோத்தமன் இவ்விதம் இடையப் பையன்களுடன் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், கூத்தாடிக்கொண்டும், தாண்டிக்கொண்டும், அவர்களுடன் அன்ன கபளங்களை மாற்றிக் கொண்டும் சாப்பிடுவானு! அது இருக்க, இவன் அகாசுரன் வாயினுள் நுழைந்தானே! தெரிந்தே நுழைந்தானு; அல்லது தெரியாமலே நுழைந்தானு! தேவதைகள் எல்லாரும் மிகக் கவலைப்படும்படி இவ்விதம் மலைப்பாம்பு அசுரனின் வாயில் பிரவேசித்தானே! இந்த இடையப்பையன் நிஜமாகவே ஸர்வஞ்ஞனுன பரமாத்மாவா, அல்லது வேறு ஆசாமியா? என்று அவருக்குத் தோன்றிற்று. கிருஷ்ணனுடைய மஹிமையை நன்ருகப் பார்த்து ஸந்தோஷப்பட வேண்டும் என்ற குதூஹலமும் மனதிற்குள் இருந்தது. அச்சமயம் கன்றுக்குட்டிகள் செழிப்பாக வளர்ந்திருந்த புல்லின்மேல் ஆசையால் வெகுதூரம் போய்விட்டன. கன்றுக்குட்டிகள் காணுமல் போய்விட்டதைப் பார்த்து பயந்த கோபகுமாரர்களைப் பார்த்து கிருஷ்ணன், 'நீங்கள் பயப்பட வேண்டாம்; தேடப் போகவேண்டாம், உட்கார்ந்திருப்பவர்கள் எழுந்திருக்கவும் வேண்டாம்; சாப்பிட்டுக் கொண்டிருங்கள்; நிறுத்த வேண்டாம். நான்போய் கன்றுக்குட்டிகளைப் பார்த்து சீக்கிரம் இங்கே கொண்டு வந்து விடுகிறேன்' என்று சொல்லி தயிர்சாத கபளம் உள்ளங்கையில் இருந்தவாறே எழுந்து கன்றுக்குட்டிகளை தேடப்போனுன்.

இந்த ஸமயத்தில் ப்ரஹ்மா அங்கே கன்றுக்குட்டிகளையும், இங்கே கோபகுமாரர்களையும் மறைத்துவிட்டார். கிருஷ்ணன் வெகுதூரம் போய் எங்கு தேடியும் கன்றுக்குட்டிகளைக் காணுமல் 'கோபகுமாரர்கள் எல்லோரும் காத்துக் கொண்டிருப்பார்களே'

என்று நினைத்து திரும்பி வந்து பார்க்க இங்கே கோபகுமாரர்களையும் காணமல், ''ஓஹோ, இது எல்லாம் நம் ப்ரஹ்மாவின் விளையாட்டு வேலையா'' என்று அறிந்து, புன்சிரிப்போடு பின்வருமாறு ஆலோசித்தார். ''இப்பொழுது நான் கோபகுமாரர்களையும் கன்றுக்குட்டிகளையும் ஸாயங்காலம் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போகாமல் இருந்தால், அவர்களின் தாய்மார்களுக்கு பொறுக்க முடியாத துன்பம் ஏற்படும். ப்ரஹ்மா அபஹரித்த கோபகுமாரர்களையும் கன்றுக்குட்டிகளையும் நான் மறுபடியும் கொண்டு வந்துவிட்டால் அவரின் மோஹம் தெளிவடையாது. ஆகையால் அப்படிச் செய்வதும் சரியாகாது.'' இவ்விதம் ஆலோசித்து பகவான் இந்த இடத்தில் ஒரு லீலையைக் காண்பிக்கிருர். தானே எல்லா கோபகுமாரர்களுடைய வேஷத்தையும் கன்றுக்குட்டிகளுடைய வேஷத்தையும் போட்டுக் கொண்டார். எந்த எந்த கோபபாலனுக்கு எந்த எந்த வயது, குணம், ரூபம், உருவம், வஸ்திரம், அலங்காரம் இருந்ததோ, சரியாக அந்த அந்த வயது, குணம், ரூபம், உருவம், அலங்காரம், வஸ்திரம் உள்ள கோபகுமாரர்களாகத் தானே ஆனர். அவரவர்கள் கையில் இருந்த கம்பு, புல்லாங்குழல், கவனை கொம்பு, உறி முதலியவைகளெல்லாமாகவும் தானே ஆனன். எந்த எந்த கன்றுக்குட்டி எந்த எந்த நிறமாக இருந்ததோ, எந்த எந்த உருவத்தோடு இருந்ததோ, அதே நிறத்தோடும் அதே உருவத்தோடும் ஆனன். அவைகளின் கழுத்தில் கட்டியிருக்கும் கயிறு, அதிலிருந்து தொங்கும் சோழிகள், சிறுமணிகள் இவைகளெல்லாமாகவும் தானே ஆனன். எல்லா ரூபத்தையும் தானே தரித்தான். (सर्वं विष्णुमयं जगत्) 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்', (भूतानि विष्णुर्भुवनानि विष्णुः) 'பூதாநி விஷ்ணு: புவநாநி விஷ்ணு:' - என்னும் வசனங்கள் உண்மை என்பதை ப்ரத்யக்ஷமாகக் காண்பித்து கொடுப்பதுபோல் சேதனமும் அசேதனமுமான எல்லாப் பொருள்களாகவும் தானே ஆனன். ஸாயங்காலம் வீட்டிற்குத் திரும்பி வந்து அந்த அந்த கோபாலனுக அந்த அந்த வீட்டிற்குப் போனன். தன் உருவமான அந்த அந்த கன்றுக்குட்டிகளை அவைகளின் கொட்டகையில் கட்டினன். மறுபடியும் காலையில் எழுந்து கிருஷ்ண ரூபமான கன்றுக்குட்டிகளை மேய்க்க கிருஷ்ண ரூபமான கோபகுமாரர்களோடுகூட கிருஷ்ணனே காட்டிற்குப் போனன்.

இவ்விதம் ஒரு வருஷகாலம் சென்றுவிட்டது. ஒருவருக்கும் இந்த ஆச்சர்யமான லீலை தெரியவே இல்லை. பலராமருக்கும்கூட ஒரு வருஷம் முடிவதற்கு நான்கு ஐந்து நாட்கள் இருக்கும் வரையில் தெரியாது; பிறகு பகவானுடைய அருளால் அவருக்கு விளங்கிற்று. ப்ரஹ்மா வந்து பார்த்தார். இந்த கிருஷ்ணனோடு கூட கோபகுமாரர்களையும் கன்றுக்குட்டிகளையும் பார்த்து ஆச்சர்யப்பட்டார். இது என்ன? ஸ்வப்னமா! அல்லது மாயையா! அல்லது உண்மைதானா! என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் பார்த்தார். ஒரு ஸமயம் தான் ஒளித்து வைத்திருந்த கோபகுமாரர்களும் கன்றுக்குட்டிகளும் இங்கே வந்து விட்டனவோ என்று ஸந்தேகம் வந்து தான் அவைகளை ஒளித்து வைத்திருந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தார். அங்கே கோபபாலர்களும், கன்றுக்குட்டிகளும் தான் வைத்திருந்தபடியே அறிவிழந்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். மறுபடியும் இங்கே வந்து பார்த்தார். இங்கேயும் எல்லோரும் இருந்து கொண்டிருந்தார்கள். இந்த இரண்டில் எது உண்மை? எது பொய்? எவை தன்னால் சிருஷ்டிக்கப்பட்டவை? எவை பகவன் மாயையால் ஏற்பட்டவை? என்று அறிந்துகொள்ள முடியாதவராக ஆனார்.

'सत्याः के कतरे नेति ज्ञातुं नेष्टे कथञ्चन'

ஸத்யா: கே கதரே நேதி ஞாதும் நேஷ்டே கதஞ்சன

இவ்விதம் கிருஷ்ணபரமாத்மாவிற்கு மோஹத்தை உண்டுபண்ண ப்ரயத்னம் செய்த ப்ரஹ்மா தானே வைஷ்ணவ மாயையால் மோஹிதராக ஆனார். இவ்விதம் ப்ரஹ்மா ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது கிருஷ்ணன் தயையோடு தன் மாயை என்னும் திரையைக் கொஞ்சம் நீக்கி இன்னொரு காட்சியை அவருக்கு காண்பித்தார். ப்ரஹ்மா பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே எல்லா கோபகுமாரர்களும், எல்லா கன்றுக்குட்டிகளும், சதுர்புஜர்களாகவும், சங்க சக்ர கதா பத்ம பாணிகளாகவும், பீதாம்பர வனமாலாதாரிகளாகவும், கிரீட கேயூர ஹார கடக குண்டல விபூஷிதர்களாகவும் தென்பட்டார்கள். அந்த உருவங்களுடைய ஒவ்வொரு ரோம கூபத்திலும் கோடிகோடி ப்ரம்மாண்டங்கள் இருந்தன. அது மாத்திரமல்ல; ஸமஸ்த தேவதா ஸமேதரான அனேக ப்ரஹ்ம தேவர்கள் அந்த கிருஷ்ண ரூபங்களை

பூஜித்துக் கொண்டிருப்பதையும் பார்த்தார். கொஞ்ச நேரமானதும் மறுபடியும் கையில் தயிர் சாதத்தை வைத்துக்கொண்டு கன்றுக்குட்டிகளைத் தேடிவரும் கிருஷ்ணன் ஒருவனை மட்டுமே பார்த்தார். கிருஷ்ண பரமாத்மாவின் மஹிமையை ப்ரஹ்மா நன்கு அறிந்தார். தன் குற்றத்தையும் தெரிந்து கொண்டார். அப்பொழுது ப்ரஹ்மா தான் ஒளித்து வைத்திருந்த கன்றுக்குட்டிகளையும் கோபகுமாரர்களையும் திருப்பிக்கொண்டு வந்து வைத்து கிரீடங்களுடன் கூடின தன் நான்கு சிரஸ்ஸுக்களும் பகவானுடைய பாத கமலத்தில் படும்படியாக ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். அந்த ப்ரஹ்ம ஸ்துதியில் உள்ளதுதான் முன்னால் கூறப்பட்ட சுலோகம்.

ஹே ப்ரபோ, எப்படி மானஸம்முதலிய ஸரோவரங்களிலிருந்து அனேக ப்ரவாஹங்கள் கிளம்பி ப்ரவஹிக்கின்றனவோ, அதுபோலவே பக்தியிலிருந்து அப்யுதயம் நிஃச்ரேயஸம் என்னும் புருஷார்த்தங்கள் உண்டாகின்றன. அப்பேற்பட்ட எல்லா சிரேயஸ்களுக்கும் மூலகாரணமான பக்தியைக் கைக்கொள்ளாமல் யார் ஞானத்தை அடைய பரிச்ரமப்படுகிறாரோ, அவருக்கு அந்த துன்பம் மாத்திரமே மிச்சம்; வேறொரு பலனும் இல்லை. அரிசி வேண்டுமென்பதற்காக நெல் பதரைக் கொண்டுவந்து அதைக் குத்தி சிரமப்படுகிறவர்களுக்கு பலன் ஏதாவது கிடைக்குமா? பதரை எவ்வளவு குத்தினாலும் அதிலிருந்து அரிசியை அடைய முடியுமா? அதுபோல பக்தியில்லாமல் எத்தனை சிரமப்பட்டாலும் அவர்களுக்கு ஒரு பலனும் ஏற்படாது. பக்தியில்லாமல்,

'डुकृञ् करणे', 'हेत्वधिकरणवृत्त्यत्यन्ताभावाप्रतियोगिसाध्य-सामानाधिकरण्यं व्याप्ति.'

என்று கர்கசமான சாஸ்திரங்களை அப்யாஸம் செய்பவர்களுக்கு வீண் பரிச்ரமம் ஏற்படுமே அல்லாமல் அதனால் யாதொரு ஆமுஷ்மிகபலமாவது, பரம புருஷார்த்தமான மோக்ஷமாவது கிடைப்பதில்லை.

பகவத்பாதாசார்யாள் - 'இவ்விதமான பக்தி ரஸமற்ற சுஷ்கமான சாஸ்திராப்யாஸத்தில் ஏன் காலத்தைப் போக்குகிறாய்? பக்தி செய்; ஸுகமாக இருக்கும்; உத்தமமான பலன் கிடைக்கும்;

மோக்ஷம் உள்பட எல்லா புருஷார்த்தங்களும் கிடைக்கும்' - என்று உபதேசிக்கிருர்கள்.

भज गोविन्दं भज गोविन्दं गोविन्दं भज मूढमते ।
संप्राप्ते सन्निहिते काले नहि नहि रक्षति डुकृञ्करणे ॥

பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே
ஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ் கரணே

ஏ மூடமதியே, கோவிந்தனை பஜி. கோவிந்தனை பஜி. கோவிந்தனை பஜி. மரண சமயம் நெருங்கி வரும்பொழுது இந்த डुकृञ्करणे என்பது உன்னை காப்பாற்ருதடா காப்பாற்ருது!

'மூடமதி' என்று உன்னைத் திட்டுகிறேன் என்று கோபம் அடைய வேண்டாம்; வேணுமாஞல், 'ஸுமதி' என்றே புகழ்கிறேன்; ஆனல், பகவத் பக்தியை மட்டும் செய்; க்ஷேமத்தை அடைவாய்! - என்று சொல்வது போல் இன்னெரு இடத்தில் 'ஸுமதி' என்று கூப்பிட்டுச் சொல்லுகிருர் -

घटो वा मृत्पिण्डोऽप्यणुरपि च धूमोऽग्निरचल:
पटो वा तन्तुर्वा परिहरति किं घोरशमनम् ।
वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदाम्भोजं शंभोर्भज परमसौख्यं व्रज सुधी: ॥

கடோ வா ம்ருத்பிண்டோऽப்யணுரபி ச தூமோऽக்நிரசல:
படோ வா தந்துர்வா பரிஹரதி கிம் கோரசமநம் ।
வ்ருதா கண்டக்ஷோபம் வஹஸி தரஸா தர்க்கவசஸா
பதாம்போஜம் சம்போர்பஜ பரமஸௌக்யம் வ்ரஜ ஸுதீ: ॥

குடமோ, மண் உருண்டையோ, பரமாணுவோ, புகையோ, நெருப்போ, மலையோ, துணியோ, நூலோ, கோரமான யமனுடைய பிடிப்பிலிருந்து உன்னைக் காப்பாற்ற முடியுமா! இந்த கர்கசமான தர்க்க சாஸ்திராப்யாஸத்திஞல் வீணுக காலத்தையும் போக்கிக் கொண்டு தொண்டையையும் உலர்த்திக் கொண்டு கஷ்டப்படுகிருயே! எல்லா இன்பத்திற்கும் மூலஸ்தானமான அந்த பரமசிவனுடைய பாதகமலத்தை பஜி. ஏ ஸுமதியே!

(நற்புத்தியுள்ளவனே). அவ்விதம் செய்து ஸுகமாக இரு. உத்தமமான மோக்ஷ சுகத்தையே அடைவாய்.

வசைச் சொல்லுடன் உபதேசம் செய்தால் சிலர் விழித்துக் கொண்டு தம் கடமையை செய்வதில் ஈடுபட்டு மஹத்தான கார்யத்தை நடத்தி உத்தம பலனை அடைவார்கள். இதற்கு த்ருஷ்டாந்தமாக அர்ஜுனனைக் கூறலாம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனை கீதையில் கடுமையாகத் திட்டுகிறார்.

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥

(கீதை 2-2)

குதஸ்த்வா கச்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம் ।
அனார்யஜுஷ்டமஸ்வர்க்யமகீர்த்திகரமர்ஜுன ॥

(அர்ஜுனா, நெருக்கடியான சமயத்தில் இந்த மோஹம் உனக்கு எங்கேயிருந்து வந்து சேர்ந்தது! இது உத்தமர்கள் செல்லும் வழியல்ல; நீசர்கள்தான் இதைக் கைக்கொள்வார்கள். இது ஸ்வர்க ஸாதனமுமல்ல; கீர்த்தியைத் தொலைத்து அபயஸஸ்ஸைக் கொடுக்கக் கூடியது.)

क्लैब्यं मा स्म गमः पार्थ । கீதை (2-3)

க்லைப்யம் மாஸ்ம கம: பார்த்த ।

(பார்த்தா, நீ நபும்ஸகத்தன்மையை அடையாதே.)

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे । கீதை (2-11)

அசோச்யாநன்வசோசஸ்த்வம் ப்ரக்ஞாவாதாம்ச்ச பாஷஸே ।

(எவர்களை குறித்து வருத்தப்பட வேண்டியதில்லையோ அவர்களைப் பற்றி வருத்தப்படுகிறாயே; தெரிந்தவன்போல் பெரிய பெரிய வார்த்தைகளை மட்டும் பேசுகிறாய்.)

अथ चेत्त्वमहंकारान्न श्रोष्यसि विनङ्क्ष्यसि । கீதை (18-58)

*அத சேத் த்வமஹங்காராத் ந ச்ரோஷ்யஸி *விநங்க்ஷ்யஸி*

(ஒருக்கால் அஹங்காரத்தினால் நான் சொல்வதை நீ கேட்காமலிருந்தாயானால் நீ தொலைந்து போவாய்.)

मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति। கீதை (18-59)

மித்யைஷ வ்யவஸாயஸ்தே ப்ரக்ருதிஸ்த்வாம் நியோக்ஷ்யதி

(இந்த உன் தீர்மானம் பொய். அது நடக்காது. உன் இயற்கையான க்ஷத்திரியத் தன்மை உன்னை நிர்ப்பந்தப்படுத்தி யுத்தத்தில் தூண்டும்.)

இவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனை நிந்தித்துக் கூறியதால் அவன் மோஹத் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு தன் கடமையைச் செய்வதில் ஈடுபட்டு, பாரத யுத்தத்தை நடத்தி, அந்த யுத்தத்தில் ஜயம் என்னும் மஹத்தான லாபத்தையும் பெற்று, ராஜ்ய ப்ராப்தி, ஞான ப்ராப்தி என்னும் உயர்ந்த பலன்களையும் அடைந்திருக்கிறான்!

சிலரை ஸ்தோத்திரம் செய்தால் அதனால் அவர்கள் விழித்துக்கொண்டு தாங்கள் செய்யவேண்டிய கார்யத்தில் ஈடுபட்டு மேலான கார்யத்தை ஸாதித்து உத்தமமான பலனை அடைவார்கள். இதற்கு த்ருஷ்டாந்தமாக ஆஞ்ஜநேயரை சொல்லலாம்.

சீதாதேவியைத் தேடுவதற்காக அங்கதனின் தலைமையில் தென் திக்கை நோக்கிக் கிளம்பின வாநர சைன்யம் ஸமுத்திரக்கரைக்கு வந்து சேர்ந்தது. சீதாதேவி நூறு யோஜனை தூரத்தில் உள்ள லங்கைத் தீவில் இருக்கிறாள் என்னும் விஷயம்

---

*'விநங்க்ஷ்யஸி' (विनंक्ष्यसि) 'தொலைந்து போவாய்' என்பது மிகவும் கடுமையான சொல். கீதை முழுவதிலும் இவ்வளவு கடுமையான பதம் வேறெங்கும் இல்லை. பேசும் வேகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வாயிலிருந்து இந்த சொல் வந்து விட்டதா! கீதையில் சொல்லியிருப்பதை மறுபடி விமர்சனம் செய்யும் அவகாசத்தை ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கொடுப்போமேயானால், அவர் – 'எல்லாம் சரியாக இருக்கிறது; ஆனால் 'விநங்க்ஷ்யஸி' என்னும் இந்த ஒரு பதம் மட்டும் என்னை அறியாமல் வந்துவிட்டது. அதை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அவ்வளவு கடுமை இல்லாத வேறொரு பதத்தைப் போட விரும்புகிறேன்' என்று சொன்னாலும் சொல்லலாம்.

ஸம்பாதி என்னும் கழுகு மூலமாக அவர்களுக்குத் தெரிந்தது. 'நூறு யோஜனை தூரம் உள்ள ஸமுத்திரத்தை எப்படித் தாண்டுவது? யாராலே இது முடியும்? எல்லோரும் தங்கள் தங்களுடைய ஸாமர்த்தியத்தை அறிவியுங்கள்? என்று அங்கதன் சொன்னான். அப்பொழுது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஸாமர்த்தியத்தைத் தெரிவித்தனர். 'என்னால் பத்து யோஜனை தூரம் தாண்ட முடியும்' என்று 'கஜன்' (गज) சொன்னான். 'நான் இருபது யோஜனை தூரம் தாண்டுவேன்' என்று 'கவாக்ஷன்' (गवाक्ष) என்பவன் சொன்னான். இவ்விதம் ஒவ்வொருவராகச் சொன்னார்கள். ஜாம்பவான் (जांबवान्) - 'நான் இப்பொழுது கிழவனாகிவிட்டேன். இப்பொழுது என் பலம் குறைந்துவிட்டது. நல்ல தெம்பு இருந்த காலத்தில் எனக்கு அபாரமான ஸாமர்த்தியம் இருந்தது. ஆனாலும் இப்பொழுது நான் தொண்ணூறு யோஜனை தூரம் மட்டும் தாண்ட முடியும்' - என்றான். அங்கதன், (अङ्गद) 'என்னால் நூறு யோஜனை தூரம் தாண்ட முடியும். ஆனால், திரும்பிவர முடியுமா, என்பதை நிச்சயமாக என்னால் சொல்ல முடியாது' - என்றான். ஆஞ்ஜநேயர் (आञ्जनेय) மட்டும் ஒரு மூலையில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது ஜாம்பவான் ஆஞ்ஜனேயரைப் பார்த்து அவரைப் புகழ்கிறார் -

वीर वानरलोकस्य सर्वशास्त्रविशारद ।
तूष्णीमेकान्तमाश्रित्य हनुमन् किं न जल्पसि ॥

ईदृशस्य च ते तात वर्णयाम: कथं बलम् ।
कार्यं चालोकसामान्यं कर्तुं शक्तस्त्वमेव हि ॥

भवाञ्जीवातवेऽस्माकमञ्जनागर्भसंभव ।
त्वं हि वायुसुतो वत्स प्लवने चापि तत्सम: ॥

वयमद्य गतप्राणा भवान्नस्त्रातु सांप्रतम् ।

(இராமாயணம் கிஷ்.66-2, 31, 32, 33)

வானரங்களுக்கெல்லாம் வீரனும், ஸர்வசாஸ்திரங்களையும் அறிந்தவனுமான ஹனுமானே, நீ தனியாக மௌனமாய் மூலையில் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? உன் சாமர்த்தியம் என்ன என்பதை ஏன் சொல்லாமலிருக்கிறாய்? நீ மஹாமஹிமை

பெற்றவன். உன் பலத்தை யாரால் வர்ணிக்க முடியும்? உயர்ந்த கார்யம் செய்யவேண்டியிருக்கிறது. இந்தக் கார்யம் உன்னுல் முடியுமேயல்லாமல் வேறு யாராலும் சாத்யமில்லே. ஏ அஞ்ஜனுதேவியின் குமாரனே, நீயே இப்பொழுது நமக்கு ஜீவனௌஷதமாக வேண்டும். அப்பா, நீ வாயுதேவனுடைய குமாரன். தாண்டுவதில் அவனுக்கு சமமான சாமர்த்தியம் உனக்கு உண்டு. நாம் எல்லோரும் ப்ராணன் நீங்கினவர்கள் போலிருக்கிரேம். நீயே நம் எல்லோரையும் காப்பாற்ற வேண்டும்! - இவ்விதமாக ஆஞ்ஜனேயனே ஜாம்பவான் புகழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே அவன் மஹா பலசாலியாக வளர்ந்தான்-

संस्तूयमानो हनुमान् व्यवर्धत महाबला ।

(வால்மீகி இராமாயணம் 67-1)

இவ்விதம் ஆஞ்ஜநேயரை ஜாம்பவான் ஸ்தோத்திரம் செய்து, ஞாபகமூட்டின பிறகுதான், மறந்திருந்த தன் ஸ்வரூபத்தையும், பலத்தையும், வீர்யத்தையும் மறுபடி ஞாபகப்படுத்திக் கொண்டு ப்ரபுவின் கார்யத்தை நிர்வாஹம் செய்யும் பொறுப்பை வஹித்து ஸமுத்திரத்தைத் தாண்டி ஸீதாதேவியை கண்டு, லங்கையை எரித்து, ஸ்ரீ ராமரிடம் வந்து நற்செய்தி சொல்லி, சூடாமணியைக் கொடுத்து, உயர்ந்த கார்யத்தை ஸாதித்து ''ராமாயண மஹாமாலாரத்னம்'' என்னும் புகழைப் பெற்று, ராகவனுடைய ஆலிங்கன ப்ராப்தி என்னும் உத்தமோத்தமமான பலனேயும் அடைந்தார்.

''நான் உன்னே 'மூடமதி' என்று தூஷிப்பதோ, அல்லது 'ஸுமதி' என்று புகழ்வதோ, எல்லாம் எப்படியாவது நீ பகவத் பக்தி செய்யவேண்டுமென்பதற்காகத்தான். நீ அதைச் செய்து சிரேயஸ்ஸை அடைவாய். வேண்டுமானுல் கோவிந்தனே பஜி. அல்லது சம்புவின் பாதகமலத்தை வேண்டுமானுலும் பஜி. இவனேயே பஜிக்க வேண்டும் என்ருவது அவனேயே பஜிக்க வேண்டும் என்ருவது பிடிவாதம் எனக்கு இல்லே. கோவிந்தனுக்கும் சம்புவிற்கும் யாதொரு வித்யாசமும் எனக்குத் தென்படவில்லே. உனக்கு எந்த மூர்த்தியில் பூர்வஸம்ஸ்கார வாசனேயினுல் அதிகம் பற்றுதல் ஏற்படுகிறதோ அதை பஜி. மொத்தத்தில், நீ பக்தி செய்ய வேண்டும்; ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும் - என்பதே நான்

உனக்கு செய்யும் ஹிதோபதேசம் ஆகும்'' - என்பதே பகவத்பாதாசார்யாளின் அபிப்ராயம்.

கீழ்நிலை வித்யைகளான (அபரவித்யைகளான) தர்க்கம், வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களை மட்டும் அப்யாஸம் செய்வதினால் வீண் க்லேசமும், கண்ட சோஷணமும்தான் ஏற்படுமே தவிர, வேறு யாதொருவிதமான புருஷார்த்தமும் அதனால் ஏற்படாது என்பது இருக்கட்டும். உத்தமோத்தமமான வேதாந்த சாஸ்திரத்தையே (பரவித்யையையே) மிகவும் ச்ரமப்பட்டு அப்யாஸம் செய்தும், பக்தி இல்லாமலிருந்தால் பலன் ஏற்படுவதில்லை; அதனால் ஸுகமும் உண்டாவதில்லை. க்ஷேமமும் ஏற்படுவதில்லை. உலகத்தில் ஸாதாரணமாக சாஸ்திராப்யாஸம் செய்பவர்களைப் பார்த்தால் - உயர்ந்த வேதாந்த சாஸ்திரத்தை தினந்தோறும் அப்யஸிப்பவர்களானாலும் சரியே! - அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக படித்து மிக்க பாண்டித்யத்தை அடைகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதிக கர்வமும் (அஹங்காரம்) அவர்களுக்கு வந்து விடுகிறது. சாஸ்திர பாண்டித்யம் இருக்கும் இடத்தில் ஸகுணபக்தியானது அனேகமாக காணப்படுவதில்லை. 'மலையின் உச்சியில் ஏறியிருப்பவன் அடிவார ப்ரதேசத்தை நீச த்ருஷ்டியோடுதான் பார்க்கிறான். அதற்கு என்ன காரணம்? அவனுக்கு இனிமேல் அடிவார ப்ரதேசத்தின் தேவையில்லாமலிருப்பதே. அவ்விதமே, நாம் ஞானிகளாக ஆகிவிட்டதால் கீழ் நிலையைச் சேர்ந்த பக்தி நமக்கு தேவையில்லை. கீழ் நிலைமையில் இருக்கும் அக்ஞானிகளுக்குத்தான் அது தேவை, நமக்கு இல்லை' - என்று தாங்களே ஞானிகள் என்ற அஹங்காரம் கொண்டவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் நான்கு வார்த்தை பேசுவதற்குள் எட்டுத் தடவை, 'अहं ब्रह्मास्मि', 'तत्त्वमसि' (அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்த்வமஸி), 'இந்தக் கட்டைக்கு என்ன வேண்டியிருக்கு! அது கிடக்கிறது' - என்று உபன்யாஸமும் செய்வார்கள். ஆனால் ப்ராதஃ பானீயத்தில் (காப்பி பானத்தில்) சர்க்கரையோ, பாலோ கொஞ்சம் குறைவாக இருந்தாலும் அல்லது அது வருவதில் கொஞ்சம் தாமதமானாலும் அவர்களுக்கு வரும் கோபம் துர்வாஸ மஹரிஷிகளின் கோபத்தையும் வெட்கப்படுத்திவிடும்! ஆஹா! மஹாமோஹத்தினுடைய விலாஸத்தை என்னவென்று சொல்லலாம்!

தங்களை ஞானிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் இப்பேர்ப்பட்டவர்கள் அக்ஞானிகளே தவிர ஞானிகள் அல்ல. தம்முடைய மோஹத்தினாலும் அஹங்காரத்தினாலும் இவர்கள் வீணாகப் போவார்கள். பக்தியற்ற இப்பேர்ப்பட்ட சுஷ்கமான (உலர்ந்த) ஞானத்தினால் யாதொரு பயனும் கிடையாது. இதைக் காட்டிலும் இப்பேற்பட்ட 'ஞானம்' இல்லாத பக்தியே கோடி மடங்கு உயர்ந்தது - என்னும் இந்த தத்துவத்தை ஸ்ரீ ஸத்குருநாதாள் தங்கள் ஆசரணையால் நமக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள். உத்தமோத்தமர்களான வித்வான்களே தலையாட்டி ஆச்சர்யப்படும்படியான பாண்டித்யம் அவருக்கு இருந்தது. அப்படி இருந்த போதிலும் அதற்கு இருமடங்கான ஈசுவர பக்தியும், குருபக்தியும், அவருக்கு இருந்தன. அவர் பூஜை செய்யும் மாதிரியையும், புஷ்பங்களை ஸ்வாமிக்கு அர்ப்பணம் செய்யும் பிரகாரத்தையும் தரிசித்திருக்கும் பாக்யசாலிகளுக்கு மேலே சொன்ன விஷயம் அக்ஷரஶ: (ஒவ்வொரு எழுத்தும்) ஸத்யம் என்றும், அதில் எள்ளளவும் உத்ப்ரேக்ஷை இல்லை என்பதும், ப்ரத்யக்ஷமாக அனுபவத்திற்கு வந்த விஷயம்.

'ஏதோ ஒன்று இரண்டு எழுத்தைத் தெரிந்துகொண்டு,நாமே 'ஞானி'கள் என்றும், 'ப்ருஹஸ்பதி'கள் என்றும் நினைக்கும் உங்கள் அஹங்காரத்தை விட்டுவிடுங்கள். பகவத்பக்தியை செய்யுங்கள். அதனாலேயே ச்ரேயஸ்ஸை அடைவீர்கள்' - என்று நமக்கு அழுத்தி உபதேசம் செய்வதைப் போலவே அவருடைய எல்லா வாக்குகளும் ஆசரணையும் இருந்தன.

இந்த ஸந்தர்ப்பத்தில் கீழ்க்கண்ட இரண்டு ச்லோகங்களை ஞாபகப்படுத்திக் கொள்வது மிகவும் பொருத்தமானது.

येऽन्येऽरविन्दाक्ष विमुक्तमानिनस्त्वय्यस्तभावादविशुद्धबुद्धयः ।
आरुह्य कृच्छ्रेण परं पदं ततः पतन्त्यधोऽनादृतयु ष्मदङ्घ्रयः ।।

तथा न ते माधव तावकाः क्वचिद् भ्रश्यन्ति मार्गात्त्वयि बद्धसौहृदाः ।
त्वयाऽभिगुप्ता विचरन्ति निर्भया !िनायकानीकपमूर्धसु प्रभो ।।

யேऽந்யேऽரவிந்தாக்ஷ விமுக்தமாநிந:
த்வய்யஸ்தபாவாதவிசுத்தபுத்தய: ।

ஆருஹ்ய க்ருச்ரேண பரம் பதம் தத:
பதந்த்யதோऽநாத்ருதயுஷ்மதங்க்ரய: ॥

ததா ந தே மாதவ தாவகா: க்வசித்
ப்ரச்யந்தி மார்காத் த்வயி பத்தஸௌஹ்ருதா: ।
த்வயாऽபிகுப்தா விசரந்தி நிர்பயா
விநாயகாநீகப மூர்தஸு ப்ரபோ ॥

(பாகவதம் 10-2-32, 33)

அனந்தகோடி ப்ரஹ்மாண்ட நாயகனை பராத்பர பரப்ரஹ்ம புருஷோத்தமன் லோகானுக்ரஹத்தின் பொருட்டு, தான் அஜனுக (பிறவியற்றவனுக) இருந்த போதிலும் ஜன்மா உள்ளவன் போலும், தேஹமற்றவனுனலும் தேஹம் உள்ளவன்போலும், விபுவாக (எங்கும் நிறைந்தவனுக) இருந்த போதிலும், பரிச்சின்னன் போலவும் தேவகி அம்மாளின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்ட பொழுது, ப்ரஹ்மாதி தேவதைகளும், நாரதாதி தேவரிஷிகளும் வந்து அவனை ஸ்துதி செய்தார்கள் - என்பது பாகவதமறிந்த யாவருக்கும் தெரிந்த விஷயம். அந்த கர்ப்ப ஸ்துதியிலுள்ளதுதான் முன்னல் கூறிய இரண்டு ச்லோகங்களும்.

தாமரைக்கண்ண, இன்னும் சிலர் தாங்கள் முக்தர்கள் என்று நினைத்துக்கொண்டு அஹங்காரிகளாக இருப்பார்கள். அவர்களுக்கு உன்னிடத்தில் பக்தி இருக்காது.

(त्वय्यस्तभावात् - त्वयि अस्त: निरस्त: अत एव असन् यो भाव: तस्मात्, भक्तेरभावादित्यर्थ: ।

ஆகையினுலேயே அவர்களுடைய புத்தி விசுத்தமாக இருக்காது. உள்ளே கச்மலம் இருக்கத்தான் இருக்கும்.

(अविशुद्धबुद्धय: न विशुद्धा बुद्धि: येषां ते, मलिनान्त: करणा इत्यर्थ:)

ஸ்ரீதர ஸ்வாமிகள் இந்த இடத்தில் கொஞ்சம் சமத்காரம் செய்து வேருெரு விதமாகவும் பொருள் கூறியிருக்கிருர். (त्वयि अस्तभा: अस्तमतय:) உன் விஷயத்தில் புத்தியற்றவர்களாக இருக்கிருர்கள். அதாவது உன்னிடம் பக்தியில்லாமல் இருப்பார்கள். (वादविशुद्धबुद्धय: वादेष्वेव विशुद्धबुद्धय:) அதாவது மிகவும் அழகாக சாஸ்திரார்த்தங்களில் வாதம் செய்ய வல்லமையுடையவர்கள்; அதில் மட்டும்

அவர்களுக்கு நல்ல ஸாமர்த்தியம் இருக்குமே ஒழிய பக்தியின் லேசமும் அவர்களுக்கு இருப்பதில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் - आरुह्य कृच्छ्रेण परं पदं - அநேக ஜன்மாக்களில் கடுமையான தபஸ்ஸையும், ஸாதனுப்யாஸத்தையும் செய்து எப்படியோ மிக ச்ரமத்தோடு உத்தமமான பதவிகளை அடைந்திருந்தாலும், இந்திரன், சந்திரன், குபேரன் முதலிய உத்தமமான பதவிகளையடைந்த போதிலும் மோக்ஷத்திற்கே மிகவும் நெருங்கின ஸத்குலம், தபஸ், யசஸ் முதலியவைகளுடன் கூடின ஜன்மாவை அடைந்தாலும், விக்னங்களால் அடிபட்டு அந்த இடங்களிலிருந்து கீழேவிழுந்து அதோகதிக்குப் போய்விடுவார்கள் - ततः पतन्त्यधः மாடிப் படிகளில் ஏறும்பொழுது கடைசி படிவரை ஏறி அங்கே கால் நழுவினுல் கீழே விழுந்துவிடுவார்கள். இன்னும் பார்க்கப் போனுல் கீழ்ப்படிகளிலிருந்து விழுந்தால் அதிக அபாயம் இருக்காது. எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்த ஸ்தானத்திலிருந்து நழுவி விழுகிறுர்களோ அவ்வளவுக்கவ்வளவு அபாயம் அதிகம்; அவ்வளவுக்கவ்வளவு அதிகதூரம் கீழே விழுந்துவிடுவார்கள். விக்னங்கள் அப்பேர்ப்பட்டவர்களைத் துரத்திக்கொண்டு போய்க் கீழே தள்ளிவிடும். இவ்விதம் அவர்கள் கீழே விழுவதற்குக் காரணம் என்னவென்றுல் अनादृतयुष्मदङ्घ्रयः உன் சரணகமலத்தை சரணம் அடையாமல் இருப்பதே. உன் சரணகமலத்தின் உதவியில்லாமல், தங்களுடைய சொந்த ஸாமர்த்தியத்திஞலேயே மிகவும் ச்ரமப்பட்டு அநேக ஜன்மாக்களில் கடுமையான தபஸ் முதலிய ஸாதனங்களைச் செய்து உயர்ந்த ஸ்தானத்தில் ஏறிஞலும் இடைஞ்சல்களால் கவிழ்க்கப்பட்டு நரகம் முதலான அதோகதியை அடைந்துவிடுவார்கள்.

'பரமபத ஸோபானபடம்' என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். பால்யத்தில் அந்த விளையாட்டைச் சிலர் ஆடியும் இருக்கலாம். அதில் ஏணி கிடைத்தால் மேலே ஏறிப்போவான். பாம்பின் வாயில் சிக்கிக் கொண்டு விட்டால் அதனுடைய வால் இருக்கும் இடத்திற்குக் கீழே விழுந்துவிடுவான். அப்படத்தில் எல்லாவற்றிற்கும் மேலே மிகப் பெரிய பாம்பு ஒன்று இருக்கும். மிக உச்சியைச் சேரும்பொழுது தப்பித்தவறி அதன் வாயில் சிக்கிவிட்டால் ஒரேயடியாகக் கீழே ஆரம்ப இடத்திற்கு வந்துவிடுவான். அதைப்போல் இவர்களும் நழுவி அதோகதியை அடைந்து விடுவார்கள்.

தேவர்களும், அஸுரர்களும் அமிருதத்திற்காக பாற்கடலைக் கடைந்தார்கள். அமிருதத்தை அடைவதற்காக அவர்கள் இருவர்களும் மிக்க ச்ரமப்பட்டார்கள். மந்தர மலையை எல்லோரும் சேர்ந்து தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தார்கள். நடுவழியில் கை சோர்ந்து போய் அதைக் கீழே போட்டுவிட்டனர். அப்போது எவ்வளவோ தேவதைகளும், அசுரர்களும் அதில் நசுங்கிப் போயினர். அநேகருக்கு கை, கால்கள் ஒடிந்து போய்விட்டன. மறுபடியும் ஏதோ ஒருவிதமாக அந்த பர்வதத்தைக் கொண்டுவந்து க்ஷீர ஸமுத்திரத்தைக் கடைந்தனர். இருவர்களும் ஸமமாகத்தான் ச்ரமப்பட்டார்கள். ஆனுலும் முடிவு என்ன! தேவதைகளுக்கு அமிருதம் கிடைத்தது. அசுரர்களுக்குக் கிடைக்கவில்லை. தேசம், காலம், ஸாதனம், பரிச்ரமம் முதலியவைகளெல்லாம் இருவர்களுக்கும் ஸமமாக இருந்தபோதிலும், ஒருவருக்கு பலன் கிடைத்தது. இன்னெருவருக்குக் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன? கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம். சுகாசார்யாள் இதை ஒரு சுலோகத்தில் மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிருர் -

एवं सुरासुरगणाः समदेशकाल -
हेत्वर्थकर्ममतयोऽपि फले विकल्पाः ।
तत्रामृतं सुरगणाः फलमञ्जसापु-
यत्पादपङ्कजरजः श्रयणान्न दैत्याः ॥

ஏவம் ஸுராஸுரகணா: ஸமதேசகால-
ஹேத்வர்த்தகர்மமதயோऽபி பலே விகல்பா: ।
தத்ராம்ருதம் ஸுரகணா: பலமஞ்ஜஸாபுர்
யத்பாதபங்கஜரஜ: ச்ரயணாந்ந தைத்யா: ॥

- ஸ்ரீமத் பாகவதம் 8-9-28

தேவதைகள் பகவானுடைய பாதத்தை அவலம்பித்துக் கொண்டு அவனே சரணம் அடைந்திருந்ததினுல் அவர்களுடைய பிரயத்னம் ஸபலமாயிற்று. அசுரர்கள் பகவானுடைய பாதத்தை அவலம்பிக்காமல் தங்களுடைய பௌருஷத்தினுலேயே கார்யத்தை ஸாதிக்க முயற்சி செய்தார்கள். ஆகையால் அவர்களுடைய பிரயத்னம் விபலமாயிற்று. அமிருத மதனத்தின் கதையிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான நீதி இதுதான் -

'பகவத்பக்தி இருந்தால் பல ஸித்தி ஏற்படும். அது இல்லாமலிருந்தால் ஏற்படாது' என்பது. இனி இரண்டாவது சுலோகத்தைப் பார்ப்போம்.

(हे माधव, तथा तावकाः त्वयि बद्धसौहृदाः (ये) ते न क्वचित् मार्गात् भ्रश्यन्ति । हे प्रभो, विनायकानीकपमूर्धसु निर्भयाः विचरन्ति, यतस्त्वयाऽभिगुप्ताः।)

ஹே மாதவா, எவ்விதம் உன்னிடம் பக்தியில்லாமல் தங்களேயே ஞானிகள் என்று நினைக்கும் அஹங்காரிகள் ஒருக்கால் உத்தம ஸ்தானத்தை மிகப் பிரயாஸத்தினுல் அடைந்தாலும், அங்கிருந்து விழுந்து விடுவார்களோ, அவ்விதம் உன்னேச் சேர்ந்த பக்தர்கள், உன் சரணங்களில் மாருத பிரேமையை வைத்திருப்பதால் எப்பொழுதும் தங்கள் மார்க்கத்திலிருந்து நழுவ மாட்டார்கள் - கீழே விழமாட்டார்கள். ஹே ப்ரபோ, அவர்கள் கொஞ்சமும் பயம் இல்லாமல் விக்னம் செய்யும் கூட்டங்களின் தலேவர்களுடைய தலேமேலேயே "ஜம் ஜம்" என்று காலடி வைத்துக் கொண்டு போவார்கள். - विनायकानीकपमूर्धसु । அதாவது விக்னங்களெல்லாவற்றையும் ஜயித்து பகவத் பதத்தை அடைவார்கள். இதற்குக் காரணம் என்னவென்ருல் - त्वयाऽभिगुप्ताः உன்னுல் அவர்கள் ரக்ஷிக்கப்பட்டவர்களாக இருக்கிருர்கள். 'गुप्ताः' மட்டுமல்ல, 'अभिगुप्ताः' - எல்லாப் பக்கங்களிலும் உன்னுல் காப்பாற்றப்படுபவர்கள். நீ பக்தவத்ஸலன். எவ்விதம் கோமாதா தன் சிறு கன்றுக்குட்டியைக் காப்பாற்றி வருகிறதோ அவ்விதம் நீ உன் பக்தர்களே ரக்ஷித்து வருகிருய்.

பரம பாகவதனை பரீக்ஷித் தன் தாயின் கர்ப்பத்திலிருக்கும் பொழுது, அச்வத்தாமாவால் ப்ரயோகம் செய்யப்பட்ட அபாண்டவாஸ்திரம் அவனே தஹிக்க வரும் காலத்தில், தன் யோக சக்தியினுல் அந்த கர்ப்பத்திற்குள் பிரவேசித்து உன் வைஷ்ணவ தேஜஸால் அந்த கர்ப்பத்தைச் சூழ்ந்து கௌமோதகி (कौमोदकी) என்னும் கதையையும் சுதர்சனம் (सुदर्शन) என்னும் சக்ரத்தையும் சொருகிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்து அவனேக் காப்பாற்றினுய். அதுபோல உன்னிடம் உறுதியான ப்ரேமையை வைத்திருக்கும் உன் பக்தர்களே நீ अभितः எல்லாப் பக்கத்திலும் காப்பாற்றுகிருய். ஆகையினுல் உன் பக்தர்களே அந்த விக்னக் கூட்டங்களோ, அவைகளின் தலேவர்களோ ஒன்றும் செய்ய முடியாது.

ஆகையினுல், பக்தியே ஸர்வ சிரேயஸ்ஸுக்கும் மூல காரணம் என்பது திண்ணம்.

भक्तिर्जनित्री ज्ञानस्य भक्तिर्मोक्षप्रदायिनी ।
भक्तिहीनेन यत्किञ्चित् कृतं सर्वं निरर्थकम् ॥

பக்திர் ஜநித்ரீ ஞானஸ்ய பக்திர் மோக்ஷப்ரதாயினி ।
பக்திஹீநேன யத்கிஞ்சித் க்ருதம் ஸர்வம் நிரர்த்தகம் ॥

பக்தி ஞானத்தை உண்டுபண்ணுகிறது. ஞானத்தின் மூலமாக மோக்ஷத்தையும் உண்டு பண்ணுகிறது. பக்தியில்லாதவன் எதைச் செய்தாலும் அது எல்லாம் வீணேயாகும்.

அந்த பக்தியிலும்கூட பகவத் பக்தியைக் காட்டிலும் குரு பக்தியே ஒருவிதத்தில் பார்க்கப்போனுல் உயர்ந்தது என்று சொல்லலாம். ஈச்வரன்தான் ஸம்ஸாரத்திலிருந்து நம்மை விடுவிப்பவன். பசுபதியே பசுக்களான நம்மை அவித்யா பாசத்திலிருந்து விடுவித்து முக்தர்களாக செய்பவன்; இது உண்மைதான். ஆனுல், அந்த மோசகனை ஈச்வரனை நமக்கு காட்டிக் கொடுக்க மோசகப்ரதன் ஒருவன் அவசியம். ஈச்வரன் என்று ஒருவன் இருக்கிருன் என்பதை நாமாக யுக்தியினுல் அறிந்துகொள்ள முடியாது. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினுல் அவனை அறியவே முடியாது என்பதில் ஸந்தேஹமே இல்லை. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினுல் ஈச்வரன் இருப்பது தெரிந்திருந்தால் பெரிய பெரிய சாஸ்திரிகளுக்குள் சிலர் அவன் இருக்கிருன் என்றும், மற்றும் சிலர் அவன் இல்லை என்றும் சொல்லி விவாதம் செய்திருக்க மாட்டார்கள். ஸாங்க்ய சாஸ்திரி, மீமாம்ஸா சாஸ்திரி முதலிய பெரிய பெரிய சாஸ்திரிகளே ஈச்வரன் இல்லை என்று வாதம் செய்கிருர்கள். நல்ல வெளிச்சத்தில் இருக்கும் குடம்போல் ஈச்வரன் ஸ்பஷ்டமாக கண்ணுக்குத் தென்பட்டிருந்தால் இவ்வளவு படித்த சாஸ்திரிகளும் இவ்விதம் வாதம் செய்வார்களா? ஸாதாரணமான ஜனங்களுக்கே ஸம்சயம் வந்திருக்காது. அப்படி இருக்க, மேதாவிகளான பெரிய சாஸ்திரிகளுக்கு ஸம்சயம் வந்திருக்குமா! ஒருக்கால் ஈச்வரனே கருணையோடு உருவத்தை எடுத்துக்கொண்டு 'நான் இருக்கிறேன், ஸந்தேகப்பட வேண்டாம்; இதோ பார்' என்று சொல்லி நேராகவே வந்து நின்ருலும், அப்பொழுதும் அவனை அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். 'ஈச்வரன் கண்ணிற்குத் தென்படுவானு? கண்ணுக்குத்

தென்படுவதினுலேயே இவன் ஈச்வரன் அல்ல' - என்று சொல்லி விடுவார்கள்.

உதயனுசார்யர் என்பவர் தர்க்க சாஸ்திரத்தில் மஹா பண்டிதர். ஆனுலும் பகவத்பக்தர். அவர் காலத்தில் நாஸ்திக மதம் மிகவும் ப்ரபலமாகப் பரவியிருந்தது. 'ஈசுவரன் இல்லை' என்று நாஸ்திகர்கள் ஈச்வரனை நிராகரணம் செய்து கொண்டிருந்தார்கள். உதயனுசார்யர் அவர்களை எதிர்த்து வாதம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் நாஸ்திகர்களுக்கும் உதயனுசார்யருக்கும் ஒரு பெரிய மஹாஸபையில் வாதம் நடந்தது. நாஸ்திகர்கள் தங்கள் கோஷ்டியிலே ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து வாதம் செய்ய நிறுத்தினுர்கள். எதிர்க் கக்ஷியில் உதயனுசார்யர் நின்ருர். ஈச்வரன் இல்லை என்பது நாஸ்திகர்களுடைய வாதம் (கட்சி). 'ஈச்வரன் இருக்கிருன்' என்பது உதயனுசார்யரின் வாதம் (கட்சி). மத்யஸ்தத்திற்கு யாரை வைப்பது என்னும் கேள்வி வந்தபோது, நாஸ்திகர்கள் - 'உங்கள் ஈச்வரனே மத்யஸ்தனுக இருக்கட்டுமே! அவன் ஸர்வக்ஞன் என்று நீங்கள் சொல்கிறீர்கள் அல்லவா! நீங்கள் பூஜை செய்யும் பொன்மயமான இந்த கிருஷ்ண விக்ரஹத்தையே மத்யஸ்தத்திற்கு வைப்போமே' - என்று பரிஹாஸமாக சொன்னுர்கள். உதயனுசார்யர் அப்படியே ஆகட்டும் (तथैवास्तु) என்று அதற்கு ஸம்மதித்தார். வாத ஸபை கூடிற்று. வாதி, பிரதிவாதிகள் இவர்களின் நடுவில் ஒரு தாம்பாளத்தில் உதயனர் தாம் பூஜை செய்துகொண்டிருந்த கிருஷ்ணனின் ஸ்வர்ண ப்ரதிமையை வைத்தார். நாஸ்திகர்களின் தலைவன் வாதம் செய்ய ஆரம்பித்து, 'ஈச்வரன் இல்லை' என்று நிரூபணம் செய்தான். அவன் ஈச்வரனை கண்டனம் செய்யச் செய்ய கிருஷ்ண விக்ரஹமும் சூடேறி, சிவப்பாகி, வெளுப்பாகி கடைசியில் உருகிவிட்டது. உதயனுசார்யர் நாஸ்திகர்கள் சொல்லும் யுக்திகளுக்கெல்லாம் ஸமாதானம் கூறி அவர்களுடைய கண்டனங்களை நிராகரணம் செய்தார். அவர் ஸமாதானம் சொல்லிக்கொண்டு வரவர உருகிப்போயிருந்த அந்தப் பொன்னும் மறுபடியும் கெட்டியாகி க்ரமமாக விக்ரஹமாக ஆயிற்று. மறுபடியும் நாஸ்திகர்கள் கண்டனம் செய்ய மறுபடியும் விக்ரஹம் உருகிவிட்டது. உதயனுசார்யர் அதற்கு ஸமாதானம் கூறவே மறுபடியும் அது விக்ரஹமாயிற்று. இவ்விதம் இருபத்தோறு தடவை விக்ரஹம் உருகிஉருகி மறுபடியும் கெட்டியாகி விக்ரஹமாயிற்று.

கடைசியில் நாஸ்திகர்களுக்கு மேல் கக்ஷி சொல்லத் தெரியவில்லை. அவர்கள் மௌனமாக இருந்து விட்டார்கள். விக்ரஹமும் அப்படியே நின்றுவிட்டது. உதயனாசார்யர்தான் ஜெயித்தார் என்று ஸபையில் தீர்மானம் ஆயிற்று.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு உதயனாசார்யர் பூரி ஜகன்னாத க்ஷேத்திரத்திற்கு தர்சனம் செய்யப் போனார். அவர் அங்குபோய்ச் சேரும்பொழுது இரவில் வெகு நேரம் ஆகிவிட்டது. உதயனாசார்யர் அவஸர அவஸரமாக கோவிலுக்குக் கிளம்பினார். அப்பொழுது கோவிலிலிருந்து வந்த ஜனங்கள், 'பெரியவரே, கோவிலில் நடைசாத்தியாய் விட்டது. இனி இன்று தர்சனம் கிடைப்பது ஸாத்யமில்லை. காலையில் போய் தாங்கள் தர்சனம் செய்யலாம்' என்று சொன்னார்கள். பக்தரான உதயனாசார்யருக்கு மறுதினம் வரை பகவத் தர்சனம் இல்லாமல் இருக்க முடியவில்லை. அவர் ஹ்ருதயம் ஜகன்னாதனின் தர்சனத்திற்காக துடித்துக் கொண்டிருந்தது. இரும்புத் துண்டு காந்தத்தினால் இழுக்கப்படுவதுபோல் ஏதோ ஒரு சக்தியால் இழுக்கப்பட்டு உதயனாசார்யர் கோவிலுக்குச் சென்றார். மஹா த்வாரம் (நடை) சாத்தியிருந்தது. அப்பொழுது அவர் அந்த மஹாத்வாரத்தின் எதிரில் நின்றுகொண்டு கீழ்க்கண்ட ச்லோகத்தைச் சொன்னார் -

ऐश्वर्यमदमत्तोऽसि मामवज्ञाय लक्ष्यसे ।
पुनर्बौद्धे समायाते मदधीना तव स्थितिः ॥

ஐச்வர்யமதமத்தோऽஸி மாமவஜ்ஞாய லக்ஷ்யஸே ।
புநர்பௌத்தே ஸமாயாதே மததீநா தவ ஸ்திதி: ॥

''ஐச்வர்யமதத்தினால் நீ என்னிடத்தில் அலக்ஷ்ய புத்தியுடன் இருப்பதாகத் தெரிகிறது. இருக்கட்டும், இருக்கட்டும்; இப்பொழுது எதற்கு? மறுபடியும் பௌத்தர்கள் கிளம்பி வந்தால் உன்னைக் காப்பாற்ற நான்தான் வரவேண்டியிருக்கும். உன் ப்ராணன் என் அதீனத்தில் இருக்கிறது என்பது கொஞ்சம் ஞாபகம் இருக்கட்டும்! கர்வமடைய வேண்டாம். ஜாக்ரதை'' என்றார். உடனே மஹாத்வாரம் தானாகவே 'படார்' என்று திறந்து கொண்டது. எல்லா த்வாரங்களும் திறந்துகொண்டு விட்டன. உதயனாசார்யர் கோவிலுக்குள்ளே போய் ஜகன்னாதனைக் கண்குளிர தர்சனம் செய்தார் - என்று ப்ரஸித்தமான கதை ஒன்று சொல்வதுண்டு.

இதன் தாத்பர்யம் என்னவென்றால், ஈச்வரன் அனந்தகோடி ப்ரஹ்மாண்ட நாயகனாக இருக்கலாம்; எல்லா லோகங்களும் அவன் வசத்தில் இருக்கலாம்; ஆனால் அந்த ஈச்வரன் பக்த பராதீனன். ஈச்வரனுடைய இருப்பே (அஸ்தித்வமே) பக்தனுக்கு அதீனமாக இருக்கிறது. பகவான் பக்தனுடைய கைப்பொம்மை! மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத அபரிச்சின்னனான, பகவானை பக்தியால் உரலுடன் கட்டிப்போட்டு அவனை 'தாமோதரனாக' ஆக்கிவிடலாம்! உலகத்துக்கெல்லாம் பகவானே கதி; அந்த பகவானுக்கு பக்தனே கதி!

ஆகையினால் ஈச்வரன் தானே நேரில் வந்து நின்று, 'நான் இருக்கிறேன்; பார்' - என்று சொல்லிக்கொண்டாலும் அதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஆகையினால் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்பதைத் தீர்மானிக்க முடியாது.

'ஈச்வரன் இருக்கிறான் என்பதை யுக்தியாலேயே என்னால் ஸ்தாபிக்க முடியும்' - என்று நையாயிகன் ஜம்பத்துடன் மார் தட்டிக் கொண்டு அநேக யுக்திகளைச் சொல்லுகிறான். ஆனால் அவன் பதினாயிரம் யுக்திகளைச் சொன்னாலும், அந்த யுக்திகளால் ஒருக்காலும் ஈச்வரனை ஸாதிக்க முடியாது. வேத மாதாவின் உபதேசத்தினாலேயே ஈச்வரனைத் தீர்மானிக்க முடியுமே அல்லாது, வேறு எந்த ப்ரமாணத்தினாலும் அவன் இருப்பதையேகூட நிச்சயம் செய்ய முடியாது. பாதராயணர் - शास्त्रयोनित्वात् (சாஸ்த்ரயோனித்வாத் - ப்ரஹ்ம ஸூத்ரம் 1-1-3) என்னும் ஸூத்ரத்தில் இந்த விஷயத்தை நிர்ணயம் செய்திருக்கிறார்.

'ஈச்வரன் ஒருவன் இருக்கிறான். அவன் ஸர்வக்ஞன், ஸர்வசக்தன், அவனிடமிருந்தே ஜகத் உண்டாகிறது. அவனாலேயே காப்பாற்றப்படுகிறது. முடிவில் அவனிடமே லயத்தை அடைகிறது' - என்று சொல்லிக் கொடுத்து அந்த ஈசுவரனை ச்ருதி மாதாதான் நமக்கு காட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ச்ருதி மாதா நமக்கு உபதேசம் செய்தபோதிலும், அவள் சப்தாத்மிகையானதினால், அவளையும், அவளுடைய அபிப்ராயத்தையும் நாம் ஸத்குருவின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள முடியும். ஆகையினால் மோசகப்ரதன் ஒருவன் மோசகனான அந்த ஈச்வரனை நமக்கு காட்டிக் கொடுக்காவிட்டால் நாம் அவனை அறிய முடியாது. மோசகனான

ஈச்வரனே காட்டிக் கொடுக்கும் மோசகப்ரதனே ஸ்ரீ ஸத்குரு என்பவர்.

ஸ்காந்த புராணத்தில் அடங்கிய ஸூதஸம்ஹிதையில் முக்தியின் ஸ்வரூபம் என்ன? அதன் ஸாதனம் என்ன? மோசகன் யார்? மோசகனை தெரியப்படுத்தும் மோசகப்ரதன் யார்? என்ற விஷயங்கள் தனித்தனி அத்யாயங்களில் மிகவும் விரிவாக நிரூபணம் செய்யப்பட்டிருக்கின்றன. ஈசுவரனே மோசகன் என்பதும், ஸ்ரீ ஸத்குருவே மோசகப்ரதன் என்பதும், அனேக யுக்திகளாலும், த்ருஷ்டாந்தங்களாலும் அங்கே நன்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மோசகன் முக்கியமானவன். அவனுடைய அனுக்ரஹம் நமக்கு அவச்யம் வேண்டும் என்பது வாஸ்தவம். ஆனால் அந்த மோசகனைக் காட்டிலும் மோசகப்ரதன் இன்னும் முக்கியமானவன்; மோசகனுடைய அனுக்ரஹத்தைக் காட்டிலும் மோசகப்ரதனுடைய அனுக்ரஹம் இன்னும் அதிக அவச்யம் என்பது ஸ்பஷ்டம்தானே!

அதுமாத்திரமல்ல; இன்னொரு விசேஷமும் இருக்கிறது. ஸர்வேச்வரனே ஸம்ஸார மோசகனான போதிலும், 'அவனுடைய உண்மையான ஸ்வரூபமும் நம்முடைய உண்மையான ஸ்வரூபமும் ஒன்றுதான்' என்னும் தத்வ ஞானத்தினாலேயே மோக்ஷம் கிடைப்பதாயிருந்தாலும், மோசகனான ஈச்வரன் தானாகவே தன் உண்மையான ஸ்வரூபத்தை நமக்குக் காட்டிக் கொடுக்க முடியாது. அந்த அபேத ஞானத்தையும் அவர் உண்டுபண்ண முடியாது. எப்பேற்பட்ட பக்தனுக்கும் பகவான், அசிந்த்யமாயும், அவ்யக்தமாயும், அப்ரமேயமாயும், அகண்டமாயும், அத்வயமாயுமுள்ள தன் ஸ்வரூபத்தைத் தானாகக் காட்டிக் கொடுக்க முடியாது. ஜீவப்ரஹ்மாபேத ஞானத்தை ஈச்வரன், ஈச்வரனாக இருந்துகொண்டு உண்டுபண்ண முடியாது. ஸ்ரீ ஸத்குருவின் உபதேசத்தின் மூலமே பரமாத்மாவின் ஸ்வரூபத்தை அறியலாம். ஸ்ரீ ஸத்குருவினால் உபதேசிக்கப்பட்ட மஹாவாக்கியத்தினாலேயே ஜீவப்ரஹ்மாபேத ஞானம் ஏற்பட முடியுமே தவிர, அதற்கு வேறு யாதொரு வழியும் கிடையாது.

பவித்ரமான காசீ க்ஷேத்ரத்தில் மிகக் கருணையோடு பகவான், மனிதன், வானரம், பசு, பக்ஷி, புழு, கொசு முதலான எல்லா

பிராணிகளுக்கும் முக்தியை அள்ளிஅள்ளிக் கொடுப்பதாக ப்ரதிக்ஞை செய்திருக்கிருரல்லவா! தனக்கு மிகவும் ப்ரியதமமான இந்த புண்ய க்ஷேத்திரத்தில் சரீரத்தை விடுபவர்களுக்கு மறுபடியும் பிறப்பில்லாத மோக்ஷத்தை அந்த கருணைக் கடலான பரமசிவன் எப்படிக் கொடுக்கிருன்? எப்படி தன் பிரதிக்ஞையைக் காப்பாற்றிக் கொள்கிருன்? என்பதைக் கொஞ்சம் பார்ப்போம். 'இவன் முக்தனுகட்டும்' என்று தன் ஸங்கல்ப மாத்திரத்தினுல் அந்த பிராணிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பதில்லை. தானே ஸ்ரீ ஸத்குருவின் உருவத்தோடு வந்து ப்ராணன் போகும் ஸமயத்தில் அந்த ப்ராணியின் வலது காதில் தாரக மஹாமந்திரத்தை உபதேசம் செய்கிருன்.

'अत्र हि जन्तोः प्राणेषूत्क्रममाणेषु रुद्रस्तारकं ब्रह्म व्याचष्टे'

(ஜாபாலோபநிஷத்-1)

என்று ச்ருதிமாதாவே சொல்லியிருக்கிருள். உபதேசம் செய்யும் அந்த குருமூர்த்தியினுடைய எல்லையற்ற மஹிமையாலும், தேச மஹிமையாலும், கால மஹிமையாலும், மந்த்ர மஹிமையாலும் அந்த ப்ராணிக்கு அந்த நிமிஷமே ஞானம் ஏற்பட்டு முக்தனுகிருன்.

எதற்காக விச்வநாதன் இவ்விதம் செய்ய வேண்டும்? தன் ஸங்கல்பத்தினுலேயே ப்ராணிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடாதா? 'இவர்கள் முக்தர்களாகட்டும்', என்று ஈச்வரன் ஸங்கல்பம் செய்தால் போதாதா? அதனுலேயே அவர்களுக்கு முக்தி ஏற்படாதா? என்ருல், இல்லை. ஈச்வர ஸங்கல்ப மாத்திரத்தினுல் அவர்களுக்கு மோக்ஷம் ஏற்படுவதில்லை. ஞானம் ஒன்றினுல்தான் மோக்ஷம் ஏற்படும். மோக்ஷமடைய ஞானத்தைத் தவிர வேறு உபாயம் கிடையாது. ஞானமோ ஒருவருடைய இச்சையால் ஏற்படக்கூடியதில்லை. பிரமாணத்தால்தான் ஏற்படும். அதனுல்தான் விசுவநாதர் குருமூர்த்தியாக வந்து உபதேசம் செய்து ஞானமேற்படச் செய்து ப்ராணிகளை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கைதூக்கிவிட வேண்டியிருக்கிறது. ஆகையால் அவ்விதம் செய்கிருர்.

இதனுல் ஈச்வரனுக்கு யாதொரு குறைவும் ஏற்படாது. அவனுடைய ஸத்யஸங்கல்பத் தன்மைக்கு யாதொரு குறைவும் ஏற்படாது. ஏனென்ருல் - 'குருவினுல் உபதேசிக்கப்பட்ட வேதாந்த மஹாவாக்கியத்தினுலேயே 'प्रत्यगभिन्नाद्वितीयापरोक्षब्रह्मज्ञानम्'

(ப்ரத்யகபின்னுத்விதீயாபரோக்ஷ ப்ரஹ்ம ஞானம்) ஏற்படட்டும்', என்று தானே நியமனம் செய்திருக்கிருன். ஆகையினுல் தன்னுடைய நியமத்திற்கே தான் உட்பட்டு நடப்பதினுல், ஈச்வரனுடைய ஸ்வாதந்திரியத்திற்காவது, ப்ரபுத்தன்மைக்காவது ஸத்ய ஸங்கல்பத் தன்மைக்காவது யாதொரு பங்கமும் உண்டாவதில்லை. ஒரு ராஜா இருக்கிருன். அவன் தன் நாட்டின் பிரஜைகளுக்கு பிரபு. அவர்களை நிக்ரஹிப்பதற்கும் அநுக்ரஹிப்பதற்கும் அவன் ஸ்வதந்திரன். இருந்தபோதிலும் தான் ஏற்படுத்திய சட்டத்தை அனுஸரித்தே ப்ரஜைகளுக்கு சிக்ஷையோ அல்லது அனுக்ரஹமோ செய்கிருன். இவ்விதம் தானே ஏற்படுத்தியிருக்கும் சட்டத்திற்குத் தானே உட்பட்டு நடப்பதனுல் அவனுடைய ஸ்வதந்திரத் தன்மைக்காவது பிரபுத்தன்மைக்காவது பங்கமேற்படுமா? சாலையில் ஜனங்கள் ஸஞ்சாரம் செய்யும்பொழுது இடது புறத்திலேயே போக வேண்டும் என்று ராஜாவே சட்டம் போட்டிருக்கிருன். தான் சஞ்சாரம் செய்யும்பொழுதும் அந்தச் சட்டத்திற்குட்பட்டேதான் நடக்கிருன். இதனுல் அவன் பிரபுத் தன்மைக்குக் குறைவு உண்டாகுமா? அது போலவே இங்கும் தன் நியமத்தை அனுஸரித்து குருவின் உபதேசமூலமாகவே ப்ராணிகளுக்கு ஞானத்தை உண்டுபண்ணி பிறகு மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் உபதேசம் செய்வதற்கும்கூட வேறு யாராவது ஒருவரை அனுப்பிக் கொடுக்கலாம். அல்லது தானே குருமூர்த்தியாக வரலாம். ஆனுல் உபதேசம் செய்கிறவனுடைய தபோபலமும் மந்திர ஸித்தியில் காரணமாவதினுல் வேறு யாரையாவது அந்தக் கார்யத்தில் நியமனம் செய்வது அவ்வளவு பொருத்தமல்லவென்று எண்ணி, அளவற்ற கருணையால், தானே குருமூர்த்தியாக வந்து உபதேசம் செய்து ப்ராணிகளை இந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்து உத்தாரணம் செய்கிருன்.

ஜீவனை குல ஸ்திரீக்கு ஸமமாகச் சொல்லலாம். நற்குலத்தில் பிறந்த பெண் உரிய வயதில் கணவனையடைந்து அவனிடம் தன் உடல், மனம், பொருள், வாழ்க்கை யாவற்றையும் ஒப்புவித்து அவனுடன் ஒன்றுபட்டு இருப்பாள். அதுபோலவே ஜீவனும் தன் பதியான ஈச்வரனை அடைந்து அவனிடம் தன்னுடையதெல்லாவற்றையும் ஒப்படைத்து அபேத பாவத்தோடு

இருக்க வேண்டும். இதுவே தத்வஞானத்தின் ஸ்வரூபம். இவ்விதம் குல ஸ்திரீ (வதூ)யான ஜீவனை ஈச்வரன் என்னும் வரனோடு சேர்த்து விவாஹம் செய்துவைத்து, இரண்டாயிருக்கும் வியக்திகளை ஒன்ருகச் செய்யும் புரோஹிதனே ஸ்ரீ ஸத்குருநாதன். வேத மந்த்ரங்களினுல் புரோஹிதன் வதூவரர்களுக்கு விவாஹம் நடத்தி அவர்களை ஒன்ருக சேர்த்து வைக்கிருன். அவ்விதமே வேதாந்த மஹாவாக்கியத்தினுல் ஸ்ரீ ஸத்குருநாதன் என்னும் புரோஹிதன் ஜீவனை ஈச்வரனோடு சேர்த்து வைக்கிருன்.

ईश्वरो गुरुरात्मेति मूर्तिभेदविभागिने ।
व्योमवद्व्याप्तदेहाय दक्षिणामूर्तये नमः ॥

ஈச்வரோ குருராத்மேதி மூர்த்திபேத விபாகிநே ।
வ்யோமவத் வ்யாப்ததேஹாய தக்ஷிணாமூர்த்தயே நம: ॥

என்று ஸுரேச்வராசார்யாள் மானஸோல்லாஸம் என்னும் க்ரந்தத்தில் (பகவத்பாதாசார்யாளின் தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரத்திற்கு வ்யாக்யானம்) சொல்லியிருக்கிறபடி குருவின் மூலமாகவே ஜீவன் ஈச்வரனை அடைகிருன். ஜீவன் ஈச்வரன் இவ்விருவர்களுக்கும் நடுவில் குரு என்பவர் இருக்கிருர்.

ஆகையால் குரு பக்தியே ஈச்வர பக்திக்கும் ஈச்வர ஞானத்திற்கும் மூலம். அதனுல்தான் குரு பக்தியே ஈச்வர பக்தியைக் காட்டிலும் உயர்ந்தது என்று சொன்னேம்.

உண்மையில் பார்த்தோமேயாகில் ஸ்ரீ ஸத்குருநாதன் பகவத் ஸ்வரூபமே. ஸத்குருவை ப்ராக்ருதனை மனிதன் என்று எண்ணுபவனுக்கு உண்மையான குரு பக்தியே இருக்க முடியாது. அப்பேர்ப்பட்டவன் இந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கடைத்தேறவும் மாட்டான். आचार्य देवो भव 'ஆசார்ய தேவோ பவ' (தைத்திரீயோபநிஷத் சிக்ஷாவல்லி) 'குருவை ஈசன் என்று நினைத்துக் கொள்' என்று ச்ருதி மாதாவே உபதேசித்திருக்கிருள்! ஸ்ரீமத் பாகவதத்திலும்-

यस्य साक्षाद्भगवति ज्ञानदीपप्रदे गुरौ ।
मर्त्यासद्धीः श्रुतं तस्य सर्वं कुञ्जरशौचवत् ॥

யஸ்ய ஸாக்ஷாத் பகவதி ஞானதீப ப்ரதே குரௌ।
மர்த்யாஸத்தீ: ச்ருதம் தஸ்ய ஸர்வம் குஞ்ஜரசௌசவத் ॥

- பாகவதம் 7-15-26

என்று நாரதர் தர்மபுத்திரருக்குச் சொல்லியிருக்கிறார். ஹ்ருதயத்தில் ஞான தீபத்தை ஏற்றிவைக்கும் ஸ்ரீ ஸத்குருநாதன் ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபமே. யார் துர்புத்தியால் ஸத்குருவை ப்ராக்ருத மனிதனென்று நினைக்கிறாரோ அவன் செய்யும் சாஸ்த்ர ச்ரவணம் முதலிய எல்லா ஸாதனங்களும் கஜஸ்நானம் போல் (யானையின் ஸ்நானம் போல்) நிரர்த்தகமாகும். (யானை ஜலத்தில் இறங்கி ஸ்நானம் செய்து கரையில் ஏறினதும் தன் துதிக்கையால் புழுதியையும் மண்ணையும் வாரி தன்மேல் இரைத்துக் கொண்டுவிடுகிறது.)

ஸ்ரீ மஹாஸந்நிதானம் 'விமுக்தச்ச விமுச்யதே' ('विमुक्तश्च विमुच्यते') (கடோபநிஷத் 2-5-1.) என்னும் ச்ருதி வாக்யத்தில் கூறியபடி, முக்தராக இருந்து முக்தரானார். இந்த ச்ருதி வாக்யத்தின் புதிரைப் பிரித்துச் சொல்வதானால் - 'இதுவரை ஜீவன்முக்தராக விளங்கி இப்பொழுது விதேஹமுக்தராக விளங்குகிறார்' என்று பொருள் கொள்ள வேண்டும். ஸம்ஸாரக் கடலில் அகப்பட்டுத் திண்டாடிக் கொண்டிருக்கும் நமக்கு இந்த பயங்கரமான ஸாகரத்தைத் தாண்டுவதற்காக ''பக்தி'' என்னும் தோணியைக் கொண்டுவந்து கொடுத்து, அவர் அகண்ட ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் லீனமாகி இருக்கின்றார். பக்தியைக் காட்டிலும் உயர்ந்ததும், ஸுலபமும், த்ருடமுமான சிரேயஸ் ஸாதனம் வேறொன்றுமில்லை என்று அறிந்து, கருணையே உருவமான அவர் தங்கள் வாக்கினாலும் கார்யத்தாலும் அந்த பக்தி மார்க்கத்தை நமக்குக் காண்பித்துக் கொடுத்திருக்கிறார்.

அவர் சில வருஷகாலம் தங்கள் குருநாதரின் அதிஷ்டானத்திலேயே இருந்துகொண்டு அவரை தியானம் செய்வதிலேயே எப்பொழுதும் மூழ்கியிருந்தார். பக்த ஜனங்களை அனுக்ரஹிக்கும்பொழுது, 'குருநாதாள் அருள் புரியட்டும்; ஸ்ரீ சாரதா அனுக்ரஹம் செய்யட்டும்; பகவத்பாதாள் க்ருபை செய்யட்டும்!' என்னும் வார்த்தைகளே அவர் திருமுகத்திலிருந்து வந்துகொண்டிருந்தன. அவருடைய தக்ஷிணதேச ஸஞ்சார

காலத்திலும், இதர காலங்களிலும், அனேக ஜனங்கள் மஹா ஸந்நிதானத்தை தரிசித்து தங்கள் கஷ்டங்களைத் தெரிவித்து, அந்த கஷ்டங்களின் பரிஹாரத்திற்காக அனுக்ரஹத்தையும் ப்ரஸாதத்தையும் கோருவார்கள். அச்சமயத்தில் அவர் கையால் கொடுத்த விபூதியானது அமோகமான ஸஞ்ஜீவினிபோல் அந்த பக்த ஜனங்களின் கிலேசங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிடும். இதன் ரஹஸ்யம் என்ன என்பதை ஓரிரண்டு சமயம் அவர் தமது ஆப்தசிஷ்யர்களிடம் சொல்லியிருக்கிறார். - 'விசேஷமாக மந்திரஜபம் முதலானவைகளைச் செய்து அந்தந்த ஜனங்களின் கஷ்ட பரிஹாரத்திற்காக ப்ரயத்னம் செய்ய நமக்கு அவகாசமிருக்கவில்லை. குருநாதாளின் பாத கமலங்களை க்ஷணகாலம் ஸ்மரித்து விபூதியை கொடுத்துக் கொண்டிருந்தோம். அவ்வளவுதான்! எல்லாம் குருநாதாளின் க்ருபைதான்' - என்று. ஆஹா, எப்பேற்பட்ட வினயம்! எப்பேற்பட்ட குருபக்தி!

இப்பேற்பட்ட லோகோத்தரமான மஹான்கள் உலகத்தில் கிடைப்பது மிகவும் அரிது. எங்கோ யுகத்திற்கு ஒருவர் அல்லது இருவர் உண்டாகலாம். அவ்வளவே!

ஸ்ரீமத் பாகவதத்தில் கர்ப்பஸ்துதியில் ப்ரம்மாதி தேவதைகள் இப்பேற்பட்ட லோகோத்தரமான மஹான்களைப் பற்றிக் கூறுகிறார்கள்.

स्वयं समुत्तीर्य सुदुस्तरं द्युमन् भवार्णवं भीममदभ्रसौहृदाः ।
भवत्पदाम्भोरुहनावमत्र ते निधाय याताः सदनुग्रहो भवान् ॥

ஸ்வயம் ஸமுத்தீர்ய ஸுதுஸ்தரம் த்யுமன்
பவார்ணவம் பீமமதப்ரஸௌஹ்ருதா: ।
பவத்பதாம்போருஹநாவமத்ர தே
நிதாய யாதா: ஸதநுக்ரஹோ பவான் ॥

- பாகவதம் 10-2-31

ஹே ஸ்வயம்ப்ரகாச ஸ்வரூப! அப்பேர்ப்பட்ட மஹான்கள் எல்லா ஜீவர்களிடமும் அத்யந்தம் ஸ்னேகமுடையவர்களாக இருக்கிறார்கள். தாண்டுவதற்கு மிகவும் கடினமான இந்த கோரமான ஸம்ஸார ஸாகரத்தை அவர்கள் தாண்டி, உன் பாதகமலம் என்னும்

தோணியை இங்கேயே வைத்துப் போயிருக்கிறார்கள். நீ பக்தர்களுக்கு மிகவும் அனுக்ரஹம் செய்பவன்.

ப்ரம்மாதி தேவர்களும் நாரதாதி ரிஷிகளும் த்ரிகால ஞானிகள் அல்லவா! முன் நடந்த விஷயங்கள், இனி வரப்போகும் விஷயங்கள், இப்பொழுது நடக்கும் விஷயங்கள் இவை எல்லாவற்றையும் அவர்கள் அறிவார்கள். பின்னால் கலியுகத்தில் நம் மஹாஸந்நிதானம் அவதரிக்கப் போகிறார் என்பதைத் தங்களுடைய ஞானத்ருஷ்டியால் அறிந்து கொண்டுதான் த்வாபர யுகத்தில் தேவகீ அம்மாளின் கர்ப்பத்தில் ஆவிர்ப்பவித்த பரமாத்மாவைப் பார்த்து அவர்கள் இவ்வாறு ஸ்துதி செய்கிறார்கள்.

ஹே த்யுமன் (हे द्युमन्) ஸ்வயம்ப்ரகாச ஸ்வரூபனான பரமாத்மாவே, மஹாஸந்நிதானம் போன்ற மஹான்கள் ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவதற்காக உன் பாத கமலத்தை தோணியாகச் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், பகவானுடைய திருவடியையே தோணியாகச் செய்யும் மஹாமஹிமை பெற்ற இவரையும், இவர் கொண்டு வந்திருக்கும் தோணியையும் பார்த்து ஸம்ஸாரக் கடலே பயப்படுகிறது. ராமாவதாரத்தில் பகவானுடைய கடைக்கண் லேசாகச் சிவந்ததினாலேயே ஸமுத்திர ராஜன் பயந்து நடுநடுங்கி ஓடிவந்தான்; அப்படியிருக்க, இப்பொழுது தங்களுடைய பக்தியால் அந்த பகவானையே வசப்படுத்திக் கொண்டிருக்கும் அப்பேர்ப்பட்ட மஹான்களையும், அவர் கொண்டு வந்திருக்கும் பகவத்பாதகமலத் தோணியையும் பார்த்து ஸம்ஸார ஸாகரம் பயந்து நடுங்குவதில் யாதொரு ஆச்சர்யமும் இல்லை! இவ்விதம் பயந்த ஸம்ஸாரக் கடல் அந்த மஹான்களைப் பொறுத்தவரையிலும் ஒரு சிறிய கன்றுக்குட்டியின் குளம்படியளவு சுருங்கிவிடுகிறது. அதனால் அந்த மஹான்கள் (दुस्तरं) பிறரால் தாண்ட முடியாததும் பயங்கரமுமான இந்த ஸம்ஸாரத்தை கன்றுக்குட்டியின் குளம்படியைத் தாண்டுவதுபோல அனாயாஸமாக தாங்களே தாண்டிவிடுவார்கள். அவர்களுக்கு அந்தத் தோணியை உபயோகப்படுத்தும் தேவையே ஏற்படுவதில்லை. ஸ்வயம் ஸமுத்தீர்ய (स्वयं समुत्तीर्य) தாங்களாகவே தாண்டி, सं उत्तीर्य அனாயாஸமாகத் தாண்டிப் போகிறார்கள்.

சரி, ரொம்ப சந்தோஷம். அவர்கள் கோரமான ஸம்ஸார ஸாகரத்தை அனாயாஸமாகவே தாண்டிப் போகட்டும். இதனால்

ஸம்ஸாரத்தில் திண்டாடிக் கொண்டு இருக்கும் ஸாதாரணமான மூட ஜனங்களுக்கு என்ன பயன்? அந்த மூட ஜனங்களுக்கு ஸம்ஸார ஸாகரம் கோரமாகவும் துஸ்தரமாகவும் (दुस्तरं) தானே இருக்கும்! என்றால் - அவர்கள் கோரமான ஸம்ஸார ஸாகரத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஜனங்களுக்காக அதைத் தாண்டுவதற்கு உதவியாக இருக்கட்டும் என்று எண்ணி பகவானுடைய பாத கமலம் என்கிற அந்தத் தோணியை இங்கேயே விட்டுவிட்டுப் போகிறார்கள். *'பவத்பதாம்போருஹ நாவமத்ர தே நிதாய யாதா:'* (भवत्पदाम्भोरुहनावमत्र ते निधाय याता:) ஏன் அவர்கள் இவ்விதம் செய்கிறார்கள் என்றால் - (अदभ्रसौहृदा:) *'அதப்ரஸௌஹ்ருதா:'* - பிராணிகளிடம் அதிகமான தயை உடையவர்களானதினால் இந்த உயர்ந்த உபகாரத்தைச் செய்கிறார்கள். இந்த கோரமான ஸம்ஸார ஸாகரத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பிராணிகள் இந்தத் தோணியை உபயோகப்படுத்திக் கொள்ளட்டும், இதைக் கொண்டு ஸுலபமாக இந்த கோரமான கடலைத் தாண்டட்டும் என்று பகவானுடைய பாதம் என்கிற தோணியை இங்கேயே வைத்துப் போகிறார்கள். என்ன அபிப்ராயம் என்றால் - 'மிகவும் ஸுலபமும் ஸுகரமுமான பக்தி மார்க்கத்தை அவலம்பித்து ஜனங்கள் ஸம்ஸாரக் கஷ்டத்திலிருந்து விடுதலை அடையட்டும்' - என்று பக்தி மார்க்கத்தை தங்களுடைய செய்கைகளாலும், வாக்கினாலும் காட்டிக் கொடுத்து நமது மஹாஸந்நிதானம் போயிருக்கிறார்கள் - விதேஹ முக்தியை அடைந்திருக்கிறார்கள்.

அதுசரி. ஆனால் பகவானை பக்தியால் ஸந்தோஷப்படுத்தி அவரைக் கேட்டு அவரிடமிருந்து, தாங்கள் இந்த ஸம்ஸார ஸாகரத்தை தாண்டுவதற்காக தோணியைக் கொண்டு வந்தவர், மறுபடியும் அதைக் கொண்டுபோய் பகவானிடம் செலுத்த வேண்டாமா! அதை இங்கேயே விட்டுவிட்டுப் போகலாமா? பகவான் என்னதான் சொல்ல மாட்டார்! - என்றால்; இவ்விதம் ஸந்தேகப்பட வேண்டியதில்லை; सदनुग्रहो भवान् (*ஸதனுக்ரஹோ பவான்*) பக்தர்களிடம் பகவானுக்கு அனுக்ரஹம் பரிபூர்ணமாக உண்டு. அவர்கள் எது செய்தாலும் அது பகவானுக்கு ஸம்மதமே. தனது இச்சையை விட்டாவது பக்தர்களுடைய இச்சையை நிறைவேற்ற அவர் தயாராக இருக்கிறார். பக்தனுடைய இச்சை

தன்னுடைய இச்சைக்கு விரோதமாக இருந்தாலும் பக்தனுடைய இச்சையையே நிறைவேற்றுவார்; தன் இச்சையை விட்டுவிடுவார். பாரத யுத்தத்தில் ஆயுதத்தைப் பிடிக்கக் கூடாது என்பது பகவானுடைய இச்சை. பகவானை ஆயுதத்தை எடுக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்பது பக்த சிரோமணியான ஸ்ரீ பீஷ்மாசார்யாரின் இச்சை. இவ்விரண்டிற்குள் பீஷ்மாசார்யாரின் இச்சையே நிறைவேறிற்று. பகவதிச்சை பலிக்கவில்லை!

பக்தர்களிடம் பகவானுக்கு இருக்கும் அபாரமான வாத்ஸல்யத்தை ஸ்ரீ துளசிதாஸர் ஓரிடத்தில் மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிறார்.

प्रभु तरुतर कपि डार पर ते किए आपु समान ।
तुलसी कहूँ न राम से साहिब सील निधान ॥

ப்ரபு தருதர கபி டார பர தே கிஏ ஆபுஸமான ।
துளஸீ கஹூ ந ராம ஸே ஸாஹிப ஸீல நிதான ॥

(துளஸிதாஸ் ராமாயணம் பால. தோஹா 29)

கிஷ்கிந்தையிலிருந்து ராமர் ராவணனுடன் போராடுவதற்காக கபிசைன்யத்துடன் லங்காபிமுகமாகக் கிளம்பினார். இடைஇடையே களைப்பாறுவதற்காக கொஞ்ச நேரம் ராமர் மரத்தின் அடியில் உட்கார்ந்து கொள்வார். அச்சமயம் குரங்குகள் மரத்தின் மேல் ஏறி வாலைத் தொங்கப்போட்டுக் கொண்டு கிளைகளில் உட்கார்ந்து கொள்ளும். இது எவ்வளவு அனுசிதமான கார்யம்! ப்ரபு (யஜமானன்) கீழே உட்காருவது; தாங்கள் மேலே கிளைகளில் உட்காருவது! அதுவும், வாலைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்காருவது! இது மிகவும் வெறுக்கத்தக்க நடவடிக்கைதான். இருந்தாலும் தன்னிடம் பக்தியுடையவர்களாக தன் கைங்கர்யத்திற்காக கிளம்பியிருப்பதினால் ராமர் அவர்கள் எல்லோரையும் கௌரவித்து தனக்கு ஸமமாக பாவித்தார். தன்னைக் காட்டிலும் உயர்ந்த ஸ்தானத்திலேயே அவர்களை உட்கார்த்தினார். ஸ்ரீ துளஸிதாஸர் சொல்லுகிறார் - 'ராமரைக் காட்டிலும் சீலவானான, பக்தானுக்ரஹியான யஜமானன் வேறே ஒருவர் உண்டா!' என்று.

இவ்விதம் பக்தர்களின் அபீஷ்டம் தன் இச்சைக்கு ப்ரதிகூலமாக இருந்தாலும் அவர்களின் இஷ்டத்தையே

நிறைவேற்றும் ப்ரபுவானவர், பக்தர்களின் அபீஷ்டம் தன் இச்சைக்கு அனுகூலமாகவே இருந்தால் அதை நிறைவேற்ருமல் இருப்பாரா! 'உலகத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஜனங்களின் உதவிக்காக ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்; பவ ஸாகரத்தைத் தாண்ட அவர்களுக்கு ஒரு வழியைக் காட்டிக் கொடுத்துப் போக வேண்டும்' - என்று எண்ணி மஹா ஸந்நிதானத்தைப் போன்ற பக்தர்கள் பகவானுடைய பாதகமலம் என்னும் தோணியை இங்கேயே வைத்துவிட்டுப் போனுல், அது பகவானுக்கு ஸம்மதமேயல்லாமல் வேருென்றுமல்ல! இந்த அபிப்ராயத்தையே (ஸதனுக்ரஹோ பவான்) सदनुग्रहो भवान् என்னும் பதத்தினுல் ப்ரம்மாதி தேவதைகள் சூசனம் செய்கிருர்கள்.

இவ்விதம் நம் மஹாஸந்நிதானம் பக்தி என்னும் தோணியை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிருர். இனி தோணியில் ஏறி க்ஷேமமாக ஸம்ஸாரக் கடலேத் தாண்டுவதோ அல்லது ஏருமலிருப்பதோ எல்லாம் நமது முயற்சியைப் பொறுத்து இருக்கிறது.

மஹாஸந்நிதானத்தின் விஷயமாக அனேகர் அனேகவிதமாகச் சொல்வதுண்டு. அவருக்கு பைத்தியம் பிடித்திருந்தது (शान्तं पापं, शान्तं पापम्) என்று சொல்பவர் சிலர். அவர் பைத்தியம் பிடித்தவர்போல் நடித்துக் கொண்டிருந்தார் என்று சொல்பவர் சிலர். அவர் உன்மனீ-மனேன்மனீ நிலேகளில் இருந்துகொண்டிருந்த உத்தம யோகிகளாக இருந்தார் என்பவர் சிலர். இவ்விதம் பலர் பலவிதமாக அவர் வாழ்க்கையை 'மிகவும் தெரிந்தவர்கள்போல்' விமரிசனம் பண்ணுகிருர்கள். இவ்விதமே அவருடைய மஹா ஸமாதியைப் பற்றியும் பலவிதமான ஊஹங்களேச் செய்கிருர்கள். அவர் ஜல ஸமாதியை அடைந்தார் என்று சிலரும்; அது தற்செயலாக நேர்ந்தது என்று சிலரும் தங்களுடைய ப்ராரப்த சேஷம் முடிந்தது என்பதை அறிந்த மஹா யோகிகளான அவர் அந்த க்ஷணத்திற்கு சரியாக ஜலத்தில் இறங்கி, பத்மாஸனம் போட்டுக்கொண்டு, ப்ராணுயாமத்தினுல் ப்ராணனே நிரோதம் செய்து ப்ரம்மரந்திரத்தைப் பிளந்துகொண்டு பாஞ்சபௌதிகமான உபாதியை தீர்த்தத்தில் தள்ளிவிட்டார் என்று சிலரும் - கூறுகின்றனர்.

நம்மைப் பொறுத்தவரையில் சொல்வதானல் - அவர்களுடைய ஜன்மம், நிர்யாணம் இவைகளுடைய விமர்சகர்களாகி இவ்விதம் ஊஹாபோஹங்களைச் செய்துகொண்டு போவது வீணே. இதனல் காலஹரணம் ஏற்படுகிறதேயல்லாமல் வேறு யாதொரு ப்ரயோஜனமும் இல்லை. அவர்களுடைய ஒரு கடைக்கண் பார்வையின், ஒரு மந்தஹாஸத்தின், ஓர் இனிமையான அபய வசனத்தின், ஓர் உபதேச வார்த்தையின் - வைபவத்தையும் மஹிமையையும் ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனும் வர்ணிக்க ஸமர்த்தனுவானு! அப்பேர்ப்பட்ட மஹாமஹிமை வாய்ந்தவரின் செய்கைகள் எல்லாம் அல்ப புத்திகளின் புத்திக்கு எட்டுமா! அப்பேற்பட்ட மஹான்களுடைய செய்கைகளின் குணதோஷங்களை நியாயாதிபதி (Judge) போல உட்கார்ந்துகொண்டு விமர்சிப்பதற்காவது நிர்ணயிப்பதற்காவது நாம் யார்! ஸாதாரண மஹிமை பெற்றவருடைய செய்கையே ப்ராக்ருத புத்திக்கு எட்டுவதில்லை.

शकुनीनामिवाकाशे जले वारिचरस्य च ।
पदं यथा न दृश्येत तथा ज्ञानवतां गतिः ॥

சகுனீனுமிவாகாசே ஜலே வாரிசரஸ்ய ச ।
பதம் யதா ந த்ருச்யேத ததா ஞானவதாம் கதி: ॥

(பக்ஷிகள் வானத்தில் பறந்து போகும் மார்க்கம் எவ்விதம் கண்ணிற்குத் தெரிவதில்லையோ; ஜலத்தில் ஜல ஜந்துக்கள் ஸஞ்சரிக்கும் மார்க்கம் எவ்விதம் நமக்கு காண்பதில்லையோ அவ்விதமே ஞானிகளின் செய்கைகளையும் நம்மால் அறிவது அஸாத்யம்.)

இப்படி இருக்கும்பொழுது மஹாமஹிமை வாய்ந்த மஹாஸந்நிதானத்தின் செய்கை எல்லாவற்றையும் நாம் அறிந்துகொள்ள முடியுமா! யாருக்கு அதை அறிய ஸாமர்த்தியம் இருக்கிறது என்ற எண்ணமுண்டோ, யாருக்கு இந்த விசாரத்தைக் குறித்து விமர்சனம் செய்வதில் அபிருசி உண்டோ, அப்பேர்ப்பட்ட 'புத்திமான்கள்' அவ்விதம் செய்துகொள்ளட்டும். நாம் மட்டும் ப்ரஹ்மா, ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவைக் குறித்துச் சொன்ன ஒரு வார்த்தையை மறுபடியும் சொல்லலாமே ஒழிய அதைக் காட்டிலும் அதிகமான ஸாமர்த்தியம் நமக்கு இல்லை.

जानन्त एव जानन्तु किं बहूक्त्या न मे प्रभो ।
मनसो वपुषो वाचो वैभवं तव गोचरः ॥

ஜானந்த ஏவ ஜானந்து கிம் பஹூக்த்யா ந மே ப்ரபோ ।
மனஸோ வபுஷோ வாசோ வைபவம் தவ கோசர: ॥

- பாவகதம் 10-14-38

''ஹே, ப்ரபோ, யார் உன் மஹிமையை 'நாம் அறிந்திருக்கிறோம்' என்று அபிமானத்துடன் பேசுகிறார்களோ, அவர்கள் தெரிந்து கொள்ளட்டும்; பேசிக் கொள்ளட்டும். அவர்களை நிந்திப்பதினால் யாதொரு ப்ரயோஜனமுமில்லை. அதிகம் பேசுவானேன்! என் மனதிற்காவது, வாக்கிற்காவது, உடலிற்காவது த்ரிகரணங்களில் எதற்கும் - உன் மஹிமையை அறியும் ஸாமர்த்தியம் இல்லை.''

ஆனால் ஒன்று மட்டும் நான் தீர்மானமாகவும் தைர்யமாகவும் சொல்லமுடியும். அதுவும் ப்ரஹ்மா ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவைக் குறித்து சொல்லியிருக்கும் வாக்குதான் -

तत्तेऽनुकम्पां सुसमीक्षमाणो भुञ्जान एवात्मकृतं विपाकम् ।
हृद्वाग्वपुर्भिर्विदधन्नमस्ते जीवेत यो मुक्तिपदे स दायभाक् ॥

தத்தேऽநுகம்பாம் ஸுஸமீக்ஷமாணோ
புஞ்ஜாந ஏவாத்மக்ருதம் விபாகம் ।
ஹ்ருத்வாக்வபுர்பிர்வித தந்நமஸ்தே
ஜீவேத யோ முக்திபதே ஸ தாயபாக் ॥

- பாவகதம் 10-14-8

'பகவத் ஸ்வரூபமான ஸத்குருநாதருடைய க்ருபை இன்றைக்கு கிடைக்கும் நாளைக்குக் கிடைக்கும்' - என்று அதையே ஒரே நோக்கமாக சாதகப் பக்ஷிபோல எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் லௌகிகப் பொருள்கள் நமக்குக் கிடைப்பதற்கு மிகுந்த காலதாமதமானால், அப்பொழுது நமக்கு உத்ஸாஹம் குன்றி, க்ரமேண ஆசையும் குறைந்துவிடும். ஆனால் பகவத் க்ருபையையும், குரு க்ருபையையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் காலம் ஆக ஆக பக்தி தீவிரமாகும். இச்சை இன்னும் அதிகமாகும். நிராசை உண்டாவதே இல்லை. சபரி

தினந்தோறும் 'இன்று ராகவன் வருவார்; இன்று வராமலிருந்தால் நாளைக்குக் கட்டாயம் வருவார்' என்று தன் குடிசையை தினமும் பெருக்கி மெழுகி கோலமிட்டு கிழங்கு பழம் இவைகளைத் தயார் செய்து அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி பாதையில் கொஞ்சதூரம் வரை சென்று ராமர் வருகிறாரோ என்று பார்த்துக் கொஞ்சநேரம் அங்கு நின்று கொண்டிருந்துவிட்டுப் பிறகு திரும்பி வருவாள். மறுபடியும் போவாள். பழுத்த இலை முதலானவைகளின் சலசல என்ற சப்தத்தைக் கேட்டால் ராகவன்தான் வந்துவிட்டாரோ என்று ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வருவாள். இவ்விதம் ஸாயங்காலம் வரை எதிர்பார்த்து ராமர் வராமலிருந்தால், 'இன்றைக்கு ராமர் வரவில்லை; நாளைக்குக் கட்டாயம் வந்துவிடுவார்', என்று நினைத்துக் கொள்வாள். இவ்விதம் ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல, எவ்வளவோ வருஷங்கள் கழிந்துவிட்டன. ஆனால் அவளுக்கு நிராசை ஏற்படவில்லை. கொஞ்சமும் உத்ஸாஹம் குறையவில்லை. மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே வந்தது. குருவான மதங்க மஹரிஷியின் வாக்கில் அவளுக்கு த்ருடமான நம்பிக்கை இருந்தது. 'ராமர் நிச்சயம் வருவார். என்னுடைய பூஜா ஸத்காரத்தை அவசியம் ஏற்றுக் கொள்ளுவார்' என்ற நிச்சயத்துடனும் தீவிரமான பக்தியுடனும் ராமரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இதுபோலவே தண்டகாரண்யத்தில் வஸித்து வந்த மஹரிஷிகளெல்லோரும் எவ்வளவோ காலமாக ராமரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர்களுக்கு நிராசை ஏற்படவேயில்லை. தினந்தோறும் அவர்களுடைய பக்தி அதிகமாகிக் கொண்டே வந்தது. இதுபோலவே நாமும் பகவத் கிருபையையும் குரு கிருபையையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்விதம் எதிர்பார்த்துக் கொண்டு தான் செய்திருக்கும் புண்ய பாபங்களின் பலன்களான ஸுகதுக்கங்கள் வந்து சேரும்பொழுது ஸமமான பாவத்துடன் அவைகளை அனுபவிக்க வேண்டும். ஸுகம் வரும்பொழுது பெருமிதம் அடையக் கூடாது. துக்கம் வந்த சமயம் வருந்தக்கூடாது. மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும் ஈசுவர ஸ்வரூபமான ஸத்குருநாதரை நமஸ்காரம் செய்ய வேண்டும். ஹிருதயத்தில் அவர் ஸ்வரூபத்தை நிரந்தரமாக த்யானம் செய்துவர வேண்டும். வாக்கால் அவரது குணகணங்களை கானம் செய்யவேண்டும். அவர் சரித்திரத்தையும், அவர் செய்திருக்கும்

'பாதாவலம்பன ஸ்துதி' முதலான ஸ்தோத்திரங்களையும் சொல்ல வேண்டும். சரீரத்தினால் நமஸ்காரத்தையும் சுச்ரூஷையையும் செய்ய வேண்டும். இவ்விதம் செய்துகொண்டு வந்தால் மோக்ஷத்திற்காக வேறு யாதொரு தனி முயற்சியும் செய்ய வேண்டிய அவசியமே இல்லை! பிதாவின் சொத்திற்கு புத்திரன் எவ்விதம் வாரிசு ஆகிறானோ அவ்விதமே இவனும் மோக்ஷத்திற்கு வாரிசு ஆவான். லோகமான்யதிலகர் Swaraj is my Birth Right (சுதந்திரம் எனது பிறப்புரிமை) என்று சொன்னமாதிரி மோக்ஷம் என் பிறப்புரிமை என்று சொல்லலாம். அதாவது குருபக்தி ஒன்று இருந்தாலே போதும். அதனால் குருவின் கிருபையும், அதனால் ஞானமும், அதனால் மோக்ஷமும் தானாகவே ஏற்படும். நிச்சயம் ஏற்படும்.

குருகிருபையே மோக்ஷத்திற்கு மூல ஸாதனம். குரு கிருபை இருந்தால் மோக்ஷம் கைவசமான மாதிரிதான்.

ध्यानमूलं गुरोर्मूर्ति पूजामूलं गुरोः पदम् ।
मन्त्रमूलं गुरोर्वाक्यं मोक्षमूलं गुरोः कृपा ॥

நம் மஹாஸந்நிதானத்தின் பாதபத்மம் கிருபா ரஸத்தால் நிரம்பியிருக்கிறது. அந்த கமலத்தை ஸேவித்த வண்டுகளில், இதுவரை ஒன்றுவது திருப்தியடையாமல் வேறிடம் செல்லவில்லை. எல்லாம் பூர்ணாநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. ஆகையால் ஏ, என் மனம் என்னும் வண்டே, வேறிடம் அலைந்து ஏன் ஆயாஸப்படுகிறாய்? க்ருபா ரஸத்தால் நிரம்பியிருக்கும் அந்த ஸ்ரீ ஜகத்குரு நாதரின் பாதகமலத்தை அடைந்து,ஆயாஸத்தை நீக்கி, அந்த புஷ்பரஸத்தை பானம் செய்துகொண்டு ப்ரஹ்மானந்தத்தை அநுபவிப்பாயாக.

स्थितेऽनुकम्पामकरन्दपूर्णे जगद्गुरोः पादसहस्रपत्रे ।
किमन्यतो धावसि चित्तभृङ्ग प्रयाहि तत्रैव रमस्व नित्यम् ॥

उपाहृतेयं गुरुपादमूले कृतिर्विनेयेन सभक्तिकेन ।
मनोविशुद्ध्यै दृढभक्तिसिद्ध्यै ममास्तु विश्वेश्वर त्वत्प्रसादात् ॥

4

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

''அருள் தீக்ஷை''

(சில மஹநீயர்களுக்கு அண்டினவர் மனதைக் கவரும் சக்தி மட்டும் இருக்கும். மற்றும் சில மஹான்களுக்கு அருள் பார்வையாலேயே தம்மிடம் அணுகிய சீடனைத் தம்மைப் போலவே ஞானப்பொன் ஆக்கிவிடும் சக்தியும் உண்டு. ஸ்பர்சமணி தன்னிடம் ஒட்டிய இரும்பைத் தங்கமாக்குமே தவிர ஸ்பர்சமணியாக்காது. இந்தத் தங்கத்தைக் கொண்டு மற்றோர் இரும்பைத் தங்கமாக்க முடியாது. ஆசார்யனோ தன் சிஷ்யனையும் தன்னைப்போல் ஆசார்யனாக்கிவிடுவான். இவனும் மற்றோர் சிஷ்யனைக் கைதூக்கி விடுவான். இந்த வகையைச் சேர்ந்தவர்கள் நம் மஹாஸ்வாமிகள் என்பதை மஹானான ஒரு ஸந்யாஸியின் அநுபவம் நன்கு காட்டுகிறது. அவர் பால்யத்தில் ஆங்கிலம் படித்து உத்யோகத்திலமர்ந்தவர். பின்பு ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் கருணையால் பந்தங்களிலிருந்து விடுபட்டுப் பரமஹம்ஸராகி இமயத்திலும் கங்காதீரங்களிலும் ஸஞ்சரித்து வந்தார். இத்துறவி தன் உயர்ந்த அனுபவங்களில் சிலவற்றை இங்கு கூறியிருக்கிறார்.)

கருணாநிதியாகிய நம் ஆசார்யர் (ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்) 1924-ம் வருஷம் மைசூரில் ஸம்ஸ்கிருத பாடசாலையில் தங்கியிருந்த பொழுது இவருக்கு அவர்களைச் சந்திக்கும் பாக்யம் கிடைத்தது. பல்லாயிரம் பக்தர்களுக்குத் தீர்த்தப் பிரஸாதம் வழங்கிக் கொண்டிருந்த ஸ்வாமிகள் இவரிடம் மட்டும் சில வார்த்தைகள் பேசினதும் அதிருஷ்டவசத்தால்தான். ஒவ்வொருவராக தீர்த்தப் பிரஸாதம் வாங்கிக்கொண்டிருக்கும்

கூட்டத்தில் நின்ற இவர் தன் முறை வந்தபோது தீர்த்தப் பிரசாதம் வாங்க ஸ்வாமிகளின் முன்போய் நின்ருர். ஸ்வாமிகளின் முகத்தை மிகுந்த பயபக்தியோடு பார்த்துக் கொண்டிருந்த இவர், அங்கிருந்து நகரச் சிறிது தாமதமாயிற்று. அடுத்தவர் காத்திருந்தார். அப்போது ஸ்வாமிகள் இவரை நோக்கி, ''உன் பெயர் என்னப்பா?'' என்று கேட்டார்கள். இவர் தன் பெயரைச் சொன்ஞர். ''நன்ருகப்படி'' என்று ஆசீர்வதித்த ஸ்வாமிகள் மறுபடியும் இவரைப் பார்த்து, ''நீ சிருங்ககிரிக்கு வரமுடியுமா?'' என்று அன்போடு கேட்டார்கள். முடியும் என்பதற்கு அறிகுறியாக இவர் தலையை ஆட்டினுர். பிறகு இவர் நகரும் சமயத்தில், ''இந்தச் சிறுவனை நன்ருகக் கவனித்துக் கொள்ளுங்கள்; நல்ல அறிகுறிகள் இவனிடம் காணப்படுகின்றன'' என்று ஸ்வாமிகள் அங்கிருந்தவர்களைப் பார்த்துச் சொன்ஞர்கள். ஸாதாரணமாக ஸ்வாமிகள் யாரிடமும் பேசுவதில்லை. சிலரைப் பார்த்துத் தலையாட்டுவார்கள். சிலரைப் பார்த்து லேசாகச் சிரிப்பார்கள். ஆனுல் இந்தச் சிறுவேேடு இவர் இவ்வளவு பேசியதைக் கண்ட ஜனங்கள் வியப்படைந்தார்கள்.

1939-ல் பெங்களூர் ஸ்ரீசங்கரமடத்தில் ஸ்ரீ சாரதா தேவியின் பிரதிஷ்டைக்காக ஸ்வாமிகள் வந்திருந்தார்கள். அப்போது இவரும் ஸ்வாமிகளின் தரிசனத்துக்குப் போயிருந்தார். பக்தர்களின் பெருங் கூட்டத்துக்கிடையே எங்கேயோ நின்ற இவரை ஸ்வாமிகளின் அருட் பார்வை கண்டுபிடித்து விட்டது. ஸ்வாமிகள் இவரைத் தம் அருகே வரும்படி அழைத்து வெகு கருணையோடு இவருடைய க்ஷேம லாபத்தை விசாரித்தார்கள். பிறகு இவரைப் பார்த்து, ''நீ கீதை படித்திருக்கிருயா?'' என்று அன்பொழுகக் கேட்டார்கள். ''நான் முழுவதும் படித்ததில்லை; இரண்டோர் அத்தியாயங்கள் மட்டும் படித்திருக்கிறேன்'' என்று இவர் பதில் சொன்ஞர்.

பிறகு ஸ்வாமிகள் பின்வரும் இரண்டு சுலோகங்களையும் சொல்லி, ''இந்த இரண்டும் உனக்குத் தெரியுமா?'' என்று இவரைக் கேட்டார்கள்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात् परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥

ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி ।
ப்ராமயன் ஸர்வபூதாநி யந்த்ராரூடானி மாயயா ॥

தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத ।
தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி
ஶாஶ்வதம் ॥

(பகவத் கீதை 18-61, 62)

தமக்குத் தெரியாது என்று இவர் பதில் சொன்னார். உடனே ஸ்வாமிகள் இந்த சுலோகங்களைச் சொல்லிக் கொடுத்து இவரைக் கொண்டும் சொல்லச் சொன்னார்கள். பிறகு இவரிடம், ''காலையில் எழுந்திருந்தவுடன் மூன்று தடவையும், இரவில் படுக்கப் போகும்போது மூன்று தடவையும் இந்த சுலோகங்களை நீ சொல்ல வேண்டும்'' என்று ஸ்வாமிகள் கருணையோடு நியமித்தார்கள். ''இதுவே ஒவ்வொரு நாளும் உன் முதல் வேலையாகவும் கடைசி வேலையாகவும் இருக்கட்டும்'' என்றும் அவர்கள் பணித்தார்கள். இப்படியாக ஸ்வாமிகள் வாக்கால் முதல் உபதேசத்தைப் பெறும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது.

அச்சமயம் ஸ்ரீ ஸ்வாமிகள் பெங்களூரில் சில நாள் தங்கியிருந்தார்கள். அப்போது ஒரு நாள் இவர், தாம் துறவியாக வாழ விரும்புவதாக ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார். இவர் இப்படிக் கேட்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று: இவர் மனம் இயற்கையாகவே துறவை நாடியது. இரண்டாவது : இவர் தம் தாய்க்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற விரும்பினார். இவருடைய தாய் செல்வத்தாலும் அந்தஸ்தாலும் உயர்ந்திருந்த போதிலும் தெய்வபக்தியையும் எளிய வாழ்க்கையையுமே மேற்கொண்டவர்.

இவருடைய சிறு வயதில் ஒரு ஸமயம் இவர் வீட்டில் ஒரு பண்டிதர் ஸ்ரீராமாயணம் பிரவசனம் செய்தார். இவர் பாட்டி ஸ்ரீ சங்கர விஜயப் பிரவசனம் கேட்பதில் வெகு ஆசையோடு இருந்தாள். எனவே ராமாயணப் பிரவசனம் முடிந்ததும் தொடர்ந்து சிலநாளைக்குச் சங்கர விஜயப் பிரவசனம் நடந்தது. இந்தப் பிரவசனம் இவர் மனத்தை அப்படியே கவர்ந்து விட்டது. ஸ்ரீ சங்கர பகவத்பாதருடைய வாழ்க்கை வரலாற்றை இவ்வளவு விரிவாக

இவர் கேட்பது இதுவே முதல் தடவை. வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இவருடைய இளம் மனத்தில் அப்படியே வேரூன்றி விட்டது. ஒவ்வொரு நாளும் ஸாயங்காலம் இவருடைய தாயார் இவருக்குத் தலை பின்னும்போது பகவத்பாதரவர்களுடைய வரலாறு ஸம்பந்தமான சில கேள்விகளை இவர் தம் தாயிடம் கேட்பார். ஒரு நாள் இவர் தாயார் ஸ்ரீ பகவத்பாதரவர்களுடைய வரலாற்றின் ஒரு பகுதியை இவருக்கு விளக்கிக் கொண்டிருந்தபோது, தாயாரின் கண்களிலிருந்து குபு குபுவென்று நீர் பெருகி வழிந்தது. ''ஏனம்மா அழுகிறாய்?'' என்று இவர் கவலையோடு தம் தாயாரைக் கேட்டார். ''நான் அழவில்லை அப்பா! மஹானாகிய சங்கரபகவத்பாதரவர்களின் தாயாகிய ஆர்யாம்பாளையும் அவர் பெற்ற பரம பாக்கியத்தையும் நினைத்துப் பார்த்தேன். என்னை அறியாமலே என் கண்களில் நீர் வழிகிறது'' என்று மிக உருக்கமாக இவர் தாயார் கூறினாள். ''எனக்கும் பகவத்பாதர் மாதிரி ஒரு குமாரன் கிடைக்க மாட்டானா? என்ற ஏக்கம் என் நெஞ்சில் இருக்கிறது'' என்றார்கள் அந்த மங்கையர்க்கரசி. இவர் அப்போது வயதில் மிக இளையவர். என்றாலும் இவர் ''அம்மா! இதற்காகவா கவலைப்படுகிறாய்? உன் மனம் குளிர்வதற்காகவே நான் ஸந்யாசியாக வாழ்வேன்'' என்று உறுதியோடு கூறினார். ''நிஜமாகவா அப்பா! நீ அப்படிச் செய்வாயா, அப்பனே!'' என்று இவர் தாயார் வெகு அன்போடு இவரைத் தழுவி உச்சி மோந்தபடி கேட்டார்கள். ''நிச்சயமாக அம்மா! அந்த வாழ்க்கையில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அது மிகவும் இன்பமான வாழ்க்கை'' என்று இவர் பதில் சொன்னார். மனம் நிரம்பிய இவர் தாயார் இவரைத் திரும்பவும் அணைத்து மகிழ்ந்தார்கள். இவர், தாம் தம் தாய்க்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற விரும்பினார். இந்த ஸம்பவங்களையெல்லாம் இவர் நம் ஸ்வாமிகளிடம் எடுத்துச் சொன்னார். இதைக் கேட்டு ஸ்வாமிகள் அவருக்கே உரிய தனிப்பாணியில் புன்முறுவல் பூத்த முகத்துடன் கையால் அபயமுத்திரையைக் காட்டியபடி ''நல்லது, இருக்கட்டும்; பார்ப்போம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இதற்குப் பிறகு ஒவ்வொரு வருஷமும் ஒருமுறையாவது இவர் சிருங்ககிரிக்குப் போய் குருநாதருடைய ஆசீர்வாதத்தையும் உபதேசங்களையும் பெற்று வருவார். குருநாதர் காலடியில் இருந்தபோது ஒருமுறை இவர் அங்கே சென்றார். குருநாதருடைய

அனுமதி பெற்று 1940-திலோ, 1941-லோ இவர் காசி, ஹரித்வாரம், ஹ்ருஷீகேசம் முதலிய திவ்ய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வந்தார்.

1942-ல் இவர் மூன்று முறை சிருங்ககிரிக்குச் சென்றார். ''அப்பா, உனக்கு மானஸ பூஜை செய்யும் முறை தெரியுமா?'' என்று ஒரு ஸமயம் குருநாதர் இவரைக் கேட்டார். ''எனக்கு அந்த முறை தெளிவாகத் தெரியாது; அரைகுறையாக அதைப் பற்றிய சில கருத்துக்கள் மட்டும் எனக்கு உண்டு'' என்று மிகப் பணிவோடு இவர் சொன்னார். உடனே குருநாதர் இவருக்கு அந்த முறையை நன்கு விளக்கினார்.

''அப்பா! எவ்வளவு பணம் காசு கொடுத்தாலும், வேறு எந்த வகையாலும் இந்த உலகம் முழுவதிலும் பெற முடியாத வஸ்திரங்கள், ஆபரணங்கள், மலர்கள், பழங்கள், தூபம், தீபம் நைவேத்யம் இவைகளை எல்லாம் மானஸிகமாக நாம் நம் ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்ய முடியும். இந்தப் பொருள்களைப் பெறுவதற்காக நாம் அங்கும் இங்கும் ஓடவேண்டிய அவசியமும் இல்லை. பூஜாத் திரவியங்களைச் சேகரிப்பதற்கு உடல் முயற்சியே கொஞ்சமும் தேவையில்லை. ஒரு சக்கரவர்த்தியால் பெற முடியாத அருமையான பூஜாத் திரவியங்களை மனத்தால் சிருஷ்டித்துக் கொள்ள முடியும். சில சில காலங்களில் மட்டும் கிடைக்கும் பழங்களையும் மலர்களையும் நாம் மனத்தால் எல்லாக் காலங்களிலும் சிருஷ்டித்து ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்ய முடியும். கற்பக மலர்களையும் பாரிஜாத மலர்களையும் விட மணமும் அழகும் மிக்க மலர்களை மனத்தால் சிருஷ்டித்து அர்ப்பணம் செய்ய முடியும். கௌஸ்துபத்தைவிட மிகச் சிறந்த நவரத்னங்கள் பதித்த ஆபரணங்களை நாம் மனத்தால் சிருஷ்டித்து ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்ய முடியும்'' என்றெல்லாம் ஸ்வாமிகள் விளக்கினார்.

''சரி, ஆனால் மனத்தால் கற்பனை செய்யும் இந்தப் பூஜாத்திரவியங்கள் வெறும் கற்பனைப் பொருள்கள்தானே. உண்மைப் பொருள்கள் அல்லவே!'' என்றார் இவர்.

''நீ கேட்பது சரியான கேள்விதான் அப்பா! ஆனால் உலகத்தில் உண்மை என்று நீ நினைக்கும் இந்தப் பொருள்களும் வாஸ்தவமாகப்

பார்த்தால் கற்பனைப் பொருள்கள்தானே. இரண்டுக்கும் அதிக வித்தியாஸம் ஒன்றும் இல்லையே'' என்று ஸ்வாமிகள் தெளிவுபடுத்தினர்.

இந்த விஷயங்களை ஸ்வாமிகள் தமக்கே இயல்பான எளிய முறையில் உணர்ச்சியைக் கிளரும் வகையில் தெளிவாக உபதேசித்தார்கள். சுமார் பத்து நிமிஷ காலம் இந்த மானஸ பூஜா கல்ப உபதேசம் அருள் மொழிகளால் நடந்தது. இவர் அந்த உபதேசங்களைப் பெற்று பக்தியால் ஆனந்தபரவசரானர்.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் இந்தப் பக்தருக்கு மானஸபூஜையின் மஹிமைகளை விவரித்துவிட்டு அதை விளக்க ஒரு கதையையும் கூறினர். அதாவது - ''ஒரு பிராம்மணர் ஒரு நாள் காலை தமது ஸ்நானத்தையும் ஸந்தியாவந்தனத்தையும் காவேரியில் முடித்துக்கொண்டு கரையில் இருந்த ஓர் அரசமரத்தடித் திண்ணையில் வந்து உட்கார்ந்து வழக்கம்போல் தம் மானஸ பூஜையை செய்யத் தொடங்கினர். அவர் மானஸிகமாகத் தம் இஷ்ட தேவதையின் அபிஷேகத்தை முடித்துவிட்டு அலங்காரத்தைத் தொடங்கிச் செய்துகொண்டு வந்தார். தம் இஷ்ட தேவதையின் தலையில் ஜாஜ்வல்யமான ஒரு ரத்ன கிரீடத்தைச் சூட்டினர் பக்தர். பிறகு நவரத்னஹாரம் ஒன்றை ஸ்வாமியின் கழுத்தில் போட முயன்ருர். ஆனுல் கிரீடம் பெரியதாக இருந்தபடியால் ஹாரத்தைப் போட முடியவில்லை. ஐந்தாறு முறை முயன்றும் ஹாரத்தைப் போட முடியவில்லை. அவர் சற்றுக் கவலையோடு தயங்கினர்.

அதே சமயத்தில் அந்த அரசமரத்தடியில் வேருெரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு பரம பக்தரான மஹான் பாராயணம் செய்து கொண்டிருந்தார். இந்தப் பக்தர் படும் அவஸ்தையைத் தம் மனத்தால் உணர்ந்து அவர், இந்தப் பிராம்மணரைப் பார்த்து ''நாராயண ஸ்வரூப'' என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டு ''கிரீடத்தை எடுத்துவிட்டு, ஹாரத்தைச் சாத்துங்கள். பிறகு கிரீடத்தைச் சூட்டுங்கள்'' என்ருர்.

அந்தப் பிராம்மணர் அப்படியே திகைத்துச் சிலையாகி விட்டார். ''என் மனத்தில் நிகழும் பூஜை இந்த மஹாத்மாவுக்கு எப்படித் தெரிந்தது'' என்று ஒரே ஆச்சரியம். பிறகு அவர் உபதேசப்படியே

செய்து பூஜையை முடித்துக் கொண்ட பிராம்மணர் மரியாதையோடு அந்த மஹாத்மாவை நெருங்கி ''ஸ்வாமி, நான் இந்தச் சாதனையில் மேன்மேலும் முன்னேற வழிகாட்ட வேண்டும்'' என்று வேண்டினுர். பிறர் மனத்தில் உள்ளதை அறியும் சக்தி, தமக்கு இந்த மானஸ பூஜையினுல் கிடைத்ததாக அந்த மஹாத்மா பிராம்மணரிடம் சொன்னுர். அந்த மஹாத்மாவிடமிருந்து மானஸ பூஜை ஸம்பந்தமான சில உபதேசங்களேப் பெற்று அந்தப் பிராம்மணர் அப்படியே நடந்து தம் இஷ்ட தேவதையின் ஸாக்ஷாத்காரத்தையும் அதனுல் திவ்ய ஞானத்தையும் பிறகு மோக்ஷத்தையும் அடைந்தார்.

எனவே சுலபமாகவும் வெகு விரைவிலும் தத்வ ஞானம் பெற மானஸிக பூஜையைப் போன்ற சிறந்த ஸாதனம் வேருென்றும் இல்லே என்று குருநாதர் இவரிடம் சொன்னுர்கள்.

மறுநாள் பிரதோஷம். ஆனுல் பிரதோஷம் என்பது இவருக்குத் தெரியாது. அன்று மத்தியானத்திற்கு மேல் துங்கா நதியில் ஸ்நானம் செய்துவிட்டுப் பிறகு தனியாகவே கால் போன போக்கில் ஒரு லட்சியமும் இல்லாமல் நடந்து சென்ற இவர், எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டு பக்கத்துக் குன்றின்மேல் இருந்த காலபைரவர் கோயிலே அடைந்தார். அங்கே போக வேண்டும் என்று இவர் நினேக்கவே இல்லே. கோயில் பூட்டியிருந்தது. என்ன காரணத்தாலோ கோயில் பூட்டுத் திறந்திருக்கிறதா என்று இழுத்துப் பார்த்தார் இவர். அது சரியாகப் பூட்டப்படாமல் இருந்ததால் இழுத்தவுடனே திறந்துகொண்டது. கதவைத் திறந்து உள்ளே சென்ற இவர் பலமுறை காலபைரவரை நமஸ்கரித்தபிறகு ஒரு மூலேயில் உட்கார்ந்து கொண்டார். பிறகு சிவபெருமானேயும் குருநாதரையும் தியானிப்பதில் ஈடுபட்ட இவர் குருநாதரின் துணேயோடு மானஸ பூஜையைத் தொடங்கினதும் தம்மையே மறந்துவிட்டார். குருநாதர் சிவபூஜை செய்ய இவர் வேண்டிய சுச்ரூஷைகளேச் செய்து கொண்டிருந்தார். எல்லாம் மானஸ கல்பனேயே. உலகத்தில் எங்கும் கிடைக்காத - மடத்தில்கூடக் காணமுடியாத - மிகச் சிறந்த பூஜாத் திரவியங்களேக் கொண்டுவந்து கொண்டுவந்து இவர் குருநாதரிடம் கொடுத்த வண்ணம் இருந்தார். பிறகு குருநாதரின் கட்டளேப்படி இவரே சிவபூஜை செய்தார். இவர் நெஞ்சில் விவரிக்க முடியாத இன்பம்

நிறைந்திருந்தது. இந்த அநுபவத்தில் மூழ்கியிருந்த இவர் அதைவிட்டு விடுபட விரும்பவில்லே. இவர் தம் பிரக்ஞை முழுவதையும் இழந்து விடவுமில்லே. இரவு மடத்தில் நடந்த சாரதாம்பாள் பூஜையின்போதும், ஹாரத்தியின் போதும் வாசித்த நாதஸ்வர இசை இவர் காதில் லேசாக விழுந்தது. ஆனுலும் இவர் சிவபெருமானேயும் குருநாதரையும் தியானித்தபடியே இன்பாநுபவத்தில் மூழ்கியிருந்தார்.

இவர் இந்த நிலேயிலிருந்து மாறி தியானம் கலேந்து விழித்தபோது இரவு மணி பதிஞென்று. தாம் தியானத்தில் அமர்ந்து இவ்வளவு நேரம் ஆகிவிட்டது என்பது இவருக்குத் தெரியவே இல்லே. நெஞ்சில் பேரின்பப் பெருக்கு இருந்தது. ஒரு புத்துணர்வு இவர் நெஞ்சையெல்லாம் வியாபித்துக் கொண்டிருந்தது. ஒரு சாந்தி இருந்தது. அப்பொழுது ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. அதன் ஒளியால் இவர் அங்கிருந்து புறப்பட்டுத் தமது இருப்பிடமடைந்தார்.

காலம், இடம் என்ற எல்லேகளே எல்லாம் மீறி இவர் எட்டுமணி நேரம் தியான நிலேயில் (மானஸ பூஜை) இருந்திருக்கிருர். இதுவே ஸவிகல்ப ஸமாதியின் ஆரம்ப நிலே என்பது இவருக்குப் பின்னுல் தெரியவந்தது. இந்த அநுபவம் எடுத்துச் சொல்ல முடியாத ஒரு தனிஅநுபவம். இதற்குப் பிறகு இவர் பலமுறை எப்படியெல்லாமோ முயன்றும் இந்த அநுபவத்தைக் கொஞ்ச நேரங்கூடப் பெற முடியவில்லே. (எட்டு மணி நேரம் பெறுவது இருக்கட்டும்.)

மறுநாள் குருநாதர் ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜை செய்யும்போதே இவர் மடத்துக்குப் போய்விட்டார். பூஜை முடிந்து குருநாதரின் திருக்கரத்தால் தீர்த்தம் பெற்றுக் கொள்ளும்போது குருநாதர் இவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். அதில் ஏதோ அர்த்தம் இருப்பதாக இவருக்குப் பட்டது. ஆனுல் குருநாதர் அப்போது இவரோடு பேசவில்லே. அன்று மாலே 4 மணிக்குக் குருநாதர் ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்திற்கு வந்தார்கள். பத்துப் பன்னிரெண்டு பக்தர்களோடு இவரும் அங்கே குருநாதரின் தரிசனத்துக்காகக் காத்திருந்தார். அவர் வந்தவுடனே எல்லோரும் அவர் திருவடிகளில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். தம் கையால்

சைகை செய்து இவரை மட்டும் தனியே நிற்கச் சொன்ன குருநாதர் மற்றவர்களை ஒவ்வொருவராக அழைத்துப் பேசி ஆசீர்வாதம் செய்து பிரஸாதம் வழங்கி அனுப்பிவிட்டார்கள். இதற்குச் சுமார் அரைமணி நேரம் ஆயிற்று. எல்லோரும் விடைபெற்றுச் சென்றபிறகு இவரைத் தம் அருகே வரும்படி குருநாதர் அழைத்தார்கள். அவர்கள் பக்கத்தில் சென்ற இவர் கீழே விழுந்து நமஸ்கரித்துவிட்டுச் சற்றுத் தூரத்தில் அடக்கமாக உட்கார்ந்தார். ''நேற்று நீ என்னப்பா செய்தாய்'' என்ற கேள்வி குருநாதரிடமிருந்து எழுந்தது. (இந்தக் கேள்வியை நினைக்கும்போது இவருக்கு இன்றும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அக்ரூரரைக் கேட்டதாக பாகவதத்தில் வரும் கேள்வி நினைவுக்கு வருகிறது.

...... किं ते दृष्टमिवाद्भुतम् ।
भूमौ वियति तोये वा तथा त्वं लक्षयामहे ॥

(பாகவதம் 10-41-3)

(பூமியிலும், ஆகாசத்திலும், நீரிலும் என்ன அற்புதக் காட்சிகளைக் கண்டாய்? ஏதோ மஹத்தான அற்புதக் காட்சிகளைக் கண்டவன்போல உன் முகம் விளங்குகிறதே?)

முதலில் இவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. இவர் மனதில் பயத்தால் ஏற்பட்ட ஒரு நடுக்கம் இருந்தது. பைரவர் கோயில் பூட்டை அனுமதியில்லாமல் தாம் திறந்த குற்றம் இவர் நெஞ்சை உறுத்தியது. குருநாதர் புன்சிரிப்பாலும் அன்பு நிறைந்த சொற்களாலும் இவருக்குத் தைரியம் ஊட்டியதனால் பயத்துடனேயே தட்டுத் தடுமாறி இவர் முதல் நாள் தாம் பூட்டைத் திறந்ததை விண்ணப்பித்துக் கொண்டார். ''எனக்கு இது தெரியும். வேண்டுமென்றேதான் பூட்டு அந்த நிலையில் வைக்கப்பட்டது'' என்றார்கள் குருநாதர். இதனால், இன்னும் சற்றுத் தைரியம் பெற்ற இவர் தாம் பெற்ற அநுபவம் முழுவதையும் எடுத்துச் சொன்னார். இதைக் கேட்டு வந்த குருநாதர் கண்களில் அநுக்கிரஹம் நிறைந்து வழிந்தது.

பிறகு குருநாதரின் ஏவலாளர் ஒருவரிடமிருந்து பின்கண்ட விஷயம் இவருக்குத் தெரியவந்தது. பூட்டு கெட்டுப் போயிருந்தது. அடிக்கடி அது சரியாகப் பூட்டிக் கொள்வதில்லை. எனவே இரண்டு

நாளைக்கு முன் ஒரு புதிய பூட்டு வாங்கி வைத்திருந்தார்கள். முதல் நாள் குருநாதர் தம் ஏவலாளரோடு பைரவர் கோயிலுக்குப் போயிருந்தபோது, ஏவலாளர் பழைய பூட்டை வைத்துவிட்டு புதுப்பூட்டை மாட்டப்போனுர். அப்போது குருநாதர் ஏவலாளரைப் பார்த்து ''பழைய பூட்டே இருக்கட்டும். பின்னுல் மாற்றிக் கொள்ளலாம்'' என்று சொன்னுர்களாம். என்ன ஆச்சரியம்! இவருக்கு இந்த அநுபவம் கொடுப்பதற்காகவே குருநாதர் முன்னேற்பாடு செய்திருக்கிறுர் போலும்.

பைரவர் கோயில் அநுபவத்திற்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் இவரை நோக்கி, ''நீ உன் லௌகிக விவகாரங்களை எல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டு சிருங்ககிரிக்கு வந்து தங்கிவிடேன்'' என்று சொன்னுர்கள்.

இவர் ஊருக்குச்சென்று தம் விருப்பத்தைக் குடும்பத்தாருக்குத் தெரிவித்தார். எல்லோருமாக யோசனை செய்து தம் இஷ்டப்படியே செய்ய இவருக்கு அனுமதி கொடுத்து விட்டார்கள். உடனே இவர் தாம் ஸர்வகலாசாலையில் வகித்த வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுச் சிருங்ககிரிக்குச் சென்றுர். அங்கே பிரம்மசாரி வாழ்க்கை வாழத் தொடங்கினுர். ஊருக்குள்ளே வீடு வீடாகச் சென்று பிக்ஷை எடுத்துத்தான் இவர் உண்பார். (மடத்தில் இவருக்கு உணவு கிடைக்கும்; ஆனுலும் இவர் இப்படி பிக்ஷை எடுப்பதையே விரும்பினுர்.) மஹாஸ்வாமிகள் தனிப்பட்ட முறையில் இவருக்கு விவேகசூடாமணியைப் பாடம் சொல்லி வந்தார். இந்தக் கருணைக்குப் பாத்திரமாகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது பூர்வ ஜன்ம புண்ய பலனுகத்தான் இருக்க வேண்டும். இது ஒப்புயர்வில்லாத பாக்கியம். ஆறு மாத காலம் வரையில் பாடம் சொன்ன ஸ்வாமிகள் 225 சுலோகங்களைச் சொல்லி முடித்தார்கள். பிறகு இவர் ஸந்யாஸம் வாங்கிக் கொள்ள வெளியூருக்குச் செல்ல நேர்ந்ததால் இந்தப் பாடத்தை நிறுத்த வேண்டி நேர்ந்துவிட்டது. பிறகு ஒருமுறை இவர் இந்தப் பாடத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வேண்டியபோது ஸ்வாமிகள் 'படித்த அளவு போதும்' என்று சொல்லி விட்டார்கள்.

1943 சித்திரை மாதத்தில் இவர் மூன்று நாட்களைத் தனியாக நரஸிம்ம பர்வதத்தில் கழிக்க நேர்ந்தது. பக்கத்திலிருந்த குளத்தில்

தண்ணீர் குடிக்க இரவில் ஒரு கொடிய மிருகம் வந்தது. இவர் உரக்கக் கத்திக்கொண்டே ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்து ஆட்டினுர். (பாதுகாவலாக இவர் நெருப்பு மூட்டியிருந்தார்.) பயத்தால் இவர் நடுங்கிக் கொண்டிருந்தார். 'ஸத்குரோ! காப்பாற்ற வேண்டும்' என்று இவர் உரக்கக் கூச்சலிட்டார். அதிர்ஷ்ட வசமாக அந்த மிருகம் ஓடிவிட்டது. அன்று இரவு முழுவதையும் இவர் குரு ஸ்தோத்திரங்களேச் சொல்லியபடியே கழித்தார்.

அந்த வருஷம் மே மாதம் மஹாஸ்வாமிகள் இவரைக் கூப்பிட்டு, ''நீ இப்போது ஸந்யாஸம் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய தகுதிஇருப்பதாக நினேக்கிறேம். நெலமாவு மடத்தின் தலேமை ஸ்தானம் இப்போது காலியாக இருக்கிறது. அந்த ஸ்தானத்தை வகிப்பதற்காக ஒருவர் இங்கே ஸந்யாஸம் பெறப் போகிருர். அவரோடுகூட நீயும் ஸந்யாஸம் பெறலாம்'' என்ருர்கள்.

சிருங்கேரி ஸ்ரீ மஹாஸ்வாமிகளிடம் பலர் வந்து தாங்கள் ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்துகொள்ள அநுமதி அருள வேண்டுமென்று பிரார்த்திப்பதுண்டு. அவர்கள் எல்லோரும் பல வருஷங்கள் காத்திருந்த போதிலும், பல தடவை பிரார்த்தித்தபோதிலும் ஸுலபமாக அனுமதி கிடைப்பதில்லே. இந்தப் பக்தருக்கோ வெகு சீக்கிரத்தில் அநுமதி கிடைத்துவிட்டது. ஒரே ஒரு தடவைதான் இவர் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தினிடம் ஸந்யாஸ விஷயத்தை பிரஸ்தாபித்திருந்தார். மறுபடியும் இந்தப் பேச்சை இவர் எடுக்கவே இல்லே. மஹாஸ்வாமிகளுக்கு இது விஷயமாக நினேவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லே, என்ற உறுதி இவருக்கு இருந்தது. ''எனக்குத் தகுதி இருப்பதாக அவர் நினேத்தால் உடனே அநுமதி தந்துவிடுவார்கள். எதற்காக அடிக்கடி அவரைக் கேட்பது? ஒரு முறை விண்ணப்பித்துக் கொண்டதை அவர் மறந்து விடுவாரா, என்ன?'' என்பது இவர் தீர்மானம்.

பூர்வ புண்ய வசத்தால் வெகு விரைவில் இவருக்கு ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் அனுமதி கிடைத்த பிறகு ஒரு நாள் இவர் மஹாஸ்வாமிகளேப் பார்த்து, ''எனக்கு யார் ஸந்யாஸம் கொடுப்பார்களோ?'' என்று வெகு பணிவாக விண்ணப்பித்துக் கொண்டு ''நான் மனத்தில் வரித்திருக்கும் ஸந்யாஸி ஒருவேளே சம்மதப்படமாட்டாரோ என்னவோ? அவர் எப்போதும்

ஏகாந்தத்திலேயே இருக்கிறார். யாரோடும் பழகுவதில்லை'' என்றார் இவர். இதைக் கேட்ட மஹாஸ்வாமிகள் வெகு அன்போடு ''ஏன்? யார் வேண்டுமானாலும் உனக்கு ஸந்யாசம் தரலாம். நாமே கொடுத்திருப்போம். ஆனால் மடத்தில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன'' என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். இவரை உற்சாகப்படுத்த வேண்டி மஹாஸ்வாமிகள் கூறிய இந்தச் சொற்கள் இவருக்கு நிரம்ப ஆறுதலை அளித்தன. பிறகு மஹாஸ்வாமிகள் ''மடத்தில் இருக்கும், ஆனால் மடத்தோடு தொடர்பில்லாத ஸந்யாஸிகளுள் யாரிடம் ஸந்யாஸம் பெற நீ விரும்புகிறாய்?'' என்று இவரை அன்போடு கேட்டார்கள். இவர் மஹாஸ்வாமிகளைப் பார்த்து ''இந்த விஷயத்தில் என்னுடைய விருப்பம் என்பது ஒன்றும் இல்லை. இவ்வளவு நாளாக என் விஷயங்கள் எல்லாவற்றிலும் ஸந்நிதானத்தின் விருப்பமே என்னை நடத்திச் சென்றது போலவே இந்த விஷயத்திலும் நடக்கும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். பிறகு மஹாஸ்வாமிகள் ஒரு நிமிடம் கழித்து ''நீ சந்தோகன் (ஸாமவேதி) அல்லவா? நல்லதாய்ப் போயிற்று. உனக்கு ஸந்யாஸம் தரத்தக்க குருவை நாமே தேர்ந்தெடுக்கிறோம்'' என்று கருணையோடு திருவாய் மலர்ந்தருளினார்கள். பிறகு ஸந்யாஸம் பெறுவதற்கு உரிய நாளையும் குறிப்பிட்டுவிட்டார்கள். ''ஆசிரமம் பெறுவது சிருங்ககிரியிலேயே நடைபெற வேண்டுமென்பது என் விருப்பம். அப்போதுதான் ஆசிரமம் பெற்றவுடன் தங்கள் திருவடிகளை வணங்க முடியும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

மஹாஸ்வாமிகள் இவரைப் பார்த்து, ''நான் நினைத்திருக்கும் பெரியவர் வயதானவர். அவர் வெகு தொலைவில் இருக்கிறார். அவரை இங்கே அழைத்து வருவது உசிதமல்ல. நான் அதை அனுமதிக்க மாட்டேன். இரண்டாவதாகச் சிஷ்யன்தான் குரு இருக்கும் இடத்திற்குப் போக வேண்டுமே ஒழிய குருவைச் சிஷ்யன் இருக்கும் இடத்துக்கு அழைப்பது சரியல்ல. இப்பொழுது ஓர் எண்ணம் நம் மனத்தில் உதயமாகிறது. நாமும் எம் குருநாதரும் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்) சாதுர்மாஸ்யம் நடத்திய மஹா புண்ய க்ஷேத்திரம் ஒன்று இருக்கிறது. (க்ஷேத்திரத்தின் பெயரை வேண்டுமென்றே குறிப்பிடவில்லை.) நீ அங்கே போய் ஸந்யாஸம் பெற்றுக்கொண்டு

சில நாள் குருவோடுகூட இருந்து பிறகு சிருங்ககிரிக்கு வரலாம்'' என்று பணித்தார்கள்.

இவர் பெறவேண்டிய தீக்ஷா நாமத்தை ஸ்வாமிகளே தீர்மானித்து விட்டார்கள். ஸ்வாமிகளின் குருநாதருடைய நாமமே அது. அந்த நாமத்தின் முதல் பகுதியை இவர் பெற வேண்டும் என்ருர்கள். ஒரு பகுதியாளுலும் அது முழு நாமத்துக்குச் சமமே ஆகும். பிறகு ஸ்வாமிகள் தம் ஆஸ்தான வித்வாளேக் கொண்டு இவருக்கு ஆசிரம தீக்ஷை தரப்போகும் குருநாதருக்கு ஒரு கடிதம் எழுதச் சொல்லி அதை இவரிடம் சேர்ப்பித்தார்கள்.

ஸந்யாஸம் பெற்றுக்கொண்ட இவர் எட்டுமாத காலம் தம் குருநாதரோடு தங்கியிருந்துவிட்டு 1944-ஆம் வருஷம் சிவராத்திரிக்கு முன் சிருங்ககிரிக்கு வந்தார். அந்த வருஷம் முழுவதுமே இவர் அங்கு தங்கியிருந்தார். ஒரு நாள் ஸ்வாமிகள் இவரைப் பார்த்து, ''நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே! நாமே உன் கையைப் பிடித்துப் படிப்படியாக உன்ளே அழைத்துச்சென்று லட்சிய ஸித்தி பெறச் செய்கிருேம்'' என்று மிகக் கருணேயோடு அருளிஞர்கள்.

1945-ல் மஹாஸ்வாமிகளின் அநுமதி பெற்று இவர் கோகர்ணத்துக்கும் கொல்லூருக்கும் நடந்தே சென்ருர். இந்த இடங்களேத் தரிசிப்பதில் மஹாஸ்வாமிகளுக்கு மிக்க ஆவல் உண்டு என்பதும், பல காரணங்களால் வெகுநாட்களாக இங்கே செல்ல மஹாஸ்வாமிகளால் இயலவில்லே என்பதும் இவருக்குத் தெரியும். சிவராத்திரியின்போது இவர் கோகர்ணத்தில் இருந்தார். அன்று இரவு பொதுஜனங்கள் கர்ப்பகிருஹத்துக்குள் புகுந்து தரிசிப்பதற்கு முன் ஏகாந்த பூஜை செய்யும் வாய்ப்பு இவருக்கு மஹாஸ்வாமிகளின் அருளால் கிடைத்தது. அன்று மஹாபலேசுவரருக்கு அர்ப்பணம் செய்த விபூதிப் பிரஸாதத்தையும், கொல்லூர் மூகாம்பிகையின் பிரஸாதத்தையும் கொண்டுவந்து வெகு மரியாதையாக மஹாஸ்வாமிகள் முன் ஸமர்ப்பித்தார். இதைப் பெற்றுக்கொண்ட மஹாஸ்வாமிகளின் கண்கள் கலங்குவதை இவர் பார்த்தார். என்ருலும் மஹாஸ்வாமிகள் தம் உணர்ச்சிகளேக் கட்டுப்படுத்திக் கொண்டு வழக்கமான கம்பீரத்தோடு இவரை நோக்கி அந்த க்ஷேத்திரங்களேப் பற்றி விசாரித்தார்கள்.

பிறகு ஏவலாள் ஒருவரைக் கூப்பிட்டு அவரிடம் அந்தப் பிரஸாதங்களைக் கொடுத்து தனிப்பட்ட ஒரு பிறையில் வைக்கும்படி பணித்தார்கள். உயர்ந்த இந்தப் பிரஸாதத்தில் கொஞ்சம் மஹாஸ்வாமிகள் கையால் பெறும் பாக்கியமும் இவருக்குக் கிடைத்தது இவர் மனத்தைப் பேரின்பத்தில் ஆழ்த்தியது.

சில நாட்களுக்குப் பின் மஹாஸ்வாமிகளின் அநுமதி பெற்று இவர் வட இந்தியாவுக்குச் சென்றார். பிறகு பலமுறை இவருக்கு மஹாஸ்வாமிகளைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இவர் கடைசி முறையாக ஸ்வாமிகளைப் பார்த்தது 1954-ல் ஸ்ரீ சங்கர ஜயந்தி விழா முடிந்த ஒரு வாரத்துக்குப் பிறகு. அப்போது ஸ்வாமிகள் இவருடைய தினசரி வாழ்க்கையைப்பற்றி விரிவாக விசாரித்துவிட்டு சீக்கிரம் ஞான வளர்ச்சி பெறவேண்டுமானால் இவர் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றிச் சில உபதேசங்களைச் செய்தார்கள்.

இவ்வாறு ஸ்ரீ மஹாஸ்வாமிகளிடம் நேரிடையாக உபதேசங்களைப் பெற்ற இவர் மறுபடியும் காசிக்குச் சென்று அங்கேயே இருந்து வந்தார். இவர் தூரத்தில் இருந்த போதிலும் ஸ்வாமிகள் மறக்காமல் 1954 ஆகஸ்டில் இவருக்கு ஒரு சிஷ்யர் மூலம் பின் கண்ட உபதேசத்தை அனுப்பினார் : ''பகவத்கீதையில் பன்னிரண்டாவது அத்தியாயத்தில் கடைசி எட்டுச் சுலோகங்களின் கருத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். தினசரி வாழ்க்கைக்கு இந்தச் சுலோகங்களையே வழிகாட்டிகளாக வைத்துக் கொள்ள வேண்டும்''. ஸ்வாமிகள் மஹா ஸமாதி பெற்ற சில நாட்களுக்குப் பிறகுதான் இந்த உபதேசம் இவருக்குக் கிடைத்தது. ஸ்வாமிகள் இவருக்கு அனுப்பிய கடைசி உபதேசம் இது என்பது அதைக் கொண்டுவந்த பரம பக்தருக்கு அப்போது (ஸ்வாமிகள் சொன்னபோது) தெரியவில்லை. இந்த உபதேசத்தைப் பெற்றபோது ஏற்பட்ட ஸ்வாமிகளின் பரம கருணையைப்பற்றிய நினைப்பு, இவரைப் பரவசமாக்கி விட்டது. (இன்றும் அந்த நினைப்பு வரும் போதெல்லாம் இவர் மனம் உருகிவிடுகிறது.) தாம் இந்த உலகத்தில் உடலோடு இருந்து செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் முடிந்துவிட்டன. இனித் தாம் விதேஹ முக்தியடையும் காலம் நெருங்கி விட்டது என்பது ஸ்வாமிகளுக்கு

நன்கு தெரியும் என்பதைக் காட்டும் பல நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்ருகும்.

ஸ்வாமிகளின் மஹா ஸமாதிக்குப் பிறகு ஆறுமாத காலம் வரையில் அவர் பிரிவு ஒரு சூன்ய உணர்ச்சியையே இவருக்குத் தந்தது. பிறகு ஸ்வாமிகளின் அருள் எங்கும் இருப்பதை இவர் உணரத் தொடங்கினுர். தனியாக இருந்து ஒருமுகமாக மனத்தைச் செலுத்தித் தியானம் செய்தால் போதும்; ஸ்வாமிகளின் அருட்சக்தி அநுபவத்தை உணரலாம். உள்ளத்தில் தோன்றும் பல பிரச்சினைகளுக்கு வழியையும் இவர் அருள் காட்டும். இது இவருடைய நிச்சயமான அநுபவம்.

மற்றவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்துவதில் ஸ்வாமிகள் காட்டிய வழி வியக்கத்தக்கது. ஒரு குழந்தையினிடம்கூட ஸ்வாமிகள், ''நீ தவறிவிட்டாய்'', ''நீ ஒரு தப்புச் செய்துவிட்டாய்'' என்று நேராகச் சொல்ல மாட்டார். ஆனுலும் தன் தவறைத் தானே புரிந்து கொள்ளும்படி செய்வார். பேசுவதிலோ, வாசிப்பதிலோ தவறு இருந்தால் அதை நீக்கி ஸ்ரீ ஸ்வாமிகள் தாமே திருப்பிச் சொல்வார். அப்படிச் சொல்லும்போது தவறு நேர்ந்த இடத்தைச் சற்று அழுத்திச் சொல்வார். இரண்டொரு முறை இதைத் திருப்பியும் சொல்வார். தவறியவர் இதைக் கேட்டுத் தம் தவற்றைத் திருத்திக் கொள்வார்.

1942-ல் இப்போது ஸ்ரீ சிருங்ககிரியில் ஸ்ரீ ஜகத்குரு பீடத்தை அலங்கரிக்கும் ஸ்வாமிகள் (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்) அப்போது இளவரசராக இருந்தார். அவர் சில மாணவர்களுக்கு வேதாந்த பரிபாஷைப் பாடம் சொல்லி வந்தார். இவருக்கு அந்தப் பாடத்தைக் கவனித்துப் புரிந்து கொள்வதற்கு வேண்டிய தகுதி இல்லாவிட்டாலும் சின்ன ஸ்வாமிகள் இவரையும் அந்தப் பாடத்தைக் கவனிக்கும்படி அன்போடு சொன்னுர்கள்.

இடையே ஒரு நாள் பெரிய ஸ்வாமிகள் இவரைப் பார்த்து, ''உன் தினசரி வேலை என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு இவர், ''நான் சின்ன ஸ்வாமிகள் சொல்லும் வேதாந்த பாரிபாஷைப் பாடத்தைக் கேட்டு வருகிறேன்'' என்று சொன்னுர். உடனே ஸ்வாமிகள் ''ஓஹோ! **பரிபாஷைப்** பாடம் கேட்கிருயா? வேதாந்த **பரிபாஷை** நல்ல கிரந்தம்'' என்று சொல்லும்போதே பரிபாஷை

என்ற சொல்லை நன்ருக அழுத்திச் சொல்லி இவருக்கு தவறு புரியும்படி செய்தார்கள். ஸ்வாமிகள் இவர் பிழையை எடுத்துக்காட்டவும் இல்லை. மற்றவர்களைப் போல் கேலி செய்து சிரிக்கவும் இல்லை. மற்றவர்கள் உணர்ச்சிக்கு ஸ்வாமிகள் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிருர்களென்பதைக் காட்ட இந்த உதாஹரணம் போதும்.

இவர் ஸ்வாமிகளிடம் 1942-43 ல் விவேகசூடாமணி பாடம் வாசித்த போதும் இப்படியே நடக்கும். 'விவேகசூடாமணி சுலோகங்களை சில சமயம் இவர் தவருக உச்சரித்து விடுவார். அப்போதும் ஸ்வாமிகள் இப்படியேதான் திருப்பிச் சொல்லி அன்போடு திருத்துவார்கள். இவர் இரண்டு மூன்று முறை ஒரே தவற்றைச் செய்தபோதும் ஸ்வாமிகள் கடுகடுப்பின்றித் திருப்பித் திருப்பி அந்த வார்த்தையைச் சரியாகச் சொல்லித் திருத்துவார். ஒரு முறைகூட "தவருகச் சொல்கிருயே" என்று சொல்ல மாட்டார். ஸ்வாமிகளைவிடக் கருணை மிக்க ஆசிரியர் ஒருவரை இவர் கண்டதே இல்லை. சொல்லிலும் அஹிம்ஸை என்ற தர்மத்தை அவ்வளவு அழகாகக் கடைப்பிடித்துக் காட்டினுர்கள் ஸ்ரீ ஸ்வாமிகள்.

1955-ல் ஸ்வாமிகளின் சீடர் ஒருவர் கோயம்புத்தூர் போட்டோ ஸ்டூடியோ ஒன்றில் ஸ்வாமிகளின் முழு உருவப் படம் ஒன்றைத் தயார் செய்து வைத்திருந்தார். அவர் இந்தப் படத்தை இவருக்குக் கொடுக்க விரும்பி ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்திப் பலமுறை கடிதம் எழுதினுர். ஆனுல் இவர் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. தாம் வெகுதூரத்தில் காசியில் இருப்பதால் படத்தை ரயிலில் அனுப்பினுல் அது கெட்டுவிடும் என்ற காரணத்தால் இவர் மறுத்துவந்தார். அதோடு அவ்வளவு பெரிய படம் தம்போன்றவர்களுக்கு அவசியம் இல்லை என்றும் அதைச் சரியாகக் கவனித்துக் கொள்ளவும் தம்மால் முடியாதென்றும் இவர் எழுதிவிட்டார். இவ்வளவு பெரிய படத்துக்குத் தக்க இடம் ஒரு கோயில், பாடசாலை அல்லது மண்டபம்தான் என்பது இவர் அபிப்பிராயம். எனவே பக்கத்திலுள்ள ஏதாவது ஒரு ஸ்தாபனத்துக்கு படத்தை நன்கொடையாக அளித்து விடும்படி இவர் அந்தச் சீடருக்கு எழுதிவிட்டார். ஆனுல் அந்தச் சீடரோ தம் பிடிவாதத்தை விடவில்லை. இவருக்கேதான் அதைத் தர தீர்மானித்து விட்டதாக அவர் இவருக்கு அடிக்கடி எழுதி வந்தார். எனவே இந்தச்

சீடர் மனம் ஸமாதானமடைவதற்காகவாவது இவர் அந்தப் படத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ரயில்வே மூலம் அனுப்பாமல் மனுஷ்யாள் மூலமாக அனுப்பினுல் அதைப் பெற்றுக் கொள்வதாக இவர் கடைசியில் ஒப்புக் கொண்டார். இதற்கு எவ்வளவு நாள் ஆனுலும் சரி என்றும் இவர் எழுதிவிட்டார்.

சில நாட்களுக்குப்பின் பெங்களூரில் இருந்த ஒரு பக்தர் இந்தப் படத்தைத் தாமே கொண்டுபோய் இவரிடம் சேர்ப்பதாக ஒப்புக் கொண்டார். இந்தப் பக்தர் காசியைத் தரிசிக்க விரும்பினுர். எனவே இந்தப் படம் அவரிடம் தரப்பட்டு அவரிடமே இருந்தது. இந்த நண்பருடைய காசிப் பிரயாணம் தடைப்பட்டுக் கொண்டே வந்தது. வெகுகாலம் வரை படம் அவரிடமே இருந்தது. திடீரென்று ஒரு நாள் இந்தப் பக்தர் மனத்தில் ஒரு தூண்டுதல் ஏற்பட்டது. ''உடனே படத்தைக் கொண்டுபோய் இவரிடம் சேர்த்துவிட வேண்டும்'' என்பதுதான் அது. உடனே படத்தை எடுத்துக்கொண்டு அதை இவரிடம் சேர்ப்பித்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்தப் பக்தர் காசிக்குச் சென்ருர். (காசி யாத்திரை பற்றிய முடிவு அப்போதும் அவருக்கு ஏற்படவில்லை.) 1957-ம் வருஷம் சிவராத்திரிக்கு முதல் நாள் காசியை அடைந்த இந்தப் பக்தர் அன்று மாலை 5.30 மணிக்குப் படத்தை இவரிடம் சேர்ப்பித்தார்.

அன்று இரவு 1 மணிக்கு இவர் எழுந்திருந்து கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு படத்தின் முன் நமஸ்காரம் செய்து எழுந்து, காசிப் பிரதக்ஷிணம் செய்ய (இதைப் பஞ்சக்ரோச யாத்திரை என்பர். சுமார் 48 மைல் சுற்று) புறப்பட்டார். ஸாதாரணமாக இதை மூன்று நாட்களிலோ ஐந்து நாட்களிலோ முடிப்பார்கள்; ஆனுல் சிவராத்திரியின்போது ஒரே நாளில் முடித்துவிட வேண்டும். கஷ்டமான ஸாதனை! புறப்பட்ட இவர் விச்வநாதர் கோயிலை மூன்று தடவை பிரதக்ஷிணம் செய்து பெரிய வாயிலுக்கு முன் நமஸ்காரம் செய்தார். கதவு திறக்கப்படவில்லை. (சாதாரண நாட்களில் காலை 4 மணிக்கும் சிவராத்திரியன்று 3 மணிக்கும் இதைத் திறப்பது வழக்கம்.) பிறகு அன்னபூரணதேவி, டுண்டி கணேசர் கோயில்களின் பெரிய வாயிலுக்கு முன்னும் நமஸ்காரம் செய்துவிட்டு மணிகர்ணிகை வழியே கங்கைக் கரையில் நடந்தபடி 'அஸ்ஸி'யை நோக்கி இவர் சென்றுகொண்டிருந்தார். அஸ்ஸியை

நெருங்கியபோது இவர் வழுக்கிக் கீழே விழுந்து அதனுல் இவருடைய இடதுகை மணிக்கட்டெலும்பு முறிந்துவிட்டது. கொஞ்சம் இடதுபுறமோ வலதுபுறமோ தள்ளிவிழுந்திருந்தால் ஆபத்து இன்னும் கடுமையாக இருந்திருக்கும். எப்படியோ தட்டுத்தடுமாறி இவர் தம் இருப்பிடத்தையடைந்தார். அப்போது இரவு மணி 2-30. யாத்திரை லட்சியம் நிறைவேறவில்லே. ஸ்ரீ ஸ்வாமிகளின் படம் அன்று இவரை அடைந்ததன் காரணம் இவருக்கு அப்போதுதான் விளங்கிற்று. பெரிய ஆபத்திலிருந்து இவரைக் காப்பாற்றவும், அச்சமயத்தில் இவருக்கு ஆறுதலாக இருக்கவுமே ஸ்ரீஸ்வாமிகளின் படம் அன்று இவரை அடைந்ததாக இவர் எண்ணினுர். முக்கியமாகப் படத்தை நமஸ்கரித்ததால்தான் அன்று இவர் தமக்கு வரவிருந்த ஏதோ ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பினுர் என்பதில் இவருக்குச் சந்தேஹமேயில்லே. மணிக்கட்டில் அதிக வலி இருந்தது. இருபது நாள் வரை கட்டுக் கட்டி வைத்திருந்தார்கள். திரும்பவும் மணிக்கட்டு எலும்பு கூடி வருவது சிரமந்தான் என்று டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனுல் ஆபத்து நேர்ந்த பத்து நாட்களுக்குப் பிறகு பின்கண்ட சம்பவம் நடந்தது. ஸ்வாமிகள் இவர் கனவில் தோன்றித் தம் இடதுகையால் அடிபட்ட இவர் மணிக்கட்டைப் பற்றிக்கொண்டு வலது கையால் தடவிக் கொடுத்தபடியே, ''நீ ஒன்றும் கவலேப்படாதே அப்பா! சரியாகிவிடும்'' என்று சொன்னுர்கள். பின்னுல் இவர் மணிக்கட்டு நன்கு குணமாகிவிட்டது. அந்த ஆபத்துச் சமயத்தில் தமக்குத் தோன்ருத் துணேயாக நின்று தம்மைக் காத்தது ஸ்ரீ ஸ்வாமிகளின் அருள்தான் என்பது இவருடைய உறுதியான தீர்மானம். பிறகு பஞ்சக்ரோச யாத்திரையை இவர் அடுத்த வருஷம் செய்து முடித்தார்.

1954-ம் ஆண்டு நவராத்திரிக்கு முதல் நாளன்று இவருக்கு ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் மஹா ஸமாதி பற்றிய செய்தி கிடைத்தது. அப்பொழுது பகல் 1 மணி இருக்கும். காசி ஸ்ரீ சிருங்ககிரி மடத்து மானேஜர் அவர்கள் தாம் ரேடியோவில் கேட்ட செய்தியை ஓடோடியும் வந்து இவரிடம் தெரிவித்தார். இதைக் கேட்டவுடன் இவர் துக்கத்தினுல் ஸ்தம்பித்து விட்டார். ஒன்றுமே தோன்றவில்லே.

அந்தச் சமயத்தில் இவருடைய தீக்ஷா குரு அங்கே வந்திருந்தார். இருவருமாகக் கங்கைக்குச் சென்று ஸ்நாநம் செய்து

நெய் விளக்கேற்றி வைத்து உபநிஷத் பாராயணம் செய்தார்கள். அன்று மாலை இவர் மட்டும் மணிகர்ணியில் ஸ்நானம் செய்து ஸ்ரீ விச்வேச்வரருக்கு ஓர் அபிஷேகம் செய்வித்துத் தரிசனம் செய்தார். ஆனால் இவர் கண்களுக்கு அங்கே விச்வேச்வரலிங்கம் தெரியவில்லை. தியானபரராக அமர்ந்திருந்த மஹாஸந்நிதான தரிசனமே கிடைத்தது. தெய்வாதீனமாக அன்று முழுவதும் இவர் பிக்ஷை செய்யவே இல்லை. அப்படி ஒரு ஸந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது.

இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு எவ்வளவு முயன்றும் இவரால் தம் மனத்தைத் தேற்றிக் கொள்ளவே முடியவில்லை. அதே ஏக்கமாக இருந்தார். யாரோடும் பேசுவதில்லை. தம் குருவினிடம் மட்டும் அளவாகப் பேசி வேண்டிய சுச்ரூஷைகளைச் செய்தவண்ணம் இருந்தார்.

கார்த்திகை மாதம் வரை இப்படி நடந்தது. கார்த்திகை மாதம் பகுள ஏகாதசியன்று இரவு இவர் கனவில் ஸ்ரீ மஹாஸந்நிதானம் தோன்றி, ''நாம் எங்கே போய்விட்டோம்; உன்னோடும் இருக்கிறோமே; உன் உள்ளும் இருக்கிறோம்; எங்கும் இருக்கிறோம்'' என்று சொல்லி மறைந்தார். சட்டென்று விழித்துக்கொண்ட இவர் மனத்தில் ஒருவித சாந்தி பிறந்தது. உடன் இவர் தம் பூஜையறையில் இருந்த ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் படத்தின்முன் விழுந்து ஸாஷ்டாங்கமாக தண்டனிட்டு, தம்மைத் தேற்றிய அவரது பரம கருணையை எண்ணி மனம் உருகினார்.

பிறகு கார்த்திகை மாதப் பிரதோஷத்தன்று திங்கட்கிழமை அங்கே வந்த ஸ்ரீ ராம ராவ் என்ற ஒரு பரமபக்தர், ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் ஸமாதியின்மேல் பிரதிஷ்டை செய்வதற்கான லிங்கத்தை வாங்கி எடுத்துக் கொண்டு காசியில் இருக்கும் மடத்துக்கு வந்தார். இந்த லிங்க கைங்கர்யம் செய்யும் பாக்கியம் ஸ்ரீ ராம ராவுக்குக் கிடைத்திருந்தது.

பிரதோஷத்தன்று இவர் குடீரத்தை நாடி இந்த லிங்கம் வந்து சேர்ந்தது இவர் மனத்தை அப்படியே உருக்கி விட்டது. ஸ்ரீ ராம ராவ் அதை சிருங்ககிரிக்கு எடுத்துப் போகும் வரையில் சுமார் ஒருவார காலம் - அந்த லிங்கத்துக்கு ஏகாதச ருத்ராபிஷேகமும் விசேஷ

பூஜையும் தினமும் செய்து மகிழும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது.

அந்த ஒருவார காலமும் லிங்க ரூபமாகத் தம்மிடம் வந்த கருணாமூர்த்தியாகிய மஹாஸந்நிதானத்தைப் பலவகையாக உபசரித்தும், கொஞ்சியும் அணைத்தும், சிரஸிலும் மார்பிலும் வைத்துப் பாராட்டியும் பேறு பெறும் தவம் இவருக்குக் கிடைத்தது. இந்த நிகழ்ச்சியிலும் பரம குருவாகிய ஸ்ரீ மஹாஸந்நிதானத்துக்குத் தம் உண்மைப் பக்தர்களிடம் இருந்த கருணை நன்கு விளங்குகிறது.

மஹாஸந்நிதானம் மஹா ஸமாதி அடைந்தவுடனே செய்ய வேண்டிய ஆராதனைக்காக ஸ்ரீ எம்.எஸ். சர்மா என்ற ஒரு பக்தர் காசிக்கு வந்து சேர்ந்தார். வந்த அவர் தம்மோடு தம்மிடமிருந்த ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் பாதுகைகளையே கொண்டு வந்திருந்தார். எனவே ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் பாதுகைகளையே வைத்துப் பூஜித்து ஆராதனையைக் கொண்டாடும் பாக்கியம் இவருக்கும், காசியிலிருந்த பல ஸந்யாஸிகளுக்கும் கிடைத்தது. ஆராதனை ஸ்ரீ பூர்ணானந்த மடத்தில் வெகு விமரிசையாக நடந்தது. இவருடைய குரு தலைமை வகிக்கச் சுமார் 150 ஸந்யாஸிகள் இதில் கலந்து கொண்டார்கள். ஆராதனைக்காக இவரை நாடி மஹா ஸந்நிதானத்தின் பாதுகை வந்ததும் குருவின் பரம கருணைச் செயல்தான். ஸமாதி லிங்கபூஜை செய்துவரும் பாக்கியம் இருந்த நாட்களில் ஒன்றாகிய கார்த்திகை பகுளத் திரயோதசி அன்று இவர் இப்பொழுது ஸ்ரீ ஜகத்குருவாக விளங்கிவரும் ஸ்ரீ சிருங்ககிரி மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் அவர்களுக்கு பின்கண்ட சுலோகத்தை எழுதியனுப்பினார்கள்.

यद्वच्छ्रीखण्डवृक्षप्रसृतपरिमलेनाभितोऽन्येऽपि वृक्षाः
शश्वत्सौगन्ध्यभाजोऽप्यतनु तनुभृतां तापमुन्मूलयन्ति ।
आचार्याल्लब्धबोधा अपि विधिवशतः सन्निधौ संस्थितानां
त्रेधा तापं च पापं सकरुणहृदयाः स्वोक्तिभिः क्षालयन्ति ॥

(சதச்லோகீ 2)

இந்தக் கடிதம் பெற்ற ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் இவருக்கு ஸ்ரீ மஹாஸந்நிதானம் உபயோகித்த ருத்ராக்ஷ மாலையிலிருந்து இரண்டு ருத்ராக்ஷங்களை அனுப்பி மஹதாசீர்வாதம் செய்தார்கள். இப்படி

இந்த ருத்ராக்ஷங்கள் இவரைத் தேடி வந்ததும் குருமஹராஜின் பரம கருணைச் செயலே ஆகும்.

ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் மனம் என்றும் சாந்தி பெற்றதாகவும் நடுநிலை பெற்றதாகவுமே இருந்தது. தற்கால மஹான்களுள் சிரோரத்னம் போன்றவர் இவர் என்று மக்கள் நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. मैत्रीकरुणामुदितोपेक्षानां सुखदुःखपुण्यापुण्यविषयाणां भावनातः चित्तप्रसादनम् என்ற யோகஸூத்ரத்தின் லட்சிய புருஷராகவே இவர் இருந்தார்.

(ஸுகமாக இருப்பவர்களிடம் நட்பையும், துக்கப் படுபவர்களிடம் இரக்கத்தையும், புண்ணியசாலிகளிடம் ஸந்தோஷத்தையும், பாபிகளிடம் உபேக்ஷையையும் யார் பழகுகிறார்களோ, அவர்களின் சித்தம் என்றும் ப்ரஸந்நமாகவே இருக்கும் என்பது மேலேகண்ட யோக ஸூத்ரத்தின் கருத்து.)

5

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

குருபாதசேகரன் ஸ்ரீ M.S. *மந்திரேசுவர சர்மா*

ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளோடு எனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பே வெகு ஆச்சரியகரமானது. ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் கருணையையும் தெய்வீக சக்தியையும் இது மிகத் தெளிவாக விளக்குகிறது.

நான் இளைஞனாக இருந்தபோது என்போன்ற இளைஞர் சிலரைப்போல நான் நாஸ்திகனாகவே இருந்தேன். அவைகள் என் வாழ்நாட்களுள் வீணான நாட்கள். நான் முதல் முதலாகப் பீஹாரில் என் வாழ்க்கையைத் தொடங்கியபோது, 'கடவுள் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை' என்று ஆரம்பத்தில் சொல்லிக் கொண்டிருந்த நான் பிறகு நிரீச்வர வாதியாகவே மாறிவிட்டேன். என்னுடைய ஆஸ்திக நண்பர்கள் பலர் என்னை வெறுக்கும் அளவுக்குக்கூட நான் கடவுளுக்கு அர்த்தமில்லாத சவால்கள் விடுவதில் இன்பம் கண்டேன்.

அந்தக் காலத்திலேயே ஸ்ரீ ஸி.பி. ராமஸ்வாமி ஐயரிடம் நல்ல மதிப்பும் கௌரவ உணர்ச்சியும் எனக்கு உண்டு என்றாலும், இவரும் காலஞ்சென்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ என். சந்திரசேகர ஐயரவர்களும், இன்னும் கணக்கில்லாத பல பிரமுகர்களும் ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளிடம் வைத்திருக்கும் பக்தியைப் பற்றி நினைத்து எனக்குள்ளேயே கேலியாகச் சிரித்துக் கொள்வேன். அறிவும் அநுபவமும், ஆங்கிலப் படிப்பு இல்லாதவர்களுக்குக் கிட்டவே கிட்டாது என்பது என்னுடைய அக்கால அபிப்பிராயம்.

நான் இவர்களை (சுவாமிகளை) முதல் முதலாகச் சந்திக்கும் ஸந்தர்ப்பம் 1926 பிப்ரவரியில் நேர்ந்தது. என் சொந்த ஊரான மதுரைக்கு அப்போது நான் லீவில் போயிருந்தேன். நீண்ட லீவுக்குப் பிறகு ஒரு பௌர்ணமி அன்று இரவு ரெயிலில் நான் சென்னைக்குப் போய் அங்கிருந்து பம்பாய் போவதென்று தீர்மானமாகியிருந்தது. ரயிலுக்குப் பிரயாணச் சீட்டு வாங்கி, இடம் ரிஸர்வ் செய்து கொண்டு வந்த நான் ஓய்வாக என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது என்னுடைய நண்பர்களுள் ஒருவரான வக்கீல் ஸ்ரீ கே.ஆர். வெங்கடராம ஐயர் அவர்கள் என்னைக் கூப்பிட்டு பக்கத்துக் கிராமத்தில் தங்கியிருக்கும் ஸ்ரீ சிருங்ககிரி மஹாஸ்வாமிகளைத் தரிசிக்க வரவில்லையா? என்று என்னைக் கேட்டார்கள். ''ஸந்யாசிகளிடம் எனக்கு நம்பிக்கையில்லை'' என்று நான் பதில் சொன்னேன். ஆனாலும் என் நண்பரின் வற்புறுத்தலுக்கு இணங்கி நான் வருவதாகச் சொன்னபோதிலும், சாஸ்திரீய உடை அலங்காரங்களோடு வர மறுத்து, என்னிடமிருந்த ஐரோப்பிய உடையில் சிறந்ததை அணிந்தவனாக ஊத்தங்குடிக்குச் சென்றேன்.

ஸ்ரீ சிருங்ககிரி மஹாஸ்வாமிகள் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்கும் சமயம் அது. ஒரு பெரிய கூடத்தில் பிரபல பெரிய மனிதர்கள் பலரும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுமாகப் பல பக்தர்கள் ஆவலோடு அவர் தரிசனத்துக்காகக் காத்திருந்தார்கள். நான் ஒரு கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தேன். மஹாஸ்வாமிகள் கூடத்துக்குள் நுழைந்தார்கள். எல்லோரும் அவர்முன் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார்கள். மஹாஸ்வாமிகளின் முதுகு மட்டுந்தான் எனக்குத் தெரிந்தது. 'ஒன்றும் தெரியாத ஒரு ஸந்யாசி'யின் முன் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்த அந்தப் பெரிய மனிதர்களைப் பார்த்த எனக்குக் கேலிச் சிரிப்புத்தான் வந்தது. பிறகு ஒவ்வொருவராக அவரிடம் அநுமதி பெற்றுப் போய்விட்டார்கள். மறுநாள், தாம் மதுரைக்கு வருவதாக மஹாஸ்வாமிகள் சொன்னார்கள். அதைக் கேட்ட நான் கேலிச் சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டேன்.

பிறகுதான் இந்த அதிசயம் நிகழ்ந்தது. மஹாஸ்வாமிகள் பக்கத்து அறை ஒன்றில் புகுவதற்காகத் திரும்பினார்கள். என்

கண்களும் அவர் கண்களும் சந்தித்தன. அவ்வளவுதான். ஒரு விநாடி நேரந்தான்; அதுகூட இருக்காது. என் கர்வம், வீண் ஜம்பம் எல்லாம் எங்கேயோ பறந்துவிட்டன. நான் என்னையே மறந்து விட்டேன். என் கண்களில் நீர் நிரம்பி மாரி போல் பெருகத் தொடங்கியது. வெளித்தூண்டுதல் எதுவும் இல்லாமலே என் தலை அவர் திருவடிகளைச் சேர்ந்துவிட்டது. ஒருமுறை அல்ல; பலமுறை நான் அவர் கமல பாதங்களில் விழுந்து விழுந்து எழுந்தேன். என் அழுகை நிற்கவேயில்லை. மஹாஸ்வாமிகள் எழும்படி என்னைப் பணித்தார்கள். பிறகு என்னைப்பற்றி விசாரித்தார்கள். நான் விளக்கமாகக் கூறினேன். எந்த முயற்சியும் இல்லாமலே நான் என் அஞ்ஞானத்தைப் பற்றியும், நெறிதவறிய மனநிலையைப் பற்றியும் கூறி, தம் கருணையால் என் மனத்தை நன்னெறிப்படுத்தி ஆளவேண்டும் என்று மன்றாடினேன். அவர் தம் முகத்தில் புன்சிரிப்பு அரும்பத் தம்மை மறுநாள் மதுரையில் வந்து சந்திக்கும்படி அன்போடு பணித்தார்கள்.

அப்படியே செய்வதாக நான் கூறினேன். அன்று இரவே - அவரைச் சந்திப்பதாகச் சொன்ன அந்த இரவே - நான் பம்பாய்ப் பிரயாணம் தொடங்க வேண்டும் என்பதை நான் மறந்தேவிட்டேன். வெளியே வந்த நான் என் நண்பரிடம் டிக்கட்டுகளைத் திருப்பிவிடும்படியும், பம்பாயில் உள்ள என் உறவினர்களுக்கு நான் அங்கே வரச் சில வாரங்கள் ஆகும் என்று தெரிவிக்கும்படியும் சொன்னேன். அதிகப்படி லீவுக்காக ஒரு தந்தி கொடுக்கவும் ஏற்பாடு செய்தேன். அன்று இரவு ஊத்தங்குடியிலேயே தங்கியிருந்த நான் மறுநாள் விடியற்காலையிலேயே எழுந்து நடந்தே மதுரையை அடைந்தேன். சுமார் ஐந்து மைல் தூரம். மஹாஸ்வாமிகள் அன்று மாலை மதுரைக்கு வருவதாக இருந்தது. அதிகாலையிலேயே நான் சாஸ்திரீய முறையில் என் ஆடை அலங்காரங்களை மாற்றிக் கொண்டு விட்டேன். பூணூலும் அணிந்து கொண்டேன். மாலையில் இந்த வேஷத்தோடு என்னைக் கண்ட மஹாஸ்வாமிகள் ஆச்சரியப்பட்டார்கள்.

நாஸ்திகனுன நான் ஆஸ்திகனுக மாறிய கதை இது. பிறகு நான் ஒவ்வொரு வருஷமும் சில ஸந்தேகங்களை நிவிருத்தி செய்துகொள்வதற்காகச் சிருங்ககிரிக்குப் போவது வழக்கம். ஆனுல் ஒருமுறைகூட நான் எந்தக் கேள்வியும் கேட்டதே இல்லை. நான்

என் ஸந்தேகங்களைச் சொல்லிக் கேட்பதற்கு முன்னமே ஸ்வாமிகள் என்னோடு பேசும் பேச்சுவாக்கில் அந்தச் சந்தேகங்களுக்கெல்லாம் பதில் கிடைத்துவிடும். அவரது மௌன வியாக்யானம் பேச்சைவிடப் பலமடங்கு சக்தி வாய்ந்தது. அவர் கண்களின் சக்தியாலேயே என் மனத்தை அடிமையாக்கித் தமதாக்கிக் கொண்டுவிட்டார்கள். என் உள்ளம் அவர் வசமானதுதான். அதை அவர் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எனக்கு ஏற்பட்ட இந்தப் புது பக்தியை நினைத்துக் காலம் சென்ற மைசூர் மகாராஜா என்னைக் கண்டு பொருமைப்படுவார். மஹாராஜா அவர்கள் மஹாஸ்வாமிகளிடம் மிகுந்த பக்தி உள்ளவர்.

நமது ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திரபிரசாத் அவர்கள் ஸ்ரீ சிருங்ககிரி மஹாஸ்வாமிகளைத் தரிசனம் செய்து அவர் ஆசியைப் பெற வரும்போது கூட இருந்து தரிசனம் செய்விக்க வேண்டுமென்று காலஞ்சென்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ என். சந்திரசேகரையரவர்கள் என்னை வற்புறுத்தி வந்தார்கள். ஸ்ரீ சந்திரசேகரையரவர்கள் விஷயமாக நமது மஹாஸ்வாமிகளின் கருணை பிரவகித்த செய்தி ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. நமது ராஷ்டிரபதியின் சிருங்ககிரி யாத்திரைக்குச் சில மாதங்களுக்கு முன் ஸ்ரீ சந்திரசேகரையர் கடுமையான ஒரு நோயின்வாய்ப்பட்டார். அது இன்ன நோய் என்றே கண்டுபிடிக்க முடியாத டாக்டர்கள் அவர் பிழைப்பது கடினம் என்றே சொல்லி கைவிட்டு விட்டார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீ சிருங்ககிரி மஹா ஸ்வாமிகளிடத்திலிருந்து தபால் மூலம் இவருக்கு விபூதிப் பிரஸாதம் வந்தது. இதை ஸ்வீகரித்து உபயோகிக்கத் தொடங்கிய நிமிடம் முதல் வியாதி குணம் காணத் தொடங்கி இவர் முற்றும் குணம் அடைந்தார். இதனால் ஸ்ரீ மஹாஸ்வாமிகளை ஸாக்ஷாத் சிவபெருமானாகவே இவர் எண்ணத் தொடங்கினார்.

ராஷ்டிரபதி அவர்கள் மைசூருக்கு விஜயம் செய்திருந்தபோது நான் அவரை அணுகி ஸ்ரீ சிருங்ககிரி விஜயம் பற்றிப் பிரஸ்தாபித்தேன். சிறு வயது முதற்கொண்டே தெய்வ பக்தியிலும், மஹான்களின் ஆசி பெறுவதிலும் பழக்கப்பட்ட ஸ்ரீ பிரஸாத் அவர்கள் உடனே இதற்கு ஒப்புக் கொண்டார்கள். ஸ்ரீ பிரஸாத் அவர்கள் ஸ்ரீ சிருங்ககிரியை அடைந்த சமயம் நல்ல மழைக்காலம். மழை கொட்டிய வண்ணம் இருந்தது. மழை நம் ராஷ்டிரபதிக்கு

ஒத்துக்கொள்ளாது என்பதை அறிந்திருந்த நான் ஸ்ரீ மஹாஸ்வாமிகளிடம் இந்த விஷயத்தைத் தெரிவித்து ஒரு நாளைக்காவது மழை இல்லாமல் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன். ''அதற்கென்ன, நாம் ஸ்ரீ சாரதாம்பாள் ஸமேத ஸ்ரீ சந்திரமௌலீசுவரரை வேண்டுகிறோம். எல்லாம் சரியாகிவிடும்'' என்று அநுக்கிரஹம் செய்தார்கள். உடனே மந்திரம் போட்டதுபோல் மழை நின்றுவிட்டதோடு ராஷ்டிரபதியவர்கள் அங்கிருந்து கிளம்பும்வரை - மாலை 5 மணி வரை-மழை பெய்யவே இல்லை.

மற்றொரு சமயம் நான் ஸ்ரீ சிருங்ககிரியில் இருந்தேன். ஒரு நாள் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஸ்ரீ சந்திரமௌலீசுவர பூஜை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது பூஜா கூடத்திற்குள் ஒரு பயங்கரமான நாக ஸர்ப்பம் நுழைந்தது. பூஜையைத் தரிசனம் செய்துகொண்டிருந்த சிஷ்யர்களெல்லோரும் பயத்தால் நடுங்கத் தொடங்கினர். பூஜா கிரஹத்திலிருந்த ஸ்வாமிகள் ஜாடை செய்து அவர்களை அமைதியாக இருக்கும்படி பணித்தார்கள். ஸர்ப்பம் பூஜை நடக்கும் இடத்துக்கே போய்விட்டது. மஹாஸ்வாமிகள் ஒரு கிண்ணத்தில் பாலை எடுத்து அதன்முன் வைத்தார்கள். ஸர்ப்பம் அமைதியாக அந்தப் பாலைக் குடித்துவிட்டு தன் படத்தோடு கூடிய தலையை உயர்த்தித் தாழ்த்தி ஸ்ரீ சந்திரமௌலீசுவரரை வணங்குவதுபோல் செய்து ஸ்ரீ மஹாஸ்வாமிகளிடம் உத்தரவு பெறுவதுபோல நேருக்கு நேராக அவரைப் பார்த்துவிட்டு வந்த வழியாகவே அமைதியாகத் திரும்பிப் போய்விட்டது.

மற்றொரு முறை மஹாஸ்வாமிகள் பூஜைக்காக ஸ்ரீ சாரதாம்பாள் ஸந்நிதிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கோயில் வாசலில் குறுக்கே ஒரு பசுமாடு படுத்திருந்தது. அதை எழுப்பி விலக்கிவிடாமல் உள்ளே புகமுடியாது. அவரோடு சென்ற பரிவாரங்கள் அதை எழுப்ப முன்சென்றார்கள். மஹாஸ்வாமிகள் அப்படிச் செய்ய வேண்டாமென்று அவர்களைத் தடுத்தார்கள். பிறகு ஸ்வாமிகள், அந்தப் பசுவின் முன் அமர்ந்து ஸ்ரீ சாரதா தேவியின் பூஜைக்காகக் கொண்டுவந்திருந்த புஷ்பம் முதலிய திரவியங்களால் பசுவிற்குப் பூஜை செய்து பழங்களையும் அதற்குக் கொடுத்தார்கள். அன்று ஸ்ரீ சாரதாம்பாள் அந்தப் பசுவாகத் தமக்குத் தரிசனம் கொடுத்ததாகவே ஸ்ரீ மஹாஸ்வாமிகள் தீர்மானமாக நினைத்தார்கள்.

பூஜை முடிந்து ஸ்வாமிகள் கொடுத்த பழங்களைச் சாப்பிட்டபின் அந்தப் பசு தானுகவே எழுந்து விலகி, ஸ்வாமிகள் உள்ளே நுழைய வழி விட்டுவிட்டது. மஹாஸ்வாமிகளைப் பொறுத்த மட்டும் பிரபஞ்ச சிருஷ்டி எல்லாமே லோகமாதாவின் ஸ்வரூபங்கள்தாம்.

என் மனத்தைக் கொள்ளைகொண்ட ஒப்புயர்வற்ற ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரபாரதீ மஹா ஸ்வாமிகள் அவர்கள் ஞானிகளுக்குள் அபூர்வமானவர். அவருக்கு ஒப்பாக ஒருவரைக் காட்ட வேண்டுமானுல் இந்தியாவின் மிகப் பழங்காலத்துக்குள் புகுந்து வால்மீகி, வியாஸபகவான். பாணினி, பதஞ்ஜலி, கௌதமர், ஸ்ரீ சங்கரபகவத்பாதர் இவர்களைத்தான் காட்ட வேண்டும். சமீபத்தில் மஹா ஸமாதியடைந்த ஸ்ரீ மஹா ஸ்வாமிகளோடு பழக்கம் ஏற்படுவதற்கு முன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப்பற்றிக் கேள்விப்பட்ட பல அபூர்வச் செய்திகளை என்னுல் நம்பவே முடியவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் போலவே மஹாஸ்வாமிகளான ஸ்ரீ சந்திரசேகரபாரதீயவர்களும் அடிக்கடி ஸவிகல்ப ஸமாதியில் முழுகிவிடுவார்கள். சிலவேளை இந்த நிலை மாதக்கணக்காக நீடிப்பதும் உண்டு. ஜகன்மாதாவின் பெயரைக் கேட்க வேண்டியதுதான் தாமதம், ஸ்ரீ மஹாஸ்வாமிகளுக்குச் சமாதி கூடிவிடும். ஸ்வாமிகளுக்கு 21 அல்லது 22 வயது இருக்கும்போதே இந்த நிலை கைகூடிவிட்டது. தமது சிறுவயதில் ஸ்ரீ சாரதாம்பாள் ஸந்நிதிக்குள் பூஜைக்காகச் சென்ற ஸ்ரீ மஹாஸ்வாமிகளுக்கு ஜகன்மாதாவின் தரிசனம் மானஸிகமாகக் கிடைத்தது. இந்தத் தரிசனம் அவர் நினைப்பை விட்டு நீங்கவே இல்லை.

ஸ்ரீ மஹாஸ்வாமிகள் 'மறைந்து விட்டார்' என்று நம்பவே முடியவில்லை. பலவகை மாறுதல்களுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளான என்னுடைய வாழ்க்கையில் முப்பது வருஷ காலம் அவரோடு நான் பிரிக்க முடியாதபடி இணைந்தே இருந்தேன். உலகில் உள்ள மனிதர்களுக்குள் - அவர்களையும் மனிதர் கணக்கில் சேர்க்கலாமானுல் - அவர்கள் ஒருவரின் கருணைப் பார்வைக்குத்தான் அகங்காரம், சுயநலம் என்ற பேய்களை ஒரே தடவையில் விரட்டும் சக்தியுண்டு. வெறும் பார்வையாலேயே அவர்கள் தீராத நோய்களையெல்லாம் தீர்த்திருக்கிருர்கள். நோய்களுக்கு அவர் கூறும் சிகிச்சைகளும் அபூர்வமாகவே

தோன்றும். உதாரணமாக நம் ராஷ்ட்ரபதியவர்கள் ஸ்ரீ சிருங்ககிரிக்கு விஜயம் செய்வதற்கு மூன்று நாட்களுக்கு முன் எனக்கு இருதய பலவீனம் காரணமாக கீல்வாத ஜுரம் வந்துவிட்டது. அப்போது ஒருவார காலமாக மழை கொட்டு கொட்டென்று கொட்டிய வண்ணம் இருந்தது. மஹாஸ்வாமிகள் என்னைப் பார்த்து, ''விபாண்டக மகரிஷியின் மலையில் ஏறி, அங்கே உள்ள சிவலிங்கத்தை நமஸ்காரம் செய். எல்லாம் சரியாகிவிடும்'' என்று அனுக்கிரஹம் செய்தார்கள். மலையில் ஏறுவது வெகு சிரமமாக இருந்தது. ஆனால் நான் மலையில் ஏறிச் சிவலிங்கத்துக்கு முன் ஒரு தடவை நமஸ்காரம் செய்து எழுந்தவுடன் என்னை வாட்டிய கடுமையான ஜுரம் மறைந்தேவிட்டது!

மற்றொரு சமயம் என் மனைவி கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்தாள். டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள். மஹாஸ்வாமிகளிடம் முறையிட்டுக் கொள்ளக்கூட எனக்கு அவகாசமில்லை. மானஸிகமாக அவரை வேண்டிக் கொண்டேன். அவர் 500 மைல்களுக்கு அப்பால் இருந்தார். அப்போது மஹா ஸ்வாமிகள் ஸமாதி நிலையில் இருந்தார்கள். சில விநாடிகள் அவர் நிஷ்டை கலைந்து வெளியே வந்தார். தம் காரியதரிசியைப் பார்த்து என் மனைவிக்கு உடம்பு குணமாய்விடும் என்றும் கவலைப்பட வேண்டாம் என்றும் எனக்கு எழுதச் சொன்னார்கள். என் மனைவி பிழைத்து எழுந்து விட்டாள்.

இன்னோர் அனுபவம் வெகு அற்புதமானது; டெல்லியில் இருந்த என் மூத்த புதல்விக்கு நெருப்பினால் விபத்து ஏற்பட்டுவிட்டது. அவள் உடம்பில் நெருப்பு சுடாத இடமே இல்லை என்ற செய்தி கல்கத்தாவிலிருந்த எனக்கு எட்டியபொழுது பயத்தாலும் கவலையாலும் என் உடம்பு முழுவதும் நடுநடுங்கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் என்ன செய்வது என்று முடிவுகட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தபொழுது ஸ்ரீ மஹா ஸ்வாமிகளிடமிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. ''ஸ்ரீ நரஸிம்மரை ஹோமாக்னியின் மூலம் பூஜை செய். பிரஹ்லாதனைப் பல விபத்துக்களினின்றும் காப்பாற்றிய பிரபு உன் புத்திரியை நிச்சயம் காப்பாற்றுவார்'' என்று அதில் கண்டிருந்தது. அந்த ஹோமத்தை சாஸ்திரிகளின் துணைகொண்டு நான் செய்து கொண்டிருந்தபோது டெல்லியிலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. ''ஸப்தர்கஞ்ச்

ஆஸ்பத்திரி டாக்டர்கள் அவளை வீட்டுக்கு எடுத்துப்போகச் சொல்லிவிட்டார்கள். இன்னும் 24 மணி நேரத்துக்கு மேல் தாங்காது என்று சொல்கிறார்கள்'' என்ற செய்தி அதில் இருந்தது. ஆனால் என் மகள் அந்தக் கண்டத்தில் பிழைத்து விட்டாள்.

ஸ்ரீ ராஜேந்திரபாபு சிருங்ககிரியிலிருந்து புறப்பட்டுப் போன ஒரு மணி நேரத்திற்குப் பின் நான் மஹாஸ்வாமி களிடம் விடைபெறச் சென்றேன். அவரைப் பிரியமுடியாத நான் குலுங்கக் குலுங்க அழுதுவிட்டேன். அவர் என்னைக் கூப்பிட்டு பக்கத்தில் உட்காரச் சொல்லி, 'நீ ஏன் துக்கப்படு கிறாய்? நீ அடுத்த முறை இங்கே வருவதற்குள் நான் இந்த உடலிலிருந்து விடுதலை பெற்றிருந்தால் நீ நினைக்கும் போதெல்லாம் உன்னிடம் வந்துவிட முடியும்'' என்று சொன்னார்கள். சாவு என்பது வெறும் மாயை என்பதை எனக்கு விளக்கவே ஸ்ரீ ஸ்வாமிகள் இப்படிச் சொல்வதாக நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் உண்மையாகவே தம் மஹா ஸமாதியைத் தாங்கும் பரிபக்குவ நிலையை எனக்கு உண்டாக்குகிறார் என்பது எனக்கு அப்போது தெரியவில்லை.

இந்த விஷயங்களை எல்லாம நான் வெகு பணிவோடு தான் எழுதுகிறேன். எவர் ஒருவர் மஹாஸ்வாமிகளின் கருணையை உண்மைப் பக்தியோடு வேண்டுகிறாரோ, அவருக்கு நிச்சயம் அது நிறையக் கிடைக்கும் என்ற என் நிச்சயத்தையும் அநுபவத்தையும் உலகுக்குக் காட்ட இது பயன்படும் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ குரு கிருபா விலாஸம்

திருவனந்தபுரம் K.சங்கரநாராயண அய்யர்

1927ம் ஆண்டின் துவக்கம். ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிஷ்யர்களை அனுக்ரஹித்துவிட்டு, பகவதி கன்யாகுமாரியை தரிசித்துக் கொண்டு நாகர்கோவில் மார்க்கமாய் திருவனந்த புரத்திற்கு விஜயம் செய்தார்கள். ராஜ விருதுகளுடன் தங்கப் பல்லக்கில் ஊர்வலம் வந்த அவர்களை ஸேவித்துக் கொண்டு பிறகு ''பத்ம விலாஸம்'' அரண்மனையில் அவர்களின் அமிருத மொழிகளைக் கேட்டேன். ''குரு ஒருவரே-அவரை மறக்கக் கூடாது. எப்பொழுதும் வழிபட வேண்டும்'' என்ற உபதேச மொழி என் மனதைக் கவர்ந்தது.

திருவிதாங்கூரில் பிரதம நீதிபதியாயிருந்த ஒரு பெரி யோரின் கிருஹத்திற்கு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் விஜயம் செய்யும்பொழுது, அண்டையிலுள்ள என் இல்லத்தின் முன்பு, ஹாரத்தி, பூர்ணகும்பம் முதலியவைகளால் அவர்களை உபசரித்துவிட்டு, நீதிபதியின் இல்லத்தில் நடந்த பூஜை யையும் கண்டுகளித்தேன். அவர்களின் அமானுஷமான திவ்யரூபம் என் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தது.

சில வாரங்களுக்குப் பின் சில கனவான்களுடன் காலடிக்குச் சென்றேன். சங்கர ஜயந்தி உத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. மஹாஸ்வாமிகள் அவர்களை அடிக்கடி தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஒருநாள் என் மனதில் உள்ள தாபத்தை விண்ணப்பித்துக் கொண்டேன். பயத்துடனும் விநயத்துடனும் விஞ்ஞாபித்து நின்ற என்னை மறுநாள் காலையில் தன்னிடம் வரும்படி நியமித்தார்கள். அப்படியே மறுநாள் மஹாஸ்வாமிகள் ஸந்நிதியை அடைந்து அவர்கள் பாத பத்மங்களை வணங்கின உடன் அவர்கள் ஆக்ஞையின்படி ஸமீபத்தில் அமர்ந்தேன். அப்பொழுது அவர்கள் தங்கள் கரகமலத்தில் ஜலம் எடுத்து அபிமந்திரித்து என் முகத்தில் புரோக்ஷித்தார்கள். பல ஆயிரம் வோல்ட்

(Volt) மின்சக்தி (Electric Current) பாய்ந்ததுபோல் எனக்கு நடுக்கமும் பரவசமும் ஏற்பட்டன. ''பயம் வேண்டாம். எல்லாம் சரியாய் நடக்கும்'' என்று என்னை அனுக்ரஹித்து மந்திரதீக்ஷையும் அருளினார்கள். இந்த அனுக்கிரஹத்தின் பலனாக எனக்கு மூன்று புத்திரர்கள் ஜனித்திருக்கிறார்கள். நான் ஒரு வழக்கறிஞனாக (Advocate) இருந்தேன். ஆனால் சர்க்கார் உத்தியோகம் பெற்று பப்ளிக் ப்ராஸிக்யூட்டராகவும், ஜில்லா ஜட்ஜாகவும் உயர்வடைய ஆசைப்பட்டேன். அதுவும் படிப்படியாய் மஹாஸ்வாமிகள் அனுக்ரஹத்தால் நிறைவேறியது.

1939-ம் ஆண்டு பெங்களூரில் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலய பிரதிஷ்டை நடந்த சமயத்தில் ஸ்ரீ மஹாஸ்வாமிகளைத் தரிசித்தேன். கடுந்தவத்தினால் அவர்கள் முகமண்டலம் அக்னிஜ்வாலையைப் போல் காணப்பட்டது. கூர்ந்த கண்கள் எல்லோருடைய உள்ளத்தையும் ஆழ்ந்து பார்த்தன. எங்கும் ஒரே ஆத்ம தரிசனம் அவர்களுக்கு. அவர்கள் முன்னிலையில் சென்று அவர்களை நோக்க எனக்கு அச்சம் ஏற்பட்டது. தவத்தின் மஹிமைதான் என்ன! ஆத்ம ஒளியின் ப்ரகாசம்தான் என்ன! தொடர்ந்து காலடிக்கும் சென்று மஹாஸ்ாமிகளை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

பதினைந்து ஆண்டுகள் கழிந்தன. 1954 செப்டம்பர் மாதம். அப்பொழுது நான் எர்ணாகுளத்தில் ஜில்லா நீதிபதியாகப் பணியாற்றி வந்தேன். ஸமீபத்தில் உபநயனமான என் குழந்தைகளை அழைத்துக் கொண்டு மனைவியுடன் சிருங்கேரி சென்று மஹாஸ்வாமிகளைத் தரிசனம் செய்துவர வேண்டுமென்று அவா உண்டாயிற்று. ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் பஹிர்முகமாய் இருக்கிறார்களா என்று கடிதம் எழுதித் தெரிந்து கொள்ளலாமென்று யோசித்தேன். பிறகு எப்படியிருந்தாலும் சிருங்கேரி போவது என்று தீர்மானித்து மனைவி மக்களுடன் புறப்பட்டேன். ரயில்வே ஸ்டேஷனில் ஒரு பிராம்மணர் என்னை அணுகி ''சிருங்கேரிக்குப் போகிறீர்களா?'' என்று பரபரப்புடன் கேட்டார். இவருக்கு இது எப்படித் தெரிந்தது?

என்று வியப்படைந்த வண்ணம் ''ஆம்'' என்றேன். ''சென்று வாருங்கள். ஸௌகர்யமாக தரிசனம் கிடைக்கும்'' என்றார் அவர். இந்த சுப சகுனத்தால் என் மனம் பூரித்தது.

சிருங்கேரியை அடைந்ததுதான் தாமதம் ''சீக்கிரம் போங்கள். ஸ்ரீ மஹாஸந்நிதானம் பிக்ஷை செய்துகொண்டு இப்பொழுது வெளியில் வரும் நேரம் ஆகிறது. உடனே போனால் திவ்யமாக தரிசனம் செய்யலாம்'' என்று ஒருவர் வற்புறுத்தினார். இதைக் கேட்டு பரபரப்புடன் துங்கையில் நீராடி சந்திரமௌளி தொட்டிக்கு நாங்கள் விரைந்தோம். சில வினாடிகளில் இளைய ஸ்வாமிகள் அவர்களையும், தொடர்ந்து மஹாஸ்வாமிகளையும் தரிசித்து வணங்க பாக்கியம் கிடைத்தது. எங்களை அனுக்ரஹித்ததுமன்னியில் அக்கரை சென்று குருநாதாள் அதிஷ்டானத்தை தரிசித்துவர ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஆக்ஞாபித்தார்கள்.

அன்று மாலையில் கணேச சதுர்த்தி வித்வத் ஸபை மடத்தில் நடந்து கொண்டிருந்தது. இளைய ஸந்நிதானம் அவர்கள் பீடத்தில் அமர்ந்திருந்து ஸபையை நடத்தினார்கள். மஹாஸந்நிதானம் அவர்களும் ப்ரஸன்னமாயிருந்தார்கள். அப்பொழுது கண்ட காட்சியின் மஹிமையை எப்படி விவரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை.

மறுநாள் பாதபூஜை செய்தேன். அப்பொழுது இளைய ஸந்நிதானம் ப்ரஸன்னமாய் இருந்தார்கள். அடுத்த அறையில் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ சக்ரார்ச்சனை செய்து கொண்டிருந் தார்கள். பாத பூஜை முடிந்ததும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் இருக்கும் அறையில் நாங்கள் அழைக்கப்பட்டு மங்கள ஹாரத்தியை ஸேவை செய்யும் மஹா பாக்கியம் அடைந்தோம். தொடர்ந்து இரண்டு மூர்த்திகளுக்கும் பிக்ஷா வந்தனமும் செய்தோம்.

அன்று ராத்திரியில் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தில் இரண்டு குருக்களும் விஜயம் செய்தார்கள். பெரிய கூட்டம். சிரமப் பட்டு நாங்கள் முன் வரிசையில் வந்தோம். உலக ப்ரஸித்தி

பெற்ற ஓர் அறிஞர் அங்கு வந்திருந்தார். ஸ்ரீ மஹாஸந்நிதானம் அம்பாளைத் தரிசித்துப் பிரதக்ஷிணம் செய்து வந்ததும் இந்த அறிஞர் அறிமுகப்படுத்தப்பட்டார். மஹாஸந்நிதானம் அவரிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் பக்கத்தில் நமஸ்கரித்து நின்ற என்னைக் கூப்பிட்டு தன் கரகமலங்களில் வைத்திருந்த பிரஸாதப் புஷ்பங்களை என்னிடம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள்.

மறுநாள் நான் இரண்டு மூர்த்திகளுக்கும் பிக்ஷா வந்தனம் செய்து சிருங்கேரியை விட்டு புறப்பட ஆயத்தம் செய்து கொண்டேன். புறப்படும் முன் மஹாஸந்நிதானத்தைத் தரிசனம் செய்ய முடியுமா என்று கேட்டதில் ஸாத்தியப்படும் என்று தோன்றவில்லை. இளைய ஸந்நிதானம் வெகு கருணையுடன் எங்களுக்கு ஏகாந்தமாய் தரிசனம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள். அனுக்ரஹம் பெற்று, மனக் குளிர்ச்சி யுடன் வெளியில் வந்ததும் அங்கு கூடியிருந்த மற்ற பக்தர்களுடன் எங்களுக்கும் மந்திராக்ஷதை அருளினார்கள். அவர்களை வணங்கி சில அடி தூரம் சென்றவுடன் மறுபடியும் என்னை ஸந்நிதானம் அருகில் அழைத்து ஸ்ரீ சாரதாம்பாள் மூர்த்தி பதித்த ஒரு வெள்ளி பதக்கத்தை (Medallion) அளித்தார்கள்.

இதைப் பார்த்ததும் நான் பரவசமானேன். பல வருஷங் களுக்கு முன் ஒரு நாள் ராத்திரி ஒரு கனவு கண்டிருந்தேன். அதாவது ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ஒரு சிறு இரும்பு வளையம் போல் ஒன்றை எடுத்து என் கையில் அளித்தார்கள். கையில் விழுந்ததும் அந்த வளையம் ஒரு தங்கப்பதக்கமாய் மாறிவிட்டது. அதைப்போலவே இப்பதக்கமும் காணப் பட்டது. கனவில் கண்ட அனுக்கிரஹம் யதார்த்தத்தில் அனுபவத்திலேற்பட்ட ஆச்சர்யத்தில் மெய்மறந்தேன். சில வினாடிகளுக்கு ஒன்றுமே தெரியாமல் மயக்கமாய் இருந்து விட்டேன். உணர்வு வந்தவுடன் வெளியில் வந்ததும் திடீரென்று மஹாஸந்நிதானம் வேறு ஓர் அறையிலிருந்து பிரஸன்னமானார்கள். என் கனவையும் அனுபவத்தையும்

வணக்கமாய் விண்ணப்பித்துக் கொண்டேன். மஹா ஸந்நிதானம் மந்தஹாஸத்துடன் எங்களுக்கு ஆசி அருளி ''ஊருக்குச் சென்று கடிதம் போடு'' என்று சொன்னார்கள். அதுதான் நான் அவர்களை சரீரத்துடன் கடைசியாகத் தரிசித்தது.

எர்ணாகுளம் திரும்பி சில தினங்கள் கழிந்தன. ஒரு நாள் விடியற்காலை ஒரு விசித்திரக் கனவு கண்டேன். ஸ்ரீ மஹா ஸந்நிதானம் தரிசனம் அளிக்கிறார்கள். அவர்கள் திவ்ய உருவம் பெரிய சிவலிங்கமாக மாறி விபூதி ருத்ராக்ஷங் களுடன் ஜ்வலிக்கிறது. மறுபடியும் மனித உருவமாகத் தோற்றமளிக்கிறது. இவ்விதம் மாறி மாறித் தென்படவும் ஆச்சரியத்துடன் கண் விழித்தேன். காலையில் என் அலுவல்களின் இடையில் டெலிபோன் மணி அடித்தது. என் நண்பர் துறைமுக இலாகா அதிகாரி பேசினார். ''நீங்கள் கேள்விப்பட்டீர்களா? சிருங்கேரி மஹா ஸந்நிதானம் விதேஹ முக்தி அடைந்துவிட்டார்கள் என்று ரேடியோ செய்தி. நீங்கள் சிருங்கேரி போய் தரிசனம் செய்து கொண்டது உங்கள் பாக்கியம்'' என்றார். இதைக் கேட்டதும் எனக்குண்டான படபடப்பை எப்படிச் சொல்வது? சற்று நேரம் கழித்து நான் கண்ட கனவு ஞாபகம் வந்தது.

ஓராண்டு கழிந்தது. வருடாந்திர ஆராதனை நெருங்கியது. என் மனைவியுடன் சிருங்கேரிக்குப் புறப்பட்டேன். சிவ மொக்கா சென்றதும் அதிதிகளை ஆராதிப்பதில் ஊக்கமுள்ள ஸ்ரீ எச்.ஸுந்தரமய்யர் அவர்கள் வீட்டில் தங்கினேன். அவர் ஸ்ரீ ராமாராவ் என்ற பெரியாரை அறிமுகப்படுத்தினார்.

ஸ்ரீ ராமாராவ் பெரிய பெட்டி ஒன்று கொண்டு வந்திருந் தார். மறுநாள் விடியற்காலம் அப்பெட்டியிலிருந்து இரண்டு சிவலிங்களுக்கு அபிஷேக பில்வார்ச்சனையுடன் பூஜை நடந்தது. நானும் அதில் பங்கு கொண்டேன். பூஜை முடிந்ததும் அந்த சிவலிங்கங்களை பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு சிருங்கேரியை அடைந்தோம். அங்கு இந்த

லிங்கங்களில் தாம்ர வர்ணமாய் இருந்த லிங்கத்தை தங்கபீடத்தில் ஆரோகணித்து பூஜை செய்து சாரதாம்பாள் ஆலயத்திலிருந்து அக்கரையில் ஸச்சிதானந்த விலாஸத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு போனோம். எனக்கும் அந்தப் பீடத்தைத் தூக்கிக் கொண்டுபோக பாக்கியம் கிடைத்தது. ஸச்சிதானந்த விலாஸம் சென்றதும் அப்போது பீடாதிபதியாக இருந்த ஸ்ரீ மஹாஸந்நிதானம்* அந்த லிங்கத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

மறுநாள் இந்த லிங்கம் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்களின் அதிஷ்டானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. நரஸிம்ம வனத்திலுள்ள அதிஷ்டானத்தில் சிவலிங்கமாக காக்ஷியளிக் கும் குருநாதாள் என் உள்ளத்திலும் ப்ரகாசிக்கும்படி எப்பொழுதும் என் பிரார்த்தனை.

இங்கு கவனிக்கவும்! விதேஹகைவல்யம் அடையும் தருணத்தில் என் கனவில் தாங்கள் சிவலிங்கமாக மாறுவதாக தோற்றத்தை உண்டு பண்ணினார்கள். ஆராதனையின்போது தங்களுடைய அதிஷ்டானத்தில் பிரதிஷ்டை செய்யப்போகும் சிவலிங்கத்தை எனக்கு காக்ஷி அளித்து ஸ்வல்ப வழிபாடு செய்யும் பாக்கியத்தையும் அருளினார்கள். இது என் முன்னோர்கள் செய்த தவப்பயனே.

ஸ்ரீ ராமாராவ் அவர்களுக்கு இந்த சிவலிங்கங்கள் எப்படி கிடைத்தன என்பது ஓர் அதிசய சம்பவம். அதன் விவரம் அவர்கள்தான் சொல்ல வேண்டும். நான் சொல்ல விரும்புவது ஒன்றுதான். ''குருநாதாள் ஒருவரே. அவர் சரண கமலங்களே இகத்திற்கும் பரத்திற்கும் கதி''. நான் 1927-ம் ஆண்டில் பத்ம விலாஸம் அரண்மனையில் கேட்ட உபதேசம் இதுவே!

*ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தர்

பண்டிதர் ரஸத்தின் லக்ஷணத்தைச் சொல்லிவிட்டு, ''இந்த ரஸம் வேதத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

रसो वै सः, रसं ह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति।

(ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி)

என்ற தைத்திரீய உபநிஷத் வாக்யமே இதற்குப் பிரமாணம். இந்த வாக்யம் ஆலங்காரிகர்கள் கூறும் ரஸத்தையேதான் கூறுகிறது'' என்று கூறினார். உடனே ஸ்ரீஸ்வாமிகள் ''நீங்கள் கூறுவது உண்மையே. ஆனால் நீங்கள் சொல்லும் ரஸம் இந்த உபநிஷத் வாக்யத்திற்குப் பொருளாயின் लब्ध्वा नन्दी भवति (லப்த்வா நந்தீ பவதி) என்று பதம் பிரிக்க வேண்டும். आनन्दी भवति (ஆநந்தீ பவதி) என்று பிரிக்கக் கூடாது. नन्दी भवति पशुर्भवतीत्यर्थः । இந்த ஆலங்காரிகர்கள் கூறும் ரஸத்தை அநுபவிப்பவன் நந்தியாகிறான்; அதாவது பசுவுக்கு ஸமானனாகிறான் என்று பொருள் கூற வேண்டும். ப்ரஹ்மம் பொருளாயின் आनन्दी என்று பதம் பிரித்து அதை அடைந்தவன் ப்ரஹ்மாநந்தத்தை யனுபவிக்கிறான் என்று அர்த்தம் கொள்ளலாம்'' என்றார்கள். என்னே ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களின் வைராக்யம்! மற்றோர் ஸமயம் வித்யார்த்தி ஒருவன் பூர்வ மீமாம்ஸா சாஸ்திரத்தில் பாட்ட தீபிகையில் வாக்யார்த்தம் சொன்னான். அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமிகள் ''நீ கூறும் லக்ஷணம் லக்ஷ்யமல்லாத ஈசுவரனிடமும் வந்து விடுகிறதே. அதிவியாப்தி தோஷம் வராதா'' என்று கேட்டார்கள். ''ஜைமினி மதத்தில் ஈசுவரனே கிடையாதே'' என்று வித்யார்த்தி கூறவும், ஸ்ரீ ஸ்வாமிகள் கொஞ்சம் பரபரப்புடன் ''ஜைமினி மதத்தில் ஈசுவரன் இல்லையென்று கூறாதே. அப்படி இருந்தால் அந்த ஜைமினி ஈசுவரனைக் குறித்து ''சிவவேத பாத''ஸ்தவத்தை எப்படி எழுதுவார்? ஆதலால் ஈசுவரனை ஜைமினி நிராகரிக்கவில்லை. எனக்கு ஈசுவரனைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று சொல்லு'' என்று கூறினார்கள். என்னே ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஸ்திக்யம்!

வேறு ஒரு ஸமயத்தில் ஒரு வித்யார்த்தியிடம் ''வேதாந்தம் படிக்கிற நமக்கு சமதமாதிகள் அவசியம் வேண்டும். அது போகட்டும். சமம், தமம், திதிக்ஷா என்ற பதங்களுக்காவது பொருள்

தெரியுமா? அதைத் தெரிந்துகொண்டால்தானே அவைகளை அநுஷ்டிக்க முடியும்'' என்றார்கள். வித்யார்த்தி ''சமம் என்றால் மனதை அடக்குவது; தமம் என்றால் மற்ற இந்திரியங்களை அடக்குவது; குளிர், வெயில் முதலானவைகளைப் பொறுத்துக் கொள்வது திதிக்ஷை'' என்று கூறினான். உடனே ஸ்ரீ ஸ்வாமிகள் ''அப்படியானால் நல்ல தூக்கத்தில் தூங்குகிறவனுக்கு சமதமாதிகள் இருப்பதாகக் கூறலாமா?'' என்றார்கள். வித்யார்த்தி பதில் கூறத் தெரியாமல் தயங்கவே, ஸ்ரீ ஸ்வாமிகள் ''அதனால் நிர்விஷயமான மனமே சமம். நிர்விஷயமான இந்திரியமே தமம் என்று சொல். ஸுஷுப்தியில் அப்படியில்லையல்லவா? இதுபோலவே நான் குளிரினால் கஷ்டப்படுகிறேன், எனக்கு கம்பளி வாங்கித் தருபவர் ஒருவருமில்லை என்று கவலையுடன் புலம்பிக்கொண்டே சீதோஷ்ணாதிகளை ஸஹித்துக் கொள்வது திதிக்ஷை ஆகாது. அதைப்பற்றின எண்ணமோ பேச்சோ ஒன்றுமில்லாமல் பொறுத்துக் கொள்வதுதான் திதிக்ஷை'' என்று போதித்தார்கள்.

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் அவர்களுக்கு வைதிக கர்மானுஷ்டானங்களிலும், அநுஷ்டிப்பவர்களிடமும் மிகவும் மதிப்பு உண்டு. மடத்துப் பண்டிதர்களை ஔபாஸனாதிகள் செய்யும்படி வற்புறுத்துவார்கள். ''நமது மடத்திற்கு பலர் பணம் கொடுத்திருக்கிறார்கள். நாம் கர்மாக்களையனுஷ்டித்துப் புண்யம் ஸம்பாதித்தால்தானே அதில் ஒரு பாகத்தை அவர்களுக்குக் கொடுக்க முடியும். நீங்கள் புண்ய கர்மாக்களைச் செய்யாமலிருந்தால் மடத்தை ஆதரிப்பவர்களுக்கு என்ன பயன் கிடைக்கும்'' என்று உபதேசம் செய்வார்கள்.

ஒரு சமயம் மதுரையில் நெல் வியாபாரம் செய்துவரும் பிராம்மணர் ஒருவர் சிருங்கேரிக்கு வந்து ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசனம் செய்துவிட்டு ''நான் ஊருக்குப் போய்வருகிறேன், நாளை மறுநாள் ஸ்தாலீபாகம் செய்ய வேண்டும்'' என்றார். ஸ்ரீ ஸ்வாமிகள் ''அப்படியா; ரொம்ப சந்தோஷம். இதுதான் உங்களுக்கு சரமசரீரம் (கடைசி ஜன்மா); போய் வாருங்கள்'' என்று சொல்லி உத்ஸாஹப்படுத்தி ஞானமுண்டாகும்படி அநுக்ரஹித்தார்கள்.

விஜயநகரத்திலிருந்து பண்டிதர் ஒருவர் சிருங்கேரிக்கு வந்து ஸ்வாமிகளை வந்தனம் செய்துவிட்டு, தாம் ஸம்ஸ்கிருத கலாசாலையில் மீமாம்ஸா சாஸ்திரம் போதித்து வருவதாக விக்ஞாபித்துக் கொண்டார். ஸ்ரீ ஸ்வாமிகள் ''ஔபாஸனம் செய்கிறீர்களா?'' என்று கேட்டார். அவர் ''இல்லை''யென்று கூறினர். ''கர்மாக்களைக் கூறும் சாஸ்திரங்களைப் படித்தால் மட்டும் போதுமா? அவைகளை அனுஷ்டிக்க வேண்டாமா'' என்று சொல்லி ஸ்ரீ ஸ்வாமிகள் அவருக்கு கர்மானுஷ்டானத்தில் சிரத்தை வரும்படி செய்தார்கள். தம்மிடம் வந்தவர்கள் யாவரும் கிருதார்த்தர்களாகவே திரும்பிச் செல்ல வேண்டுமென்பது ஸ்ரீ ஸ்வாமிகளின் அவா. ஏதாவது ஓர் அபூர்வமான விஷயத்தைச் சொல்லி உபதேசம் செய்து மனதில் நன்ருகப் பதியவைப்பார்கள்.

7

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

களக்காடு ஸ்ரீ S. இராமநாராயண ஐயர்

1927 ஆகஸ்டு மாதம் ஆடி அமாவாஸ்யையன்று யோகீச்வர வர்யாளான ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளை ஸ்ரீ தாம்ரபர்ணி தீரத்திலுள்ள பாபவிநாசத்தில் முதன் முறையாகத் தரிசிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது எனக்கு வயது பதினாறு. நான் பார்க்கும்போது அவர்கள் தீர்த்தம் கொடுக்கும் ஸமயம். அவர்களைச் சில விநாடிகள்தான் பார்க்க முடிந்தது. பிறகு அக்டோபர் மாதம் விஜயதசமியன்று கல்லிடைக்குறிச்சியில் தரிசித்தேன். நான் பார்க்கும் சமயம் ஒரு தனிகர் வீட்டில் த்ரிசதி அர்ச்சனை முடிந்து மேனாவில் ஏறும் ஸமயம். நான் மேனாவுடன் தொடர்ந்து சென்று அடுத்த தெருவில் ஒரு தனிகர் வீட்டுப் பாத பூஜையில் ஸ்ரீ ஆசார்யாளுக்கு வெகு ஸமீபத்தில் உட்கார்ந்து கொண்டேன். ஸ்ரீ ஆசார்யாளைத் தவிர வேறு எதையும் பார்க்க என் கண்கள் மறுத்துவிட்டன. அதேமாதிரி ஒரு ஸஹஸ்ரநாமம், இரண்டு த்ரிசதி அர்ச்சனைகள் முடியும்வரை சுமார் இரண்டரை மணி நேரம் அவர்களை என் கண் குளிரப் பார்த்தேன்.

நான் பார்க்கும்போது அவர்களுக்கு நல்ல மத்ய வயது. காஷாய விபூதி ருத்திராக்ஷங்களை அணிந்த ஸ்வர்ணச் சாயையான சரீரம். ''அம்புஜ லோசன கம்பு சுபக்ரீவ - பிம்பாதர சந்த்ர பிம்பானன - சாம்பேய நாஸாக்ர லக்ன ஸுமௌக்திக'' என்ற நாராயண தீர்த்த யதீந்த்ராளின் வாக்குப்ரகாரம் நம் பரமாசார்யாளான யதீந்த்ராளுக்கும் இத்தகைய சுப லக்ஷணங்கள் பூரணமாக பொருந்தியிருந்ததால்தான் அவர்களைத் தவிர வேறு எதையும்

பார்க்க மனம் வரவில்லை. பூர்ண சந்திரன் போன்ற முகம், பரம யோகிகளாகையால் தன்னுடைய த்ருஷ்டியை நாஸாக்ரத்தில் செலுத்தும்படியான அழகான கூர்மையான நாஸிகை எக்காலத்திலும் அழியாத பளிச்சென்ற திரிபுண்ட்ரத்துடன் கூடிய விசாலமான நெற்றி, வில்லைப் போல அழகாக வளைந்த அடர்ந்த புருவங்கள் ''தயமான தீர்க்க நயனும் - தேசிக ரூபேண'' என்றபடி நீண்ட கண்கள், மீன்கள் தங்கள் குஞ்சுகளை திருஷ்டியால் போஷிப்பது போல நம் பரமாசார்யாளும் கடாக்ஷ லேசத்தாலேயே ஜகத்தைக் காப்பாற்றுகிறவர்கள் அல்லவா? ''ஜகமெல்லனு ஸூதா த்ருஷ்டிசே ப்ரோத்ஸூவாரு - எந்தரோ மஹாநுபாவுலு'' என்பது ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் வாக்கு.

இவ்வளவுக்கும் சிகரம் வைத்தாற்போல் அவர்கள் முக கமலத்தில் குளிர்ந்த பார்வை, தயவு, ஈகை, சாந்தம், அடக்கம், ஆற்றல், பரிவு, அருட்சக்தி, மஹாதேஜஸ் இவ்வளவும் ஒருங்கே பிரகாசித்துக் கொண்டிருந்தன. 'ரக்த சுக்ல ப்ரபா மிச்ரம்' என்றபடி அதி பாடலமான கரசரணங்களையுடையவர்கள் ஸ்ரீராமனை ஸ்ரீ த்யாக ப்ரும்மம், ''நீ மேனு-நாம வைபவம்புலனு - நீ பராக்ரம - தைர்ய - சாந்த மானஸமு - நீ ஈவுலனி வசன ஸத்யமகு ரெகுவர நீயட' என்று சொன்னதுபோல் ஸகல ஸௌபாக்ய லக்ஷணங்களும் பெற்றவர். சக்ரவர்த்தி முதலானவர்கள் வணங்கும் பதவியில் இருக்கும் அவர்களைப் பார்த்து எனக்கு பயம் ஏற்படுவதற்குப் பதில் அவர்களிடம் எனக்குப் ப்ரீதியே ஏற்பட்டது. ஏனென்றால் அவர்களுடைய எளிமையும் குழந்தை உள்ளமுந்தான் காரணம். எல்லோரும் அவர்களிடம் மிக பய பக்தியுடன் இருக்கும்போது அவர்கள் எல்லோரையும் விட பயபக்தி உள்ளவர்கள் போல் என் மனதிற்குப்பட்டது.

அவர்கள் தீர்த்தம் கொடுக்க ஆஸனத்தில் உட்காரும்பொழுது ஓர் ஓரமாகவே உட்காருவார்கள். கைகால்கள் அதிகம் அசையாமலும், முகம் அசையாமலும் மந்தஸ்மிதத்துடன் இருப்பார்கள். உபந்யாஸம் பண்ணும் பொழுது கேட்பவர்களுக்கு ஐயமற நவரஸம் ததும்பச் சொல்வார்கள். பட்டண பிரவேச சமயம் கிரீடம் முதலிய அலங்காரங்களை தரித்து பல்லக்கில் வரும்போது பார்த்தால், அன்றுதான் புதிதாகக் கிரீடம் தரிப்பவர்கள் போலும் பல்லக்கில் ஏறுபவர்கள் போலும் தோன்றுவார்கள். ஐந்து வயதுப்

பையனைப் படிக்க வைக்கும்போது அவனுக்கு ஜரிகைத் தொப்பி, சட்டை போட்டு உட்கார வைத்தால் எப்படியிருக்குமோ அப்படி இருப்பார்கள் ஆசார்யாள். பூஜைக்கு வருவார்கள், தீர்த்தம் கொடுக்க வருவார்கள், பாத பூஜைக்கு வருவார்கள் என்று சொல்வதைவிட ஆசார்யாளைக் கூட்டிக் கொண்டு வருவார்கள் என்று சொல்வதுதான் பொருந்தும். அவர்களுடன் இணைபிரியாதிருந்தவர்கள் நஞ்சன்கூடு ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் ஸஹோதரரான ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள். ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள்தான் ஆசார்யாளைக் கைலாகு கொடுத்து அழைத்து வருவார்கள். ஆசார்யாள் பாத பூஜை நடக்கும் ஸமயம் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளிடம் மெதுவாக ஸம்பாஷித்துக் கொண்டிருப்பார்கள். பூஜை பண்ணிவைக்கும் சாஸ்திரிகளிடம் அர்ச்சனைகளை நன்ருக பதம் பிரித்துச் சொல்லச் சொல்வார்கள். தனியாக மேனுவில் செல்லும்போதும் தங்கப் பல்லக்கில் செல்லும் போதும் அவர்களின் உதடு ஸதா அசைந்து கொண்டே இருக்கும். எந்த மஹா வாக்யத்தைச் சொல்கிருர்களென்று யாரால் அறிய முடியும்? நான் அன்று பூராவும் அவர்களுடனேயே இருந்தேன் என்று சொல்லலாம். அன்று பாத பூஜை, தீர்த்த ப்ரஸாதம், ஸந்தர்ப்பணை, ஸம்ஸ்க்ருத காலேஜ் விஜயம் செய்து அவ்விடம் உபந்யாஸம், இரவு தங்கப் பல்லக்கில் பட்டண ப்ரவேசம் எல்லாம் நடந்தன.

இவ்வளவு வைபவங்களை நேரில் பார்த்ததும், மறுபடியும் எனக்கு ஆசார்யாளிடம் பரிவே ஏற்பட்டது. ஒரு குருவின் ஸந்நிதானத்தில் ஒரு ஸத்சிஷ்யன் அங்க சேஷ்டைகள் இல்லாமல் அமைதியாகவும், பொறுமையாகவும் சிரிப்பு இல்லாமலும் லஜ்ஜை, பயம், விநயம் முதலியவைகளுடன் இருப்பதுபோல ஸர்வக்ஞர்களாயும், மஹா பிரபுக்களாயும், ஜகத்துக்கெல்லாம் குருவாயுமிருப்பவர்கள் நடந்து கொள்கிருர்களே! இது யாருக்காக என்று எனக்குப் புரியவில்லை. இப்பேர்ப்பட்ட மஹநீயர்கள் ஸர்வ சாதாரணமாக ஒன்றும் அறியாதவர் போல இருக்கிருர்களே என்று அவர்கள்மேல் எனக்கு இரக்கம் ஏற்பட்டு மனமும் வருந்தியது. எனக்கு சிறு வயதுதானே, ஆகையால் என் மனதில் நெகிழ்ச்சி ஏற்பட்டது.

பத்து நாட்களுக்குப் பிறகு ஆசார்யாள் வீரவநல்லூருக்கு விஜயமானுர்கள். அங்கும் ஆசார்யாளை தரிசனம் செய்யும் பாக்கியம்

எனக்குக் கிடைத்தது. அன்று பாங்கர் ஸ்ரீ கோபால அய்யர் வீட்டில் ஸஹஸ்ரநாமார்ச்சனே. எப்பவும்போல் அவர்கள் ஸமீபத்தில் உட்கார்ந்தேன். அவர்களுக்கு ஜலதோஷம் லேசாக இருந்ததால் அடிக்கடி தும்மல் ஏற்பட்டது. எனக்கு மனம் தாளவில்லே. வீட்டுக்கு வந்ததும் என் தாயாரிடம் ''இன்று ஆசார்யாளுக்கு உடம்பு சரியாக இல்லே போலிருக்கு. அடிக்கடி தும்முகிருர்கள்'' என்று சொல்லும்பொழுது என் கண்களில் ஜலம் வந்துவிட்டது. ''அவருக்கு யார் கஷாயம் போட்டுக் கொடுப்பார்கள்'' என்று கேட்டேன். என்னுடைய நிலேமையைப் பார்த்து என் தாயார், ''அட பைத்தியமே அவர்களே நீ யார் என்று நினேத்தாய்? அவர்கள் ஸர்வேச்வரன். எல்லோருடைய கஷ்டங்களேயும் நிவர்த்தி செய்பவர்கள். ஸ்ரீ சாரதாம்பாளுடன் பேசுபவர்கள். அவர்களேப் பற்றியா நீ கவலேப்படுகிருய்?'' என்று என் தாயார் எனக்குத் தேறுதல் சொன்ன பிற்பாடுதான் கொஞ்சம் ஆறுதலடைந்தேன்.

பிறகு என் தாயார், ''இரண்டு தினங்களில் நம் ஊரான காருகுறிச்சிக்கு ஸ்ரீ ஆசார்யாள் விஜயம் செய்வார்கள். மேலத் தெருவில் அவர்கள் பூஜை முதலியவைகளே வைத்துக் கொள்வார்கள். நம் தெருவில் ஸஹஸ்ரநாமம், திரிசதி அர்ச்சனேகள் உண்டு'' என்று என்னிடம் கூறிஞர்கள். அப்போது எனக்கு ஏற்பட்ட உத்ஸாகத்தையும், உணர்ச்சியையும் கட்டுப்படுத்த முடியவில்லே. ஏனென்ருல் நம் வீட்டு வாசலின் வழியாகத்தான் ஸ்ரீபரமாசார்யாள் வருவார்கள். அப்போது நம் வீட்டில் என் தகப்பஞர் பூர்ண கும்பம் கொடுக்கும்போது பல்லக்கு வாசலில் நிற்கும். அப்போது அடிக்கடி நான் ஸ்ரீ ஆசார்யாளே வெளியூர்களில் பார்த்த ஞாபகத்தில் என்னிடமும் ஏதாவது பேசுவார்கள் என்ற ஸந்தோஷம்.

இதற்கிடையில் திருப்புடைமருதூர் என்ற சிவ க்ஷேத்திரத்திற்கு ஸ்ரீ ஆசார்யாள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு அந்த ஊருக்குப் போனேன். போய்ச் சேரும்போது பகல் சுமார் 11 மணி இருக்கும். அன்று ஸ்ரீ ஆசார்யாளுக்கு வர்த்தந்தி. கோவிலில் ஜாகை இருந்ததால் பூஜை கோவிலில் நடந்தது. நவக்ரஹ ஹோமம் நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரருக்கு கொம்பிஞல் அபிஷேகம் பண்ணிக் கொண்டு இருந்தார்கள். பிராம்மணர்கள் மிகவும் தாழ்ந்த குரலில் ஸ்ரீருத்ரம் சொல்லிக்

கொண்டிருந்தார்கள். பூஜை முதலானவைகள் முடிந்ததும் சுமார் மூன்று மணிக்கு நான் தற்செயலாக தெற்கு ப்ராகாரம் வழியாக தாம்ரபர்ணிக்குச் சென்றேன். ப்ராகாரத்தில் சுமார் 100 அடி தூரம் போய் இருப்பேன். பாதுகை சப்தம் கேட்டது. சப்தம் கேட்டதும் அப்படியே அவ்விடத்தில் நின்று விட்டேன். ஸ்ரீ ஆசார்யாள் ஏகாகியாக ரூமிலிருந்து வெளியே வந்து எனக்கு எதிரில் வரவே எனக்கு எந்தப் பக்கமும் போவதற்குத் தோன்ருமல் அப்படியே அங்கேயே நின்றுவிட்டேன். நானும் தனியாய் நின்றுகொண்டு இருக்கிறேன். அவர்கள் நெருங்கி வரவர எனக்குப் பயம் அதிகமாயிற்று. அவர்கள் என் பக்கத்தில் வந்து அவர்களுடைய அமிருத கடாக்ஷத்தால் பார்த்தார்கள். அப்படியே என் உடம்பு நடுக்கம் எடுத்துவிட்டது. வேர்வை கொட்டி கண்களிலும் நீர் ததும்பியது. ஸ்ரீ ஆசார்யாள் என்னைக் கடந்து சென்றுவிட்டார்கள். நானும் சற்றுப் பொறுத்து என்னை சமாளித்துக் கொண்டு அவர்கள் பின்ஞல் சென்றேன்.

அன்று கோவிலில் திருக்கல்யாண வைபவம். ஸாயரக்ஷை வீதி புறப்பாட்டிற்கு பெரிய வெள்ளி வ்ருஷபத்தில் ஸ்வாமியை வைத்து குருக்கள் அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஆசார்யாள் வ்ருஷப வாஹனத்திற்கு எதிரில் போய் நின்ற ஸமயம் குருக்கள் பகவானுக்கு ருத்ராக்ஷ மாலே அணிவித்துக் கொண்டிருந்தார். ஆகையால் ஸ்ரீ ஆசார்யாளே குருக்கள் கவனிக்கவில்லே. ஸ்ரீ ஆசார்யாள் அப்படியே நின்றுகொண்டு பகவானுக்கு அலங்காரம் பண்ணுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தற்செயலாகத் திரும்பின குருக்கள் தூக்கி வாரிப்போட்டு வாஹனத்திற்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டார். பிறகு ஸ்ரீ ஆசார்யாள் குருக்களிடம் அன்று நடக்க விருக்கும் நிகழ்ச்சிகளேக் கேட்டார்கள். குருக்களும் பயபக்தியுடன் பணிவுடன் தெரிவித்தார். ஸ்ரீ ஆசார்யாள் சுமார் முக்கால் மணி நேரம் அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு குருக்கள் கற்பூரஹாரத்தி பண்ணி ஆசார்யாளிடம் காண்பித்தார். ஸ்ரீ ஆசார்யாள் கற்பூரஹாரத்தியைக் கண்களில் ஒற்றிக் கொண்டு விபூதியை சிறிதளவு தன்னுடைய நெற்றியில் தரித்துக் கொண்டார்கள். மறுநாள் ஸ்ரீ ஆசார்யாள் அவர்களுடைய வர்தந்தியை முன்னிட்டு

அன்னக்கொடி கட்டி ஸந்தர்ப்பணம் நடத்தினார்கள். (வர்தந்தி அன்று ஏகாதசி)

இரண்டு நாட்கள் கழித்து ஸ்ரீ ஆசார்யாள் காருகுறிச்சிக்கு விஜயம் செய்தார்கள். மேலத்தெரு வழியாகச் செல்லும்பொழுது ஸ்ரீ அஹோபில மடம் மடாதிபதிகளான 41 வது அழகியசிங்கராக இருந்த ஸ்வாமிகளின் பூர்வாச்ரம வீட்டில் அவர்கள் படம் பெரிய அளவில் வாசல் திண்ணையில் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து ஸ்ரீ ஆசார்யாள் உடனே பல்லக்கை நிறுத்தி, அவ்விடத்தில் பூர்ணகும்பத்துடன் நிற்கும் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்வாமிகளுடைய பூர்வாச்ரம புத்திரரான ஸ்ரீ கோபால ஐயங்காரை ஆசீர்வதித்து விசாரித்தார்கள். அப்போது கோபால ஐயங்கார் சிருங்கேரியைப் பற்றி சில சுலோகங்கள் சொன்னார்கள். அவை தமிழும் ஸம்ஸ்கிருதமும் கலந்து மணிப்ரவாளமாக அமைந்தவை.

விசும்பு பூராவும் அகன்ற காகிதம்
ஸமுத்ரம் ஏழும் மிக நல்ல மையது
ஆனால் அனந்த: ஸ்வயமேவ வக்தா
லிக்யேத ச்ருங்கேரி குரு ப்ரபாவ:

ச்ருங்கேரீ ஜகதாசார்யம் துங்கேடித மஹர்னிசம் ।
தம் கேய சரிதம் வந்தே ரங்கேச மிவ நிர்மலம் ॥

மாளாத மோஹாந்த தமோ நிராஸீ
கேளாத திவ்யார்த்தத ஆச்ரிதானும் ।
நாளான மேலான யதீந்த்ர ராஜ:
பல்லாண்டு பல்லாண்டு விபாது ச்ருங்கே ॥

இந்த சுலோகங்கள் சிருங்கேரி ஆசார்ய பரம்பரையின் மேன்மையைப் பற்றி புகழ்கின்றன.

காருகுறிச்சியில் நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள். இரவு ஸ்ரீ சாரதா சந்த்ரமௌலீச்வரர் பூஜைக்கு சுமார் ஒரு படி தும்பை புஷ்பம் தினமும் நாங்கள் சிறுவர்களாக எடுத்துக் கொடுத்து வந்தோம். பூஜைக்கு ஸ்ரீ ஆசார்யாள் விஜயம் செய்ததும் முதலில் தும்பைப் புஷ்பம் நிறைந்த தட்டைத்தான் பார்ப்பார்கள். அர்ச்சனைக்கு வந்த எல்லா புஷ்பங்களையும் ஸ்ரீ சாரதாசந்த்ர மௌலீச்வரருக்கு அர்ச்சனை

செய்துவிட்டு கடைசியாக தும்பைப்பூவால் ஸ்ரீ ஆசார்யாள் அர்ச்சனை பண்ணும்பொழுது பனிமழை பெய்வது போல் தோன்றும்.

இரண்டாம் நாள் பூஜைக்கு ஜாகையிலிருந்து ஸ்ரீ ஆசார்யாள் புறப்படும்பொழுது தெருக்கோடியில் சூரஸம்ஹார மூர்த்தி பவனி வந்து கொண்டிருந்தார். அன்று ஸ்கந்த ஷஷ்டி. பூஜைக்குப் புறப்பட்ட ஸ்ரீ ஆசார்யாள் அப்படியே தாங்கள் இறங்கியிருக்கும் ஜாகையின் வாசலிலேயே நின்று கொண்டிருந்து சூரஸம்ஹார மூர்த்திக்கு கற்பூர ஹாரத்தி பண்ணினதை தரிசித்த பிறகே பூஜைக்குப் போனார்கள். கடைசி நாளில் இந்தத் தும்பை புஷ்பம் கொண்டு வருபவர்கள் யார் என்று கேட்டார்கள். அதற்கு சாஸ்திரிகள் இந்த ஊர்ச் சிறுவர்கள் என்று சொன்னதும் மெதுவாகச் சிரித்தார்கள்.

ஸ்ரீ ஆசார்யாள் ஸஞ்சார காலத்தில் அவர்கள் செல்லும் மேனாவின் உட்புறம் அவர்கள் உட்காரும் இடத்திற்கு நேராக ஸ்ரீ நரஸிம்ஹபாரதீ மஹாஸ்வாமிகள் படமும் ஸ்ரீ சாரதாம்பாள் படமும் வெள்ளி பிரேம் போட்டு வைக்கப்பட்டிருக்கும். அந்த படத்திற்கு எதிரில் வெள்ளித் தட்டில் சோபஞக்ஷதையும் விபூதிப் பொட்டலங்களும் வைக்கப்பட்டிருக்கும். அந்த ஸமயம் ஸஞ்சார காலத்தில் ஊரார்களும் தனிப்பட்டவர்களும் தங்கள் கஷ்டங்களைத் தெரியப்படுத்தினால், ''எங்கள் குருநாதாள் உங்களைக் காப்பாற்றுவார்கள்'' என்று சொல்லி அவரவர்களுக்குத் தக்கவாறு சோபஞக்ஷதையோ விபூதிப் பொட்டலமோ கொடுப்பார்கள். சில ஸமயங்களில் ஸ்ரீ சாரதாம்பாளையும் சேர்த்துச் சொல்வார்கள்.

அதெல்லாம் மறக்க முடியாத பொன் நாட்கள்.

8

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

காருகுறிச்சி ஸ்ரீ இராமநாத சாஸ்திரிகள்

अनुग्रहात् गुरोरिह प्रपूर्णतां भजेन्नरः
गिरिः पुरापि यत्कृपावशात् स तोटकोऽभवत् ।
तदन्वये सुधांशुशेखराभिधस्य सद्गुरोः
करोदितं गुरूत्तमं नरोत्तमाकृतिं भजे ॥

(ஸ்ரீ ஸத்குருவின் அநுக்ரஹத்தால்தான் மனிதன் பூர்ணனுகிறன். (நிறைந்தவனுகிறன்). எவருடைய கிருபையால் கிரி என்பவர் தோடகாசார்யாளாக ஆனரோ, அந்த ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யருடைய பரம்பரையில் வந்த ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகளின் சிஷ்யாளான லோககுருவை ஸேவிக்கிறேன்.)

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ப்ரஹ்ம நிஷ்டாள், ஜீவன்முக்தாள் என்பது யாவரும் அறிந்ததே. ஸ்ரீகுருசரணுள் தரிசனம் ஜன்மாவில் ஒரு தடவை ஒருவனுக்குக் கிடைத்தாலும் அவன் மஹா பாக்கியசாலி. அவன் ஜன்மா பயனை அடையும். அதிலும் அவர்களுடைய மந்தஹாஸம் ததும்பிய முகாரவிந்தத்தினின்று பெருகும் அமுதப்பெருக்கில் ஒரு திவிலை ஒருவனுக்கு பானம் செய்யக் கிடைத்தால் அவன் ஜன்ம ஸாபல்யம் அடைவான் என்பது சொல்லவும் வேண்டுமோ? அதற்குச் சான்றுக ஒரு நிகழ்ச்சி இங்கே குறிப்பிடுகிறேன்.

தாம்ரபர்ணீ தீரவாஸி சாஸ்திரி ஒருவர், ஸ்ரீ குருசரணுளுடைய தரிசனத்துக்காக சில வருஷங்கள் சிருங்கேரி சென்று கொண்டிருந்தார். ஒரு வாரம் இரண்டு வாரங்கள் காத்துக் கொண்டிருந்தாலும் கிடைப்பதற்கு அரிதான ஸ்ரீ ஸ்வாமிகளுடைய தரிசனம் மேற்சொன்ன சாஸ்திரிகளுக்கு தான் சென்ற ஸமயம் எல்லாம் ஸுலபமாகக் கிடைத்துக் கொண்டேயிருந்தது. அதற்குக் காரணம் குருநாதாளுடைய கிருபைதான். இப்படி நடந்து கொண்டிருக்கும்போது ஒரு வருஷம் சாஸ்திரிகள் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசனம் செய்துகொண்டு சில நாட்கள் சிருங்கேரியில் தங்கினுர். ப்ரதிதினமும் சாஸ்திரிகள் காலையிலும் மாலையிலும் ஸ்ரீகுரு சரணுளான ஸ்வாமிகளை தரிசனம் செய்து வந்தனம் செய்வது வழக்கம். ஸ்ரீஸ்வாமிகளும் சாஸ்திரிகளிடத்தில் 'எல்லாம் சரியாக நடக்கிறதா' என்று கேட்பார்கள். சாஸ்திரிகளும் 'ஆமாம்' என்று பதில் சொல்லுவார். இப்படி மூன்று நாட்கள் சென்றதும் நான்காவது நாளில் ஸ்ரீஸ்வாமிகளை சாஸ்திரிகள் வந்தனம் செய்து நின்று கொண்டிருக்கும்போது வழக்கம் போலுள்ள கேள்வியை கேட்டு அதற்கு சாஸ்திரிகள் வழக்கம்போல் 'ஆமாம்' என்று பதிலளித்த பிறகு ஸ்ரீஸ்வாமிகள் சாஸ்திரிகளிடம் நெருங்கி வந்து, புன்சிரிப்புடன் 'என்ன காரியமாய் வந்தது' என்று கேட்க சாஸ்திரிகள் 'தர்சனுர்த்தம் வந்தேன்' என்ருர். ஒரு நிமிஷம் கழித்து ஸ்ரீஸ்வாமிகள் 'தர்சனுர்த்தம்தானு' என்று கேட்க சாஸ்திரிகள் மறுபடியும் 'ஆமாம், தர்சனுர்த்தம்தான், தர்சனம் ஜன்ம ஸாபல்யம்' என்ருர். அதைக் கேட்டதும், ஸ்ரீகுருசரணுள் சாஸ்திரிகளை மந்தஹாஸத்துடன் காலோடு தலை, ஏற இறங்கப் பார்த்துக் கடாக்ஷித்து 'நல்லது இரும்' என்று சொல்லிவிட்டு ஸ்ரீ சந்திர மௌலீசுவரருக்கு புஷ்பாஞ்ஜலி செய்ய உள்ளே சென்றுவிட்டார்கள். சாஸ்திரிகளும் தனக்குக் கிடைத்த ஸ்ரீ குருகிருபா கடாக்ஷ வீக்ஷணத்தை நினைத்து நினைத்து ஆச்சர்யத்தையும் ஆனந்தத்தையும் அடைந்து கொண்டிருக்கும்போது ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் சாஸ்திரிகளுக்கு ஒரு ஸ்ரீமுகத்தையும் அனுக்ரஹித்தார்கள். அதில் 'நீங்கள் வெகுகாலமாக ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீமத் பாகவதம் முதலிய க்ரந்த ரத்னங்களை ப்ரவசனம் செய்துகொண்டு ஜனங்களுக்கு பக்தி மார்க்கத்தைப் போதித்து வருகிறீர்கள் என்பதை நாம் அறிந்து மிகவும் ஸந்தோஷம் அடைகிறோம். முன் போலவே

மேல்கொண்டும் அதேமாதிரி உபந்யாஸங்கள் செய்து ஜனங்களுக்கு பகவத் பக்தி விருத்தியாகும்படி செய்து தாங்களும் மேன்மேலும் விருத்தி அடைய வேண்டும் என்று நாம் ஆசீர்வாதம் செய்கிரோம்' என்ற அர்த்தம் அடங்கிய பொன்மொழிகள் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருந்தது. தன்னிடம் ஒருவிதமான ஸம்பாஷணையும் செய்யாமல் ஸ்ரீமுகத்தில் இவ்விதம் எழுதி இருப்பது சாஸ்திரிகளுக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த ஸ்ரீமுகத்தையும் ஸ்ரீசாரதாம்பாள் மூர்த்தி பதித்த ஸ்வர்ணப் பதக்கத்தையும் இரு ஸந்நிதானங்களுமாக சாஸ்திரிகளுக்கு அனுக்ரஹித்தார்கள். இவ்விதம் அனுக்ரஹம் பெற்ற சாஸ்திரிகள் தன்னை மிக்வும் தன்யனுகவும் ஜன்ம ஸாபல்யம் அடைந்தவனுகவும் எண்ணிக் கொண்டார். அதன் பிறகு சாஸ்திரிகள் சிருங்கேரி ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்களால் ஆஸ்தான வித்வான் என்று தர்ம ப்ரசாரம் செய்வதற்காக நியமிக்கப்பட்டு ஆங்காங்கு ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ பகவத் கீதை, ஸ்ரீ சங்கர விஜயம் என்ற க்ரந்தங்களின் உபன்யாஸ மூலம் சிருங்கேரி மடத்தின் சார்பில் தர்ம ப்ரசாரம் செய்து வந்தார்.

(ஸ்ரீ சாஸ்திரிகளின் சொந்த அனுபவமே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.)

9

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

கடயநல்லூர் ஸ்ரீ V.S. மணி ஐயர்

எனக்கு சுமார் 13 வயது இருக்கும். பள்ளியில் நான் படித்துக் கொண்டிருந்தேன். 1927-வது வருஷமென்று நினைக்கிறேன். சிருங்கேரி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் நாகர்கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது எனது சிறிய தகப்பனார் பிக்ஷை நடத்தி வைத்தார். அந்த வைபவத்திற்காகத் திருவனந்த புரத்திலிருந்து நான் அழைத்துச் செல்லப்பட்டேன். கிருஹத்திலுள்ளவர்கள் எல்லோரும் பெரிய கல்யாணத்திற்கோ அல்லது கோவில் உத்ஸவத்திற்கோ போவதுபோல் பட்டாடைகளால் அலங்கரித்துக் கொண்டு சென்றார்கள். சிறுவனாகிய எனக்கு ஒரே குதூஹலம்தான். அப்பொழுது நடைபெற்ற மற்ற விஷயங்கள் பற்றி இப்பொழுது ஞாபகம் ஒன்றும் வரவில்லை. ஆனால் ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஸாயங்காலம் கோவிலில் நடத்திய சொற்பொழிவுகள் என் மனதைவிட்டு அகலவில்லை. நானும் அந்த அமிருத வர்ஷத்தை நாள்தோறும் கேட்டு வந்தேன். மிகவும் கம்பீரமான நடை. பண்டித பாமர ரஞ்ஜகமான அழகிய தமிழில் உபந்யாஸம் செய்தார்கள். கேட்டவர் எல்லோரும் செவிபெற்ற பயன் அடைந்தோம் என்று மகிழ்ந்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் சொன்ன விஷயங்களை நன்றாகப் புரியக்கூடிய வயது எனக்கு இல்லை. இருந்தபோதிலும் அவர்கள் உதாஹரணமாக பாகவதம் ஸ்ரீராமாயணம் முதலிய கதைகளைச் சொல்லும்போது நான் தலையசைத்து சந்தோஷப்பட்டேன். (எனக்கு சிறுவயதிலேயே என்னுடைய பாட்டியாரின் படிப்பினையால் எல்லாப் புராணக்

கதைகளும் வெகுவாகத் தெரியும்.) என்னை அறியாமலே அந்த உபதேசங்கள் பசுமரத்தாணி போல் உள் மனத்தில் (Sub-conscious mind) பதிந்துவிட்டன. நான் அவர்களை என் குருநாதராயும், அவர்களும் அடியேனை தம்முடைய அந்தரங்க சிஷ்யனுகவும் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டு விட்டதான நம்பிக்கை உண்டாயிற்று. கிருஷ்ணன் கோவிலில் கொடிமரத்தடியில் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் வடக்கு நோக்கியிருந்து தமக்கே சொந்தமான அலாதியான நடையில் - த்வனியில் - பிரசங்க மாரி பொழிய, பல சிறுவர்களுடன் சேர்ந்து நானும் மேற்கு நோக்கி முதல் வரிசையில் இருந்து அந்த அமுத மொழிகளைப் பருகிய காட்சிகள் என் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை.

பிறகு ஸ்வாமிகள் திருவனந்தபுரத்துக்கு விஜயம் செய்து கோட்டைக்குள் வடக்குத் தெருவில் பத்மவிலாஸம் அரண்மனையில் முகாம் செய்தார்கள். அடியேன் குடிசையும் மேலத் தெருவில் இருந்ததால் தினசரி தவருமல் காலையில் பூஜையைப் பார்க்கவும், தீர்த்தப் பிரஸாதங்கள் வாங்கிக் கொள்ளவும், மாலையில் உபந்யாஸங்களைக் கேட்கவும் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் வீட்டிலும் ஒரு நாள் பாத பூஜை நடந்தது. நானும் என் பெற்றோர்கள் பக்கத்திலிருந்து கைகட்டி வாய் புதைத்து ஸ்ரீ மஹாஸ்வாமிகளை தர்சித்தேன். அவர்களின் கிருபாகடாக்ஷம் என்பேரில் விழுந்தது எனக்கு நினைவு இருக்கிறது. அந்த நோக்கில் தான் எவ்வளவு குளிர்ச்சி? என்ன பிரகாசம்? மறக்கவே முடியாது. அடியேனைக் கரையேற்ற அந்த அருள் நோக்கு ஒன்றே போதுமே. உரையாடல், உபதேசம் எதற்கு? ஆயினும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் கருணை கூர்ந்து என் தகப்பனுரிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசினுர்கள். என்னுடைய படிப்பைப் பற்றி விசாரித்துவிட்டு பின்கண்ட விஷயத்தைக் கூறினுர்கள் : ''லௌகிக பாஷை படிக்க வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனுல் நமது மதக்கிரந்தங்களைப் படித்து அறிய ஸம்ஸ்கிருத பாஷை தெரிய வேண்டியது அவசியம். கட்டாயம் குழந்தைக்கு ஸம்ஸ்கிருதம் சொல்லி வையுங்கள்''. அன்று ஸ்ரீ மஹாஸந்நிதானத்தைப் பார்த்ததுதான். அதன் பிறகு நேரில் பார்க்கும் பாக்கியம் கிட்டவில்லை அடியேனுக்கு.

வருஷங்கள் பல உருண்டோடி விட்டன. 1945-ம் வருஷம் மலர்ந்தது. சரியாக 18 வருஷங்கள் (எனக்கும் ஜயகாலம்

ஆரம்பமாயிற்றே என்னவோ! 18 என்னும் எண் ஜயத்தைக் குறிக்குமல்லவா) நான் என் மைத்துனனுடன் மைசூர் போயிருந்தேன். அங்கேயிருந்து சிருங்கேரி போக நினைத்தோம். கன்னட பாஷை தெரியாதே, என்ன சங்கடங்கள் நேருமோ என்று கவலையாக இருந்தது. இதன் மத்தியில் உடல் நலமும் சிறிது குன்றியது. அப்போது ஸ்ரீ மஹாஸ்வாமிகளைப் பற்றி பலர் பலவிதமாகப் பேசியதும் காதுக்கு எட்டியது உண்டு. போனால் பார்க்க முடியுமோ முடியாதோ என்ற ஸந்தேகம் வேறு எழுந்தது. கடைசியில் போவதாகத் தீர்மானித்து நரஸிம்ஹராஜபுரம் வரை ரயிலில் சென்று அங்கேயிருந்து பஸ்ஸில் சென்றோம். போகும் பஸ்ஸில் ஆங்கிலம் தெரிநத ஒருவரிடம் விவரங்களைக் கேட்டபோது அவர் அந்த பஸ்ஸிலேயே ஷிமோகாவிலிருந்து வரும் ஸ்ரீமடம் ஏஜண்டுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிற்பாடு எல்லாம் சௌகரியமாக நடந்தது. ஸ்வாமிகள் தோன்றாத் துணைவராயிருந்து வழிகாட்டி அருளினார்கள். நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். யாத்திரிகர்கள் விடுதியில் (Guest House) தங்கி இளைப்பாறிவிட்டு துங்கா நதியில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்துக்குச் சென்றோம். அர்ச்சனை செய்து பிரசாதங்கள் பெற்றுக் கொண்டு மண்டபத்தில் வந்து அமர்ந்தோம். ஸ்ரீ மஹாஸ்வாமிகளைத் தரிசனம் செய்ய வேண்டுமென்ற ஆசையை சொன்னவுடன் ஸ்ரீ ஸ்வாமிகள் தற்சமயம் அந்தர்முகமாய் இருப்பதாகவும், இளைய ஸ்வாமிகள் கொஞ்ச நேரத்தில் கோவிலுக்கு எழுந்தருளுவார்கள், பார்க்கலாம் என்றும் தகவல் கிடைத்தது. அந்தப்படி காத்திருந்தோம். இளைய ஸ்வாமிகள் எழுந்தருளி அன்புடன் க்ஷேமசமாசாரங்களைக் கேட்டார்கள். மஹா தேஜஸ்வியான ஸ்வாமிகளின் முக விலாஸத்தைக் கண்டு நாங்கள் பிரமித்துப் போனோம். பதில் சொல்லவே நா எழவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு மறுமொழி கூறினோம். மறுநாள் காலையில் ஸ்ரீமடத்துக்கு வரும்படி ஆக்ஞாபித்தார்கள். உத்தரவுப்படி சென்று மந்திரதீக்ஷையும் பெற்றுக்கொண்டு வந்தேன். அந்த சமயம் எப்படியாவது ஸ்ரீ மஹாஸ்வாமிகளை தரிசனம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டேன். முடியவில்லை. ஆனால் ஓர் அறையிலிருந்து கம்பீரமான த்வனி ஒன்று கேட்டது. புராணங்களில் துந்துபி வாத்தியம் முழங்கியது என்று வர்ணிப்பார்களே, அதுபோல்

என் செவிகளுக்கு எட்டியது. சப்தவேதி என்ற பாணத்தினுல் மறைந்து கண்களுக்குப் புலனுகாமலிருப்பவைகளையும் குறி தவருது அடிக்க முடியும் என்று ஸ்ரீ ராமாயணத்தில் படித்தது ஞாபகத்துக்கு வந்தது. பரப்ரம்மமே நாதஸ்வரூபம்தானே! அந்த சப்தத்தையே ஒரு பெரிய அனுக்ரஹமாக எண்ணிக் கொண்டு நான் வெளியில் வந்தேன். மூன்று நாட்கள் சிருங்கேரியில் தங்கியிருந்தும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அந்தர்முகமாய் இருந்தபடியால் எங்களுக்கு தரிசனம் கிடைக்கவில்லை. பின் இளைய ஸ்வாமிகளைத் தரிசித்து பிரஸாதம் வாங்கி விடை பெற்றுத் திரும்பினேம். ஸ்ரீ மஹாஸ்வாமிகளைப் பார்க்காமல் திரும்புகிறேமே என்ற குறை உள்ளூர இருந்து மனதைத் துன்புறச் செய்தது. பிற்பாடு எத்தனையோ தடவை என் பத்தினியை அழைத்துக் கொண்டு சிருங்கேரி போக வேணுமென்று ஆவல் பட்டதுண்டு. ஆனுல் ஏனே நடைபெறவில்லை. ஓர் அருள் நோக்கும், மணிமொழியும், அதிகம்பீரமான த்வனியும் அடியேனைக் கடையேற்றப் போதுமென்று ஸ்ரீ ஜகத்குரு நினைத்துவிட்டார்கள் போலும். இவைகளே என் வாழ்க்கைக்குப் பொலிவைக் கொடுத்தன. பல வருஷங்கள் கழிந்தன. ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் விதேஹ முக்தி அடைந்த செய்தியை ரேடியோவில் கேட்டு மிகவும் வருந்தினேன். ஸ்வாமிகளைப் பார்க்க முடியாமல் போய்விட்டதே என்ற வருத்தம் சில சமயம் தலைதூக்கும். அதை ஒருவாறு சமாளித்து சாந்தி அடைவேன். ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீஅபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளின் விஜய யாத்திரையில் பலமுறை தரிசனம் செய்தபின் அந்த வருத்தமும் நீங்கிவிட்டது.

நம்முடைய புண்ணிய விசேஷத்தால், நாம் இருக்கும் இடங்களுக்கே ஸ்ரீ மஹாஸ்வாமிகள் எழுந்தருளி காட்சி கொடுத்து கடாக்ஷிப்பது அவர்களுடைய ஸௌலப்பிய குணத்தையே காட்டுகிறது அல்லவா! ஸ்ரீ குருபாதாரவிந்தங்களில் விநயபூர்வமாக நமஸ்காரம் செய்து, தற்போது ஜகத்குருவாக விளங்கும் மஹாஸ்வாமிகள் இருக்கும் திக்கு நோக்கி தண்டம் ஸமர்ப்பிப்பதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்?

10

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

குருபாதுகா பூஜாக்ரேஸரர்
வத்தலகுண்டு ப்ரஹ்மஸ்ரீ நாராயண பாகவதர்

மஹானுபாவர்களான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் தக்ஷிணதேச யாத்திரைக்குப் பின் சிருங்கேரியில் ஜடர் போலும் உன்மத்தர் போலும் இருந்து வந்தார்கள். அப்பொழுது நடந்த ஸம்பவத்தை எழுதுகிறேன்.

மஹாஸ்வாமிகள் எல்லோருக்கும் தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்த ஸமயம் ஒரு நாள் காலையில் ஸ்நானம், ஆஹ்நிகம், குருபாதுகா பூஜை முடிந்ததும் அக்கரையில் ஸச்சிதானந்த விலாஸத்தில் ஸ்ரீசக்ர பூஜை செய்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீ நரஸிம்ம பட்டர் ஸ்ரீ சந்திரமௌளீசுவர பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது நானும் அங்கே தரிசனம் செய்து கொண்டிருந்தேன். அந்த சமயம் மாடியிலிருந்து சின்ன ஸ்வாமிகளை தரிசனம் செய்துவிட்டு இரண்டு பக்தர்கள் கீழே வந்தார்கள். அவர்களில் ஒருவருக்கு வயது 50 அல்லது 55 இருக்கலாம். மற்றவருக்கு 20 க்குள் இருக்கலாம். சந்திரமௌளீசுவர தீபாராதனை ஆனவுடன் வந்தவர்கள் நரஸிம்மபட்டருடன் கன்னடத்தில் பேசினார்கள். எனக்கு அதிகமாக கன்னடம் தெரியாது. அவர்கள் பேச்சில் பாகவதர் என்ற சப்தம் வந்தது. நம்மைப் பற்றிப் பேசுகிறார்களே, நரஸிம்மபட்டரிடம் கேட்போம் என்று எண்ணும்பொழுது ஸ்ரீ சக்ர பூஜை பூர்த்தியாகி மங்களஹாரத்தி மணி சப்தம் கேட்டது. தரிசனத்திற்காகப் போகத் திரும்பினேன். அந்த சமயம் நரஸிம்மபட்டர் 'பாகவதர்' என்று என்னைக் கூப்பிட்டு,

இவர்களையும் தீபாராதனை தர்சனத்திற்கு அழைத்துச் செல்லும்படி இன்ன ஸ்வாமிகள் சொல்லியனுப்பியிருக்கிறார்கள் என்று கூறவே அவர்களையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனேன். ஸ்ரீ ஸந்நிதானம் பூஜையை முடித்துக் கொண்டுதான் வெளியே வந்தவர்களைப் பார்ப்பது வழக்கம். அன்று புஷ்பாஞ்ஜலியானதும் எங்களைப் பார்த்து மந்தஹாஸம் செய்துவிட்டு நமஸ்காரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். உடனே கதவு சாத்தப்பட்டு விட்டது.

பிறகு ஸ்ரீ ஸந்நிதானம் பூஜையை முடித்துக்கொண்டு வெளியே வந்தார்கள். நாங்கள் எல்லோரும் வந்தனம் செய்தோம். அவர்களைப் பார்த்து ''பையனுடைய உடம்பு ஸௌக்யமாய்விட்டதா? ஸ்ரீ சாரதாம்பாள் பிரஸாதமும் குருபிரஸாதமும் கிடைத்ததா'' என்று கேட்டார்கள். நன்றாக ஸௌக்யமாய்விட்டதென்றும், 4, 5 தடவை ரோகமுக்த ஸ்நானம் செய்துவிட்டான் என்றும், அதனால்தான் பையனை அழைத்துக்கொண்டு தரிசனத்திற்கு வந்திருப்பதாயும், வைத்தியர்கள் எல்லோரும் கைவிட்டபிறகு குருபாதுகைதான் உயிரைக் கொடுத்ததென்றும் சொன்னார். ஸ்ரீ ஸந்நிதானம் மந்தஹாஸத்துடன் ஸ்ரீசக்ர பூஜா பிரஸாதத்தை அவர்கள் இருவருக்கும் கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டார்கள். பிறகு அவர்களின் விருத்தாந்தத்தை நான் கேட்டுத் தெரிந்துகொண்டதை எழுதுகிறேன்.

பெங்களூர் - பீரூர் மத்தியில் சிப்டூர் என்ற ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 20 மைல் தூரத்தில் அவர்களின் கிராமம் இருக்கிறது. ஸ்ரீ ஸந்நிதானத்திடம் மந்திரோபதேசம், பாதுகா அநுக்ரஹம் பெற்று அதற்குப்பின் இந்தப் புத்திரன் பிறந்து இப்பொழுது பெங்களூரில் படித்துக் கொண்டிருக்கிறான். ஸமீபத்தில் இவனுக்கு டைபாய்ட் (Typhoid) ஜுரம் வந்து 3 மாத காலமாக எத்தனையோ பெரிய டாக்டர்கள் வைத்தியம் செய்தும் குணமாகாமல் கைவிட்டு விட்டார்கள். பிறகு மிக ஜாக்கிரதையாக பையனை தன்னுடைய கிராமத்திற்குக் அழைத்துவந்து தன் பூஜாகிருஹத்திலுள்ள குருபாதுகா ஸந்நிதியில் பையனைப் படுக்கவைத்து 'குருநாதா, நீ கொடுத்த பிச்சை. உன் இஷ்டம்போல் நடத்து' என்று பிரார்த்தித்தார்கள். 4, 5 தினங்கள் சென்றதும் ஒரு நாள் அவருடைய ஸ்வப்னத்தில் ஆசார்யாள் தரிசனம் கொடுத்து

''பயப்பட வேண்டாம். பூஜா கிருஹத்தில் ஸ்ரீ பாதுகையில் பிரஸாதம் இருக்கிறது. அதை தினந்தோறும் தாரணம், ப்ராசனம் செய்துவை'' என்று அநுக்ரஹித்தார். உடனே எழுந்திருந்து ஸ்நானம் செய்து குருபாதுகைக்கு நைவேத்தியம் தீபாராதனம் செய்து பார்க்கவே விபூதி, குங்குமம் பிரஸாதம் இருந்ததைப் பார்த்து ஸந்தோஷத்துடன் தினந்தோறும் இரண்டு காலங்களிலும் அந்த பிரஸாதத்தை தாரணம், ப்ராசனம் செய்து வைத்தார். ஒருமாத காலத்தில் ஜுரம் இறங்கி ஸௌக்யம் ஏற்பட்டது. பெங்களூர் டாக்டர்கள் வந்து பார்த்து குரு பிரஸாத ப்ரபாவத்தால்தான் இவன் பிழைத்தான் என்று சொல்லி தலைக்கு ஜலம் விடச் சொன்னார்கள். 4, 5 முறை தலைக்கு ஜலம் விட்டபிறகு ஸந்நிதானத்தை தரிசனம் செய்து வைப்பதற்காக அழைத்து வந்திருக்கிறார்.

பின்னால் இந்த விவரங்களையெல்லாம் ஸந்நிதானத்தில் நான் விக்ஞாபனம் செய்தபோது 'यादृशी भावना यत्र सिद्धिर्भवति तादृशी' 'भावना यदि भवेत् फलदात्री' என்ற சுலோகங்களைச் சொல்லி தமது குருநாதாள் அதிஷ்டானத்தைக் காட்டி ''அவர்கள்தான் எல்லாவற்றையும் பூர்த்தி செய்து எல்லோருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கிறார்கள்'' என்று கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்களிடமிருந்து நாம் குருபக்தியை கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் நான் அவர்களை நமஸ்கரித்து எழுந்ததும் 'குருபாதுகா பூஜை எல்லாம் ஆகிவிட்டதா' என்றுதான் முதலில் கேட்பார்கள். என் குருநாதருக்குக் கிடைத்ததுபோன்ற குருவும், அவர்களுக்குக் கிடைத்ததுபோன்ற சிஷ்யரும் ஒருவருக்கும் ஏற்படவில்லை. என் குருநாதரும் அவர்களுடைய சிஷ்யரும் யாருடன் ஸல்லாபம் செய்தாலும் தங்கள் குருவின் பிரபாவத்தைச் சொல்லாமலிருக்க மாட்டார்கள். இப்பேர்ப்பட்ட மஹான்களை குருநாதர்களாக அடைந்தது நம் பாக்கியம்.

காலடியில் எனது குருநாதாளால் (சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகளால்) ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஸ்ரீ ஆதி ஆசாரியர் அவர்களுக்கும் 1910 முதல் 1950 வரை பூஜை செய்துகொண்டு வந்த கிருஷ்ண சாஸ்திரிகள், தமக்கு வயதாகிவிட்டபடியால் ஓய்வு பெற விரும்பி 1950 ல் சிருங்ககிரிக்குத் தம் மனைவியோடு சென்றிருந்தார்கள். நானும் அச்சமயம் சிருங்கேரிக்குப் போயிருந்தேன்.

சாஸ்திரிகள் வந்த காரியத்தை அறிந்த பெரிய சுவாமிகள் அவருக்குப் பென்ஷன் கொடுப்பதாகச் சொல்லி, சமீபத்தில் வருகிற தம ஆசார்யேந்திராள் ஆராதனத்துக்குப் பிறகு காலடிக்குப் புறப்படலாம் என்று கட்டளேயிட்டார்கள். அப்படியே ஆசார்யேந்திராள் ஆராதனத்துக்குப் பிறகு, ஸ்வாமிகள் சாஸ்திரிகளுக்குப் பல மந்திராக்ஷதையும் செலவுக்குப் பணமும் கொடுத்து ஊருக்குப் போக ஆக்ஞை தந்துவிட்டார்கள்.

ஆனால் மடத்து வாஸம் ஸௌகர்யமாக இருந்தபடியால் சாஸ்திரிகள் பெரியவாளின் ஆக்ஞைப்படி உடனே ஊருக்குப் போகாமல் சில நாள் அங்கேயே தங்கி விட்டார்கள்.

இப்படி இருக்கும்போது சாஸ்திரிகளின் ஸம்ஸாரத்துக்கு வைசூரி கண்டுவிட்டது. அந்த அம்மாளுக்கு ஒத்தாசை செய்துவந்த சாஸ்திரிகளுக்கும் பின்னால் வைசூரி கண்டுவிட்டது.

இந்த நிலேயில் எனக்குச் சொல்லியனுப்பினர். நான் போய் விசாரித்து அவருடைய குமாரன் சங்கரனுக்குத் தந்தி கொடுத்தேன். அவன் மறுநாளே தன் மாமாவோடு வந்து விட்டான்.

பிறகு அந்த அம்மாளுக்குக் குணமாகிவிட்டது. ஆனால் சாஸ்திரிகள் காலமாகிவிட்டார். மடத்திலிருந்து இரண்டு நாள் காரியத்துக்குப் பணம் கொடுத்தார்கள். ஆனால் ''வைசூரி போட்டு இறந்தவருக்குக் கர்மா செய்தால் உனக்கும் வைசூரி ஏற்பட்டுவிடும். அதனால் செய்யக்கூடாது'' என்று தாயார் சொன்னதன்மேல் சங்கரன் தன் தகப்பனருக்குக் கர்மா செய்யவில்லே. செலவிற்குப் பணம் வாங்கிக் கொண்டு அம்மூவரும் ஊருக்குப் போய்விட்டார்கள்.

அநுஷ்டானபரரான சாஸ்திரிகளுக்கு இம்மாதிரி மரணமும், புத்ரன் ஸமீபத்திலிருந்தும் அவனுடைய கர்மா கிடைக்காத நிலேமையும் ஏற்பட்டதற்குக் காரணம் குருநாதருடைய ஆக்ஞைப்படி உடனே புறப்படாத தோஷமாக இருக்கலாம் என்று தோன்றலாம். ஸாதாரண மனிதனுக்குத் தோன்ருத விஷயங்கள் ஞானிகளுக்கு ஸுலபமாய்த் தோனறும். பிறருக்கு நேரவிருக்கும் கஷ்டங்களேப் பற்றி முன் ஜாக்கிரதையாகயிருக்கும்படி சூசனேயாகச் சொல்வார்கள். பிராரப்த கர்மாவின் பலத்தால் அதைக் கவனிக்காமல் நடந்துகொண்டு பலர் துன்புறுவார்கள்.

அவர்கள் ஊருக்குப்போன சில தினங்களுக்குப் பிறகு சாஸ்திரியாரின் குமாரரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. தர்ப்ப ஸம்ஸ்காரத்துடன் பித்ரு கர்மாவைப் பூர்த்தி செய்துவிட்டதாகவும் அப்பா செய்துவந்த கோவில் பூஜை வேலே தமக்குக் கிடைக்கும்படி பெரிய ஸந்நிதானத்திடம் சிபாரிசு செய்யும்படியும் அதில் எழுதியிருந்தது.

அதைப் படித்துவிட்டு மறுநாள் காலே அதையும் மடிசஞ்சியில் வைத்துக்கொண்டு வழக்கப்படி மஹாஸந்நிதானத்தின் தரிசனத்துக்குச் சென்றேன். அந்தக் கடித விஷயம் என்னைத் தவிர அங்கே வேறு யாருக்கும் தெரியாது.

பூஜை முடிந்து பிரஸாதம் கொடுக்கும்போது மஹாஸந்நிதானம் அவர்கள் என்னைப் பார்த்து, ''காலடிக்கு ஸாதகமாக பதில் எழுதிவிட்டு நீங்களும் நாளே ஊருக்குப் போகலாம்'' என்று ஆக்ஞையிட்டு விட்டார்கள். இதைக் கேட்டதும் எனக்கு மயிர்க் கூச்சலும் நேத்திரத்தில் ஆனந்த பாஷ்பமும் ஏற்பட்டது. அன்று மாலே என் அறைக்குப் போய் பார்த்தபோது ஊரிலிருந்து என்னே வரும்படி அழைக்கும் கடிதம் ஒன்று இருந்தது. என்ன ஆச்சரியம்! காலடிக் கடிதத்தையும் எனக்கு வந்த அழைப்புக் கடிதத்தையும் பற்றி பெரியவாள் அறிந்து சொன்ன ஸர்வக்ஞத்வம் என்னைப் பரவசப்படுத்திவிட்டது. மறுநாள் பலமந்திராக்ஷதை பெற்றுக்கொண்டு பெரியவாள் அநுக்ரஹத்துடன் ஊர் வந்து சேர்ந்தேன்.

நான் என்னுடைய கிராமத்தில் பிரதி வருஷமும் என் குருநாதாள் ஜயந்தி ஆராதனையை நடத்தி வருகிறேன். 1950-ம் வருஷம் ஆராதனேக்கு 10 நாள் முன்னமே நான் சிருங்ககிரிக்குச் சென்றுவிட்டேன். நான் வழக்கமாகச் செய்துவந்த ஆராதனையை அங்கே எப்படிச் செய்வது என்று நான் மஹாஸந்நிதானத்தைக் கேட்டேன்.

''நான் செய்யும்போது நீங்கள் கூட இருந்துவிட்டால் போதும்'' என்று ஆக்ஞையாயிற்று. இருந்தாலும் மனது கேட்காமல் சின்ன சுவாமிகளிடம் விக்ஞாபனம் செய்யவே, அவர்கள் இதைப் பெரியவாளிடம் தெரிவித்து மஹாஸந்நிதானத்தின் உத்தரவின் பேரில் அங்கேயே வேறு ஓர் இடத்தில் நான் தனியாக ஆராதனே

நடத்துவதற்கு ஏற்பாடு செய்து எனக்கும் அதைத் தெரிவித்தார்கள்.

பிறகு நான் ஜயந்தியன்று வழக்கம்போல் என் குருநாதாள் அதிஷ்டான அர்த்த மண்டபத்தில் குரு பாதுகா பூஜை செய்து கொண்டிருந்தேன். அப்போது அங்கே வந்த ஸ்ரீ ஸந்நிதானம் பூஜை முடிந்ததும் அந்தப் பாதுகைகளைத் தாம் வாங்கிச் சென்று எட்டு நாள் தாமே ஆராதனை செய்து பிறகு எனக்குக் கொடுத்து அனுக்ரஹித்தார்கள். எனக்கு ''குரு பாதுகா பூஜா அக்ரேஸரர்'' (गुरुपादुकापूजाग्रेसर:) என்ற பிருதும் வழங்கினார்கள். இந்த மஹத்தான பாக்கியத்தைப் பெற்ற நான் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ''நான் தனியாக ஆராதனை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டாம். பெரியவாள் நடத்தும் ஆராதனையிலேயே நானும் கூட இருந்து ஸேவை செய்கிறேன்'' என்று கூறிவிட்டேன்.

குரு ஆராதனை தினத்தன்று ஸ்வாமிகள் என்னைத் தம்முடனே கூட வைத்துக் கொண்டு ஆராதனையில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்தார்கள். அதன் மூலம் ஸ்ரீ ஸத்குருவின் பரிபூர்ண அநுக்ரஹத்தைப் பெற்றேன்.

ஆராதனை உத்ஸவம் பூர்த்தியானதும் நான் ஊருக்குப் போக உத்தரவு கேட்டபொழுது சங்கர ஜயந்திக்குப் பிறகு போகலாம் என்று ஆக்ஞை பிறந்தது. இடையில் சுவாமிகள் அந்தர்முகமாகி விட்டார். ஆனாலும் அவர்கள் பஹிர்முகமாக வந்தபிறகு உத்தரவு பெற்றுக் கொண்டு தான் ஊருக்குப் போவது என்ற தீர்மானத்துடன் அங்கேயே தங்கிவிட்டேன்.

இந்தச் சமயத்தில் நாசிக்கிலுள்ள சிருங்கேரி ஸ்ரீ சங்கர மடத்தின் மேற்பார்வையாளர் வித்யாரண்யபுரம் கங்காதர பட்டர் என்பவர் கோவிந்த வாத்யார் என்ற தன் நண்பரை அழைத்துக்கொண்டு சிருங்கேரிக்கு வந்திருந்தார். ஒரு நாள் காலை 10 மணிக்கு என் குருநாதாள் அதிஷ்டான மண்டபத்தில் அவ்விருவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். பெரியவாள் அந்தர்முகமாய் இருக்கும் அறைக்கு மேற்குப் பக்கத்தில் ஒரு ஜன்னல் உண்டு. அந்த ஜன்னல் வழியாக அவர்கள் வெளியிலுள்ள ஸேவார்த்திகளைப் பார்க்கலாம். நாமும் அவர்களைப் பார்க்கக்கூடும். ஆசார்யர்கள் ஜன்னல் வழியாக எங்களைப் பார்த்து 'கங்காதர பட்டர்' என்று கூப்பிட்டார்கள். அவரும் உடனே ஜன்னல் அருகில் சென்று

வந்தனம் செய்து நின்ருர். ''நாசிக்குக்கு நீ போக வேண்டாம். வேறு ஆசாமியை நாம் அங்கே அனுப்புவோம்; நீ இங்கேயே மலஹாநிகரேசுவரர் தேவஸ்தானத்தில் வேலேபார்'' என்று கன்னடத்தில் உத்தரவிட்டார்கள். அவரும் அப்பணே (உத்தரவு) என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

ஆனுலும் அந்தர்முக நிலேயில் செய்த உத்தரவுதானே என்று அதை அலக்ஷ்யம் செய்து மூன்று நாட்கள் சென்றதும் இருவரும் நாசிக்கிற்குப் புறப்பட்டனர். நான் பெரியவாள் உத்தரவை ஞாபகப்படுத்தியும் நாசிக்கில் அதிக வரும்படி கிடைக்கும் என்ற எண்ணத்துடன் புறப்பட்டு விட்டனர். ஒரு வாரம் கழித்து அவரிடமிருந்து சிருங்கேரியிலுள்ள அவர் பையனுக்கு கடிதம் வந்தது. அதில் ''பெரியவாள் உத்தரவை மீறி பாகவதர் ஞாபகபபடுத்தியதையும் கேட்காமல் வந்ததனுல் தங்கள் சாமான்களெல்லாம் ரயிலில் திருட்டுப் போய் ரூ.150 க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாக எழுதியிருந்தார். இச்சம்பவங்கள் பெரியவாளின் மஹிமையை அறிந்து கொள்ள நமக்கு உபயோகமாயிருக்கும். அந்தர்முக நிலேயிலும் அவர்களுடைய உத்தரவின்படி நடந்தால் க்ஷேமமுண்டாகும்.

11

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

கோவை ஸ்ரீ V.A. கிருஷ்ணமூர்த்தி ஐயர் (வக்கீல்)

1923-ம் வருஷம் ஸ்ரீ சாரதாம்பிகையின் ஆக்ஞையை முன்னிட்டு தக்ஷிணதேச யாத்திரையைத் துவக்கி ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகள் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் சிருங்கேரிக்குத் திரும்பினுர்கள். பிறகு தம்முடைய ஸகல பதவிகளையும் தியாகம் செய்யக் கருதித் தாம் இருக்கும்பொழுதே தமக்குச் சிஷ்யராக ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த ஸ்வாமிகளை 1931-ம் வருஷத்தில் தெரிந்தெடுத்தார்கள். 1939-ம் வருஷம் பங்குனி மாதத்தில் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் காலடி க்ஷேத்திரத்திற்குச் சென்றுர்கள். அவ்விடம் பத்துமாத காலமிருந்து தக்ஷிணதேச சிஷ்யர்களை அனுக்கிரஹித்து வந்தார்கள். அப்போது சிலமாத காலம் ஆத்ம நிஷ்டையில் ஆழ்ந்து விளங்கினுர்கள். வெளிஜனங்களுக்கு அது அஸாதாரணமாகக் காணப்பட்டதால் பீதி அடைந்து உடம்புக்குச் சிகிச்சை செய்ய யத்தனப்பட்டும், மைசூர் அரசாங்க வைத்தியர் ஒருவர் நேரில் வந்து தன் யுக்திக்கு எட்டின வரையில் பரிசீலனை செய்தும், ஒன்றும் புலப்படாமல், ஸமஸ்தானத்துக்கு ஒரு விண்ணப்பம் (ரிபோர்ட்) எழுதினுர். அந்த சமாசாரம் போய்ச் சேருவதற்கு முந்தியே 1940-ம் வருஷம் பிப்ரவரி மாதம் யாவரும் எதிர்பாராமலிருக்கும் சமயத்தில் திடீரென்று ஸ்ரீஸ்வாமிகள் 'சிருங்கேரிக்குப் புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்' என்று ஆக்ஞாபித்தார்கள். அப்பொழுது பகிர்முகமாக வந்து ஸகலருக்கும் தரிசனம் கொடுத்தார்கள். ஏகாந்தமாயிருந்த ஸமயங்களிலும்

சிலருக்குத் தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. அவரைப் பார்த்தவர்கள் அவர் முகத்தில் பிரகாசித்த தேஜஸைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள்.

ஸ்ரீ மஹாஸ்வாமிகள் காலடியிலிருந்து திரும்பி சிருங்கேரிக்குச் சென்ற பிற்பாடு அடிக்கடி ஏகாந்தத்திலிருந்து கொண்டு ஸச்சிதானந்தஸ்வரூப தியானத்திலேயே இருந்து வந்தார்கள். 1941 நவராத்திரி ஆரம்பத்தில் மறுபடியும் ஆச்சர்யப்படும்படியாக வெளியில் வந்து திவ்ய மந்தஹாஸத்துடன் பூஜைகளைச் செய்தும் தரிசனம் கொடுத்தும் வந்தார்கள். அப்படியே அடிக்கடி வெளிவந்து தரிசனமும் கொடுத்து தாமே பூஜைகள் செய்து அனுக்ரஹித்தார்கள்.

ஸம்ஸாரத்தில் கிடந்து உழலுவோர்க்கு ஆத்ம விசாரம் ஒன்றே ஆறுதல் அளிக்கக் கூடியது. அதற்கு ஒரு தகுந்த குருவை அடைவது மிகவும் அவசியம். அப்படிப்பட்ட குருவைப் பெறுவதற்கு ஒரு முமுக்ஷு அழுது புரண்டு பிரார்த்தனை செய்ய வேண்டும். அதுபோன்ற வேகம் என்னிடம் 1939 ஆம் ஆண்டில் தோன்றியது.

என் பூர்வ புண்ணிய பலன் என்னை எங்கள் குடும்பத்தின் பிரத்யட்ச குருவான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளிடம் அழைத்துச் சென்றது. அப்போது அவர் காலடியில் தங்கி இருந்தார். அதுவே எனக்கு முதல் தரிசனம்.

நான் போன சமயத்தில் ஸ்ரீ ஆசார்யர்கள் தம்முடைய தனி அறையில் ஸ்ரீசக்ர பூஜை செய்து கொண்டிருந்தார். பூஜை முடிந்ததும் நான் நமஸ்காரங்களைச் செய்து எழுந்தேன். என் நோயின் பாதைகளைப் பற்றி அவரிடம் முறையிட்டுக் கொண்டு அது தீருவதற்கு அவருடைய அருளை வேண்டினேன். அவர் என்னை ஆசீர்வதித்து ''தினமும் சூர்ய நமஸ்காரம் செய்து வா. நீ ருத்ர மந்திரங்களையும் ஜபம் செய்'' என்று உபதேசித்தார்.

''எனக்கு சம்ஸ்கிருத பாஷை தெரியாதே!'' என்று நான் கூறியபோது, ''ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் உருவப் படத்திற்கு நமஸ்காரம் செய்துவிட்டுத் தொடங்கு - எல்லாம் சரியாகி விடும். பயப்படாதே!'' என்றார்.

நான் காலடியிலிருந்து திரும்பியவுடன் சற்றும் எதிர்பாராத விதமாக எனக்கு ஸ்ரீ ஆசார்யர்களின் பெரிய உருவப்படம் கிடைத்தது. அதுவும் அவருடைய ஆக்ஞையாலே தான் எனக்குக் கிடைக்கச் செய்யப்பட்டதாகத் தெரிந்தது.

அடுத்த சில மாதங்களில் சம்ஸ்கிருத மொழியை நான் ஓரளவு கற்றுக்கொண்டு விட்டேன். ஒரு பண்டிதரின் உதவியோடு உபநிஷத்துக்களையும் படிக்கத் தொடங்கினேன்.

அடுத்தமுறை நான் காலடிக்குச் சென்று ஸ்ரீ ஆசார்யர்களைத் தரிசித்தபோது சம்ஸ்கிருத, சாஸ்திர படிப்புகளில் நான் முன்னேற்றம் அடைந்திருப்பதை அறிந்து ஆசார்யாள் சந்தோஷித்தார். ''நீ சிருங்கேரிக்கு வர வேண்டும்'' என்று அன்புடன் ஆக்ஞை இட்டார்.

அதற்கு இணங்க நான் 1941 ஆம் ஆண்டு முதன்முறையாக சிருங்கேரிக்குச் சென்றேன். அச்சமயம் ஸ்ரீ ஆசார்யர்கள் அந்தர்முகராக இருந்ததால் நான் அவரை என் கண்களால் தரிசனம் செய்ய முடியவில்லை. ஆனால் அவர் தங்கியிருந்த அறையிலிருந்து உரத்த குரலில் ஸ்தோத்திரங்களையும் பல சம்ஸ்கிருத சுலோகங்களையும் சொல்லிக் கொண்டிருந்ததைக் காதுகளால் கேட்க முடிந்தது. அவர் தங்கியிருந்த கட்டிடத்தையே பிரதக்ஷிணம் செய்து அதன் வாயிலருகே சாஷ்டாங்க நமஸ்காரங்களைச் செய்துவிட்டுத் திரும்பினேன். அப்போது ஸ்ரீ சாரதாம்பாளின் தரிசனமும் இளைய ஸ்வாமிகள் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தரின் தரிசனமும் கிடைத்தன.

1942 ஆம் ஆண்டில் என் வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம் ஏற்பட்டது. சிருங்கேரியில் ஸ்ரீ ஸச்சிதானந்த விலாஸ் என்ற கட்டிடத்தில் ஸ்ரீ ஆசார்யர்களின் தரிசனம் கிடைத்தது. அப்போது அவருடைய அருகிலேயே அமரக்கூடிய பொன்னான வாய்ப்பும் கிட்டியது. ஆனால் பயபக்தியால் என் உடலே நடுங்கியது. வாயிலிருந்து வார்த்தைகளும் வெளிவரவில்லை. அதனால் அவருடைய அனுமதியைப்பெற்ற நான் விஞ்ஞாபனம் செய்துகொள்ள எண்ணியதை ஒரு காகிதத்தில் எழுதிக்கொண்டு அதையே படித்தேன். கருணையுடன் அதைக் கேட்டுக்கொண்டு

எனக்கு மந்திர தீட்சை அளித்தார். நான் சற்றும் எதிர்பாராத விதமாக என்னிடம் இருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து தம் கையினுலேயே அதில் ஒரு மந்திரத்தை எழுதிக் கொடுத்தார். ''இதைப் படி'' என்ருர். அந்த லிபியைப் படிக்கமுடியாமல் நான் திணறியபோது அந்த மந்திரத்தைத் தம் வாயினுலேயே கூறி என்னை எழுதிக் கொள்ளச் சொன்ஞர். அவருடைய அந்தக் கருணை எல்லையற்றதாக இருந்தது.

1945 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஆசார்யர்கள் காஷ்ட மௌனத்தை அவலம்பித்து (காய்ந்த மரம் போல எவ்வித பாவமும் பேச்சும் இல்லாமல்) இருந்தபோது மடத்து அதிகாரிகள் வெளியார் யாரும் துங்கா நதியைக் கடந்து நரஸிம்ம வனத்திற்குள் சென்று விடாதபடி காவல்போட்டிருந்தனர். ஆனுல் இளைய ஸ்வாமிகளின் கருணையால் நான் மட்டும் போய் ஸ்ரீ ஆசார்யர்கள் தம் குருவின் அதிஷ்டானத்தின் முன் ஏகாந்தமாக நின்று கொண்டிருக்கையில் சற்று தூரத்திலிருந்து தரிசனம் செய்தேன். அது பெறும் பேறு.

1942 அக்டோபர் மாதம் 1-ந் தேதி விடியற்காலம் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அந்தர்முகத்திலிருக்கும் சமயம் திடீரென்று ''நிலமாவுமட ஸ்வாமிகள் ஸித்தியடையப் போகிருர்கள். அவரை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள்'' என்று ஹரிகாரர்களுக்கு கட்டளையிட்டார்கள். காலையில் 7 மணி சுமாருக்கு ஸ்ரீ போதேந்திர நாராயண தீர்த்த ஸ்வாமிகள் ஸித்தியடைந்தார்கள். இந்த ஸம்பவம் ஆச்சரியப்படும்படி இருந்தபோதிலும் ஒரு திரிகால ஞானிக்கு இவை ஒன்றும் பெரிதல்ல.

1945-46 வருஷங்களில் மஹாஸ்வாமிகள் பகிர்முகமாக இருந்தாலும் பரகாஷ்டமௌனத்தில் இருந்து வந்தார்கள். அப்பொழுது அவரைப் பார்த்தவர்களுக்கு ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திரர் ஞாபகம் வரும். சிஷ்யர்களுடன் யாதொரு ஸம்பாஷணையும் கிடையாது. அந்த ஸமயங்களில் மஹாஸ்வாமிகள் சிஷ்யர்களின் ஆத்மாவைப் பார்த்தார்களே யொழிய வேறில்லை. பரம வைராக்கியம் கொண்டு எளிய வஸ்திரம் தரித்துத் தம் குருவின் அதிஷ்டானத்தை நோக்கி தரையில் படுப்பார்கள். பாதுகைகள்கூட

போடுவதில்லை. 1939 ல் பெங்களூர் விஜயத்தின்போது பாதசாரியாக நடக்கிருர் என்று தெரிந்ததும், மகாராஜா ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையாரின் மனம் நொந்தது. குருக்கள் பாதுகையில்லாமல் நடப்பது தன் ராஜ்ஜியத்தின் அபிவிருத்திக்குப் பாதகம் ஏற்படுத்துமென்று நினைத்து ஸ்வாமிகளை மேனுவில் போகும்படி பிரார்த்தித்தார். இரண்டாவது காலடி விஜயத்தின்போது, திருவிதாங்கூர் ஸம்ஸ்தானத்தில் ஸகலராஜ மரியாதைகளையும் தயாரித்திருந்தார்கள். ராஜதானிக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று விநயத்துடன் பிரார்த்தித்தார்கள். ஸ்வாமிகளோ எளிய முறையில் காலடியில் தங்கிவிட்டு வேறு எங்கும் செல்லாமல் பெங்களூர் திரும்பினுர்கள்.

1942-ல் உலகமகா யுத்தத்தின் கொடுமையால் பல நாடுகள் வருந்திக் கொண்டிருந்த சமயம், ''நம் நாட்டுக்கு ஆபத்து நேருமோ'' என்று கேட்ட பக்தருக்கு ஸதாசாரபரர்களாய், தர்மானுஷ்டானம் செய்துகொண்டு ஈசுவரனைக் கருணை காட்டும்படி பிரார்த்தித்து வந்தால் பாரத நாட்டுக்கு ஆபத்து வராது'' என்று அருளினுர்கள். அணுகுண்டு முதலிய பல நாசகாரி அஸ்திரங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு உலக சமாதானத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் இக்காலத்திலும் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உபதேசத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோமானுல் நம் நாட்டுக்கு தீங்கு நேராது என்பது திண்ணம்.

1947 ஆகஸ்டு மாதம் ஆங்கில ஆட்சி நீங்கி நாடு சுதந்திரம் அடைந்த தினத்தன்று ஸ்ரீ சாரதாம்பாளுக்கு விசேஷ பூஜைகளை நடத்தி, அதிகாரவர்க்கத்தினருக்கு நாட்டின் க்ஷேமத்துக்கே பாடுபட வேண்டிய ஆற்றல் அளிக்குமாறு பிரார்த்தித்தார்கள்.

1954 ஆகஸ்டு மாதம் நம் ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத் அவர்கள் சிருங்கேரிக்கு விஜயம் செய்து இரண்டு மஹாஸ்வாமிகளையும் தரிசித்து விசேஷ அனுக்கிரஹம் பெற்ருர்கள்.

அந்த ஆண்டு ஆகஸ்டு பூராவும் ஸெப்டம்பர் 25-ம் தேதி வரை சிருங்கேரிக்குத் தரிசனத்துக்காக வந்த சிஷ்யர்களுக்குக் கணக்கே இல்லை. ஸ்ரீ ஸ்வாமிகள் 23 ந் தேதியன்றே ஏகாந்தத்தை

விரும்பி நரஸிம்மவனம் சென்று விட்டார்கள். நவராத்திரி ஆரம்பிக்கவிருப்பதால் சின்ன ஸ்வாமிகளும், மற்ற சிஷ்யர்களும் பிரார்த்தித்தும் ஸம்மதிக்காமல் நரஸிம்மவனத்தில் ஏகாந்தத்திலேயே இருந்து விட்டார்கள். மஹாஸ்வாமிகள் கடைசியாகச் செய்த காரியம் பவானி சுவாமிகளுக்கு ஆசார்ய மூர்த்தி ஒன்றை பவானி க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டை செய்யும்படி இட்ட உத்திரவுதான். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை விதேஹ கைவல்யம் அடைந்தார்கள். ராஷ்டிரபதி தான் அனுப்பிய செய்தியில் இத்தகைய ஜீவன்முக்தர்கள் ஸ்தூலமான தேகத்தை விட்டபோதிலும் லோகக்ஷேமத்துக்காக ஸதா அனுக்கிரஹம் செய்துகொண்டு தானிருப்பார்கள் என்று கூறினர்.

குறிப்பிட்ட காலத்தில் தாம் விதேஹமுக்தியடைவதைப் பற்றி சூசனையாக சில சிஷ்யர்களிடம் தெரிவித்திருக்கிறுர்கள். ஒரு சிஷ்யரை சிருங்கேரியில் சில தினங்கள் தங்கியிருக்கும்படி சொல்லியிருந்தார்கள். அவர் முக்கியமான காரியத்தை உத்தேசித்து தன் ஊருக்குப் போக நேர்ந்தது. அப்போது உத்தரவு அளிக்கும்போது நீங்கள் சீக்கிரமாகவே இங்குவர நேரும் என்று சொன்ஞர்கள். இன்னொரு சிஷ்யர் தம் மனைவியுடன் சிருங்கேரிக்கு வந்து ஸெப்டம்பர் 22-ம் தேதி புறப்படும்போது அவருக்கு மஹாஸ்வாமிகள் சொன்னதாவது - ''ஏகாதசியன்று திரும்பி வாருங்கள்''. இதில் ஒரு விசேஷம் - ஏகாதசியன்றுதான் மஹா ஸ்வாமிகள் அவதரித்தார்கள். அவர்கள் விதேஹமுக்தியடைந்தபின் முதல் ஆராதனை ஏகாதசியில் நடத்தப்பட்டது!

சிஷ்யர்களிடம் அவர்கள் காட்டிய கருணை அபாரமானது. ஒருவனை ஒருதரம் பார்த்திருந்தால் போதும், அவனை மறப்பதில்லை. சென்னையில் உயர் நீதிபதியாக இருந்த ஒருவரின் பேரன் சிருங்கேரிக்கு நவராத்திரி சமயம் வந்து தான் இன்னுருடைய ஸஹோதரன் என்று சொல்லிக் கொண்டார். அவரை உற்றுநோக்கிய ஸ்வாமிகள் 'துர்க்கை கோயிலில் தரிசனம் செய்துகொண்ட ராமஸ்வாமி அல்லவா நீங்கள்?' என்று கேட்டார். அவருக்கு இந்த சம்பவம் ஞாபகத்திலில்லை. அவர் ஸஹோதரி ஞாபகப்படுத்தினுள். 23 வருஷங்களுக்கு முன் ஓர் இரவில்

சிருங்கேரிக்கு சற்று தூரத்தில் உள்ள துர்க்காம்பாள் ஆலயத்தில் நடந்த சம்பவம் இது.

பம்பாயிலிருந்து ஒரு ஸாரஸ்வத பிராம்மணர் சிருங்கேரிக்கு வந்தார். அவர் நடை உடை எல்லாம் மேல்நாட்டுப் பாணியிலிருந்ததால் அவரை யாத்திரிகரின் விடுதியில் தங்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ஆனால் ஜகத்குருவை தரிசிக்க வேண்டுமென்ற அவா மிகுதியால் அவர் இரவில் ஸ்நானம் செய்து, பஞ்சகச்சம் உடுத்தி பூஜாகிருஹத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். பூஜை முடிந்ததும் மஹாஸ்வாமிகள் பல சிஷ்யர்களுடன் பேசிவிட்டு இவரிடம் வந்து ஒரு நிர்மால்ய புஷ்பத்தைப் பிரஸாதமாகக் கொடுத்து அவருடன் சம்பாஷித்தார்கள். அவர் உள்ளத்திலிருந்த பக்தியே இந்த அனுக்கிரஹத்துக்குக் காரணம்.

பெங்களூர் வாசியான ஒரு தனவந்தர் வருடம்தோறும் சிருங்கேரிக்கு வந்து கொண்டிருந்தார். ஒரு சமயம் பலநாள் கழித்துத்தான் தரிசனம் கிடைத்தது. தனக்கு சிருங்கேரியே கைலாயம், கோகர்ணம்; ஜகத்குருவே ரக்ஷகர் என்று அவர் சொல்லுவது வழக்கம். ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த நரஸிம்மபாரதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்துக்கு முன் நடந்த ஒரு ஸதஸில் இவருக்கு ''பக்தரத்னம்'' என்ற விருது அளிக்கப்பட்டது. இவர் அதைப் பெற்றுக்கொண்டு ஸாஷ்டாங்கமாக வணங்கி, கண்களில் நீர் ததும்ப, 'கருணைதான் தனக்குத் தேவை' என்று கூற மஹாஸ்வாமிகளும் தம் கரகமலங்களை தம் குருநாதாளின் மூர்த்தத்தின் பக்கம் உயர்த்திக் காண்பித்தார். அவர்கள் கருணைதான் என்ன! குருபக்திதான் என்ன!

மஹாஸ்வாமிகளின் அனுக்கிரஹத்தை முன்னிட்டு தன் மகளின் விவாஹத்தை நடத்திய ஒருவர் மங்களூர் வழியாக சிருங்கேரிக்கு வந்து கொண்டிருக்கும் வழியில் மாலை 1-30 மணிக்கு ஆகும்பை சேர்ந்தார். பெட்ரோல் கிடைக்காததால் அன்று பஸ் கிடையாதென்றும், மறுநாள்தான் போக முடியுமென்றும் தெரிந்துகொண்டார். அன்றே சிருங்கேரிக்குப் போக

வேண்டுமென்ற அவா மிகுதியால் மஹாஸ்வாமிகளை ஸ்மரித்துக் கொண்டிருந்தார். எதிர்பாராமலேயே கொப்பாவிலிருந்து ஒரு பஸ் வந்தது. பிரயாணிகளை இறக்கிவிட்டுத் திரும்புகையில் இந்த பக்தரை ஏற்றிக் கொண்டு இரவு 11-30 மணிக்கு ஹரிஹரபுரத்தில் விட்டது. அங்கிருந்து சிருங்கேரிக்கு இரவில் பஸ் எப்படி கிடைக்கும்? ஒரு விந்தை! அதிக மழையால் தபால்களைக் கொண்டுவரும் பஸ் அன்று பல மணி நேரம் தாமதமாக அப்போது ஹரிஹரபுரம் வந்தது. இவரை ஏற்றிக்கொண்டு 12-45 மணிக்கு சிருங்கேரி வந்தது. அவருக்கு தரிசனமும் கிடைத்தது. மறுதினம் உபதேசமும் பெற்றுக்கொண்டார்.

மந்திரோபதேசம் பெற்றுக்கொள்ள இச்சைப்படும் சிஷ்யர்கள் தங்கள் தினசரி அனுஷ்டானங்களை சரியாகச் செய்து வருகிறார்களா என்று மஹாஸ்வாமிகள் தெரிந்து கொள்வார்கள். அவர்களின் மனோபாவம், பக்தி, அதிகாரம் இவைகளை அனுசரித்தே தக்க மந்திரம் உபதேசிக்கப்படும்.

மக்களின் வியாதிகளையும், கஷ்டங்களையும் அமிருத கடாக்ஷத்தாலும் மந்திர சக்தியாலும் விபூதி ப்ரஸாதத்தாலும் போக்கடிப்பார்கள். ஒருவர் கீல்வாயு உபாதியால் வருந்துபவர். அவருக்கு விபூதி பிரஸாதத்தைக் கொடுத்து மறுபடியும் அந்த வியாதி வராமலிருப்பதற்காக 'ஹநுமத் பஞ்சரத்ன' சுலோகங்களைப் பாராயணம் செய்வதுடன் , திருச்செந்தூர் முருகனின் இலை விபூதியைத் தினம் தரித்துக் கொள்ளும்படி ஆக்ஞாபித்தார்கள். அவருக்கும் வியாதி ஸ்வஸ்தமாய்விட்டது. விதேஹ கைவல்யமடைவதற்கு சில தினங்களுக்கு முன், பல வருஷங்கள் பேச்சில்லாத ஒரு பையனை விபூதி ப்ரஸாதம் கொடுத்து பேசும்படி செய்தார்கள். வைத்தியர்கள் கைவிட்ட பிறகும்கூட சிஷ்யர்கள் பிரார்த்தித்து எழுதினால் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு விபூதி அனுப்பி ஸ்வஸ்தமாகும்படி அனுக்கிரஹிப்பார்கள்.

1952 ல் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் அறுபதாவது ஆண்டு நிறைவு வைபவத்தைக் கொண்டாட அவாவுடன் நாடு முழுவதும் பரவியிருக்கும் சிஷ்யர்களுக்காக சிருங்கேரி குரு ஸேவா ஸமிதி

பெருந்தொகையைக்கூட்டி அதிருத்திர, ஸஹஸ்ரசண்டீ ஹோமங்களை நடத்துவதாக எண்ணினார்கள். இக்குழுவுக்கு உத்ஸாகமூட்டியவர் சிவமொக்கா ஸ்ரீ H. சுந்தரமய்யர். இது விஷயங்கள் மஹாஸ்வாமிகளுக்கு விக்ஞாபிக்கப்பட்டது. தமக்காக யாதொரு விழாவும் கொண்டாடக்கூடாது என்றும், தாம் அதில் கலந்துகொள்ள முடியாதென்றும் வைராக்கிய மூர்த்தியாகிய குருநாதர் சொல்லிவிட்டார்கள். ஷஷ்டியப்த பூர்த்தி தினம் கழிந்து சில மாதங்களுக்குப் பின் லோக க்ஷேமத்தின் பொருட்டு ஹோமங்களை நடத்த அனுமதி கோரினார்கள். அனுமதி அளிக்கப்பட்டது. 1953 ஏப்ரல் மாதம் 200 பிராம்மணர்களைக் கொண்டு பல்லாயிரம் ஜனங்கள் சூழ ஜபம், ஹோமங்கள் நடைபெற்றன. குருநாதரோ அந்தர்முகம். ஹோமங்கள் முடிந்ததும் சிவமொக்கா சுந்தரமய்யர் மஹாஸ்வாமிகளை அணுகி விக்ஞாபித்துக் கொண்டார்கள். அப்போது மாலை 2-30 மணி. குருநாதர் ''ருத்திர பகவான் திருப்தி அடைந்துவிட்டார்'' என்று சொன்னார்கள். அவர்கள் இப்படி உரைத்ததும் எங்கிருந்தோ மேகங்கள்கூடி பலத்த மழை பொழிந்தது. ஈசுவர ப்ரஸாதம் இவ்விதம் குருநாதரின் கருணையால் விளக்கப்பட்டது.

1954 ஆம் ஆண்டின் வியாஸ பூஜை சமயத்தில் நான் சிருங்கேரியில் இருந்தேன். ஒரு நாள் முற்பகலில் சுமார் 11 மணிக்கு ஸ்ரீ ஆசார்யர்கள் மாத்யாஹ்னிக ஸ்நானம் செய்யப்போகு முன்னர், குழுமியிருந்த பக்தர்களுக்குத் தரிசனம் கொடுப்பதற்காக வெளியே வந்தார். அவருக்கு நடுவில் வழிவிட்டு இரு மருங்கிலும் ஜனங்கள் நமஸ்காரங்களைச் செய்து விட்டு கைகூப்பி நின்றனர்.

அவருடைய திருஷ்டி தம்மேல் விழாதா, தம்மை அடையாளம் தெரிந்து கொண்டதைக் காட்ட ஒரு புன்னகையாவது புரியமாட்டாரா, ஒரு வார்த்தையாவது தம்மிடம் பேச மாட்டாரா என்று ஒவ்வொருவரும் ஏங்கினர். அவருடைய திருஷ்டி என் மேல் விழுந்தவுடன் சட்டென்று திரும்பி அவர் உள்ளே சென்று விட்டார். சற்றும் எதிர்பாராமலேயே சிறிது நேரத்தில் வெளியே வரவும் செய்தார். அப்போது அவருடைய கரங்களில் ஒரு தட்டு இருந்தது.

அதில் மந்திரிக்கப்பட்ட விபூதியும் இருந்தது. சைகையாலே என்னைத் தம் அருகில் வரும்படி அழைத்து அந்த விபூதிப் பிரஸாதத்தை என்னிடம் கொடுத்தார்.

அதுவே தம் பூத உடலில் அவர் எனக்குத் தந்த கடைசி தரிசனம்.

ஸ்ரீ ஆசார்யர்களின் கருணை கால தேச எல்லைகளைக் கடந்தது. வழி தவறி விட்டவர்களும் மனம் வருந்தி இன்றும் அவரை எண்ணி பிரார்த்தனை செய்து கொள்ளலாம். அது நன்மை பயக்கும்.

இதை நிதரிசனமாகக் காட்ட வேறு ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம்.

காசி ஸ்ரீ ஸச்சிதாநந்த ஸ்வாமிகள் 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் ஒரு தென்னிந்திய அதிகாரியின் சொப்பனத்தில் ஸ்ரீ ஆசார்யர்கள் தோன்றி அவருடைய துயரைத் தீர்த்த சம்பவத்தைப் பற்றி விவரமாகக் கூறியிருந்தார்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ ஆசார்யர்கள் அந்த அதிகாரிக்கு மந்திரோபதேசம் செய்திருந்தார். ஆனால் அவரோ அதைத் தொடர்ந்து ஜபம் செய்து வராமல் விட்டு விட்டார். அவருடைய வாழ்க்கையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. சொத்துக்களும் போய்விட்டன. அதனால் மிகவும் துயருற்றார். குரு உபதேசித்த மந்திரஜபத்தைத் தான் சிரத்தையின்றி நிறுத்தி விட்டது தான் தன் கஷ்டங்களுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ணி அதற்காக மிகவும் வருந்தினார். மாதக்கணக்கில் குருநாதரையே நினைத்து நினைத்து பிரார்த்தனைகளும் செய்து வந்தார்.

1962 ஆம் ஆண்டு வியாஸ பூஜை தினத்தன்று ஸ்ரீ ஆசார்யர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து வைத்து பூஜை செய்துவிட்டு அன்று உபவாஸம் இருந்தார். அன்று இரவு அவருக்கு ஸ்வப்னமாயிற்று. அவருடைய கனவில் ஸ்ரீ ஆசார்யர்கள் தோன்றி அவரை உடனே வாராணஸிக்குச் சென்று ஸ்ரீ ஸச்சிதாநந்த

ஸரஸ்வதி ஸ்வாமிகளைச் சந்தித்து அவர் சொற்படி நடக்கும்படி கட்டளையிட்டார். அந்த அதிகாரிக்கோ காசி ஸ்வாமிகளை முன்பின் தெரியாது. ஆனாலும் ஸ்ரீ ஆசார்யர்களின் ஆக்ஞைபடி உடனே காசிக்குச் சென்று ஸ்ரீ ஸச்சிதாநந்தரைச் சந்தித்து எல்லா விவரங்களையும் சொன்னார். பின்னர் அவர் சொற்படி நடந்தார்.

அதன் பயனாக அவருடைய கஷ்டங்கள் எல்லாம் விரைவில் மறைந்தன. பழைய நல்ல நிலையை மீண்டும் அடைந்தார்.

இந்தச் சம்பவம் ஸ்ரீ ஆசார்யர்கள் காலதேச வரம்புகளைக் கடந்து எக்காலத்திலும் பிரத்யட்சமாக இருந்து அருள்புரிந்து வருகிறார் என்று நிச்சயமாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட மகானை நாம் காண்பது மிகவும் அரிது. பீடத்தின் கௌரவங்களைத் தாம் துறந்து அதன் மகிமையைக் காப்பாற்ற வேண்டி சிஷ்யபரிக்கிரஹம் செய்து, தம் பக்கத்திலேயே 24 வருஷங்கள் வைத்துக்கொண்டு ஸகல உபதேசங்களையும் தமது பூர்ண அனுக்ரஹத்தையும் அடைந்த தமது உத்தம சிஷ்யர் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளையே சகல காரியங்களையும் பார்க்கும்படி செய்து தாம் ஸமாதி நிலையிலேயே இருந்துகொண்டு சில ஸமயங்களில் ஜனங்களின் நிர்ப்பந்தத்தால் ஜாக்ரத் அவஸ்தைக்கு வந்து யாதொன்றிலும் பற்றில்லாமல் பக்தர்களை அனுக்கிரஹித்து வந்திருக்கிறார்கள். நம் குருநாதர் ஸர்வ வியாபி என்ற நிச்சயத்துடன் அவர்கள் காட்டிய வழியைக் கடைப்பிடித்து நடப்போமானால், அவர்களின் அனுக்கிரஹத்தை அடைவது திண்ணம்.

12

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

''சிஷ்யர்''

பரம்பரையாக நாங்கள் சிருங்கேரி மடத்து சிஷ்யர்கள். கோத்ரம், ரிஷிகள்போல் ஆசார்யாளும், பீடமும் நமக்கு குல பரம்பரையாக வந்த ஸொத்து. அதை நாம் மாற்றிக் கொள்ள முடியாது. நான் சிறு வயதாயிருக்கும்பொழுது 1908-ல் ஸ்ரீ நரஸிம்மபாரதீ ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்கள் கையால் தீர்த்தம் வாங்கிக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. முதல் முதலில் அவர்களை தரிசித்ததுமே சிறுவனாகிய எனக்கு அபார பக்தியும் விச்வாஸமும் ஏற்பட்டு விட்டது. யாவர் மனதையும் கவர்கின்ற அந்த வ்யக்தியைப் பார்த்ததுமே ஈசுவரனே நேரில் வந்திருப்பதாகத்தான் நினைத்தேன்.

1923-ல் ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் கோபிசெட்டிப் பாளையத்தில் சாதுர்மாஸ்யத்திற்குத் தங்கினார்கள். என் கிருஹத்தில் எல்லோரும் தரிசனத்திற்குச் சென்றார்கள். ஸ்ரீ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகளுக்கப்புறம் அந்த மாதிரி வேறு மூர்த்தி கிட்டுமா என்று எண்ணிக் கொண்டிருந்தேன். சாதுர்மாஸ்யம் முடிந்து ஸ்ரீ ஸ்வாமிகள் நவராத்திரி ஸமயம் ஈரோட்டில் விஜயம் செய்திருந்தபொழுது நான் முதல் தடவையாக அந்த மூர்த்தியை தரிசித்து அவர்களுடைய அன்பு ததும்பும் கிருபாகடாக்ஷம் என் மேல் விழுந்ததும் என் அபிப்ராயத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன். ஸ்ரீ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகளை கிருஷ்ணர் போல் உபதேசமூர்த்தியாகவும், ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளை ஸ்ரீ ராமர் போல யோகி நிலையைத் தாமே அனுஷ்டித்துக் காட்டும் மூர்த்தியாகவும் எண்ணினேன்.

அந்தர்முக நிலையில் ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மம் போலவும் மற்ற காலத்தில் பீடாதிபதியாயிருந்து எல்லா நிர்வாஹத்தையும் நடத்திக் காண்பித்தார்கள்.

கோயம்புத்தூர் வந்திருந்தபொழுது 1927-ல் கிருஹத்திற்கு அழைத்து பாதபூஜை, பிக்ஷை நடத்தி கிருதார்த்தனானேன். இப்பொழுது விளங்கும் மஹாஸந்நிதானத்திற்கும் (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்) கிருஹத்தில் பாதபூஜை பிக்ஷாவந்தனம் நடத்தி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டேன். எங்கள் முன்னோர்கள் செய்த தவத்தால் மூன்று தலைமுறையாக சிருங்கேரி பீடாதிபதிகளின் அனுக்ரஹத்தைப் பெறும் பாக்கியம் கிடைத்தது. பெரியவாளிடம் மந்திரோபதேசம் பூஜை முதலியவற்றையும் பெற்றேன். யதாசக்தி ஸத் கார்யங்களில் ஈடுபட்டு இப்பொழுது நிம்மதியாயிருப்பதற்கு ஸ்ரீ ஸந்நிதானத்தின் அனுக்ரஹம்தான் காரணம்.

காலடியில் ஸ்ரீ ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது அடிக்கடிபோய் தரிசித்து உபதேசம் பெற்றுக் கொள்வேன். ஒரு ஸமயம் வேதாந்த விஷயங்களை போதிக்க வேண்டுமென்று கேட்டேன். ''ஸம்ஸ்க்ருதம் தெரியுமா?'' என்று கேட்டார்கள். ''படிக்கத்தான் தெரியும். பாஷாஞானமில்லை'' என்று சொன்னேன். ''அது போதுமே; ஆசார்யாளுடைய ஸ்தோத்திரங்கள், பிரகரண கிரந்தங்கள் இவைகளை தினமும் பாராயணம் செய்துவந்தால் தானாகவே விஷயம் விளங்கும்'' என்று சொல்லி அநுக்ரஹித்தார்கள். ஆசார்யாளுடைய அநுக்ரஹத்தால் தான் இப்பொழுது அந்த கிரந்தங்களில் பல விஷயங்கள் பாஷாஞானமில்லாத எனக்கும் புலனாகின்றன.

மறுபடியும் 1954-ம் வருஷம் ஆசார்யாள் ஸித்தியடைவதற்கு முன் சிருங்கேரிக்குச் சென்று தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. ஸோமவாரத்தன்று பாதபூஜை பிக்ஷாவந்தனம் செய்தேன். அச்சமயம் பிரதி தினமும் இரண்டு ஸந்நிதானங்களின் முன்னிலையில் விநாயக வித்வத் ஸதஸ் நடந்து கொண்டிருந்தது. கடைசி இரண்டு நாட்களில் ப்ரணவ விஷயமாக வாக்யார்த்தம் நடந்தது. ஸதஸ் பூர்த்தியான பிறகு விநாயகமூர்த்திகளையெல்லாம் ஊர்வலமாக எடுத்துக் கொண்டுபோய் துங்கா நதியில் விட்டார்கள்.

மறுநாள் புதன்கிழமை ஏகாதசியன்று ஆசார்யாளை வந்தனம் செய்து ஊருக்குச் செல்ல உத்தரவு பெற்றுக் கொள்ளும்பொழுது மறுபடியும் சீக்கிரம் தரிசனம் கிடைக்க அனுக்ரஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தேன். ''ஏகாதசி, ஏகாதசி'' என்று பதில் வந்தது. அதன் உட்பொருள் எனக்கு விளங்கவில்லை. அன்று திதி ஏகாதசி யென்பதைக் கூறுவதாக எண்ணிவிட்டேன். பின்னால் அவர் ப்ராரப்தத்தின் முடிவு தெரிந்து தம் ஸங்கல்பப்படி நவத்வாரங்களையும் அடக்கி ஸமாதியிலிருந்து பூத உடலை தண்ணீரில் தியாகம் செய்த விருத்தாந்தம் அறிந்து கொண்டேன். ''दशेमे पुरुषे प्राणा: आत्मैकादश:'' என்பது பிருஹதாரண்யக உபநிஷத் வாக்யம் (3-4-9). तस्मात् एकादशैव प्राणा: என்பது ஸூத்ரபாஷ்யம் (2-4-6). இதன்படி 11 பிராணன்களை முக்யமாகக் கொண்ட சரீரத்தை உதறித் தள்ளுவதைத்தான் 'ஏகாதசி' என்ற பதத்தால் அன்று குறிப்பிட்டார்களோ என்று பிறகு தோன்றியது. அவர்கள் உடலை நீரில் தள்ளினாலும் உலக க்ஷேமத்திற்காக அதை சிஷ்யர்கள் எடுத்துவந்து பூமிக்குள் புதைத்து அங்கு கோவில் கட்டியிருக்கிறார்கள். அவர் அகண்ட ப்ரஹ்ம சைதன்யத்துடன் ஒன்றாகக் கலந்துவிட்டதால் இப்பொழுது எங்கும் இருந்துகொண்டு அநுக்ரஹம் செய்கிறார்.

13

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ T.V. விசுவநாத ஐயர், அட்வகேட், மயிலாப்பூர்

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் அடுத்து அடுத்து ஜகத்குருக்களாக இருந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள், ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள், ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் ஆகிய மூவரையும் தரிசனம் செய்த பாக்கியத்தை நான் பெற்றிருந்தேன்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளின் கம்பீரமான தோற்றம் யாரையும் கவர்ந்து விடும். அவர் மேனாவில் சவாரி செய்து வரும்போது இருபுறமும் திரளான பக்தர்கள் சூழ்ந்து செல்லுவர். மைசூர் சமஸ்தானத்துச் சிப்பாய்கள் வண்ண வண்ண சீருடைகளை அணிந்து பளபளவென்று கருப்பு நிறமுள்ள குதிரைகளில் ஏறி கைகளில் ஈட்டிகளை ஏந்திக்கொண்டு பின் தொடர்ந்து வருவர். ஒரு பெரிய அரசர் தனி பரிவாரங்களுடன் பிரயாணம் செய்வது போல இருக்கும்.

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் தம் குருநாதரிடமிருந்து மிகவும் மாறுபட்டவர். அவர் இருக்குமிடத்தில் சாந்தியும் அமைதியும் நிலவும். குழந்தை போன்ற சுபாவம். அவருடைய மெல்லிய புன்சிரிப்பு ஒன்றே போதும். அதற்கு மேல் பேசுவதற்கே அவசியம் இல்லை.

அவர் இருக்குமிடத்தில் தெய்வ ஸாந்நித்யத்தை யாரும் அனுபவிக்கலாம். அவரைத் தரிசனம் செய்ய சிருங்கேரிக்கு பலமுறை சென்றிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் திரும்பும்போது என் உள்ளம் தூய்மையடைந்திருந்ததை நான் உணர முடிந்தது.

கரடு முரடான வேதாந்தக் கருத்துக்களை அவர் எளிய வார்த்தைகளில் விளக்கி விடுவார். ஒவ்வொரு முறை தரிசனம் செய்யும் போதும் அதற்கு முன் தரிசனத்திற்கு வந்ததை அவரே நினைவு கூர்ந்து பேசத் தொடங்கிவிடுவார். அப்போது அவர் நம்மிடம் காட்டும் பரிவும் நம் நலனில் வைத்திருந்த அக்கறையும் நம் உள்ளத்தை நெகிழச் செய்துவிடும்.

ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரி ஒரு ஸர்வாதிகாரியாகவே செயல்பட்டார் என்று சொல்ல வேண்டும். நிறைய படித்தவர், அனுபவஸ்தர், மடத்து ஸம்பிரதாயங்களும், சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் அவருக்கு அத்துப்படி. ஆனால் சில சமயங்களில் ஸ்ரீ ஆசார்யர்கள் அவரையும், யாரும் கவனிக்காத வண்ணம் ஒரு சிறு வார்த்தையினாலோ தலையை இலேசாக அசைத்தோ மேலே பேசவொட்டாமல் அடக்கிவிடுவார். அவசியம் ஏற்படும்போது ஸ்ரீ ஆசார்யர்கள் கண்டிப்புடன் இருப்பார். மற்ற சமயங்களில் இந்த உலகத்துடன் ஒரு ஸம்பந்தமும் அற்றவர்போலத் தோன்றுவார். ஸமாதி நிலையை அடிக்கடி அடைந்து விடுவார். ஆனாலும் தம்மைச் சுற்றி நடப்பவைகளையும் அறிவார். விஜய யாத்திரைகளின்போது சென்ற இடமெல்லாம் தம்மைத் தரிசனம் செய்ய வந்தவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். அருளைப் பொழியும் அவருடைய திருஷ்டியே அனைவருக்கும் போதுமானதாக இருந்தது.

ஒரு சமயம் பெங்களூர் சங்கர மடத்தில் ஆதிசங்கரரின் விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்தபோது அவர் அங்கு சில காலம் தங்கினார். அப்போது நான் தரிசனத்திற்காகச் சென்றிருந்தேன். நான் போனபோது ஸ்ரீ ஆசார்யர்கள் மடத்துக் கட்டிடத்தின் பின் பக்கத்துக் கூடம் ஒன்றில் தம்முடைய பிரத்யேக பூஜையை ஏகாந்தமாகச் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் உத்தரவின் பேரில் அங்கே யாரும் தரிசனத்திற்குப் போய்விடாமல் தடுக்க கதவுகளை மூடியும் வைத்திருந்தார்கள். ஆகையால் முன்புறம் இருந்த பொது பூஜா மண்டபத்திலேயே நமஸ்காரங்களைச் செய்து விட்டுத் திரும்பினேன். நான் புறப்படுகையில் ஒரு சிப்பந்தி வேகமாக வந்து ஸ்ரீ சாஸ்திரிகளிடம் ஸ்ரீ ஆசார்யர்கள் அழைப்பதாகக் கூறினார். அவரும் என்னிடம், ''சற்று இருங்கள், நான் ஒரு நிமிடத்தில் வருகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே போனார். சிறிது நேரத்தில் திரும்பியும் வந்துவிட்டார்.

''ஓர் ஆச்சர்யமான சமாசாரம். ஸ்ரீ ஆசார்யர்கள் உங்களை உள்ளே வரச் சொல்லுகிறுர்கள். போங்கள். சத்தம் போடாமல் தரிசனம் செய்து விட்டு வந்து விடுங்கள்'' என்று என்னிடம் கூறினுர்.

என் இதயம் படபடத்தது. விரைந்து உள் கூடத்திற்குச் சென்றேன். அங்கு ஸ்ரீ ஆசார்யர்கள் லலிதா ஸஹஸ்ரநாமாவளியி லிருந்து ஒவ்வொரு நாமாவையும் மெதுவாக ராகத்துடன் இனிய குரலில் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய கண்கள் மூடியிருந்தன. நான் வந்ததை அவர் கவனித்ததாகத் தெரியவில்லை.

ஆனுல் நான் அங்கு வெறுமென நின்று கொண்டிருந்தாலோ கீழே விழுந்து வந்தனம் செய்தாலோ அவருடைய ஏகாக்ர சிந்தனையைக் கலைத்து விடுவேனே என்று அச்சப்பட்டு மெதுவாக உட்கார்ந்து விட்டேன். இரண்டு மூன்று முக்கிய நாமாக்களைச் சொன்னவுடன் அவர் ஸமாதியில் ஆழ்ந்து விட்டதாகத் தோன்றியது. 'நான் அதற்கு இடையூருக வந்து விட்டேனு?' என்ற பயம் ஒருபுறம். எழுந்து வெளியே செல்லவும் தைரியம் இல்லை. இப்படியே அந்த மறக்கமுடியாத அபூர்வ காட்சியை அரை மணி நேரத்திற்கு மேலாகக் கண்டு கொண்டிருந்தேன். உடல் வியர்த்து விறுவிறுத்தது. அதற்கு மேல் என்னுல் அந்த அனுபவத்தைத் தாங்க முடியவில்லை. ஆகையால் மெதுவாக எழுந்து வெளியேறினேன்.

அது நடந்து பல மாதங்களுக்குப் பிறகு ஸ்ரீ ஆசார்யர்கள் காலடிக்கு வந்து தங்கியிருந்த சமயம் அவரைத் தரிசிக்க அங்கு போனேன். முதலில் அங்கு இருந்த கோயில்களுக்குப் போய்விட்டு பிறகு பக்கத்தில் இருந்த ஒரு கட்டிடத்தில் நுழைந்தேன். அங்கு யாராவது இருக்கக் கூடும், அவரிடம் 'ஸ்ரீ ஆசார்யர்கள் எங்கு தங்கியிருக்கிறுர்?' என்று கேட்கலாம் என்ற எண்ணம்.

ஆனுல் அந்த கட்டிடத்தின் முன் பகுதியில் யாரும் இல்லை. 'சரி, இன்னும் சற்று உள்ளே போய் பார்க்கலாம்!' என்று மேலே காலடி எடுத்து வைக்கையில் ஒரு குரல் அழைத்தது. அது ஸ்ரீ ஆசார்யர்களின் குரல்.

''எப்போது வந்தாய்? ஸந்நிதிகளில் தரிசனம் செய்தாகி விட்டதா?'' என்று அவர் கேட்டது என் காதில் விழுந்தது.

நான் வெளிச்சத்திலிருந்து சற்று இருட்டாக இருந்த கட்டிடத்திற்குள் நுழைந்திருந்தேன். அந்த இருட்டுக்கு என் கண்கள் இன்னும் பழகவில்லை, அதனால் ஸ்ரீ ஆசார்யர்கள் அங்கேயே இருந்ததை நான் கண்டு கொள்ளவில்லை. ஆகையால் அவருடைய கேள்விகள் என்னைத் தூக்கி வாரிப் போடச் செய்தன.

அந்த பிரமிப்பிலிருந்து நான் மீள்வதற்குள் அவர் மேலும் ஒரு கேள்வி கேட்டார்.

''போன தடவை என்னை எப்போது சந்தித்தாய்?''

அதற்கும் நான் பதில் சொல்லவில்லை. அவரே மேலும் தொடர்ந்தார்.

''அது பெங்களூரில் அல்லவா? நீ பூஜையைத் தரிசனம் செய்து கொண்டிருந்தாய். ஆனால் சட்டென்று, நமஸ்காரம்கூடச் செய்யாமல் சென்றுவிட்டாய். என்னிடம் சொல்லிக் கொள்ள கூடவில்லை,'' என்றார்.

இதுபோல் பல அந்தரங்கமான வாய்ப்புகள், எனக்கு மட்டுமல்ல, மற்ற சிஷ்யர்களுக்கும் புண்ய வசத்தால் கிடைத்திருக்கும்.

மற்றொன்றை மட்டும் சொல்லி விடுகிறேன். மயிலாப்பூரில் எங்கள் வீட்டில் அவருடைய பெரிய படம் ஒன்றை மாட்டி வைத்திருந்தேன். அது என்னுடைய உறவினர் ஒருவர் எனக்குக் கொடுத்திருந்தார். படத்திற்கு மேலே ஒரு சிறு மின்சார பல்பு இரவும் பகலுமாக எரிந்து கொண்டிருக்கும். இது பல ஆண்டுகளாக.

ஒரு சனிக்கிழமையன்று இரவு திடீரென்று அந்த பல்பு வெடித்து கண்ணாடித் துகள்கள் நான்கு புறமும் சிதறின. அந்தச் சம்பவம் சிறிது வருத்தத்தை அளித்தது என்றாலும் நாங்கள் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் மறுநாள் ரேடியோ செய்தி அறிக்கையைக் கேட்டபோது தான் எவ்வளவு பெரிய துக்க சம்பவத்தை எங்களுக்கு முன்கூட்டியே அந்த நிகழ்ச்சி அறிவித்தது என்பது தெரிந்தது. அப்போது அதிகமான வருத்தத்தை அனுபவித்தோம்.

('ஸ்ம்ருதி குஸுமாஞ்ஜலி'யிலிருந்து தமிழ் ஆக்கச் சுருக்கம்)

14

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ S.G. நரஸிம்மய்யா

(Former Private Secretary to H.H.Sri Chandrasekhara Bharathi Swamigal)

ஸ்ரீ ஆசார்யர்கள் அவர்கள் சம்பந்தப்பட்ட பல அபூர்வ நிகழ்ச்சிகளை நான் நேரில் கண்டு அனுபவித்திருக்கிறேன். அவைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லலாம். ஆனல் ஒரு சிலவற்றை மட்டுமே சுருக்கமாக இங்கு கூறுகிறேன்.

ஸந்யாசியாகி சிறிது காலத்திலேயே அவர் கடுமையான தபஸில் ஈடுபட்டு தம்முள் ஓர் ஆன்மீக சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்துக் கொண்டு விட்டார். அதனுல் அனேக சக்திகள் அவரை வந்தடைந்தன. அவருடைய கீர்த்தியும் விரைவில் பரவியது.

சில பக்தர்கள் முதலில் அவரைத் தரிசனம் செய்து பல ஆண்டுகள் கழிந்த பிறகு மீண்டும் தரிசனம் செய்ய வருவர். ஆனல் பார்த்த மாத்திரத்திலேயே அவர்களை அடையாளம் தெரிந்து கொண்டு விடுவார். பக்தர்களின் உள்ளத்தில் உள்ள குறைகளை அவர்கள் வாய்விட்டு அவரிடம் முறையிட்டுக் கொள்ள அவசியமே இருக்காது. அவை அவர் மனதில் பிரதிபலித்துவிடும். அதேபோல தூரத்திலிருந்து மானஸிகமாகச் செய்துகொண்ட பிரார்த்தனைகளும் அவரை அடைந்துவிடும். எல்லாவற்றையும் பரம கருணையுடன் அங்கீகரித்து அவர்களுக்கு ஓர் அனுக்ரஹ மழையையே பெய்து விடுவார்.

ஏவல், பில்லி சூன்யம், துர்மந்திரப் பிரயோகம் இவை போன்றவைகளால் அல்லல்பட்டு தம்மைச் சரண் அடையும் பக்தர்களை தகுந்த பரிகாரங்கள் மூலம் ரட்சித்து விடுவார்.

படாடோபமில்லாமல் தார்மிக வாழ்க்கையை நடத்திக் கொண்டு தர்ம கார்யங்களில் ஈடுபட்டிருப்பவர்களே சந்திக்க நேர்ந்தால் அவர்கள் மனம் குளிர பாராட்டி ஆசி கூறுவார்.

இப்படி அவர் ஒரு தர்ம சக்ரவர்த்தியாகவும் த்ரிகால ஞானியாகவும், கிருபா சமுத்திரமாகவும், அனுக்ரஹ ஸாம்ராட் ஆகவும் பிரகாசித்தார்.

முதலில் 1931 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி நடைபெற்ற அபூர்வ நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறேன்.

அன்றுதான் இளம் துறவி ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தரை பட்டத்து இளவரசராக நியமித்த வைபவம் நடந்தது. அன்று மாலை இரு ஆசார்யர்களும் சிருங்கேரி ஊரில் பட்டணப் பிரவேசமாக ஊர்வலமாக வருவதற்கு ஏற்பாடுகள் ஆகிக் கொண்டிருந்தன. குரு அமர்ந்துவர பெரிய தங்கப் பல்லக்கு, சிஷ்யருக்கு வெள்ளிப் பல்லக்கு ஆக இரண்டும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன.

இருவரும் ஸ்ரீ சாரதாம்பாள் கோயிலில் பிரதட்சிணம் செய்துவிட்டு கோயிலுக்கு வெளியே வந்தனர். குருவிற்கு வலது புறம் அவருடைய வலது கை சுட்டு விரலைப் பிடித்துக் கொண்டு சிஷ்ய ஸ்வாமிகள் வந்து கொண்டிருந்தார். இருவருடைய நடையும் கம்பீரமாக இருந்தது.

வெள்ளிப் பல்லக்கு அருகில் வந்ததும் குருவான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் தம் சுட்டு விரலை சடக்கென்று விடுவித்துக் கொண்டு வெள்ளிப் பல்லக்கில் உட்கார்ந்து விட்டார். அது மட்டுமல்ல. சந்தேகத்திற்கு இடமில்லாமல் சைகைகளால் சிஷ்யரை முன்னே சென்று தங்கப் பல்லக்கில் அமர்ந்து கொள்ளுமாறு ஜாடை காட்டினர். சிஷ்ய ஸ்வாமிகள் முகத்தில் மனக்குழப்பம் பிரதிபலித்தது. கூடியிருந்த ஜனங்களும் சம்பிரதாயத்திற்கு மாருக இருந்த அந்த நிகழ்ச்சியைக் கண்டு பிரமித்து நின்றனர். வயதில் மூத்த பக்தர்களும் அதிகாரிகளும் ஓடிவந்து நிலைமையைச் சரிப்படுத்த முயன்றனர்.

குருநாதர் தாம் அமர்ந்திருந்த பல்லக்கிலிருந்து எழுந்துவர இசையவில்லை. கடைசியில் ஸர்வாதிகாரி ஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகளே அவருடைய அருகில் வந்து விண்ணப்பம் செய்து கொண்டார்.

அவரிடம் குருநாதர் கணீரென்றும் கண்டிப்பான குரலிலும் பேசினர்.

"இன்றைய வைபவத்தின் நோக்கமும் தாத்பர்யமும் என்ன என்பதை இதற்குள் மறந்து விட்டீர்களா என்ன? அப்படி ஒருவேளை மறந்து போயிருந்தால் இப்போது நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இன்றுமுதல் பீடாதிபதிக்கு உரிய எல்லா மரியாதைகளும் உபசாரங்களும் இதோ இருக்கிருரே (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் என்று பட்டப் பெயர் அளிக்கப்பட்ட இளம் துறவியைச் சுட்டிக்காட்டி) இவருக்கு உரிதாகின்றன. எனக்கு அவையெல்லாம் இனி வேண்டாம். இந்த வாழ்க்கையின் படாடோபங்களையும் பரபரப்புகளையும் விட்டு விலகி நான் சுதந்திரமாக தனித்து வாழ விரும்புகிறேன். என் விருப்பம் போல என்னை வாழவிடுங்கள்."

அன்று இரவே எல்லா வைபவங்களும் நடந்து முடிந்த பிறகு குருநாதரும் இளைய ஸ்வாமிகளும் அம்பாளின் ஏகாந்த தரிசனத்திற்காக கோயிலுக்கு வந்தார்கள். கர்ப்பக் கிரஹத்திற்குள் செல்ல சற்று வேகம் காட்டிய இளைய ஸ்வாமிகளை நிறுத்தி பின்வருமாறு உரையாடினர் குருநாதர் :

குருநாதர்: நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிருேம் என்று தெரியுமா?

சிஷ்ய ஸ்வாமிகள்: தெரியும். ஸ்ரீ சாரதாம்பாளின் ஆலயத்திற்குள் சென்று கொண்டிருக்கிருேம்.

குருநாதர் : அது அவ்வளவு மட்டுமல்ல. நம்முடைய சொந்தத் தாயார் வசிக்கும் அந்தப்புரத்திற்குள்ளேயே செல்லுகிருேம். உலகத்தில் நாம் சாதாரணமாகச் சந்திக்கக்கூடிய ஒருத்தி அல்ல அவள். அவள் தெய்வீகமானவள், அதி விசேஷமானவள். நாம் கேட்பது எதுவானுலும் அதைக் கொடுக்கக் கூடியவள். ஆமாம், எதைக் கேட்டாலும் கொடுப்பாள். ஆகையால் அவளிடம் செல்லும்போது மனப்பூர்வமான விசுவாசத்துடனும் ஸ்வாதீனமாகவும் செல்லுவோம்.

இந்த உபதேசம் நம் எல்லோருக்கும்தான் என்பதால் அந்த உரையாடலை அப்படியே இங்குத் தந்திருக்கிறேன்.

பின்னர் ஸ்ரீ ஆசார்யர்களின் அந்தர்முக நிலையைப் பற்றி பலவிதமான அபிப்பிராயங்கள் எழுந்தன. ஆனாலும் ஒருவருக்கும் அதைப்பற்றி ஒரு தீர்மானமான விளக்கம் கூறத் தெரியவில்லை. அவர் எப்போது அந்தர்முகாவஸ்தைக்குச் செல்லுவார், எவ்வளவு காலம் அதில் ஆழ்ந்திருப்பார், எப்போது அதிலிருந்து மீண்டு பழைய சகஜ நிலைக்கு வருவார், அவர் அப்படிப்பட்ட நிலைக்கு அவ்வப்போது சென்று விடுவதற்குக் காரணங்கள் என்னென்ன என்பதெல்லாம் யாருக்கும் பிடிபடவில்லை. அந்தச் சமயங்களில் அவருடைய மனநிலை எப்படியிருக்கும் என்பதும் யாருக்கும் தெரியாது.

ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. அந்த ப்ரஹ்மீபாவ ஸ்திதியில் அவர் இருந்தபோதுதான் அவர் பூரணராக வாழ்ந்தார் என்பதும், அப்போதெல்லாம் அவர் ஜகத்தின் உண்மை ஸ்வரூபத்தை நிதர்சனமாகக் கண்டார் என்பதும் புரிந்தது. அந்தக் காலங்களில் மனிதகுலத்தினரின் பாபச் செயல்களுக்காக நிரம்ப வருந்தினார் என்பதும் புரிந்தது. அப்போது சகல ஜீவராசிகளின் நலனுக்காக மனப்பூர்வமாக பிரார்த்தனைகளும் செய்தார். பக்தியினால் அவருடைய உள்ளம் உருகியது. அதுவே 'ஸாம்பாஷ்டகம்' போன்ற அரிய ஸ்தோத்திரங்களாக அவருடைய வாக்கிலிருந்து வெளிப்பட்டது. அந்த சமயங்களில் அவருடைய முகம் அபூர்வமான பிரகாசத்துடன் விளங்கியது. உலக க்ஷேமத்திற்காக ஆங்காங்கு நடக்கக்கூடிய நல்ல காரியங்கள் அவருடைய ஞான திருஷ்டியில் தென்பட்டால் அப்போது அவருக்கு ஏற்பட்ட அளவற்ற மகிழ்ச்சி உரத்தச் சிரிப்புகளின் வடிவில் வெளிவந்தது. ஆனால் மற்றொரு புரியாத விஷயம் என்னவென்றால் அந்த மாதிரியான நிலையிலும் தம்மைச் சுற்றி ஸ்தூல பிரபஞ்சத்தில் நடப்பதையும் அவர் முற்றிலும் அறிந்தவராகவே இருந்தார் என்பதுதான். யாராவது தனிமையில் இருந்த அவரைத் திடீரென்று காணச்சென்றால் கூட உடனே அவருக்குத் தரிசனம் அளிக்கத் தயாராக இருப்பார்.* அது அனேகரை வியப்பில் ஆழ்த்தியது.

அந்த மாதிரியான அவஸ்தையில் அவரைத் தரிசிக்கும் வாய்ப்பு யாருக்காவது கிட்டியிருந்தால் அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி என்றே

---

* இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பல ''ஸ்ரீ குருகிருபா விலாஸம்'' இரண்டாவது பாகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

கூறவேண்டும். அந்த சமயத்தில் அவரிடமிருந்து ஏதாவது உபதேச மொழிகளைப் பெறமுடிந்திருந்தாலோ, அல்லது அவருடைய ஸந்நிதியில் சில கணங்களாவது நின்று தரிசிக்க முடிந்திருந்தாலோ அதுவே உயர்ந்த ஆனந்தத்தைத் தரும் நிகழ்ச்சியாகும்.

இன்னொரு விசேஷம் என்னவென்ருல் அப்படிப்பட்ட அந்தர்முக அவஸ்தையிலிருந்து மீண்டு அவர் சகஜ நிலேக்குத் திரும்பியவுடன் அவர் மிகுந்த பரிவுடனும் கனிவுடனும் கலகலவென்று பேசத் தொடங்கிவிடுவார். அதுமாதிரியான ஒரு சமயத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் ஒன்று நடந்தது.

1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அப்போது நமது நாட்டின் ராஷ்டிரபதியாக இருந்த ஸ்ரீ பாபு ராஜேந்திர பிரஸாத் அவர்கள் சிருங்கேரிக்கு தரிசனத்திற்காக வந்தார். அவருடைய பண்பட்ட உள்ளத்தையும் பெருந்தன்மையையும் காட்டும் சில நிகழ்ச்சிகள் அப்போது நடந்தன.

அவர் வருவதற்கு முந்தைய நாள் பிற்பகலில் மடத்திலிருந்த வெள்ளிப் பல்லக்கை வெளியில் எடுத்து வைத்து சுத்தம் செய்து அதை உபயோகத்திற்கு தயாராக்கிக் கொண்டிருந்தேன். ஸ்ரீ ஆசார்யர்கள் அப்போது சாதுர்மாஸ்யத்திற்காக 'சந்திரமௌலி தொட்டி' என்ற கட்டிடத்தில் தங்கிக் கொண்டிருந்தார். நான் பல்லக்கை சுத்தம் செய்து கொண்டிருந்த சமயத்தில் அந்தக் கட்டிடத்திற்குள் இரு கூடங்களே இணைக்கும் பாதை வழியாக, ஸ்ரீ ஆசார்யர்கள் தம் பிக்ஷையை முடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார். சுவற்றில் இருந்த ஒரு சாளரத்தின் வழியாக வெளியில் வெள்ளிப் பல்லக்கு சுத்தம் செய்யப்படுவதைப் பார்த்து விட்டு அந்த சாளரத்தின் வழியாகவே என்னுடன் பேசத் தொடங்கிஞர்.

மறுநாள் வரவிருக்கும் ராஷ்டிரபதியை மடத்து மரியாதைகளுடன் அழைத்து வருவதற்காக பல்லக்கு தயார் செய்யப்படுகிறது என்று தெரிந்து கொண்டவுடன் அவர் ஸ்ரீ ராஜேந்திர பிரஸாதைப் பற்றி சில விவரங்களேக் கேட்டார். அவருடைய உயர்ந்த குணங்களேயும், பண்பாடுகளேயும் தேச விடுதலேக்காக அவர் செய்த தியாகங்களேயும், தன்னலமற்ற

வாழ்க்கையையும் பற்றி நான் சொல்லத் தெரிந்து கொண்டவுடன், ''அப்படிப்பட்ட உயர்ந்த மனிதர் என்ருல் அவரைத் தங்கப் பல்லக்கிலேயே அழைத்து வரலாமே!'' என்று கூறினர்.

அவருடைய அந்த விருப்பத்தைத் தெரிந்து கொண்டவுடன் தங்கப் பல்லக்கை வெளியில் எடுத்து அதைத் தயார் செய்து, ராஷ்டிரபதியை வரவேற்பதற்காக மறுநாள் அதை எடுத்துச் சென்ருேம்.

சிருங்கேரியின் பிரதான நுழைவு வாயிலில் ஒரு பந்தல் அமைக்கப்பட்டது. ராஷ்டிரபதி மோட்டார் காரில் அங்கு வந்து இறங்கியவுடன் பூர்ண கும்ப மரியாதைகளே அளித்து உள்ளூர்ப் பிரமுகர்களே அறிமுகப்படுத்திஞேம். பிறகு தங்கப்பல்லக்கை அந்த மோட்டார் வாகனத்தின் சமீபத்தில் கொண்டு வைத்து, ''இதில் தாங்கள் அமர்ந்து வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டோம். ஆனல் அவர் தயங்கினர். பின்னர் விசாரித்து அந்தப் பல்லக்கில் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் ஜகத்குருக்களாக உள்ளவர்கள்தான் அமர்ந்து பவனி வருவது வழக்கம் என்பதைத் தெரிந்து கொண்டார்.

உடனே தன் வலது கை கட்டை விரலினல் தன்னேயே மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டிக் கொண்டு, ''அது அப்படியிருக்கையில் நீங்கள் என்னே இந்தப் பல்லக்கில் ஏறிவரச் சொல்லுகிறீர்களே!'' என்ருர்.

நாங்கள் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டோம். ஜகத்குரு அவர்களே ராஷ்டிரபதியை அதில் அமரச்செய்து அழைத்துவரச் சொல்லி எங்களுக்கு கட்டளே இட்டிருப்பதையும் சொல்லிப் பார்த்தோம். அவர் மிகுந்த மரியாதையுடன் மறுத்துவிட்டு தன் இரு உள்ளங் கைகளேயும் பல்லக்கின் மேல் காட்டி தன் கண்களில் வைத்து ஒற்றிக் கொண்டார்.

''பல்லக்கு நமக்கு முன்ஞல் எடுத்துச் செல்லப்படட்டும்'' என்று மிருதுவாகக் கூறிவிட்டு தன் மோட்டார் வண்டிக்கு விரைந்து சென்று ஏறிக்கொண்டு விட்டார்.

ராஷ்டிரபதியின் அந்தஸ்திற்கு ஏற்ப அவருக்கு ஜாகை ''சந்திரமெளலி தொட்டி'யிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குள் நுழையுமுன் ''இந்தக் கட்டிடம் மற்ற நாட்களில் எப்படி உபயோகப்படுத்தப்படுகிறது?'' என்று விசாரித்தார்.

''இப்போது சாதுர்மாஸ்ய காலமானதால் ஸ்ரீ ஜகத்குரு அவர்களே நதிக்கு அப்பால் உள்ள நரஸிம்ம வனத்திலிருந்து, இடம் மாறி சாதுர்மாஸ்ய காலத்தைக் கழிப்பதற்காக, இதே கட்டிடத்தின் பின்புறமுள்ள அறைகளில் தங்கியிருக்கிறார்,'' என்று நாங்கள் சொன்னதைக் கேட்டவுடன் ராஷ்டிரபதி திடுக்கிட்டு, ''என்ன, அவர் வசித்து வரும் இந்தப் புனிதமான கட்டிடத்திலேயே நான் எப்படி சாப்பிடவோ தூங்கவோ முடியும்? அது அபசாரமாகும் அல்லவா?'' என்று பரபரப்புடன் கூறினார்.

நாங்கள் அவரை சமாதானம் செய்து அவர் அங்கே தங்குவது ஸ்ரீ ஜகத்குருவிற்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று கூறவேண்டியிருந்தது.

ராஷ்டிரபதி சிருங்கேரியில் தங்கியிருந்த அந்த நாள் வெகு வேகமாகக் கழிந்துவிட்டது. அம்பாளுக்கு ஒரு விசேஷ அர்ச்சனை, இருமுறை இரு ஜகத்குருக்களும் அவருக்குத் தரிசனம் அளித்து செய்த சம்பாஷணைகள், இவையெல்லாம் விமரிசையாக நடந்து முடிந்த பிறகு ராஷ்டிரபதி மறுநாள் பிற்பகலில் சிருங்கேரியை விட்டுப் புறப்பட்டார். அந்த ஒருநாள் பொழுதின் அனுபவம் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருந்தது. ''மஹாபுருஷர்கள் தான் சிருங்கேரியில் பீடாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள். நான் சிருங்கேரிக்கு முன்னாலேயே வந்திருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

ராஷ்டிரபதி வந்துவிட்டுப்போய் ஒரு மாத காலமே ஆகியிருந்தது. ஸ்ரீ மஹாஸ்வாமிகள் தம் பூத உடலை உதறித் தள்ளிவிட்டு நிரந்தரமான ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை அடைய விரும்பினார் போலும்! தம் உடலை உதறித் தள்ள துங்கா நதியின் நீர்வெள்ளத்தைத் தேர்ந்தெடுத்து விட்டார். 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதி அதிகாலை இருட்டு வேளை அது. அந்த முடிவை ஒருவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் அங்கேயே இருந்துகொண்டு பிறகு நடந்ததை எல்லாம் நேரில் கண்ட என் போன்றவர்களுக்கு அவருடைய திடீர் மறைவு, பளபளவென்ற ஒரு பனித்துளி நழுவி நீரில் விழுந்து ஐக்கியமானால் எப்படியிருக்குமோ அவ்வளவு இயல்பாக இருந்தது.

குருநாதர் நீரில் மூழ்கிய க்ஷணமே மூச்சு நின்றுவிட்டிருக்க வேண்டும். அவர் உடல் பத்மாஸனத்தில் அமர்ந்த கோலத்தில்

காணப்பட்டது, இரு கைகளின் விரல்களும் தியான முத்திரையில் இணைந்திருந்தது, முகத்தில் காணப்பட்ட சாந்தம் நிறைந்த பிரகாசம், வைத்யர்கள் ஒருமுகமாக அவர் உடலுக்குள் ஒரு துளி நீர்கூடச் செல்லவில்லை என்று கண்டுபிடித்தது எல்லாம் எங்கள் அனுமானத்தை உறுதி செய்தன.

பிறகு அவருடைய உடலை அலங்கரித்து பல்லக்கில் வைத்து சிருங்கேரி வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் கூடி பரப்ரஹ்மத்தின் மனித உருவை கடைசி முறையாகத் தரிசனம் செய்தார்கள். அந்தக் காட்சி அவர்களை உலுக்கி விட்டது என்பது சோகம் நிறைந்த அவர்களுடைய முகங்களைப் பார்த்தவுடனேயே தெரிந்தது. முக்கியமாக ஹரிஜனங்கள் வசித்த தெருக்களில் செல்லும்போது அவர்கள் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு, மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்ளுவார்களோ என்று சிறிதும் சங்கோசப்படாமல் ''பிரத்யட்ச தெய்வம் மறைந்து விட்டதே!'' என்று உரக்கப் பிரலாபித்தது மனதை உருக்கியது.

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் இந்த யுகத்தில் அவதரித்த ஆன்மீக மஹா புருஷர்களில் முக்கியமானவராக இருந்தார்.

(நன்றி: 'ஸ்ம்ருதி குஸுமாஞ்ஜலி Sringeri Souvenir 1964'ல் வந்த கட்டுரை. தமிழாக்கம்: கே. நாராயணஸ்வாமி)

15

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ T.L. வேங்கடராம ஐயர்
(Retired Supreme Court Judge)

1920 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசியில் நான் சிருங்கேரிக்கு முதன் முறையாகச் சென்றேன். அதுவும், என் உத்யோக ஸம்பந்தமான ஒரு வியவஹாரத்திற்காகத் தான் சென்றேன். ஆனால் அதுவே என் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பு முனையாக அமைந்தது.

தூத்துக்குடி ஸப்-கோர்ட்டில் ஒரு தாவா. வாணியர் வகுப்பைச் சேர்ந்தவர்களை திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய ஸ்வாமி கோயிலுக்குள் வரவிடலாமா கூடாதா என்பதுதான் விவகாரம். தேவஸ்தான கோட்பாடுகளின்படி அவர்களை கோயிலுள்ளே அனுமதிக்க முடியாது என்பது தேவஸ்தானத்தின் வாதம். வாணியர்களோ தாங்கள் வைசிய சமூகத்தினர் என்றும், ஸ்ரீ சிருங்கேரி மடம் தங்களுக்கு அளிக்கும் ஸ்ரீமுகங்களில் தங்களை 'தனவைசியர்' என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறது என்றும், அதனால் கோயிலுக்குள் செல்ல தங்களுக்கும் உரிமை இருக்கிறது என்றும் எதிர்வாதம் செய்தனர். சிருங்கேரி மடத்தின் அதிகாரிகளை விசாரித்து வாணியரின் ஜாதி அந்தஸ்தை நிர்ணயம் செய்ய ஒரு கமிஷன் பிறப்பிக்கப்பட்டது. நான் வாணியரின் வக்கீல் என்ற முறையில் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டேன். அதற்காக சிருங்கேரிக்குச் செல்ல வேண்டியதாக இருந்தது.

அந்த விஷயம் அவ்வளவு முக்கியமும் அல்ல. மூன்று நாட்களில் என் வேலை முடிந்தும் விட்டது. ஆனால் நான் சிருங்கேரியை விட்டு உடனே புறப்பட விரும்பவில்லை.

ஆதிசங்கரரின் பரம்பரையில் வந்து அவருடைய பிரதிநிதியாக வியாக்யான ஸிம்மாஸனத்தில் அமர்ந்து அப்போது ஆட்சி புரிந்து கொண்டிருந்த பூஜ்ய ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளைத் தரிசனம் செய்து அவருடைய ஆசியைப் பெற விரும்பினேன். அதற்காக காலையில் துங்கா நதியைக் கடந்து அக்கரையில் இருந்த அவருடைய வாசஸ்தானத்திற்குச் சென்றேன்.

அப்போது எனக்கு ஏற்பட்ட உயர்ந்த அனுபவங்கள் என் மனதில் எப்போதும் பளிச்சென்று பதிந்து விட்டன. நான் போன சமயம் அவர் பூஜை செய்து கொண்டிருந்தார். சற்று தூரத்தில் அமர்ந்து பக்தர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பூஜை செய்து முடிக்கும் வரை அவர் பக்தர்களின் பக்கம் திரும்பக்கூட இல்லை. அவருடைய திருஷ்டியும் கவனமும் அவர் பூஜை செய்து கொண்டிருந்த மூர்த்திகளின் மேலேயே இருந்தன. பூஜை சம்பூர்ணமாக முடிந்த பிறகுதான் அவருடைய பார்வை எங்கள் மேல் திரும்பியது.

அவரருகில் ஒவ்வொருவராகப் போய் வந்தனம் செய்தோம். நான் நமஸ்காரம் செய்த பிறகு என் மனதில் உண்டான பக்தியை சில சம்ஸ்கிருத வார்த்தைகளின் மூலம் தெரிவித்துக் கொண்டு என் பிதாவான ஸ்ரீ லட்சுமண சூரியின் பெயரைச் சொல்லி அவர் புத்திரன் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். நான் எந்த வேலைக்காக சிருங்கேரிக்கு வர நேர்ந்தது என்றும் சொல்லிக் கொண்டேன்.

அதே சமயம் என் உள்ளத்தில் ''இத்தனை காலமாக பகவத்கீதை, உபநிஷத்துக்கள், ப்ரஹ்மசூத்திரங்கள் இவைகளில் எதையுமே படித்துத் தெரிந்து கொள்ளாமல் போனேனே!'' என்ற ஆதங்கமும் உண்டாயிற்று. அப்போது ஸ்ரீ ஆசார்யர்களையே சந்தித்திருப்பதால் அவரிடம் ''ப்ரஹ்ம வித்யைக் கிரமமாக உபதேசம் பெறுவதற்கு ஆசி கூறுங்கள்'' என்று விஞ்ஞாபனம் செய்து கொள்ளலாம் என்றும் தோன்றியது.

என் மனதில் தோன்றியது அவருக்கு எப்படித் தெரிந்தது என்பது ஒரு பெரிய ஆச்சர்யம்! நான் விஞ்ஞாபனம் செய்து கொள்வதற்கு முன்னாலேயே, அவர் வாக்கிலிருந்து, ''உன் தகப்பனாரிடம் சாந்தி பாடத்தைப் படிக்கத் தொடங்கு,'' என்ற

சொற்கள் பிறந்தன! அப்போது அவர் என்மேல் செலுத்திய அருள் நிறைந்த பார்வை என்னை பூலோகத்திலிருந்து ஆகாசத்திற்கே தூக்கிச் சென்றுவிட்டது. அதற்குப்பிறகு மந்திராட்சதை பெற்றுக் கொண்டேன்.

ஊருக்கு வந்து என் தந்தையிடம் நான் சிருங்கேரியில் நடந்தது அனைவற்றையும் கூறியபோது அவர் உடனேயே என் நன்மைக்காக 'சாந்திபாட' வகுப்பைத் தொடங்கி விட்டார். வேறு சில சிஷ்யர்களும் சேர்ந்து கொண்டனர்.

இப்படி என்னுடைய சிருங்கேரி விஜயம் என் வாழ்க்கையை ஆன்மீகப் பாதையில் திருப்பி விட்டது. அந்த 1920 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஸ்ரீ ஆசார்யர்களை நான் தரிசித்ததிலிருந்து என் மனதில் ஒரு ஒளி வெள்ளம் புகத் தொடங்கியது. என் தந்தையின் துணையுடன் நான் ஞான மார்க்கத்தில் நடக்கத் தொடங்கினேன்.

ஸ்ரீ சங்கரரின் வழிவந்த அனேக ஆசார்யர்கள் எனக்கு வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்களில் மிக முக்கியமானவர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹா ஸ்வாமிகள் அவர்களே ஆகும்.

16

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலசுப்ரமண்ய ஐயர்

நம்முடைய தொன்மையான பாரத நாட்டில் மஹான்களும் தவசிரேஷ்டர்களும் அவ்வப்போது அவதரித்துக் கொண்டேதான் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்.

சிறுவயது முதற்கொண்டே அவர் தம் வயதுக்கு மீறிய முதிர்ந்த அறிவும் நல்ல பண்புகளும் உடையவராகவே இருந்தார். அவருடைய அசாதாரணமான உயர்ந்த குணங்களையும் அறிவாற்றலையும் கண்ட சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் அப்போதைய (33 ஆவது) ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் அவைகளை சிலாகித்து சில ஸம்ஸ்கிருத சுலோகங்களைக்கூட இயற்றினார்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் 1912 ஆம் ஆண்டில் ஸித்தியடைந்தார். அவரை அடுத்து ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் பீடாதிபதியாக ஆனார். அப்போது (அந்நாளைய) மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் மற்ற இடங்களில் இருந்த எல்லா சிஷ்யர்களும் அவரை ''ஓர் உயர்ந்த ஜகத்குருவின் மஹிமைக்கு ஏற்ப நல்ல தகுதி வாய்ந்த வாரிசு'' என்று கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

அவர் ஸ்ரீ சாரதா பீடாதிபதியாக 40 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்தார். வெகு சீக்கிரத்திலேயே அவருடைய தபஸின் சக்தியும் மஹிமையும் பன்மடங்கு வளர்ந்து பிரகாசிக்கத் தொடங்கி

விட்டன. அப்போதே அவர் நீண்ட காலங்களுக்கு ஆழ்ந்த தியானங்களிலும் பூஜைகளிலும் ஈடுபட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் போல் அடிக்கடி தியான ஸமாதிகளிலும் மூழ்கினர். அந்தக் காலத்தில் அவருடைய தெய்வீகம் நிறைந்த கருணையையும் அருளையும் லட்சக்கணக்கான மக்கள் அனுபவித்து பயன் அடைந்தனர்.

அவர் எல்லா சாஸ்திரங்களையும் நன்கு கற்றறிந்தவர். அனேக மந்திரங்கள் அவருக்கு ஸித்தியாகியிருந்தன. தயாமூர்த்தி, அதனல் யாராவது கஷ்டம் தாங்காமல் அவரிடம் வந்து முறையிட்டுக் கொண்டால், இரக்கம் கொண்டு அவருடைய கஷ்டத்தை நிவாரணம் செய்யக்கூடிய மந்திரத்தை உபதேசித்து அதை பக்தியுடன் ஜபித்து பிரார்த்தனை செய்து கொள்ளுமாறு கூறுவார். அவர் கூறியபடியே செய்து, அதனல் அனேகருக்கு கஷ்டம் நீங்கி நன்மை ஏற்பட்டிருக்கிறது.

அவருடைய முகத்தில் எப்போதும் ஒரு தெய்வீக தேஜஸ் வீசிக்கொண்டே இருக்கும். புன்னகை தவழும் அவருடைய முக விலாஸம் எல்லோருடைய மனத்தையும் வசீகரித்து விடும். பரிவுடன் கூடியவராகவும் சௌலப்யராகவும் இருந்தார். அவருடைய சம்பாஷணைகள் எப்போதும் ஓர் உயர்ந்த மட்டத்திலேயே இருக்கும். அத்வைதத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவர் உபயோகிக்கும் வார்த்தைகள் ஆழ்ந்த கருத்தும் மிகுந்த சுவையும் உடையவையாகவும் உயர்ந்த அறிவைப் போதிப்பனவாகவும் இருக்கும்.

1927 ஆம் ஆண்டில் கோடைக்காலத்தில் அவர் கோயம்புத்தூர் ஜில்லாவில் விஜய யாத்திரை செய்து கொண்டிருந்தார். அப்போது அவரைத் தரிசனம் செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. (திருப்புகழ் மணி) ஸ்ரீ டி.எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், (கல்லிடைக்குறிச்சி) ஸ்ரீ எஸ். அநந்தராம அய்யர், மற்றும் மயிலாப்பூர் திருப்புகழ் பஜனை கோஷ்டி அன்பர்கள் இவர்களுடன் நானும் சென்று அவரைத் தரிசித்தேன். அதிலிருந்து அவருடைய கருணவிலாஸத்தை முழுமையாகவும் பலவிதங்களிலும் நான் அனுபவித்துள்ளேன். என் குடும்பத்தில் நிகழ்ந்த ஒரு சோக நிகழ்ச்சி என்னை அடியோடு

பாதித்து விடாமல், அதைத் தாங்கிக் கொள்ளும் மனோபலம் அவருடைய அனுக்ரஹத்தால் தான் எனக்குக் கிடைத்தது.

அதற்குப்பிறகு 1938 ஆம் ஆண்டில் அவர் பெங்களூரில் முகாமிட்டிருந்த போது அவரை மீண்டும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அப்போது என்னுடன் பேராசிரியர் ஸ்ரீ பி.பி.எஸ். சாஸ்திரி மற்றும் சில நண்பர்களும் இருந்தனர். அந்தச் சமயத்தில் பெங்களூர் சங்கர மடத்தில் ஸ்ரீ சாரதாம்பாளுக்கு ஓர் ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்திருந்தார்கள். அந்தத் தரிசனத்தின்போது 'சதசுலோகி' என்ற கிரந்தத்திலிருந்து சில சுலோகங்களை எனக்கு விளக்கி அருளினர். கிடைப்பதற்கு அரிய அவருடைய ஆழ்ந்த தியான நிலை தரிசனமும் கடவுள் கிருபையால் எனக்குக் கிடைத்தது. அந்த தியான நிலையிலிருந்து வெளிவந்தபோது ஓர் ஆழ்ந்த கடலில் மூழ்கி வெளிவந்தவர் போல் தோற்றமளித்தார்.

அந்தச் சமயத்தில் ''பாலசுப்ரமண்ய அய்யர்! அத்வைதம் ஸத்யம்!'' என்று என்னை நோக்கித் திருவாய் மலர்ந்தருளி, சற்றுமுன் தமக்கு ஏற்பட்டிருந்த உயர்ந்த அத்வைத அனுபவத்தை வார்த்தைகளில் வெளிப்படுத்தினர்.

1940 ஆம் ஆண்டு சிருங்கேரிக்கு யாத்திரையாகச் சென்றிருந்தேன். அப்போது மூன்று தினங்கள் மடத்தின் விருந்தாளியாகத் தங்கியிருந்தேன். மிக எளியவனை எனக்கு உயர்ந்த ஆன்மீக நிலையை அடைந்திருந்த அவர் அளித்த விருந்தோம்பல், எவ்வளவு பரிவு உள்ளவர் அவர் என்பதைக் காட்டி என் உள்ளத்தை நெகிழச் செய்தது.

அந்தச் சமயத்தில்தான் 'விவேகசூடாமணி' என்ற கிரந்தத்திற்கு தாம் ஒரு விளக்க உரை எழுதியிருப்பதாகக் கூறினர். மிகுந்த சங்கோஜத்துடன் அவர் அதைக் கூறிய விதம் ஆதிசங்கரரிடம் அவர் வைத்திருந்த விநயபூர்வமான உயர்ந்த பக்தியையே வெளிப்படுத்தியது. அவருடைய பாஷ்யம் அச்சடிக்கப்பட்டு அனைவருக்கும் கிடைக்கப்படச் செய்ய வேண்டும் என்று நான் பிரார்த்தித்துக் கொண்டேன். அவர் அதை எளிதில் அங்கீகரிப்பவராக இல்லை. அவருடைய மறைவுக்குப் பின்னர்தான் அது ஒரு புத்தகமாக அச்சிடப்பட்டது.

மறுபடியும் சண்டீஹோமம் (1954 ஆம் ஆண்டு) நடந்த காலத்தில் சிருங்கேரியில் அவருடைய பிரத்யேக தரிசனம் எனக்குக் கிடைத்தது. தம் பூத உடலை அவர் திரஸ்கரிப்பதற்கு சில மாதங்கள் முன்னர் கிடைத்த அந்தத் தரிசனமே எனக்குக் கடைசி தரிசனமாக அமைந்தது.

நம்முடைய தேசத்தில் அவதரித்த பெரும் ஞானிகளில் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் மிகவும் அபூர்வமானவர். அவருடைய தெய்வத் தன்மைக்கு ஈடு இணையே கிடையாது. அவர் நம் நினைவில் எப்போதும் இருந்துகொண்டு போற்றப்படுவார்.

17

ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ K. நாராயணஸ்வாமி

சகுநீநாம் இவ ஆகாசே மத்ஸ்யாநாம் இவ ச உதகே ।
பதம் யதா ந த்ருச்யேத ததா ஞாநவிதாம் கதி: ॥

''ஆகாயத்தில் பறவைகள் பறந்து செல்லுகின்றன. தாம் சென்ற பாதையில் தம் அடிச்சுவடுகளைப் பதித்துச் செல்லுவதில்லை. நீரில் நீந்திச் செல்லும் மீன்களின் பாதையும் பின்னால் நமக்குப் புலப்படுவதில்லை. அவ்விதமே ஆத்மஞானம் பெற்று விட்ட முக்தர்களின் நிலையும் போக்கும் நமக்கு விளங்குவதில்லை.''

(ஸ்ரீ மஹாபாரதம் - சாந்தி பர்வம், 239)

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் அவதார லீலைகளைப் பற்றியும் அவருடைய குணாதிசயங்களைப் பற்றியும் பலர், அவரவர் தாம் கண்ட விதமாகவும், தெரிந்து கொண்ட விதமாகவும் கூறியுள்ளார்கள். அந்தப் பெரியோர்களுக்கெல்லாம் நம் க்ருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிருங்கேரியே ஸ்ரீ ஆசார்யர்களின் ஜன்மஸ்தலம். பள்ளிப் படிப்பு, உபநயனம், வேத அத்யயனம் எல்லாம் சிருங்கேரியில் தான் நடந்தன. சாஸ்திரத்தில் மேல் படிப்பிற்காக மட்டும் சில காலம் பெங்களூருக்குப் போயிருந்தார். பின்னால் ஸ்ரீ சாரதா பீடாதிபதியான பிறகு வெகுகாலம் சிருங்கேரியில் தான் இருந்தார். கடைசியில் நதியில் மூழ்கி, தேகத்தைத் திரஸ்கரித்து விட்டு ஆகாயவெளியில் கலந்ததும் சிருங்கேரியில் தான்.

இன்றும் சிருங்கேரியில் அவரைப் பற்றி நிறைய பேர்கள் உள்ளம் நிறைந்த பக்தியுடன் பேசுகிறார்கள். வயதான சிலர், தம் சிறு வயதில் அவரை நேரில் தரிசித்ததையெல்லாம் நினைவு கூர்ந்து சொல்லுகிறார்கள். பலர் தங்கள் குடும்பங்களில் மூத்தோர் கூறிவிட்டுச் சென்ற கதைகளையும் சம்பவங்களையும் மறக்காமல் விவரித்து மகிழ்கின்றனர். சில, பழைய, எளிய குடும்பத்தினர் அவருடைய புனிதமான பாதுகைகளை தம் பழைய வீடுகளின் சிறிய பூஜை அறைகளில் (தேவர் மனைகளில்) மற்ற மூர்த்திகளுடன் வைத்து வழிபடுகிறார்கள். தங்களுக்கு வருமானமாகக் கிடைக்கும் சிறு தொகைகளையும் அந்தப் பாதுகைகளின் மேல் வைத்துவிட்டு நமஸ்காரம் செய்து குருவின் பிரஸாதமாக எடுத்துக் கொள்ளுகின்றனர்.

ஞானிகளைத் தரிசனம் செய்வதையும் அவர்களை வணங்கி ஆசி பெறுவதையும் பெரும் பாக்கியமாகத் தான் எல்லோரும் கருதுகின்றனர். ஜீவன்முக்தர்களாகக் காட்சி அளித்தவர் விதேஹமுக்தியடைந்து மறைந்து விட்டாலும் 'அவர்களை ஸ்மரணை செய்தாலே போதும், அப்படிச் செய்வதாலே வேண்டிய புண்ணியம் கிடைக்கிறது' என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தூய மனதினரை சிருங்கேரியில் காணும் போதெல்லாம் நம் நம்பிக்கையும் தளிர்விடுகிறது. நம் பக்தியும் விசுவாசமும் சற்று உறுதி பெறுகிறது.

''கிம் ச ஞாநிநம் ஸ்துவந்தி, பஜந்தி, அர்ச்சயந்தி ।
தாந் ப்ரதி ஞாநிக்ருத ஆகாமி புண்யம் கச்சதி ॥

(தத்வபோதம்)

என்று சொல்லப்பட்டிருப்பதால் அத்தகைய ஞானிகளைப் போற்றுபவர்களுடைய மனோரதங்கள் எல்லாம் நிறைவேறுகின்றன என்பதில் சந்தேகமில்லை.

பூர்வக்ருத புண்ணியத்தாலும் ஏற்கெனவே ஸாதனங்களையெல்லாம் அனுஷ்டித்து மனஸ் பக்குவமடைந்து விட்டதாலும் ஒரு சிலராவது ''நாம் தரிசிக்கும் (அல்லது ஸ்மரிக்கும்) ஞானியின் நிலையை நாம் ஜந்மாந்தரத்திலாவது அடைய வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொள்ளுவார்கள்.

நம்மிடையே ஞானிகளை அடையாளம் தெரிந்து கொள்ளுவது மிகவும் கடினம். யாராவது ஒருவர் பிராபல்யம் அடைந்து விட்டால் தான் அவரை நமக்குத் தெரிகிறது. ஆகையால் நம் போன்றவரை அனுக்ரஹிப்பதற்காகவே ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஏதோ ஒரு மலைச் சிகரத்தையோ, அரண்யத்தையோ, நர்மதை கங்கை போன்ற நதி தீரத்தையோ தேடிப் போகாமல் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் வியாக்யான ஸிம்மாஸனத்தை ஆரோஹணம் செய்து அலங்கரித்தார் என்று நிச்சயமாகத் தெரிகிறது. இல்லாவிட்டால் நம்மில் அனேகர் அவரைப்பற்றி அறிந்து கொள்ளுவதில் ஆர்வம்கூட காட்டியிருக்க மாட்டோம்.

அவருடைய சரித்திரமும் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் சரித்திரம் போல 'தார்மீகமான வாழ்க்கையை வாழ்ந்து முமுக்ஷுவாக வேண்டும்' என்று விரும்புபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து விட்டது என்றும் சொல்லலாம்.

அவர் தயை, தாக்ஷிண்யம், குருபக்தி, தெய்வ விசுவாசம், சாஸ்திர பாண்டித்யம், வைராக்யம், மன உறுதி போன்ற உயர்ந்த லட்சிய குணங்களை உடையவராக இருந்தார். அதனால் பல பெரியோர்களும் அறிஞர்களும் ''அவரிடம் இன்ன நல்ல குணம் இருந்தது, அதனால் இப்படிச் செயல்பட்டார்'' என்று, தங்கள் அனுபவங்களைக் கூறும்போது, 'லேபிள்' (lable) போட்டுக் காட்டியுள்ளார்கள். அதெல்லாம் நமக்காக. நாம் அந்த மாதிரியான உயர்ந்த குணங்களைப் பெற முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக. 'ஒரு ஜீவன் படிப்படியாக எப்படி மேலான, மேலான நிலைகளுக்குப் போய் குணாதீதமான ஸ்வஸ்த நிலையைப் பெற முடியும்' என்று நாம் தெரிந்துகொண்டு பயனடைவதற்காகத்தான்.

ஆனால் சிறியேனும் அவ்வளவு உயர்ந்த அறிவு இல்லாதவனுமான நான் இந்தக் கட்டுரையில் சிருங்கேரியில் பலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட தகவல்களை மட்டுமே அப்படியே தர உத்தேசித்துள்ளேன். இதில் எந்த விதமான ஆராய்ச்சியும் கிடையாது. 'ஞானிகளின் போக்கு நமக்குப் புரியாது' என்பதை நினைவில் இருத்திக்கொண்டே தான் எழுதுகிறேன்.

ஸ்ரீ ஆசார்யர்களின் ஜனனமே அஸாதாரணமானது தான். 'நாளைக்குச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்' என்ற

ஸ்மரணேயே இல்லாமல் உத்தம பிராம்மணர்கள் எப்படி வாழ வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிறதோ அப்படியே வாழ்ந்து மிக ஏழ்மை நிலையிலிருந்த தம்பதிகள் அவருடைய பெற்ருேர்கள். ஸ்ரீ கோபால பட்டரும், ஸ்ரீமதி லட்சுமி அம்மாளும் - பதினெரு குழந்தைகள் பிறந்து பிறந்து மரித்து விட்டபோதிலும் தெய்வத்தின் மேலும் குருவின் மேலும் வைத்திருந்த உறுதியான பக்தியையும் நம்பிக்கையையும் சற்றும் தளர விடாமல் வாழ்க்கை நடத்தியவர்கள். பதினேராவது குழந்தையும் போய்விட்ட சமயத்தில், ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன் கோகர்ண க்ஷேத்திரத்திற்குச் சென்று நியமத்துடன் ஸ்ரீ மஹாபலேஷ்வரரை வழிபட்டு பிரார்த்தித்துக் கொண்டு திரும்பினுர்கள். அப்புறம் தான் பன்னிரெண்டாவது குழந்தையாக ஸ்ரீ நரஸிம்ஹன் (பின்னுல் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) தாயின் கர்ப்பத்தில் தோன்றினுர்.

சாஸ்திர ரத்னுகரம் ஸ்ரீ தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரி அவர்களால் 'சோதிக்கப்பட்டு' வெளியிடப்பட்ட 'குருபக்தி விலாஸம்' என்ற சிறு நூலில் சிவகிருபையால் அன்னேயின் கர்ப்பத்தில் தோன்றிய அந்த சிசு எப்படி குருவின் கிருபையால் காப்பாற்றப்பட்டு வளர்ந்தது என்று விவரிக்கப்பட்டுள்ளது. அதை அப்படியே கீழே தருகிறேன்:

''சிருங்ககிரியில் சாரதா மஹா நவராத்திரியில் சாரதாம்பாளே ஆராதிப்பது மிகவும் விசேஷமானது என்பது லோகப் பிரஸித்தமானது. ந்ருஸிம்ஹ பாரதீ யதீந்த்ராள் உயர்ந்த ஸ்ரீ வித்யா உபாஸகர்களானதால் ஒரு நவராத்திரியில் தேவியை ஆராதித்துவிட்டு ஸுவாஸினி பூஜையை நடத்தினுர்கள். அனேக ஸுவாஸினிகளுக்கு நூதன வஸ்திரங்கள் கொடுக்கும் வழக்கம் உண்டு. தற்காலத்தில் பெரியவர்களாக (ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) விளங்கி வருபவர்களின் தாயார் குடும்பத்தின் சிரம தசையினுல் இம்மஹானே கர்ப்பமாக தரித்துக் கொண்டிருக்கும் சமயத்திலும் தனக்கும் ஒரு வஸ்திரம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் ஸுவாஸினிகளின் மத்தியில் தானும் போஜனம் செய்ய உட்கார்ந்தாள். ந்ருஸிம்ஹ பாரதீ யதீந்த்ராள் ஸுவாஸினிகளேப் பூஜை செய்து ஸாக்ஷாத் பராசக்தியின்

ஸ்வரூபமாகவே 'ஸ்த்ரிய: ஸமஸ்தா: தவ விபேதா:' என்ற சாஸ்திரத்தை அனுசரித்து ஒவ்வொரு ஸுவாஸினிக்கும் கட்கமாலையினுல் அபிமந்த்ரிதமான விசேஷ அர்க்ய தீர்த்தத்தை அளித்துக்கொண்டு வரும்போது

''அஸிபாத்ரமிதம் துப்யம் தீயதே பிஹிசதாந்விதம் ।
ஸ்வீக்ருத்ய ஸுபகே தேவி ஜயம் தேஹி ரிபூந் தஹ ॥''

என்ற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு ப்ரகிருதத்தில் பெரியவாளான மஹாஸ்வாமிகளின் (பூர்வாசிரம) தாயார் கையில் ஆபோசனம் போட்டார்கள்.

அந்த அம்மாள் அதை வாங்கிக் கொள்ளும் சமயத்தில் தன்னுடைய இரண்டு கண்களிலிருந்தும் ஜலம் பெருக அழ ஆரம்பித்தார்கள்.

ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள் அந்த அம்மாளைப் பார்த்து ஆந்திர பாஷையில் ''எதற்காக அழுகிருய்?'' என்று கேட்க அந்த அம்மாள், ''எத்தனையோ கர்ப்பத்தைச் சுமந்து ப்ரயோஜனமற்றதாய் ஆகிவிட்டது. தற்காலத்தில் சுமந்து கொண்டிருக்கும் இந்த சிசுவாவது நீடித்து ஜீவிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள். ஸ்ரீ மஹாஸ்வாமிகளும் அந்த அம்மாளை ஸமாதானம் செய்துவிட்டு ''இந்த கர்ப்பத்தில் உண்டாகியிருக்கும் சிசுவை சாரதாம்பாளைப் பூஜை செய்வதற்காக இந்த மடத்திற்கு தானம் செய்வதாக பக்தியுடன் ஸங்கல்பம் செய்து தீர்த்தத்தை பூமியில் விட்டுவிடு. இந்தக் கர்ப்பத்தில் உள்ள குழந்தை சிரஞ்ஜீவியாகவும் லோககுருவாகவும் விளங்கி வரும்'' என்று அனுக்ரஹித்தார்கள்.

அந்தக் கர்ப்பத்திலிருந்து ஆவிர்பவித்த மஹானுபாவரே நமது லோககுரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் என்று அறியவும்.''

ஸ்ரீ ஆசார்யர்கள் சிறு வயதிலிருந்தே எப்படி அசஞ்சலமான தெய்வ பக்தியுடன் இருந்தார் என்று பலராலும் சொல்லப்பட்டிருக்கிறது. தமது குருநாதர் அளித்த மந்திராட்சதையில் குருவின் ஸாந்நித்யத்தை மனப்பூர்வமாக

பாவனை செய்துகொண்டு அதற்கு பிரதிதினமும் வந்தனங்களைச் செய்து வந்ததைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

பின்னர் அவர் பீடாதிபதியாக விளங்கியபோது முக்கியமான நாட்களில் மடத்தில் உள்ள அதிஷ்டானங்களுக்கும் தேவாலயங்களுக்கும் விஜயம் செய்து அதே அசஞ்சலமான பக்தியுடன் தரிசனம் செய்து நமஸ்காராதிகளைச் செய்யும் போதெல்லாம் தவருமல் நடந்த சில நிகழ்ச்சிகள், அப்போது இளம் அர்ச்சகராகப் பணிபுரிந்து வந்த ஸ்ரீ கணபதி ஸுப்ரமண்ய அவதானிகளை ஆச்சர்யம் அடையச் செய்தன.

ஸ்ரீ ஆசார்யர்கள் ஒவ்வொரு ஸந்நிதிக்கும் சென்று தரிசனம் செய்து, மங்களஹாரத்தி நடந்தவுடன் நமஸ்காரம் செய்வது வழக்கம். அந்த சமயம் அங்கு ஸாந்நித்யம் கொண்டிருக்கும் சிவலிங்கமோ மூர்த்தியோ எதுவாக இருந்தாலும் அதன் மேலிருந்து ஒரு புஷ்பம் தானுகவே அவர்முன் விழுவதுண்டு. ஸ்ரீ ஆசார்யர்கள் அதற்கு ஒரு விசேஷத்வமும் கொடுக்காமல் நடந்தது தற்செயலாக நடந்ததாகவே எடுத்துக் கொண்டு திரும்பி விடுவார். ஆனுல் இளம் பிரம்மச்சாரியாக இருந்த ஸ்ரீ கணபதி ஸுப்ரமண்யருக்கோ தவருமல் நடந்து வந்த அந்த அதிசய நிகழ்ச்சிகளின் உண்மையைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்று ஓர் அவா தீவிரமாக உண்டாயிற்று. அவர் அப்போது ஸ்ரீ ஆதிசங்கரரின் கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்தார்.

ஏதோ ஒரு விசேஷ தினத்தில் ஸ்ரீ ஆசார்யர்கள் தரிசனத்திற்கு வரப் போவதாக முன்கூட்டியே தகவல் வந்துவிட்டது. 'இதுதான் சரியான சந்தர்ப்பம்!' என்று அவருக்குத் தோன்றியது. உடனே ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் விக்ரஹத்திற்கு அலங்காரமாக அணிவிக்கப்பட்டிருந்த மாலையிலிருந்து எந்த புஷ்பமும் தனியாகப் பிரிந்து கீழே விழாதபடி நூல்களைக் கொண்டு இறுக்கிக் கட்டி வைத்தார். விக்ரஹத்தின்மேல் ஒற்றைப் புஷ்பமாக எதுவும் இல்லாதபடியும் பார்த்துக் கொண்டார். ''இன்று எப்படித்தான் புஷ்பம் கீழே விழுகிறது என்று பார்க்கலாம்!'' என்று மூச்சை அடக்கிக்கொண்டு கவனித்தார்.

ஸ்ரீ ஆசார்யர்கள் எப்போதும்போல வாய்விட்டு ஸ்தோத்திரங்களைச் சொல்லி கைகூப்பித் தொழுதுவிட்டு தண்ட

வந்தன நமஸ்காரங்களைச் செய்தார். பூமியிலிருந்து அவர் எழுமுன் ஆதிசங்கரரின் விக்ரஹத்தின் மேல் சார்த்தப்பட்டிருந்த புஷ்பமாலையிலிருந்து ஒரு மலர் விடுபட்டு அவர் முன்னே விழுந்தது!

இந்த ஆச்சர்யமான காட்சியை வாய் திறந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார் அந்த இளம் கணபதிஸுப்ரமண்யன். தம் மனதில் கொண்டிருந்த அபசாரமான எண்ணத்தையும் தான் செய்த காரியத்தையும் நினைத்து மிகவும் வருந்தி பரபரப்புடன் ஸ்ரீ ஆசார்யர்கள் முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார்.

யாத்திரைகளின்போது ஸ்ரீ ஆசார்யர்கள் விஜயம் செய்த ஊர்களில் இருந்த பல தேவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அந்தந்த தேவதைகள் அவருக்கு த்ருக்கோசரமாகவே இருந்தார்கள் என்பதையும் அதையெல்லாம் அவர் இயல்பாகவே அனுபவித்ததையும் பற்றி அனேகர் கூறியுள்ளனர். அதேபோல பக்தர்கள் தம் கிருஹங்களில் இருந்த புராதனமான பூஜாமூர்த்திகளையும் சாலக்ராமங்களையும் அவரிடம் கொண்டுவந்து காட்டியபோது அவரவர்களின் பூஜாக்ரமங்களைப் பற்றி மிகவும் சிரத்தையுடன் விசாரித்து அந்தந்த தேவதைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி யதோக்தமான பூஜாக்ரமம் என்ன என்பதையும் உபதேசித்து அருளியதையும் பற்றி அனேக அனுபவஸ்தர்கள் கூறியிருக்கிறார்கள்.

எஸ்.ஜி. நரஸிம்மய்யா என்பவர் ஸ்ரீ ஆசார்யர்களின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்து சேவை செய்திருக்கிறார். ஒரு நாள் மாலையில் ஸ்ரீ ஆசார்யர்கள் நரஸிம்ம வனத்தின் வடகிழக்குப் பகுதியில் ஒரு குன்றின் மேல் உள்ள காலபைரவர் ஆலயத்திற்கு நடந்து சென்றார். அவரைப் பின்தொடர்ந்து கொண்டு நரஸிம்மய்யாவும் சென்றார். அப்போது அது வனாந்தரம். மரங்களும் முட்செடிகளும் மண்டிக் கிடக்கும் இடம். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் ஸ்ரீ ஆசார்யர்கள் சட்டென்று நின்றுவிட்டார். மேல் வஸ்திரத்திற்குள் மறைத்து வைத்திருந்த இடது கரத்தை வெளியில் எடுத்து வலது கரத்துடன் சேர்த்து வைத்துக்கொண்டு ஒரு திக்கை நோக்கி தலையைத் திருப்பிக் கொண்டு அஞ்ஜலி

செய்துகொண்டே நின்ருர். அவருடைய கண்கள் இமைக்காமல் வானவெளியில் ஏதோ அரிய காட்சியை நோக்குவதுபோல பரவச பாவத்துடன் மலர்ந்து இருந்தன. இப்படியே சில நிமிஷங்கள் சென்றன.

சற்றுப் பின்ஞல் நின்றுகொண்டு ஸ்ரீ ஆசார்யர்களையே நோக்கிக் கொண்டிருந்த நரஸிம்மய்யாவின் உள்ளத்தில் ‘ஆசார்யர்கள் ஏன் இப்படி நிற்கிருர்?’ என்று ஏதோ ஒருவித பயமும் சந்தேகமும் தோன்றின. ஆசார்யர்கள் பார்த்துக் கொண்டிருந்த திக்கை நோக்கி அவரும் தன் பார்வையைச் செலுத்திஞர். அங்கே எப்போதும் காணப்படும் மரங்களும், பாறைகளும் வானவெளியுமே அவருக்குத் தெரிந்தன. வேறு அசாதாரணமான எதுவும் தென்படவில்லை. இப்படியே நின்று கொண்டிருந்தபோது ஸ்ரீ ஆசார்யர்கள் கைகளைக் கூப்பிக்கொண்டு அண்ணுந்து நோக்கியவாறே ஆத்மப் பிரதட்சிணமும் செய்தார். அவருடைய கண்களிலிருந்து நீர் பெருகி வழிந்துகொண்டிருந்தது. முகத்தில் புன்னகையும் அசாதாரணமான மலர்ச்சியும் காணப்பட்டதால் அது ஆனந்த பாஷ்பமாகத்தான் இருக்க வேண்டும் என்று நரஸிம்மய்யாவிற்குத் தோன்றியது. ஆத்மப் பிரதட்சிணங்களைச் செய்து முடித்தவுடன் ஸ்ரீ ஆசார்யர்கள் தம் கைகளை அப்படியே தலைக்கு மேல் உயர்த்தி உடலை வளைத்து அந்த திக்கை நோக்கி வணங்கிஞர். பிறகு மௌனமாக தம் ஆசிரமத்தை நோக்கித் திரும்பி நடக்கலாஞர்.

அவர் எந்த தெய்வீகக் காட்சியை ஆகாசத்தில் கண்டாரோ அதை நரஸிம்மய்யாவிஞல் காண முடியவில்லை. ஆஞலும் மெய்சிலிர்க்க தனக்குக் கிடைத்த ஒரு திவலை ஆனந்த அனுபவத்தை நினைத்துக் கொண்டே ஸ்ரீ ஆசார்யர்களைப் பின்பற்றி நடந்தார்.

ஸ்ரீ அன்னப்பா மஞ்ஜா என்பவர் ஸ்ரீ ஆசார்யர்களின் கூடவே இருந்து சேவை செய்து கொண்டிருந்தார். தவிர, இரவு வேளைகளில் அவருடைய அறைக்கு வெளியேயே படுத்துக்கொண்டு கூப்பிடும் குரலுக்குப் பதில் சொல்லுபவர் போல காவல்காரராகவும் இருந்தார்.

ஓர் இரவில் நடு ஜாமத்திற்கு மேல் அன்னப்பா தன்னுடைய இலேசான தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார். அச்சமயம், மனதைக் கவரும் இசையொலி ஸ்ரீ ஆசார்யர்களின் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தது. அன்னப்பாவிற்கு அது என்றும் இல்லாத அதிசயமாகப் பட்டது. அதனால் உடனே எழுந்து அறையின் மூடியிருந்த கதவுக்கு அருகே போய் நின்றுகொண்டு சற்றே யோசித்துவிட்டு கதவை சிறிது திறந்து உள்ளே எட்டிப் பார்த்தார். இருள் சூழ்ந்திருந்த அந்த அறையில் ஸ்ரீ ஆசார்யர்கள் நின்று கொண்டிருந்தது மட்டும் மெல்லிய வெளிச்சத்துடன் நன்கு தெரிந்தது. அந்த ஒளியில் ஸ்ரீ ஆசார்யர்கள் தம் உடல் முழுவதிலும் விபூதியை அள்ளிப் பூசிக்கொண்டிருந்ததையும், தமது இடதுகாலைத் தூக்கிக் கொண்டு நடனமிடும் நடராஜர் போல நிற்பதையும் கண்டார். அதே சமயம் அந்த தெய்வீக இசையும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது.

அந்த அபூர்வக் காட்சியைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதற்கு வேண்டிய மனவலிமை அன்னப்பாவிடம் இல்லை. ஸ்ரீ ஆசார்யர்களின் அழைப்பின்றி அறைக் கதவைத் திறந்ததும், அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை ரகசியமாகப் பார்த்ததும் பெரிய குற்றம் என்று அவருடைய உள்மனம் கூறியது. அதனால் சட்டென்று கதவை மூடிவிட்டுத் தன் இடத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டு விட்டார். மனம் படபடத்ததில் மறுபடியும் தூக்கமும் வரவில்லை. அந்த இசையொலி எப்போது அடங்கியது என்பதும் அவருக்குத் தெரியவில்லை. விடியற்காலையில், எப்போதும் போல அன்னப்பா ஸ்ரீ ஆசார்யர்களுக்கு கைங்கர்யம் செய்வதற்காக அவருடைய அறைக்குள் போனார். அதற்குள் ஸ்ரீ ஆசார்யர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தார். அன்னப்பாவைக் கண்டதும் ''அன்னப்பா, உனக்கு ராத்திரி வேளைகளில் சரியாகத் தூக்கம் வருவதில்லையா?'' என்று மட்டும் கேட்டார். அந்தக் கேள்வியின் தாத்பர்யம் அன்னப்பாவிற்கு உடனே விளங்கிவிட்டது.

''ஆஹா!, நான் நேற்று இரவில் அறைக்கதவைத் திறந்ததையும் உள்ளே எட்டிப் பார்த்ததையும் ஆசார்யர்கள் கவனித்திருக்கிறார்!'' என்று நினைத்துக்கொண்டு குற்ற உணர்வுடன் மௌனமாக நின்றார்.

வித்யாரண்யபுரம் ஒரு புராதனமான அக்ரஹாரம். சிருங்கேரிக்கு தெற்கே உள்ளது. துங்கா நதி வளைந்து வளைந்து மலைத் தாவரங்களில் தவழ்ந்து வரும்போது அக்கிராமத்தைத் தெற்கிலும் கிழக்கிலும் தொட்டுவிட்டு பிறகு சிருங்கேரியைக் கடந்து செல்லுகிறது.

அந்தக் கிராமத்தில் ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் என்ற ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஆஹிதாக்னி. கடுமையான நியமத்துடன் பிரதி தினமும் அக்னிஹோத்ராதிகளைச் செய்து கொண்டு அந்தந்த உரிய காலங்களில் இஷ்டிகளையும் ஹோமங்களையும் செய்து கொண்டிருந்தார். பரம ஸாத்விகர். ஸ்ரீ ஆசார்யர்கள் அவரிடம் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். மாதந்தோறும் அவர் செய்துவந்த இஷ்டிகளின்போது ஸ்ரீமத் ஆசார்யர்கள் தமக்கு சௌகரியப்படும்போதெல்லாம் நேரில் வந்து பார்த்து ஆசி கூறிவிட்டுச் செல்வதுண்டு என்றும் கூறுகிறார்கள்.

ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் நடுவயதை அடைந்தபோது அவருடைய தர்மபத்னி சுமங்கலியாக இறந்துவிட்டாள். அதனால் அவருடைய அக்னி கார்யங்கள் எல்லாம் அப்படியே நின்றுபோய் விட்டன. அந்த வயதிற்கு மேல் மறுவிவாஹம் செய்து கொள்ளாமல் விதுரராக அதற்குரிய நியமத்துடன் இருந்துவரத் தொடங்கினார்.

ஆனால் வெகுகாலம் அவரால் அப்படி நிம்மதியுடன் இருக்க முடியவில்லை. இரவில் அவருடைய கனவில் மூன்று திவ்ய புருஷர்கள் தோன்றி 'எங்களுக்கு உரிய ஆஹாரத்தைக் கொடு' என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் சற்று அதிகமாக மீண்டும் மீண்டும் தோன்றி, ''எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது. உணவு வேண்டும். சீக்கிரம் கொடு, கொடு'', என்று நீண்ட நேரம் தொந்தரவு செய்வார். பிறகு விடியற்காலையில் கண் விழிக்கும் நேரத்தில் மறைந்து விடுவார்.

இந்த மாதிரியான சொப்பனத்தின் தாத்பர்யம் அவருக்கு விளங்கவில்லை. வேறு ஒருவராலும் அதற்கு விளக்கமோ பரிஹாரமோ அளிக்க முடியவில்லை. அந்தத் தொந்தரவைத் தாங்க முடியாமல் ஸ்ரீ தீக்ஷிதர் ஸ்ரீ ஆசார்யர்களிடம் போய் விஷயத்தைக் கூறி ''தாங்கள்தான் இதற்கு ஏதாவது பரிஹாரம் உண்டா என்று சொல்ல வேண்டும்'', என்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ ஆசார்யர்கள் சற்று நேரம் யோசனை செய்துவிட்டு ''இதற்குப் பரிஹாரம் செய்ய வேண்டுமானால் நீங்கள் புனர்விவாஹம் செய்துகொள்ள வேண்டும்'', என்று பதில் கூறினார். அதைக் கேட்டு, ''குருக்கவே!'' என்று வாய்விட்டு அலறினார் தீக்ஷிதர்.

''பயப்பட வேண்டாம். இதற்கு சாஸ்திரங்கள் அனுமதித்திருப்பதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன். நீங்கள் உங்கள் கிருஹத்தில் கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவனீயம் என்ற மூன்று அக்னிகளை வைத்து போஷித்து வந்தீர்கள். உங்கள் தர்மபத்னியின் வியோகத்தால் அந்த நல்ல கார்யத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போயிற்று. ஆனால் அந்த அக்னிதேவர்கள் உங்கள் மேல் கொண்ட பிரியத்தால் உங்கள் கிருஹத்தை விட்டுப் போகவில்லை. அவர்கள்தான் சொப்பனத்தில் வந்து உங்களிடம் யாசிக்கிறார்கள். உங்களை விடாமல் வற்புறுத்திக் கேட்பது ஆஹவனீய அக்னிதேவர் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் மறுபடியும் விவாஹம் செய்துகொண்டு த்விதீய பத்னியுடன் அக்னி உபாஸனைகளை மறுபடியும் தொடங்கி நடத்தி வாருங்கள். உங்களுக்கு பகவத் க்ருபை பூர்ணமாக இருக்கும்'', என்று உபதேசித்து ஆசி கூறினார்.

ஸ்ரீ நாராயண தீக்ஷிதரும் ஸ்ரீ ஆசார்யர்களின் ஆக்ஞையைத் தலைமேற்கொண்டு மறுபடியும் விவாஹம் செய்துகொண்டு த்விதீய பத்னியுடன் யாக யக்ஞங்களை யதோக்தமாக நடத்தத் தொடங்கி கிருஹஸ்த தர்மத்தைப் பூர்ணமாகக் கடைப்பிடித்தார்.

பின்னால் வயோதிகம் அடைந்தபோது ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் அனுக்ரஹத்தால் அவருக்கு ஆதுர ஸந்யாஸம் பிராப்தமாயிற்று. அவருடைய ஸமாதி ஸ்தலம் அக்ரஹாரத்தின் தென் கோடியில் துங்கா நதியின் வடகரையில் இருக்கிறது. அவருடைய மூத்த குமாரர் ஸ்ரீ பிரபாகர தீக்ஷித் ஸ்ரீமடத்தின் பாடசாலையில் அத்யாபகராக இருக்கிறார்.

அதே வித்யாரண்யபுரத்தில் சியாமா பட்டர் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு ஸ்ரீமடத்தில் ஊழியம். ஸ்ரீ சந்திரசேகர பாரதீ

மஹாஸ்வாமிகள் 1924-1927 ஆண்டுகளில் தென் (தமிழ்) நாட்டுக்கு யாத்திரையாகச் சென்றபோது இளைஞரான சியாமாவும் அவருக்கு ஊழியராக உடன் சென்றிருந்தார். ஸ்ரீ ஆசார்யர்கள் ராமேச்வரம், ஸேது முதலிய இடங்களில் தங்கியபோது அவருக்கு ஸ்னன காலங்களில் உடனிருந்து நீர் எடுத்துக் கொடுப்பது, வஸ்திரங்களைத் துவைப்பது, மடியாக உலர்த்தி எடுத்து வைப்பது போன்ற பணிகளைச் செய்து கொண்டிருந்தார்.

ராமேச்வரத்தில் தங்கியிருந்தபோது ஒரு நாள் அதி விடியற்காலையில் ஸ்ரீ ஆசார்யர்கள் வழக்கத்தைவிட முன்பாகவே விழித்து எழுந்துவிட்டார். உடனே தம் கைகளைத் தட்டி, அறைக்கு வெளியே படுத்திருந்த வேறொரு ஊழியரை அழைத்து, ''இன்றைக்கு நீ மடியை எடுத்து வா. சியாமா வரவேண்டாம். அவனிடம் சொல்லிவிடு,'' என்று கூறிவிட்டு தாமே லாந்தரை எடுத்துக் கொண்டு விடுவிடென்று ஸ்னனத்திற்குச் சென்றுவிட்டார்.

அந்த ஊழியரும் விரைந்துபோய் சியாமாவை எழுப்பி விஷயத்தைக் கூறிவிட்டு, தான் வேகமாக ஸ்னனம் செய்துவிட்டு ஸ்ரீ ஆசார்யர்களின் பின்னால் ஓடினார்.

அவர் கூறியதைக் கேட்டதும் சியாமாவிற்கு வெலவெலத்துப் போய்விட்டது. ''என்ன அபசாரம் செய்து விட்டேனோ, தெரியவில்லையே?'' என்று மனதிற்குள் புழுங்கினார்.

ஸ்ரீ ஆசார்யர்களின் ஸ்னனம், ஜபம், த்யானம், அனுஷ்டானம், பூஜை, தீர்த்தப் பிரஸாதம் வழங்குதல் என கார்யங்கள் ஒன்றன் பின் ஒன்ருக நடந்து கொண்டே இருந்தன. சியாமாவால் அவரருகே நெருங்க முடியவில்லை.

''மத்தியானத்திற்கு மேல் ஆசார்யர்களின் பிக்ஷை ஆகட்டும். அப்போது போய் தரிசனம் செய்துகொண்டு மன்னிப்பு கேட்டுக் கொள்ளலாம்'' என்று பொறுமையுடன் காத்திருந்தார். ஆனால் அதற்கு முன்னாலேயே 'காம்ப்' ஆபீஸிலிருந்து அவரைக் கூப்பிட்டனுப்பினார்கள். ''ஆபத்து வந்தே விட்டது!'' என்று திகிலுடன் விரைந்து போய் 'ஆஜர்' கூறினார். உடனே ஒரு ரொக்கத் தொகையை அவரிடம் கொடுத்து ''உன்னை உடனே சிருங்கேரிக்கு

திரும்பிப் போகச் சொல்லிவிட்டார் ஆசார்யர்கள். இப்பொழுதே கிளம்பு'' என்று கெடுபிடி பண்ணினார்கள். அவர் மனக்குழப்பம் அடைந்து மறுத்துப்பேச தைரியமில்லாமல், ஸ்ரீ ஆசார்யர்களைத் தரிசனம் செய்து கொள்ளவும் முடியாமல் வருத்தத்துடன் புறப்பட்டுப் போனார்.

சிருங்கேரியை அடைந்து வித்யாரண்யபுரத்தில் இருந்த வீட்டிற்குப் போனதும் தான் தெரிந்தது, உரிய காலத்திற்கு முன்னாலேயே அவருக்கு ஒரு புருஷப் பிரஜை புனர்வஸு நட்சத்திரத்தில் பிறந்திருந்ததும் தாயும் சேயும் நலம் என்பதும்!

அவருடைய மனம் அப்போது எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் இன்று கற்பனை செய்துதான் பார்க்க வேண்டும்.

ஸ்ரீ சியாமாவிற்கு அப்போது பிறந்திருந்த ஆண் குழந்தை ஆரோக்கியமாக வளர்ந்து பின்னால் குஸ்கூர் ராமஸ்வாமி அவதானிகள் என்ற பெயருடன் சிருங்கேரி பிராந்தியத்தில் பல ஊர்களில் 'மாஸ்டர்' (பள்ளிக்கூட உபாத்தியாயர்) உத்யோகம் பார்த்து வந்தார். பின்னால் உரிய காலத்தில் ஓய்வு பெற்ற பிறகு ஸ்ரீமடம் நடத்தும் ஹோம கார்யங்களில் கலந்துகொண்டு ரித்விக்காக சேவை செய்து வந்தார்.

இரு ஆண்டுகளுக்கு முன் அவர் இறைவனடி சேர்ந்தார். இப்போது அவருடைய இளைய குமாரர் கே.ஆர். விச்வநாதன் என்பவர் ஸ்ரீமடத்தில் அர்ச்சகராகப் பணி புரிந்து கொண்டிருக்கிறார்.

இது போன்று மற்றும் சில சம்பவங்களைப் பற்றியும் கூறுகிறார்கள்.

ஸ்ரீ ஆசார்யர்களின் விசேஷ பிரீதிக்குப் பாத்திரமானவர் ஸ்ரீகண்ட ஸோமயாஜி என்ற பண்டிதர். நல்ல ஆசாரசீலர். ஸாத்விக புருஷர். மந்திரஜபம், பாராயணம், பூஜைகள் இவைகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். பரம பக்தர்.

ஒரு சமயம் ஸ்ரீ ஆசார்யர் அவரைத் தேர்ந்தெடுத்து நஞ்சுன்கூடு ஸ்ரீகண்டேசுவரர் ஆலயத்தில் விசேஷ சங்கல்பத்துடன் தொடர்ந்து மந்திரஜபம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு அனுப்பினார். மந்திரமோ மேதா தக்ஷிணாமூர்த்தி மந்திரம். ஜபம் செய்ய வேண்டிய

இடம் ஆலயத்தில் இருக்கும் விசேஷமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதி. தினம் இத்தனை ஆவிருத்தி, இடைவிடாமல் இத்தனை தினங்கள் செய்ய வேண்டும், இன்ன நியமங்கள் , இன்ன கிரமம், இன்ன விதத்தில் நிறைவு செய்ய வேண்டும், இன்ன நைவேத்யம் என்று எல்லா விதிகளையும் ஸ்ரீ ஆசார்யரே சொல்லிக் கொடுத்து அவரை அனுப்பினார்.

அந்த ஸமயத்தில் ஸ்ரீ ஸோமயாஜியின் தர்மபத்தினி நிறை கர்ப்பவதியாக இருந்தார். எந்த நேரமும் பிரஸவிக்கலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஸ்ரீ ஸோமயாஜி குருவிடம் பூர்ண விசுவாசத்துடன் அவருடைய ஆக்ஞையை அனுஸரித்து நஞ்சன்கூட்டிற்குப் போய் கடும் நியமங்களுடன் யதோக்தமாய் ஜபத்தைச் செய்யத் தொடங்கினார். ஸங்கல்பம் செய்து கொண்டபடி ஜபத்தைப் பூர்த்தியும் செய்து கடைசி நாளில், எப்படி உத்தரவாயிற்றோ அந்தக் கிரமத்தை அனுஸரித்து, நிறைவும் செய்துவிட்டார்.

அன்று சிருங்கேரியிலிருந்து ஸ்ரீ ஆசார்யர் அவருக்கு ஒரு விசேஷ ஆசிச் செய்தியை நஞ்சன்கூட்டிற்கு அனுப்பச் செய்தார். ''ஸ்ரீகண்ட ஸோமயாஜி வெகு சிரத்தையுடனும் பக்தி பூர்வமாகவும் எங்கள் ஆக்ஞையை அனுஸரித்து, தொடங்கி பூர்த்தி செய்த ஜபத்தால் பகவான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பரமப்பிரீதியை அடைந்துள்ளார். அவருடைய கிருபை பரிபூரணமாக ஸோமயாஜிக்குக் கிடைக்கட்டும் என்று ஆசீர்வாதம் செய்கிறோம். பகவான் அடைந்துள்ள ஸந்தோஷத்திற்கு சூசகமாக ஸோமயாஜிக்கு ஸந்தானப் பிராப்தி ஏற்படும். அந்தக் குழந்தைக்கு 'ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி' என்றே நாமகரணம் செய்து பரம சிரேயஸ்ஸை அடையட்டும்.'' இப்படி அந்த செய்தியில் கண்டிருந்தது.

ஸ்ரீ ஆசார்யரின் ஆசிச் செய்தி கிடைப்பதற்கும் ''ஸ்ரீ ஸோமயாஜியின் பத்னிக்கு அன்று பிற்பகலில் சுகப்பிரஸவம் ஆகி ஆண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்ற சுப ஸந்தேசம் கிடைப்பதற்கும் சரியாக இருந்தது. புத்திரப் பிராப்தியை அந்தப் பக்தர் 'ஸ்ரீ ஆசார்யரின் அனுக்ரஹத்தால் கிடைத்த பகவத் பிரஸாதம்' என்று மிக அடக்கத்துடன் கருதி, உரிய நாளில் ஜாதகாதி நாமகரணம் செய்யும்போது அந்தப் புத்திரனுக்கு ''ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி'' என்றே பெயரிட்டார்.

அந்தப் புத்திரனே வளர்ந்து கல்வி கேள்விகளில் நன்கு தேர்ந்து தற்சமயம் ஸாஹித்ய மஹாமஹோபாத்யாயா டாக்டர் என்.எஸ் தக்ஷிணமூர்த்தி M.A., Ph.D என்று எல்லோராலும் அறியப்படுகிறார். சம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ், ஆங்கிலம் மற்றும் பல மொழிகளில் புலமை பெற்று கல்லூரிகளில் ப்ரொபஸர் முதலான உயர் பதவிகளை வஹித்து தற்சமயம் ஓய்வு பெற்றுள்ளார். ஸ்ரீவித்யா, ஸ்ரீசக்ர நவாவரண பூஜை போன்ற குஹ்யமான தந்த்ர சாஸ்திரங்கள், வேதவேதாந்தம் எல்லாவற்றிலும் அவருக்கு தேர்ச்சி உண்டு. இவைகளுடன் ஆத்மகுணங்கள் நிறைந்தவராகவும் 'நிறைகுடம் ததும்பாது' என்ற சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், மிக மரியாதைக்கு உரிய கனவானாகவும், எல்லோருக்கும் பிரியமானவராகவும் இன்று விளங்குகிறார்.

ஸ்ரீ ஆசார்யர்களின் பூஜைக்கு காலவரம்பு என்பது இருக்காது என்று ஸ்ரீ கணபதிஸுப்ரமண்ய அவதானிகள் கூறுவார். அப்போதெல்லாம் அந்தப் பூஜை ஸ்ரீ ஆசார்யர்களின் பிரத்யேக ஏகாந்த பூஜையாக உள் அறையில்தான் நடக்குமாம். அனுமதி பெற்றவர்கள் சற்று தூரத்தில் அமர்ந்துகொண்டு அதைத் தரிசனம் செய்ய முடியுமாம்.

ஸ்ரீ ஆசார்யர்கள் எப்போது பூஜையைத் தொடங்குவார்கள் எப்போது முடிப்பார்கள் என்று ஒருவராலும் கூறமுடியாது. சில சமயங்களில் ஸ்ரீ சந்திரமௌலீசுவரருக்கு அபிஷேகமே முடிவில்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். குடம் குடமாக மடிநீர் கொண்டுவந்து நிரப்பினாலும் அத்தனை நீரையும் ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் மேல் பொழிந்து கொண்டே இருப்பார். சில சமயம் தாராபாத்திரத்தில் எடுத்துக் கொண்ட நீர் அத்தனையும் அபிஷேகம் ஆகி பாத்திரம் காலியாகி விட்டாலும் அதை மீண்டும் நிரப்பிக் கொள்ளாமல் அப்படியே பிடித்துக் கொண்டிருப்பார். 'சேகரித்து வைத்த நீரெல்லாம் ஆகிவிட்டது' என்று யாராவது தைரியமுள்ளவர் அருகில் போய் சொன்னால் 'அபிஷேகம்' செய்வதை நிறுத்தி பூஜையின் அடுத்த கட்டத்திற்குப் போவார்.

அதேபோல் தட்டுத் தட்டாக வைத்த புஷ்பங்களை எல்லாம் அர்ச்சனை செய்த பிறகும் ஸ்வாமி மேல் பதிந்த பார்வையைச் சற்றும்

திருப்பாமல் தம் வலது கரத்தை பக்கவாட்டில் நீட்டி புஷ்பங்களுக்காக காலித் தட்டுகளைத் தடவித் தடவிப் பார்ப்பார். ஸ்ரீசக்ரத்திற்கு குங்குமார்ச்சனை செய்யும்போது நடுவில் ஏதோ ஒரு நாமாவைச் சொல்லி அர்ச்சனை செய்துவிட்டு அதிலேயே ஆழ்ந்து போய்விடுவார். அடுத்த நாமாவிற்குப் போகாமல் அர்ச்சனை அங்கேயே வெகுநேரம் நின்று கொண்டிருக்கும்.

இப்படியெல்லாம் ஸ்ரீ கணபதிஸுப்ரமண்ய அவதானிகள் பக்திப் பரவசத்துடன் தான் பார்த்து அனுபவித்ததையெல்லாம் வர்ணிப்பார்.

அப்போது இளைஞராக இருந்த ஸ்ரீ கணபதிஸுப்ரமண்யமும் இன்னொரு பிரம்மச்சாரி பையனும் ஸ்ரீ ஆசார்யர்களின் பூஜைக்கு வேண்டிய தீர்த்தம், சந்தனம், புஷ்பம் போன்ற சாமக்ரியைகளை எடுத்து வைக்கும் பணியில் இருந்தார்கள். அன்று ஒரு நாள் ஸ்ரீ ஆசார்யர்கள் பூஜையைத் தொடங்கி பாதி பூஜையில் இருந்தார்கள். அந்தப் பூஜை அறைக்குப் பக்கத்து அறையில் இரு பிரம்மச்சாரிகளுக்கும் இடையில் விளையாட்டாக ஆரம்பித்த சண்டை கைகலப்பு வரையில் போய்விட்டது. இருவரும் கட்டிப் புரண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது அங்கு ஓர் அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெரியதும் சிறியதுமான பூஜா பாத்திரங்கள் கீழே விழுந்து 'டணர், டணர்' என்று பெருத்த ஓசையை எழுப்பின. பையன்கள் இருவருக்கும் 'திக்'கென்று ஆகிவிட்டது. உடனே சண்டையை நிறுத்திவிட்டு ''பூஜை அறையில் ஆசார்யர்களுக்கும் இந்தச் சத்தம் கேட்டிருக்குமே?'' என்ற பயத்துடன் ஓடிப்போய் அங்கே எட்டிப் பார்த்தார்கள். ஆனால் அவர் இந்த உலகத்திலேயே இல்லாதவர் போல பூஜையில் ஆழ்ந்து போய் தொடர்ந்து செய்துகொண்டே இருந்தார். அந்தப் பெருத்த சப்தம் அவருடைய காதில் விழுந்ததாகவே தெரியவில்லை.

ஆனாலும் இரு பையன்களும் தங்களுடைய செயலுக்காக மனதிற்குள் மிக வருந்தினார்கள். அன்று முதல் அவ்விதமான 'பிரம்மச்சாரி சேஷ்டை'களை விட்டொழித்தார்கள் என்றும் சொல்லலாம்.

ஸ்ரீ ஆசார்யர்கள் அந்தர்முக நிலையில் இருக்கும்போது உலகில் எங்கெங்கோ நடக்கும் நல்லது பொல்லாததுகளைத் தாம் இருக்கும் இடத்திலிருந்தே தெரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தார் என்ற விஷயத்தை பலர் தம் அனுபவரீதியாகக் கண்டு எழுதியுள்ளார்கள்.

எங்கேயோ யாரோ அவரை நினைத்துச் செய்துகொண்ட பிரார்த்தனைகளையும் அவர் தம் அந்தர்முகாவஸ்தையில் ஏற்றுக்கொண்டு அவருக்கு பிரஸாதம் அனுப்பச் செய்து அனுக்ரஹித்துள்ளார் என்பது போன்ற நிகழ்ச்சிகளையும் சிலர் கூறியிருக்கின்றனர். ஆனால் சிருங்கேரிவாசிகள் சிலர் சொன்ன ஒரு விஷயம் மிக சுவாரஸியம் உள்ளதாகவும் உள்ளத்தைத் தொடுவதாகவும் இருந்தது.

அந்த சமயத்தில் ஸ்ரீ ஆசார்யர்கள் தம்மை மறந்து அந்தர்முகாவஸ்தையில் இருந்திருக்கிறார். அவர் தனியாக எங்கேயாவது போய்விடப் போகிறாரே என்ற கவலையில் அவரைக் கட்டிக் காத்து வந்திருக்கிறார்கள். அவர் இருந்த அறைக்கு வெளியே ஓர் ஆளை நிறுத்தி விழிப்புடன் இருந்து அவர் எங்கேயாவது தனியாகப் போய்விடாமல் பாதுகாத்து வர ஏற்பாடும் செய்திருக்கிறார்கள்.

ஒரு நாள் அந்தி மங்கும் நேரம். எப்போதும் அமைதியுடன் இருக்கும் நரஸிம்மவனம் அந்த நேரத்தில் இன்னும் 'ஹோ'வென்று இருந்திருக்கிறது. காவலுக்காக உட்கார்ந்திருந்த ஆள் ''இத்தனை நாட்களாக நடக்காதது இன்று மட்டும் என்ன நடந்து விடப்போகிறது?'' என்ற மனோபாவத்துடன் இருந்தார் போலும்! ஸ்ரீ ஆசார்யர்கள் தங்கியிருந்த அறையின் கதவுகளை மூடி, பூட்டு மாட்டும் இடத்தில் ஒரு சிறு குச்சியைச் செருகிவிட்டு சற்று அப்பால் போயிருக்கிறார்.

அதேசமயம் சிருங்கேரியில் இருந்த 'கொத்தவால் சாவடி'யில் (போலீஸ் காவல் நிலையத்தில்) ஒரு பரிதாபத்துக்கு உரிய ஆளைப் பிடித்து வைத்து 'லாக்அப்' அறையில் அடைத்து வைத்திருந்தார்கள். அந்தக் காவல் நிலையத்தில் ஒரே ஒரு காவலன் மட்டும் 'மினுக் மினுக்' என்று எரியும் லாந்தர் விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு அரைத் தூக்கத்துடன் உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று விழித்துப் பார்க்கும்போது தன் எதிரே 'குருக்கள்' (ஸ்ரீ ஆசார்யர்கள்) நின்று கொண்டிருப்பதைப் பார்த்து அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து நின்ருன். மஹாஸந்நிதானம் அவர்களே எந்த அறிவிப்பும் இல்லாமல் தன்னந் தனியாக வரக்கூடும் என்பதை அவன் எதிர்பார்த்திருக்க முடியாதுதான்.

''அந்த ஆளே எதற்காகப் பிடித்து உள்ளே அடைத்து வைத்திருக்கிருய்?'' என்று ஸ்ரீ ஆசார்யர்கள் கம்பீரமாகக் கேட்டார்.

காவலனுக்கு பயத்தில் வாய் குழறிற்று. பதில் சொல்ல முடியவில்லை. ''அதிகார மமதையினுல் தான் செய்தது அதிகம்தான், வரம்பு மீறியச் செயல்தான், அது தவருகவே இருக்கக்கூடும்'' என்ற பயத்துடன் அவன் இருந்தான் போலும்! ஆகையால் பதில் சொல்ல நா எழவில்லை.

''அவன் நிரபராதி. கதவைத் திறந்து உடனே அவனை விடுதலை செய்!'' என்று கூறிவிட்டு அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் ஸ்ரீ ஆசார்யர்கள் விடுவிடென்று வந்த வழியே திரும்பச் சென்று விட்டார். அந்தக் காவலனும் அவர் ஆக்ஞையிட்டபடியே செய்துவிட்டான். அந்த நிரபராதியான தீனனும் விடுதலையாகி தன் வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

கதை இங்கு முடியவில்லை. ஏனென்ருல், அதற்குள் மடத்தின் வளாகத்திலும், நரஸிம்ம வனத்திலும் 'மஹாஸந்நிதானத்தைக் காணவில்லை' என்ற செய்தி பரவி மூலைக்கு மூலை லாந்தர் விளக்குகளை எடுத்துக் கொண்டு தேடத் தொடங்கி விட்டார்கள். அவருடைய அறைக் கதவு திறந்தே கிடந்தது. எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டு தற்செயலாக அறைக்குள்ளும் மீண்டும் வந்து பார்க்கும்போது ஸ்ரீ ஆசார்யர்கள் அங்கே தியானத்தில் இருப்பதைக் கண்டு பிரமித்துப் போய்விட்டார்கள்.

அவர் எப்படி, எப்போது வெளியே போனுர், எங்கே போனுர், எவரும் அறியாமல் எப்படித் திரும்பி வந்தார் என்பதெல்லாம் பின்னுல் அவரைப் போன்ற ஒருவரை ஆங்காங்கே கண்டதாக பலரும் கூறிய துண்டு துண்டான செய்திகளை வைத்துத்தான் அனுமானிக்க முடிந்தது.

அந்தி மங்கும் அந்த வேளையில் ஸ்ரீ ஆசார்யர்கள் எப்படியோ தம் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். நேராகத்

துங்கா நதியின் கரையில் நரஸிம்ம வனத்திற்குள் இருக்கும் ஸந்தியாவந்தன மண்டபத்தை அடைந்தார். நதியில் வெகுக் குறைவாக நீர் ஓடிக் கொண்டிருந்த காலம் அது. ஆகையால் நதியில் இறங்கி நடந்தே சுலபமாக அதைக் கடந்து அக்கரையில் இருந்த மணல் திட்டை அடைந்து ஊருக்குள் நுழைந்து வீதி வழியாக நேராக ராமபாணம் போல போலீஸ் காவல் நிலையத்தைக் குறி வைத்து நடந்தார். அங்குபோய் அந்த நிரபராதியான அப்பாவி மனிதனை விடுதலை செய்யச் சொல்லிவிட்டு வந்த வழியே திரும்பி வந்து யாரும் அறியாமல் அறைக்குள் புகுந்துகொண்டு மீண்டும் தியானத்தைத் தொடங்கிவிட்டார்.

ஒரு நிரபராதியின் தீனமான நிலையை அவரே தம் ஞானதிருஷ்டியின் மூலம் தெரிந்துகொண்டு மனம் இரங்கித் தாமாகவே ஓடிப்போய் அவனை விடுவிக்கச் செய்தாரா, அல்லது அவன் தன் மனதினுள் அவரை நினைத்து தன்னைக் காப்பாற்றும்படி உருக்கமாகச் செய்துகொண்ட பிரார்த்தனை அவருடைய நிர்மலமான மனதில் பிரதிபலித்து, அந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு தம் கருணையை அவனிடம் காட்டினரா, என்பது யாருக்குத் தெரியும்?

அதனால்தான் ஞானியின் போக்கு ''இப்படித்தான் இருக்கும், அப்படித்தான் இருக்கும்'' என்று யாரும் அனுமானித்துக் கூறமுடியாது என்று வியாஸ பகவான், பீஷ்மர் போன்ற மஹாபுருஷர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள் போலும்!

❖

ஸ்ரீரங்கம் குருபக்த சிகாமணி ஸ்ரீ டி.கே.பாலசுப்ரமண்ய அய்யர் முப்பத்திமூன்றுவது பீடாதிபதியான ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் அத்யந்த கருணைக்குப் பாத்திரமானவர். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீசங்கர குருகுலம், ஸ்ரீ வாணிவிலாஸ் பிரஸ் முதலிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அவைகள் மூலம் ஆதிசங்கரரின் க்ரந்தங்களையும் பல அரிய அத்வைத வேதாந்த, சம்ஸ்கிருத இலக்கிய கிரந்தங்களையும் அச்சிட்டு பிரகாசப்படுத்தி நிறைய குருசேவை செய்திருக்கிறார்.

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் பீடாதிபதியான பிறகு 1924-27ல் தென்னாட்டில் யாத்திரை செய்தபோது ஸ்ரீரங்கத்திற்கும்

வந்தார். ஸ்ரீ பாலஸுப்ரமண்ய அய்யரும் மற்றப் பிரமுகர்களும் முன்னின்று ஸ்ரீ ஆசார்யர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

ஒரு நாள் காலை ஸ்ரீ ஆசார்யர்கள் அய்யரின் கிருஹத்திற்கு பாதபூஜையை ஏற்றுக் கொள்வதற்காக வந்தார். விசாலமான அந்த வீடு கோலங்களாலும் மாவிலைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ ஆசார்யர்கள் ஏறி வந்த மேனு (ஸவாரி) பல்லக்கு அந்த வீட்டு வாசலில் நின்றவுடன் அவர் கீழே இறங்கி பூர்ணகும்ப மரியாதைகளை ஏற்றுக்கொண்டு படியேறி வீட்டுக்குள் சென்றார். உள்ளேயும் வெளியேயும் திரளான பக்தர்கள் குழுமியிருந்தனர். வேத விற்பன்னர் வேத கோஷத்துடன் முன்னே சென்றனர்.

வீட்டின் நடுவே ஒரு பெரிய கூடம். அதன் நுழைவாயில் மேல்புறத்தில் கையால் வரையப்பட்ட பெரிய வண்ணப் படத்தை (oil painting) மாட்டி வைத்திருந்தார் அய்யர். மலர் மாலையால் அது அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீ ஆசார்யர்களை அந்த வாசற்படி அருகே சற்று நிற்கச் செய்து அந்த சித்திரத்தை அவருக்குக் காட்ட வேண்டும் என்று எண்ணியிருந்தார் அய்யர். ஆனால் வேறொரு பிரமுகர் ஸ்ரீ ஆசார்யர்களின் அருகே நெருங்கி அய்யரை சற்றுப் பின்னால் தள்ளிவிட்டார். ஸ்ரீ ஆசார்யர்களும் அந்த வாசற்படியைத் தாண்டி உள்ளே கூடத்திற்குள் நுழைந்துவிட்டார். அதனால் அய்யரின் பெரும் அவா நிறைவேறவில்லை.

அந்த அரிய வாய்ப்புத் தவறியதால் அவருக்குச் சற்று ஏமாற்றம் உண்டாயிற்று. 'சரி, அப்புறம் பிரஸ்தாபம் செய்யலாம்' என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டார்.

பாதபூஜை, பலசமர்ப்பணம் எல்லாம் முடிந்தவுடன் கூடியிருந்த பக்தர்களின் கூட்டம் சற்றுக் கலைந்தது. அய்யர் ஸ்ரீ ஆசார்யர்களின் அருகில் பவ்யமாக நின்றுகொண்டு சம்பாஷிக்கத் தொடங்கினார்.

''உள்ளே வரும் வழியில் நிலைப்படிக்கு மேலே ஒரு பெரிய வர்ணசித்திரத்தை மாட்டி வைத்திருக்கிறேன். உள்ளே நுழையும்போதே அதை ஆசார்யர்களிடம் 'அதைப் பார்க்க

வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொள்ள எண்ணியிருந்தேன். பரபரப்பில் அது முடியாமல் போய்விட்டது.''

''நானே அந்தப் படத்தைப் பார்த்து விட்டேனே! சைத்திரிகர் தத்ரூபமாக வரைந்திருக்கிறார்,'' என்றார் ஸ்ரீ ஆசார்யர்கள்.

''அதில் ஒரு விசேஷம் இருக்கிறது. அதைத்தான் ஆசார்யர்களிடம் காட்ட நினைத்திருந்தேன்.''

''ஆமாம், அது விசேஷமான சித்திரம்தான். அதில் நம் குருநாதர் தத்ரூபமாக காட்சி அளிக்கிறார். அவரைத் தரிசித்தவுடன் நான் பிரமித்துப் போய்விட்டேன். அவருக்கு அஞ்ஜலி செய்து வணங்கிவிட்டுத்தான் உள்ளே நுழைந்தேன்,'' என்றார் ஸ்ரீ ஆசார்யர்கள்.

அய்யருக்கு முழு திருப்தி உண்டாகவில்லை. ''அந்தச் சித்திரத்தில் வேறொரு விசேஷமும் இருக்கிறது. குருநாதர் பக்கத்தில் ஆசார்யர்கள் நின்று கொண்டிருப்பதாக கற்பனை செய்து சைத்திரிகர் வரைந்திருக்கிறார். என்னைப் போன்றவர்களுக்கு இருவரும் ஒரே இடத்தில் தரிசனம் தருவது போல அந்தப் படத்தில் காட்சி அளிக்கிறார்கள். அதுதான் அந்த விசேஷம். ஏனென்றால் வாஸ்தவத்தில் நாங்கள் அப்படி தரிசனம் செய்ய சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விட்டதல்லவா?'' என்றார் அய்யர்.

ஸ்ரீ ஆசார்யர்கள் சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு ''அப்படியா? நான் அந்தப் படத்தில் நம் குருநாதரை மட்டும்தான் பார்த்தேன். படத்தில் வேறு யார் இருக்கிறார்கள் என்பதை கவனிக்கவில்லை'' என்று கூறினர்.

பிறகு அங்கிருந்து புறப்படும்போது ஸ்ரீ ஆசார்யர்கள் அந்த நிலைப்படிக்கு அருகில் நின்றுகொண்டு அந்த சித்திரத்தைச் சற்றுநேரம் பார்த்துவிட்டு அய்யரைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

அய்யரின் மனம் குளிர்ந்தது என்று சொல்லவும் வேண்டுமோ?

குருதத்துவத்தின் ரஹஸ்யத்தை ஸ்ரீ ஆசார்யர்கள் ஒரு பக்தருக்கு விளக்கியதைப் பற்றி ராஜப்ரவீண ஸ்ரீ ஏ.வி. ராமநாதனும் ஸ்ரீ எஸ்.ஜி. நரசிம்மய்யாவும் தனித் தனியாகக் கூறியிருக்கிறார்கள்.

1938 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஆசார்யர்கள் சிருங்கேரியிலிருந்து புறப்பட்டு காலடிக்கு யாத்திரையாகச் சென்றார். போகும் வழியில் பெங்களூரில் பல மாதங்கள் தங்கினார். அதுவே அவர் மேற்கொண்ட கடைசி யாத்திரையாக ஆயிற்று.

அச்சமயம் அவர் பெங்களூர் சங்கரமடத்தில் முகாமிட்டிருந்தார். தினந்தோறும் திரளான ஜனங்கள் வந்து தரிசித்தனர். பாதபூஜைகள், பிக்ஷாவந்தனங்கள், தீர்த்தப் பிரஸாதம் வழங்குதல், பேட்டிகள், உபந்யாஸங்கள் என்று எல்லாம் தினந்தோறும் சம்பிரமமாக நடந்தன. பக்தர்களுக்கு அதெல்லாம் ஓர் ஆனந்த அனுபவமாக இருந்ததால் அந்த நாட்கள் விரைவாக ஓடி விட்டன போல் தோன்றின.

ஸ்ரீ ஆசார்யர்கள் பெங்களூரை விட்டுப் புறப்படும் தினமும் கடைசியில் வந்தே விட்டது. அவரை வணங்கி வழியனுப்பி வைக்க பக்தர்கள் திரளாக வந்து குழுமிவிட்டனர். அவர்களில் வயது முதிர்ந்த கனவான் ஒருவரும் இருந்தார். அவர் பெரும் லௌகிகப் பதவிகளை வகித்தவர். பழம்பெரும் ஆசார்ய பக்தர்.

எல்லோரும் ஸ்ரீ ஆசார்யர்களை நமஸ்கரித்து மந்திராக்ஷதை பெற்றுக் கொள்ளும்போது அவருடைய முறையும் வந்தது. ஸ்ரீ ஆசார்யர்கள் அருகில் போய் நின்றுகொண்டு மந்திராக்ஷதையைப் பெற்றுக்கொள்ள இரு கைகளையும் சேர்த்து நீட்டினார். உடனே விக்கி விக்கி அழவும் தொடங்கிவிட்டார்.

''இவ்வளவு வருத்தத்திற்குக் காரணம் என்ன?'' என்று ஸ்ரீ ஆசார்யர்கள் கேட்டார்.

''பிரிவைத் தாங்க முடியாது என்று தோன்றிற்று. அந்தத் துக்கம்தான்.''

''எதனிடமிருந்து எதற்குப் பிரிவு?''

''இந்தக் கேள்விக்குப் பதில் கூற எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் இத்தனை நாட்களாக ஒருநாள் விடாமல் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்த என் குருவின் தரிசனம், அவருடன் சம்பாஷணம், அவருடைய உபதேசங்கள் எல்லாம் நாளை முதல் கிடைக்காது என்பதுதான். தினமும் அவரிடமிருந்து தீர்த்த ப்ரஸாதம் கிடைத்துக் கொண்டிருந்தது. பல தத்துவங்களை

உபதேசமாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது. நாளை முதல் அதெல்லாம் கிடையாது. இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டேன். துக்கம் தாளவில்லை. அதனால்தான் அழுதுவிட்டேன்'' என்றார் அந்தப் பெரியவர்.

மேலும், ''அடுத்தமுறை ஆசார்யர்கள் இங்கே விஜயம் செய்யும்போது அவரைத் தரிசனம் செய்யும் பாக்கியத்தைப் பெற நான் உயிருடன் இருக்க வேண்டுமே! என்றும் நினைத்துக் கொண்டேன்,'' என்றார்.

முதலில் புன்சிரிப்புடன் கேட்கத் தொடங்கிய ஸ்ரீ ஆசார்யர்களின் முகம் இறுகிற்று. சற்றுக் கடுமையான குரலில், ''உங்களுக்கு தினமும் தரிசனம் கொடுத்து உபதேசித்த அந்த குரு யார்?'' என்று கேட்டார்.

''ஏன், இப்போது எனக்குத் தரிசனம் அளித்துக்கொண்டு என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் சாட்சாத் தாங்கள்தான் அந்த குருநாதர்,'' என்று கூறிவிட்டு அந்தப் பெரியவர் ஒரு சுலோகத்தையும் நடுங்கும் குரலில் சொன்னார்.

''யஸ்ய நாதிமத்யம் ந ஹி கரசரணம்
நாம கோத்ரம் ச ஸூத்ரம் ।
நோ தத்வம் தத்வமேகம் ஸஹஜ ஸமரஸம்
ஸத்குரும் தம் நமாமி ॥''

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு ஸ்ரீ ஆசார்யர்கள் இப்படி அவருக்குப் பதிலளித்தார்.

''இத்தனை நாட்களாக இவ்வளவு உபதேசங்களைப் பெற்ற பின்னும் நீங்கள் 'நாளை முதல் என் குருவைக் கண்ணால் காண முடியாதே?' என்று வருத்தப்பட்டீர்களானால் இவ்வளவு காலமாக நான் உங்களுக்கு உபதேசம் செய்து வந்ததும் நீங்களும் நாள் தவறாமல் வந்து அதைக் கேட்டுக் கொண்டதும் வீண் கால விரயம்தான் என்று கூறுவேன். இங்கும் அங்கும் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கும் இந்த பாஞ்சபௌதிகமான சரீரம்தான் உங்கள் குரு என்று நினைத்துக் கொண்டிருப்பது வெறும் அக்ஞானம். 'குரு' என்ற பதம் ஓர் உயர்ந்த தத்துவத்தைக் குறிக்கிறது. கால, தேச வரம்பில்லாமல் அந்தத் தத்துவம் எங்கும்

வியாபித்து இருக்கிறது. எங்கும் பிரஸந்நமாகவும் இருக்கிறது. அதுவே நம் புத்தியைத் தூண்டிவிட்டு இயக்குகிறது. எப்போதும் பிரகாசமாக இருக்கிற அந்த குரு தத்துவத்தை நீங்கள் சரியானபடி புரிந்து கொண்டீர்களானுல் 'என் குரு என்னை விட்டுப் பிரிந்து போகிருரே!' என்று இவ்வளவு வருத்தத்திற்கு மனதில் இடம் கொடுத்திருக்க மாட்டீர்கள். 'உங்களுடைய குரு உங்களை விட்டுப் பிரியாமல் உங்களுடனேயே எப்போதும் இருக்கிருர், பிரிவு என்பதே கிடையாது' என்ற உண்மையை அறிந்து கொண்டிருப்பீர்கள். இப்போதாவது அதைத் தெரிந்து கொண்டு வருத்தத்தை விடுங்கள்!''

இந்த உபதேசம் அங்கு அருகில் இருந்து கேட்டவர்கள் அனைவருக்கும் செய்த உபதேசமாகவே அமைந்தது.

ஆழமில்லாத விஷயங்களைப் பற்றி வீண் சந்தேகம் கொண்டு சிலர் ஸ்ரீ ஆசார்யர்களிடம் வந்து தம் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள எண்ணி கேள்விகள் கேட்பதுண்டு. அப்போது அவர் தந்துள்ள பதில்கள் 'சுளீர்' என்று சாட்டையால் அடி கொடுத்தது போல இருந்து விடுவதும் உண்டு என்பதை நாம் படித்து அறிந்து கொண்டுள்ளோம். ஆனுலும் ஒரு மேலெழுந்தவாரியான கேள்விக்கு ஆதிசங்கரர் பரம்பரையில் வந்து அவரிடம் தேவதா விசுவாசம் கொண்டிருந்த ஸ்ரீ ஆசார்யர்களிடமிருந்து வந்த பதிலை யாரும் எதிர்பார்த்திருக்க முடியாதுதான்.

1948 ஆம் ஆண்டில் ஒரு பக்தர் ஸ்ரீ ஆசார்யர்களைத் தரிசித்துவிட்டு, தனக்கு வெகு நாட்களாக ஏற்பட்டிருந்த சந்தேகத்திற்கு விளக்கம் கேட்டார். அவர் வியாபகராகவும் உலக வாழ்க்கையில் நீண்ட அனுபவஸ்தராகவும் இருந்தார் போலும்.

''நான் என் வாழ்நாளில் ஐந்தாறு ஞானிகளைச் சந்தித்துள்ளேன். அதில் ஒருவர் குறுபர் (ஆடு மேய்க்கும்) இனத்தைச் சேர்ந்தவர். இன்னொருவர் முகம்மதியர். வேருருவர் கிறிஸ்தவர். மற்றவர் வைஷ்ணவர். இவர்களில் யாரும் நம் மடத்தின் சிஷ்யர்கள் இல்லை. ஆதிசங்கரரைப் பற்றியோ அவருடைய போதனைகளைப் பற்றியோ அவர்களுக்கு எதுவும்

தெரியாது. ஆனாலும் அத்வைத அனுபவத்தைப் பெற்றவர்களாக வெகு ஆனந்தமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஞானிகள், ஏன் ஜீவன்முக்தர்கள் என்றுகூட நான் சொல்லுவேன். அந்த நிலை அவர்களுக்கு எப்படி ஸாத்தியமாயிற்று என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை...'' என்று இழுத்தார்.

ஸ்ரீ ஆசார்யர்கள் அவரை இடைமறித்து, ''நீங்கள் என்ன கூற வருகிறீர்கள் என்றால் அவர்களில் யாரும் ஆதிசங்கரரின் கிரந்தங்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவர் காட்டிய வழியைப் பின்பற்றவில்லையே, அவர்களுக்கு எப்படி அத்வைத ஞானம் ஏற்பட்டிருக்க முடியும், என்பதுதானே? இதைத் தெரிந்து கொள்ளுங்கள். அத்வைத அனுபவத்தைப் பெறுவதற்கு இன்ன மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும், இந்த ஜாதியில் பிறந்திருக்க வேண்டும், இவ்வளவு பாண்டித்யம் வேண்டும் என்றெல்லாம் அவசியங்கள் இல்லை. அந்த அனுபவம் பகவத்பாதர்களின் சிஷ்யர்களுக்குத்தான் ஏற்பட வேண்டும் என்ற கட்டாயமும் கிடையாது. அத்வைதம் என்பது ஏதோ ஒரு மடத்திற்கு மட்டும் சொந்தமான ஜாகீரும் இல்லை. ஆதிசங்கரரின் காலத்திற்கு முன்பிருந்தே அனாதியாக அது உள்ளது. உண்மையான தகுதியுடையவர்கள் எந்த தேசத்தில் எந்தக் காலத்தில் இருந்தாலும், எந்த மதம், ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அத்வைத ஞானத்தையும் அனுபவத்தையும் பெற்றுவிட முடியும்,'' என்று ஆணித்தரமாகக் கூறினார்.

ஸ்ரீ ஆசார்யர்களை 'அவர் ஞானி, ஜீவன்முக்தர், உலகத்தை மறந்து ஈச்வரனுடன் ஒன்றியிருப்பவர், நடப்பது அனைத்தையும் சாட்சியாக மட்டும் பார்த்துக் கொண்டிருப்பவர்' என்றெல்லாம் பக்தர்களும் அறிஞர்களும் நிறைய வர்ணித்திருக்கிறார்கள். அதெல்லாம் இருக்க 'ஆத்மாநம் மாநுஷம் மன்யே' என்று வால்மீகி முனிவர் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை வர்ணித்திருப்பது போல ஸ்ரீ ஆசார்யர்களும் ஒரு ஒரு சமயத்தில் முற்றிலும் மனுஷ்யராகவே இருந்திருக்கிறார் என்பதற்கும், ஆபத்காலத்தில் எப்படி இன்னொருவரைக் காப்பாற்றுவதற்காக ஓர் உணர்ச்சியுள்ள மனிதராகவே செயல்பட்டிருக்கிறார் என்பதற்கும்கூட ஓர் உண்மைக் கதை இருக்கிறது.

வித்யாரண்யபுரம் சியாமா பட்டரைப் பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டது. அவர் ஸ்ரீ ஆசார்யர்களின் கூடவே இருந்து தினசர்யைகளில் அவருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த இரு ஊழியர்களில் ஒருவர். அவருடைய வீடு வித்யாரண்யபுரம் கிராமத்தில் இருந்தது. நரஸிம்ம வனத்தை வளைத்துக் கொண்டு ஓடும் துங்கா நதியின் மேல்புறத்தில் அந்த கிராமம் இருக்கிறது. மழைக் காலத்திலும் அதற்குப் பிறகு சில மாதங்களும் நதியில் நீர் அதிகமாகவே ஓடிக்கொண்டிருக்கும். அதைக் கடந்து நரஸிம்ம வனத்தை அடைய முதலில் ஒற்றையடிப் பாதை வழியாகவும் வயல் வரப்புகளைக் கடந்தும் சிருங்கேரிக்கு வரவேண்டும். அங்கு மடத்தின் வளாகத்தில் உள்ள ஸ்னை கட்டத்தை அடைந்து அங்கிருந்து சிறு தோணியின் உதவியோடு நதியைக் கடந்து நரஸிம்ம வனத்தை அடைய வேண்டும். வேறுபாதை கிடையாது.

அன்று ஒரு நாள் சியாமா பட்டருக்கு வீட்டை விட்டு பணிக்குச் செல்ல சற்று கால தாமதமாகிவிட்டது. நதியிலும் பிரவாகமாக நீர் ஓடிக் கொண்டிருந்தது. அவர் மடத்தின் படித்துறைக்கு அடைந்து பார்த்தபோது அங்கு வழக்கமாக இருக்கும் இரு தோணிகளில் ஒன்றைக்கூட காணவில்லை. படித்துறையும் வெறிச்சென்று இருந்தது.

'குருக்கள் காத்துக் கொண்டிருப்பாரே!' என்று பரபரப்புடன் இங்கும் அங்கும் ஓடிப் பார்த்தார். குரல் கொடுத்தும் பார்த்தார்.

அந்தச் சமயத்தில் எதிர்க் கரையில் சற்றுக் கீழே இருந்த சந்தியாவந்தன மண்டபத்திற்கு ஸ்ரீ ஆசார்யர்கள் மற்ருெரு ஊழியருடன் வந்து விட்டதைப் பார்த்து விட்டார், அவ்வளவுதான். ஒரு கணமும் யோசனை செய்யாமல் நதியில் குதித்து நீந்தத் தொடங்கிவிட்டார். தெற்கேயிருந்து கிழக்கே திரும்பும் நீரின் வேகமும் அதில் சுழல்களும் அதிகமாகவே இருந்தன. எப்படியோ நதியின் மத்திய பாகம் வரை நீந்திச் சென்றுவிட்டால் பிரவாகத்தோடு மிதந்து போய் சந்தியாவந்தன மண்டபத்தை அடைந்து விடலாம் என்ற குருட்டுத் தைரியம். ஆனால் பிரவாகம் அவரை சந்தியாவந்தன மண்டபத்திற்கு வெகு முன்னாலேயே எதிர் கரைக்கு அருகில் கொண்டு தள்ளிவிட்டது. அங்கு கரை மிகவும் உயரத்தில் இருந்ததால் அதை எட்டிப் பிடிக்க முடியாமல் திணறத் தொடங்கினார்.

அவர் நதியில் குதித்ததிலிருந்து அவரையே மிகவும் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீ ஆசார்யர்கள் பதறிப் போய்விட்டார். தம்முடன் வந்திருந்த இன்னொரு ஊழியரைப் பார்த்து, தம்மையே மறந்தவர் போல உரத்த குரலில் கத்தினர்.

''ஏய்! அதோ பார்! சியாமா வெள்ளத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறன். அவன் உயிருக்கே ஆபத்து. வேகமாக ஓடு. உன் இடுப்பு வேஷ்டியை அவிழ்த்து நன்ருக முறுக்கி அவனிடம் போடு. அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் சொல்லு. உன் பக்கத்து நுனியை நீயும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவனை கரைக்குச் சேர்த்துவிடு. சீக்கிரம் ஓடுடா, ஓடு. ஜாக்கிரதை, ஜாக்கிரதை!'' என்று கத்தினர்.

அதுவரை திக்பிரமையுடன் நின்று கொண்டிருந்த அந்த ஊழியர் உடனே செயல்பட்டார். சியாமா பட்டரை இப்படி ஒரு நீர்க் கண்டத்திலிருந்து காப்பாற்றினர் ஸ்ரீ ஆசார்யர்கள்.

இந்தச் சம்பவம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு அதே சந்தியாவந்தன மண்டபத்திற்கு அருகேதான் ஸ்ரீ ஆசார்யர்கள் நதியின் பிரவாகத்தில் தம் பூத உடலைத் திரஸ்கரித்தார். தம்மைக் காப்பாற்றுவதற்காக அவர் யாரையும் அறைகூவி அழைக்கவில்லை.

ஒரு ஜீவன்முக்த புருஷர் விதேஹமுக்தியடையும் போது எப்படித் தோன்றுவார் என்பதை ஸ்ரீ மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் ஸ்ரீ வியாஸர் வர்ணித்துள்ளார்.

த்ருமம் யதா வாப்யுதகே பதந்தம்
உத்ஸ்ருஜ்ய பக்ஷீ நிபதத்யஸக்த: ।
ததா ஹ்யஸௌ ஸுகது:கே விஹாய
முக்த: பராத்யர்த்தாம் கதிமேத்யலிங்க: ॥

''ஒரு மரம் ஆற்று வெள்ளத்தில் விழுகிறது. அதில் கூடு கட்டி வசித்து வந்த பறவை அந்த மரத்தின் மேல் எந்த பற்றையும் வைக்காமல் மேலே கிளம்பி ஆகாயத்தில் பறந்து சென்று விடுகிறது. அதுபோல முக்த புருஷரும் ஸுகத்தையும் துக்கத்தையும் திரஸ்கரித்து விட்டு எந்தவிதமான அடையாளமும் இல்லாமல் கைவல்யத்தை அடைகிருர்.''

(சாந்தி பர்வம்)

द्रुमं यथा वाप्युदके पतन्तं उत्सृज्य
पक्षी निपतत्यसक्तः ।
तथा हि असौ सुखदुःखे विहाय मुक्तः
परार्ध्यर्थां गतिमेत्यलिङ्गः ॥

ஸ்ரீ ஆசார்யர்களுக்கு பிறவியிலிருந்தே உத்தமமான வைராக்யம் இருந்து வந்திருக்கிறது. பின்னுல் ஸந்யாஸியாகவும் பீடாதிபதியாகவும் ஆனபோது மடத்தின் வைதிக, லௌகிக காரியங்களுக்கு அவருடைய 'அனுமதி' என்ற முத்திரை, அவைகள் நடக்கும்போது அவர் பிரஸந்நமாக இருக்க வேண்டும் என்ற 'நிர்ப்பந்தம்' என்றெல்லாம் வந்தபோது, அதுவரை உள்ளத்திற்குள் உறுதியாக இருந்துவந்த வைராக்யம் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. அதன் ஆழமும் மற்றவர்களுக்குத் தெரியலாயிற்று.

தமக்கும் தமது தேஹத்திற்குமோ, அல்லது தமக்கும் தாம் ஆதிபத்யம் வகிக்கும் மடத்தின் கட்டிடங்கள், தோட்டங்கள், மற்ற சொத்துக்கள் எதற்குமோ எந்தவிதமான ஸம்பந்தத்தையும் அவர் கல்பித்துக் கொண்டதில்லை. அதைப்பற்றி பல பக்தர்கள் கூறியும் எழுதியும் உள்ளார்கள்.

ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் தம் குருநாதரின் உத்தம வைராக்யத்தைப் பற்றி தமக்கே உரித்தான 'யதோக்தி' அலங்கார நடையில் நிறைய பேசியிருக்கிருர்.

''ஒரு பசுவின் சொந்தக்காரன் அதற்கு அலங்காரம் செய்ய எண்ணி அதன் கழுத்தில் அழகிய மணியைக் கட்டி வைப்பான். அது அலங்காரமாக இருக்கிறதா, அழகாக இருக்கிறதா என்று அவ்வப்போது கவலையுடன் பார்த்துக்கொண்டே இருப்பான். கழுத்தில் மணியைக் கட்டிக்கொண்ட பசுவோ அந்த மணியைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கும். அதைப் பற்றி எந்த பிரக்ஞையும் அதற்கு இருக்காது. அதேபோலத் தான் எம் குருநாதர் தம் தேஹத்திடம் எந்தவித பற்றும் இல்லாமல் வாழ்ந்தார்,'' என்று தம் உபந்யாஸம் ஒன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளார்.

''மடத்தின் பொக்கிஷ அறையில் (Safe room) பல மதிப்பு வாய்ந்த பொருள்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். ஸ்ரீ ஆசார்யர்கள் ஒருநாளும் அந்த அறைக்குள் சென்று அவைகளைப் பார்வையிட்டது கிடையாது. யாராவது பேச்சுவாக்கில் அவைகளைப் பற்றிக் கேட்டால், 'அதெல்லாம் புஸ்தகத்தில் இருக்கின்றன,' என்று கூறிவிடுவார். ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தான் ஸர்வாதிகாரியாக இருந்தபோது அவைகளைப் பட்டியலிட்டு ஒரு (நோட்டுப்) புஸ்தகத்தில் தன் கைப்பட எழுதி வைத்திருந்தார். ஸ்ரீ ஆசார்யர்கள் குறிப்பிட்டது அந்த புஸ்தகத்தைத் தான்.

'நீங்கள் அவைகளைப் பார்ப்பீர்களா?' என்று மேலும் கேட்டால் 'நான் அந்தக் காரியத்திலெல்லாம் ஈடுபடக் கூடாது. அதற்கென்று தனி அதிகாரிகள் இருக்கிறார்கள்' என்று கூறி சம்பாஷணையை முடித்து விடுவார்.''

ஸ்ரீ ஆசார்யர்களின் வைராக்யத்திற்கு சான்றாக வேறு ஒரு சம்பவமும் சிருங்கேரியில் கூறப்பட்டது.

அவரைத் தரிசனம் செய்ய பம்பாயிலிருந்து ஒரு தனிகர் வந்திருந்தார். தட்டுத் தட்டாக கற்கண்டு, சர்க்கரை, பழங்கள், தேங்காய்கள் எல்லாவற்றையும் ஸ்ரீ ஆசார்யர்களின் முன்னே வைத்து விட்டு ஒரு தட்டை மிக ஜாக்கிரதையாக அவருக்குச் சற்று அருகாமையில் வைத்து நமஸ்காரங்களைச் செய்தார் அந்தப் பக்தர். அந்தத் தட்டில் உலர்ந்த திராட்சை, முந்திரிப் பருப்பு போன்றவைகளும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வெள்ளைக் காகிதமும் இருந்தன. அந்தக் காகிதம் இரண்டாக மடிக்கப்பட்டிருந்தது.

ஏதோ நினைவில் ஸ்ரீ ஆசார்யர்கள் தம் கையை நீட்டி அந்தக் காகிதத்தை எடுத்துக் கொண்டு ''இது என்ன காகிதம்?'' என்று கேட்டார். ஆனால் பிரித்துப் பார்க்கவில்லை.

அந்தப் பக்தர் ''பம்பாயிலிருந்து வருவதால் காணிக்கைப் பணத்தை ரொக்கமாக எடுத்துவர பயமாக இருந்தது. அதனால் அதை உண்டியலாக (Bank Draft) மாற்றி....'' என்று சொல்லி

வருகையிலேயே ஸ்ரீ ஆசார்யர்களின் கண்டத்திலிருந்து 'ஹா' என்ற சப்தம் பலமாக எழுந்தது. அவருடைய கையிலிருந்த அந்தக் காகிதம் தானுகவே நழுவிக் கீழே விழுந்தது!

ஸ்ரீ ஆசார்யர்கள் தம் தேஹத்திடம் உதாஸீனமாக இருந்தது மட்டுமல்லாமல் அகமுகமாக இருந்த காலங்களில் அதை மறந்துகூட இருந்தார் என்று சொல்லுவார்கள். அதற்கு ஸ்னுனம் ஆயிற்ரு, வஸ்திரத்தால் மூடப்பட்டிருக்கிறதா, பஸ்மதாரணம் செய்யப்பட்டதா என்பதெல்லாம்கூடத் தெரியாமல் இருந்திருக்கிருர். ஸ்ரீ ஸதாசிவேந்திரர் போலவே இருந்தார் என்றுகூட சொல்லுவார்கள்.

ஒரு நாள் நடுப்பகலில் துங்கையில் ஸ்னுனம் செய்து படியேறி வரும்போது மேல் படியில் கைகூப்பி காத்துக் கொண்டிருந்த ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யரைப் பார்த்து ''இப்போதுதான் இந்த தேகத்திற்கு ஸ்னுனம் ஆகி சுத்தமாயிற்று. அதற்குள் வியர்த்து அசுத்தமாகவும் ஆகிவிட்டது'' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார் என்று அய்யர் சொல்லுவார்.

மற்ருெரு சமயம்; நாட்கணக்கில் அகமுக நிலேயில், ஒருவர் கண்ணிலும் படாமல் இருந்த ஸ்ரீ ஆசார்யர்கள் திடீரென்று வெளியே வந்து முட்கள் நிறைந்த காட்டுப் பிரதேசத்தை நோக்கி வேகமாக ஓட்டமும் நடையுமாக செல்லத் தொடங்கினுர். அவரைப் பாதுகாத்து வந்த சிப்பந்திகளுக்கு அவரைத் தடுக்க பயமாக இருந்தது. அதனுல் அவர்கள் உடனே ஓடிப்போய் இளேய ஸ்வாமிகள் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தரிடம் சொன்னுர்கள். இளேஞரான அவர் உடனே ஸ்ரீ ஆசார்யர்களின் வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு அவரைப் பின்தொடர்ந்து வேகமாக ஓடி, அவர் முன்னே போய் நின்றுகொண்டு தலேயைக் குனிந்துகொண்டு வஸ்திரத்தை அவரிடம் நீட்டினுர்.

தம் இளங்கன்றைக் கண்ட பசுபோல ஸ்ரீ ஆசார்யர்கள் சட்டென்று நின்று, அந்த வஸ்திரத்தை வாங்கி தம் உடலின்மேல் சுற்றிக் கொண்டார். நாட்கணக்காக மௌனத்தை அவலம்பித்து வந்தவர் உடனே வாய் திறந்து ''ஸ்வாமிகளே, இந்த வெய்யிலிலும் முள்ளிலும் காலில் பாதரக்ஷைகூட அணியாமல் இப்படி ஓடிவரலாமா?'' என்று பரிவுடன் கேட்டாராம்.

ஸ்ரீ ஆசார்யர்கள் பலமுறை ஆஸ்தான பண்டிதர் ஸ்ரீ ராமசந்திர சாஸ்திரிகளிடம் ''நான் தேஹத்தைத் துறக்கும்போது, காசியில் ஸந்யாஸிகளின் தேஹங்களை எப்படி கங்கையில் எறிந்து விடுகிறார்களோ, அதுபோல இந்த தேஹத்தையும் நதியில் போட்டு விடுங்கள். ஏதாவது உயிருள்ள பிராணிகளுக்கு அது ஆகாரமாக உபயோகப்படட்டும்'' என்று கூறுவதுண்டு என்று ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் சொல்லியிருக்கிறார்.

சிருங்கேரியிலேயே ஸ்ரீ ஆசார்யர்களின் ஸந்நிதியிலேயே துரீய ஆசிரமத்தை விதிவத்தாக மேற்கொண்ட ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் ஸந்யாஸ தர்மத்தை அதற்குரிய கடுமையான நிபந்தனைகளின்படி அனுஷ்டித்தவர். அப்யாஸ நிலையையெல்லாம் தாண்டி இனிமேல் சரீரத்தை ஸாதனமாக வைத்துக்கொண்டு ஸாதிப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை வந்தபோது, ஏகாந்த வாஸத்தை நாடி தமிழ்நாட்டில் கொல்லிமலை என்ற ககனமான அரண்ய பிரதேசத்திற்கு போய்ச் சேர்ந்தார்.

அங்கே ப்ரணவ த்யானத்தை மட்டும் செய்துகொண்டு 'அஜகர விருத்தி'யாக யாராவது எப்போதாவது தானாகவே கொண்டு கொடுத்தால் மட்டும் பிக்ஷை என்ற ஸங்கல்பத்துடன் இருக்கத் தொடங்கினார்.

'தனிமை, குளிர்ந்த காட்டாற்று நீரில் த்ரிகால ஸ்னானம், ஸரிவர ஆகாரமின்மை இவைகளுடன் மலேஜ்வரமும் சேர்ந்துகொள்ள அவர் உடல் தளர்ச்சியடையத் தொடங்கியது. அங்கிருந்த வனவாசிகள் அவரிடம் பக்தி கொண்டிருந்தார்கள். அவர்களிடம் தனக்கு ஸித்தியேற்பட்டால் தான் விட்டுச் செல்லும் தேஹத்தை வனமிருகங்களுக்கு ஆகாரமாக போட்டு விடலாம் என்றும் இல்லாவிட்டால் அவர்களே ஒரு குழியைத் தோண்டி மண்ணுக்குள் அதைப் புதைத்து விடலாம் என்றும் சொல்லியிருந்தார். அவருடைய தேஹஸ்திதியைப் பற்றிய தகவல் திருநெல்வேலியில் இருந்த ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு (பின்னாள் ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள்) எப்படியோ போய்ச் சேர்ந்தபோது அவர் மிகவும் கவலையுற்று உடனே புறப்பட்டு வந்து பிரயாசையுடன் மலையேறி ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசனம் செய்தார்.

''இனி தாங்கள் இந்த மலைக் காட்டுக்குள் தனியாக இருக்கக் கூடாது. மலையடிவாரத்தில் வந்து தங்க வேண்டும்'' என்று பிரார்த்தனையும் செய்து கொண்டார். ஸ்ரீ ராமாநந்தர் அதை ஏற்க மறுத்து, ''இனிமேல் மலையை விட்டு கீழே இறங்கும் உத்தேசமில்லை. ஒருவேளை எனக்கு பிரக்ஞாபங்கம் ஏற்பட்டு விட்டாலோ அல்லது ஸித்தியே அடைந்து தேஹத்தைத் துறந்து விட்டாலோ அப்போது உங்கள் இஷ்டம் போல செய்து கொள்ளலாம்'' என்று சொல்லி கிருஷ்ணஸ்வாமி அய்யரை திருப்பி அனுப்பிவிட்டார்.

ஊருக்குத் திரும்பிய கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்வாமிகளின் கடைசி காலத்தில் உடனிருந்து அவருக்கு ஸேவை செய்யும் பாக்யம் மட்டுமல்லாமல் ஸித்திக்குப் பிறகு தான் செய்ய வேண்டிய 'கடைசி' கைங்கர்ய பாக்கியம்கூட தனக்கு லபிக்காது போலிருக்கிறதே என்று அதைர்யமடைந்து வருத்தத்தில் ஆழ்ந்தார். தன் மனோநிலையை ஸ்ரீ ஆசார்யர்களுக்கு தெரிவிக்க நினைத்து சிருங்கேரியிலிருந்த ஸ்ரீ ஆசார்யர்களுக்கு ஒரு நீண்ட லிகிதம் எழுதி பிரார்த்தனை செய்தார். அந்தக் கடிதத்திற்கு ஸ்ரீ ஆசார்யர்களிடமிருந்து வந்த பதிலில் சாஸ்திரத்தின் நிலை எப்படியிருக்கிறது என்று விளக்கப்பட்டிருந்தது.

''ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் தற்காலத் தீர்மானம் அவருடைய ஆசிரமத்திற்கும் ஸங்கல்பத்திற்கும் சரியானதாகத்தான் இருக்கிறது. ஸந்யாஸம் செய்யும் காலத்திலேயே அவர் 'தனக்கு ஒருவரும் இல்லை என்றும் தானும் ஒருவருக்கும் (சொந்தம்) இல்லை என்றும் அதனால் தன் சரீரத்தின் மேல் உள்ள அபிமானத்தை யாவரும் விட்டுவிட வேண்டியது' என்றும் மஹாஜனங்களின் முன் சொல்லியிருக்கிறார். அப்போது சொன்ன அந்த சப்தங்களின் அர்த்தப்ராப்தி காலம் இப்போது வந்துள்ளது என்று நிச்சயித்துக் கொண்டு, அவருடைய ஸ்தூல சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் அபிமானத்தை விட்டு விடுவதுதான் முறை.''

''தர்ம சாஸ்திரங்களையும் பெரியவர்களின் ஆசாரத்தையும் விசாரிக்கும்போது ஸ்ரீ ஸ்வாமிகள் மலைமேல் ஸித்தியடைந்தால் அந்தக் களேபரத்தைப் பார்த்தவர்கள் அங்கேயே பூமியில் அதை லௌகிகமாக அடக்கம் செய்துவிடலாம். அப்படி யாரும்

பார்க்காமல் வனமிருகங்கள் சாப்பிட்டு விட்டுப் போனாலும் அதுவும் சாஸ்திரீயமே. ஒருவேளை சிரத்தையுள்ளவர்கள் யாராவது அங்கு இருந்தால் அவர்கள் அதை மலையிலிருந்து கீழே கொண்டுவந்து ஸமந்த்ரகமாகவோ அல்லது மந்திரம் எதுவும் இல்லாமலோ பூமியில் அடக்கம் செய்துவிடலாம். அதற்காக நீங்கள் சிரமப்பட்டுக் கொண்டு அவ்விடம் போகவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை.''

இப்படி ஸ்ரீ ஆசார்யர்கள் எழுதியிருந்தார்.

ஸ்ரீ ஆசார்யர்களைப் பற்றி பிறர் சொல்லச் சொல்ல கேட்டுக் கொண்டே இருக்கலாம். எழுத எழுத படித்துக் கொண்டே இருக்கலாம்.

ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் ஆசார்யர்களுடைய சரிதத்தை காவ்யமாக எழுதிவிட்டு அதற்கு 'ஸ்ரீ ஜகத்குரு சரிதாம்ருதம்' என்று பெயரிட்டார்.

அமிருதத்தின் ஒரு திவலையைப் பருகினாலும் அது உதரத்தையும் உள்ளத்தையும் நிரப்பி அமரத்துவத்தைக் கொடுத்துவிடும். ஆனால் அதே சமயம் 'இன்னும் கொஞ்சம் அருந்தமாட்டோமா?' என்ற ஆவலும் (நம் அக்ஞானத்தால்) நம்மிடம் எழும் அல்லவா?

ஸ்ரீ ஆசார்யர்களைப் பற்றிய க்ஷணநேர ஸ்மரணம்கூட நம் உள்ளத்தைத் தூய்மையாக்கிவிடும். அப்படியிருக்க அவருடைய பெருமைகளைப் பற்றி பிறர் சொல்ல ஸதா அவைகளைக் கேட்டுக் கொண்டும் கீர்த்தனம் செய்து கொண்டும் இருந்தோமானால் நமக்கு பரம சிரேயஸ் உண்டாகும் என்று சொல்லவும் வேண்டுமோ!

ஸர்வக்ஞரான ஸ்ரீ ஆசார்யர்களை ஸ்மரித்து நாம் என்ன பிரார்த்தனை செய்துகொள்ள வேண்டும் என்பதை நம் குருநாதர் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் நமக்கு உபதேசித்திருக்கிறார்.

''நம் குருவிடம் 'இது வேண்டும், அது வேண்டும்' என்று ஏதாவது கேட்க வேண்டும் என்பது தேவையேயில்லை. அவருடைய கடாக்ஷம் நம் மீது விழுந்தாலே போதும். 'இந்த மனிதன்

நல்லவனுகட்டும்' என்று மனதில் நினைத்து நம்மை ஆசீர்வதித்தால் அதுவே போதும். அதனுல் நமக்கு அமோகமான பலன்கள் கிடைத்து சிரேயோபிவிருத்தியும் ஏற்படும்.''

''நமது குரு ஸர்வக்ஞர். பரம கருணமூர்த்தி. இல்லாததையெல்லாம் கொடுப்பவர். இருப்பதையெல்லாம் காப்பவர். அங்கு, இங்கு என்றும் எல்லாப் பொருட்களிலும் உள்ளேயும் வெளியேயும் வியாபித்து இருப்பவர். ஆகையால் அவருடைய ஸந்நிதியில் நிற்கும்போது 'நீங்கள்தான் என் உள்ளே இருக்கும் ஆத்மா' என்ற சிந்தனே மட்டும் நமக்கு ஏற்படட்டும்.''

இதுவே ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தரின் உபதேசம். அப்படியே நாம் பிரார்த்தித்துக் கொண்டு மேன்மையடைவோம்.

ஸ்ரீ குரு கிருபா விலாஸம்

ஸ்ரீ குருபாதசேகரன்

சிருங்கேரி ஸம்ஸ்தானம் 34வது பட்டம் ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சந்த்ரசேகர பாரதீ மஹா ஸந்நிதானம் அவர்கள் ஓர் பெரிய சித்த புருஷர் என்பதை யாவரும் அறிவர். அவர்கள் பல அற்புதங்களைத் தமது தபோபலத்தால் செய்து காட்டியிருக்கின்றார். ஆச்ரிதர்களை ஈர்க்கும் சக்தி எவ்வளவு தீக்ஷண்யமாக இருந்ததோ அதுபோன்றே இயற்கை சக்திகளை தம் வயப்படுத்தித் தனது கட்டளையை நிறைவேற்ற வைக்கும் உயரிய ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அடியேனின் அனுபவத்தில் கண்ட ஒரு ஸம்பவத்தைத் கூற ஆசைப்படுகின்றேன்.

அது நடந்தது 1925ம் ஆண்டில் என்று ஞாபகம். எனக்கு வயது 29. வழக்கறிஞனாகப் பதிவு செய்து கொண்ட புதிது. சென்னைக்கு தொழில் முறையில் சென்று திரும்பும்போது எழும்பூர் ஸ்டேஷனில் 2வது கிளாஸ் ரயில் பெட்டியில் ஓர் இடம் எனக்காக ரிஸர்வு செய்யப்பட்டிருந்தது. வண்டி புறப்பட ஐந்து நிமிஷங்களுக்கு முன்னால் ஓர் அந்தணப் பெரியார் அப்பெட்டியில் ஏற வந்தார். அவருக்கு மேல் படுக்கையில் ரிஸர்வு ஆகியிருந்தது. அவரைப் பார்த்ததும் எனக்கு அவர் மீது ஓர் மதிப்பும் மரியாதையும் தோன்றியது. ஆகவே அவருடைய வயதையும் அந்தஸ்தையும் நினைத்து என்னுடைய கீழ்ப் படுக்கையை அவருக்குக் கொடுத்துவிட்டு நான் மேலே ஏறிக்கொள்ள இஷ்டப்பட்டேன். அவர்களிடமும் இதைத் தெரிவித்தேன். அவர்களும் இசைந்தார்கள். பின்பு எங்களுக்குள் ஸம்பாஷணை ஆரம்பித்தது. அவர்கள் தாம் சிருங்கேரி ஸம்ஸ்தான ஸர்வாதிகாரி (ஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்) என்றும், மதுரைக்குப் போவதாயும் கூறினார்கள். சிருங்கேரி ஸம்ஸ்தான மஹா ஸன்னிதானம் இராமநாதபுரம் ஜில்லாவில் சஞ்சாரம் செய்து கொண்டிருப்பதாகவும், மதுரை ஜில்லாவிற்குள் வாகனங்கள் முதலியவை வருவதற்குக்

கலெக்டரிடம் லைசென்ஸ் வாங்குவதற்காகச் செல்வதாகவும் அறிவித்தார்கள். அதோடு மஹா ஸந்நிதானம் மதுரை ஜில்லாவுக்குள் வருவதற்கு ஏறக்குறைய ஒரு மாத காலமாகும் என்றார்கள். அப்பொழுது ''ஒரு மாதத்திற்குப் பின் வரப்போவதற்கு இப்பொழுதே போவானேன்'' என்று அவரைக் கேட்டேன். அவர்கள் ''ஜில்லா கலெக்டர் உத்தரவுக்கு எழுதிப் போட்டால் ஒருமாதம் கழித்துத்தான் உத்தரவு கைக்கு வரும்'' என்று பதில் கூறினார். நான் ''ஒரு மாதமா? ஒரு மணி நேரத்தில் வாங்கி விடலாம்'' என்று கூற அவர்களுக்கு ஆச்சர்யமாகிவிட்டது. இந்தக் காரியத்தை நான் கூட இருந்து முடித்துக் கொடுப்பதாகக் கூறினேன். பின்பு அவர் ''நீங்கள் ஜகத்குரு ஸந்நிதானங்களை தரிசித்திருக்கி நீர்களா?'' என்று கேட்டார். நான் ''என்னைப் போன்ற பிராம்மணரல்லாதாருக்கு அந்தப் பிராப்தி ஏது? பிராம்மணர்கள் தானே அனுமதிக்கப்படுவார்கள்?'' என்றேன். உடனே ஸர்வாதிகாரியவர்கள் ''சிருங்கேரி ஜகத்குருக்கள் அத்தகைய-வர்களல்ல. அவர்கள் யாருக்கும் எளிதில் தரிசனம் கொடுப்-பார்கள். இப்பொழுது மஹாஸந்நிதானம் தேவகோட்டையில் முகாம் செய்திருக்கிறார்கள். நாம் மதுரையில் வேலையை முடித்துக் கொண்டபின் நீங்கள் தேவகோட்டைக்கு வாருங்கள், நான் கூட இருந்து தரிசனம் செய்து வைக்கிறேன்'' என்றார். அவ்வண்ணமே இருவரும் மதுரையில் இறங்கி னோம். நான் என் இல்லத்துக்குச் சென்றேன். அவர் என் விலாஸத்தை வாங்கிக் கொண்டு சரியாக 10 மணிக்கு வந்து என்னை சந்திப்பதாயும், கலெக்டர் ஆபீஸுக்குப் போக வேண்டும் என்றும் திட்டம் வகுத்துக் கொண்டு ரயில் நிலையத்தில் பிரிந்தோம். அக்காலத்தில் மிக பிரபலமாக இருந்த வழக்கறிஞர் N.நடேசய்யர் க்ருஹத்திலிருந்து அவருக்குக் கார் வந்திருந்தது, அதில் அவர் சென்றார். நான் என் இல்லம் சென்றேன்.

என்னோடு என் இளைய சகோதரன் P.K.ஞானசுந்தரம் வசித்து வந்தார். அவர் அப்பொழுது கலெக்டர் ஆபீஸில் வெர்னாக்குலர் ஹெட்கிளார்க் என்ற உத்யோகத்தில்

இருந்தார். நாங்கள் கோரிய லைசென்ஸ் விஷயம் அவருடைய இலாகாவில்தான் ஆக வேண்டியிருந்தது. அவரிடத்தில் நான் ஸர்வாதிகாரியவர்கள் சொன்னவற்றைக் கூறினேன். அவரும் நான் சொன்னபடியே ஒரு மணி நேரத்தில் வாங்கிவிடலாம் என்றார். என் தம்பியைப் பற்றி ஒரு வார்த்தை. இவர்தான் பின்னால் சென்னையில் செக்ரடேரியட்டில் ரிவின்யு அஸிஸ்டென்ட் செக்ரட்டரியாகி பின்பு செர்விஸ் கமிஷன் செக்ரட்டரியாகி, மெம்பராகி செர்விஸ் கமிஷன் சேர்மனும் ஆனார். சென்னை அடையாற்றில் ஸ்ரீஅனந்த பத்மநாப ஸ்வாமி ஆலயம் நிர்மாணம் செய்வதற்கு உடனிருந்து உதவி செய்ததோடு 12.3.62ல் நடந்த கும்பாபிஷேகத்திலும் பங்கெடுத்துக் கொண்டவர். அந்த கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தியருளினவர்கள் சிருங்கேரி ஜகத்குரு ஆசார்யாள் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் என்பது யாவரும் நன்கறிந்ததே. சிருங்கேரியில் வெளியான கும்பாபிஷேக மலரில் என் தம்பி மஹா ஸ்வாமிகளிடம் ஆசிபெறும் படம் வெளியாகியிருக்கின்றது.

நிற்க, மதுரையில் அன்று காலை 10 மணிக்கு வக்கீல் நடேசய்யரின் காரில் ஸர்வாதிகாரியவர்கள் என் இல்லத்துக்கு வந்தார்கள். நாங்கள் இருவரும் கலெக்டராபீஸுக்குப் போனோம். என் தம்பியிடம் அவர்களை அறிமுகப்படுத்தினேன். அவர்களிடம் சில பேப்பர்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு எங்களை அங்கேயே உட்காரச் சொல்லிவிட்டு என் தம்பியே சென்று அவர் சொன்னபடியே ஒரு மணி நேரத்துக்கு முன்பே உத்தரவு, டைப் செய்த நகல், கலெக்டர் கையெழுத்து சஹிதம் வந்துவிட்டார். ஸர்வாதிகாரியவர்கள் அடைந்த ஆச்சர்யத்துக்கு அளவேயில்லை. உத்தரவைப் பெற்றுக் கொண்டு ஸர்வாதிகாரியவர்கள் தேவகோட்டைக்குப் புறப்பட்டார்கள். புறப்படுமுன் அடுத்து வருகிற ஞாயிற்றுக்கிழமை நான் தேவகோட்டை வரும்படி ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார்கள்.

அவ்வாறே ஞாயிற்றுக்கிழமை காலையில் பஸ் ஏறி

தேவகோட்டை சென்றேன். அங்கு சேரும்போது மத்யானம் 12 மணியிருக்கும். பூஜை முடிந்து தீர்த்தம் கொடுத்துக் கொண்டிருந்த சமயம். பெருங்கூட்டம். நான் தற்கால நாகரீக உடையில் சட்டையணிந்து சென்றிருந்தேன். அங்கு இருந்த பெரும்பான்மை மக்கள் பிராம்மணர்கள். கூட்டத்தின் வெளி ஓரங்களில் சில நகரத்தார் தீர்த்தம் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்தனர். பிரம்மாண்டமான பந்தல் போடப் பட்டிருந்தது. நான் கூட்டத்தின் வெளியே ஓர் பந்தல்கால் ஓரமாக நின்று கொண்டிருந்தேன். நான் நின்ற இடத்துக்கும் ஸ்வாமிகள் இருந்த இடத்துக்கும் சுமார் 200 கஜ தூரத்துக்குமேலிருக்கும். எங்கிருந்தோ ஸர்வாதிகாரியவர்கள் என்னைப் பார்த்துவிட்டு என்பக்கலில் வந்து ''எப்பொழுது வந்தாய்? சாப்பிட்டு விட்டாயா?'' என்று இரண்டு கேள்விகளையும் கேட்டார். நான் பதில் சொன்னதும், ''சற்றுப் பொறு, இந்தக் கூட்டம் இப்பொழுது சமாராதனைக்குப் போய்விடும். ஸ்வாமிகள் ஏகாந்தமாக இருப்பார் உனக்கு தரிசனம் செய்து வைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நான் அந்த இடத்திலிருந்தே ஸ்வாமிகள் பக்தகோடி களுக்கு தீர்த்தப் பிரசாதம் சாதிப்பதைப் பார்த்துக் கொண்டே யிருந்தேன். அவர்களுடைய முகமண்டலத்தைப் பார்க்கப் பார்க்க என் உள்ளத்தில் ஓர்வகை ஈர்ப்பு ஏற்பட்டது. இரும்புக்கு உணர்ச்சியிருந்தால் காந்தத்தின் முன்பு இப்படித் தான் ஈர்க்கப்பட்டு நின்றிருக்கும். வைத்த கண்ணை திருப்பி வாங்க முடியாமல் அந்த திவ்ய தேஜோமயமான திருவுருவத் தையே பார்த்துக் கொண்டிருந்தேன். என் ஜன்மத்தில் அன்று ஓர் குறிக்கத்தகுந்த சுபதினம் என்று கருதினேன். மஹா ஸ்வாமிகள் ஒவ்வொருவருக்கும் தீர்த்த பிரஸாதம் வழங்கும் போது புன்முறுவலுடன் வழங்குவார். சிலரிடம் ஏதோ இரண்டொரு வார்த்தைகளும் சொல்லுவார். ஆனால் பெரும்பாலும் மௌனம்தான். ஒருவழியாக தீர்த்தம் வழங்கி முடிந்தது. உள்ளே சென்றுவிட்டார்கள்.

ஸ்வாமிகள் இறங்கியிருந்தது ஓர் செட்டியார் வீடு. மிக நீளமும் விசாலமுமான திண்ணைகள் அடுக்கடுக்காய் கீழ் ஒன்றும் மேல் ஒன்றுமாக இரண்டு திண்ணைகள் இருந்தன. மேல் திண்ணையில் பூஜா மூர்த்திகள் வெள்ளிச்சப்பரத்தில் எழுந்தருளப் பெற்றிருந்தன. திண்ணைகளில் ஏறுவதற்கு தெற்குப்புறம் ஒன்றும் வடக்குப்புறம் ஒன்றுமாக இரண்டு படிக்கட்டுகள் ஐந்து ஐந்து படிகள் கொண்டதாக இருந்தன. கீழ் திண்ணைக்கும் மேல் திண்ணைக்கும் சுமார் 3 அடி உயரமிருக்கும். தரை மட்டத்துக்கும் கீழ் திண்ணைக்கும் சுமார் 3 அடி தூரம் இருக்கும். மேல் திண்ணையின் தெற்குக்கோடியில் அமைக்கப்பட்ட ஆசனத்தில் ஆசார்யாள் அமர்ந்திருந்தார்கள். பந்தலில் யாரும் இல்லை. நான் நின்ற இடத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தேன்.

திண்ணையின் மீது ஸர்வாதிகாரிகள் தோன்றி என்னை வரும்படி கைஜாடை செய்தார்கள். என் உள்ளத்தில் அப்பொழுது இன்னதென்று விவரிக்க முடியாத உணர்ச்சி தோன்றியது. சமீபத்தில் சென்றேன். கீழ் திண்ணையில் ஏறி ஸ்வாமிகளின் முன்னால் சென்று மும்முறை நமஸ்கரித்தேன். ஸர்வாதிகாரியவர்கள் கன்னட பாஷையில் 'இவர்தான் நான் சொன்ன மதுரை வக்கீல். லைசென்ஸ் வாங்கித் தந்தாரே அவர்' என்றார். அப்பொழுது தான் மஹா ஸன்னிதானங்களின் பூர்ண அனுக்ரஹ வீக்ஷண்யம் என்மீது பட்டது. பாலைவனத்-தில் இருப்பவனுக்கு குளிர்ந்த காற்றுப்போலும், தாகமெடுத்த வனுக்கு குளிர்ந்த பானகம் போலும் இருந்தது. என்ன தேஜஸ்! என்ன முகம் அது! என்ன அருள் ஒழுகும் பார்வை! என்ன புன்சிரிப்பு! என்ன சாந்தம்!

அப்பரடிகள் சிதம்பரம் நடராஜர் ஸன்னிதியில் நின்று தரிசித்தபோது அப்பனின் அபயஹஸ்தத்தைப் பார்த்து, ''என்று வந்தாய் என்னும் திருகுறிப்பே'' என்று கேட்பதுபோல் இருந்ததாகப் பாடுகின்றார். அப்படித்தான் இருந்தது ஸ்வாமிகள் தனது கையைத் தூக்கி மௌனமாக ஆசீர்வாதம் செய்தது. பின்பு மெதுவான குரலில் தமிழில்

''சாப்பிட்டாச்சா?'' என்றார்கள். வெகு ஆண்டுகள் கழித்து இந்தக் கேள்வியை நினைக்கும் போதெல்லாம் சுவாமிகள் எதைக் கேட்டார்கள் என்று ஆலோசிப்பதுண்டு. வயிற்றுப் பசியைத்தான் கேட்டதாக நினைத்துக் கொண்டு ''ஆச்சு'' என்று அன்று சொன்னேன். புன்முறுவல் பூத்தார்கள். தன்னைத் தரிசித்த மாத்திரத்தில் ''உள்ளப்பசி'' தீர்ந்துவிட்டதா என்று நினைத்துக் கேட்டார்களோ என்று பிற்காலத்தில் எண்ணியதுண்டு.

ஸர்வாதிகாரிகள் உள்ளே சென்று திரும்பவும் வந்தார். ஸ்வாமிகளை அணுகிச் சொல்லலுற்றார். அவர் கன்னடத்தில் பேசினாலும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ''நமது முகாமை மாற்றிக்கொண்டால் தேவலை; லைசென்ஸ்தான் கிடைத்துவிட்டதே! குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகவே மதுரை ஜில்லாவில் பிரவேசித்துவிடலாம். ஏனெனில் இந்தப் பக்கங்களில் மழை பெய்து 5, 6 ஆண்டுகள் ஆகின்றனவாம். கிணறுகளில் ஜலமே கிடையாது. 3, 4 மைல்கள் போய் ஆற்றில் ஊற்றுத் தோண்டி யானைகளின் மீது தண்ணீர் கொண்டு வரவேண்டியிருக்கிறது. தண்ணீர் வண்டிகளிலும் கொண்டு வரப்படுகின்றது. மக்கள் திறளோ அதிகம். தினப்படி ஸமாராதனைக்கு 1000 பேருக்குமேல் கூடுகிறார் கள். ஜல கஷ்டத்தில் இந்த கூட்டத்தை சமாளிப்பது சிரமமாக இருக்கிறது'' - இதுதான் அவர் சொன்னதன் ஸாராம்சம்.

ஸந்நிதானம் அவர்கள் இரண்டு விநாடி யோசனை செய்தது போலிருந்தார். பின்பு அவரது திருவாயிலிருந்து வந்த மொழிகளின் சுருக்கமாவது, ''ஏன் ஒருவரும் என்னிடம் முன்பே சொல்லவில்லை? வராமலே இருந்திருக்கலாம். வந்தபின் நாட்களைச் சுருக்கிக் கொண்டு போனால் ஜனங்களுக்கு ஏமாற்றமாக இராதா? உக்ராணத்தில் யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டார். அதிகாரி ''கிருஷ்ண சாஸ்திரிகள் இருக்கிறார்'' என்றார். ''அவரை விராடபர்வ புஸ்தகம் எடுத்துக் கொண்டு தேங்காய் பழம் தாம்பூலம் கற்பூரத்தோடு வரச்சொல்லுங்கள்'' என்றார்கள். ஸர்வாதிகாரி

உள்ளே சென்றார். சில வினாடிகளில் சாஸ்திரிகள் ஒருவர் கேட்டபடி சாமக்கிரிகைகளுடன் வந்து சேர்ந்தார். பூஜா பீடத்துக்கு முன் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஸ்வாமிகள் சாஸ்திரிகளை விராடபர்வம் வாசிக்கச் சொன்னார். அவர் யதோக்தமாய் கணபதி வணக்கம், சங்கல்பம், நியாஸம் இவற்றோடு முறைப்படி வாசிக்க ஆரம்பித்தார்.

மஹா ஸன்னிதானம் தமது கைகளை பின்னால் கட்டிக் கொண்டு மேல் திண்ணையின் தெற்குக் கோடியிலிருந்து வடக்குக் கோடிக்கு ''உலாத்த'' ஆரம்பித்தார். அதன் நீளம் சுமார் 50 அடி இருக்கும். அப்பொழுது மத்யானம் 1 மணி என்று ஞாபகம். ஸர்வாதிகாரியும் உள்ளே சென்றுவிட்டார்கள். நான் கீழ்திண்ணையில் நின்றவன்தான். ஸர்வாதிகாரியும் மஹா ஸன்னிதானமும் நான் இருப்பதையே மறந்து விட்டதாகத் தோன்றியது. எனக்கு மட்டும் ஏதோ ஓர் அற்புதம் நிகழப் போகின்றது என்று மட்டும் உள்ளுணர்வில் தோன்றிக் கொண்டேயிருந்தது. அதைவிட்டு வரவும் விரும்பவில்லை. வரவும் முடியாது. மஹா ஸன்னிதானங்களின் உத்தரவு பெற்றல்லவா அதைவிட்டு வரவேண்டும்? ஆக நின்ற இடத்திலேயே நின்றேன். நல்ல வெயில். நான் நின்ற இடமும், வெளிப்பந்தலும் சற்று குளுமையாக இருந்தாலும் ஓர்வகை 'புழுக்கம்' என்பார்களே அப்படியிருந்தது. ஸ்வாமிகள் தன்னுடைய 'உலாவுதலை' நிறுத்தவேயில்லை. கூர்மையாக கவனித்தபோது அவரது திருவாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. வெளி வ்யாபகங்கள் அனைத்தையும் மறந்து இருந்தார்கள். முகத்தில் முன்னிலும் அதிகமான பிரகாசம் தோன்றியது போல் எனக்குப்பட்டது. மணி இரண்டு ஆனது. மேகம் சூரியனை மறைத்தது. கருமேகத்தால் வானமே இருண்டுவிட்டது. ஓர் குளிர் காற்று வீசியது. மழை வர்ஷிக்க ஆரம்பித்தது. மழையல்ல. யாரோ பலர் வானத்திலிருந்து குடம் குடமாகக் கொட்டுவது போன்ற வர்ஷம். 'சந்ததாரை' என்று சொல்வார்களே அப்படி. ஒரு காக்காய் கூடப் பறக்கவில்லை. மழை சப்தத்தைத் தவிர வேறு சத்தமே இல்லை.

மழை ஆரம்பித்து இரண்டு மணி நேரத்திற்குப்பின் அதாவது 4.30 மணிக்கு உள்ளிருந்து ஸர்வாதிகாரி வந்தார். அவர் முகத்தில் ஓர் புன்முறுவல், ஓர் நன்றிப்பார்வை, ஒரு பெருமிதம், ஒரு சந்தோஷம். அவர் வந்து நின்றார். அப்போதுதான் மஹா சன்னிதானம் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தார்கள். புன்முறுவல் பூத்தார்கள். ''மழை போதுமா?'' என்றார்கள். ''யதேஷ்டம்'' என்று பதில் வந்தது. ''கற்பூரத்தை ஏற்றச் சொல்'' என்றார்கள். மணி 5. சாஸ்திரிகள் தேங்காயை உடைத்து கற்பூரத்தை ஏற்றினார். மழை சட்டென்று ஏதோ ஒரு ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு நிற்பது போல நின்றது. மழை ஆரம்பத்தைக் காட்டிலும் நின்றதே ஓர் மஹத்தான அற்புதமாக இருந்தது.

ஸங்கல்ப மாத்திரத்தில் ஸித்த புருஷர்கள் இயற்கை சக்திகளை வசப்படுத்த முடியும் என்று நாம் படிக்கும் வாசகங்களின் உண்மையை அன்று நேரில் உணர்ந்தேன். என் உடம்பு சிலிர்த்தது. கண்களில் நீர் மல்கியது. மறுபடியும் மறுபடியும் வீழ்ந்து வணங்கினேன். ஸ்வாமிகள் கை ஜாடையால் செய்த ஆசீர்வாதமும், புன்முறுவலோடு அடியேனைப் பார்த்த வீக்ஷண்யமும் இன்றும் என் மனதை விட்டகலவில்லை. ஸ்வாமிகளிடம் ஸர்வாதிகாரி ஏதோ கன்னடத்தில் தெரிவித்துவிட்டு என்னிடம் வந்தார்கள். என்னைக் கூட்டிக் கொண்டு வெளிப்பந்தலுக்கு வந்து, ''இன்று இங்கு தங்கி பூஜையைப் பார்த்துவிட்டு நாளை போகலாம். இது ஸ்வாமிகளின் ஆக்ஞை'' என்றார். சரியென்றேன். அன்று இரவு அவ்வூரிலேயே தங்கினேன். இரவு சந்திரமௌளீச்வரர் பூஜையை வெகு தொலை-விலிருந்தே தரிசித்தேன்.

மறுநாள் விடிந்தது. ஆம் எனக்கும் அன்றுதான் விடிந்தது. எழுந்து ஸ்நானம் செய்து கடையில் புதிதாக வேஷ்டி, துண்டு எல்லாம் வாங்கி உடுத்தி, விபூதியிட்டுக் கொண்டு சென்றேன். மத்யான பூஜை முன் தினம்போல் நடந்தது. ஆனால் பூஜையை சாஸ்திரிகள்தான் செய்தார். தீர்த்தம்

கொடுக்கும் சமயம்தான் மஹா சன்னிதானம் வெளியில் வந்தார்கள். முன்தினம் போலவே தீர்த்தம் வாங்கிக் கொண்டு ஜனங்கள் யாவரும் போய்விட்டார்கள். ஸர்வாதிகாரி என்னைக் கூப்பிட்டு அவரிடம் அழைத்துச் சென்றார். இன்று மேல் திண்ணைக்கே ஏறிவிட்டேன். மும்முறை நமஸ்கரித்தேன். தீர்த்தம் கொடுத்தார்கள். அக்ஷதை கொடுத்தார்கள், குங்குமம் கொடுத்தார்கள், புஷ்பம் கொடுத்தார்கள், ஒரு தேங்காயும் கொடுத்தார்கள். அவைகளைப் பெற்றுக் கொண்டு உடனே செல்ல வேண்டியவன்தானே! என் கால்கள் நகர மறுத்தன; சற்று தயங்கி தயங்கி நின்றேன்.

ஸர்வக்ஞரான மஹாஸந்நிதானம் என் மனதில் இருப்பதை அறிந்து கொண்டவராய், புன்சிரிப்போடு, 'என்ன மனஸில் க்லேசம்?' என்று கேட்டார்கள். நான் ''ஒன்றுமில்லை, கேட்டால் அபசாரமாகுமோவென்று நினைத்துக் கேட்கத் தயங்குகின்றேன்'' என்றேன். உடனே ஸ்வாமிகள், ''நேற்று சம்பவத்தைப் பற்றித்தானே?'' என்றார்கள். என் மனநிலையை வர்ணிக்கவே முடியாது. நான் வாய்பொத்தி ''ஆம், அடியேன் போலுள்ளவர்கள் புரிந்துகொள்ளும்படி அதற்கு முகாந்தரம் கூற முடியுமோ என்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன்'' என்றேன். மறுபடியும் புன்சிரிப்பு, 'உட்கார்' என்றார்கள். அப்படியே ஸ்வாமிகளின் காலடியில் நமஸ்கரித்து உட்கார்ந்தேன். ஸந்நிதானம் அன்று திருவாய் மலர்ந்தருளியதை அப்படியே கூறுகிறேன்.

''வேறு ஒன்றுமில்லை. வருண ஜபம் நடந்தது. மழை வந்தது. விராட பர்வாவில் வியாசர் வருண மந்த்ர பீஜத்தை முறையாக அமைத்திருக்கிறார். மந்த்ராக்ஷங்களை ஜபிப்பதாலும் பாராயணம் பண்ணுவதாலும் ஸூக்ஷ்ம ஸ்பந்தனங்கள் ஏற்படும். அவை பௌதிக பிரபஞ்சத்தை இயக்கும். மந்த்ரங்களுக்கு அவ்வளவு சக்தியுண்டு'' என்று கூறிவிட்டு கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்கள். நான் மெதுவாக எழுந்து மறுபடியும் நமஸ்கரித்து நின்றேன். புன்சிரிப்போடு ஹஸ்தத்தால்

ஆசீர்வதித்தார்கள். நான் ''மதுரை ஜில்லா முகாமில் தரிசிக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்துவிட்டு அதைவிட்டு அகன்று கொட்டகைக்கு வெளியே வந்தேன். ஸர்வாதிகாரிகள் ஒரு தேங்காய் அளவுள்ள இலைப் பொட்டணம் கொடுத்தார்கள். ''பிரசாதம் சாப்பிடு. மதுரைக்கு வரும்போது வந்து பார்'' என்று எனக்கு விடை கொடுத்-தனுப்பினார்கள். எனக்குக் கொடுத்த பிரசாதம் திவ்யமான சர்க்கரைப்பொங்கல். நான் திரும்ப மதுரைக்கு வந்து-விட்டேன்.

அன்றிலிருந்து மஹா ஸன்னிதானம் உபதேசித்த வார்த்தைகளை அடிக்கடி சிந்தனை செய்தும், நூல்களை வாசித்தும் பெரியார்களைக் கேட்டும் அலைந்து, கடைசியாக 1937ம் ஆண்டு புரட்டாசி மாதம் மஹா நவமியன்று தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி சன்னிதியில் ஸ்ரீ சிருங்கேரி குரு பரம்பரையைச் சேர்ந்த ஒரு குரு மூலமாய் பஞ்சதசாக்ஷரீ உபதேசம் பெற்று சாதனை செய்து வந்து சில ஆண்டுகள் கழித்துதான் மஹா ஸன்னிதானம் திருவாய் மலர்ந்தருளிய வாசகத்தின் உண்மை தத்துவத்தை என்னளவில் ஒரு சிறிது உணர முடிந்தது. இதை 1956ல் சென்னை பிரம்மஞான மன்றத்தில் பிரசுரம் செய்த ''மந்த்ர சாஸ்த்ர தத்துவ விளக்கம்'' என்று வியாஸத்தில் எழுதியிருக் கிறேன். பின்னால் சேந்தமங்கலம் ஸ்ரீ தத்தாத்ரேய குஹாலயத்தில் பிரசுரம் செய்யப்பட்ட ''ஸ்வயம்பிரகாச விஜயத்திலும்'' 'குருபாதசேகரன்' என்ற புனைப்பெயரில் 1965ல் எழுதி வெளியிட்டிருக்கிறேன்.

ஸ்ரீ குரு கிருபா விலாஸம்

குருபாதஹிருதயன்

गुरुवरकरुणां हित्वा को वा स्वेष्टं लभेत लोकेऽस्मिन् ।
तस्माद्गुरुवरचरणं भज चेतः सर्वसौख्यमूलं त्वम् ॥

श्रीमातृचिन्तनरतः श्रीशांकरभाष्यजलधिराकेन्दुः ।
श्रीबोधदाननिरतः श्रीमान्मम मनसि देशिकः स्फुरतु ॥

नृपमौलिराजिताङ्घ्रिर्नृहरिपदाम्भोजपूजनासक्तः ।
नृवराराधितचरणो नृत्यतु गुरुराण्मदीयहृद्रङ्गे ॥

(பக்திஸுதாதரங்கிணீ)

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சரணாளின் பெருமையை வர்ணிப்பது ஸாஹஸமான காரியமே. சொல்பவன் மமகார அகங்காரங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. தன் உணர்ச்சியைக் கொண்டு சித்தரிப்பதானால் அது அவர்களின் மகிமையைச் சொல்வதாகாது. தாபத்ரயங்களுக்கு உட்பட்டவர்கள் அவற்றுக்கு அதீதமானவர்களைப் பற்றிச் சொல்வதும் சிரமம். என்னையே நான் மறந்து எழுதினால்தான் உண்மைப் பிரகாசம் இருக்க முடியும்.

உபதேசங்கள் குரு சிஷ்யர் என்ற இருவருக்கே உரியன வாகும். அவை வெளிப்படையாகச் சொல்லக் கூடியவை அல்ல. நான் சொல்லப்போகும் குருவோ லோக குருவாகை யால் சிஷ்யர்கள் மேன்மை அடையும்படி அவர்கள் செய்த சில கருணானுக்கிரகங்களை மட்டும் இங்கு சொல்ல முயன்று பார்க்கிறேன்.

1925ம் வருஷத் தொடக்கத்தில்தான் முதன் முதலில் நான் மஹா சுவாமிகளைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். முதல் தரிசனத்தின் போதே நான் என் உடல், பொருள், ஆவி முழுவதையும் அவர்கள் திருவடிகளில் அர்ப்பணித்து

விட்டேன் என்று சொல்வது மிகையாகாது. சில மாதம் கழித்து மறுபடியும் தரிசித்தேன். இடம் ஒரு கிராமத்திலுள்ள சத்திரம். அப்போது எனக்குக் கடுமையான மலேரியா ஜுரம். அதை அறிந்த மகா ஸ்வாமிகள் விபூதிப் பிரசாதம் கொடுத்து ''உங்களுக்கு ஏன் அடிக்கடி இந்த ஜுரம் வரவேண்டும்?'' என்று பரிவுடன் கேட்டு ஆசீர்வதித்தார்கள். அது முதல் இன்று வரை எப்போதாவது வேறு வியாதிகள் வந்திருந்த போதிலும் மலேரியா மட்டும் வரவே இல்லை.

பிறகு அவர்களை நான் பல இடங்களில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். பல பண்டிதர்கள் அவர்கள் ஸந்நிதியில் சாஸ்திர சந்தேக நிவர்த்தி செய்து கொள்ள வருவார்கள். இவர்கள் வாய் திறப்பதற்கு முன்னமே ஸ்ரீ ஸ்வாமிகள் பொதுவாக ஏதாவது சொல்வார்கள். வந்தவர்களின் சந்தேகம், பிரச்சினை எல்லாவற்றுக்கும் விடை அந்த வார்த்தைகளில் அடங்கியிருக்கும். ஒவ்வொருவரும் தமக்கே அநுக்கிரஹம் செய்ததாக எண்ணித் திருப்தி அடைவார்கள். எனக்கு இது பலமுறை அநுபவம்.

தென்னாட்டுச் சுற்றுப்ரயாண காலங்களில் மடத்தின் லௌகிக ஆடம்பரத்துக்குக் கட்டுப்பட்டிருந்த போதிலும் அவர்கள் உள்ளம் ஆத்ம சிந்தனையிலேயே ஈடுபட்டிருந்தது. ஒரு கிராமத்தில் மகா சுவாமிகளுக்குத் தங்கப் பல்லக்கில் ஊர்வலம் நடந்தது. பல்லக்கில் ஏறி அமர்ந்த மகா சுவாமிகளின் வாய் எதையோ முணுமுணுத்தபடி இருந்தது. சில நிமிஷங்களில் அவர்கள் நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டார்கள். ஊர்வலம் முடிந்ததும் அவர்கள் பல்லக்கிலிருந்து இறங்கினார்கள். நிஷ்டை கலைந்தது. ஊர்வலத்துக்கு இடையில் ஊருக்கு அப்பால் இருக்கும் குடிசை ஒன்றில் வாண வேடிக்கை காரணமாக நெருப்புப் பற்றியது. ஜனங்கள் உடனே அதை அணைத்துவிட்டார்கள். ஊர்வலம் சற்று தாமதமாயிற்று. நிஷ்டையிலிருந்த மகாசுவாமிகளுக்கு இது தெரியவே தெரியாது. மறுநாள் சிலர் சொல்லித்தான் தெரிந்து கொண்டார்கள். ஊர்வலம் முழுவதும் அவர்கள் நிஷ்டையில்

ஆழ்ந்திருந்தார்கள்.

சில சமயங்களில் மகாசுவாமிகள் குறித்த சில இடங்களுக்குப் போக முடியாதபடி ஏதாவது தடைகள் நேர்ந்துவிடுவது உண்டு. ஒருசமயம் ஒரு ஊர்க்கோயிலுக்குப் போகும் விஷயத்தில் இப்படி நேர்ந்துவிட்டது. வெகு ஆவலோடு மகாசுவாமிகளை அங்கே எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு பக்தருக்கு இது ஏமாற்றமாகப் போய்விட்டது. இதைப்பற்றி வருத்தமாக முறையிட்டார். இதைக் கேட்ட மகாசுவாமிகள் அவரிடம் ''தன் ஆத்மா பிரம்மத்தினிடம் லயப்பட்டு நிற்கிறது. சரீரமோ மடத்துச் சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டது!'' என்று சொன்னார்கள்.

மகாசுவாமிகள் ஒரு கிராமத்தில் தங்கியிருக்கும் சமயம் அவர்களைத் தரிசிக்க 'திவான் பகதூர்' பட்டம் பெற்ற ஒரு தனிகர் வந்தார். அவருடன் கூடவே சத்திரத்தில் பணி செய்யும் ஓர் ஏழையும் வந்தார். திவான் பகதூரைப் பிரபலமாக அங்கு இருந்தவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். உடன் இருந்தவரைப் பார்த்து ''இவர் யார்?'' என்று மகாஸந்நிதானம் வினவ, அவரையும் அறிமுகப்படுத்தினார்கள். ஸ்ரீ மகாஸந்நிதானம் தனக்குச் சுவபாவமான மந்தஹாசத்தோடு இருவரையும் உட்காரச்சொல்லி குசலம் விசாரித்து இருவருக்கும் சமானமாகவே அனுக்கிரஹம் செய்து அக்ஷதை கொடுத்தார்கள். ஏழை பணக்காரர் என்ற பேதமே இல்லாத ஸர்வ சமத்வ நோக்கைக் காலடியில் (1927 வருஷம்) விஜயம் செய்த சமயம் யாவரும் கண்டார்கள். அப்போது அங்கு மகாராஜாக்களும், சமஸ்தான அதிகாரிகளும், ஏழை மக்களும் திரளாக வந்து தரிசனம் செய்து கொண்டார்கள். எல்லோரிடத்திலும் ஸ்ரீமகா ஸந்நிதானத்துக்கு ஒரேவிதமான கருணை.

தென்காசி முகாமில் ஜில்லா அதிகாரிகளுள் ஒருவர் ஸ்ரீ மகா ஸ்வாமிகளைத் தரிசித்தார். அவர் நல்ல ராம பக்தர். அவரைப் பார்த்ததும் ''ராமத்யானம் சிறந்தது. சரியான முறையில் செய்து வரலாம்'' என்று மகா ஸந்நிதானம் சொல்ல,

அந்த அதிகாரி ஆச்சரியப்பட்டு ஸ்ரீபாதங்களில் வசப்பட்டு விட்டார். சாதுர்மாஸ்ய காலத்தில் உபதேசங்களையும் பெற்று கீதா பாஷ்யம் ஸ்ரீமகா ஸ்வாமிகளின் அநுக்கிரஹிக்க அதையும் சிரவணம் செய்து மகாபாக்கியம் பெற்றார். ஆனால் பாஷ்ய பாடம் பூர்த்தியாகவில்லை. 'எப்போது மற்ற பாகங்களை சிரவணம் செய்யும் பாக்கியம் கிட்டும்' என்று அவர் வினவ, இந்த பதில் வந்தது. ''அதற்காகக் கவலைப்பட வேண்டாம் குருத்யானம் செய்து தானாகவே படித்தால் எல்லாம் ஸ்பூர்த்தியாகும்''. பரம கருணையோடு வந்த இந்த அநுக்-கிரகத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அப்படியே பாஷ்யங்களைப் படித்து வந்த அவருக்குத் தாம் படித்த கிரந்தங்களிலெல்லாம் ஆழ்ந்த அறிவும், எடுத்துக் கூறும் சாமர்த்தியமும் வந்துவிட்டது. இவர் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு பிரஸ்தானத்ரயபாஷ்யபாட பிரவசனம் பண்ணும் சக்தி உடையவராக விளங்கினார். குருவின் கருணையால் எதைத்தான் சாதிக்க முடியாது?

1927-ஆம் ஆண்டில் காலடியில் சங்கர ஜயந்தி உத்ஸவத்தை மஹா ஸ்வாமிகளே நடத்தினார்கள். அங்குள்ள பாடசாலையில் முதல் முதலாக வேதாந்த பாட வகுப்பையும் தொடக்கினார்கள். அன்று தாங்களே வித்யார்த்திகளுக்கும் வேறு சிஷ்யர்களுக்கும் சாந்தி பாடத்தை உபதேசித்து பிரம்ம சூத்ர பாஷ்யத்தின் விமர்சனம் ஒன்றை தங்களுக்கே உரிய அதிலலிதமான, மதுரமான ஸம்ஸ்கிருதத்தில் அருளினார்கள். அங்கு வந்திருந்த பிரபல வித்வான் மகாமகோபாத்தியாய பட்டம் பெற்ற ஓர் பெரியார் தன் கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பி, தான் பலகாலம் படித்ததும், கேட்டதும் வெகு சுவல்பமே. சப்த ஞானத்தைத் தவிர வேறொன்று மில்லை. அநுபூதியில்லாத படிப்புதான் என்ற உணர்ச்சி மேலிட்டுத் தன்னைச் சிஷ்யராகக் கொண்டு ஞானம் ஏற்படும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று ஸ்ரீசரணங்களில் மன்றாடினார். ஸ்ரீமஹா ஸந்நிதானத்தின் அநுக்கிரகம் பாமரர்களைப் பண்டிதர்களாக்கும், பண்டிதர்களை அநுபூதி நிலைக்குக் கொண்டு போய்விடும்!

சிருங்கேரியில் மகா சுவாமிகளைப் பலமுறை தரிசிக்கும் பாக்கியம் அவர்கள் அருளால் கிடைத்தது. ஒருமுறை என் குமாரனோடு போயிருந்த போது மகாஸந்நிதானம் அந்தர்முகமாயிருந்தார்கள். அவர்களைத் தரிசனம் செய்வது கடினம் என்று ஸ்ரீமடத்து அதிகாரி சொல்லியும் என் ஆசையால் நதிக்கு அக்கரையிலுள்ள 'ஸச்சிதானந்த விலாஸம்' ஆசிரமத்துக்குச் சென்று ஸ்ரீபரமகுரு ஸ்ரீபாதாளின் அதிஷ்டானத்தில் வணங்கிவிட்டு அங்கு உட்கார்ந்து ஜபங்களைச் செய்து கொண்டிருந்தேன். என்னுடன் என் குமாரனும், கியாதி வாய்ந்த ஸம்ஸ்கிருத பேராசிரியர் ஒருவரும் இருந்தனர்.

எங்கள் பூர்வஜன்ம பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். சுமார் காலை 11 மணிக்கு மகா ஸ்வாமிகளுக்கு ஸமாதி கலைந்து துங்கா நதிக்கு அநுஷ்டானத்துக்குப் போக வேண்டுமென்ற மனோவிருத்தி ஏற்பட்டது. போகும் வழியில் நாங்கள் உட்கார்ந்திருப்பது அவர்கள் திருஷ்டிக்குட்பட்டது. மற்றொரு மனோவிருத்தியும் எங்கள் பாக்கியத்தால் அவர்கள் உள்ளத்தில் உதித்தது. அதிஷ்டானத்துக்கே விஜயம் செய்தார்கள். நேராகக் கர்ப்பக் கிருகத்துக்குள் சென்று கதவையும் மூடிக்கொண்டார்கள். எங்கள் மார்பு படபடத்தது. கதவையே நோக்கி நின்றோம். சற்று நேரம் கழிந்தது. நகரும் ஒளிப்பிழம்பு போல வெளியே வந்தார்கள். தம் அம்ருத ஹஸ்தத்தில் கொண்டுவந்த நிர்மால்ய புஷ்பங்களை எங்களுக்குக் கொடுத்து அநுக்கிரகித்தார்கள். சாஷ்டாங்கமாக வணங்கி நின்ற நாங்கள் பிரசாதத்தை அச்சத்துடனும் பரவசத்துடனும் பெற்றுக் கொண்டோம். ஸ்ரீமகா ஸ்வாமி களுக்குப் பேராசிரியரை அறிமுகப்படுத்தினேன். அவர் கையில் ஒரு புஸ்தகம் வைத்திருந்தார். அதைப் பார்த்ததும், 'என்ன புஸ்தகம்?' என்று மகா ஸ்வாமிகள் வினவ, அதன் விவரத்தை பேராசிரியர் சொன்னார். அது ஒரு வேதாந்தப் பிரகரண கிரந்தம். அதைப் பிரசுரப்படுத்துவதற்கு முன் ஸ்ரீமகா ஸந்நிதானத்தின் ஆசியைப் பெற வேண்டுமென்பது என் நண்பரின் அவா. 'இதன் மூலம் எங்கு கிடைத்தது?' என்று

மகா ஸ்வாமிகள் கேட்டார்கள். ‘அடையாறு, விஜயநகரம் புஸ்தகசாலைகளிலிருந்து’ என்று பதிலளித்த ஆசிரியர், ‘ஆனால் சில இடங்களில் சுலோகங்கள் பூர்த்தியாக இல்லை’ என்றும் மெதுவாகச் சொன்னார். ‘எந்த இடம்’ என்று கேள்வி வந்தது. ஆசிரியர் இடத்தைச் சொன்னவுடன் மகா ஸ்வாமிகள் தாமே அந்த அத்தியாயங்கள் முழுவதையும் மெதுவாகச் சொல்லி வந்தார்கள். ஆசிரியரும் கையிலுள்ள பிரதியில் விட்டுப்போன வரிகளைப் பூர்த்தி செய்து கொண்டார். பிறகு அவருக்கு ஆசி கூறி விடை கொடுத்தார்கள்.

அச்சமயம் பத்து நாட்கள் அங்கே தங்கியிருந்தேன். மகா சுவாமிகளை இரண்டு தடவைதான் தரிசிக்க முடிந்தது. ஒருநாள் ஸ்ரீசாரதாம்பிகை ஆலயத்துக்கு யாரும் எதிர்பாராத சமயத்தில் விஜயம் செய்தார்கள். அவர்கள் வரவைக் கண்ட நானும் என் மகனும் கூடவே சென்றோம். பரமேஷ்டி குரு ஸ்ரீஉக்கிர நரஸிம்ம பாரதி ஸ்ரீ பாதாள் அதிஷ்டானத்தை அடைந்ததும் என்னை சம்க்ஞையால் அழைத்து பரமேஷ்டி குருக்களின் தபோ மகிமையை விளக்கி அங்குள்ள மகாலிங்கத்துக்கு அபிஷேகம் செய்த நிர்மால்ய தீர்த்தம் சகல வியாதிகளுக்கும் ஔஷதம் என்று அருளினார்கள். ஸ்ரீசாரதாம் பாள் ஸந்நிதியிலும், ஸ்ரீ வித்யா சங்கரரின் ஸந்நிதியிலும் செய்யும் ஜபம், பாராயணம், தியானம் சீக்கிரமே ஸித்தியை கொடுக்கும் என்று அவர்கள் சொல்வதுண்டு. ஸ்ரீ சாரதாம் பாளுக்கு குங்குமார்ச்சனமும், தங்கள் குரு அதிஷ்டானத்தில் உள்ள மூர்த்திக்குப் பஞ்சாம்ருத அபிஷேகமும் மிகவும் விசேஷமென்பதும் அவர்கள் ஆக்ஞை.

ஸ்ரீ சாரதாம்பாளைத் தரிசித்ததால் ஏற்பட்ட ஆனந்த உணர்ச்சியுடன் மகா ஸந்நிதானத்தை அணுகிய பக்தர் ஒருவரை ‘ஆனந்தம் எங்கு கண்டீர்கள்?’ என்று வினவினார் கள். அவர் ‘என் உள்ளத்தில்’ என்று பதில் கூற, ‘அந்த ஆனந்தம் உங்கள் ஆத்ம ஸ்வரூபமே! அந்த ஆனந்த நிலை சாசுவதமாக ஏற்பட முயல வேண்டும்’ என்று உபதேசித்து அருளினார்கள்.

கடுஞ் சுரத்துடனிருந்த என் நண்பர் ஒருவரை சிருங்கேரி நகரத்தின் மத்தியிலுள்ள குன்றின்மேல் ஏறி அங்கு கோயில் கொண்ட ஸ்ரீ மலஹானிகரேச்வர மூர்த்தியை நமஸ்கரிக்கும்-படி ஆணையிட்டார்கள். வெகு சிரமப்பட்டு மேலே ஏறிய நண்பர் ஈசுவர தரிசனம் செய்தவுடன் உடலெல்லாம் வியர்த்துக்கொட்டி ஜுரம் நின்றுவிட்டது.

பிளேக் நோய் பரவிவந்த காலத்தில் ஊருக்குச் சற்று தூரத்திலுள்ள துர்காம்பிகையை ஸ்துதித்ததும் அந்நோய் பரவாமல் மறைந்துவிட்டது. ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ ஸ்ரீ பாதாள் அநுக்கிரஹித்த இந்த துர்காஸ்துதி யைப் பாராயணம் செய்தால் வசூரி, காலரா, பிளேக் முதலிய தொத்து நோய்கள் அணுகா. இது பிரத்யக்ஷம்.

ஸ்ரீ மடத்தின் பூஜையிலுள்ள ஸ்ரீசந்திரமௌளீசுவர லிங்கத்துக்கும், கிக்காவிலுள்ள ஸ்ரீ ரிஷ்யசிருங்கர் மகாலிங்கத் துக்கும் விசேஷ அபிஷேகாதிகள் செய்தால் நல்ல மழை பெய்து பஞ்சம் நிவிருத்தியாகும். தேசத்தில் க்ஷாமம் ஏற்பட்ட பல சமயங்களில் முன்கால அரசர்கள் ஸ்ரீ சந்திரமௌளீசுவர மூர்த்திக்கு அபிஷேகாதிகள் செய்யும்படி பிரார்த்தனை செய்து எழுதிய கடிதங்கள் ஸ்ரீ மடத்தின் பல இருக்கின்றன. ஸ்ரீ வித்யாசங்கரர் ஆலயத்தில் அயத்திலான (இரும்பாலான) சனைச்சர மூர்த்தி ஒன்று எண்ணெய்க் கொப்பரையில் இருக்கிறது. அந்த மூர்த்திக்குத் தைலாபிஷேகம் செய்து பூஜிப்பது சனிபீடைக்குப் பரிகாரம். இவைகளைத் தவிர ஸ்ரீ மகாஸந்நிதானம் அருளும் தீர்த்தப்பிரசாதமும், மந்திராக்ஷதை, விபூதி குங்கும பிரசாதங்களும் சகலரோக நிவர்த்திக்கும், இஷ்டபிராப்திக்கும் பரமசாதனங்கள். இந்த ரகசியங்களை பக்தர்கள் அறிய வேண்டுமென்றே இவ்வளவு எழுதினேன். என்னுடைய அடுத்த அநுபவத்தைக் குறிப்பிடு-கிறேன்.

சிருங்கேரியை விட்டுப் புறப்படு முன் மறுபடியும் தரிசனம் கிடைக்குமோ என்ற ஆசையுடன் நதியின்

அக்கரைக்குப் போனேன். அன்றும் எதிர்பாராமல் பகிர்முகப் பட்டு வெளியே வந்தார்கள். ஸர்வாத்ம பாவம் *நேஹ நாநாஸ்தி கிஞ்சந। வாஸுதேவஸ் ஸர்வமிதம்। ஈசாவாஸ்யமிதம்।*'' என்ற திருஷ்டி, இவை பொருந்திய நிலையில் ஆத்மாராமராக இருந்தவர்கள், அநுக்கிரக சிந்தனையுள்ள விருத்தியைக் கைப்பிடித்து வந்தவர்கள் அல்லவா! நடந்த நிகழ்ச்சியும் ஆச்சரியமானதே! என் பையனையும் என்னையும் பார்த்து, உபதேசம்:-

''இவனுக்கு அன்ன வஸ்திரம் அளித்து வித்யாப்யாஸம் முதலியன செய்விக்கிறாயல்லவா? இவன் உன் புத்திரன் என்கிற வாஞ்சையை மறந்து விட்டு ஸர்வேச்வரனே உன் பூஜையைப் பெற்றுக் கொள்ள உன் புத்திரனாக வந்திருக்கிறான் என்ற பாவத்தை விருத்தி செய்து கொள்வது தான் உசிதம். புத்திர வாஞ்சை பந்தத்தை ஏற்படுத்தும். ஈசுவர ஸ்வரூபம் என்ற எண்ணமோ விடுதலையையும் சிரேயஸ்ஸையும் கொடுக்கும்.''

ஸர்வாத்மபாவத்திலிருந்து அருளிய உபதேசமல்லவா இது! பிறகு என்னைத் தனியே அழைத்துச் சொன்னதாவது. ''பரமதகண்டனம் தவறு; ஒருபோதும் செய்யாதே. அது ஆத்ம குணத்துக்கு விரோதம்'' சில மாதங்களுக்கு முன் ஓர் கிருஸ்தவ குருவுடன் நான் வாதாடியது என் ஞாபகத்துக்கு வந்தது. என் மனம் திருந்தியது. மற்றும் அவர்கள் சொன்ன தாவது: ''அத்வைத ஞானம் கடினம். பல சமயங்கள் வெளிப் படையாகப் போதிக்காது. ஈசுவர கைங்கரியம், சரணாகதி, ப்ரபத்தி முதலியவைகள் மேலான ஸாதனங்கள் இவைகளை மட்டும் பல சமயங்கள் போதிக்கின்றன.'' பிறகு ஆச்சரியகர மான சில போதனைகளைச் செய்தார்கள்.

''நாம் பேசும் பாஷையில்-ஆங்கிலத்தில் கூட-அத்வைத பாவம் விளங்குகிறது. I (நான்) என்ற ஆங்கில பதத்தை எடுத்துக் கொள். என்னை I (நான்) என்று சொல்கிறேன். நீ என்னை YOU (நீ) என்று சொல்கிறாய். அங்குள்ள ஒருவன்

என்னை He (அவன்) என்று சொல்கிறான். நான் I தான்; He, you அல்ல. He (அவன்), You (நீ) என்பது நாமபேதம். உள்ள வஸ்து I (நான்) தான். இவ்விதமே நான் என்னை I என்று சொல்வது போலவே, நீயும் உன்னை I என்று தான் சொல்வாய், அவனும் தன்னை I என்று தான் சொல்வான். எல்லோரும் I தான். He, you என்று வியவகரிப்பதெல்லாம் நாமரூபபேதமே. I அதாவது ஆத்மா, ஒன்றுதான். எல்லோரும் அந்த ஒரே ஆத்மா தான். I ஆகிய நான், ஒருவனுக்கு He ஆகவும், மற்றொருவனுக்கு you ஆகவும் காட்சியளிக்கிறேன். மற்றொரு விதமாயும் பார்க்கவும். We (நாங்கள்) என்ற பன்மைச் சொல் என்ன? I (நான்) + I + I என்று சொல்லலாமா? முடியவே முடியாது. I நான் + you (நீ) + He (அவன்) முதலியவை சேர்ந்தால் தான் we (நாங்கள்) என்ற பன்மை வரும். Iக்குப் பன்மை கிடையாது. ஆத்மாவுக்குப் பன்மை கிடையாது. ஆத்மா விளக்கும் நாம ரூபங்களுக்குத் தான் பன்மை. இவை தோற்றங்களே. உண்மை I என்பதே. அது ஆத்மாவே.''

என்ன அத்புதமான உபதேசம். ஆழ்ந்த ஸமாதி நிஷ்டையிலிருந்து வந்த குருநாதர் பேசியதல்லவா! இதை வாசிக்கும் நேயர்களுக்கு ஓர் பிரார்த்தனை. ஸ்ரீ மஹா ஸந்நிதானம் உங்கள் ஒவ்வொருவரின் முன்நின்று பேசுவது போல் பாவனை செய்து கொள்ளுங்கள். என்னை மறந்து விடுங்கள். நான் நிமித்த மாத்திரம்.

கடைசியாக நான் மகா ஸந்நிதானத்தை சிருங்கேரியில் தரிசித்தது 1954-ஆம் ஆண்டு ஜூலை-ஆகஸ்டு மாதம். சிஷ்யர்களுக்கு அனுக்கிரஹம் செய்து கொண்டு ஸகல நடவடிக்கைகளுக்கும் கேவலம் ஸாக்ஷியாக ஸஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். 'ஸ்தித பிரக்ஞர்' லக்ஷணம் எல்லாம் அவர்களிடம் பூர்ணமாக விளங்கியது. ***ஆத்மந்யே வாத்மநாதுஷ்ட:*** என்றபடி நித்தியமான ஆத்மானந்தத்தில் மூழ்கியிருந்தார்கள். ***ஸ்தித தீ: । தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ।*** என்ற பகவத் வாக்கியத்திலுள்ள சொற்றொடர்களுக்கு

லக்ஷியமாக விளங்கினார்கள். மமதை அஹங்காரமில்லாத குருநாதருடைய சாந்தநிலை வர்ணிக்க முடியாததாக இருந்தது. *நிர்மமோ நிரஹங்கார: ஸ சாந்திம் அதிகச்சதி ।* என்பது பகவத் வாக்யம். ஸ்திதப்ரக்ஞனாக பிரம்மநிஷ்டனாக ஸர்வசாந்திமயமான ஆத்மானந்த பூமாவில் பிரகாசிக்கும் யதிராஜரான இந்த மூர்த்தியைத் தரிசித்ததும் என் ***ஊனக்கண்கள்*** கூசின. என் முன் காட்சி கொடுத்த தோற்றம் மாம்ஸ, ரக்த சம்பந்தமான பிராக்ருத சரீரமாகத் தோன்ற வில்லை. ஒளிப்பிழம்புதான் ***(ஜ்யோதி: । ஜ்யோதி:। சிவஜ்யோதி:)*** என் கண்கள் அவர்கள் திருவடி நிழலை நாடின. அங்கு குளிர்ந்து நின்றன. என் க்ஷேமத்தை விசாரித்து-விட்டு தங்கள் குருநாதாள் விதேகமுக்தி அடைந்த அறைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அங்குள்ள பரமகுரு பாதுகைகளுக்கும், தீபத்துக்கும் நமஸ்கரித்து குருநாதரையும் நமஸ்கரித்து அவர்கள் ஆணையின் பேரில் கீழே அமர்ந்தேன். என் பக்குவத்துக்கு ஏற்ற உபதேச மொழிகளை சுமார் 45 நிமிஷங்கள் வரை போதித்தார்கள். அவைகளை விவரிப்பது உசிதமல்ல. ஒருவருக்குக் கொடுக்கும் உபதேசம் மற்றொரு-வருக்குப் பொருந்தாது. இதுமட்டும் அல்ல. ஒரே உபதேசத்-தைப் பலர் கேட்டபோதிலும் அவரவர்கள் தகுதிக்கு ஏற்பவே அது அவரவர்களுக்குப் பொருள்படும். என் மான்ய நண்பர் திருநெல்வேலி ஸ்ரீ R.கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களும் நானும் முன்னொரு தடவை சிருங்கேரியில் சில தினங்கள் தங்கினோம். அப்போது தினந்தோறும் மஹா ஸ்வாமிகள் வாக்கிலிருந்து உபதேசமணிகள் வெளிவரும். என்றாலும் என்னைவிட உயர்நிலையிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் கிரஹித்த ஸூக்ஷ்மமான கருத்துக்களை நான் கவனித்திருக்கமாட்டேன்.

இந்த அபூர்வ தரிசனத்திற்கும் உபதேசத்திற்கும் பிறகு இரண்டு தினங்கள் இருந்து விட்டுப் புறப்படும் போது கண்களில் நீர்வடிய ''மறுபடியும் எப்போது தரிசன பாக்கியம் கிடைக்குமோ?'' என்று முணுமுணுத்தேன்.

த்ருஷ்டிம் ஞானமயீம் க்ருத்வா
பச்யேத் ப்ரஹ்ம மயம் ஜகத் ।

என்ற வாக்கியத்துக்கு இணங்க, மந்தஹாஸத்துடன் அபயமுத்ரையுடன் என்னைக் கடாக்ஷித்ததும், அவருடைய கடல் போன்று அகன்ற ஞானமயமான திருஷ்டியின் ஓர் அலையின் திவிலையே என் கண்களிலும் சம்பந்தப்பட்டது. எனக்கும் சில விநாடிகளுக்கு உலகப்பிரக்ஞை இல்லை. உள்ளத்தில் ஒருவிதமான குதூஹலம், குருநாதனின் அம்ருதமயமான வாக்கில் உதித்த ஓர் ஆக்ஞை மட்டும் கேட்டது. அது ஒரு பணியாளுக்கு இட்ட கட்டளை, கன்னட பாஷையில் ''பாலகுருக்களிடம் அழைத்துப் போய் பல-மந்திராக்ஷதை வாங்கிக் கொடு.'' என்பது அதன் கருத்து. என் பரவசநிலை மாறியது. குருநாதனுடைய தேஜோமயமான ரூபம் உள்ளே செல்வதைக் கண்டேன். இனி எனக்குப் போதிப்பவர் 'பாலகுருமூர்த்தி' என்று அவர்களிடம் என்னை ஒப்பித்துவிட்டார்கள் போலும்.

''மறுபடியும் எப்போது தரிசன பாக்கியம்?'' என்ற பிரச்ச-னைக்கு அப்போது விடை வரவில்லை. சில வாரங்களுக்குப் பின் வந்தது. எப்படி? சென்னையில் ஓரிரவு உஷக்காலம். மறுநாள் மகாளய அமாவாசை தினம், எனக்கோ ஓர் அபூர்வமான கனவு. என் முன் தோன்றுவது யார்? நான் சிருங்கேரியில் கண்ட தேஜப்புஞ்ஜமே. ஆத்ம நிஷ்டையின் ஆழத்தைக் காண்பிக்கும் அதே ''ஞானமயீ திருஷ்டி'' உள்ளத்திலிருக்கும் ஆத்மானந்தம் பிரதிபலிக்கும் இனிய மந்தஹாஸம், பக்தனின் தாபத்தைத் தணிக்கும் அபய-ஹஸ்தம். உள்ளம் குளிரச் செய்யும் மதுரத்வனி ''எங்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசையிருந்ததே? அதனால் வந்திருக்கிறோம்'' என்று உதித்தது. நான் வாய் திறந்து பேசும் முன் மறைந்து விட்டார்கள். மறுநாள் ஸ்ரீமகா ஸந்நிதானத்தின் விதேக முக்தியை ஆகாசவாணி நாடெங்கும் ஒலிபரப்பியது.

ஏகோ பஹூனாம் விததாதி காமாந் । இது பொய்

ஆகுமா? ஒரே பொருள் பலர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும். அது பிரம்மம். பிரம்மமே பிரம்மவித். ***ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*** / அன்றே பல இடங்களிலுள்ள பல சிஷ்யர்களுக்கு இவ்விதமான அனுக்ரஹம் கிடைத்ததாகப் பின்னால் தெரிந்தது.

நமது நாட்டில் பெரிய பிரமுகர், பெரிய பதவியிலிருப்பவர் ஒருவர் சிருங்கேரிக்குப் போக வேண்டுமென்று எண்ணினார். அவர் கனவில் குருநாதர் தோன்றி, ''நீங்கள் வரவேண்டாம். நான் வந்து பார்த்து விட்டேன்'' என்று அருளினார்கள். இவ்வித நிகழ்ச்சிகள் பல.

ஸ்ரீமஹாஸந்நிதானம் அவர்கள் கனவில் எனக்கு தரிசனம் அளித்தது போலவே பல பக்தர்களுக்கு பூத உடலிலிருந்து தாம் மறைந்துவிடப் போவதை முன்கூட்டியே சூசனைகள் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். 1954 அக்டோபர் 21உ ஸ்ரீமந்திரேச்வர சர்மா, பங்களூரில் வசிக்கும் அரசியல் நிபுணர் ராஜமந்திரப்ரவீணர் ஸ்ரீ A.V.ராமநாதனுக்கும் எனக்கும் கடிதம் எழுதினார். அதில் கண்டவைகளில் சில.

''ஒரு மாத காலம் சிருங்கேரியில் தங்குகிறாயா'' என்று மஹா ஸந்நிதானம் கேட்டுவிட்டு, வேண்டாம் நீ கோழை. சிருங்கேரிக்கு வெகுதூரம் அப்பால் இருப்பதே நலம் என்று கூறிவிட்டார்கள். நான் பிரார்த்திக்காமலே எனக்கு ஒரு உபதேசத்தையும் அருளினார்கள். என்னுடைய மருமகன் கிருஷ்ணஸ்வாமிக்கு உபதேசம் அருள வேண்டுமென்று நான் பிரார்த்தித்தேன். அதற்கு பதில் 'உன் மருமகன் நல்லவன். எங்களிடத்தில் அவன் காட்டும் பக்தியை இளைய ஸ்வாமி-களிடமும் காட்ட வேண்டும். ஆகையால் இளைய குருக்களிடமே உபதேசம் பெறட்டும்'' என்று மொழிந்தார்கள். நான் புறப்படும்போது மனம் தாளாமல் கண்ணீர் விட்டேன். ஸந்நிதானம் என்னை உட்கார வைத்து மொழிந்ததாவது:

''எங்களிடம் 30 ஆண்டுகளாகப் பழகியும் அறிவு

வரவில்லையே; இந்த சரீரமா உனக்குக் குரு? அழியக்கூடிய இந்த சரீரத்தைப் பார்க்க ஆகாயவிமானம், ரயில், மோட்டார் இவைகளின் உதவியுடன் பணச்செலவையும் பாராட்டாமல், தேக சிரமத்தையும் மேற்கொண்டு சிருங்கேரிக்கு வந்து கொண்டிருக்கிறாயே? இந்த சரீரம் மறைந்துவிடும். அப்போது நீ ஸ்மரிக்க வேண்டியதுதான், உடனேயே நாங்கள் உன் சமீபம் இருப்போம். ஸ்மரிக்கக்கூட வேண்டியதில்லை நாங்கள் எப்போதும் உன் சமீபமே இருப்போம்.'' இப்படி ஸ்ரீசர்மா எழுதியிருந்தார்.

இந்த உபதேசம் என் துயரத்தை மாற்றவில்லை, அதிகப் படுத்தியது. என்னுடைய குமாரி சாரதாவின் திருமணத்தை சிருங்கேரியில் நடத்துவதாக என் சம்பந்தியும் நானும் யோசித்து இருந்தோம். இதை என் சம்பந்தி பிரஸ்தாபிக்கையில் ஸந்நிதானம் புன்சிரிப்புடன் தலையை அசைத்தார்கள்.

பிறகு 'ஒருவாரம் சென்றதும் சிருங்கேரியில் முகூர்த்தத்தை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தை நானே விட்டு விடுவேன்' என்று சொன்னார்கள். அதற்கு காரணம் நடக்க இருக்கும் சம்பவமே என்று ஜாடையாகச் சொன்னார்கள். நான் பேதை. வரவிருக்கும் திடீர் சம்பவத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆம், அவர்கள் என்னுடன் இப்போதும் இருந்துதான் வருகிறார்கள். பிரதி நிமிஷமும் தான். எனக்கோ துக்கம் மேலிட்டு அழுகைதான். இரவில் நித்திரை வருவதில்லை. சில தினங்களுக்கு முன் பூஜை நடுவில் மயக்கம் வந்து படுத்துவிட்டேன்! ''இது என்ன மூட எண்ணம்! எங்கள் சரீரத்தினிடம் ஏன் அபிமானம்? நாங்கள் எங்கு போய்விட்டோம்? எங்குமிருக்கிறோமே!'' என்ற குருநாதனின் கோஷம் என் மனதில் ஒலித்தது.

ஸ்ரீசர்மா அவர்களுக்கு, தமது சரீரத்தைத் தியாகம் செய்துவிடுவது என்ற தீர்மானத்தை பலவிதமாகச் சொல்லியும், அவர் அறிந்து கொள்ளவில்லை.

1954 ஸெப்டம்பர் 26 தேதியன்றே ஸ்ரீராமநாதனின் மகளுக்கு கனவில் ஸ்ரீஸந்நிதானம் தரிசனம் அளித்தார்கள். ஸ்ரீமதி சாந்தா ராமசந்திரன் ஐரோப்பாவில் அவ்வமயம் இருந்தார். அவர் புருஷன் ஸ்ரீ S.G.ராமசந்திரன், பாரிஸில் இந்திய தூதாலுவகத்தில் (Indian Embassy) வியாபாரத்துறை காரியதரிசியாக (Commercial Secretary) பணி ஆற்றினார்கள். இந்த தம்பதிகள் ஸெப்டம்பர் 8ல் பாரிஸிலிருந்து இதாலி நாட்டுக்குச் சென்றிருந்தார்கள். இதாலியில் மொண்டானா நகரிலிருந்து தன் தகப்பனாருக்கு (ஸ்ரீராமநாதனுக்கு) ஸ்ரீமதி சாந்தா அனுப்பிய கடிதத்தில் எழுதியிருப்பது:

''அருமை வாய்ந்த அப்பா, அந்த இரவு (ஸெப்டம்பர் 26உ) சிருங்கேரியிலிருப்பதாக கனவு கண்டேன். ஸ்வாமி-களுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர்களும் தங்களைப் பற்றியும், தாங்கள் யாத்திரை செய்வதாகவும் கூறினார்கள். பிறகு 'ஆநந்தா' (ஸ்ரீராமநாதனின் இல்லத்தின் பெயர்) வில் தங்களிடம் ஸ்வாமிகளின் அருள்மொழிகளை சொல்லிக் கொண்டிருந்தேன்.''

மறையும் முன் இதாலியிலுள்ள ஒரு பக்தைக்கும் காக்ஷி அளித்தார்கள். இது அவர்கள் கருணாலீலை. ஸ்ரீமஹா ஸந்நிதானம் விதேக முக்தி அடைந்த செய்தி ஸ்ரீராமநாதன் கடிதம் மூலம், ஸ்ரீமதி சாந்தாவுக்கு அக்டோபர் 2உ தான் தெரிய வந்தது.

மகா ஸந்நிதானத்தைப் பற்றி சில தினங்களுக்குப்பின் டாக்டர் C.P.ராமஸ்வாமி அய்யருடன் நான் பேசிக் கொண் டிருந்தேன். அப்போது அவர்கள் சொன்னதும் குறிக்கத் தக்கதே. அவர் தான் சிருங்கேரிக்கு வருவதாக எழுதியதற்கு ஸந்நிதானம் அனுப்பிய பதிலில் ''வருவதாக இருந்தால் மகாளய அமாவாசைக்கு முன் வரவும்'' என்று கண்டிருந்தது. அதன் கருத்து விளங்கவில்லை என்றும், தான் சிருங்கேரிக்கு அப்போது போகவில்லை என்றும், அது தமக்கு மிக

வருத்தத்தைக் கொடுப்பதாகவும் டாக்டர் C.P.ராமஸ்வாமி அய்யர் சொன்னார்கள்.

நேயர்களே, இவ்வளவு நேரம் என் மனது உங்கள் மனதிடம் பேசியது. என் முடிவான தீர்மானம் ஒன்றை மட்டும் உங்களிடம் சொல்கிறேன். அகண்டாகார ஆனந்தரூபியாக விளங்கும் நம் குருநாதன், ***யதா ஆகாசஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ மஹான்*** என்றபடி பிரம்மத்தில் நிலைநின்று எங்கும் வியாபித்திருக்கும் நம் குருநாதன் எக்காலமும் எனக்குத் தஞ்சம். குருநாதனுடைய ஸ்மரணம் தான் எல்லா சாதனங்களுள்ளும் சிரேஷ்டமானது.

ஆஸ்தே தேசிகசரணம் நிரவதி:
ஆஸ்தே ததீக்ஷணே கருணா |
ஆஸ்தே கிமபி ததுக்தம் கிமத:
பரமஸ்தி ஜன்ம ஸாபல்யம் ||

''ஸம்ஸாரமென்னும் கோரமான கடலைக்கடந்து அக்கரை செல்வதற்கு ஆசார்யாரின் திருவடி ஓடமாக இருந்து உதவி செய்கிறது. அவர்களுடைய திவ்ய கடாக்ஷத்தில் அளவற்ற கருணாரஸம் பொங்கி வழிகிறது. அவர்கள் செய்த உபதேசமும் மனதில் இருக்கிறது. இத்தனையும் நமக்குக் கிடைத்திருக்கும்போது பிறவிப் பயனைப்பெற நமக்கு வேறு என்ன வேண்டும்?''

ஸ்ரீ ஆசார்யர்கள் அருளிய உபந்யாஸங்கள்

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்

1

அருளுரை

உபந்யாஸ நாள் : 13-6-1927 கிழமை : திங்கள்

பேசுவதென்ருல் சாஸ்திரீயமான விஷயங்களைப்பற்றியே பேசவேண்டும். லௌகிக விஷயங்களைப்பற்றிப் பேசுவதில் பிரயோஜனம் ஒன்றுமே இல்லை.

शास्त्रीयेषु व्यवहारेषु यद्यपि बुद्धिपूर्वकारी ।
ना विदित्वात्मनः परलोके सम्बन्धमधिक्रियते ॥

என்றபடி சாஸ்திரங்கள் பரலோகவிஷயங்களைப்பற்றிப் பேசுகின்றன. சிரேயஸ்ஸை ஸம்பாதிப்பதைப்பற்றிச் சொல்லுகின்றன. நம்முடைய க்ஷேமத்தை நாம் எப்படி ஸம்பாதிக்கலாமென்று போதிக்கின்றன. க்ஷேமத்தை எப்படி ஸம்பாதிப்பது, சிரேயஸ்ஸை எப்படி விருத்திபண்ணுகிறது என்பதைப்பற்றி சாஸ்திரங்களில் என்ன சொல்லி இருக்கிறதென்ருல் - அவைகளை ஸரியாய் பத்ததிப்பிரகாரம் தெரிந்துகொள்ள நமக்கு அதிகாரம் வேண்டும். எல்லோரும் ஒரே மாதிரியான அதிகாரிகள் அல்ல. பல பல வித்யாஸமான அதிகாரிகள் இருக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் ஒரே மாதிரி ஸமமாய்ச் சொல்வது ஸாத்யமல்ல. இருந்தாலும் தற்காலம் உபந்யாஸம் செய்வது மார்க்கமாய் இருப்பதால் அதையே அவலம்பித்துச் சொல்லும்போது, எல்லோருக்கும் ஸமமாக ஸாமான்ய வழியாய்த்தான் சொல்ல முடிகிறது. பிரஹ்மம் என்பது இன்னது என்று நாம் தெரிந்து கொண்டுவிட்டால் நமக்கு சாஸ்திரமும் வேண்டாம், மற்ற ஒன்றும் வேண்டாம். நமது சுயபுத்தியால் அறிந்துகொள்ளக்கூடுமாய் இருந்தால் சாஸ்திரமே

நமக்கு வேண்டிவராது. அப்படி அறிந்துகொள்ளக்கூடாததாய் இருப்பதால்தான் சாஸ்திரம் வேண்டியிருக்கிறது.

நமக்கு எதைப்பற்றியும் ஓர் அறிவு வேண்டுமானால் ''ஆஸ்திக்யம்'' வேண்டும். ஆஸ்திக்யம் என்றால் என்ன? 'தெரிந்துகொள்ளவேண்டும்' என்ற ஆசை நமக்கு ஸாமான்யமாய் இருக்கிறது; தெரிந்துகொள்வதென்றால் தெரிந்து கொள்ள வேண்டிய வஸ்து ஒன்று உண்டு என்பது ஸித்தம் ஆகிறது அல்லவா?

அப்படி ஒரு வஸ்து உண்டு என்கின்றவன் ''ஆஸ்திகன்.'' ''अस्ति'' 'இருக்கின்றது' என்று சொல்லுகிறவன் ஆஸ்திகன். 'இருக்கிறது' என்ற அர்த்தத்தைக் கொடுக்கிற अस्ति என்ற சப்தத்திலிருந்து உண்டான வார்த்தை 'ஆஸ்திக்யம்' என்பது. 'இருக்கின்றது' என்று சொல்லுகிறவன் ஆஸ்திகன்.

नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा
आस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ।
अस्तीत्येवोपलब्धस्य तत्वभावेन चोभयो:
अस्तीत्येवोपलब्धस्य तत्वभाव:प्रसीदति ॥

(कठ 2,6,12,13)

என்றபடி இருக்கிறதென்றால் எது இருக்கின்றது? நாஸ்திகன் இல்லை என்று சொல்லுகிறான்; அவன் எதை இல்லை என்று சொல்லுகிறான்? நாஸ்திகனும் சில வஸ்துக்கள் இருக்கின்றன என்று ஒப்புக்கொள்ளுகின்றான். அவன் தேஹமே ஆத்மா, அது ஸ்வதந்திரமுள்ளது என்று சொல்லுகின்றான். இதனால் இவன் ஆஸ்திகன் ஆகிறதில்லை. அதேமாதிரி ஆஸ்திகனும் சில வஸ்துக்கள் இல்லையென்று சொல்லுகிறான், பிரபஞ்சமே கிடையாது, மித்யை என்கிறான். இதனால் இவன் நாஸ்திகன் ஆகிவிடுகிறதில்லை. மேலே சொன்ன விஷயங்களால் மட்டும் நாஸ்திக ஆஸ்திக வ்யவஸ்தை ஏற்படுகிறதில்லை. ஆனால் எதனால் ஏற்படுகிறதென்றால், நாஸ்திகன் எதை இல்லை என்கிறானோ அதை உண்டென்றும், அவன் இருக்கின்றது என்பதை இல்லை என்றும் சொல்வதால் நாஸ்திக ஆஸ்திக வித்யாஸம் உண்டாகின்றது. நாஸ்திகனுக்குத் தேஹமே ஆத்மா, ஜந்மாந்தரம் இல்லை, பிரத்யக்ஷமே பிரமாணம், வேதம் பிரமாணமல்ல, ஈச்வரன் கிடையாது, பரலோகமே இல்லை.

ஆஸ்திகனுக்கோ தேஹம் ஆதமா அல்ல, வேதமே பிரமாணம், ஜந்மாந்தரம் உண்டு, பரலோகம் உண்டு, ஈச்வரன் உண்டு.

இந்த இரண்டு கக்ஷிகளில் எது சரி? இரண்டும் ஸரியாய் இருக்கமுடியாது. ஒன்றுக்கொன்று நேர்விரோதமாய் இருப்பதால் ஏதாவது ஒன்றுதான் ஸரியாய் இருக்கமுடியும். ஆகையால் எது சரி என்று விசாரிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

விசாரத்திற்கு நியாயம் இருந்தாலும், விசாரத்தால் பலன் இல்லாமல் போனல் விசாரம் நிரர்த்தகமாகிவிடுவதால் இந்த விசாரத்தால் பலன் என்ன என்றும் யோசிக்கவேண்டியிருக்கிறது.

தற்காலத்தில் நிஷ்பிரயோஜனமான சில விசாரங்கள் வழங்கி வருகின்றன. காகஸ்ய கதி வா தந்தா: என்றபடி, காக்கைக்கு எத்தனை பல் என்று காக்கையின் தந்தபரீக்ஷை செய்வதுபோல் நாம் செய்யும் விசாரம் யாதொரு பலனுமற்றது அல்ல. नास्ति चेत् नास्ति मे हानिः अस्ति चेत् नास्तिको हतः என்றபடி இல்லையென்பது நிச்சயமானல் நமக்கு ஹானி வந்தது அன்றுமே இல்லை. இருக்கிறது என்பது நிச்சயமானல் நாஸ்திகன் தொலைந்துபோகிருன். ஓர் இடத்தில் புலி இருக்கிறதென்று நம்பினல் நான் தூர விலகிப்போய் க்ஷேமத்தை அடைகிறேன். நாஸ்திகன் இல்லை என்று நினைத்து கிட்டப் போனல் ஹதமாவது நிச்சயம்தானே. இப்படியே ஓர் இடத்தில் க்ஷேமம் கிடைக்குமென்று நம்பிப் போனல் கிடைத்தாலும் கிடைக்கலாம். நாஸ்திகனே இல்லை என்று நினைத்து யாதொரு பிரயத்தினமும் செய்யப் போவதில்லை. ஆகையால் ஆஸ்திக்யத்தால் க்ஷேமம் உண்டு.

சிலர் நமது ஆசார்யாள் எப்பொழுது பிறந்தார் என்று விசாரிக்கிருர்கள். இதில் என்ன பிரயோஜனம் ஏற்பட்டு விடும்? அவர் எப்பொழுது ஜனித்தால் என்ன? அதனல் நமக்கு என்ன குணம் ஏற்பட்டுவிடும்? பகவத்பாதர் லோகோபகாரமாய்ச் செய்திருக்கும் கிரந்தங்களை வாசித்து அதனல் வரும் பலனை அனுபவிக்காமல் அவர் எப்பொழுது ஜனித்தார் என்று வீண் விசாரம் செய்யும் மனுஷ்யர்களை என்னென்றுதான் சொல்வது? இப்பொழுது அந்த விஷயத்தை நிஸ்ஸந்தேகமாய் நிர்ணயிக்க முடியுமா? இதுவுமல்லாமல் வேதம் எப்பொழுது உண்டாயிற்று என்று விசாரித்துக்கொண்டு வீண் காலக்ஷேபம் செய்கிருர்கள். வேதத்தில்

சொல்லி இருப்பதைத் தெரிந்துகொண்டு பயனை அடையாமல் இந்த வ்யர்த்த காலஹரணம் செய்வதால் என்ன பிரயோஜனம் உண்டாகிவிடும்?

நாம் முன்னே சொன்ன நாஸ்திக ஆஸ்திக மதங்களில் எது சரி என்று நிஷ்கர்ஷை செய்ய ஏற்படுத்தும் விசாரம், இப்போர்ப்பட்ட நிரர்த்தகமான விசாரம் அல்ல. நாஸ்திகம் சரியானுல் நமக்கு மிகவும் சுகமுண்டாகும். தேஹாந்தரம் லோகாந்தரம் இல்லையானுல், நாம் சுகமாக இருந்துவிட்டு ஆஸ்திகர்கள் சொல்லும் கர்மாக்களை ஒன்றும் செய்யாமல் யதேச்சையாய் இருந்துவிடலாமல்லவா? அல்லது ஆஸ்திகம் ஸரியானுல் நாஸ்திகனுக்கும் நமக்கும் நல்லது கிடைக்கின்றது. அவனும் க்ஷேமம் அடையும் மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு அதை அவலம்பித்து நல்ல கதியை அடைகிருன்.

பார்ப்போம். நாஸ்திகன் சொல்லும் ஜந்மாந்தரம் இல்லை என்பதும், ஈச்வரன் இல்லை என்பதும், வேதம் பிரமாணமல்ல என்பதும் ஸரிதானு என்று யோசித்துப் பார்ப்போம். ஜந்மாந்தரம் உண்டென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இதனுல் என்ன பலன் என்ருல் ஆத்மாவுக்கு பரலோகம் உண்டென்ருல் நல்ல காரியங்கள் செய்து பரலோகத்தில் க்ஷேமத்தை ஸம்பாதிப்பதும், பரலோக க்ஷேமத்திற்கு ஹானியாய் இருக்கிற கெட்ட காரியங்களில் பயந்து அவைகளை நீக்குவதும் உண்டாகுமல்லவா?

தேஹாந்தரம் உண்டென்று வேதத்தில் அநேக இடங்களில் சொல்லி இருக்கிறது.

योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः ।
स्थाणुमन्येऽनुसंयन्ति यथा कर्म यथा श्रुतम् ॥

(கடோ 2-5-7)

तद्य इह रमणीयचरणा अभ्याशोह यत्ते रमणीयां योनिमापद्येरन् ब्राह्मणयोनिं वा क्षत्रिययोनिं वैश्ययोनिं वाऽथ य इह कपूयचरणा अभ्याशोह यत्ते कपूयां योनिमापद्येरन् श्वयोनिं वा सूकरयोनिं वा चण्डालयोनिं वा ॥

(छान्दोग्य 5-10-7)

இந்த வேதப்பிரமாணத்தைச் சொன்னுல் நாஸ்திகன் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. ஏன்? அவனுக்கு வேதம் பிரமாணமே அல்ல. ஆகையால் யுக்திகள் சொல்லித்தான்

அவனைத்திருத்தமுடியும். ஏனென்றால், நாஸ்திகனும், தேஹாந்தரம் இல்லை, லோகாந்தரம் இல்லை, வேதம் பிரமாணம் அல்ல, என்ப தற்கு அவன் ஏதாவது யுக்தி சொல்லித்தானே ஸாதிக்கமுடியும். ஆகையால் அவனுக்கும் ஸம்மதமான யுக்திகளாலேயே சொன்னால்தான் அவன் ஒப்புக்கொள்வான்; தேஹம்தான் ஆத்மா, பரலோகம் இல்லை என்று சொல்வதும் அவனுடைய யுக்திகொண்டுதானே. பரலோகம் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதால் யுக்திகளால் தெரிந்துகொள்ளலாம். பசுக்கள் தங்கள் தேஹரக்ஷணார்த்தம் தங்களுக்கு வேண்டியவைகளைச் செய்துகொள்ளுகின்றன, அன்று பிறந்த கன்று ஸ்தன்யபானம் செய்கிறதெப்படி? நாட்டிலாவது மனிதர்கள் ஊட்டப்பழக்குகிறார்கள் என்று சொல்லக்கூடும். அரண்யத்தில் யார் வந்து இந்தக் காரியம் செய்கிறார்கள். ஒருவருமில்லையே! சில ஸமயங்களில் தாய் ஒரு கரையிலும் கன்று மற்றக் கரையிலும் இருந்தால், கன்று தானாகவே நீந்தித் தாயிருக்கும் கரைக்கு வந்துவிடுகின்றது. அது எப்படி? பிறந்தவுடன் நீந்த அதற்கு யார் கற்றுக்கொடுத்தார்கள்? இந்த மாதிரி யுக்திக்காக ஸ்ரீ சங்கர வாக்கியத்தில் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன.

कश्चिद्दु:खी स्वजन्मप्रभृति सुखयुतश्चापरः कस्य हेतोः
कस्मादाद्या प्रवृत्तिस्तनुरपि च कुतः किन्नवेत्ति प्रमीतः ।
स्वाभाव्यं हेतु साम्ये सममिति विदितं दीपबीजाङ्कुरादौ
वैषम्यं कर्मजन्यं यदि गदसि जनैः पूर्वमप्यात्मसिद्धिः ॥

இந்தமாதிரி கேள்விகளுக்கு நாஸ்திகன் என்ன பதில் சொல்ல முடியும்? போகட்டும், பசுஜாதிகளை விட்டுவிட்டு மனுஷ்யர்களைப் பார்த்தாலோ அங்கேயும் அப்படித்தானிருக்கிறது. மனுஷ்யர்களில் சிலர் குருடர், சிலர் செவிடர்; சிலர் புத்திமான்கள், சிலர் மந்தபுத்தியை உடையவர்கள்; சிலருக்கு ஒருவித ருசி, மற்றவர்களுக்கு வேறு விதம்; சிலர் நொண்டி, சிலர் சரியான காத்திரமுடையவர்கள்; சிலர் ரோகிகள், சிலர் தலைவலியும் அறியாதவர்கள். சரீரமே ஆத்மாவானால் இந்த ரோகம் ஏன் வரவேண்டும்? எப்படி வந்தது? மாதாபிதாக்களிடமிருந்து ஜன்யமானதால் அவர்களிடமிருந்து வந்தது எனலாம்.

அப்படியாஞல் அரோகிகளான மாதாபிதாக்களிடத்தில் ரோகிகளான குழந்தைகளேயும், ரோகிகளுக்கு ஸ்வச்சமான சிசுக்கள் இருப்பதையும் கண்டிருக்கிருேமே. அதெப்படி? மேலும், ஒரே மாதாபிதாக்களுக்கு ரோகமுள்ள குழந்தைகளும், திடகாத்திரமுள்ள குழந்தைகளும் இருக்கின்றனவே. இப்படியே புத்திவிசேஷத்திலும் வித்யாஸம் இருக்கின்றது. ஒருவனுக்கு மஹாமேதை இருக்கிறது; மற்றவன் சுத்த முட்டாள். ஒருவனுக்கு கணிதத்தில் பிரியம்; மற்றவனுக்கு சாஸ்திரம். ஒருவனுக்கு எத்தனே தூரம் ஸந்தை சொன்ஞலும் வருகிறதில்லே; மற்றவன் ஒரு தடவை சொன்ன மாத்திரத்தில் பிடித்துக் கொள்ளுகிருன். மேலும், ஒருவனுக்குப் புளிப்பில் பிரியம், வேறு ஒருவனுக்குக் காரம், இன்ஞெருவனுக்குத் தித்திப்பு. ஆகையால் பிதாமாதிரி புத்திரன் ஆகிருன் என்று சொல்லுவதற்கில்லே. அந்தமாதிரி ஆகிறதில்லே. ஹிரண்யாக்ஷன் பரமவிஷ்ணு த்வேஷி. அவன் வயிற்றில் பரம பாகவதஞன பிரஹ்லாதன் பிறந்ததாக புராணங்கள் கூறுகின்றன. தர்மாத்மாவான பிதாவுக்கு மற்றவரை ஹிம்ஸித்து அவர்களின் துக்கத்தைப் பார்த்து ஸந்தோஷித்த அஸமஞ்ஜன் பிறந்தான். அவனுடைய கெட்டதனத்தைப் பார்த்து அவனே ராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு யோக்யதை இல்லே என்று நீக்கவேண்டிவந்தது. ஆகையால் பிதாமாதிரி புத்திரன் ஆகிறதில்லே என்று ஸித்தமாகிறது. வேறு ஏதாவது காரணம்தான் சொல்லவேண்டிவருகிறது.

காரண வித்தியாஸமில்லாமல் காரிய வித்தியாஸம் ஏற்படுகிறதில்லே. ஒரு நிலத்தில் நெல் விதைத்தால், எல்லாம் ஸரியாக நெல்லாகவே முளேக்கும். வேறு ஒன்றும் முளேக்காது. நெல்லும், புளியும், இன்னும் மற்றவையும் சேர்த்து விதைத்தால் அந்தந்த பீஜானுஸாரியாய் அந்தந்த பயிர் உண்டாகின்றது. அப்படியே கருப்பு மண்ணில் செய்த பாண்டம் கருப்பாய் இருக்கின்றது. சிவப்பு மண்ணிஞல் செய்தது சிவப்பாய் இருக்கின்றது. ஜந்யத்வம் எல்லாருக்கும் ஸமஞய் இருந்தும், காரணம் வித்தியாஸமாய் இருந்ததால்தான் காரியவித்தியாஸமான வெவ்வேறு வர்ணமுள்ள பாண்டங்கள் உண்டாகின்றன. இதற்கு நாஸ்திகன் பதில் சொல்லுவதற்காகிறதில்லே. நம்மவர்கள் இதற்குக் காரணம் ''கர்மா'' என்று சொல்லுகிருர்கள். உத்தரராமசரிதத்தில்

वितरति गुरुः प्राज्ञे विद्यां यथैव तथा जडे
न च तयोर्ज्ञाने शक्तिः करोत्यपहन्ति वा।
भवति च तयोर्भूयान्भेदः फलं प्रति तद्यथा
प्रभवति शुचिर्बिम्भोद्ग्राहे मणिर्न मृदाञ्चयः ॥

என்றபடி குருவானவர் தன் சிஷ்யர்களுக்கு ஒரேவிதமாய்த்தான் பாடம் சொல்லிக்கொடுக்கிறார். ஆனால் ஒருவன் சரியாய்த் தெரிந்துகொள்ளுகிறான்; மற்றவன் தெரிந்துகொள்ளுகிறதே இல்லை; இன்னொருவன் கொஞ்சம்தான் தெரிந்து கொள்ளுகிறான்; வேறு ஒருவன் தப்பாகத் தெரிந்து கொள்ளுகிறான். இதற்கு என்ன காரணம்? குரு சொல்லிக் கொடுப்பதில் ஏதாவது வித்தியாஸம் உண்டோ? கிடையாது. உண்டென்றால் மந்தபுத்தியுள்ள மாணாக்கரிடம் பிரேமையோடு இரண்டுமூன்றுதடவை நன்றாகச் சொல்லிக்கொடுக்கிறார். இதுதானே லோகத்தில் ஸத்குருக்களின் வழக்கமாய் இருக்கிறது. அப்படியும் ஏன் பலன் உண்டாகவில்லை?

வஜ்ரமணியை எடுத்துக்கொள்வோம். அதுவும் மண்தான். அதற்கு எப்படி பாளபள்யம் ஏற்பட்டது? சுவரும் மண்தான். அதில் ஏன் இல்லை? வஜ்ரத்தில் ஒரு பாக விசேஷம் இருக்கின்றது. மேலும் அதே வைரத்திற்கு சாணைபிடித்தால் இன்னும் அதிக ஜ்வலிப்பு உண்டாகின்றது. அது ஸம்ஸ்காரவிசேஷம் தானே! அப்படியே கண்ணாடியை எடுத்துக்கொள்வோம். ஒரே கண்ணாடியில் பலவிதமான பிம்பகிரஹணசக்தி இருக்கின்றது. கண்ணாடியும் மண்தான். சுவரும் மண்தான். சுவற்றில் பிம்பகிரஹணசக்தியேன் இல்லை? மேலும் கண்ணாடியிலேயே வித்யாஸமிருக்கின்றது. ஒன்று ஸரியாகக்காட்டுகின்றது; மற்றொன்று தலைகீழாகக்காட்டுகின்றது; ஒன்று பூதாகாரமாய்க் காட்டுகின்றது; ஒன்று குறுக்காய்க் காட்டுகின்றது. நேராகக் காட்டும் கண்ணாடிகூட அழுக்கடைந்திருந்தால் சரியாய்த் தெரிகிறதில்லை. இதேமாதிரிதான் புத்திக்கும். புத்தியின் நைர்மல்யத்தால் சீக்கிரகிரஹணசக்தி ஏற்படுகிறதே தவிர வேறல்ல; இப்படியேதான் சுகதுக்காதிகளுக்கும் சொல்லவேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு புத்திக்கும், முன்னமேயே எப்படி ஸம்ஸ்காரம் ஏற்பட்டிருக்கின்றதோ, அப்படித்தான் இப்பொழுது குணவிசேஷங்கள் தோன்றுகின்றன. ஒரே தாயின் பிள்ளைகளில்

ஒருத்தனுக்கு முன் சொன்னதுபோல் புளிப்புப் பிரியம், மற்றவனுக்குக் காரம்; ஒருத்தனுக்கு சிவன்மேல் பக்தி, மற்றவனுக்கு விஷ்ணு, வேறு ஒருவனுக்கு தேவி இஷ்டதேவதை. அதனுல்தான் பெரியவர்கள் மந்திரோபதேசம் செய்யுங்காலத்தில் ஒருவனுடைய மனப்ரீதியைத் தெரிந்துகொண்டுதான் மந்திரோபதேசம் செய்கிருர்கள். சிஷ்யனுக்கு ருசி இருப்பதால் நல்ல உழைப்பும், அதனுல் மேலான பலனும் அப்பொழுதுதான் கிடைக்கின்றது.

இதற்காகத்தான் வியாஸர் பதினெட்டு புராணம் எழுதி இருக்கின்ருர். ஒன்றில் சிவனை ஸ்தோத்திரம் செய்திருக்கிருர்; மற்ருென்றில் விஷ்ணுவுக்கு பிராபல்யம் கொடுத்திருக்கின்ருர்; மற்ருென்றில் சுப்பிரமணிய ஸ்வாமிக்கு. வெவ்வேறு மனிதர் அப்படிச் செய்திருந்தால் ஏதோ காரணம் சொல்லலாம். ஒரே மனிதர் வெவ்வேருய்ச் சொன்னுல் அதன் தாத்பர்யம் வஸ்துபேதமொன்றுமில்லை, புத்தியின் பாகப்படி அவரவர்கள் ஆராதித்து கிருதார்த்தர்கள் ஆகட்டும் என்றுதானே சொல்லக்கூடும். ஒரு வஸ்துவைப் பற்றிச் சொல்ல வேண்டுமானுல் ஒரு புஸ்தகம் எழுதினுல் போதுமானது. பதினெட்டு புஸ்தகங்கள் என்னத்திற்கு? அதிலும் இத்தனை பேதமும் வித்யாஸமும் ஏன்? மேலே நாம் சொன்னது சரியல்லவென்று தோன்றினுல் அநர்த்தம்தான் ஸித்திக்கும்.

வியாஸர் பதினெட்டு புராணங்களில் சொல்லியபடி சிவனும் பெரியவன், விஷ்ணுவும் பெரியவன், ஸ்கந்தனும் பெரியவன் என்ருல் மகா நாசம் அல்லவா ஏற்பட்டுவிடும்! அநேக எஜமானர்கள் ஓர் இடத்துக்கு இருக்க முடியுமோ? உடனே உலகம் நசித்துப்போய்விடாதா? ஒரு யஜமானன் தான் இருக்க முடியும். இதை வியாஸர் அறியாரா? ஸ்திரமான ஏற்பாடு ஒன்றுமே இல்லாமல் தாறுமாருய்ப் போய்விடுமன்ருே? பிரம்மா சிருஷ்டிக்கவேண்டுமென்று நினைக்க, ருத்ரன் ஸம்ஹாரம் பண்ணவேணுமென்று நினைத்தால் அப்புறம் எது ஏற்படுவது? சிருஷ்டியா, ஸம்ஹாரமா? இப்படி அவ்யவஸ்தை ஏற்பட்டு விடுமாதலால் ஒரே யஜமானன்தான் என்பதை ஸர்வ மதங்களும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். புராணங்களில் சொல்லப் படுவது ஒரே ஈச்வரனைப்பற்றித்தான். தத்துவத்தில் வித்யாஸமில்லை. ஆனுல் உபாஸகனுடைய புத்திஸம்ஸ்காரத்தின்படி அவனவன்

ஆராதித்து ஸத்கதி அடையட்டுமென்றுதான் வியாஸர் பதினெட்டு புராணங்களைச் செய்திருக்கிருர். அதெப்படி என்ருல், தாய் தகப்பன்மார் ஒரு குழந்தையின் அப்தபூர்த்தியன்று, அந்தக் குழந்தைக்குச் ஸகலாபரணங்களையும் போட்டுக் கொண்டாடுகிருர்கள். மற்ருெரு குழந்தைக்கு அப்தபூர்த்தி ஏற்படும்பொழுது ஸகல ஆபரணங்களையும் போட்டும், முன் பிறந்த அந்தக் குழந்தையின் ஆபரணத்தையும் போட்டுக் கொண்டாடுகிருர்கள். இதன் தாத்பர்யம் என்ன? அன்று அந்தக் குழந்தைக்குப் பிராதான்யம்; இன்று இந்தக் குழந்தைக்கு. விச்வாஸம் இரண்டுக்கும் ஒரே மாதிரிதான். அன்றைக்கு அது விசேஷம்; இன்றைக்கு இது; அவ்வளவுதான். வியாஸருக்கு வித்தியாஸமில்லை. நம்ம புத்திக்காக சொன்னது. பூர்வ வாஸனையால் வந்த வித்யாஸம். பூர்வகர்மாவை ஒப்புக்கொண்டால் இதற்கு பதில் சொல்ல முடியும். பூர்வஜன்மத்தில், சிவரூபமாய் ஆராதித்ததால், இந்தக் குழந்தைக்கு சிவன்மேல் பக்தி; மற்றவனுக்கும் அப்படியே விஷ்ணு. இதுதான் சொல்லமுடியும். பூர்வ கர்மாவைப்பற்றி ஸ்ரீ மஹாபாரதத்தில் ஓர் உபாக்யானம் இருக்கிறது. அதாவது ஆணிமாண்டவ்யர் கதை. அவர் ஒரு பெரிய ரிஷி. ஓர் அரசனிடத்தில் அநேக திருடர்கள் திருடிவிட்டு எங்கேயோ ஓடி ஒளிந்துக் கொண்டார்கள். உத்தியோகஸ்தர்கள் தேடிவரும்போது திருடர்களுடன் இந்த ரிஷியையும் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அரசன் விசாரித்து திருடர்களுடன் இவரையும் சூலாரோஹணம் செய்யும்படி உத்தரவிட்டான். சூலத்திலேயே இருந்துகொண்டு இருந்த ரிஷியைப்பார்த்து ராஜன் மறுபடி தீர விசாரித்து அவர் நிரபராதியென்று தெரிந்துகொண்டு சூலத்திலிருந்து அவரோஹணம் செய்வித்தான். அப்படிச் செய்தும் சூலத்தின் நுனி அவரை விட்டுவிடவேயில்லை. காரணம் தெரியாததால் யோகபலத்தால் யமனை விசாரித்ததில், சிறு குழந்தைப் பிராயத்தில் குச்சியால் ஒரு புழுவைக் குத்தினதற்காக ஏற்பட்ட தண்டனை என்று யமன் சொல்ல, அந்த ஜீவஹிம்ஸை எப்பொழுது ஏற்பட்டது என்று வினவி, எட்டு வயதில் ஏற்பட்டது என்று தெரிந்துகொண்டு, உடனே யமனைப்பார்த்து, இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறிய சக்தி இல்லாதிருந்த காலத்தில் செய்த கர்மாவுக்காக இந்த தண்டனை தகாததால் யமனைச் சூத்திரயோனியில்

ஜனிக்கும்படி சாபம் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. இப்படி இருக்கும்போது பிறவிக்குருடனையும், பிறவிச் செவிடனையும் ஏன் செய்தார் கடவுள்? எட்டு வயது வரையிலும் செய்த கர்மத்திற்கே பலன் இல்லையானால் பிறவிக் குருடு இத்யாதிகள் எப்படி வந்தன? ஈச்வரன் செய்தான் என்றால் வைஷம்யம் (பக்ஷபாதம்), நைர்க்ருண்யம் (தயையின்மை) என்ற இரண்டு தோஷங்கள் ஈச்வரனுக்கு வந்துவிடுகின்றன.

தோஷத்தோடுகூடியவன் ஈச்வரன் ஆக முடியுமா? தோஷரஹிதனாக அல்லவோ இருக்கவேண்டும். அதுவுமன்றி பக்ஷபாததோஷம் வரலாமோ? லோகத்திற்கு ஹிதமாக அநேக சாஸ்திரங்களை உண்டுபண்ணின ஈச்வரன் துக்கத்தை சில ஜனங்களுக்கு . வேணுமென்றே கொடுத்தான் என்பது ஒப்புக்கொள்ள முடிகிறதில்லை.

வேதசாஸ்திரங்கள் ஈச்வரனால் செய்யப்பட்டவை. अनन्ता वै वेदाः என்றிருக்கிறபடியால், ஒரு சாகையையே தெரிந்துகொள்ள முடியாத நாமா, வேதசாஸ்திரங்களைச் செய்ய முடியும்? சாஸ்திரகர்த்தா ஈசன் என்பதில் எள்ளளவும் ஸந்தேஹமில்லை. ஸகலருக்கும் சுகத்தைக்கொடுத்து துக்கத்தை நீக்க ஸித்தனாய் இருக்கிற ஈசனை, தானே இஷ்டப்பட்டு ஒருவனுக்கு அந்தத்துவாதி (குருட்டுத்தன்மை முதலிய) கஷ்டத்தையும், மற்றவருக்கு சுகத்தையும் கொடுத்தான் என்று சொல்வது பொருந்தாது. நம்முடைய கர்மத்தை அபேக்ஷித்துச் செய்கிறானே தவிர தானாகச் செய்கிறதில்லை.

ஓர் அரசனை எடுத்துக்கொள்வோம். அவன் தனது பிரஜைகளுக்கு, தன்னிஷ்டப்படி சுகதுக்கங்களைக்கொடுத்தால், அவனை பக்ஷபாதன் என்றுதானே சொல்லவேண்டும். ஒருவனுடைய ஸேவை முதலியவைகளை உத்தேசித்து ஸம்மானம் செய்தாலும், மற்றவனுடைய குற்றங்களை உத்தேசித்து தண்டித்தாலும் ராஜனுக்குத் தோஷம் ஸம்பவிக்காது. அதுபோல் ஈசனும் கர்மானுஸாரமாய் சுகதுக்கங்களைக் கொடுக்கின்றான். ஒரே மனிதன் சிலகாலம் ஸம்மானமும், பின் அவனுடைய நடத்தையின் தோஷத்தால் ராஜகிருபாநாசமும் அடைவதுபோல், சுகிருத துஷ்கிருத பலனாக ஜாத்யந்தனாய் (பிறவிக்குருடனாய்) இல்லாவிட்டாலும், பிறந்த பிறகு சில துஷ்கிருத்யத்தால் கண்

போய்விடுவதையும் பார்த்திருக்கிறோம். இப்படியே மற்றவைகளுக்கும் ஊஹித்துக்கொள்ள வேண்டும். பரமதயாளுவாய் ஜீவோத்தாரம் செய்யக் காத்துக்கொண்டிருக்கும் கருணாமூர்த்திக்கு நைர்க்ருண்யதோஷம் கிடைப்பதும் இதுபோல் நியாயமல்ல.

ஆகையால் ஒரே ஈசனும் வேண்டும், கர்மமும் வேண்டும். ஆதலால் ஜன்மாந்தரம் நிச்சயமாகிறது. ஜன்மாந்தரம் நிச்சயமானால் ஆத்மா நித்யம் என்பது நிச்சயமாய் ஏற்படுகிறது. மேலும், முதல்முதல் ஒவ்வொரு ஜீவனும் செய்யும் காரியம் எப்படி வந்தது. कस्मादाद्या प्रवृत्तिः யாரும் நிஷ்பலமான காரியத்தைச் செய்யமாட்டார்கள் அல்லவா. प्रयोजनमनुद्दिश्य न मन्दोपि प्रवर्तते என்றபடி ஒரு பிரயோஜனத்தை உத்தேசித்துத்தானே உலகத்தில் ஸகல பிரவிருத்திகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த இஷ்டஸாதனதாஞானம் எப்படி வந்தது? இந்த ஞானத்திற்கு மூன்று வேண்டும். जानाति, इच्छति प्रवर्तते என்றபடி முதலில் அறிகிறான், அப்புறம் பிரியப்படுகிறான், பிறகு பிரயத்தனப்பட்டு அடைகிறான்.

கடையில் ஒரு பதார்த்தம் வைத்து இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்த பதார்த்தம் இருக்கிற தென்று முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அறிந்து கொள்ளாதுபோனால் வேறொரு விகாரமும் ஏற்படப்போகிறதில்லை. பிறகு அறிந்ததின்மேல் அதை அடையவேண்டுமென்ற இச்சை வேண்டும். இந்த இச்சை இல்லாதிருந்தாலும் ஒன்றும் தோஷம் வந்துவிடாது. பிறகு இந்த இச்சையின்படி பிரவர்த்தி ஏற்படுகிறது. இதுதான் உலகவழக்கம்.

அப்படி இருந்தால் இந்த ஆத்யா பிரவர்த்தி அதாவது முதல் முதல் செய்யும் காரியம் எப்படி ஏற்பட்டது? எந்த ஞானத்தால்?

ஞானம் என்பது இரண்டு வகை. அனுபவம், ஸ்மரணம் என்று. அனுபவம் என்பது இது தூண், இது விளக்கு என்று நேரில் இருக்கும் வஸ்துக்களை அறிந்து கொள்ளுதல். எதிரில் இல்லாத வஸ்துக்களை முன்பார்த்த ஞாபகத்தால் தெரிந்துகொள்வது ஸ்மரணம்.

குழந்தைக்கு ஸ்தன்யபானத்தில் வந்த ஞானம் அனுபவமா? ஸ்மரணமா? ஸ்மரணம் என்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டியது. அனுபவம் என்றால் என்ன? அது மூன்று விதமானது.

i. பிரத்யக்ஷாத்மகம், ii. அனுமித்யாத்மகம், iii. சப்தாத்மகம். குழந்தைக்கோ கண் மூடியிருக்கிறது. சில ஐந்துக்களின் குட்டிகள் பிறந்து சில தினங்கள்வரை கண் முழிக்கிறதேயில்லை. இதுபோலவே மற்ற இந்திரியங்களுக்கும் சக்தி கிடையாது. ஆகையால் பிறந்த குழந்தையின் ஞானம் பிரத்யக்ஷாத்மகமல்ல. அனுமித்யாத்மகமுமல்ல; பார்த்திருந்தாலல்லவோ ஊஹிக்க முடியும். यत्र धूमः तत्र वह्निः புகையிருக்குமிடத்தில் நெருப்பு பிரத்யக்ஷாத்மக அனுபவமாகையால் புகையை வேறொரு இடத்தில் கண்டவுடன் நெருப்பு இருக்கிறதென்று ஊஹிக்கிரோம். பிறந்த குழந்தை ஸ்தன்யபானம் செய்யவேண்டுமென்று யாரிடம் முன்பார்த்துத் தெரிந்துகொண்டது.

சப்தமென்பது அர்த்தம் தெரிந்த வார்த்தையால் வரலாம். அர்த்தம் தெரியாமல் போனுல் அரண்யகோஷம்போல் யாதொரு அனுபவத்தையும் அது உண்டுபண்ணுகிறதில்லை. ஆகையால் இந்த ஆத்யா பிரவிருத்தி ஸ்மரணத்தால் உண்டாயிற்று என்றுதானே சொல்லவேண்டியிருக்கிறது.

அனுபவமே இல்லையே. ஸ்மரணம் எப்படி வந்தது? ஜன்மாந்தரத்தில் இருந்து வந்தது என்று ஒப்புக்கொண்டே தீரவேண்டியிருக்கிறது.

ஜன்மாந்தரம் உண்டானுல் ஆத்மா ஒன்று உண்டென்பதும், அது அழியாமல் வந்தது என்பதும் தெரியவருகிறது.

தவிர तनुरपि च कुतः? இந்த தேஹம் அநேக அவயவங்களான கை, கால், கண், மூக்கு, நாக்கு முதலியவைகளால் செய்யப்பட்டிருக்கிறது. அதினுலேயே இந்த தேஹத்திற்கு உடையவன் வேறு ஒருவன் இருக்கிருன் என்றும், அவனுக்காக செய்யப்பட்டது இது என்றும் தெரியவரும்.

சிறு குழந்தையைக் கேட்டாலும், இது என்னுடைய கை, என்னுடைய கால் என்று சொல்லுகின்றதே தவிர கையினுடைய நான் என்று சொல்லுகிறதோ? ஒரு கிருஹத்தைப் பார்த்தால் யார் வீடு என்று கேட்கிரோமேயொழிய, இந்த வீட்டுக்காக யார் பண்ணப்பட்டிருக்கிருர்கள் என்று கேட்கிரோமோ? இல்லையே. அவயவபேதாத்மகமான இந்த சரீரம் பரார்த்தமானது, வேறொருவருக்காகச் செய்யப்பட்டது என்று விசதமாகிறது. இந்த

தேகத்திற்கு ஸ்வாதீனம் இல்லை. நிரவயவனுன ஸ்வாமி ஒருவனுக்காக ஏற்பட்டது என்று ஸித்தமாகிறது.

மேலும், போவதற்கும் ஒரு ப்ரேரணை வேண்டும். இதை யார் செய்தது? தேஹமா? தேஹமானுல் செத்துப் போனதும் ஏன் ஞாபகமில்லை? ஏன் ஞானமில்லை? किन्नत्वेत्ति प्रमीतः தானே தெரிந்துகொள்கிறதுதானே?

ஒரேமாதிரி திரிக்கு ஒரேமாதிரி நெய்போட்டு விளக்கு ஏற்றினுல் எல்லா விளக்குகளும் சமமாகத்தான் எரியும். ஏற்றத்தாழ்த்தி இருந்தால் வித்யாஸம் வரும். இப்படியே ஒரே மாதிரி விதையை ஒரே நிலத்தில் விதைத்தால்பயிர்கள் எல்லாம் ஒரே வகையாகவும் ஒரே விதமாகவும்தான் முளைக்கும். ஆனுல் விதைகளில் ஜாதிவித்யாஸம் இருந்தால், பின்னம் ஏற்படும்; அல்லது விதைகள் கிருமி தூஷிதமாய் இருந்தாலும் பயிர்களில் வித்யாஸமும், ஒரு ஸமயம் முளைத்து உண்டாகி பின்பு அழிந்துவிடும்.

இதையெல்லாம் தானுகவே ஆகிறது, அதன் ஸ்வபாவம் என்று சொல்லுவோம் என்ருலோ அதுவும் பொருந்தாது. தானுய் ஆகிறது என்ற வார்த்தைக்கு அர்த்தமே கிடையாது. முன் இல்லாதது தானே இப்பொழுது ஆயிற்று என்றுதானே நாம் அர்த்தம் செய்துக்கொள்கிருேம். அப்படியானுல் இல்லாதது எப்படி உண்டாயிற்று? இப்படிப் பேசுதல் வீண் காலக்ஷேபமே தவிர பிரயோஜனம் ஒன்றும் இல்லை.

ஹிதம், அஹிதம் இதைச் சொல்லுவதுதானே சாஸ்திரம். அதாவது நமக்குத் தெரியாததைச் சொல்லுவது. தெரிந்ததைச் சொல்லவும் வேண்டுமோ?

गौरस्थूलो इवाहं पटुरिति च तनावात्मबुद्धिर्जडानां
स्वाभाव्यादेव सिद्धेत्यधिगमयदिदं निष्फलं दर्शनं ते ।
वेदद्वेषात्प्रवृत्तं यदि बत नितरां द्वेषमूलं प्रमाणं
दैवान्नष्टस्त्वमेकः किमिति शठ परान् हन्त हन्तुं प्रवृत्तः ॥

இவன் வெளுப்பு, இவன் தடியன் என்று சொல்ல சாஸ்திரம் வேண்டுமோ? சாப்பாட்டுக்கு சாஸ்திரம் சொல்லவேண்டுமோ? லௌகிக சாஸ்திர அப்யாஸத்தால் என்ன பிரயோஜனம்? வேத

துவேஷத்தால் வந்த வார்த்தைகளால் என்ன குணம் நமக்கு ஏற்படும்? துவேஷமூலகமானவை பிரமாணங்கள் ஆகுமா? நான் எனது விரோதியின் மகனே, ''கிணற்றில் விழுந்தால் மோக்ஷம் கிடைக்கும்'' என்று சொல்ல அவன் அதை நம்பி கிணற்றில் விழுவது போலாகும்.

स्वयं नष्टः परान्नाशयति ।

தற்காலத்தில் பௌதிக சாஸ்திரங்களுக்கெல்லாம் ''சாஸ்திரம்'' என்று பேர் வந்திருக்கின்றது. எப்படிப்போலென்றால், பசுவின் பாலுக்குத் தான் ''பால்'' என்றுபேர். கள்ளிப்பாலுக்கும் பால் என்று பெயர் அதுபோல். பசுவின் பாலைக் கண்ணுக்குப் போட்டுக்கொண்டால் கண்ணின் ரோகம் நீங்கி சுத்தமாகும். கள்ளிப்பாலைப் போட்டுக்கொண்டாலோ இருந்த கண்ணும் போய் உள்ளதும் நொள்ளையாகும்.

ஆதலால் வித்யாஸம் வந்ததிற்குக் காரணம் ஜன்மத்திற்கு முந்தி என்று சொல்வோமானால் ஆத்மா உண்டு என்பது ஸித்தமாகிறது.

वैषम्यं कर्मजन्यं यदि गदसि जनेः पूर्वमप्यात्मसिद्धिः ॥

இப்படி விசாரம் செய்ததில் நமக்கு ஆத்மா உண்டு என்பது கிடைத்தது. நாஸ்திகம் போயிற்று. போனதால் என்ன நஷ்டம்? தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதுபோல் ஆகும், சிகா நாசத்தால் சிகி க்ஷேமத்தை அடைவதுபோல்.

சரீரம் ஸ்வதந்திரமானால், அது இஷ்டப்படியெல்லாம் இருக்கலாமே! இருக்க முடியுமோ? இது வக்கீல்களுக்கு நன்றாய்த் தெரியும். நியாயஸ்தலங்களில் கக்ஷியெடுத்துப் பேசும்பொழுது, ஒரு ஸமயம் ஐந்து, ஆறு மணி நேரம் நின்றுகொண்டே பேச நேரிடுகிறதாம். அத்தனை காலம் யார் அந்த தேஹத்தை நிறுத்தி வைத்தார்? தூக்கம் வந்தால் ஏன் விழுகின்றது? பிராணன் போனால் ஏன் விழுந்துவிடுகின்றது? மரணத்தில் பிராணன் போய்விடுகின்றது, அவன் தாங்கிவந்தான், அவன் போய்விட்டான், ஆகையால் தேஹம் விழுந்துவிட்டது என்றாலோ, தூக்கத்தில் ஏன் விழுகின்றது? உடம்பே தானாக நிற்கவும் போகவும் முடியாது. அதற்கு ஸாமர்த்தியம் இல்லை. தனக்கு சிரமத்தால்

படுத்துக்கொண்டது என்ருலோ சிரமம் இருந்தும் பொருட்படுத்தாமல் போவதைக் கண்டிருக்கிரேம். வீராவேசத்தால்ஸைனிகர்கள் குண்டுபட்டதுகூடத் தெரியாமல் சண்டை செய்கிறதில்லையா? धृति उत्थम्बनम् முதலியவைகளால் நிச்சயம் பண்ணிக்கொண்டு சரீர சிரமத்தையும் பொருத்துக் கொள்ளுகிறதில்லையா? காலேவேளேயில் அல்பாஹாரம் செய்துக்கொள்ளும் மனிதன்கூட, சிரார்த்தகாலங்களில் சிறு தலேவலியையும் பொருத்துக் கொண்டு இருக்கிறதில்லையா? ஆகையால் கடோபநிஷத்தில் சொல்லியபடி:

न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन ।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ ॥

பிராணுபானங்களிஞல் மனிதன் ஜீவிக்கிறதில்லே. எதில் இவை இரண்டும் ஆசிரயத்தை அடைந்திருக்கின்றனவோ அப்பேற்பட்ட வேறு ஒரு வஸ்துவிஞல்தான் ஜீவிக்கிருன்.

பிறவிக் குருடன் ஸ்வப்நாவஸ்தையில் தான் ஏதோ கண்டதாகச் சொல்லுகின்ருனே அது எப்படி? அதேமாதிரி பிறவிச் செவிடன் கேட்டதாகச் சொல்லுகிருனே அது எப்படி? ஜ்வரக் கிரஸ்தனுய் இருப்பவன் ஜ்வரம் அடித்துக் கொண்டிருக்கும்பொழுதே ஜ்வரம் போனதாக நிஜேக்கின்ருனே அது எப்படி?

पादांगुष्ठशिरोयावत् कणशः प्रविचारितः ।
न लब्धोऽसावहं नाम को सावयमितिस्थितः ॥

பாதம்முதல் தலே பர்யந்தம் துண்டு துண்டாய் பரிசோதித்துத் தெரிந்துகொண்டது என்னவென்ருல் நான்வேறே என்பதுதான், நான் பார்த்த துண்டுகளில் ஒன்றிலும் கிட்டாததால். என்னுடைய கை, என்னுடைய கால் என்று சொல்வதிலிருந்தே நான் தனி என்பதும், நான் தேஹம் அல்ல என்பதும் ஸித்தமாகிறது.

கோயம்புரி என்று இந்தப்பட்டணத்திற்குப் பெயராம். எல்லோரும் "कोऽयम्" நான் யார், நான் யார் என்று விசாரம் செய்வது வழக்கமாய் இருப்பதால்தான் இந்த ஊருக்கு இந்தப் பெயர் ஸித்தித்ததோ என்னமோ! அதே விசாரம் உங்களிடத்தில் எல்லாம்

இருக்க வேண்டும். பிரம்மாண்டம் முதல் பரமாணுவரையில் தெரியும். நான் யார் என்ருல் அதுமட்டும் தெரியாது. இதைவிட துக்ககரமான அவஸ்தை என்ன இருக்கிறது? இந்த தேஹம் நான் என்பதை விட்டு, நான் வேறே, நான் நித்யன் என்று தெரிந்துகொள்ள வேண்டியது. வாஸிஷ்டத்தில் சொல்லுகிருர்

आपादमस्तकमहं मातापितृविनिर्मितः ।
इत्येको निश्चयो राम बाधायासद्विलोकनात् ॥
सा कालसूत्रपदवी सा महावीचिवागुरा ।
सा असिपत्रवनश्रेणिर्या देहेहमिति स्थितिः ॥

எவன் தேஹமே நான் என்று நினைக்கிருனே அவன் நரக வேதனை அனைத்தையும் அனுபவிக்கிருன்.

योऽन्यथा सन्तमात्मानमन्यथा प्रतिपद्यते ।
किं तेन न कृतं पापं चारेणात्मापहारिणा ॥

எவன், ஒருவிதமாய் இருக்கும் ஆத்மாவை வேறுவிதமாய்த் தப்பாய்த் தெரிந்து கொள்ளுகிருனே அப்பேர்ப்பட்ட ஆத்மத் திருடனால் என்ன பாபம்தான் செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகையால் தேஹமே நான் என்பதை விட்டுவிடவேண்டியது. எவனுக்குத் தன்னைத்தவிர வேறு வஸ்து இல்லையோ அவனுக்கு சத்ரு மித்ரர் ஏற்படுகிறதில்லை. அவனுக்கு துக்கமே கிடையாது. சதா ஸந்துஷ்டனாய் இருக்கின்ருன்.

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः ।

என்று கீதையில் சொல்லியபடி அவனுக்கு பஞ்சபூதங்களாலும், அஸ்திர சஸ்திரங்களாலும் துக்கமே ஏற்படுகிறதில்லை. ஸதா துக்கரஹிதனாய் ஆத்மாராமனாய் ஸந்தோஷத்துடன் கூடினவனாய் இருக்கிருன்.

அரண்யகோஷம்போல் நிஷ்பலமான இதர சாஸ்திர ஆராய்ச்சியைவிட்டு, தேஹாந்தரமுண்டா, ஆத்மா யார், நான் நான் என்பது யார்? எது? என்று விசாரித்தால், தேஹாந்தரம்

உண்டென்றும், ஆத்மா உண்டென்றும் தெரியவரும். அந்த நிச்சயத்தால் புண்யகர்மங்களில் ஆசையும், பாபத்தில் பயமும் உண்டாகும். சரீரம் ஆத்மா என்பது தொலையும். ஆத்மஸ்வரூபம் தெரிந்தவுடன் அப்பொழுதே துவேஷாதிதோஷங்கள் தொலைந்து சுகமடையலாம். அதை எப்படி அடையலாம், அதற்கு மார்க்கம் என்ன, ஆத்மஸ்வரூபமென்ன என்பவை பின்னால் சொல்லப்படும்.

2

அருளுரை

உபந்யாஸ நாள் : 14-6-1927 *கிழமை : செவ்வாய்*

நேற்று ஜன்மாந்தரம் உண்டு, சரீரம் ஆத்மா அல்ல, ஆத்மா நித்யன் என்று ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டது. இன்று வேதம் பிரமாணம் என்றும் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்போகிறது. ஏன்? ஜன்மாந்தரத்தை ஒப்புக்கொண்டதால்.

உலகத்தில் எல்லோருக்கும் சுகம் வேண்டும்; துக்கம் வேண்டாம் என்பதுதான் பிரியமாய் இருக்கிறது. सुखं मे भूयात् । दुःखं मे माऽभूत् । என்பதுதான் சகல பிராணிகளுக்கும் நோக்கம். இது மனுஷ்யஜாதிக்கு மட்டுமல்ல; ஸகல பிராணிகளுக்கும்கூட இதுதான் லக்ஷ்யம். கையில் ஒரு தண்டம் வைத்துக்கொண்டிருந்தால், பசுக்கள் அதைக் கண்டு பயந்து தூர ஓடிப் போகின்றன. ஏன்? கிட்ட வந்தால் அடி விழலாம்; அதனுல் துக்கம் உண்டாகும்; நமக்கு துக்கம் வேண்டாம் என்பதினுல்தானே? அதே மாதிரி கொஞ்சம் புல்லும் தண்ணீரும் வைத்துக்கொண்டிருந்தால் தூரத்திலிருந்துகூட கிட்ட வந்து, தின்ன ஆரம்பித்து, நீர் குடித்துப் போகிறது. ஏன்? இவைகளை உண்டு பசியாறலாம்; அதனுல் சுகம் கிடைக்கும் என்பதனுல் அல்லவா? சுகப் பிராப்தி, துக்க நிவர்த்தி இந்த இரண்டும் எல்லாருக்கும் லக்ஷ்யம் என்பதில் கொஞ்சம்கூட ஸந்தேஹம் இல்லை.

ஆனுல் ஸகல பிராணிகளுக்கும் அது கிடைக்கிறதா? இதைத்தான் யோசிக்க வேண்டும். எல்லோருக்கும் வேண்டுமென்ற ஆசைதான்; ஆனுல் உபாயம் தெரியாது. சுகத்தில் இச்சை மாத்திரம் இருக்கிறது; பிரயத்தினங்கள் எல்லாம், துக்க காரகமாய்

இருக்கின்றன. அவைகளேயே செய்கிறது ஸாமான்ய வழக்கமாய் இருக்கின்றது. சுகப் பிராப்திக்கும், துக்க நிவர்த்திக்கும் உபாயம் என்ன? இந்த சுகம் நாஸ்திகனுடைய பிரமாணங்களிளுல் கிடைக்கக்கூடியதா என்று யோசித்துப் பார்ப்போம்.

முதலில் பிரமாணம் என்ருல் என்ன? प्रमाकरणं प्रमाणम् அப்படி என்ருல்? முன்னுல் ஐந்து எழுத்தாய் இருந்தது இப்பொழுது எட்டு எழுத்தாய் ஆயிற்று; அர்த்தம் விளங்கவில்லேயே! ஆகையால் प्रमा (ப்ரமா) என்ருல் என்ன என்று விசாரிக்க வேண்டும். ப்ரமா என்ருல் ஸரியான ஞானம், நல்ல ஞானம் என்று அர்த்தம். பிராந்தியால் தப்பான ஞானம் ப்ரமா அல்ல. கயிற்றைக் கயிருக அறிந்தால் அது ப்ரமா, ஸரியான ஞானம் ஆகும். அதைப் பாம்பு என்று நினேத்தால் அது ப்ராந்தி, தப்பு. அதேமாதிரி கிளிஞ்சலே (शुक्ति) கிளிஞ்சலாக நினேத்தால் அது ப்ரமா. அதில் வெள்ளி இருப்பதாக நினேத்தால் அது அப்ரமா. இப்படியே ப்ரமா, அப்ரமாவாகத்தான் நம்முடைய அறிவு பிறந்திருக்கிறது. இந்த சரியான ஞானத்திற்கு எது காரணமோ அதாவது ஸாதனமோ அதுதான் ப்ரமாணம்.

இதோ! இந்த ஸ்தம்பம், இதைத் ஸ்தம்பம் என்று தெரிந்துகொண்ட ஞானத்திற்கு எது காரணம்? अयं स्तम्भः என்று நாம் எதனுல் தெரிந்துகொண்டோம்? இந்த சக்ஷுஸ், கண்களால்தானே! ஆகையால் இது ஸ்தம்பம் என்பதற்கு கண்கள்தான் ப்ரமாணம். அதே மாதிரி சப்த ஞானத்திற்கு காதுதான் ப்ரமாணம். இப்படியே வாஸனேக்கு க்ராணேந்திரியமும் (घ्राणेन्द्रियम्) ஸ்பர்சத்திற்கு த்வக்கும் (தோல்), ருசிக்கு ஜிஹ்வா, ரஸநேந்திரியமும் ப்ரமாணம் ஆகும். ஆகையால் ஸகல ஞானங்களுக்கும் பஞ்சேந்திரியங்கள்தான் பிரமாணமாகின்றன. ஆனுல் நாம் பிரயாணம் போய்க்கொண்டிருக்கையில், அனேக வஸ்துக்களேப் பார்த்தும் பார்த்ததாக ஏன் ஞானம் ஏற்படுகிறதில்லே? மனது அந்த இந்திரியங்களிடத்தில் ஸம்பந்தமில்லாததால். ஆகையால் மனதுதான் ஸகல இந்திரிய ஞானத்திற்கும் காரணமாகின்றது. அந்த மனது எதனுல் வேலே செய்கிறது? ஆத்மாவால். இதைத்தான்,

आत्मा मनसा, मनः इन्द्रियेण, इन्द्रियादर्थं, अर्थात्प्रत्यक्षं என்று நம்ம பெரியவர்கள் சொல்லி இருக்கிருர்கள்.

இந்த விஷயத்தில் சார்வாகன் பிரத்யக்ஷம் தான் பிரமாணம் என்று சொல்லிக்கொண்டிருக்கிருனே அவன் அதை எப்படித்

தெரிந்துகொண்டிருக்கிருன் என்று சற்று விசாரிக்க வேண்டும். அக்ஷம் என்ருல் இந்திரியம் என்று பொருள். இந்திரியத்தால் தெரிந்தால்தான் பிரமாணம் என்கிருன். இந்திரியங்கள் என்ருல் இந்த கோளாதிகளா? கண் என்ருல் ஏதோ வெளுப்பாய்க் கருப்பு கலந்து இருக்கிறதே இதுவா? காது என்ருல் இந்த கர்ணபாசமா? இந்த பௌதிகமான கருவிகளா இந்திரியங்கள்? இவைகளா ப்ரமாணங்கள்? அப்படியாளுல் கண் முதலியவை இருந்தும் தெரியாமலும், காது கேட்காமலும் இருக்கும் ஜனங்களை நாம் பார்த்திருக்கிருேமே. நாம் கால் தட்டித்தடுமாறுதலாலும், பேசியும் பதில் சொல்லாததாலும் தெரிந்துகொள்ளவேண்டிவருவானேன். தாளுகவே தெரிந்திருக்கவேண்டுமல்லவா? இந்த நேத்ரகோளமும், கர்ணபாசமும் ப்ரமாணமாளுல், அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிவருவானேன்? இதர நர நிரபேக்ஷகமாய் ஏன் ஆகிறதில்லை. ஆகையால் அவனுக்கு பிரத்யக்ஷமென்பதற்கு அர்த்தமே தெரியாது என்று தெரிகின்றது. அதளுல் நமக்கு ஞானம் உண்டாவது அதீந்திரியமானது; இந்திரிய வேத்யமன்று என்பது நிச்சயமாகிறது. கண்களிளுல் ஒரு வஸ்து இருக்கின்றது என்று தெரிந்துகொண்டான். ஸரி. அதேமாதிரி எனக்கும், மற்ற ஸகல பிராணிகளுக்கும் தெரிகின்றது என்று எப்படி தெரிந்துகொண்டான். அது ஊஹை அல்லவா? லோகத்திலிருக்கும் ஸகல கண்களுக்கும் பார்வை இருக்கின்றன வென்று எப்படி அறிகிருேம்? இது பிரத்யக்ஷமா, ஊஹையா, அல்லது சப்தமா? இன்றைக்குச் சாப்பிட்டோம், திருப்தியாயிற்று. நாளைக்கும் சாப்பிட்டால் திருப்தியாகும் என்பது பிரத்யக்ஷமா ஊஹையா? பிரத்யக்ஷமாளுல் நாளை சாப்பிடுவது என்னத்திற்கு? சார்வாகன் சொல்லுகின்ற பிரத்யக்ஷமொன்றுதான் பிரமாணமாளுல் உலகத்தில் ஒரு வியவஹாரமும் நடக்காது. ஒரு குழந்தை பிறக்கும்முன் பிதா இறந்துவிட்டான் என்றுவைத்துக் கொள்வோம். அந்தக் குழந்தைக்குப் பிதா பிரத்யக்ஷம் அல்லாததால் அந்தக் குழந்தைக்குப் பிதா இல்லை என்று சொல்லிவிடுகிறதா? இந்தக் காரணத்தால் சப்தம் அனுமானம் இவ்விரண்டையும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

அனுமானத்தைப்பற்றி பிரத்யக்ஷ பிரமாணம் பேசும் போதே சொல்லிவந்தோம். இனி சப்த ப்ரமாணத்தைப் பற்றிப் பேசுவோம். சப்த ப்ரமாணமென்ருல் அர்த்தம் தெரிந்தவனுக்கு வார்த்தையைக்

கேட்டமாத்திரத்தில் உண்டாகும் போதம். குழந்தை பிறந்ததாக ஒரு கடிதம் வந்தால் அதைக்கண்டு நாஸ்திகன் எப்படி ஸந்தோஷப்படலாம்? அவனுக்குக் கடிதம் ஒன்றுதான் பிரத்யக்ஷமேதவிர குழந்தையாவது பாணத்தியாவது பிரத்யக்ஷமல்லவே! அவன் ஏன் சர்க்கரை வழங்குகிருன்? கடிதம் மட்டும் வந்ததற்காக கற்கண்டு கொடுப்பதுண்டோ?

ஒருவன் இரண்டு விரலை நீட்டிஞல் மற்ருெருவனுக்கு சரியாய் அர்த்தமாகிறது எப்படி? ஸங்கேதம் தெரிந்திருந்ததால் தானே? மற்றவர்களுக்கு இரண்டு விரல் நீட்டினது பிரத்யக்ஷம். மற்றபடி என்ன? இரண்டு ரூபாயோ மற்றும் வேறு இரண்டு வஸ்துவோ ஒன்றும் போதமாகிறதில்லை. ஸங்கேதம் தெரிந்தவன்மட்டும் சரியாய் அர்த்தம் செய்துகொள்ளுகிருன். ஸங்கேதம் தெரிந்தவனுக்கு மட்டும் இந்த அர்த்தவிசேஷப் பிரதிபத்தி உண்டாகிறதே தவிர, மற்றவர்களுக்கு கேவலம் இந்த அங்குளித்வயம் மட்டும் பிரத்யக்ஷமாகிறது. இந்த சேஷ்டையை சிலர் சப்தபிரமாணத்தில் சேர்த்துக்கொள்ளுகிருர்கள். தார்க்கிகன் இதை ஒரு பிரமாணம் என்கிருன். மேலும் நாஸ்திகனுக்கு பிரத்யக்ஷம் மட்டும் ப்ரமாணமாஞல், நாம் கேட்கிருேம்,

मानं प्रत्यक्षमेकं यदि कथय कथं भाषितं ते प्रमाणम्
संभाव्यार्थं सदोषं यदि कथय कथं न वेदो विदोषः ।
किं चाध्यक्षं विनाक्षैर्न भवति सुगमा मानताध्यक्षमात्रे
ज्ञानं नान्यस्य बोद्धुं प्रभवति च भवांस्तेन मिथ्या प्रलापी ॥

உனக்கு ப்ரத்யக்ஷம் மாத்திரம் ப்ரமாணமாஞல் நீ பேசுகிருய் என்பது எப்படி ப்ரமாணமாகுமென்று? நாஸ்திகன் பேசுகிருன் என்று அவனுக்கு எப்படித் தெரிந்தது சப்தப்ரமாணத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால்?

ஆகையால் ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம் ஆகிய இந்த மூன்று ப்ரமாணங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இன்னும், நம்மவர்கள் அர்த்தாபத்தி முதலிய ப்ரமாணங்கள் சொல்லுகிருர்கள். அவைகளை எல்லாம் பற்றி இப்பொழுது பேசவேண்டியதில்லை. இந்த மூன்று ப்ரமாணங்களையும் ஒப்புக்கொண்டாலும் அவைகளும் திருப்திகரமாய் இல்லை.

முதலில் ப்ரத்யக்ஷத்தை எடுத்துக்கொள்வோம். இந்திரியதோஷத்தால் வித்யாஸம் தோன்றுகிறதில்லையா? ஒருவனுக்கு காமாலை தோஷத்தால் சுவர் எல்லாம் மஞ்சளாய்த் தெரிகிறதில்லையா? கண்ணின் தோஷத்தால், பெரிய பதார்த்தங்களும் சிறியதாய்த் தோன்றுகிறதில்லையா? ஆகையால் இந்தப் ப்ரத்யக்ஷம் ஸதோஷமாயும், விபரீதமாயும் இருக்கின்றது. மேலும் ஊஹையும் அப்படியே. ஸதூஹையும், துரூஹையும் இருக்கும். இரண்டுபேர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் ஒருதடவை நம்ம பக்கம் திரும்பிப் பார்த்துப் பேசினால் நம்மைப்பற்றித்தான் பேசுகிறார்கள், நமக்கு ஏதோ ஹிம்ஸை செய்ய உத்தேசிக்கிறார்கள் என்றும், அதனால் நாம் தயாராகவேண்டுமென்றும், யோசித்துக்கொண்டு, கக்ஷிப் பிரதிகக்ஷி ஏற்படுத்திக்கொண்டு அநர்த்தம் உண்டாகுவதை நாம் பார்த்திருக்கிறோமே! இந்த ஊஹையை எப்படி ப்ரமாணமாக பூர்த்தியாய் நம்பிவிடலாம்? இதேமாதிரிதான் சப்தமும். ஒருவன் ஸாக்ஷ்யம் சொல்லும்போது அதை முழுவதும் நம்பி, பிறகு அந்த மனிதனிடத்தில் தோஷம் கண்டவுடன் அவனுடைய ஸாக்ஷ்யத்தை விலக்கிவிடுகிறோமல்லவா? பூர்வாபரவிரோதம் முதலிய தோஷங்களைக்கண்டாவது அல்லது ஸாக்ஷியானவன் பொய் சொல்வதே வழக்கம் என்று கண்டபின்னாவது விலக்கிவிடுகிறோமல்லவா?

ஆகையால் இந்த மூன்று ப்ரமாணங்களான ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம், இவை ஸதோஷமாய் இருப்பதால், இவைகளைவிட்டு நிர்தோஷமாயும், ஈச்வரனால் செய்யப்பட்டதாயும் இருக்கிற வேத சாஸ்திரத்தை ப்ரமாணம் என்று ஒப்புக்கொள்வதில் உனக்கு என்ன தலைவலி என்று ஆஸ்திகன் நாஸ்திகனைக் கேட்கிறான்.

சார்வாக தர்சனம் ஸரியானால், தினம் நடக்கிற வியவஹாரங்கள் ஒன்றும் நடக்க முடியாது. நாம் பார்த்திராத பட்டணங்கள், தேசங்கள் இவைகள் இருப்பதாக நாம் நம்புகிறோமே, அது எப்படி? ஆகையால் இந்த சார்வாகனின் புத்தி அதி ஸ்தூலமானது என்று நிச்சயமாகிறது. அதீந்திரியமாய் இருப்பதை சாஸ்திரத்தால் அறியலாம். ஆகையால் சாஸ்திரம்தான் ப்ரமாணம்.

நாம் முன் சொன்னபடி ஸகல ஜனங்களுக்கும் சுகம்தான் வேண்டும், துக்கம் வேண்டுவதில்லை. நமது ஆசார்யார் சத சுலோகீ என்ற கிரந்தத்தில்

य:कश्चित्सौख्यहेतोस्त्रिजगति यतते नैव दु:खस्य हेतो:
देहेऽहंता तदुत्था स्वविषयममता चेति दु:खास्पदे द्वे ।
जानन्रोगाभिघाताद्यनुभवति यतोऽनित्यदेहात्मबुद्धि:
भार्यापुत्रार्थनाशे विपदमथ परामेति नाराति नाशे ॥

என்றபடி மூன்று லோகத்திலும் ஒருவனுக்கும் துக்காபேக்ஷயே இல்லை. எல்லோருக்கும் சுகம்தான் வேண்டும். துக்கம் வேண்டாம் என்பது இருந்தும் உலகத்தில்துக்கமே ஜாஸ்தியாய்க் காண்பானேன்? துக்கம் ஒருத்தருக்கும் அபேக்ஷயில்லையே. அப்படி இருந்தும் அது அதிகமாக ஏன் காணப்படுகின்றது? சுகம் எல்லாருக்கும் தேவை; அதற்காகத்தான் ஸர்வ பிரயத்தனமும் செய்யப்படுகிறது; ஆனால் அது துர்லபமாக காணப்படுகின்றது. ஏன்? துக்கம் ஒருவருக்கும் இஷ்டமில்லாமலிருந்தும் அது ஏன் ஏற்படுகின்றது? எல்லாருக்கும் தேஹஆரோக்யம் பிரியம்தான். அதற்காக ஸர்வ ஜாக்கிரதையாக இருக்கிறோம். அப்படியும் ஏன் ரோகம் வருகின்றது? தேஹம் ஸரியாய் இருப்பதற்காக காலாகாலங்களில் போஜனம் செய்கிறோம்; ரோகஸாதனமான பதார்த்தங்களை ஸேவிக்கிறதில்லை; தேஹம் தார்ட்யத்தை அடைவதற்காக, அதைச் செய்து கொடுக்கும் பதார்த்தங்களை உண்கின்றோம். அப்படி இருந்தும் ஏன் நமக்கு ரோகம் வருகின்றது?

இந்த மாதிரி நமக்கு துக்க ஸாதனமும், சுக ஸாதனமும் தெரிந்தால், துக்க ஸாதனங்களை நீக்கி சுக ஸாதனங்களைக் கையாடுவோமல்லவா? நம்மிடத்தில் துக்கமிருப்பதினாலேயே நமக்கு சுக ஸாதனம் இன்னது என்று தெரியவே தெரியாது என்று சொல்லலாம். நமக்கு துக்கம் வந்ததற்கு காரணமே தெரியாது. நாம் செய்துகொண்டுவந்த பிரயத்னங்கள் எல்லாம் விபரீதப் பிரயத்னங்கள் என்று நிச்சயம் செய்துக்கொள்ள வேண்டிவருகின்றது. ஏன் என்றால், சுக ஸாதனத்தால் துக்கமேற்பட்டால் அது சுக ஸாதனமாகுமோ? அபேக்ஷை என்னமோ சுகம்தான்; அது ஸகலருக்கும் ஒன்றுபோல் வேண்டியதுதான். ஆனால் பிரயத்னம் மட்டும் வித்யாஸம்.

पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

என்றபடி புண்ணியத்தின் பலனை மட்டும் இச்சிக்கிறார்கள் ஜனங்கள். ஆனால் புண்ணியம்மட்டும் செய்கிறதில்லை.பாபத்தின் பலனை இச்சிக்கிறதில்லை, ஆனால் பாபமே பிரயத்னப்பட்டுச் செய்கிறார்கள். சுகத்திற்கு புண்ணியம் ஸாதனம் என்றும், துக்கத்திற்கு பாபம் காரணம் என்றும் ஜனங்கள் தெரிந்துகொள்ளுகிறதில்லை. ஸாதனானுஷ்டானம் ஸரியாய் இருந்தால் பலம் வராமல் இருக்காது. விபரீதபிரயத்னம் செய்துக்கொண்டிருப்பதால்தான் ஸந்தோஷம் வருகிறதில்லை.

ஆனால் நாம் ஸந்தோஷப்படுகிறதில்லையா என்றால் இப்போது செய்த பிரயத்தனத்தால் அல்ல என்று சொல்லிவிடலாம். ஏதோ முன்ஜன்ம ஸுகிருதவசத்தால் வந்திருக்கலாம். அல்லது சாஸ்திரக்காரர்கள்

त्रिभिर्वर्षैस्त्रिभिर्मासैस्त्रिभिः पक्षैस्त्रिभिर्दिनैः ।
अत्युत्कटैः पुण्यपापैरिहैव फलमश्नुते ॥

என்று சொல்லியிருக்கிறபடி, ஏதோ விசேஷ புண்ணிய பாபங்களின் பலங்களை இந்த ஜன்மத்திலேயே இந்த லோகத்திலேயே அனுபவிக்கலாம் அல்லவா? நிரம்ப கெட்ட பாபங்களைச் செய்தவர்கள் நம் கண்முன் அழிந்ததை பார்த்ததில்லையா? அதேமாதிரி பகுசிரேஷ்டமான புண்ணியத்தால் சுகத்தை அடைந்தவர்களையும் கண்டதில்லையா? வித்யாரண்யாள் ஸ்ரீ புரச்சரணம்செய்து கனகதாரை பெய்யப்பெற்றார் என்று கேட்டிருக்கிறோமே. ஆகையால் நமக்கு துக்கஸாதனம் இன்னதென்று நன்றாய்த் தெரிந்தால் ஸாத்தியமான விடத்தில் பிரதிக்கிரியை செய்துகொண்டு க்ஷேமத்தை அடையலாம் அல்லவா? ரோகம் வந்ததும் எப்படி சிகித்ஸை செய்துக்கொள்ளுகிறோமோ அப்படியே துக்கம் வந்தபொழுது அதற்கு பரிஹாரமும் செய்துக்கொள்ளலாமல்லவா? மேல்கண்ட விசாரத்தால் நாம் தெரிந்துகொண்டது, துக்கத்திற்குக் காரணம் நமது பிரயத்தனம் ஒன்று, மற்றொன்று அதிர்ஷ்டம் என்பது.

தற்காலத்தில் பாச்சாத்தியர்கள் (மேற்கத்தியவர்) எதையும் புருஷப்பிரயத்தனத்தால் ஸாதித்துவிடலாமென்று ஏதோ சொல்லுகிருர்களாம். அப்படி இருந்தால் எல்லாரும் எதையும் ஸம்பாதித்துவிடலாமே. அவர்கள் எத்தனேயோ ''சாஸ்திரங்கள்'' எழுதியிருக்கிறதாகச் சொல்லுகிருர்கள். அதில் எதிலாவது ஸகல ஜீவராசிகளும் துக்கமில்லாதிருக்க ஏதாவது சொல்லப் பட்டிருக்கிறதா? அவர்களுக்கு அந்த விஷயம் தெரியவே தெரியாது என்றே தோன்றுகிறது.

புருஷப்பிரயத்தனத்தால் ஸாதிப்பது வாஸ்தவமாளுல் விகாதம் வந்து ஏன் தடை செய்கின்றது? அதனுல் புருஷப்பிரயத்தனம் மட்டும் பூரண ஸாதனம் ஆகாது என்பது தெரிகின்றது. புருஷப்பிரயத்தனத்தால் ஸாதிக்கின்ற தென்ருல் வேண்டியபோது மழை பெய்விக்கிறதுதானே. அல்லது ஜாஸ்தி மழை பெய்யும்போது தடுத்துவிடுகிறது தானே!

ஒரு கதை ஞாபகம் வருகிறது. ராயருடைய தேசத்தில் மழை இல்லாமல் பயிர்கள் வாடும்பொழுது ஆஸ்தான ஜோஸ்யரை அழைத்து மழை எப்பொழுது பெய்யும் என்று கேட்டதாகவும், ஜோஸ்யர் ராஜஸம்மானத்தைக்கருதி ராஜாவினுடைய வயலுக்கு மட்டும் மழை பெய்யும் என்று சொல்லிவிட்டு, ராத்திரிபோய் வெகு சிரமப்பட்டு தண்ணீர் இறைத்துவந்ததாகவும் கேட்டிருக்கிருேம். மழை பெய்யவேண்டுமாளுல் கிரகசாரம் சரியாய் இருக்கவேண்டாமா? மழையை புருஷப்பிரயத்தனத்தால் கொண்டுவர முடியாது என்று தோன்றுகின்றது.

இது போகட்டும். ஒருவனுக்கு மகத்தான பசி என்றுவைத்துக் கொள்வோம். ஸகல ஸாமக்கிரீகைகளும் தயாராய் இருந்தும், பாகமாகாமல்போனுல் என்ன செய்கிறது? பாகம் (சமையல்) ஆகும்வரை காத்திருந்துதானே தீரவேண்டியது. இந்த இடத்தில் புருஷப் பிரயத்னம் என்ன செய்யும்? எல்லாம் ஸம்பாதித்தாய்விட்டது. நிறைய பதார்த்தங்கள் இருக்கின்றன. சாப்பிட மட்டும் கொடுத்துவைக்கவில்லே. குன்மரோகம். இதற்கு என்ன செய்வது? போகட்டும், நாம் தயாராய் இருக்கிறபோதும் நினேத்தபோதும் தூக்கம் வருகிறதுதானே! தேடியும், பிரயத்னப்பட்டும் நித்திரை வராமல் எத்தனேயோ பேர் துக்கப்படுவதைக் கண்டிருக்கிருேமே. இவைகள் நம்முடைய

ஸ்வாதந்திரத்தில் இல்லை. துக்கம் ஒருபொழுதும் அனுபவிக்காதவனே ஸ்வாதந்திரியன். நமக்கெல்லாம் துக்கம் ஜாஸ்தியாயும், ஏதோ கொஞ்சம் சுகமிச்ரிதமாய் இருக்கிறதே தவிர துக்கமே இல்லாமலா இருக்கிறோம்! இல்லவே இல்லையே!

யாராவது ஒருவன் திருடிவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். அவன் என்ன செய்வான்? பந்தனுகாரத்தைத் தேடியா போவான்? இல்லை. அந்த சிறையை எவ்வளவு தூரத்தில் நிறுத்தலாமோ அதைத்தானே தேடுவான். ஒரு வேளை ராஜ உத்தியோகஸ்தர்கள் பிடித்தாலும், தப்பிக்கப் பார்ப்பானே தவிர பந்தனுகாரத்தையா தேடிப் போவான்! தான் செய்தது தப்பிதம் என்று தெரிந்து கொண்டு பந்தனுகாரத்தைத் தேடிப்போகிற சுத்தாத்மா முதலில் திருடப்போவதில்லை. அப்படித் திருடினுலும் சிக்ஷைக்கு யோக்யனல்ல. ஆகையால் இவ்வளவு சிரமப்பட்டு ஓடியும், திருடனுக்கு சிக்ஷை ஏற்பட்டு தண்டனை அடைந்து கிலேசமடைவதை நாம் பார்த்திருக்கிறோமே.

ஆகையால் நமக்கு ஏன் துக்கம் வந்திருக்கின்றது என்று யோசிக்கவேண்டியது. நமக்கு ஸ்வாதந்திரியம் இல்லை. நாம் பரதந்திரிகள். ஆனதால்தான் நாம் துக்கத்தைத் தூர துரத்த முடியவில்லை. துக்க நிவர்த்திக்குச் ஸரியான வழி தெரியாது. ஆகையால் மேலே சொன்ன மூன்று ப்ரமாணங்களை ஒப்புக்கொண்டும், நமக்கு ஸ்வாதந்திரியமே இல்லை என்று தெரிந்துகொண்டும், நாம் ஈச்வரனுடைய தயவை ஸம்பாதிக்கவேண்டும் என்பதையும் செவ்வையாய் அறிந்து கொள்ளவேண்டும். முன் சொன்னபடி மூன்று பிரமாணங்களும் தோஷஸஹிதமாய் இருக்கின்றபடியால், நிர்தோஷமாய் இருக்கிறதாயும், நிஷ்பக்ஷபாதியான ஸர்வேசுவரனுல் செய்யப்பட்ட சாஸ்திர பிரமாணத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆனுல் வேதசாஸ்திரங்கள் அனந்தமே. अनन्ता वै वेदाः என்று சொல்லப்பட்டிருக்கின்றதே என்ருல், எது ஸாரபூதமோ அதைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்கவேண்டும்.

अनेकशास्त्रं बहु वेदितव्यं अल्पश्चकालो बहवश्च विघ्नाः ।
यत्सारभूतं तदुपासितव्यं हंसो यथा क्षीरमिवांबुमिश्रात् ॥

என்று சொல்லியிருக்கிறபடி முக்கியமானதைத் தேடி தெரிந்துகொண்டு அதன்படி நடக்கவேண்டும்.

ஜனித்தவனுக்கு எப்பொழுதும் மிருத்யு தயாராய்க் காத்துக்கொண்டிருக்கிறது. जातस्य ध्रुवो मृत्युः என்பது நிச்சயம். அதிலும் நல்ல காரியங்கள் செய்யும்போது அநேக விக்கினங்கள் வருகின்றன. श्रेयांसि बहु विघ्नानि என்பது பெரியோர் வாக்கியம். விசுவாமித்திரர் தபசு செய்த காலத்தில் அனேக விக்கினங்கள் வந்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லியிருக்கின்றது. நாங்கள் எல்லாரும் பாஷ்யாதிகள் படிக்கும் காலத்தில் விக்கின நிவாரணத்திற்காகத்தான் சாந்திபாடம் சொல்லுகின்றோம். ஏன் என்றால், படிக்கிறவன் படித்து மேலான பதவிக்கு போய்விட்டால், தங்களுக்கு யஜமானன் ஆகிவிடுவான், தங்களுக்கு ஹவிர்பாகாதிகளைக் கொடுக்கமாட்டான் என்று தெரிந்துகொண்டு, தேவர்கள் இவனுக்கு அனேக விக்னங்களைச் செய்கிறார்கள். அதினால்தான் शन्नो मित्रः शंवरुणः शन्नो भवत्वर्यमा என்று அவர்களுக்கு லஞ்சம் கொடுக்கிறமாதிரி கொடுத்து, அவர்கள் தயையை ஸம்பாதித்து மேலே போகிறோம்.

அனந்தமாயும், பஹுவிக்கினஸமேதமாயும், நீண்டதாயும் இருக்கிற சாஸ்திரத்தை, வேதப்பிரமாணப்படி நூறு வயதுள்ள மனுஷ்யன் எப்படி அப்யாஸிக்க முடியும்? இந்தக் காலத்தில் ஐம்பது வருஷத்திலேயே வார்த்தக்யம் வந்துவிடுகின்றது. ஒரு சாஸ்திரத்திற்கு சுமார் எட்டு வருஷம் வேண்டிவருகின்றது. அப்படி நாஸ்திக ஷட்கமும் ஆஸ்திகஷட்கமும் வாசிக்க எத்தனை நாள் வேண்டுமோ? வேதமோ அனந்தம். நான்கு வேதமாக வாசிக்கவோ காலம் போதாது. ஒரு சாகை வாசிக்கக்கூட காலம் போதாது. அதிலும் பர்த்ருஹரி சொல்லுகிற பிரகாரம்,

आयुर्वर्षशतं नृणां परिमितं रात्रौ तदर्धं गतं
तस्यार्धस्य परस्य चार्धमपरं बालत्ववृद्धत्वयोः ।
शेषं व्याधिवियोगदुःखनिरतं सेवादिभिर्नीयते
जीवे वारितरङ्गचञ्चलतरे सौख्यं कुतः प्राणिनाम् ॥

என்று சொல்லி இருக்கிறார். ஒரு மனிதன் நூறு வருஷம் இருந்தாலும் பாதி தூக்கத்தில் போய்விடுகின்றது. ஏனென்றால்

ராத்திரியானது விச்ராந்திக்காகவே ஏற்பட்டது. பகலெல்லாம் வேலை செய்து பரிச்ரமப்பட்ட பிறகு ராத்திரி இளைப்பாற ஏற்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் வெகுசிரத்தையுடன் செய்யப்படும் சிரார்த்தம்கூட செய்யக்கூடாதென்று விதி ஏற்பட்டிருக்கிறது.

नक्तं श्राद्धं न कुर्वीत। अन्यत्र राहु दर्शने ॥

என்று சொல்லி இருக்கிறது. சிரார்த்தத்தை ராத்திரியில் செய்யாதே, கிரஹண காலத்தில் மட்டும் வேறு என்று உபதேசமாய் இருக்கிறது. அதனால்தான் பூர்வாந்ஹம் என்றும், அபராந்ஹம் என்றும் பிரித்து அதில் அதில் செய்யவேண்டிய காரியங்களைச் சொல்லி இருக்கிறார்கள்.

இப்படி ராத்திரியில் பாதிகாலம் போய்விட்டபிறகு, மிச்சம் இருக்கிறது வருஷம் ஐம்பது. அதில் பால்யாவஸ்தையில் எட்டு வருஷமும், விருத்தனாய் எண்பது வருஷத்திற்குப் பின் இருபது வருஷத்தில் கிடைத்ததும், இப்படியாக சுமார் பதினான்கு பதினைந்து வருஷங்கள் போய்விடுகின்றன. பாக்கி இருப்பது வியாதி, துக்கம், வியோகம் இவைகளில் எல்லாம் தொலைந்துபோகிறது. இந்தப் பிராணிகளுக்கு எங்கிருந்து சுகம் கிடைக்குமென்று இரங்கிச் சொல்லி இருக்கிறார் கவி. நூறு வருஷம் உயிரோடிருந்தால் அதை அத்புதமாய் அல்லவோ சொல்லுகிறோம். அதனாலேயே அனேகர் அந்த வயதுவரை உயிரோடிருக்கிறதில்லை என்று விசதமாகிறது. இப்படி நூறு வருஷம் இருந்தால் ஏதோ சுமாராகப் படிக்கலாம். நாம் நூறு வருஷம் இருப்போம் என்பது நிச்சயமோ? எப்பொழுது விழுந்துவிடுமோ இந்த சரீரம்.

कोहि जानाति.....अनित्यं खलु जीवितम्।

ஆனால் இந்த ஜன்மத்தை விட்டு வேறு எதிலாவது படிக்கலாமென்றாலோ, மறுபடி வருவது எந்த ஜன்மமோ? மனுஷ்ய ஜன்மத்தில் ஸாதனம் செய்யாமல் பகுத்தறிவு இல்லாத திர்யக் ஜந்துக்களின் ஜன்மாக்களில் அறியக்கூடுமோ? முடியாது என்பதில் ஸந்தேஹமுண்டோ? இதே ஜன்மத்தில்தான் ஆகவேண்டும்.

युवैर्धर्म शीलत्वात् என்று சொல்லி இருக்கிறது.

இந்த ஜன்மத்திலோ அனேக விக்னங்கள் வருகின்றன.

प्रारभ्यते न खलु विघ्नभयेन नीचैः
प्रारभ्य विघ्ननिहिता विरमन्ति मध्याः ।
विघ्नैर्मुहुर्मुहुरपि प्रतिहन्यमानाः
प्रारब्धमुत्तमगुणा न परित्यजन्ति ॥

என்றபடி அதமன் விக்கினம் வந்துவிடுமென்று காரியம் தொடங்குவதே இல்லை. மத்யமன் விக்னம் வந்தபோது காரியத்தை விட்டுவிடுகிருன். உத்தமன் அடிக்கடி விக்னத்தால் அடிபட்டாலும் அவைகளையெல்லாம் வென்று காரியஸித்தியை அடைகிருன். சிரேயஸ்ஸுக்கு பகுவித விக்னம் உண்டாகின்றது. அப்படி இருந்தபோதிலும் எல்லாவற்றையும் ஜெயித்து சாஸ்திராப்பியாஸம் செய்து ஹம்ஸம் எப்படி தண்ணீர் கலந்த பாலில் பாலை மட்டும் சாப்பிட்டுவிட்டு தண்ணீரை விட்டுவிடுகின்றதோ அதேமாதிரி यत्सारभूतम् சாஸ்திரம் அதை அப்யாஸிக்க வேண்டும்.

எது ஸாரபூதமோ அதை நாமே அறிந்துகொண்டு விடலாமோ! முன் சொன்ன பிரத்யக்ஷ, அனுமான, சப்த பிரமாணத்தால் அறிந்துகொண்டுவிடலாமோ! மூன்று பிரமாணத்திஞலேயே துக்க ஸாதனத்தைத் தெரிந்துகொண்டு விடலாமோ!

இந்தக் காலத்தில் தனம்தான் சுகஸாதனம் என்று தெரிந்துகொண்டிருக்கிருர்கள். அதுவே அனர்த்தஸாதனம் என்று பெரியோர்கள் சொல்லி இருக்கிருர்கள்.

अर्थानां आर्जने दुःखं आर्जितानां च रक्षणे ।
आये दुःखं व्ययेदुःखं किमर्थ दुःख भाजनम् ॥

अनन्त पारा दुष्पूरा तृष्णादुःख शतावहा ।
अधर्मबहुला चैव तस्मात्तां परित्यजेत् ॥ (भरद्वाजः)

अकिञ्चनत्वं राज्यं च तुलया समतोलयत् ।
अकिञ्चनत्वमधिकं राज्यादपि हितात्मनः ॥ (वसिष्ठः)

अर्थसम्पद्विमोहाय विमोहो नरकाय च ।
तस्मादर्थमनर्थाख्यं श्रेयार्थी दूरतस्त्यजेत् ॥ (कश्यपः)

यस्य धर्मार्थमर्थेहा तस्यानीहा गरीयसी ।
प्रक्षालनाद्धि पङ्कस्य दूरादस्पर्शनं वरम् ॥ (कश्यपः)

इहैवेदं वसुप्रीत्यै प्रेत्य वै कुण्ठितोदयम् ।
तस्मान्न ग्राह्यमेवैतत् सुखमात्यन्तमिच्छता ॥ (अत्रि)

மேலும் இது யுக்திக்கும் ஒத்ததாய் இருக்கின்றது. பணம் ஸம்பாதித்துவிட்டால் அதைக் காப்பாற்ற எத்தனை பிரயத்தினம் வேண்டியிருக்கிறது. அதில் எவ்வளவு கஷ்டம் உண்டாகின்றது. சுகஸாதனத்தை தேடின நமக்கு இந்த துக்கம் வந்தது ஏன்? சுகமாகவல்லவோ இருக்க வேண்டும். அப்படியே பணம் செலவழியுங்காலத்திலும் துக்கம் நமக்கு உண்டாகிறது. அது ஏன்?

குடும்ப பரணத்திற்காக ரூபாய் நூறு வேண்டிவரும் என்று வைத்துக்கொள்வோம். அது வந்துவிட்டால் ரூபாய் இருநூறு வேண்டும்; அப்புறம் முந்நூறு; இப்படியே போய்க்கொண்டிருக்கும். இதற்கு எல்லையே கிடையாது. ஸம்பாதன துக்கத்திலேயே காலம் சென்றுகொண்டிருக்கும். சுகம் மட்டும் கிடைத்திருக்காது. இதுவா சுகஸாதனம்?

ஒன்றிலிருந்து ஒன்றைக் கண்டுபிடிக்கிறார்களாம்! ஸரி. இருக்கிற சக்தியைத்தானே பரிசிரமப்பட்டுக் கண்டு பிடிக்கிறார்கள். இந்த வித்யுத் (மின்சாரம்) சக்தியினால் விளக்குகள் போடப்படுகின்றன. இதில் சுகம் வாஸ்தவமா? வெளிச்சமென்னவோ நன்றாகத்தான் இருக்கிறது. சக்தியை எடுத்து வரும் கம்பிகளை குரங்குகள் பிடித்து எத்தனை குரங்குகள் செத்துப்போகின்றன. மேலும் கல்யாணகாலங்களில் நின்று போய்விட்டால் எத்தனை துக்கம் ஏற்படுகிறது. நம்முடைய விளக்குகள் அணைந்தாலும், உடனே ஏற்றிவிடலாம். இவைகளை சரிப்படுத்த அநேக நாட்கள் வேண்டும். அதைத் தெரிந்த மற்றொருவன் வர வேண்டும். மனுஷ்ய பிரயத்தனத்தால் எல்லாம் ஸாதிக்க முடியுமானால், எண்ணை வேண்டுமானால் மணலை யந்திரத்தில் கொடுத்து எண்ணெயை ஏன் எடுக்கவில்லை? அதை ஏன் கண்டுபிடிக்கவில்லை?

ஸர்வத்திராளுக்கு சுகம் கிடைக்க வழி பாச்சாத்தியர்களுக்குத் தெரியாது. அது அவர்கள் புஸ்தகங்களில் எங்காவது உண்டா?

உண்டானுல் சொல்லலாம். அப்படியானுல் அவர்கள் எல்லாராலும் பூஜிக்கத் தகுந்தவர்கள். அவர்களை குருவாக ஸ்வீகரிக்க யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. அப்படிப்பட்ட மனிதன் ஒருவன் இருந்தால் அவன் ஸர்வேச்வரனுகிவிடுவான். அவனுக்குப் பெரிய பிரதிஷ்டை கிடைக்கும். அவனும் சுகமடைவான். மற்றவர்களுக்கும் சுகம் கிடைக்கும்.

இதெல்லாம் பாச்சாத்தியர்களுக்குத்தெரியவே தெரியாது என்று சொல்லலாம். தனம் தனம் என்று கஷ்டப்படுகிருர்கள். தனம் இருந்த இடத்தில், சுகத்தைத்தவிர, கஷ்டமே இல்லாதிருக்க வேண்டும். அப்படி உண்டோ உலகத்தில்? ஸ்ரீமான்கள் துக்கப்படுகிறதில்லையா? தரித்திரர்கள் சுகிகளாய் இருக்கிறதில்லையா? தனமா சுககாரணம்?

காரணம் என்ருல் என்ன? எது இருந்தால் காரியம் ஆகிறதோ, எது இல்லாவிட்டால் காரியம் ஆகிறதில்லையோ அது அல்லவா காரணம். இந்தப் பணம் அப்படி சுககாரணமா துக்க காரணமா? சக்கரவர்த்திக்கு துக்கமில்லையா? நமது ராஜா துக்கப்படவில்லையா? சக்கரவர்த்தியாய்விட்டால் வியோகம் முதலியன உண்டாவது இல்லை என்று ஏதாவது நியமனம் உண்டா? நல்ல தர்மிஷ்டனிடத்தில் பணமிருந்தால் அவன் அதை ஸத்பாத்திரங்களிடத்தில் செலவழித்து சிரேயஸ்ஸை அடைகிருன். விதர்மியிடத்தில் அது இருந்தால் அதனுல் அநேக துஷ்கிருத்யங்களைச்செய்து பரஹிம்ஸை முதலானவைகளை நடத்தி கடைசியில் தானும் நசிக்கிருன். ஆகையால் ஸ்வத: தனத்திற்கு யாதொரு சுக காரணத்துவமும் கிடையாது என்று நிச்சயமாகிறது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் விசுவாமித்திர உபாக்கியானம் ஒன்று இருக்கிறது. விசுவாமித்திரர் வேட்டைக்காக வனத்திற்குச் சென்ருர். அங்கே வஸிஷ்டர் மகாராஜாவுக்கு ஆதித்யம் (அதிதிபூஜை) செய்ததாகவும் அந்த ஆதித்யம காமதேனு வம்சத்தில் பிறந்த நந்தினி என்ற பசுவின் ஸகாயத்தால் செய்ததாகவும், அதைத் தனக்குக் கொடுக்கும்படி விசுவாமித்திரர் யாசித்ததாகவும், வஸிஷ்டர் ராஜன் யாசிக்கக் கூடாதாதலால் மறுத்துவிட்டதாகவும், பலாத்காரமாய் நந்தினியைப் பிடிக்கப்போனதாகவும், அந்தப் பசு வந்து வஸிஷ்டரிடம் தங்களுடைய உத்திரவால் ஏற்பட்டதா என்று கேட்டதாகவும், இல்லை என்று தெரிந்து கொண்டு ஆக்ஞை பெற்று

ரோமங்களில் இருந்து படைகளை சிருஷ்டி செய்து சேனையை துவம்ஸம் செய்ததாகவும், அதைப் பார்த்துக்கோபித்து நாட்டிலிருந்து ஸைன்யங்களை அழைத்து வஸிஷ்டரை எதிர்த்ததாகவும், அவர் தண்டையூன்றிவிட்டு ஸமாதியிலிருந்ததாகவும், அந்த தண்டு ஸமஸ்த அஸ்திர சஸ்திரங்களையும் ஸாப்பிட்டதாகவும் கண்டிருக்கிறது. விசுவாமித்திரர் பார்த்தார். தனது ஸகல பலமும் வீணானதைக்கண்டு,

ब्रह्मतेजो बलं बलं धिक्क्षत्रियबलम् ।
एकेन ब्रह्मदण्डेन सर्वास्त्राणि हतानि मे ॥

चतुः सागरपर्यन्तां यो भुङ्क्ते पृथिवीमिमाम् ।
तुल्याश्मकाञ्चनोयश्च स कृतार्थो न पार्थिवः ॥ (विश्वामित्रः)

न जातु कामः कामानामुपयोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्धते ॥ (विश्वामित्रः)

कामानभिलषन्मोहान्न नरः सुखमेधते ।
श्येनालयतरुच्छायां व्रजन्निव कपिंजलः ॥ (विश्वामित्रः)

என்று தனது க்ஷத்திரிய பலத்தை நொந்து திக்கரித்துவிட்டு பிரம்மண்ணியத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்று தீர்மானித்து ஸகலராஜ்யத்தையும் விட்டுவிட்டு தபசுக்குப் போனார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கு சுகம் ராஜ்யம் இருந்தபோது வந்ததா? தபசு செய்து பிரம்மரிஷிப்பட்டம் பெற்றபோது வந்ததா? அவரைக் கேட்டால் தான் பிரம்மண்ணியத்தின் பிரதாபம் தெரியும். இந்தக் காலத்தில் பிரம்மண்ணியத்தை எப்படியாவது நீக்கிக்கொண்டு பணம் ஸம்பாதிக்கப் பிரயத்தினம் படுகிறார்கள். ஏதோ பாச்சாத்தியர் வியாபாரம்பண்ணி ஸம்பாதித்திருப்பதால், நாமும் வியாபாரம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறோம். பணத்தாலா சுகம் வரும்? அல்லது ராஜ்யத்தாலா சுகம் வரும்? நிவிருத்தி மார்க்கத்திலா சுகம் அல்லது ஸதா பிரவர்த்தியிலா?

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्तिः अशान्तस्य कुतः सुखम् ॥

எப்பொழுதும் வியவஹாரத்திலேயே இருக்கமுடியுமா? அதிப்பிரேமையோடு வளர்த்த குழந்தையையும் வேறு வேலையிலிருக்கும்பொழுது தூரவிலக்கிவிடுகிறதில்லையா? ஸதா பேச்சுப் பேசும் மனிதன்கூட சிறிதுநேரம் சும்மா இருக்கின்றதில்லையா? மனம் விச்ராந்தி அடைய வேண்டாமா? வியவஹாரம் எப்பொழுதாவது சுகஸாதனமாகுமா? ஏதோ ஆசை ஏற்பட்டது, அதைத்தீர்க்க ஏற்பாடு செய்தால் அது சுகமாகுமா? ஆசையின் சாந்திக்காகச் செய்த சிகித்ஸையேதவிர வேறல்ல. அது சுகமல்ல. ஜ்வரம் இருந்தது, ஔஷதத்தால் சமனம் அடைந்தது. துக்கசமனம் ஏற்பட்டது அவ்வளவுதான், சுகஸாதனம் அல்ல. இதைப்பற்றி பின்னால் சொல்லுவோம். ஆகையால் எல்லாருக்கும் சுகஸாதனத்தைக் காட்டும் வேதமே பிரமாணம். பணம் சுகஸாதனமல்ல என்பது ஸ்திரமாகிறது.

संतोषामृततृप्तानां यत्सुखं शान्तचेतसाम् ।
कुतस्तत् ध्यानलुब्धानामितश्चेतश्च धावताम् ॥ (गौतमः)

असन्तोषः परं दुः खं सन्तोषः परमं सुखम् ।
सुखार्थी पुरुषस्तस्माम् सन्तुष्टः सततं भवेत् ॥ (गौतमः)

மேலும் பணம் இருந்தால் நான்குபேர்கள் வருகிறார்கள். பணம் போனால் அவர்களும் போய்விடுகிறார்கள். இந்தத் தனம் வந்தால் லோபம்கூட வருகின்றது. அத்துடன் துவேஷாதி ஸகல தோஷமும் வந்துவிடும்.

लोभः प्रज्ञानमाहन्ति प्रज्ञाहन्ति हताह्रियम् ।
ह्रीर्हता बाधते धर्मं धर्मो हन्ति हतः श्रियम् ॥

இந்தமாதிரி லோபம் வந்தபோது ஸகலமும் நஷ்டமாகிறது என்பது சாஸ்திர ஸித்தம். இந்த தனத்தைப்பற்றி ஸ்ரீ பகவத்பாதாள் வெகு அழகாய்ச் சொல்லி இருக்கிறார்கள்.

धनं भयनिबन्धनं सततदुःखसंवर्धनं
प्रजण्डतरकर्दनं स्फुटितबन्धुसंवर्धनम् ।
विशिष्टगुणबाधनं कृपणधीसमाराधनं
न मुक्तिगतिसाधनं भवति नापि हृच्छोधनम् ॥

இப்பேற்பட்ட தனத்தை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? நம்மவர்களை ஜெயித்து ஆஸ்தி சேர்த்து பாச்சாத்தியர் கஷ்டப் படுகிறார்கள். வியாபாரம் செய்கிறார்கள்; அதனால் பணம் தேடுகிறார்கள். இவர்களைவிட யாராவது ஸாமர்த்தியம் செய்துவிட்டால் அந்த வியாபாரம் போய்விடுகின்றது. நாமும் வாங்காமல் இருக்க ஏற்பாடுகள் செய்கிறோம். அப்புறம் என்ன செய்கிறது? இதற்கு ஓய்வு இல்லை.

ஆகையால் ஆசார்யாள் உங்களுக்கு லோபமென்பதே தெரியாது; நான் சொல்லிக்கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். अर्थस्य प्राप्तौ संरक्षणं लोभः ॥ ஆகையால் எப்பொழுதும் பணத்தை விடாமல் காக்க வேண்டும். நாம் ஸம்பாதித்த சொத்தை எப்பொழுதும் விடாமல் இருக்க முடியுமோ? இருந்தால் பிள்ளைகளோ ஞாதிகளோ எடுத்துக்கொள்வார்கள். मृतोऽपि न त्यजामि என்றபடி இறந்தாலும் விட்டுவிடாமல் தலையில் கட்டிய பணமூட்டைபோல் வரவேண்டுமே. அது என்ன? புண்ணியம் தான்.

சாகிற காலத்தில் எதை நினைத்துக்கொண்டிருக்கிறோமோ அதின்படிதான் ஜன்மமுண்டாகிறது என்பது நமது ஸித்தாந்தம். இதற்கு ஸாக்ஷியம் அஜாமிளோபாக்யானம். நாராயணன் என்று தனது பிள்ளையை அந்தியகாலத்தில் கூப்பிட்டதற்காக அஜாமிளனுக்கு ஸ்வர்க்கம் கிடைத்ததாகச் சொல்லி இருக்கின்றது. இதேமாதிரி ஏதோ ஒரு தார்க்கிகன் नित्यं पीलवः पीलवः என்று சொல்லிக்கொண்டு இறந்தானாம். இதெல்லாம் லோபத்திற்கு திருஷ்டாந்தமாகும். அதேமாதிரி ஒரு கிருபணன் தான் ஸம்பாதித்ததை யெல்லாம் பூமியில் புதைத்துவிட்டு சொல்லாமல் இறந்துவிட்டான். வைத்தியனைக் கூப்பிட்டு மிருதஸஞ்ஜீவினியை பிரயோகித்து மூன்று வார்த்தை சொல்லிவிக்க மூவாயிரம் ரூபாய் கொடுத்து செத்துப்போன பிதாவுக்கு ஸஞ்ஜீவினியை போட்டினார்கள். அவன் கண் விழித்த ஸமயத்தில் கன்றுக்குட்டி விளக்குமாற்றைத் தின்றுகொண்டிருந்ததால், வியர்த்த செலவைத் தடுக்க முயல்வதிலேயே அவனுக்குப் பெரிய ஸம்ஸ்காரம் ஏற்பட்டிருந்ததால் முழித்ததும், ''கன்றுக்குட்டி விளக்குமாறு தின்கின்றது'' என்று சொன்னதும் வாய் மூடிற்று. பையன்களுக்கு பணம் இருக்குமிடம் சொன்னாலும் அவர்களுக்கு பிரயோஜனமாய்

இருக்கலாம். அல்லது ராம, ராம, கிருஷ்ண கிருஷ்ண, சிவ சிவ என்று சொல்லி இருந்தாலும், இவனுக்குப் பிரயோஜனமாய் இருக்கலாம். இரண்டுமில்லாமல் நிஷ்பிரயோஜனமாய்ப் போய்விட்டது. அந்தமாதிரி லோபபுத்தி இல்லாமல், ஸத்பாத்திரங்களைக் கண்டவிடத்து தனத்தை வழங்கிப் புண்ணியத்தைச் ஸம்பாதிக்கிறவன்தான் லோக துவயத்திலும் அழியாத தனத்தைப் பெறுகிறான்.

பணத்தை பாங்கில் போடுகிறார்கள். பாங்கு அழிந்து விடலாம் அர்பத்னட்மாதிரி. அல்லது நாமே இல்லாமல் போய்விடலாம். அல்லது விடுமுறையாய் இருக்கலாம். அல்லது இந்த நாணயம் நாம் போய இருக்கும் அந்த தேசத்தில் செலாமணியாகாமல் இருக்கலாம். அப்படிக்கல்லாமல் ஸர்வேசுவரனுயும், நித்யனுயும் இருக்கிற ஜகதீசுவரனிடத்தில் போட்டால், இந்த ஜகம் முழுவதும் ஸர்வேசுவரனுடைய ராஜ்யமானதால், பலன் நமக்கு எங்கும் எப்பொழுதும் கிடைக்கின்றது. ஆகையால் தனம் சுகஸாதனம் ஆகிறதில்லை. நல்ல விவேகமிருந்தால் ஆகலாம். இல்லாவிட்டால் அனர்த்தகாரியென்று முன்னமேயே சொன்னோம். விவேகம்தான் சுககாரி என்று ஸித்தமாகிறது.

இரண்டு பேர்கள் ஒரேமாதிரி வாசிக்கிறார்கள்; இரண்டு பேரும் பரீக்ஷைக்குப் போகிறார்கள். ஒருவன் தேறுகிறான்; மற்றவன் இல்லை. ஏன்? இரண்டு பரிசிரமங்களையும் எடுத்துக் கொண்டால் வித்யாஸமே இல்லை. பரீக்ஷையில் தேராதவனே கொஞ்சம் ஜாஸ்தியாய் வியாஸங்கம் செய்திருக்கலாம். அப்படி இருந்தும் ஏன் அவன் தேரவில்லை? ஈச்வரானுக்கிரஹம் இல்லை என்று ஏற்படுகிறது, ''धनात् धर्मं ततः सुखम्'' என்றபடி.

ஒரு மனிதன் வியாபாரம் செய்கிறான். லாபம் கிடைத்துக்கொண்டே வருகிறது. திடீரென்று கோடிக்கணக்காய் நஷ்டம் வந்துவிடுகின்றது. இதற்கென்ன காரணம்? வியாபாரவிஷயத்தில் அதிக பரிசயம் இல்லாதபோது லாபம் வருவானேன்? வியாபாரத்தில் நைபுண்யம் வந்தபிறகு நஷ்டம் வருவானேன்? ஸாதகஸாமக்ரீகள் இருக்கும்போது எப்படி நஷ்டம் வந்தது? அதிக பிரயத்தனத்தால் பலன் அதிகமாய் வரவேண்டியிருக்க நஷ்டம் ஏன் வந்தது? லாபம் வந்த காலத்தில் தெய்வ ஸஹாயம் இருந்தது. இப்பொழுது இல்லை என்றுதான்

சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சிலர் ஸ்வாமி பிரார்த்தனை செய்துக்கொள்ளுகிறதும் இதை நிரூபிக்கின்றது. ரோகிகள் இரண்டு பேர்களுக்கு ஒரே விதமான வியாதி; ஒரே வைத்தியன், ஒரே மருந்தைக் கொடுக்கிருன். ஒருத்தன் பிழைக்கிருன், மற்றவன் இறக்கிருன். இது ஏன்? அவன் தலையெழுத்து என்கிரேும். ஒருவன் மருந்தில்லாமலே பிழைக்கிருன். அதே வியாதியில் மற்றவன் ஸர்வ பிரயத்தனப்பட்டும் இறக்கிருன். இதற்கென்ன சொல்வது? இவனுக்கு ஆயுசு பகவான் கொடுத்தது இவ்வளவுதான் என்று திருஷ்டமில்லாத ஒரு பிரமாணத்தை ஒப்புக்கொள்ளவேண்டி வருகிறது. புண்ணிய பாபங்கள்தான் சுகதுக்கஸாதனம் என்பது தெரிகின்றது.

இந்தக்காலத்தில் ஸந்தியாவந்தனம் செய்வது பாபமாக வந்துவிட்டது. ஏதோ சிலர் சேர்ந்து தங்கள் மேன்மைக்காக எழுதிவைத்துக்கொண்டிருப்பதாகச் சிலர் எழுதியிருக்கிருர்களாம். சிலர் வேதம் பிறந்து இத்தனை வருஷம் ஆயிற்று என்கிருர்களாம். ருக்வேதம்தான் பழையது. அதன் சைலியைப் பார்த்தால் அப்படித் தோன்றுகின்றது என்று சொல்லுகிருர்களாம். ஒரே மனிதன் ஒரேவிதமாய்த்தான் எழுதமுடியுமா? பதினெட்டு புராணத்தை எழுதின வியாஸர் ஒரேவிதமாய் ஒரே சைலியில் எழுதியிருக்கிருரா? தேவீபாகவதம் வெகு ஸரளமாய் இருக்கிறது. ஸ்ரீமத்பாகவதம் இரும்பு கடலையாய் இருக்கின்றது; வியாக்கியானம் வைத்துப்பார்த்தாலும் அர்த்தமாவது கடினமாய் இருக்கின்றது. ஒரே மனிதன் பல சைலியில் எழுதமுடியாதா? ஒருவன் ஒரே வியாஸத்தில் பல சைலியில் எழுதுகின்றதில்லையா? இந்தக் கேள்விகளுக்கு அவன் என்ன பதிலுரைக்க முடியும்? போகட்டும் இந்த ரிஷிகளுக்கு இந்த உன்னத பதவி எப்படி வந்தது? அவர்கள் ஜீவர்களா? அல்லது ஈச்வரர்களா? ஈச்வரர்கள் அல்ல என்று சொல்ல நமக்கு ஆக்ஷேபணையில்லை .ஏனென்ருல், பல ஈச்வரர்கள் இருக்க முடியாததலாலும், ஒரே ஈச்வரன்தான் உண்டு ஆனதாலும், நாமே வேதம் ஈச்வரனுல் செய்யப்பட்டது என்று சொல்வதாலும், நமக்கு ஆக்ஷேபம் இல்லை. ரிஷிகள் ஜீவர்களானுல் அவர்கள் எந்த வேதத்தை நம்பி பிரயத்தனப்பட்டு இந்த ரிஷித்துவத்தை அடைந்தார்கள். அவர்கள் ஆராதித்த வேத சாஸ்திரம் ஒன்று இருக்கவேண்டுமல்லவா? இதனுலேயே வேதம் அனுதி என்று ஸித்தமாகவில்லையா? அவர்கள் ஸர்வக்ஞர் என்ருல்

நமக்கேன் வரவில்லை? நாமேன் கிஞ்சிக்ஞராய் இருக்கின்றோம்? அவர்கள் எந்த சாஸ்திரத்தை அனுசரித்து எந்தப் பிரயத்தனம் பண்ணினார்கள்? அந்தப் பிரயத்தனம் என்ன? நாம் வேறு என்ன செய்துக்கொண்டிருக்கிறோம்? அவர்கள் பகவானுடைய அனுக்கிரஹம் பெற்றவர்கள் என்றால் நமக்கேன் அது வரவில்லை? நல்ல மார்க்கத்தைக் கண்டார்கள் என்றால் நமக்கேன் அந்த மார்க்கம் தெரியவில்லை? சாஸ்திரார்த்தம் தெரிந்ததால் என்றால், எந்த சாஸ்திரார்த்தம் அவர்களுக்குத் தெரிந்தது? அந்த சாஸ்திரமோ சாஸ்திரங்களோ அவர்களுக்கு முன்னதாய்த்தானே இருந்திருக்க வேண்டும். சாஸ்திரம் தெரியவேண்டுமோ அல்லவோ அவர்களுக்கு. அப்படி ஒப்புக்கொண்டால் வேதம் ரிஷிகளால் செய்யப்பட்டது என்பது எப்பொழுதும் ஒப்புக்கொள்ளமுடியாதது. தர்மாதர்ம வியவஸ்தை வேதமூலமாய்த்தான் · தெரிய வேண்டியிருக்கிறது. வேதார்த்தம் தெரிந்துகொண்டு நமக்குச் சொல்லி இருக்கிறார்கள். அதை ஸ்மிருதி புராணங்களில் விளக்கி இருக்கிறார்கள். ஆகையால் தான் வேதசாஸ்திரங்கள் பிரமாணம் என்பது ஏற்படுகிறது.

சாஸ்திரத்தில் சொன்னபடி நடந்தால்தான் சுகம். இல்லாவிட்டால் துக்கம் நிச்சயம். வர்ணாசிரமதர்மப்படி நடந்தால் சுகம் கிடைக்கும். பாபத்தை நீக்கிக்கொள்ளவேண்டியது. தர்மத்தை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டியது.

மற்ற பிரமாணங்களைப் பார்க்கிலும், சாஸ்திர பிரமாணத்திற்கு ஒரு சிரேஷ்டத்துவம் உண்டு. பிரத்யக்ஷம் தப்பும், ரோகாதி பீடைகளினால்; ஊஹையும் தவறிப்போம், ஸதூஹ துரூஹபேதமிருப்பதால்; சப்தமும் தப்பும் அனுப்தசப்தமானால். ஆனால் நிர்தோஷனான ஸர்வேச்வரனால் செய்யப்பட்ட வேதசாஸ்திரம் தப்பாது. ஏன்? ஸ்வத: பிரமாணமாதலால். இந்த லோகத்தில்கூட சுகம் சம்பாதிக்கலாம். வித்யாரண்யர் ஸ்வர்ணவர்ஷம் வரவழைத்த கதை ஸகலருக்கும் தெரியலாம். ஆகையால் வேதசாஸ்திர பிரமாணத்தை நம்பி, ஸகல ஆஸ்திகஜனங்களும் வர்ணாச்ரம அனுஷ்டானப்படி நடந்தால் சுக பிராப்தியும், துக்க நிவர்த்தியும், அடைவார்கள் என்பது ஸித்தம்.

3

அருளுரை

உபந்யாஸ நாள் : 15-6-1927 *கிழமை : புதன்*

நேற்று வேதசாஸ்திரம்தான் பிரமாணம். மற்ற மூன்று பிரமாணமும் வைஷம்யமாயும், ஸதோஷமாயும் இருக்கலாம், இது மட்டும் தோஷரஹிதமாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. எப்படி ஜன்மாந்தரம் உண்டு என்பதிலிருந்து வேதம் பிரமாணம் என்று ஒப்புக்கொண்டோமோ அப்படியே அதிலிருந்து சுகம் துக்கம் என்று இரண்டும், அதை அனுபவிக்கும் காரணமும் தெரியப் பெற்றோம். இந்த சுகப் பிராப்தி, துக்கநிவர்த்தியில் இருந்து, ஈச்வரன் ஒருவன் உண்டென்றும் தீர்மானமாகிறது.

நாஸ்திகன் இல்லையென்கிறான். प्रत्यक्षाभावात्. ரிஷிகள் ஈச்வரனை பிரத்யக்ஷமாய்க் கண்டதாக சாஸ்திர புராணங்களில் சொல்லி இருக்கிறதே என்றால், அவர்கள் ஸத்கர்ம பலத்தால் மனசு நிர்மலமாகி ஈச்வரனை பிரத்யக்ஷீகரித்துக் கொண்டார்கள் என்றுதான் தோன்றுகிறது. துருவன் தன் தகப்பனார் மடியில் போய் உட்காரப்போனதாயும், இளையதாயார் சுருசியென்பவள் தனது மகன் இருக்கவேண்டிய இடத்தில் உட்காரக்கூடாது என்று தள்ளிவிட்டதாகவும், உடனே அவன் பகவத் தர்சனம் செய்யாமல் வருவதில்லை யென்று வனத்துக்குப் போய் ஸ்திரமாய் உட்கார்ந்துக் கொண்டுவிட்டதாயும், அங்கே நாரதர் வந்து வாஸுதேவ துவாதசாக்ஷரீ மஹாமந்திரத்தைச் சொல்லிக்கொடுத்ததாகவும், அந்த மந்திரஜபத்தால் பகவான் பிரஸன்னமானதாகவும் நாம் படித்திருக்கிறோமல்லவா? இந்த தபசுக்குச் சென்றபோது துருவனுக்கு வயது ஐந்து. ஜன்மாந்தரத்தில் தபசு பண்ணி மனதை

நிர்மலமாக்கிக்கொண்டு, இந்த ஜன்மத்தில் துருவன் ஈச்வரனை பிரத்யக்ஷமாகக் கண்டான். அதே புரச்சரணுதி கர்மாக்களை செய்தால், நாமும் பிரத்யக்ஷம் செய்துக்கொள்ளலாம்.

நமக்கு ஈச்வரன் பிரத்யக்ஷமல்ல என்பது ஸரிதான். ஆனுல் நாஸ்திகன் சொல்லுகிற மாதிரி அல்ல. அவன் இந்த சர்மசக்ஷுஸுக்குத் தெரியாவிட்டால் ஈச்வரன் இல்லை என்று சொல்லிவிடுகிருன். அது தப்பு என்று நாம் சொல்லுகிரேம். இந்த சர்மசக்ஷுஸுக்களுக்கு வேத்யன் அல்லதான் பகவான். இந்த இந்திரியங்களால் அதீந்திரியனுன பகவானைப் பார்க்க முடியாது. அதனுல்தான் பகவான் பகவத் கீதையில்,

न तु मां शक्यसे द्रष्टुं अनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ॥

என்று சொன்னதிலிருந்தே திவ்ய சக்ஷுஸுக்கு மாத்திரம் வேத்யன் என்றும், ஞானக்கண்ணுலேயேதான் அறியப்படுகிறவன் என்றும் தெரிகிறது. ஞானவேத்யனுன பகவானை ஞானத்தினுலேயேதான் அறிய வேண்டும். ஸ்ரீ சங்கராசார்யாள் சங்கரவிஜயத்தில் சுரேசுவரசார்யாளுக்கு உபதேசிக்கும்போது இப்படி சொல்லி இருக்கிருர்கள்:

आराधितं दैवतमिष्टमर्थं ददाति तस्याधिगमो गुरोः स्यात् ।
नोचेत् कथं वेत्तुमीश्वरोऽसौ अतीन्द्रियं दैवतमिष्टदं नो ॥

ஆராதிக்கவேண்டிய ஈச்வரனை நாம் குருமூலமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. நாமாகவே தெரிந்துகொள்ள முடிகிறதில்லை. ஏன்? அதீந்திரியனுய் இருப்பதினுலே. ஸகல ஞானத்திற்கும் குருதான் காரணம். கேவலம் 'சச்சிதானந்தம்' என்ருல் என்ன தெரிகிறது? ஒன்றும் தெரிகிறதில்லை. அதற்காகத்தான் விக்ரஹம் முதலியன வைத்து, பெரிய பெரிய கோவில்கள் கட்டி அவ்விடத்தில் விசேஷ ஸாந்நித்யமுள்ள தேவதா பிரதிஷ்டைகளைச் செய்து பகவத் பிரஸாதத்தை அடையும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. இப்பொழுதுங்கூட அந்த க்ஷேத்திரங்களில் மஹா வியாதிகள் எல்லாம் நீங்குகிறதை நாம் கண்டதில்லையா? பக்தி இருந்தால் க்ஷேமம் கிடைக்கின்றது. இல்லாவிட்டால் கிடைக்கிறதில்லை. இதையெல்லாம் நமக்கு யார்

சொல்லிக் கொடுத்தார்கள்? குருதான். முதல் முதல் சொல்லிக்கொடுத்த குரு மாதா, அதனால்தான் சுருதியில் मातृ देवो भव, पितृ देवो भव பிறகு आचार्य देवो भव என்று சொல்லி இருக்கிறது. எது எது நாம் அறிந்துகொண்டிருக்கிறோமோ, அது எல்லாம் ஒரு குரு மூலமாய்த்தான் வந்திருக்கின்றது. இந்த குரு ஸ்தானத்திற்கு ஜாதிபேதம் முதலியன கிடையாது. எவன் குரு என்றால் சிஷ்யனுக்கு ஹிதமான மார்க்கத்தைக் காட்டுகிறவன்தான் குரு. ஸரியான மார்க்கத்தைக் காட்டுகிறவன் குரு.

को गुरुरधिगततत्वः शिष्यहितायोद्यतः सततम् ।

என்று பிரச்னோத்தர ரத்நாவளியில் சொல்லி இருக்கிறது. சிஷ்யனுடைய யோக்யதானுஸாரமாய்ச் சொல்லிக்கொடுக்கிறவன் தான் குரு. அதனால்தானே முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு முதலிய பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. கேவலம் நிர்குண பிரம்மத்தைப் பற்றிப் பேசி அதன் ஸ்வரூபம் ஸச்சிதானந்தம் என்றால் என்ன தெரிந்துகொள்ள முடிகிறது? ஒன்றும் புலப்படுகிறதில்லை. ஏதோ ஒரு மூர்த்தியைக் கற்பித்துக் கொடுக்க வேண்டித்தான் இருக்கின்றது. ஸர்வ வ்யாபகனாய் இருக்கிறான் என்றால் எப்படித் தெரிகிறது? அதற்காக ருத்ரமூர்த்தியையோ, விஷ்ணுமூர்த்தியையோ, அல்லது வேறு ஏதாவது ஒரு மூர்த்தியையோ ஏற்படுத்திக்கொண்டு ஆராதனம் செய்து சித்தைக்காக்ர்யம் கிடைத்தமேல், மேலான படிகளுக்குப் போகமுடியும். அப்பொழுதுதான் ஸர்வ வியாபகத்துவத்தைச் சொல்லிக் கொடுத்தால் தெரியும். லௌகிகமாயும் அப்படித்தான், சிறு குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம் செய்விக்கும்போது முதல் முதல் மணலில் எழுதச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பிறகு புளியங்கொட்டையால் அப்படியே அடுக்கிவைத்து பழக்குகிறார்கள். பிறகு ஓலையைக் கொடுத்து எழுதச் சொல்லுகிறார்கள். பிறகு எழுத்துக்கள் முக்தாபலங்கள்போல் ஸரியாகின்றன அல்லவா. முதல் முதல் ஸ்தூல எழுத்தாக எழுதி பிறகு செவ்வையாக சின்ன எழுத்தாய் எழுதுகிறான் அல்லவா? அப்படியேதான் பகவானுடைய சூக்ஷ்ம ஸ்வரூபம் தெரியுமுன் ஸ்தூலமாய் மூர்த்தி செய்துக்கொண்டு பிறகு பதே பதே சூக்ஷ்ம தர்சனம் உண்டாகும். ஸ்தூலபுத்திக்கு ஸ்தூலக்கிரஹண சக்திதான் உண்டு. இப்பொழுதும்கூட சக்கரவர்த்திக்குப் பட்டம் கட்டினால்,

கிரீடதாரணம் செய்தால், படத்தை அலங்கரித்து உத்ஸவம் கொண்டாடுகின்றதில்லையா? இதனால் ராஜப்ரீதியை ஸம்பாதிக்கிறதில்லையா? அதேமாதிரி ஸர்வேச்வரன் தன்னை ஆராதிப்பவர்களுக்கும் அனுக்கிரஹம் செய்கிறார். லௌகிக ராஜாக்களுக்குத் தந்தி மூலமாய் நாம் மஹோத்ஸவம் கொண்டாடினதாகத் தெரிவிக்க வேண்டும். ஸர்வேசுவரனுக்கு அதொன்றும் வேண்டியதில்லை.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

என்றபிரகாரம் அவன் ஸதா நமது ஹ்ருதயகமலத்தில் இருப்பதால் அவனுக்கு நாம் அவனை ஆராதித்ததாகத் தெரிவிக்க வேண்டியதில்லை. அந்த சிரமம்கூட நமக்குக் கிடையாது.

மேலும் ராஜாவினுடைய ஸேவையில் சில ஸமயங்களில் அவனை ஏமாற்றிவிடலாம்; இன்றைக்குச் செய்யவேண்டிய வேலையை நாளைக்குச் செய்து இன்றைக்குச் செய்ததாகவே காட்டிவிடலாம். ஈச்வரன் அப்படியல்ல. ஸகல சங்கதிகளையும் அறிந்துகொள்ளுகிறான். ஆகையால் நாம் விக்கிரஹங்கள் மூலமாய்ச் செய்யும் பூஜையை அவன் தெரிந்து கொண்டு, நமக்கு சிரேயஸ்ஸைக் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறான். நமது ஆராதனத்துக்குத் தகுந்தபடி பலனை நமக்குக் கொடுக்கிறான்.

இந்த ஆராதனை வழிமுறைகளை எல்லாம் நாம் எப்படித் தெரிந்துகொள்ளுகிறது? எல்லாவற்றையும் குருமுகத்திலிருந்து தான் அறியவேண்டும். நமக்கு ஒவ்வொரு காரியமும் யாராவது முன்னால் செய்துகாட்டிய பிறகேதான் நாம் அந்தக் காரியத்தைச் செய்யப் பழகிக்கொள்ளுகிறோம். அல்லது ஒருவன் செய்துகாட்டின அனுபவத்தைக்கொண்டு நாம் காரியங்களைச் செய்கிறோம் அல்லவா?

இந்த குருமூலகமான வித்தை நாஸ்திகனுக்கு உண்டாகிறதில்லை ஏன்? அவனுடைய அஹங்காரத்தால். அவன் தானே தனது சுயபுத்தியால் சகலத்தையும் கண்டுபிடித்து விடலாம் என்று எண்ணுகின்றான் அல்லவா? அவன்தான் பிரத்யக்ஷத்தைத் தவிர மற்ற பிரமாணத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லையே!

அவனிடத்தில் விக்கிரஹத்தைப்பற்றி பேசினுல் ஏதோ கட்டுக்கதை என்றுதானே சொல்லுவான். ஈச்வரன் அப்பிரத்யக்ஷன். ஆகையால் அவனைப் பார்க்காமல் ஏற்படுத்திய இந்த மூர்த்த ரூபங்கள் எல்லாம் வீணகல்பனைகள் என்று சொல்லுகின்ருன். அவனே ஈச்வரனே இல்லை என்று சொல்லுகின்றவன். ஏன்? 'नास्ति ईश्वरः प्रत्यक्षाविषयत्वात्' ஈச்வரன் இல்லை பிரத்யக்ஷமல்லாததால் என்பவன். இப்படி இவன் சொல்லிவந்ததைப் பார்த்து அவன் மீது தயை பிறந்து, அவனுக்கு புத்தி கற்பிக்க உத்தேசித்து, ஈச்வரனை பிரார்த்தித்து அந்த நாஸ்திகனுக்கு பிரத்யக்ஷமாகும்படி கேட்டுக்கொண்டதின்மேல் அப்படியே ஈச்வரன் பிரத்யக்ஷமானுலும், நாஸ்திகன், இவன் ஈச்வரன் அல்ல ஈச்வரனுய் இருந்தால் பிரத்யக்ஷமாகுமா? नायमीश्वरः प्रत्यक्षविषयत्वात् இவன் ஈச்வரன் அல்ல. நீங்கள் ஏதோ வேஷதாரியைக்கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறீர்கள் என்று சொல்லுவான்.

முன்னுல் பிரத்யக்ஷமல்லாததால் ஈச்வரன் இல்லையென்ருன். இப்பொழுது பிரத்யக்ஷமாய் இருப்பதால் ஈச்வரன் அல்ல என்கின்ருன். இவனை என்ன செய்கிறது? இப்பேற்பட்டவர்களை வேதபாஹ்யர் என்று தீர்மானித்து அவர்களுக்கு ஒன்றும் சொல்லிக்கொடுக்கக்கூடாது என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிருர்கள். இவர்கள்தான் ஸகலமும் தெரியுமென்று அஹங்காரம் கொண்டிருக்கிருர்களே!

துர்யோதனனுக்கு ஸ்ரீ பகவானே போய் உபதேசம் செய்தும் கேட்டானு? நம்மவர்களில் சிலருக்கு பகவான் சொல்லி இருக்கிருர் என்ருலே போதும். அவர்கள் அதன்படி நடக்கத் தயாராய் இருக்கிருர்கள். சாக்ஷாத் பகவானே வந்து சொல்லியும் அதற்கு விருத்தமாய் நடக்கவில்லையா அவன்? ஸமபாகத்திற்கு யோக்யராய் இருந்தாலும், பிக்ஷாடனம் க்ஷத்திரியர்களுக்கு, தர்மம் அல்லாததால், ஐந்து கிராமங்கள்தானே தர்மபுத்திராதிகள் கேட்டார்கள்? அவன் கொடுத்தானு?

ஒன்றும் தெரியாதவன் பாதகம் இல்லை. அவன் சொன்னதைத் தெரிந்துகொண்டு அதனுல் கிருதார்த்தத்தை அடைகிருன். நன்ருய்த்தெரிந்தவனுக்கோ ஒன்றும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. உபதேசம் செய்ய வேண்டும் என்கிற சாஸ்திரவழக்கப் பிரகாரம் காட்டவேண்டியதைத்தவிர வேறில்லை.

ஆனால் கொஞ்சம் தெரிந்தும் அதிகம் தெரிந்ததாக நினைத்துக்கொண்டிருக்கிறவனுக்குச் சொல்லிக்கொடுக்கவே முடியாது. இதைப்பற்றித்தான் பர்த்ருஹரி

> अज्ञ:सुखमाराध्य: सुखतरमाराध्यते विशेषज्ञ: ।
> ज्ञानलवदुर्विदग्धं ब्रह्मापि नरं न रञ्जयति ॥

என்று சொல்லியிருக்கிறார்.

நாஸ்திகன் சொல்லுகிறபடி, ஈச்வரன் இந்த சர்மசக்ஷுஸ்களுக்கு வேத்யன் அல்லதான். ஞானசக்ஷுஸ்ஸாலேயே அவனை அறியவேண்டுமென்று முன்னமேயே சொல்லியாயிற்று. அப்படியானால் ஈச்வரனை எப்படி அறியலாம் என்றாலோ குருமூலகமாய்த்தான் அறியலாம்.

ஈச்வரன் உண்டென்பதற்கு நம்ம பெரியவர்கள் அநேகம் யுக்திகள் சொல்லி இருக்கிறார்கள்.

1. நாம் முன்னமே ஒப்புக்கொண்டபிரகாரம் வேதம் பிரமாணமாதலால், வேதத்தில் ஈச்வரன் உண்டு என்று தீர்மானமாய்ச்சொல்லி இருக்கின்றது. வேதத்தில் தர்மாதர்மம் சொல்லி இருக்கிறது. அந்த தர்மாதர்மம் அதீந்திரியம். அதீந்திரியத்தை, அறிந்தவர்கள்தானே சொல்லக்கூடும். வேதத்தை ரிஷிகள் எழுதிவைத்தார்கள் என்றால், அவர்கள் ஸ்வர்க்கலோகத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அதை எழுதினது ஸ்வர்க்கலோகத்திற்குப் போனபிறகா முந்தியா? வேதத்தில் ஜ்யோதிஷ்டோமாதி க்ரதுக்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது ஸ்வர்க்கம் போவதற்கு. இதை எப்படிக் கண்டுபிடித்தார்கள்? ஜ்யோதிஷ்டோமாதி யாகங்களைச்செய்த முன்னென்றால் இந்த யாகத்தைச் செய்தால் ஸ்வர்க்கம் கிடைக்குமென்று சொன்ன சுருதி முன்னமே இருக்கவேண்டுமல்லவா? ஸ்வர்க்கம்போனபிறகு என்றால் அவர்கள் எந்த வழியில் ஸ்வர்க்கம் போனார்கள்? அவர்கள் போனவழி போதுமே நமக்கும். இந்த யாகம் நமக்குமட்டும் என்னத்திற்கு? இப்பேற்பட்ட அநேக உபபத்திகள் வருவதினால் வேதத்தை ரிஷிகள் செய்தார்கள் என்று சொல்லமுடிகிறதில்லை. அவர்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். வேதப் பிரமாணத்தைத் தவிர இதர

பிரமாணத்தால் செய்தார் என்ருல் அநவஸ்தை ஏற்படும். எப்படி என்ருல் இந்த ரிஷிக்குச்சொன்ன ரிஷி ஒருத்தர் வேண்டும். அவருக்கு மற்ருெருவர். அப்படியே போய்க்கொண்டிருக்கும். ஏன்? தர்மாதர்மம் அதீந்திரியமானதாலும், ஜீவனுக்கு அக்ஞானம் சேர்ந்திருப்பதினுலும், அவனுல் செய்யப்பட்டிருக்க முடியாது. ஆகையால் வேதம் அனுதி, ஈச்வரனுல் செய்யப்பட்டது என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த வேதத்தில் ஈச்வரன் உண்டென்று சொல்லியிருக்கிறது. வேதத்தைச் செய்தான் என்பதால் ஈச்வரன் உண்டென்றும் வேதத்தில் சொல்லி இருப்பதால் ஈச்வரன் உண்டென்றும் ஸித்தமாகிறது.

2. மனுஷ்யனுக்குச் சுகதுக்கம் இருந்துகொண்டே இருக்கின்றன. ஆனுல் இரண்டும் நித்யமாய் இருக்கிறதில்லே. சுகம் இருக்கும்போது துக்கம் இல்லே. துக்கம் இருக்கும் போது சுகம் இல்லே. இவ்விரண்டும் எப்படி வந்தன? எப்படிப் போயின? தானுய் வந்தன என்று சொல்வதற்கில்லே. ஏன் என்ருல், சுகமோ துக்கமோ எப்பொழுதும் வந்து கொண்டிருக்கட்டுமே! ஏன் அப்படிக்கில்லே? இதற்குக் காரணம் புண்ணியம் பாபம். திருஷ்டாந்தமாக பிரஹ்லாத சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். அவனுடைய தகப்பனுர் அவனுக்கு அநேக ஹிம்ஸைகளேச் செய்தார் என்று சொல்லி இருக்கின்றது. மலேமேலிருந்து கீழே உருட்டச்செய்தார், காளகூடவிஷத்தை ஊட்டச்செய்தார், யானேயால் மிதிக்கடித்தார், பாம்புகளால் கடிக்கச் செய்தார். இப்படி பல விதங்களில் ஹிம்ஸை செய்தும் அவனுக்கு துக்கம் உண்டாகவே இல்லே. ஏன்? பாபமே கிடையாது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. பகவத்பக்தி விசேஷமாய் இருந்தது.

அதேமாதிரி ஸதாசிவ பிரம்மேந்திரர்களேப்பற்றி ஒரு சரித்திரம் உண்டு. அவர் ஸதா பிரம்மநிஷ்டராய் அவதூத ஆச்ரமியாய் பிராரப்தம் தள்ள அவருடைய தேஹம் போய்க்கொண்டிருந்தது. ஸதா ஈச்வர த்யானத்தில் லயித்த புத்தியுடன் இருந்ததால் இங்கு போகவேண்டும், அங்கு போகக்கூடாதென்ற இஷ்டம் அவருக்குக் கிடையாது. அப்படி போய்க்கொண்டிருக்கிற காலத்தில் ஒரு

யவனராஜா (நவாப்) வேட்டைக்காகக் காட்டில் தனது ஸ்திரீகளுடன் இருக்கும் கூடாரத்தில் நுழைந்துவிட்டார். அதை அவன் கண்டு வெகு கோபங்கொண்டு அவருடைய பாகுவைச் சேதம் செய்துவிட்டான். பாகுச்சேதம் செய்ததுகூடத் தெரியாமல் அப்படியே போய்க்கொண்டிருந்தார். இதைக்கண்டு அதிசயித்துப் பின்தொடர்ந்துசென்று உபதேசம் பெற்றதாகக் கேட்டிருக்கிறோம். பாகுச்சேதம் செய்தும் துக்கம் வராததற்குக் காரணம் என்ன? ஒரு சிறுமுள் தைத்தாலும் எவ்வளவோ துக்கம் அனுபவித்துக் கத்த ஆரம்பித்து விடுகிறோம். அப்படி இருக்க பாகுச்சேதம் செய்தும் ஏன் துக்கம் வரவில்லை?

ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ।

என்றபடி ஸர்வ பாபமும் போய் இருப்பதால் துக்கமே கிடையாது. நமக்கெல்லாம் யாதொரு காரணமும் இல்லாமல் திடீரென்று சுகம் வருகின்றது, அல்லது திடீரென்று துக்கம் வந்துவிடுகின்றது. ஒரு காரணமும் தெரிகிறதில்லை. இப்படி சுகதுக்க பிராப்தி ஏற்படுவானேன்? காரணமென்ன? மூலிகை தோண்டப்போனவிடத்தில் பெரிய தனம் அகப்படுகின்றது. தனம் இருக்கிறதென்று தோண்டப் போகிறான், பாம்பு கடித்து இறந்துபோகிறான். இதெல்லாம் எப்படி உண்டாகிறது? ரிஷிகள் எல்லாம் பிரம்மாநந்தம் அனுபவித்ததாகச் சொல்லியிருக்கிறது எப்படி? சுகஸாதனத்திற்குப் புண்ணியம் என்றும், துக்கஸாதனத்திற்குப் பாபம் என்றும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. கர்மாவின் பலன்தான் இவையெல்லாம்.

அப்படியானால் இந்தப் பலன் எப்படி வந்தது? கர்மமே கொடுத்ததா? அல்லது நாமாக எடுத்துக்கொண்டோமா? அல்லது யாராவது கொடுக்கிறாரா? கர்மம் கொடுக்கவில்லை. ஏனென்றால் அது ஜடம். சேதனசக்தி இல்லை அதற்கு. மேலும் ஜலதாடனம் முதலிய நிஷ்பலமான கர்மாக்கள் இருக்கின்றனவே, அதற்கென்ன சொல்வது? தவிர காட்டு இலாகா உத்தியோகஸ்தனுக்குப் பதிலாக வேறு ஒருவன் ஸரியாக கணக்கு எழுதிவைத்தால் அதனால் அவனுக்கு பலன் கிடைக்குமோ, சம்பளம் கிடைக்குமோ? அது எப்படி உண்டாகாதோ அதுபோல் கர்மமே பலத்தைக் கொடுக்காது. கொடுக்க முடியாது. கர்மம் பலனைக்கொடுக்கிறதென்றால் ஈச்வரனே வேண்டியதில்லை. இந்தக் காலத்தில் எதற்கும் முன்னால்

பிராம்மணன் நிற்கின்ருன். உத்தியோகத்திற்காக பாடுபடுகிருன். அதனுல் மற்றவர்கள் துக்கப்படுகின்ருர்களாம். வேலையா சம்பளம் கொடுக்கின்றது? முடியாது. ராஜா ஒருத்தன் வேண்டும். அதனுல்தான் ஒருத்தன் இறந்தவுடன் மற்ருெரு ராஜாவை நியமிக்கிருர்கள்.

போகட்டும், கர்மம் பலனைக் கொடுக்கிறதில்லை என்று ஒப்புக்கொண்டுவிட்டால் சுகதுக்கம் எப்படி வருகிறது? நாமே வாங்கிக்கொள்ளுகிருேம் என்று சொல்லிவிடலாமா? நாமே வாங்கிக்கொண்டோமென்ருல், நாம் துக்கத்தை வாங்கிக்கொள்ள இஷ்டப்படுவோமோ? ஒருக்காலுமில்லை. அப்படியாயின் உலகத்தில் துக்கமில்லாமலே போயிருக்காதா? நம்மைச் சுற்றிலும் துக்கமயமாய் இருப்பதைப் பார்க்கிருேமே! துக்கமோ ஸர்வதா ஸர்வத்ராளுக்கும் அநிஷ்டம்தானே! நல்லதையே ஏன் வாங்கிவிடப்படாது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல உபயோகமாக இன்னொருவன் வேண்டும். அவன்தான் பகவான்; ஈச்வரன். ஆகையால் सर्वकर्मफलदातृत्वेन எல்லா கர்மங்களுக்கும் பலன் கொடுப்பதற்காக ஈச்வரன் ஒருத்தன் ஸித்தமாகி இருக்க வேண்டும்.

நல்ல மார்க்கத்தில் போனுல் பகுமானமும், கெட்ட காரியம் செய்தால் தண்டனையும் ஏற்படுவது நியாயம்தானே. ஏன்? நல்ல மார்க்கத்தில் போகும்படி தூண்டவும் கெட்ட மார்க்கத்தில் போகாமல் இருக்கும்படி தடுக்கவும் தானே பகுமான சிக்ஷைகள் ஏற்பட்டிருக்கின்றன.

लालनाद्बहवो दोषाः ताडनाद्बहवो गुणाः ।
तस्मात्पुत्रं च शिष्यं च ताडयेन्न तु लालयेत् ॥

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பையனைத் தகுந்தபடி சிக்ஷித்தால் விருத்திக்கு வருகிருன். இல்லாவிட்டால் கெட்டுப்போகிருன். எல்லோருக்கும் தெரிந்த கதை ஒன்று உண்டு.

ஒரு சிறுவன் சிறு சிறு வஸ்துக்களாய்த் திருடித் தாயாரிடம் கொடுத்துவந்து பிறகு பெரும் திருட்டு செய்து அகப்பட்டுக்கொண்டான். அப்பொழுது நியாயஸ்தலத்தில் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை விதிக்கப்பட்டான். அப்பொழுது அவன் தனது தாயாரைப் பார்க்கவேண்டுமென்று கேட்டதாகவும், ஸமீபத்தில் அவள் வந்தபோது, ஏதோ ரகசியம் பேசுவதுபோல்,

காதின் கிட்டப்போய், அவள் காதை நன்ருய்க் கடித்துத் துண்டித்துவிட்டான். ஸமாசாரம் என்னவென்று விசாரித்தபோது, இவள் என்னை சிறு திருட்டின்போதே கண்டித்திருந்தால், இந்தப் பெரும் ஆபத்தில் சிக்கி இருக்கமாட்டேன், எனக்கு இளம் பிராயத்திலேயே தகுந்த சிக்ஷை விதித்திருந்தால் இந்தக் கதி எனக்கு வந்திருக்காது என்று சொன்னுனும். அவனுடைய மனதைத் தெரிந்து கொண்டு மன்னித்துவிட்டார்களாம். ஆகையால் சிக்ஷை நமக்கு அவசியம். ஆனுல் சிக்ஷை மனுஷ்யர்களுக்குத்தான். மிருகங்களுக்கில்லை. ஏதோ ஒரு புலி பிராம்மணனைத் தின்றுவிட்டதாகத் தெரிந்தால் அந்தப் புலிக்கு சிக்ஷை செய்கிறது எங்கேயாவது கேட்டதுண்டோ? இல்லையே! மனுஷ்யனுக்கு சிக்ஷை விதித்தால் அவன் திரும்பி நல்ல மார்க்கத்திற்குப் போவான். ஈச்வரன், நாம் திரும்பி நல்ல மார்க்கத்தை அவலம்பிக்கச் செய்வதற்காகக் கொடுக்கும் சிக்ஷைதான் துக்கம். அவன் செய்யும் பகுமானம்தான் சுகம்.

நம்மவர்களைச் சிலர் ஸந்த்யாவந்தனம் செய்வதினுல் என்ன பலன் என்று கேட்கிருர்களாம். இதை மட்டும் கேட்கக் கற்றுக்கொண்டிருக்கிருர்கள். தாங்கள் செய்யும் கார்யங்களுக்கு பலன் சொல்ல முடியுமா இவர்களால்? வீண் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிருர்களே, அதற்கு என்ன பலன்? ஏதோ விருத்தாந்தப் பத்திரிகை வாசிக்கிருர்களே அதற்கு என்ன பலன்? அதில் எழுதுவது தொண்ணுற்று ஒன்பது பொய். ஏதோ ஒரு பத்திரிகை அச்சடிக்கும்போது பத்து பங்திவரை பாக்கி இருந்ததாம். அச்சடிக்கிறவன் ஸம்பாதகனை என்ன செய்வது என்று கேட்டபோது, இந்தக் குளத்தில் ஒரு பிராம்மணன் விழுந்து இறந்துவிட்டான் என்று அச்சடிக்கச் செய்தானும். அப்படி எழுதியும் மூன்று பங்திகள் பாக்கி இருப்பதைக் கண்டு, அப்படி முதலில் கேள்விப்பட்டோம், பிறகு தீர விசாரித்ததில் அது பொய்யென்று கேட்டு ஸந்தோஷிக்கிரேும், என்று எழுதச் சொன்னுனும். இப்படி இந்த வீண் விருத்தாந்தப் பத்திரிகை வாசிப்பதில் என்ன பிரயோஜனம்?

वृत्तस्य सर्वकर्मण: अन्त: नाश: वृत्तान्त: ஸ்வகர்மத்தை நாசம் செய்கிற பத்திரிகை என்று அர்த்தம் செய்தால் வாஸ்தவமாகும். இந்த வீண் காலக்ஷேபத்தால்தானே நமக்கு ஸந்த்யாவந்தனத்துக்குங் கூட ஸாவகாசம் கிடைக்கிறதில்லை.

ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு தர்மம் உண்டோ இல்லையோ? நமக்கு மூன்று தரம் ஸந்த்யா சொல்லி இருக்கின்றது. முஸ்லீம்களுக்கு ஐந்து தரம் நமாஸ் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் காலாகாலத்தில் அவன் செய்கிருனே இல்லையோ? அதேமாதிரி நாமும் செய்ய வேண்டாமோ?

ஒரு தாசில் உத்தியோகம் என்று வைத்துக்கொள்வோம். வேலையைச் செம்மையாய்த் தெரிந்துகொண்ட பிறகு, மற்றக் காரியத்தை எல்லாம் குமஸ்தாக்களுக்கு ஒப்புவித்துவிட்டாலும், கையெழுத்தாவது போடவேண்டுமல்லவா? அதேமாதிரி நமது பிராம்மண்ணியம் போகாமல் இருக்க ஸந்த்யாவந்தனமாவது செய்யவேண்டும் என்று குறைச்சலாய்க் கடைசி வார்த்தையாகச் சொல்லி இருக்கிறது. மந்திரார்த்தம் தெரிந்துகொண்டு செய்தால் यदेवविद्यया करोति श्रद्धया उपनिषदा तदेव वीर्यवत्तरं भवति என்று சொல்லியிருப்பதால் அதிக பலனுடையதாகுகிறது. ''बलवत्तरं भवति'' ஸந்த்யாவந்தனத்தில் பலன் என்னவென்று கேட்டபோது, அதற்கு பதிலும் சொல்லவேண்டுமல்லவா? அந்தப் பதில் ஸங்கல்பத்திலேயே இருக்கின்றது. उपात्त दुरितक्षयद्वारा श्री परमेश्वर प्रीत्यर्थम् என்று சொல்லி இருக்கின்றது. நம்முடைய பூர்வ பாபம் போனுல் ஈச்வரப்ரீதி உண்டாகிறது. பாபம் போகவேண்டுமென்கிற லக்ஷ்யம், ஈச்வர ப்ரீதி பலன். ஈச்வர ப்ரீதியைவிட வேறு என்ன சிரேஷ்ட பலன் லோகத்தில் உண்டு? ஸாதாரண பிரபுக்களை ஆச்ரயித்தால் எவ்வளவோ பலன் கிடைக்க, ஈச்வரனையே ஆராதித்தால் பலன் கிடைப்பதில் என்ன ஸந்தேகம்? ஈச்வர அபராதம் செய்தால் பாபம் வருகின்றது. மன்னிப்புக் கேட்கவேண்டாமா? सूर्यश्च, यदह्नात् இத்யாதி மந்திரங்களால் அன்ருடம் செய்த பாபங்களைப் போக்கடிக்கின்ருேம்; சுத்தமடைகிருேம்.

பலனே இல்லை என்று வைத்துக்கொள்வோம். மதவிஹிதம். ஆகையால் செய்யவேண்டாமா? அதைச் செய்தேதீரவேண்டும். தவிர பலமும் உண்டு. எத்தனையோ கர்மாக்கள் பிராம்மணர்களுக்குச் சொல்லப்படுகிறது, ஔபாஸனம், அக்னிஹோத்ரம் முதலியன. கடைசியாய் ஸந்த்யாவந்தனம் விடாவிட்டால் பிராம்மண்யம் நிற்கிறது. ஸகலசிரேயோபூதமான இந்தப் பிராம்மண்ணியத்தைக் காக்க வேண்டும். பிராம்மண்ணியத்தில் என்ன குணமென்ருல் விசுவாமித்திரரைக்

கேட்டால் சொல்லுவார். வீணைகவா தனது ராஜ்யம் முழுவதையும் விட்டுவிட்டுக் காடு வந்துசேர்ந்தார்? பிராம்மணர்களுக்கு இந்த லௌகிக சுகங்கள் லக்ஷ்யமில்லை. நாம் நமது விதிப்படி நடந்தால் நமது தேஹயாத்திரைக்கு வேண்டிய ஸௌகர்யங்களைக் கொடுக்க ஈச்வரன் ஸித்தனாய் இருக்கிறான்.

தேஹத்தைத் தண்டித்து நமக்கு சுக காரகமாய் செய்துக்கொள்ளவேண்டாமா? வஸிஷ்டர் சொல்லுகிறார்.

ब्राह्मणस्य देहोऽयं नोपभोगाय कल्प्यते ।
इह क्लेशाय महते प्रेत्यनन्तसुखाय च ॥

பிராம்மணனுடைய இந்த தேஹமானது போகத்திற்காக ஏற்பட்டது அல்ல. இந்த லோகத்தில் மிகவும் துக்கத்திற்கு ஆளாக்கி முடிவில்லாத சுகத்தை அடைய ஏற்பாடு செய்யத்தானே இந்த பிராம்மண சரீரம் ஏற்பட்டிருக்கிறது. சரீரத்தால் கஷ்டப்படாமல் நமக்குக் கிடைக்கிற சுகமே கிடையாது. வித்யாப்யாஸம் எவ்வளவு கஷ்டம்? கஷ்டத்தால்தான் சுகம் கிடைக்கின்றது. தனத்தாலா சுகம் கிடைக்கின்றது? இல்லவே இல்லை. சக்கரவர்த்திக்குத் துக்கமில்லையா? இவர்கள் எல்லாம் அனுபவிக்காத சுகத்தை மனதின் ஸந்துஷ்டியினால் பிராம்மணன் அனுபவிக்கலாமே. நம்ம பெரியவர்கள் எல்லாம் எப்படி மரியாதை பெற்றார்கள்? அவர்களிடம் தனம் இருந்ததா? முன்னமே எல்லாரும் பிராம்மணனை மதித்து வரவில்லையா? இப்பொழுதும் ஸரியான இடங்களில் மதிக்கிறார்கள். முழுவதும் போய்விடவில்லை. முழுவதும் இல்லாமலும் இல்லை. ஸந்திக்தமாய் இருக்கின்றது. சாஸ்திரம் சொன்னபடி நடந்தால் இப்பொழுதும் நமக்கு மரியாதை உண்டாகும் என்பதில் ஸந்தேஹமில்லை. ''कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति'' என்று பகவான் சொல்லுகிறார். பகவானை நம்பினவர் ஒருநாளும் கெடமாட்டார்கள். குசேலனுக்கு என்ன சொத்து இருந்தது? பிராம்மணன் தன் கர்மத்தைச் செய்துகொண்டிருந்தால் நிச்சயம் அவனுக்கு சுகம் உண்டாகிறதென்பதில் ஸந்தேஹமில்லை.

ஆனால் இப்பொழுது பிராம்மணர்களுக்கு காயத்திரீயில் வைமுக்யம் எப்படி வந்தது என்றால் அதற்கும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. தேவீபாகவதத்தில் (விஷ்ணு புராணத்திலும் சொல்லி இருக்கிறதுபோல் தோன்றுகிறது)

இதைப்பற்றி ஒரு விருத்தாந்தம் இருக்கிறது. மஹா துர்பிக்ஷத்தில் எல்லா ரிஷிகளும் கௌதம ஆச்ரமம் போய் அவரைச் சரணம் அடைந்தார்கள். அப்பொழுது அவர் தனது காமதேனுவினுல் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அன்னம் கொடுத்து ரக்ஷித்து வந்தார். இதனுல் அவருடைய கீர்த்தி எங்கும் பரவியது. இந்தக் கீர்த்தியை, அவரால் துர்பிக்ஷகாலத்தில் ரக்ஷிக்கப்பட்ட ரிஷிகளுக்கே பொறுக்க முடியவில்லை. இவருக்கு ஏதாவது குற்றம் வரும்படி செய்ய வேண்டுமென்று அவர்கள் யோசனை செய்தார்கள். கௌதமருக்கு பசுவினிடத்தில் பரம ப்ரீதி, பரம பக்தி உண்டு. எந்தப் பசுவைக் கண்டாலும் அதைத் தடவிக் கொடுத்து, பிரதக்ஷிணம் செய்யாமல் போகமாட்டார். இதை அறிந்த அந்த அசூயை நிறைந்த ரிஷிகள் தங்கள் தபோபலத்தால் ஒரு பசுவை சிருஷ்டித்து, இவர் தொட்டதும் கீழே விழுந்து இறந்து போகும்படியாய்ச் செய்து நிறுத்தினுர்கள். அப்படியே வழக்கம்போல் கௌதமர் தடவிக் கொடுத்துப் பிரதக்ஷிணம் செய்ததும், அந்தப் பசு கீழே விழுந்து இறந்தது. ஸகல தேவதாத்மகமான கோ இறந்ததைக் கண்டு நிரம்ப துக்கப்பட்டு, இதன் காரணமென்னவென்று தனது யோக திருஷ்டியால் பார்த்தார்; சங்கதி தெரியவந்தது.

இவ்வளவு தன்னிடத்தில் லாபம் அடைந்தும், ஓர் அபராதமும் செய்யாத தன்னிடத்தில் இவ்வளவு கிருதக்னதையைச் செய்த இந்த ரிஷிகளை எப்படி சிக்ஷித்து மேலான பதவிக்குக் கொண்டு வருகின்றது என ஆலோசித்தார். कृतघ्ने नास्ति निष्कृतिः என்று சொல்லி இருப்பதால் பிராயச்சித்தம் ஒன்றும் தோன்றவில்லை. அவர்களுக்கு சாபம் கொடுத்தார். எந்த தெய்வ பலத்தால் அவர்களுக்கு இந்த சிருஷ்டி சக்தி ஏற்பட்டதோ அந்த தெய்வத்தினிடத்தில் வைமுக்யமும், திரும்பி சிரேயஸ்ஸை அடைய அந்த காயத்திரீயையே சரணமடையும்படிக்கும், சபித்து, அவர்களையெல்லாம் கலியுகத்திலே ஜன்மம் எடுக்கும்படி சாபமோக்ஷமும் சொல்லிக் கொடுத்தார். நமக்கு இப்பொழுது காயத்திரீயில் சிரத்தை இருந்தால் ஸரி. இல்லாவிட்டால் நாமெல்லாம் கௌதம சாபகிரஸ்தர்கள் என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டியது.

எவர்கள் தன்னை பஜிக்கிருர்களோ அவர்களை ரக்ஷிப்பதால்தான் அந்த தெய்வத்திற்கு காயத்திரீ என்று பெயர். गायन्तं त्रायते इति गायत्री.

இப்பேற்பட்ட காயத்திரீக்கு என்ன பலன் என்று கேட்கிறார்கள்? என்ன பலன் இல்லை என்றல்லவோ கேட்க வேண்டும். பாபமே செய்கிறது, பாபப்பிரதிக்கிரியை ஒன்றும் செய்கிறதில்லை. சுகம் எப்படி வரும்? துக்கம்தான் குடி கொண்டிருக்கும். அன்ன சுத்தம் கிடையாது. ஸாப்பிடுவதோ நாய்சேஷம், ஸ்திரீசேஷம், பர்யுஷிதம் முதலிய ஸகல தோஷத்தோடு கூடின அன்னங்களை. மற்றும் இதர அபோஜ்ய அபேயங்களைப் பற்றிப் பேச வேண்டியதில்லை. இப்படி இருந்தால் என்ன சுத்தி ஏற்படும்? आहारशुद्धौ सत्वशुद्धिः அல்லவா? இந்த நியமம் தப்பிப் போனதால்தான் நம்மை ஒருவரும் கௌரவப்படுத்துகிறதில்லை. ஈச்வரனால் கொடுத்த அதிகாரம் போதாதா? ராஜாவும் கொடுக்க வேண்டுமா?

நமது கர்மாக்களைச் செய்துகொண்டு, நமக்குத் தெரிந்ததைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தால், நம்மை யார்தான் மதிக்காமல் இருக்க முடியும்? வெறுமனே மூக்கைப் பிடித்துக் கொண்டிருந்தால் என்ன வந்துவிடும்? சம்பளம் என்ன கிடைக்கும் என்று கேட்கலாம். சம்பளம் என்னத்திற்கு? நித்ய ஸந்துஷ்டனாய்க் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்தால் சுகமா? எவ்வளவு கிடைத்தாலும் போதாமல் வேணும்வேணும் என்று இருப்பதில் சுகமா? அது பரம தரித்திர திசையல்லவோ? சூத்திரன் செய்கிற கருமத்தையே செய்கிறது, அவன் வீட்டிலேயே சாப்பிடுகிறது, இன்னும் அவனும் செய்யத் துணியாத காரியங்களைச் செய்தால், அவனுக்கு நம்மிடத்தில் எப்படி பக்தி உண்டாகும்? நல்லவேளையாய் நம்முடைய குற்றங்களை எடுத்துக்காட்ட அவன் ஆரம்பித்தது நம்முடைய க்ஷேமம். குற்றம் நம்மிடத்தில் கண்டுபிடிப்பவன் நமக்கு வெகு நல்ல மித்திரன். நாம் செய்த குற்றம் அவன் வாயால் தொலைந்தது ஒன்று, நாமும் திருந்தலாம் இரண்டு. நம்முடைய தோஷத்தை யார் சொல்லுகிறாரோ அவர் நமது தாயாரைவிட சிரேஷ்டர் என்று சொல்லி இருக்கிறது. தாயார் தேஹரக்ஷணம் மாத்திரம் செய்கிறாள், இவர் பாபத்தைப் போக்கி புண்ணிய மார்க்கத்தையும் காட்டிக் கொடுக்கிறது போலாகிறது. இதைவிட மேலான உபகாரம் என்ன இருக்கிறது? அவனுடைய எண்ணம் எப்படி வேணுமென்றாலும் இருக்கட்டும், நமக்கு நல்லதாகத்தானே ஏற்படுகிறது?

वयमपि परितुष्टा वल्कलैस्त्वं दुकूलैः
समधिक परितोषः निर्विशेषो विशेषः ।

स तु भवतु दरिद्रो यस्य तृष्णा विशाला
मनसि च परितुष्टे कोर्थवान् को दरिद्रः ॥ (भर्तृहरिः)

अपमानात्तपोवृद्धिः सम्मानात्तपक्षयः ।
अर्चितः पूजितो विप्रो दुग्धा गौरिव गच्छति ॥

अमृतस्येव तृप्येत अपमानस्य योगवित् ।
विषवत् जुगुप्स्येत सम्मानस्य सदा नरः ॥

இப்பொழுதுதான் இந்த அகௌரவம் வந்திருக்கின்றது. முந்தி இருந்ததோ, இந்த நவநாகரீகம் வந்தமேல்தானே இப்படி ஏற்பட்டிருக்கிறது? இந்த நவீன பரிஷ்காரத்திற்குப் பிறகுதானே மழை இல்லை! ஸஸ்யாதிகளின் விலை அதிகமாய்ப் போய்விட்டது. முன்னவர்களுக்கு எல்லாம் ஸலீஸாய்க் கிடைத்தது. இப்பொழுது ஏன் உண்டாகவில்லை? முன்னவர்கள் எல்லாம் பசுக்கள் என்றல்லவோ நினைத்தோம். அவர்களுக்கு ஒன்றும் தெரியாது, நாம்தான் இந்த நவபரிஷ்காரத்தால் ரொம்ப சிலாகனீயத்தை அடைந்தோம் என்று கர்வம் கொண்டிருக்கிறோம். இப்பொழுது தெரிகின்றது எவர்கள் பெரியவர்கள் என்று. அவர்கள் ஸதா ஸந்தோஷிகளாய் இருந்தார்கள். எப்பொழுதும் சுகம் அனுபவித்தார்கள். ஸகலரும் அவர்களை ஸம்மானித்தார்கள். சாஸ்திரத்தில் சொல்லியபடி நாம் நடந்தால், நமக்கும் ஸகலமும் கிடைக்கும்.

இதற்கு ஒரு கதை கேட்டிருக்கிறோம். ஒரு பிராம்மணன் ஸதா ஈச்வரத் தியானம் செய்தால் தனது குடும்ப பரணத்தை ஈச்வரன் தாங்கிக் கொள்கிறான் என்று நம்பிக்கை வைத்து அந்தப்படியே தனது குடும்பத்தைப் பற்றி நினைக்காமல்

अनन्याश्चिन्तयंतो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

என்று சொல்லியபடி நினைத்துக்கொண்டு உஞ்சவிருத்தி நடத்தி வந்தான். ஈச்வரனுக்கு இவனைப் பரீக்ஷிக்க வேண்டுமென்று

தோன்றி ஒருதினம் ஒரு முஷ்டிகூடக் கிடைக்காமல் செய்து விட்டான். ஒருதரம் போனான், கிடைக்கவில்லை. இரண்டுதரம் போனான், கிடைக்கவில்லை. மூன்றுதரம் போனான், கிடைக்கவில்லை. வீட்டுக்கு வந்ததும் அந்த சுலோகம் பொய் என்று தனக்கு நிரூபணம் ஆகிவிட்டதால், அதை எழுத்தாணிகொண்டு அடித்துவிட்டு மறுபடியும் நாலாம்தரம் பிச்சைக்குப் போனான். இதற்குள் ஜகதீசன் அந்தப் பிராம்மணனுடைய சிஷ்யனாக வேஷம் தரித்துக்கொண்டு ஒரு வஸ்திரத்தில் அநேக முடிச்சாக அரிசி, பருப்பு, உப்பு, புளி முதலியன அன்றைக்கு வேண்டியதை மட்டும் கொண்டு வந்து அந்தப் பிராம்மணனுடைய பத்னியிடம் கொடுத்து சமைத்து வைக்கும்படி சொல்லிவிட்டுத் திரும்பிப் போய்விட்டான். நாலாம் தடவையும் பிராம்மணனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. வெறுங்கையோடு வீடு வந்ததும் வீட்டில் ஸகல ஸாமக்கிரிகளும் தயாராய் இருப்பதைக் கண்டு சமாசாரத்தை கேட்டான். யாரோ ஒரு சிஷ்யன் வந்ததாகவும், அவன் கொடுத்ததாகவும் அவன் முதுகில் ஒரு பெரிய கீரல் ரக்தப்பிரவாகமாக இருந்ததாகவும் அவருடைய மனைவி சொன்னாள். ஈச்வரன் கொடுத்த முடிச்சு அக்ஷயமாகவே வந்து கொண்டிருந்தது. இதேமாதிரி குசேலோபாக்கியானம் கேட்டதில்லையா?

ஒரு மகாபண்டிதன் ராஜஸபைக்குப் போய் இருந்த காலத்தில் அவனுடைய குத்ஸித வஸ்திரத்தைப் பார்த்து ராஜா சிரித்தானும். உடனே அந்தப் பண்டிதன்

वयमपि परितुष्टाः वल्कलैस्त्वं दुकूलैः
समधिग परितोषः निर्विशेषो विशेषः ।
स तु भवतु दरिद्रो यस्य तृष्णा विशाला
मनसि च परितुष्टे कोऽर्थवान् को दरिद्रः ॥

चतुः सागरपर्यन्तां यो भुङ्क्ते पृथिवीमिमाम् ।
तुल्याश्मकाञ्चनो यश्च स कृतार्थो न पार्थिवः ॥ (विश्वामित्रः)

என்று சொன்னானும். ஆசையிருந்தால் தரித்திரன், நிராசையாய் இருந்தால் சுகி. असन्तुष्टो द्विजो नष्टः என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் மனஸ்ஸந்துஷ்டி பிராம்மணனுக்குத் தான்.

மற்றவர்களுக்கு இல்லை. துஷ்டிதான் சுகம். அதனுல்தான் புத்தி விசேஷம் கிடைக்கின்றது. ஏன்? மனம் நிர்மலமானதால். பகவத் பஜனத்தால் நிர்மலமான மனது சீக்கிரத்தில் எதையும் பிடித்துக் கொள்கிறது. இப்படி நிர்மலமான மனதை சம்பாதித்ததால் ஏற்பட்ட புத்தி விசேஷத்தை ஏன் மறுபடி துஷ்கிரியை செய்து மலினப்படுத்திக்கொள்ள வேண்டும்? இதையெல்லாம் பிராம்மணர்களே தங்களுக்கென்று ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொல்லிக் கொள்ளுகிருர்களாம். ஏன்? உலகத்தில் கிரந்தம் எழுதினவர்களெல்லாம் பிராம்மணர்களாய் இருப்பானேன்? மற்றவர்கள் எழுதுகிறதுதானே. பிராம்மணனே எப்படிச் செய்தான்? போகட்டும், அப்படி அவன் புகழே ஜாஸ்தியாய் இருக்கும் புஸ்தகங்களை ராஜாக்கள் ஏன் பரவ அனுமதி கொடுத்தார்கள்? க்ஷத்திரியன் தன்னையே பெரியவன் என்று எழுதிக் கொள்ளட்டுமே.

போஜசம்பு என்று கூறப்படும் ஒரு ராமாயண சம்பு இருக்கிறது. அதில் மங்களாசரணத்தில்

उच्चैर्गतिर्जगति सिध्यति धर्मतश्चेत्
तस्य प्रमा च वचनैः कृतकेतरैश्चेत् ।
तेषां प्रकाशन दशा च महीसुरैश्चेत्
तानन्तरेण निपतेत् क्वनु मत्प्रणामः ॥

என்று சொல்லியிருக்கிறது. தாத்பர்யம், மேலான கதி தர்மத்தால் என்ருல், தர்மம் தெரிந்துகொள்ள வேதம் வேண்டும். வேதம் தெரிந்துகொள்ள பிராம்மணன் வேண்டும், அந்த பிராம்மணனைத் தவிர நான் வேறு யாரை நமஸ்கரிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறது. இதை ஏன் அவன் அப்படி எழுதினுன்? இது எல்லாம் காரணமல்ல. புத்தி விசேஷம் இருந்தது. ஞானவிசேஷத்தால் சிரேஷ்டத்துவம் கிடைத்தது. அத்தனைதான். கொஞ்சம் அதிகமாய் ஜந்மாந்தரத்தில் ஸத்கர்மானுஷ்டானம் செய்த விசேஷத்தால் வந்தது இந்த புத்தி. ஆனுல் இதனுலேயே நம்மவர்களில் மடையர்கள் இல்லையென்ருவது, மற்றவர்களிடத்தில் புத்திசாலிகள் இல்லையென்ருவது அர்த்தமில்லை. ஆனுல் இந்த ஜாதியில் புத்திசாலித்தனம் அதிகமாய் இருப்பது எல்லாரும் ஒப்புக்கொண்டதே.

புத்தி பிரஸாதத்திற்கு ஸரஸ்வதி கடாக்ஷம் வேண்டும். அந்த கடாக்ஷம் இருந்தால் வருகிறது இல்லாவிட்டால் இல்லை. புத்தி இருந்தால் ஸகலத்தையும் ஸாதிக்கலாம்.

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ।
इन्द्रियाणि हयानाहुः विषयांस्तेषु गोचरान्
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुः मनीषिणः ॥

என்று சொல்லியிருக்கின்றது. புத்தி ஸ்வாதீனமாய் இருந்தால் ஸகலத்தையும் கற்றுக் கொள்ளலாம். துர்போஜனத்தால் அது கெட்டுப்போகும். எதனுல் ஸகலமும் அடையலாமோ அதையே கெடுத்து விட்டால் கௌதம சாபம் போல், நமக்கு எது சிரேயஸ்ஸைக் கொடுக்கிறதோ அதையே நசிப்பித்ததாகும்.

இதற்கு ஒரு கதை உண்டு. அருணன் என்ற ஒரு ராக்ஷஸன் காயத்திரீ புரச்சரணம் செய்து ஸித்தி பெற்று தேவதைகளையெல்லாம் ஹிம்ஸித்துக் கொண்டிருந்தான். ஹிம்ஸை பொறுக்காமல் இந்திரன் தனது குருவாகிய பிரஹஸ்பதியிடம் தனது துக்கங்களைச் சொல்லிக் கொண்டான். தனது துக்கம் நிவாரணம் ஆகும் வழியைப் பற்றிக் கேட்டான். யோசித்துச் சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு, அருணன் வீட்டிற்குப் போனுர். அருணன் அவரை வரவேற்று "ஏது, விரோதியாகிய என்னிடத்திற்கு தாங்கள் வந்தது" என்று கேட்டான். "நீ எப்படி எங்கள் விரோதி ஆவாய்? எங்கள் இஷ்டதேவதையாகிய காயத்திரீயை நீயும் உபாஸிக்கிறபடியால் எங்களுக்கு நீ பரம மித்திரனல்லவா" என்ருர் பிரஹஸ்பதி. இதைக் கேட்டதும் அவனுக்குத் தனது இஷ்ட தேவதையான காயத்திரீயின் மேல் சிரத்தை குறைந்தது. உடனே அவனுடைய பலமும் குறைந்தது.

இந்த மாதிரி கர்மபலத்தைக் கொடுக்க ஓர் ஈச்வரன் வேண்டுமென்று ஸித்தமாகிறது,

3. இப்படியே ஸகல ப்ரம்மாண்ட ஆதாரத்வேன ஈச்வரன் உண்டென்று நிச்சயிக்கலாம். காற்றடித்தால் தூளி பறக்கிறது. அந்த சிறு தூளியும் கீழே விழுந்து விடுகிறது. இப்படியே மழைத் துளிகள் கீழே விழுந்துவிடுகின்றன. அப்படி இருக்கும்போது இந்தப் பிரம்மாண்டம்எப்படி விழாமல்

இருக்கிறது? ''वासुदेवस्य वीर्येण'' என்று நமது சாஸ்திரம் சொல்லுகின்றது. ஸமுத்திரம் எப்படி அப்படியே நின்றுகொண்டு இருக்கின்றது? அதற்கு கரை என்ன இருக்கிறது? ஸத்யத்திற்கு ஸமுத்திரம் என்று சொல்லுகிறார்களே! நல்லகாலம், தர்மம் முதலியன இருந்தால் சுகமாய் இருந்துவருகிறோம்; அதர்மம் மேலிட்டால் ஸமுத்திரமே பொங்கி துவம்ஸம் செய்து விடுகின்றது. இதையெல்லாம் இருந்தபடி நிறுத்தி வைத்தவர் யார்? அப்பேர்ப்பட்ட வஸ்து ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அவர்தான் ஈச்வரன்.

4. அதேமாதிரி ஸர்வ நியாமகத்வேன ஈச்வரன் உண்டு என்று நிரூபிக்கலாம். எல்லாவற்றையும் ஏற்படுத்தினவன் ஒருவன் இருக்க வேண்டுமல்லவா? ஈச்வரன் என்றால் நிர்பயனாய் இருக்க வேண்டும். லோக சக்கரவர்த்தி இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் எப்பொழுதும் சாச்வதமாய் இருக்கிறாரா? அவருக்கு சத்ருபயம் இல்லையா? ரோக வியோகாதி துக்கங்கள் இல்லையா? சூர்யன் பிரதிதினம் கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிப்பானேன்? அவன் யாருக்குப் பயந்து யாருடைய உத்தரவின்பேரில் தினம்பிரதி போய்க்கொண்டிருக்கிறான்? ஜடமான பதார்த்தம் தானாகப் போகுமோ? அதி தூரத்தில் இருப்பதால் வர்துளாகாரமாய் இருக்கின்றது. தூரத்திலிருந்து மலையைப் பார்த்தால் நிரம்ப மிருதுவாய் இருப்பதாய்த் தோன்றுகிறது. கிட்டப் போனால் மண்ணும் முள்ளுமாய் இருக்கும். இந்தமாதிரி வர்துளாகாரமான சூர்யன் யாருடைய நியமனத்தின்பேரில் தினம் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான்? சூர்யன் உதிக்காமல் நின்றுவிட்டால் இந்த உலகம் அழியும் என்பது ஸித்தம் அன்றோ? அவன் யாருடைய உத்திரவுப்படி யாருக்குப் பயந்து நடக்கிறான்? ஸகல ஜகத்திற்கும் பிரபுவான பகவானுடைய உத்திரவுப்படி என்று ஒப்புக்கொண்டு தீரவேண்டும். ''भीषोदेति सूर्यः'' என்று வேதத்தில் சொல்லி இருக்கிறது.

भीषास्माद्वातः पवते भीषोदेति सूर्यः ।
भीषास्मादग्निश्चेन्द्रश्च मृत्युर्धावति पञ्चम इति ॥

இந்த ஸர்வேசுவரனுடைய ஸிக்ஷைதான் துக்கம்; அவருடைய பகுமானம்தான் சுகம்; நராளுக்குத்தான் சிக்ஷை; பசுக்களுக்கில்லை. பசுக்கள் பரர் காடுகளில் மேய்ந்தால் ஓர் இடத்தில் அதை அடைத்து வைக்க ஏற்பாடு செய்கிறார்கள். இது பசுவுக்காகவா தண்டனை? அல்லது பசுவின் ஸ்வாமிக்கோ? அந்த கோவின் யஜமானனுக்குத்தானே. ஆகையால் விதி நிஷேதங்கள் எல்லாம் மனிதர்களுக்குத்தான் என்று நிச்சயம் செய்துகொண்டு சாஸ்திர பிரகாரம் நடந்தால் சுகப்பிராப்தி அடைந்து துக்கமில்லாமல் இருக்கலாம்.

4

அருளுரை

உபந்யாஸ நாள் 18.6.1927 *கிழமை : சனி*

முன் மூன்று உபந்யாஸங்களில் ஜந்மாந்தரம் உண்டு, வேதசாஸ்திரம் பிரமாணம், ஈச்வரன் உண்டு என்று மூன்று விஷயங்கள் சொல்லப்பட்டன. மேலே சொன்ன மூன்று விஷயங்களை ஒப்புக்கொண்டால் லோகாந்தரம் உண்டென்றும் ஒப்புக்கொள்ள வேண்டியது. ஏன் என்றால் ஒவ்வொரு காரியத்திற்கும் பலன் இருக்குமல்லவா? நாஸ்திகனை எடுத்துக் கொள்வோம். நாஸ்திகன் கர்மம் செய்கிறான். தேஹமோ ஸ்திரமில்லாமல் இருக்கிறது. செய்த காரியத்திற்கோ பலன் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. தேஹமோ போய்விடப் போகிறது. போனபின் வேறு இருப்போ கிடையாதென்றால் என்ன பண்ணுகிறது?

अवश्यमनुभोक्तव्यं कृतं कर्मशुभाशुभम् ।
ना भुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ॥

என்றபடி செய்த காரியத்திற்கு பலன் வேண்டுமோ அல்லவோ? ஏதோ பிரதிபலனை உத்தேசித்து சில பேர்கள் கர்மம் செய்கிறார்களோ இல்லையோ? இதைத்தான் நம்மவர்கள் ராஜஸ கர்மம் என்று சொல்லுகிறார்கள். சாகுங்காலத்தில் செய்த காரியம் யாருக்கு உபயோகமாகிறது? பிழைத்துக் கொண்டிருக்கும்போது செய்த கர்மத்திற்கு அந்த கர்மத்தினுடைய பிரதிஷ்டை கிடைக்கின்றது; அதுவேதான் பலன் என்று சொல்லிவிடலாம். ஆனால் இறந்துபோன பிறகு கிடைத்த பிரதிஷ்டையைக் கேட்டு

ஸந்தோஷம் யார் அடைகிறது? கேட்டு ஸந்தோஷம் எப்பொழுது இல்லையோ அந்த கர்மத்திற்குப் பலன் இல்லையென்று சொல்வதா? இப்படியே ஒவ்வொரு கர்மத்திற்கும் ஏற்படும் ஸ்துதிக்கும் நிந்தைக்கும், உயிரோடிருக்கும்போதே ஸ்துதியோ, நிந்தையோ காதில் பட்டால்தானே ஸந்தோஷமோ, துக்கமோ உண்டாகிறது. பரோக்ஷ நிந்தையோ ஸ்துதியோ யாதொரு பலனும் கொடுக்கிறதில்லை அல்லவா? நாம் முன்சொன்ன மரண காலத்தில் செய்த கர்மாவுக்கு என்ன பலன் நாஸ்திகன் சொல்லக்கூடும்?

லோகாந்தரத்தை ஒப்புக்கொண்டால் அந்த கர்மத்திற்குப் பலன் கிடைக்கிறதென்று சொல்லலாம். இப்படியே துஷ்கிருத்தியங்களுக்கெல்லாம் பலன் சொல்லவேண்டியது. திருட்டை (சௌர்யம்) எடுத்துக் கொள்வோம். நம்முடைய சாஸ்திரப் பிரகாரம் அது தப்பு. ராஜகீய சாஸ்திர ஸம்பந்தமாயும் அது தப்பு. ஒரு திருடன் ஒரு தேசத்தை விட்டு மற்றொரு தேசத்திற்குப் போய்விட்டால், அவன் செய்த கர்மாவுக்குப் பலன் இல்லாமல் போய்விடுமா? ஒருவேளை க்ருஹம் விட்டுப் போதலும், பந்துவியோகமுமே பலன் என்றால் ஸகுடும்பமாய்த் தப்பிப்போனால் என்ன செய்கிறது? ராஜதண்டனைக்கு உட்பட்டுவிட்டால் ஏதோ சுத்தமாய்விடுகிறது என்று சொல்லலாம். எல்லாக் குடும்பத்தோடும் ஓடிவிட்டால் என்ன செய்கிறது? ராஜசிக்ஷை கிடைக்காவிட்டால் லோகாந்தரத்தில் கிடைக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லித்தானே தீரவேண்டியிருக்கின்றது. இது எப்படித் தெரிகிறது? நமக்கோ நேரில் தெரிகிறதில்லை. சாஸ்திரங்கள்தான் சொல்லித் தருகின்றன. சாஸ்திரத்தில் தோஷமென்று சொன்ன எல்லா துஷ்கர்மங்களுக்கும் ராஜநிர்ப்பந்தம் இல்லை. ஸந்த்யாவந்தனம் செய்யாவிட்டால் ராஜநிர்ப்பந்தம் என்ன இருக்கிறது? சாஸ்திர நிஷித்தமான கர்மாக்கள் எல்லாம் ராஜ நிஷித்தமல்ல.

மேல் சொன்னதிலிருந்து திருட்டு செய்து தப்பினவனுக்கு லோகாந்தரத்தில் பலன் உண்டு என்று ஸித்திக்கிறதல்லவா? ஆனால் ஸகல கர்மத்திற்கும் லோகாந்தரத்தில் தான் பலன் என்று சொல்ல வேண்டியதில்லை. விசேஷமான ஸத்கர்மங்களையோ, துஷ்கர்மங்களையோ செய்தால் இந்த ஜன்மத்திலேயே இந்த லோகத்திலேயே பலன் கிடைக்கிறதென்று சொல்லி இருக்கிறது.

त्रिभिर्वर्षैस्त्रिभिर्मासैस्त्रिभिःपक्षैस्त्रिभिर्दिनैः ।
अत्युत्कटैः पुण्यपापैः इहैव फलमश्नुते ॥

ஆகையால் நமக்கு இந்த லோகத்தில் சுகம் வேண்டுமானல் ஈச்வர ஸஹாயத்தால்தான் வரும். கேவலம் மனுஷ்யபிரயத்தனத்தால் மட்டும் கிடைப்பதில்லை. ஆனல் வாஸிஷ்டத்தில் புருஷப்பிரயத்தனத்தால் கிடையாதது இல்லையென்று சொல்லி இருக்கிறது. அதற்கு அர்த்தம் என்னவென்ருல் நாம் அனுபவிக்கும் துக்கங்களுக்கு நாமே காரணமானதாலும் நமது துஷ்கர்மாக்களினுல்தான் நாம் துக்கம் அனுபவிப்பதினுலும், துஷ்கர்மாக்களை நிறுத்தியும், ஸத்கர்மாக்களை அபிவிருத்தியும் செய்வதுடன் துஷ்கர்மங்களுக்கு பிரதிக்கிரியைகளையும் செய்தால் நமக்கு வரும் அரிஷ்டங்களை நீக்கி சுகம் அடையலாமென்பதுதான்.

ஈச்வரேச்சையென்பதும், தெய்வம் என்பதும் கர்ம பலம் என்பதும் ஏறக்குறைய ஒரே அர்த்தம்தான். பலிஷ்ட கர்மம் செய்தால் துக்கநிவர்த்தி செய்துக் கொள்ளலாம். தேஹத்தில் அஜீர்ணம் ஏற்பட்டால் அதற்குத் தகுந்த பிரதிக்கிரியை செய்து நீக்கிக் கொள்ளுகிருேமல்லவா? மருந்து கொடுத்து தேஹத்தை ஸ்வஸ்தப்படுத்திக்கொள்வதுபோல் பிராயச்சித்தாதிகர்மங்களும், விருதம் முதலிய ஸத்கர்மங்களும் செய்தால் துக்கநிவர்த்தியுண்டாகி சுகப்பிராப்தியும் ஏற்படும்.

ஈச்வரனுக்கு, ஒருவனுக்கு துக்கம் வரட்டும், மற்றவன் சுகமாய் இருக்கட்டும் என்று இச்சை உண்டாகுமா? தானகத் தனக்குத் தோன்றியவாறு கொடுக்கிருன் என்று சொன்னல் வைஷம்யம், நைர்க்ருண்யம் என்ற இரண்டு தோஷம் அவனுக்கு ஸம்பவிக்குமல்லவா? ஆகையால் தெய்வம் என்ருல் நாம் செய்த கர்மபலன் என்றுதான் அர்த்தம். நமது சுகப்பிராப்தி கர்மானுஸாரம் தான் என்று சொல்ல வேண்டும்.

सर्वमेवेहि सदा संसारे रघुनन्दन ।
संयत्नप्रयुक्तात्सर्वेण पौरुषात्समवाप्यते ॥

ஆகையால் பலிஷ்டமாய் ஸத்கர்மங்களும் பிரதிக்கிரியைகளும் செய்தால், நமது துக்கநிவர்த்தியைச் செய்து கொள்ளலாம். பிரயத்தினம் செய்தால் கிடைக்கும். ஆனல் எந்தவிதமான

பிரயத்தினம் என்ருல், சாஸ்திரஸம்மதமான பிரயத்தினம். சாஸ்திரங்கள் இரண்டுவிதம். உச்சாஸ்திரம், சச்சாஸ்திரம் என்று. 'उच्छास्त्रं अनर्थाय' இப்பொழுது என்னமோ திரவியம் நமது தேசத்தை விட்டுப் போய்விடுகிறது, ஆகையால் ஸ்வராஜ்யம் வேண்டுமென்று ஜனங்கள் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள்.

அவர்கள் சுகத்தின் ஸ்வரூபம் தெரிந்தவர்களாஞல் இந்தமாதிரி சொல்லவே மாட்டார்கள். இந்த விஷயத்தில் ஸம்பந்தா ஸம்பந்த பரிசீலனே செய்து பார்க்க வேண்டும். நம்முடைய பணத்தால் நாம் சுகம் ஸம்பாதிக்கலாம் என்பதுதானே கொள்கை. சுகம் வேண்டும். அது பணத்தால் வரும் என்ருல், பணம் இருக்கிறவர்களிடமெல்லாம் சுகம் இருக்கவேண்டும். அது அவர்களிடமிருக்கிறதா? ஒரு ஸமயம் ஏழைகளிடந்தான் அதிக சுகமிருக்கிறதாகச் சொல்ல வேண்டும்.

ஸகல தனத்திற்குமேல் ராஜ்யதனம் வேண்டும். இந்த தனத்தால் சுகமுண்டாகுமா? இந்த தனத்தை இப்பொழுது பெற்றிருக்கும் ராஜாவிடத்தில் சுகமிருக்கின்றதா? தவிர இந்த ஸ்வராஜ்யம் ஒருத்தனுக்கா பலபேருக்கா? ஒருத்தனுக்கென்ருல் முன்ஞல் ஒருவன் கையில் இருந்தது, பிறகு மற்ருெருவன் கையில் வந்தது. அத்தனேதானே வித்யாஸம். வேறு என்ன கிடைத்துவிட்டது. எல்லாருக்கும் என்ருல் எல்லோரும் ஒரேமாதிரியாய் இருக்க முடியுமா? எங்கேயாவது இருக்கிருர்களா?

வித்தியாஸமிருப்பதால்தான் துக்கமுண்டாகிறது. ஆகையால் ஜாதிவித்யாஸமே வேண்டியதில்லே. ஜாதிவித்யாஸத்திஞல் ஐகமத்யம் உண்டாகிறதில்லே என்கிருர்கள். பாச்சாத்திய தேசங்களில் ஜாதி வித்யாஸமில்லே. அங்கே ஐகமத்யம் இருக்கிறதா? நமது தேசத்தில் வெவ்வேறு ஜாதிக்குச் சேர்ந்த இருவரிடத்தில் வெகுச்ரேஷ்டமான ஸ்நேகபாவத்தை நாம் பார்க்கிறதில்லேயா? மேலும் ஒரே தகப்பன் பிள்ளேகள் சண்டை போட்டுக் கொள்ளுகிறதில்லேயா? இங்கே என்ன ஜாதிவித்யாஸம் இருக்கிறது? இந்த வெறும் யுக்திகளால் பிரயோஜனம் இல்லே. யுக்திக்குமேல் யுக்தி சொல்ல முடியுமல்லவா? ஸாமான்ய யுக்திக்குமேல் ஒரு புத்திசாலி யுக்தி செய்து பதில் சொல்லி விடலாம். அதற்குமேல் அவனிலும் அதிக மேதை உள்ளவன் யுக்தி கட்டி பதில் சொல்லலாம். இப்படியே போய்க்கொண்டு

இருக்குமல்லவா? இவைகளினுலெல்லாம் நமக்கு சுகம் வந்துவிடாது. தர்மம்தான் சுகத்திற்குக் காரணம், அதர்மம்தான் துக்கத்திற்குக் காரணம், என்று தெரிந்துகொண்டு சாஸ்திர பிரமாணத்தை நம்பி நடக்க வேண்டியது.

பகவானே கீதையில் எப்பொழுது எப்பொழுது அதர்மம் மேலிட்டு, தர்மம் கீழடைந்து போகிறதோ அப்பொழுதெல்லாம் நான் பிறக்கிறேன் என்று சொல்லி இருக்கிருன்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

ஆகையால் அவரவர்கள் தங்கள் தங்கள் தர்மப்பிரகாரம் நடந்தால் அவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகும், லோகத்திற்கும் க்ஷேமம் உண்டாகும். ராஜகீய விஷயங்களிலும் அப்படியேதான் நியமம். இல்லாவிட்டால் அவ்வியவஸ்தை ஏற்பட்டு விடுமல்லவா? ''धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा'' என்று சொல்லப் பட்டிருக்கின்றது. யார் யார் எப்படி இருக்க வேண்டுமோ அவரவர் அப்படியிருந்தால்தான் சுகம் உண்டாகும். चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः என்று பகவான் சொல்லியபடி நான்கு ஜாதிகள்தான் ஸ்ரீபகவாஞல் சிருஷ்டிக்கப்பட்டவை. மற்றவையெல்லாம் ஸங்கரஜாதிகள். இப்படி பகவந் நியமிதமான தர்மப்படி இருந்தால்தான் க்ஷேமம். எல்லாரும் ஒன்ருய்விட்டால் அப்புறம் பார்த்துக் கொள்வோம் என்று சொல்வதில் பிரயோஜனமில்லே.

நமது ராஜாவுக்கு, நமது சொத்து, பிராணன் இவைகளின் மேல் அதிகாரம் இருக்கின்றது. அப்பேற்பட்ட ராஜாவுக்கு துக்கமே இல்லேயா? எப்பொழுதும் சுகமாகவேதான் இருக்கிருஞ?

இது எல்லாம் ஸ்வராஜ்யத்திற்கு ஹேது அல்ல. வேறு மார்க்கம் ஸர்வத்ராளுக்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. स्वयमेव राट्-स्वराट् तद्भावः स्वाराज्यम् அதாவது தானே நாதனுய் இருத்தல், பராதீனத்துவத்தின் அபாவம் அல்லவா ஸ்வராஜ்யம்? இந்த பராதீனத்துவம் எப்படி நம்மை விட்டுப் போகும்? நாம் ஸதா பணம், பணம் என்று பிரயத்தினப்பட்டுக் கொண்டு அதற்கே அடிமையாக இருந்தால் ஸ்வராஜ்யம் வருமோ? ஈச்வராதீனத்துவம் நமக்கு பாதகமில்லே. இந்திரியங்கள், மனசு, இவைகளின் ஆதீனத்தில் இருக்கிருேமே!

நமக்கா ஸ்வராஜ்யம் ஸித்திக்கும்? நாம் இவைகளின் ஆதீனத்திலிருந்து விலகினுல்தானே அது கிடைக்கும்.

पादांगुष्ठाच्छिरोयावत् कणशः प्रविचारितम् ।
न लब्धोसावहं नाम को सावहमितिस्थितः ॥

நாம் நம்முடைய வாஸ்தவ நிலேமையைத் தெரிந்துகொண்டால் அப்பொழுதுதான் ஸ்வராஜ்யம் நமக்கு ஸித்திக்கும் என்று சொல்லலாம்.

நான்குபேர் சேர்ந்து தூக்குகிற சரீரம் எப்படி பத்து மைல் வரைக்கும் போகிறது? தானே போகிறது என்ருல் எப்பொழுதும் போய்க் கொண்டிருக்கிறதுதானே. ஸதா ஒருவனுக்கு ரோகம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஜ்வரம், தலேவலி இத்யாதிகள் அனுவர்த்திகளாய் இருந்து கொண்டிருக்கின்றன. தூங்கும்போது இந்த ஜ்வரதாபத்தையும் தலேவலி வேதனேயையும் ஏன் மனுஷ்யன் அனுபவிக்கிறதில்லே. இந்த வேதனேயெல்லாம் தேஹஸம்பந்தமானது. ஸ்வரூபமான ஆத்மாவின் ஸ்வபாவம் அல்ல. ஸ்வபாவம் என்பது ஸ்வயகுணம். சர்க்கரையின் ஸ்வபாவம் தித்திப்பு, நாய்வாலின் ஸ்வபாவம் கோணல். அதை ஒரு குச்சி போட்டு கட்டினுல் நேர் ஆனதுபோல் காணும். குச்சி எடுத்தால் திரும்பக் கோணலாய்ப் போய்விடும். அதேமாதிரி ஸ்படிகத்தின் நிறம் ஸ்வச்சம். சிகப்புத் திரையோ, வஸ்துவோ அதன் ஸமீபத்தில் வந்தால் சிகப்பாய்த் தோன்றுமல்லவா? இதற்குத்தான் அத்யாஸம் என்கிறது.

துக்கம் என்பது நமது தர்மம் அல்ல. சரீர அபிமானம் போய்விடுமாஞல் அதுவும் போய்விடும். இந்த சரீர அபிமானம் ஜாக்கிரத் ஸ்வப்னம் இந்த இரண்டு அவஸ்தையிலும் இருக்கின்றது. ஸுஷுப்தியிலும் ஞானஸமாதியிலும் இல்லே. இந்த அவஸ்தைகளில் துக்கம் என்பதே இல்லே. ஏன்? சரீர ஸம்பந்தமே கிடையாதாதலால். மனதின் ஸம்பந்தம் நசித்துவிட்டதால் துக்கம் போய்விடுகின்றது. ஒரு ஸமயம் சுகம்தான் ஸ்வரூபமோ என்ருல் அது அல்ல. அது வேறே. மித்ரபந்து ஸம்பாஷணுதிகள், க்ஷீரபாஞதிகள், முதலியவைகளில் சுகம், பாம்புகடி முதலியவைகளில் துக்கம், ஏன்? 'विषयाणां आनुकूल्ये सुखम्' என்று

விவேகசூடாமணியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் மனஸ்ஸம்பந்தத்தால்தான் சுகதுக்கபாவம் ஏற்படுகிறது.

தவிர ஒரே பதார்த்தத்தால் சுகம் வருகின்றது என்று சொல்ல முடிகிறதில்லை. தித்திப்பான பதார்த்தங்கள் ஸாமான்யமாய் எல்லோருக்கும் பிடிக்கின்றது என்று சொல்லலாம். ஆனால் சிலருக்கு அதன்மேல் வெறுப்புண்டாவதைப் பார்த்திருக்கிறோம். அவர்களுக்கு காரம் பிரியம். இவைகள் இரண்டிலும் ஏதோ ருசி இருக்கின்றது என்று சொல்லலாம். கசப்பில் என்ன ருசி இருக்கின்றது? பாகற்காயை ஸாப்பிடுகிறவர்கள் இல்லையா? நமக்கு ஆசை எந்த வஸ்துவிலிருக்கிறதோ அந்த வஸ்து கிடைத்தால்தான் சுகம். ஒரே வஸ்து ஒரு சமயத்தில் சுகத்தையும், மற்றொரு ஸமயத்தில் துக்கத்தையும் கொடுக்கின்றதே! ஒருவனுக்கு மாம்பழத்தில் பிரியம் என்று வைத்துக் கொள்வோம். நிறையத் தின்ற பின்பு மறுபடியும் மாம்பழத்தில் பிரியம் உண்டாகுமோ? சுகம் போதும் என்று சொல்வோரும் உண்டோ?

ஆகையால் சுகம் வஸ்துக்களிடத்தில் இல்லை என்று தெரிகின்றது. சுகம் என்பது ஒரே வஸ்துதான். அதில் வித்யாஸமில்லை. ஆனால் வெவ்வேறு மனுஷ்யர்களுக்கு வெவ்வேறு வஸ்துக்களிடத்தில் வெவ்வேறு காலங்களில் உண்டாகின்றது. ஆனாலும் சுகம் என்பது ஒரேமாதிரிதான். ஏழைக்கும் யுவஸார்வபௌமனுக்கும் உண்டாகும் நித்ரா சுகத்தில் வித்யாஸமேதாவது உண்டா? கிடையாதல்லவா. அதேமாதிரிதான் ஆரோக்கியமும்.

பர்த்ருஹரி சொல்லுகிறார் :

तृषा शुष्यत्यास्ये पिबति सलिलं शीतमधुरम्
क्षुधार्तश्शाल्यन्नं कबलयति सूपादि सहितम् ।
प्रदीप्ते कामाग्नौ सुदृढतरमालिङ्गति वधूम्
प्रतीकारं व्याधेस्सुखमिति विपर्यस्यति जनः ॥

தாகம் வந்தபோது சீதமாய், மதுரமாய் இருக்கும் தீர்த்தம் ஸாப்பிட்டால் சுகம் என்று சொல்லுகிறார்கள். இது ஸரியல்ல. வியாதி வந்தது, மருந்து ஸாப்பிட்டு அது தீர்ந்து போயிற்றே தவிர சுகம் வரவில்லை. தண்ணீர் ஸாப்பிட்டதனால் சுகம் வந்தால்,

தாகசமனம் ஆனபின்பும் ஸாப்பிடுகிறதுதானே. சுகம் எப்பொழுதும் வேண்டியதுதானே. தாகம் இருக்கும்போதுதான் சுகம் வேணடும், மற்ற காலத்தில் வேண்டாம் என்று உண்டோ? அதேமாதிரி மருந்து. வைத்தியன் எப்படிச் சொல்லி இருக்கிருனே எந்தெந்த காலத்தில் ஸாப்பிடச் சொல்லி இருக்கிருனே அந்தந்த காலத்தில் அந்தந்த விதத்தில் ஸாப்பிட்டால் ரோக நிவர்த்தியாகி சுகமுண்டாகின்றது என்று சொல்லிக் கொள்ளுகிருேம். அவன் சொல்லாத ஸமயத்தில் ஸாப்பிட்டாலாவது, அல்லது அனேக தடவைகளுக்காக ஏற்படுத்திய மருந்துகளை ஒரே தடவையிலாவது ஸாப்பிட்டால் சுகம் உண்டாகுமோ? அனர்த்தமல்லவோ உண்டாகிவிடும். சுகம் என்பது அந்த மருந்தால் உண்டாயிருந்தால் ஜாஸ்தியாய்ச் சாப்பிட்டதால் கேடு வருவானேன்? அதேமாதிரி வயிறு பசித்தால் பருப்போடு அன்னம் ஸாப்பிட்டால் தீருகின்றது. இதனுலெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்ருல் தேஹத்தில் ஜ்வரம்மாதிரி ஒரு வியாதி வந்திருந்தது, அந்த வியாதி நிவாரணமாயிற்றே தவிர, சுகம் வந்துவிடவில்லை. இதேமாதிரிதான் லௌகிகமாய் சொத்து வந்துவிட்டால் சுகம் வந்துவிட்டது என்று நினைத்துக் கொள்ளுகிருேம். நல்ல காட நித்திரை செய்துவிட்டு, பரம தரித்திரன் ஒருவன் ''அப்பா! சுகமாய்த் தூங்கினேன்'' என்று சொல்லுகிருன். இவனிடத்தில் என்ன பணம் இருந்தது? எந்தப் பணத்தைச் செலவு செய்து இந்த சுகத்தை வாங்கினுன்? ஸுஷுப்தியில் இவன் அனுபவித்த சுகத்தில் எத்தனை பணம் இருக்கின்றது? ஒன்றுமில்லையே! வெகுவாய் நாம் சொல்வதெல்லாம் இந்த ஐந்து விஷய சுகம்தான்.

இந்த ஐந்து சுகமும் ஐந்து இந்திரியங்கள் மூலமாய்த்தானே வருகின்றது. இது என்ன ஒவ்வொன்ருய்க் கொடுக்கின்றதா? அல்லாமல் ஐந்தும் சேர்ந்து கொடுக்கின்றதா? சேர்ந்து கொடுக்கின்றது என்று சொல்ல இடமில்லை. ஏனென்ருல், ஒன்றினுலேயே நமக்குக் கிடைக்கின்றது. சப்தஞானம் இருந்து காதில் பட்டால் உடனே சுகம் உண்டாகின்றது. ஆகையால் இந்த விஷயசுகங்கள் ஜாக்கிரம், ஸ்வப்னம் இந்த இரண்டில்தானே கிடைக்கும். ஸுஷுப்தியில் இதெல்லாம் இல்லை. இதில்தான் இந்த ஐந்து விஷய ஸம்பந்தமில்லாத சுகம். ஜாக்கிரம், ஸ்வப்னம் இந்த இரண்டு அவஸ்தைகளில் சுகம் வந்தாலும் ஒரே மாதிரி எப்பொழுதும் சுகம் கிடைக்கிறதில்லை. ஒருவனுக்கு ஒரு

குழந்தையின் மேல் பிரியம் என்று வைத்துக் கொள்வோம். தனக்கு வேண்டியபோது லாலனே செய்து சுகம் அடைகிருன், வேறு காரியங்களில் பிரவர்த்தியாய் இருக்கும்போது அதே குழந்தை வந்தாலும், அவனுக்குத் துக்கம் உண்டாகின்றது. இது எப்படி வந்தது? இதெல்லாம் மனதின் ஸம்பந்தத்திஞல் வந்தது.

ஆகையால் ஜாக்கிரம், ஸ்வப்னம் இரண்டிலும் தேஹ ஸம்பந்தம் இருந்தது, ஸுஷுப்தியில் மனது நாசமடைந்திருந்ததால் சுகம் கிடைத்தது. அதைத்தான் ஸ்வரூபசுகம் என்று சொல்லுகிருர்கள். அதுதான் நமது தர்மம். இதைத்தான் பரமானந்தம் என்பது. இந்த ஆனந்தம் இரண்டுவிதமானது, ஸாமயாநந்தம், நிராமயாநந்தம் என்று. முதலாவது துக்கஸம்பந்தமானது. மற்ருென்று துக்கமிச்ரமல்லாதது. நிர்லிப்தமான ஆனந்தம். இதை ஆகாச ஆனந்தம் என்பார்கள். दुःखसंबन्धलेशम् இல்லாதது இது. ஒருவிதமான ஆனந்தமுமே இல்லாது போஞல் யார்தான் பிழைத்திருக்க முடியும்? ஒருவன் சிவராத்திரி, ஜன்மாஷ்டமி இத்யாதி தினங்களில் ராத்திரி ஜாகரணம் செய்கிருன். செய்யும்போது ஜாட்யத்தையும் பார்க்காமல் விழித்திருக்கிருனே. எப்படி? தூக்கம் வந்தும் விழித்திருப்பதில் ஒரு சுகம் இருப்பதிஞல்தானே விழித்திருக்கிருன். இத்தனைக்கும் நிராமயமான சுகம் அனுபவிக்கவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம்? ஏதோ சாஸ்திரம் ஜாகரணம் செய்ய வேண்டும், என்று சொல்லியிருப்பதை அவன் மனது நம்பினதால்தானே. மற்ருெருவனை எடுத்துக் கொள்வோம். மிருதுவான படுக்கை, சுகந்தம், சங்கீதம், மற்றும் லௌகிகமான சுகஸாதனங்கள் அநேகம் இருந்தும் அவனுக்கேன் தூக்கம் வரவில்லை. தூக்கம் வந்துவிட்டால் அது மிருதுவான இடத்தில்தான் வருகிறதா? வந்தபிறகுதான் அது மிருதுவான சையாவிலேயே இருக்கின்றது உண்டா? இந்த இடங்களில் மனமே இல்லை. சரீர ஸம்பந்தமே இல்லை. அதஞல்தான் சுகம் கிடைத்தது. இந்த சுகம்தான் ஸ்வரூபசுகம். இது ஸர்வத்ராளின் அனுபவம் அல்லவா? ஆகையால் இந்த இந்திரியங்கள் சுகஸாதனங்கள் அல்ல என்பது நிச்சயம். அது மாத்திரம் அல்ல. துக்கஹேதுக்களே என்று நிரூபிக்கலாம். ஸ்ரீமத் ஆசார்யாள் சொல்லுகிருர்கள் :-

शब्दादिभिः पंचभिरेव पंच पंचत्वमापुः स्वगुणेन बद्धाः ।
कुरंग मातंग पतंग मीन भृंगा नरः पंचभि रंचितः किम् ॥

சப்தத்தால் மானும், ஸ்பர்சத்தால் யானையும், ரூபத்தால் விட்டில்பூச்சியும், ரசத்தால் மீனும், கந்தத்தால் வண்டும் தங்கள் தங்கள் சுகத்தை இழந்து, உயிரே போகும்படி செய்துக்கொள்ளும்போது, இவ்வைந்தும் சேர்ந்து ஒரு மனுஷ்யனை வருத்தும்போது அவன் கதிதான் என்ன?

மானைப் பிடிக்கிறவர்கள் நன்ருய் கானம் பண்ணி அதில் லயித்து இருக்கும்போது, வேறு வழியில் வந்து பிடிக்கிறது வழக்கம். அதேமாதிரி ஆண் யானையைப் பிடிக்க பெண் யானையைக் கொண்டு போகிருர்கள் அல்லவா? தீபம் ஒரு பழம் என்று நினைத்துத்தானே விட்டில் போய் விழுந்து மாய்கிறது? ருசியான உணவு என்று நினைத்துத்தானே மீன் தூண்டிலில் மாட்டிக் கொண்டு இறக்கின்றது. ரக்த சண்பக மலரில் இருக்கும் தேனை ஸாப்பிடச் சென்று வாஸனையின் தாபத்தால் வண்டுகள் இறக்கின்றனவே. இந்த ஒவ்வொரு விஷயசுகமே தனித்தனியாய் ஒவ்வொரு பிராணிகளுக்கு இவ்வளவு அநர்த்தம் செய்ய யோக்கியதை இருக்கும்போது இவ்வைந்தும் விரும்பும் மனிதனின் நாசத்திற்குக் கேட்பானேன். என்ன ஸந்தேஹமிருக்க முடியும்? ஆகையால் இந்திரிய விஷயங்களால் சுகம் இல்லை என்பது நிதர்சனமாகின்றது.

விசேஷித்து பந்தனம் செய்வதால் விஷயம் என்று பேர் வந்திருக்கின்றது. சிந்தனையிலாழ்ந்திருக்கும்போது வீணுகானத்தை உபயோகித்து சுகப்படுகிறோம். ஏன்? சிந்தையிலேயே சென்று கொண்டிருந்த மனதைத் திருப்பி மனதை மறந்திருக்கச் செய்தால் தானே சுகம் கிடைக்கின்றது. கோடைக்காலத்தில் விசிறி கொண்டு விசிறிஞல் சுகமாய்த்தான் இருக்கின்றது. இந்த சுகம் விசிறியால் வீசிஞல் உண்டாக வேண்டுமல்லவா? ஏன் வருகிறதில்லை? வெய்யில் காலத்தில் தாபசாந்திக்காக நீலகிரிக்குப் போகிறோம். ஏன் பனிகாலத்தில் அங்கு போகிறதுதானே. ஆகையால் இவையெல்லாம் சுகஸாதனங்கள் அல்ல. நாம் ஒன்றும் புதிதாய்க் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. நமது பெரியவர்கள் இதையெல்லாம் சிரமப்பட்டு பரிசீலனை செய்து தர்மானுஷ்டானமே சுகஸாதனம் என்று ஏற்படுத்தி இருக்கிருர்கள். அவர்களுக்கு இருந்த தார்ட்டியம் நமக்கில்லை. சும்மா வெறுமனே தின்று கொண்டிருந்தால் திருடம் வந்து விடுமா? அவர்கள் இரண்டு

வேளைக்கு மேல் ஸாப்பிடவில்லை. அவர்கள் பலமான சரீரிகளாய் இருந்தார்கள். இப்பொழுது தர்மானுஷ்டானமும் இல்லை, கர்மானுஷ்டானமும் இல்லை.

நமது நன்மைக்காக சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. ''परमार्थाय शास्त्रम्'' அல்லவோ. லௌகிகமாய் ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக் கொள்வோம். காய்ச்சல் ஒருவனுக்கு வந்திருக்கின்றது என்றால் பச்சைத்தண்ணீர் சாப்பிடலாமோ? சீதம் பிறந்து சரீரம் போய்விடாதோ. ஆயுர்வேதத்தில், ''उष्णमुष्णेन शाम्यति'' என்று சொன்ன பிரகாரம் தகுந்த குடிகாபஸ்மாதிகளைச் சொன்னவாறு உபயோகித்து பத்தியப்படி இருந்தால் சுகமாகிறது. ஆகையால் எந்தவிதத்திலும் சாஸ்திரானுஸாரமாய் நடந்தால் சுகம் உண்டாகின்றது என்பது நிச்சயம். இந்த நிபந்தனைகள் ஒன்றும் இல்லையே பாச்சாத்யர்களுக்கு; அவர்கள் சுகிக்கவில்லையா? அவர்கள் எத்தனை தனம் ஸம்பாதிக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். வீண் கேள்வி. இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று சொல்லுகிறவனுக்கா சுகம்? அவன் பரம தரித்திரன் அல்லவோ. அவனுக்கேது ஸ்வராஜ்யம்? அவனுக்கு சுகஸ்வரூபமே தெரியாதே. அவர்களிடத்தில் அது இல்லவே இல்லை.

சுகம் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். ஸ்வரூப சுகம்தான் சுகம். அது என்னமோ சில ஸமயத்தில் உண்டாகின்றது. ஏன் எப்பொழுதும் நிரந்தரமாய் இருக்கிறதில்லை? ஸுஷுப்தியில் மாத்திரம் ஏன் உண்டாகின்றது என்றால், சுகத்தை ஓர் ஆவரகம் (மூடி) மூடிக் கொண்டிருக்கிறது. அந்த மூடியை நீக்கினால் உடனே அதின் ஸ்வரூபம் தெரிகின்றது. மறுபடி மூடினால் மறைந்து போகின்றது. அதாவது ஞானம் இல்லாமல் இருப்பது. சூரியன் எவ்வளவு பிரகாசமுள்ளவனாய் இருந்தாலும், மேகம் மூடிவிட்டால் எப்படித் தெரிகின்றதில்லையோ அந்த மாதிரி ஸ்வரூபம் மூடப்பட்டிருப்பதால் தெரிகின்றதில்லை. அப்படி மேக ஸ்தானத்தில் நமக்கு பிராந்தி, அல்லது அஞ்ஞானம் இருக்கின்றது. இந்தப் பிராந்தியின் நிவர்த்தி வந்தால், அதாவது ஞானம் பிராப்தியானால் சுக ஸ்வரூபம் கண்டு கொள்வோம். மேலே சொன்ன ஆவரகத்திற்கு இரண்டு சக்திகள் உண்டு. ஆவரண சக்தி, விக்ஷேப சக்தி என்று. மேகம் மூடிக்கொண்டு சூரியனைத் தெரியாமல் செய்வது ஆவரண

சக்தி. அத்துடன் மழை காற்று மின்னல் முதலியவைகளைக் கொடுத்து அதனால் பாதசாரியை துக்கப்படுத்துவது விக்ஷேப சக்தி.

कवलितदिननाथे दुर्दिने सान्द्रमेघैः
व्यथयति हिमझंझावायुरुग्रो यथैतान् ।
अविरततमसात्मन्यावृते मूढबुद्धिं
क्षपयति बहुदुःखैस्तीव्रविक्षेपशक्तिः ॥

ஆகையால் ஸ்வரூப சுகம்தான் சுகம். எப்படி என்றால், பிரபஞ்சத் தோற்றமே இல்லாத சதாசிவ பிரம்மேந்திராளுக்கு எப்படி சுகம் இருந்துகொண்டே இருந்தது? அவரிடத்தில் மேலே சொன்ன இந்திரிய சுக ஸாதனங்கள் ஒன்றுமே கிடையாதே. அப்படி இருந்தும் சுகமயமாகவே இருந்ததாகவே சொல்லி இருக்கிறதே. இந்த சுகத்தை அடைய மூன்று வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்று யோகங்கள். योगश्चित्तवृत्तिनिरोधः யோகம் என்றால், மனதின் போக்கைத் தடுப்பதுதான். மதுரமான கானம் பண்ணிக் கொண்டிருந்தாலும், மனம் வேறே விருத்தியில் இல்லாமலிருந்தால்தான் கானசுகம் கிடைக்கின்றது. ஆனால் விஷயத்தில் எல்லாம் அல்ப சுகம்தான் கிடைக்கின்றது. ஆனதினால் அதற்கு க்ஷணிகம் என்று பெயர். க்ஷணிகம் அல்லாதது நிர்விகல்பசுகம்.

''வேணும்'' என்கின்ற ஆசையில்லாமல் போனால் சித்தவிருத்தி நிரோதம் உண்டாகின்றது. வேணும் என்ற ஆசை போச்சு; இன்னொரு ஆசை உண்டாகிறதில்லை. விகல்பம் எப்பொழுது இல்லையோ அப்பொழுதுதான் சுகம். நிதி இருந்தால் பிச்சைக்குப் போவானேன்?நாமே அந்த சுக ஸ்வரூபம் என்று தெரிந்துகொண்டால் துக்கம் போய்விடும். विषयानि निरोधः... மனோவாஸனை போக வேண்டுமானால் ஆத்ம ஸ்வரூபம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தெரிந்துகொண்டால் துக்கம் போய்விடும். அப்படி இருந்தும் யாரும் இச்சிக்காத துக்கம் பலாத்காரமாய் ஏன் தோன்றி வருகின்றது?

अथ केन प्रयुक्तोयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥

இதற்குக் காரணம், காமம், குரோதம் முதலியன.

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विध्येनमिह वैरिणम् ॥

ஆகையால் இந்த காமக் குரோதாதிகளை நமது விரோதிகள் என்று தெரிந்துகொள்ள வேண்டியது. எச்சில் இலையை வெளியில் எறிந்தால் எத்தனை நாய் சண்டை போட்டுக் கொள்ளுகின்றன? என்ன காரணம்? காமமே, அதாவது வேண்டுமென்ற இச்சையே காரணமல்லவா?

योन्यथा सन्तमात्मानं अन्यथा प्रतिपद्यते ।
किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा ॥

என்றபடி ஞானியைத் தவிர மற்றவர் எல்லாரும் திருடர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருட்டுத்தனம் என்ருல் என்ன? अनिष्टदेशसंयोगानुकूलव्यापारम् தானே. நாம் செய்கிறது திருட்டுத்தனம்தானே. திருட்டுத்தனம் இருந்தால மற்ற எல்லா பாபங்களும் வந்துவிடுமல்லவா? இவை எல்லாம் நமது தேஹாபிமானத்தால் வருகின்றன. இது போனுல் சுகப்பிராப்திக்கும் துக்கநாசத்திற்கும் காரணம் ஏற்படும்.

சுகப் பிராப்தி, துக்க நிவர்த்தி இவைகளின் உபாயத்தை எப்படி அடைகின்றது? ஸதா நித்திரை செய்து கொண்டிருக்கிறதா என்ன? கும்பகர்ணன் மாதிரி இருப்பதா? அது ஒரு சாபமாக அல்லவோ சொல்லப்படுகிறது? அது தமோகுணம்தானே! நமக்கு ஸத்வ குணம் அல்லவோ வேண்டும்? இதையெல்லாம் எங்கே சொல்லி இருக்கிறது? சாஸ்திரங்கள்தான் சொல்லுகின்றன. சுகஸ்வரூபம் தெரிந்து கொள்ளாவிட்டால் சுக ஸம்பாதனம் எப்படி?

மனஸ்ஸின் ஸம்பந்தம் விட்டால் சுகம் என்று சொன்னேம். அப்படி விருத்தி நிரோதம்தான் ஸாதனம் என்று சொன்னேம். விருத்தி என்பது இரண்டுவிதம். துர்விருத்தி, சத்விருத்தி. துர்விருத்தி நிரோதம் முதலில் செய்துக் கொண்டு, சத்விருத்திகளில் மனதைச் செலுத்தி துக்க காரணமான விருத்தியைத் தூரத் தள்ள வேண்டும். மண் சாப்பிடுகிற குழந்தைக்கு பழம் கொடுத்துப் பழக்குகிற மாதிரி பழக்கி பிறகு அதையும் நிறுத்தி விடலாம். விபரீத மார்க்கத்தில் போகிறவனை நல்ல வழியில் திருப்பினுல் நல்ல விருத்தி ஏற்படுகின்றது. நல்ல விருத்தி வந்தால் மனோநாசம்,

வாஸனுக்ஷயம் ஏற்பட்டு விதேகமுக்தி வருகின்றது. மனதின் சுத்தி விசார ஸாமர்த்தியத்தால் செய்துக்கொள்ள வேண்டியது. இந்த துர்விருத்தி நிரோதனத்திற்காக பகவத்பாதாள் உபதேசபஞ்சகத்தில் (ஸோபானபஞ்சகம் என்றும் அதற்குப் பெயர் உண்டு.)

वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयताम् ।
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये मतिस्त्यज्यताम् ।

पापौघः परिधूयताम् என்று சொல்லிவிட்ட பிறகுதானே भवसुखे दोषोनुसन्धीयताम् என்று சொல்லி இருக்கிறார். முதலிலேயே அப்படிச் சொல்லவில்லை.

நாம் அது மாத்திரமே அல்லாமல் துக்கத்தையே சுகமாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு ஒரு பெரிய அதிகாரம் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அந்த வேலையைச் சரியாய்ச் செய்வதில் எத்தனை சிரமம் நமக்கு வருகின்றது? அத்தனை சிரமப்பட்டால்தானே அந்தப் பதவியை வஹிக்கலாம்? அதனால் கௌரவமும் அடையலாம். இதை விட்டு விட்டு ராஜிநாமா கொடுத்துவிட்டு வந்தால் யாராவது மதிப்பார்களா? வேலையை விட்டுவிடக் கூடாது. சாஸ்திரீயமான கர்மாக்களைச் செய்து கொண்டு வந்தால் தற்காலம் கஷ்டமாய் இருந்தாலும் பின்னால் சுகம் கிடைக்கும்.

ஆவரகம் போனால் சித்த சுத்தி ஏற்படும்; மேகம் போனால் சூரியவெளிச்சம் உண்டாகிறதுபோல்.

योगास्त्रयो मया प्रोक्ता नृणां श्रेयोभिवृद्धये ।
ज्ञानं कर्म च भक्तिश्च नोपायोन्योस्ति कुत्रचित् ॥

இந்த மூன்று யோகத்தால் ஞானம் ஸம்பாதித்தால் மோக்ஷம் கிடைக்கின்றது.

5

அருளுரை

உபந்யாஸ நாள் 23.6.1927 கிழமை : வியாழன்

வெகுவாய் இந்த அக்கிரஹாரத்தில் இருக்கிற ஜனங்கள் எல்லாரும் படித்துத் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள். இந்தக் கட்டிடமும், வித்யாப்யாஸத்திற்கு ஏற்பட்ட பள்ளிக்கூடமாகிய பாடசாலை என்று சொல்லுகிறார்கள். ஆகையால் இன்றைய விஷயம் வித்தை. வித்தை என்பது என்ன என்று விசாரிப்பது நிரம்பப் பொருந்தினதாய் இருக்கும். நம்மவர்கள் எல்லாரும் ஒரு குழந்தை பிறந்து அதற்கு வயது வந்தவுடன் அக்ஷராப்யாஸம் செய்து வைக்கிறார்கள். ஏன்? வித்தை முக்கியமாய் இருப்பதினால் அல்லவா? எப்படி முக்கியம்? என்ன பலன் அதற்கு? வித்தை என்பது என்ன? பலமானது எந்த வித்தையால் வரும்? எப்பேர்ப்பட்ட பலம் வேண்டும்? இந்த மாதிரி விசாரம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. வித்தைக்குப் பலம் உண்டு என்று சொன்னதினாலேயே வித்தையே பலம் அல்ல என்று விசதமாகிறதல்லவா? ஆகையால் வித்தையானது ஓர் உபாயம். இன்னொரு பலத்திற்கு ஒரு காரணம்.

उपायेच्छां प्रति फलेच्छायाः कारणत्वम् ।

பலம் தெரிந்துகொண்டுதானே அதற்கு உபாயம் தேடுகின்றோம். போஜனம், க்ஷுந்நிவர்த்திக்கு உபாயம் என்று தெரிந்து கொண்டிருக்கிறோமல்லவா. போஜனம் செய்து திருப்தி வந்தபிறகு மறுபடி போஜனம் செய்கிறோமோ? ஸகலத்திற்கும் உலகத்தில் இப்படியேதான். உபாயம் ஒன்று, அதனால் அடையும் பிரயோஜனம், அதாவது பலன் மற்றொன்று. ஆகையால் வித்தை

உபாயமே தவிர பலனல்லவென்று நன்ருய்த் தெரிந்துகொண்டு பலன் என்ருல் என்ன என்று சற்று விசாரிப்போம்.

முன் உபந்யாஸங்களில் சொல்லியபிரகாரம் எல்லாரும் எப்பொழுதும் தேடுகிற பலன் ஒன்றேதான். சுகப்பிராப்தி துக்கநிவர்த்திதான். இந்த சுகப்பிராப்தி துக்கநிவர்த்தி எப்படி வருகின்றது? ஒருவன் தக்ஷிணைக்குப் போகிருன். என்னத்திற்கு? அங்கே போனல் தக்ஷிணை கிடைக்கும், அதனல் தனக்கு வேண்டியவைகளை வாங்கிக் கொள்ளலாம். அதனல் சுகமடையலாம் என்பதுதானே. எல்லாம் இவனுக்கு இருந்தால் இவன் ஏன் தக்ஷிணைக்குப் போகிருன். அதேமாதிரி ஒருவன் பெருத்த வியாபாரம் செய்கிருன். என்னத்திற்கு? ஏதோ நல்ல லாபம் கிடைக்கும். அதனல் தனக்கு வேண்டியவைகளைப் பெறலாம் என்பதற்குத்தானே. அதுவும் அவனுடைய சுகத்தை உத்தேசித்தல்லவா? இதேமாதிரிதான் ஒருவன் கிருஷி முதலானவை செய்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஸர்வ பிரயத்தனத்திற்கும் இந்த லோகத்தில் சுக இச்சைதான் காரணம் என்பது இனி நாம் நிர்தாரணம் செய்யவேண்டிய விஷயமல்ல, நன்ருய்த் தெரிந்துகொண்ட விஷயமே. காலில் தைத்த முள்ளைப் பிடுங்குவது முதல், பெரிய வியாபாரம், கிருஷி முதலியனவரை ஸர்வ பிரயத்தனங்களுக்கும் சுகப்பிராப்தி, துக்கநிவர்த்திதான் தூண்டுகோல். ஸர்வ பிராணிகளுக்கும் துக்கத்தில் துவேஷம் அல்லவா. ஸகலருக்கும் சுகத்தில் இச்சை இல்லையா? ஆகையால் சுகப்பிராப்தியும் துக்கநிவர்த்தியுமேதான் பலன் என்று சொல்ல யோக்யதை உண்டு என்று நிச்சயமாகிறது.

எப்படி என்ருல், ஒருவன் உத்தியோகம் செய்கிருன், என்னத்திற்காக? ஏதோ சம்பளம் வருமென்றுதானே! சம்பளம் என்னத்திற்கு? வீடு, வாசல் வேண்டியவைகளை ஸம்பாதிக்க அல்லவா? இவையெல்லாம் என்னத்திற்கு? இவைகளை வைத்துக்கொண்டு சுகமாய் இருக்க, என்று இத்தோடு முடிந்துவிடுகிறது நமது கேள்விகளின் பரம்பரை. சுகம் என்னத்திற்கு என்று கேட்கிறதில்லை. இதேமாதிரி காலில் தைத்த முள்ளைப் பிடுங்குவது துக்க நிவர்த்திக்காக. இப்படி துக்க நிவர்த்தியும், சுகப்பிராப்தியும் வந்துவிட்டால் திருப்தி உண்டாகி விடுகிறது. அதன்மேல் பிரயத்தனமும் இல்லை. இந்த திருப்தி

என்னத்திற்கு என்று கேள்வியும் இல்லை. ஆகையால் சுகப்பிராப்தி, துக்கநிவர்த்தியாகிற திருப்திதான் பலன் என்பது ஸித்தியாகிறது.

அப்படியானால் நாம் இப்பொழுது அப்யாசித்துவரும் வித்தை இந்தப் பலனைக் கொடுக்கின்றதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். இப்படி பரிசீலனை செய்து பார்த்தால் நமக்குத் திருப்தியைக் கொடுக்கின்றதில்லை இது என்று தெரிகின்றது. அப்படியானால் இந்த வித்தை உபாயம் அல்லவோ என்றுகூடத் தோன்றிவிடும். ஏன் என்றால் ஸாதனம் அதன் பலனைக் கொடுக்காவிட்டால் அது ஸாதனமாகுமோ? எதிர்ப்பார்க்கிறவனுக்கு இது உபாயம் என்று சொல்லிவிட்டு, பலன் அதனால் கிடைக்காவிட்டால் உபாயத்தில் தோஷம் என்றுதானே சொல்லித் தீரவேண்டும். வேறு பலனை எதிர்ப்பார்க்கிறபடியால் வித்தையே பலமல்ல என்று முன்னமே சொல்லிவிட்டோம். ஆகையால் நாம் ஸம்பாதித்த வித்தை உத்தேசித்த பலனைக் கொடுக்காவிட்டால் அது ஸத்ஸாதனம் அல்ல என்று ஊர்ஜிதமாகிறது. அதனால்தான் மகாகவி பர்த்ருஹரி

विद्या ददाति विनयं विनयाद्याति पात्रताम् ।
पात्रत्वाद्धनमाप्नोति धनाद्धर्मं ततस्सुखम् ॥

என்று சொல்லி இருக்கிறார். அதாவது சுகம் கிடைக்க இத்தனை துவாரப் பிரணாளி (வழிகள்) சொல்லி இருக்கிறார். வித்தையிலிருந்து முதலில் விநயமும், விநயத்திலிருந்து பாத்திரத்துவமும், பாத்திரத்துவத்திலிருந்து தனமும், தனத்திலிருந்து தர்மமும், தர்மத்திலிருந்து கடைசியாக சுகம் கிடைக்கிறதென்றும் சொல்லி இருக்கிறார். இந்த எல்லா துவாரங்களும் தாண்டி கடைசி துவாரம் தாண்டாமல் போனாலும் சுகம் பிராப்தமாகப் போகிறதில்லை. எப்படி ஒரே தேவஸ்தானத்தில் கர்ப்ப கிரஹம் போய்ச் சேர அனேக வாசல்கள் கடந்தும் கடைசி வாசல் கடக்காவிட்டால் கர்ப்ப கிரஹத்துக்குள் போக முடியாதோ அதேமாதிரி வித்தையால் தர்மம் கிடைக்காவிட்டால் சுகப் பிராப்தி இல்லையென்பது நிச்சயம்.

முதலில் विद्या ददाति विनयम् என்று சொல்லி இருக்கிறது. விநயம் என்றால் விசேஷ நயம் என்று அர்த்தமாகிறது. நயம் என்றால் உசிதம் எப்படியோ அப்படி நடத்தல் என்று அர்த்தம். औचित्यज्ञानं विनयम् நயமும்

நீதியும் ஒரே அர்த்தம்தான். யார் யார் விஷயத்தில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடப்பது விநயம். தாய், தகப்பன், பந்து, மித்திரன், சத்ரு, ராஜா முதலிய ஸகலரிடத்திலும் எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடப்பது. அதாவது தாய் தகப்பனிடத்தில் கீழ்ப்படிதல், பந்துக்களிடத்தில் பிரீதி, சினேஹிதனிடத்தில் பிரேமை, சத்ருவினிடத்தில் உதாஸீனம், ராஜனிடத்தில் விசுவாஸம், இப்படி எவன் நடக்கிருனே அவனைத்தானே நாம் விநயமுள்ளவன் என்று சொல்லுகிரேம். ஒருவன் விநயமாய் நடந்தால் சத்ரு அவனுக்கு ஏற்படுகிறதே இல்லை. அல்லது அந்த சத்ருவினுடைய துஷ்டத்தனத்தால் ஏற்பட்டாலும் இவனுடைய உதாஸீனத்தால் அச் சத்ருவுங்கூட திரும்பிப் போய்விடுகிருன். இந்தமாதிரி நல்ல நடத்தை வராமல் போனல் வித்தையே வரவில்லையென்று சொல்ல வேண்டியிருக்கிறது. கேவலம் எழுத்து வாஸனை வந்த மாத்திரத்திலேயே வித்தை வந்துவிட்டது என்று சொல்ல முடியாதல்லவா!

இப்படி விநயம் வந்தவுடன் அவனுக்கு பாத்திரத்துவம் கிடைக்கின்றது. அதாவது யோக்கியதை ஏற்படுகின்றது. ஸகல ஜனங்களிடத்திலும் ஸரியாய் நடந்துகொள்வதினலேயே ஸகல ஜன விசுவாஸத்திற்கு பாத்திரம் ஆகின்ருன். அவர்களால் நன்கு மதிக்கப்படுகின்ருன்.

ஸகல ஜன விசுவாஸம் எப்பொழுது கிடைத்ததோ அதோடு தனம் கிடைப்பதும் நிச்சயம்தானே. தனம், தனம் என்ருல் எது இஷ்டமோ அதுதான் தனம். அதனல்தான் முனிவர்களைத் தபோதனர் என்றும், நிரம்பப் படித்தவனை வித்யா தனமுள்ளவன் என்றும், நல்ல சாந்த குணமுடையவர்களை சமதனமுடையவர்கள் என்றும் சொல்லுகிரேம். எது முக்கியமோ, எது இஷ்டமோ அதுதான் தனம்.

न खलु धनत्वं जातिः यस्य यदिष्टं तदेव तस्य धनम् ।
तत्तदिव पामराणां आकिञ्चन्यं धनं विदुषाम् ॥

(नीलकण्ठ वैराग्यशतकम्)

விநயமும் பாத்திரத்துவமும் உள்ளவனுக்குத் தனம் வந்து சேர்வது ஸித்தம்தானே. யார் யாரால் உபகாரம் வேண்டுமோ

அவரவர் செய்யக் காத்துக் கொண்டிருப்பார்கள் அல்லவா? சூரனுல் செய்ய வேண்டியதைச் சூரனும், சமையல்காரன் செய்யவேண்டியதை அவனும் செய்ய ஸித்தமாய் இருப்பார்களே! ஏன்? இவனுடைய விநய பாத்திரத்துவத்தால்தான்.

தனம் வந்தாலும், அதனுல் வேண்டியது கிடைத்தாலும், தர்மம் வேண்டும். தர்மம் என்ருல் புண்ணியம் வேண்டும். தனம் வந்த மாத்திரத்தில் சுகம் வந்து விடுகின்றதா? உலகத்தில் எத்தனே தனிகர்கள் இருக்கின்ருர்கள். அவர்கள் எல்லாம் சுகிகளா? வேணுமானுல் அவர்களுக்குக் கொஞ்சம் துக்கம் ஜாஸ்தி என்று சொல்ல வேண்டிவரும். மேலும் மேலும் சேர்த்துக்கொண்டே போகவேண்டுமென்ற புத்தி அவர்களுக்கு வந்துவிடுகின்றது. ஒரு ராஜாவை எடுத்துக் கொள்வோம். அவனுக்கென்ன ரோகம், வியோகம் முதலிய துக்கம் வருகிறதில்லேயா? அவனுக்கும் ரோகம் வருகிறது. நல்ல கெட்டிக்காரனுன ராஜவைத்தியன் பார்த்தும் ஸ்வஸ்தமாகாமல் அவன் போகிறதில்லேயா? அப்பொழுது நாம் என்ன சொல்லுகிருேம். அவன் புண்ணியம் அவ்வளவுதான் என்று சொல்லிவிடுகிருேமல்லவா?

ஆகையால் வித்தை வந்ததினுல் ஸாக்ஷாத்தாய் சுகம் வந்துவிடுகிறதில்லே. நாம் தெரிந்து கொண்டது ஒரு துவாரம் ஒரு வாசல் நுழைந்தாயிற்று. நாம் இதுவே சுகம் என்று தெரிந்து கொண்டிருக்கிருேம். சாஸ்திரமோ நாலு ஐந்து படிகள் சொல்லியிருக்கின்றது. நம்முடைய உணர்ச்சி ஸரியா, சாஸ்திரம் ஸரியா? இந்தக் காலத்தில் இருக்கும் வித்தையைக் கொண்டு நமக்கு என்ன வருகின்றது என்று பார்ப்போம்.

ஒன்று விநயம் ஸம்பாதித்துக் கொள்ளலாம். அதனுல் தற்கால அதிகாரிகளிடம் பாத்திரத்துவமும் அடையலாம் இரண்டு. அதனுல் தனமும் ஸம்பாதிக்கலாம் மூன்று. அத்தோடு முடிந்தது. வித்தையால் அதிகாரம், அதிகாரத்தால் தனம், அவ்வளவுதான். தர்மம் இல்லாமல் போனுல் சுகம் கிடைக்குமோ? கிடைக்காது என்று சாஸ்திரம் சொல்லுகின்றது. நமக்கு வேறு விதமாய்ச் சுகம் கிடைத்துவிட்டால் சாஸ்திரத்திற்குப் போகவேண்டியதில்லே. வீட்டிலிருந்து கொண்டே ஒருவனுக்கு ஸகல வித்தையும் வந்துவிட்டால் அவன் பாடசாலேக்குப் போவானேன்?

நம்முடைய பூர்வகால வித்தையில் நல்ல ஸம்ஸ்காரம் உண்டாகும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்தக் காலத்தில் அது இல்லை. ஈச்வரன் ஒருவன் இருக்கிறன் என்று ஒப்புக் கொள்ளாமல்கூட வித்யாப்யாஸம் செய்யலாம். வித்தையை பல்வேறு பாஷைகளில் சொல்லிக் கொடுக்கலாம். அதனால் மட்டும் அது சாஸ்திரமாகாமற் போகாது, எப்படி என்றால் ராஜ ஆக்ஞையை மந்திரி மூலமாக செலுத்தினாலும் அது மந்திரியினுடைய ஆக்ஞை ஆகிவிடாது. அதுபோல பாஷாந்தரத்தில் சாஸ்திரக் கருத்து சொன்னால் அதினால் மட்டும் அது சாஸ்திரீயமல்லாமல் போகாது. இதனால் ஸகலத்தையும் தர்ஜமா செய்துக்கொண்டு விடலாம் என்று அர்த்தமல்ல. சாஸ்திரத்தில் எப்படிச் செய்யும்படி விதித்து இருக்கிறதோ அப்படியே செய்து தீரவேண்டும். நவீன வித்தையால் விநயமும், பாத்திரத்துவமும் வருகின்றது என்று சொல்லலாம். இந்தக் காலத்தில் தனம் வந்துவிடும் என்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் அதுவும் வருகின்றது என்று வைத்துக் கொள்வோம். அதற்குப் பிறகு தர்மம் வருகிறதில்லை.

தர்மம் என்றால் என்ன? சோதனை லக்ஷணம் தர்மம். சாஸ்திரங்களைப் பரிசோதித்து அதிலிருந்து தெரிந்துகொள்வது தர்மம். விதி பிரமாணத்தை உடையது தர்மம். சாஸ்திரங்களில் எப்படிச் சொல்லி இருக்கிறதோ அந்தப்படி நியமிதமான விதமாய் நடப்பதுதானே தர்மம். இந்த வழிக்குத் தாத்காலிகவித்தை உபயோகமாகிறதா? இல்லை.

சிலர் ஸந்த்யாவந்தனத்தை இங்கிலீஷில் செய்தால் என்ன என்று கேட்கிறார்களாம். இதற்கு ஒரு ஸாமான்ய லௌகிக திருஷ்டாந்தம் கொடுப்போம். பரீக்ஷையில் இங்கிலீஷில் எழுத வேண்டியவைகளை எல்லாம் தமிழில் எழுதினால் அது ஸாதுவாகுமோ? அந்தப் பையன் பரீக்ஷையில் ஜயிப்பானோ? மேலும் பரீக்ஷையில் இங்கிலீஷ்கொடுத்து அதைத் தமிழ்ப்படுத்தச் சொன்னால் அப்பொழுது தமிழ் ஸாதுவாகிறதல்லவா? ஆகையால் சொன்னபடி செய்கிறதுதான் தர்மம். இந்தப் பரீக்ஷையில் தேறுவது திருஷ்டமான விஷயம், அத்யல்பமானது. இதற்கே இத்தனை நிர்பந்தங்கள் இருக்கின்றனவே! சாஸ்திரங்களில் சொல்லப்பட்டவைகளோ அதிருஷ்டமான பலனைக் கொடுக்கின்றவை. பாபம் போகின்றது, புண்ணியம் வருகின்றது

என்று அதில் எப்படிச் சொல்லி இருக்கின்றதோ அப்படிச் செய்யவேணுமா, அல்லது நமக்குத் தோன்றின மாதிரி செய்துவிடுகிறதா? எப்படிச் சொல்லி இருக்கிறதோ அப்படித்தான் செய்ய வேணும்.

ஒருவனுக்குக் காய்ச்சல் என்று வைத்துக் கொள்வோம். அது எப்படி வந்தது தெரியுமோ? நிவாரணம் எப்படி? இதை ஆரோக்ய சாஸ்திரத்தால்தான் அடையலாம். அதன் பிரகாரம் செய்தால் உடம்பு ஸரியாகும். अतीन्द्रियार्थे शास्त्रं प्रमाणम् அல்லவா? சொன்னபடி செய்யாவிட்டால் பலன் கிடைக்காது. இந்த தர்மத்துவாரம் தெரிகிறது இல்லை தற்கால வித்தையால்.

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥
श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभाव नियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥

நம்முடைய தர்மப்படி நடப்பதுதான் ஸரி. பிறர் தர்மப்படி நடப்பது பயத்தைக் கொடுக்கின்றது. பரதர்மம் கஷ்டம். கீழ்அதிகாரி மேல் அதிகாரத்தைச் செய்தால் வேலை போய்விடும். ராஜாவே அந்த வேலையை ஏற்படுத்தினுல் அது தர்மம் ஆகும். அதேமாதிரியாய் வேத அத்யயனம் யார் செய்ய வேண்டுமோ அவன் விடுகிறது; யார் செய்யக்கூடாதோ அவன் செய்கிறது. இதில் என்ன உண்டாகும்? இரண்டு பேருக்கும் பாபம் ஸம்பவிக்கிறதுதான் பலன். படிப்பதில் மாத்திரம் புத்தி இருக்கின்றது. அதில் என்ன சொல்லியிருக்கின்றது என்று தெரிந்துகொண்டு அதன்படி நடக்க இஷ்டமில்லை.

பிராம்மணன் வேத அத்யயனம் செய்யாவிட்டால் விராத்தியன் ஆகிறுன் என்று சொல்லி இருக்கின்றது. अनधीयाना व्रात्या भवन्ति । இப்படித் தாறுமாருய் பிரவர்த்திப்பதினுல் தான் லோகத்தில் துர்பிக்ஷம் ஏற்படுகிறது. இதற்கு ராமாயணத்தில் ஒரு கதை இருக்கின்றது.

ஸ்ரீராமர் ராஜ்யபாரம் வஹித்துக் கொண்டு வரும் காலத்தில் ஒரு பிராம்மணனுக்கு பிள்ளை இறந்துபோய்விட்டது. அந்தப் பிள்ளையின் பிரேதத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீராமரின் அரண்மனையின் வாயிலில் போட்டு பிரலாபித்து அழுதுகொண்டு

தனது குமாரன் இறந்ததற்கு ராஜாவான ராமன்தான் காரணமென்று அழுதான். ஏனென்ருல் அந்த ராமராஜ்யத்தில் பெரியவர் முன்னிலையில் சிறியவர் இறந்ததே இல்லை. மேலும் தசரத சக்கரவர்த்தி ராஜ்யபாரம் செய்யும்போது இப்பேற்பட்ட துக்கங்கள் ஸம்பவித்ததில்லை என்று சொல்லி அழும் பிராம்மணனுக்கு ஸமாதானம் சொல்லி, அவனை திருப்தி செய்வதற்காக யமனுடன் சண்டை செய்து பிள்ளையின் உயிரைத் திருப்பிக் கொண்டு வருவதாக வாக்களித்து யுத்த ஸந்நத்தராய்க் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் அசரீரி ஒன்று சம்புகன் என்ற சூத்ரன் தனக்கு விதித்த நெறி தவறி தபசு செய்வதால், இந்தப் பிராம்மணன் மகன் இறந்தான் என்று சொன்னது. அதைக் கேட்டு ஸ்ரீராமர் அந்த சம்புகனைத் தேடி ஆக்ஞை செலுத்தினதாகச் சொல்லி இருக்கின்றது. இப்படி உலகத்தில் ஏற்படும் துர்ப்பிக்ஷாதி ஹிம்ஸைகளுக்கு ராஜன்தான் காரணம் என்று சொல்லி இருப்பதை ஒப்புக்கொண்டு, ஸ்ரீராமர் அதை நிவர்த்திக்கப் பிரயத்தினம் செய்திருக்கிருர். இந்தக் காலத்தில் அதை யாராவது சொன்ஞல் அவன் திரும்பி வருவதே கஷ்டமாய் முடியும். அதர்மம் நடந்தால் அதை ஜனங்கள் அனுபவிக்கிருர்கள்.

யார் யார் எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடக்க வேண்டும். இல்லாவிட்டால் துக்கம் ஸம்பவிக்கும். இதை நடத்த தற்காலம் ராஜா இல்லை. ராஜசிக்ஷை ஏற்பட்டால் ஒருவேளை பவித்திரத்துவம் ஏற்பட்டு அதனுல் பிரஜைகள் ச்ரத்தை அடையலாம். சிக்ஷயில்லாவிட்டால் ஈச்வரனுடைய வார்த்தைக்கு விரோதமாய் எவர்கள் நடந்து போகிருர்களோ அவர்களுக்கெல்லாம் ஈச்வரனுடைய நிக்ரஹம்தான் ஸித்தம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அர்ஜுனனுக்குக் கீதையில் சொன்னதெல்லாம் என்ன? ஸ்வதர்மானுஷ்டானத்தை அல்லவா? அவனுக்கு மாத்திரமா சொன்னுர்? ஸகலருக்கும் சொல்லவில்லையா? நான் பிக்ஷை எடுத்தாவது ஸாப்பிடுகிறேன் என்று சொன்ன அர்ஜுனனுக்கு ஸ்ரீபகவான் சொன்னது என்ன? பைக்ஷ்யம் க்ஷத்திரிய தர்மம் அல்ல; உன்னுடைய ஸ்வதர்மத்தைச் செய் என்றல்லவா உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அர்ஜுனனுக்கு, யுத்தகளத்தில் பிசாச ஆவேசம்போல் நமக்கு வருகிறமாதிரி

பிரமாதம் வராமல், மோக்ஷஸாதனமான வைராக்கியம் வந்தது. அந்த வைராக்கியத்தைக் கைக்கொண்டு ஸ்வதர்மத்தில் தீர்க்க பிடிவாதத்துடன் நடந்தால் சுகப்பிராப்தி வரும்.

நம்மவர்களுக்கோ எடுத்ததெல்லாம் ஸந்தேகம். ஆகையால் நமக்கு ஒரே வழிதான் இருக்கிறது. தர்மாதர்மவிவேகம், சாஸ்திர சோதனையால்தான் கிடைக்கின்றது. அந்த வியவஸ்தை அதனால்தான் சொல்லப்படுகின்றது. யாரோ ஒருவர் ஸபையில் தமிழில் பேசுகிறேன் என்று சொன்னாராம். அவரைப் பேசக்கூடாதென்று உட்கார வைத்துவிட்டார்களாம். எது நியமமோ அதன் பிரகாரம் நடந்தால்தானே முடியும். விருத்தமாய் நடந்தால் முடியுமா?

நம்மவர்களில் சிலர் ஸந்த்யாவந்தனத்திற்கு பலன் என்னவென்று கேட்கிறார்களாம். ஒவ்வொரு மதத்திலும் அந்தந்த மதத்திற்குத் தகுந்தபடி, நிபந்தனைகள், நிர்பந்தங்கள் உண்டல்லவா? துருஷ்கன் ஐந்து வேளை நமாஸ் தொழுகிறான். ஜைன, பௌத்தர்களுக்கும் அப்படியே. சைத்ய வந்தனம் பண்ணும்படி பௌத்தர்களுக்கு உத்திரவு. வெறும் சுவற்றைப் பார்த்து நமஸ்காரம் பண்ணினால் என்ன பலன் வந்துவிடும்? தப்த சிலாரோஹணம், கேசோல்லுஞ்சனம் முதலியவை ஜைனருக்கு விதிக்கப்பட்டிருக்கின்றது. இதில் எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது. காய்ந்த கல்லின் மேல் ஏறி நிற்பதென்றால் எவ்வளவு கஷ்டம். நமக்கு ஒரு மயிரை பிடுங்குவதென்றால் எத்தனை கஷ்டம். கேசம் முழுவதையும் இப்படி சிம்டா போட்டுப் பிடுங்கினால் எத்தனை வேதனை உண்டாகும்! இதிலெல்லாம் என்ன பலன் கிடைக்கின்றது?

நமது ஸந்த்யாவந்தனத்தில் இத்தனை கஷ்டமான காரியங்கள் ஒன்றும் கிடையாது. கேசோல்லுஞ்சனம் செய்தால் என்ன புண்ணியம் வருகிறது. இதை யாரோ சொல்லியிருக்கிறார் என்று நம்பித்தானே அந்த மதஸ்தர்கள் அதைப் பின்பற்றி நடக்கின்றார்கள். சைத்தியவந்தனாதிகளைச் செய்தால் புண்ணியம் வருகிறதென்று எங்கே சொல்லியிருக்கிறது? யாரோ புத்தன் என்று ஒருவனும்; அதேமாதிரி அர்ஹன் என்று மற்றொருவன்; இவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இவர்கள் யார் மனுஷ்யர்கள்தானே? இல்லை இவர்கள் ஸர்வக்ஞர்கள் என்று ஒப்புக்கொண்டால், இவர்கள்

ஸர்வக்ஞர் என்று எப்படித் தெரிந்து கொண்டோம். சாஸ்திரம் செய்ததால்தானே அல்லவா? இவர்கள் செய்த சாஸ்திரம், பிரமாணமுள்ளது என்று எப்படித் தெரிந்தது? ஸர்வக்ஞத்துவத்தால் என்று பதில் சொன்னுல் அந்யோந்யாச்ரய தோஷம் வருகின்றது. இப்படி இருப்பதையே நம்பி அந்த மதஸ்தர்கள் நடந்து வருவதைப் பார்த்தும் ஒரு தோஷமுமில்லாமலும், சர்வேச்வரனை ஸர்வக்ஞனுல் செய்யப்பட்ட வேதசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் கர்மாக்களைச் செய்வதில் என்ன பலன் என்று கேட்கும் நம்மவர்களை என்னென்று சொல்வது.

போகட்டும் இவர்கள் எல்லாம் ஈச்வரர்கள் என்று சொல்லிவிடுவோமென்ருலோ அவனே முன்சொன்ன வேதத்திற்கு, பின் விரோதமாய்ச் சொன்னுல் அது பிரமாணம் என்று எப்படி ஒப்புக் கொள்வது? வேதத்திற்கே விரோதமாய்ச் சொன்னுல் அது எப்படிப் பிரமாணம் ஆகும். வேதத்திற்கு விரோதமாய் அந்த வேதம் சொன்ன ஈச்வரனே வந்து சொன்னுலும் பிரமாணம் ஆகாது. லௌகிக நியமத்திலும் அப்படியேதான். ஒரு சட்டத்திற்கு விரோதமாய் இன்னெரு சட்டம் ஏற்பட முடியுமோ. அப்படி காலத்தை உத்தேசித்து அல்லது வேறு காரணங்களினுல் மாற்றுவதானுல், அதை கஜட்டு முதலியவைகளில் விதிப்பிரகாரம் பிரசுரம் செய்தல்லவோ மாற்றவேண்டிவருகிறது.

இந்த புத்தர் ஈச்வராவதாரம் என்று எங்கே சொல்லி இருக்கின்றது? சாஸ்திரங்களில். அந்த சாஸ்திரங்களிலேயே தைத்தியர்களின் பலத்தைக் குறைக்க வேண்டி இந்த மாதிரி வஞ்சக போதனை செய்ததாகச் சொல்லி இருக்கின்றது. தைத்தியர்கள் ஈச்வரனை ஆராதித்து அவருடைய பிரஸாதத்திற்கு பாத்திரர்களாகி, அனேகவித சக்திகளைப் பெற்று சக்தி வந்ததும் ''शक्तिः परेषां परिपीडनाय'' என்றபடி மற்றவர்களை ஹிம்ஸிக்கத் தொடங்கினதால் அவர்களுடைய பகவத் ப்ரீதியை நீக்கி வந்த மதமல்லவா பௌத்த மதம்? இந்த அவதாரம் விஷ்ணு எடுத்துக்கொண்டு லோகரக்ஷணர்த்தம் துஷ்டர்களை சிக்ஷை செய்ய நாஸ்திக போதனை செய்தார். ஸத்தியமான மதமாய் இருந்தால் அதிலேன் வித்யாஸம்? புத்தருக்கு நான்குபேர் சிஷ்யர்கள். நான்கு பேர்களும் நான்கு விதமாய்ச் சொல்லி இருக்கிருர்கள். இதினுலேயே அவர்களின் குருவின் வஞ்சகம் தெரியவில்லையா? இவர்தானே செய்தார் என்ருல் இது எப்படி வந்தது?

நமக்கு க்ஷேமம் வேண்டும். தரித்திரம் அதிகமாகி விட்டது. இதற்கு ஏதாவது நாம் செய்துகொள்ள வேண்டும், என்று யோசித்துக்கொண்டு ஏதேதோ செய்ய ஆரம்பிக்கிறுர்கள். இப்பொழுது நாம் அனுபவிக்கும் அனுபவம் எந்த கர்மத்தினுல் வந்தது? எதன் பலன்?

ஒருவன் வியாபாரம் செய்து பலநாள் பழகி அனேக வருஷம் லாபம் எடுத்துப் பின்னுல் ஒரே வருஷத்தில் எல்லாம் நஷ்டமாய்ப் போய்விடுகிறதைப் பார்க்கிறுேமே! அது எப்படி? வியாபாரத்தில் அதிகப் பழக்கம் இல்லாதபோது லாபம் வருவானேன், நன்ருய்ப் பழகி தரமாக வேலை செய்யும்போது நஷ்டம் வருவானேன்? வித்யாப்யாஸம் செய்தோம், நன்ருய்த் தேரினுேம், வேலை கிடைக்கவில்லை ஏன்? ஸ்வாமியின் தயவு அவ்வளவுதான். நம்முடைய புத்தியால் ஸாதித்துவிடுவோம் என்று நினைப்பதெல்லாம் இப்படித்தான் முடியும். எல்லாம் விபரீதம்தான்.

புத்தியால் ஸம்பாதிப்பது வாஸ்தவமானுல், எல்லாருக்கும் புத்தி இருக்கிறது, எல்லாரும் சுகம் ஸம்பாதித்து விடலாமே! முடியுமோ? ஒருக்காலும் முடியாது. ஆகையால் சாஸ்திரம்தான் பிரமாணம். மற்ற மதப்பிரகாரம் நாம் நடக்க முடியாது. எந்தெந்த உள்நோக்கத்தை உத்தேசித்து சொல்லப்பட்டிருக்கின்றனவோ நமக்குத் தெரியாது. ஆகையால் ஸ்வதர்மம்தான் நமக்கு சிரேஷ்டம். அதுதான் வேண்டும். பரதர்மத்தை நினைக்கவுங் கூடாது. பரதர்மத்தை நன்ருய்ச் செய்வதைவிட நம்முடைய தர்மத்தை சுமாராகச் செய்வது சிரேஷ்டம்.

நான்கு வர்ணத்தவர்கள் தர்மாதிகாரிகள். ஆகையால் கர்மாதிகாரிகளும் அவர்களே. அப்படி இருந்தால்தான் லோகம் சுபிக்ஷமாய் இருக்கும். நமக்கெல்லாம் வேதம்தான் பிரமாணம். இதில் இன்னெரு கக்ஷி இருக்கிறதாம். வேதத்தை நம்புகிறுேம். இந்த ஸ்மிருதி முதலியவைகளை நம்புகிறதில்லை. இதை எல்லாம் பிராம்மணன் தனக்கென்று செய்துக்கொண்டது என்று சொல்லுகிறுர்களாம்.

இவர்களுக்கு வேதம் அர்த்தமாகிவிடுகிறதா? எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு விட்டார்களா? कन्यां सर्वत्र वर्जयेत् என்று கன்யா மாஸத்தில் க்ஷவரம் செய்து கொள்ளக் கூடாது என்று நிஷேதித்த வேதவாக்கியத்தை பிரௌடா விவாஹத்துக்கு

ஆதாரமாகக் கொள்வதும், नावेव सिन्धुं दुरितात्यग्निः என்ற வாக்கை ஸமுத்திரயானத்திற்கு மேற்கோளாகக் கொள்வதுமே, நமக்கு வேதத்தை, நாமாகவே அறிந்து கொள்ள யோக்கியதை இல்லை என்று விசதமாகின்றது.

ஸ்வேச்சாநிரோதத்திற்காக ஏற்பட்ட சாஸ்திரத்தை ஸ்வேச்சானுகூலமாகவா அர்த்தம் செய்துக்கொள்வது? மதம் பிடித்துப் போகிற யானையைத் தடுத்து நம்ம வழி போகச் செய்யும்படி உபயோகப்படும் அங்குசம் போலல்லவா இருக்க வேண்டும் நமக்கு சாஸ்திரம்? அதை விட்டு நமது இஷ்டப்படி நடக்கவா சாஸ்திரம் ஏற்பட்டிருக்கின்றது? சாஸ்திரமே வேண்டியதில்லையே; அவனவனிச்சையே போதுமே. ஆகையால் சுயேச்சையாய் நடப்பதைத் தடுத்து சாஸ்திரப் பிரகாரம் நடப்பதுதான் தர்மம். சாஸ்திரங்களில் செய்யென்று சொல்லியவைகளில் எவ்வளவு ஸாத்தியமோ அவ்வளவு செய்ய வேண்டும். செய்யாதே என்று நிஷேதித்தவைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும். இதுதான் தர்மம். மற்றவழி அதர்மம்.

நமக்கும் பசுக்களுக்கும் என்ன வித்யாஸம்? அவைகளுக்கு நிபந்தனைகள் இல்லை. நமக்கு அப்படி வரவேண்டுமோ! பசுக்களுக்கு ஸமானமாய் ஆகவேண்டுமென்று இச்சைப்படுவதா?

வேறு சிலர் இந்த சாஸ்திரீய நிபந்தனைகளை விட்டுவிட்டு சில சபைகளில் சேர்ந்துகொண்டு புதிய நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்களாம். ஒன்றை விடுவானேன், மற்றொன்றை ஸ்வீகரிப்பானேன்? இந்தப் புதிய நிர்பந்தங்கள் பலனைக் கொடுக்கும் என்று எப்படித் தெரியும்?

வேறு சிலர் இந்த நிபந்தனைகள் எல்லாம் பிராம்மணர்கள் தங்கள் க்ஷேமத்திற்காக ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களாம். வியாபாரம், கிருஷி, ராஜ்யபாரம், கைத்தொழில் முதலிய ஸகல தன ஸம்பாதன மார்க்கங்களை எல்லாம் பிராம்மணரல்லாதவருக்குக் கொடுத்துவிட்டு, கேவலம் ஆத்மபுத்தி பிரஸாதகமான சித்தசுத்திக்கு வேண்டிய கர்மாக்களை மட்டும் தனக்கு வைத்துக் கொண்டிருக்கிறான். புத்திநைர்மல்யம்தான் பலன். இதனால் பிராம்மணன் மற்றவர்களை எப்படி மோசம் செய்துவிட்டான் என்பது தெரியவில்லை.

या मा सा माया என்பதுபோல் या वित् सा विद्या. எது ஞானமோ, எது அஞ்ஞானத்தை நாசம் செய்கிறதோ, எது ஆத்மா இன்னது என்ற ஞானத்தைக் கொடுக்கிறதோ அதுதான் வித்யா. பூகோளம், ககோளம், ரஸாயனம் முதலியவை தெரிந்ததால் என்ன ஸாதகம்? தெரியாததால் என்ன பாதகம்? நமது ஆறு சாஸ்திரங்களும் அப்படிப்பட்டவைகளா? அவைகள் புத்தியை விளக்கி விவேகத்தை உண்டுபண்ணுகின்றனவல்லவா! வெறுமனே இந்த விருத்தாந்தப் பத்திரிகைகளை வாசித்தால் என்ன குணம்?

वङ्गाः कथं अङ्गाः कथं इति नियुङ्क्ते वृथा देशान् ।
कीदृक्कृतान्तपुरमिति कोपि न जिज्ञासते लोकः ॥

வங்க தேசமெப்படி இருக்கிறது, அங்க தேசமெப்படி இருக்கிறது என்று ஸதா விசாரித்துக் கொண்டு, புத்திக்கு விக்ஷேபத்தைச் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் யமபுரம் எப்படி இருக்கிறதென்று ஒருவரும் கேட்கிறதே இல்லை. பத்திரிகைகளை வாசித்து காலங் கழித்தால் என்ன குணம்? தற்காலத்தில் ஒரு பத்திரிகையில் ஸசேஷம் என்று ஒரு கதை எழுதிவிட்டால் மறு ஸஞ்சிகை வரும்வரையில் பிராணனே போய்விடும்போல் இருக்கின்றது. உலகத்தில் இருக்கும் ஸகல வஸ்துக்களைப் பற்றியும் தெரியும், ஆனால் 'நான்' என்ற வஸ்துவைப் பற்றி மாத்திரம் ஒன்றும் தெரியாது. இப்பேற்பட்டவர்களைப் பற்றி என்ன சொல்வது?

எந்த வித்தையால் அஞ்ஞானம் போகிறதோ அது அல்லவா வித்தை. ஞானம் என்பது என்ன? இந்திரியங்களுக்கு சாந்தியைக் கொடுப்பது அல்லவா? (प्रशमकरं यत् इन्द्रियाणां तत् ज्ञानम्) சாந்தி இல்லாமல் இந்திரியங்களுக்கு வேலையைக் கொடுத்து தேகத்துக்கு துர்பலத்தைக் கொடுத்தால் தர்ம ஸம்பாதனம் எப்படிச் செய்ய முடியும்? சரீரம் தர்ம ஸம்பாதனத்திற்கு முக்கிய ஸாதனம் அல்லவா? ''शरीरमाद्यं खलु धर्म साधनम् ॥''

ஆகையால் நம் புத்தியைக் கொண்டு செய்வதெல்லாம் குணமாகாது. சாஸ்திரமே பிரமாணம். இந்த விஷயத்தில் ஒரு கதை சொல்லுகிறார்கள். ஒருவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதனுடைய ஜாதகத்தைப் பார்த்ததில் அதற்கு ஜலத்தில் மரணம் என்று தெரிய வந்தது. பிதா அந்தக் குழந்தையை ஜலத்தின் ஸமீபத்திலேயே போகாமல் செய்து வந்தான். குறித்த தினத்தில்,

ஸாப்பிடப்போன பையன், ரசத்தைத் தனது கலத்தில் நிறைய வார்த்துக்கொண்டு அதில் மூக்கை நட்டுக்கொண்டு இறந்தானும். ஈச்வரனுடைய பிரேரணையை யார்தான் தடுக்க முடியும்?

அப்படியே இன்னொரு கதை. ஒரு பிராம்மணனிடத்தில் ஒரு பறையன் வயல் முதலியன உழுது பயிரிட்டுக் கொண்டு இருந்தான். இந்த பிராம்மணனுக்கு அவனிடத்தில் வெகு ப்ரீதி. அவனும் நல்ல சிரத்தையோடு நடந்து வந்தான். காலகதியில் அவன் இறந்துபோய்விட்டான். ஒரு நாள் இந்த சிஷ்டனான பிராம்மணன் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு வீடு வரும் வழியில் அந்தப் பறையனுடைய உருவம் தோன்றியது. எங்கே வந்தாய்? என்ன சமாசாரம் என்று கேட்க, அவன் ஸத் பிராம்மண ஸேவாபிரபாவத்தால், தான் யமதூதனாய் இருப்பதாயும், அன்றைக்குக் கோயில் திருப்பணி செய்யும் ஒருவனுடைய உயிரைக் கொண்டுபோக வந்திருப்பதாகவும் சொன்னான். அந்தத் திருப்பணிக்காரன் தனக்கு மிகவும் பிரியமான சினேகிதனானதால் மரணத்திலிருந்து தப்புவிக்க உத்தேசித்து மரணத்தின் நிமித்தம் என்ன என்று கேட்டான். கல் இடிந்து விழுந்து இறப்பதாய்த் தூதனால் தெரிந்துகொண்டு வீட்டுக்குப் போய், மற்ற யாருக்கும் சொல்லாமல் அந்த சினேகிதனை ஓர் அறையில் போட்டு பூட்டிவிட்டு சாவியை எடுத்துக்கொண்டு வெளியே போய்விட்டான். அன்றைக்கு மத்தியானம் வேலையில் முக்கியமானது ஒன்று மேஸ்திரி இருந்தே ஆகவேண்டியதாய் இருந்ததால் எங்கும் தேடி கடைசியில் கண்டுபிடித்துக் கதவைப் பெயர்த்துவிட்டு மேஸ்திரியை வெளிப்படுத்தி வேலையிடத்திற்கு கூட்டிப்போகப் பட்டான். போனதும் கல் முறிந்து விழ மேஸ்திரி மாண்டு போனான். தூதன் சொன்ன காலம் கடந்ததும் பிராம்மணன் நதியோரத்திலிருந்து வீடுநோக்கி வரும்போது அதே பறையன் உருவத்தால் நடந்ததைத் தெரிந்துகொண்டு துக்கித்ததாகக் கதை. இதனால் ஈச்வரேச்சையை மாற்ற யாராலும் முடியாது என்று தெரிகிறது.

மைசூர் ஸம்ஸ்தானத்திலிருந்து ஒரு ஸ்திரீ எம்.ஏ. பரீக்ஷைக்கு சீமைக்குப் போனாள். முதல் வருஷத்தில் பரீக்ஷாக்ருஹம் போனதும் ஒரு மாந்த்யம் அதாவது பிரமை ஏற்பட்டு ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பிவந்துவிட நேறியது. இரண்டாம் வருஷமும் அப்படியே ஆயிற்று. மைசூர் திரும்பி வந்துவிட்டாள். போனதும்

மருந்து ஸாப்பிட்டதும்தான் மிச்சம். வியாதி ஸ்வஸ்தமாகவில்லை, இதுபோலாயிற்று என்று சொல்லவேண்டிவருகிறது.

ஆகையால் நமது யுக்தியால் செய்யும் காரியங்கள் எல்லாவற்றிற்கும் இப்படித்தான் பலன்கள் நிச்சயமில்லை. பகவான் சொன்ன மார்க்கத்தில் போனால் பலன் ஸித்தமாய் இருக்கிறது. பகவத் சரணாகதியால் கிடைக்காத வஸ்து என்ன இருக்கின்றது?

தேவதை எப்படிக் கொடுக்கின்றது என்றால் நம்முடைய கர்மம் மூலமாய்த்தான். நாம் போகிற வழி பகவானுடைய அனுக்ரஹம் கிடைக்கும்படி இருந்தால் அதன் மூலமாய்த்தான் பலன் கிடைக்கின்றது. விபரீத மார்க்கமாய் மனதைப் போகவிடக் கூடாது. நல்லவழியில் போனால் பலன் நிச்சயமாய்க் கிடைக்கும்.

இப்பொழுது நம்மவர்களுக்கு வேலை இல்லாமல் போனால் தனம் எப்படி ஸம்பாதிப்பது, தனம் இல்லாமல் போனால் தேஹயாத்திரை எப்படி நடக்கும் என்று பெருத்த ஸந்தேஹம் உண்டாகியிருக்கிறது. நடுப்பாறையில் தேரை இருப்பதைக் கேட்டிருக்கிறோமல்லவா? அந்தத் தேரைக்கு இத்தனை ஆயிரம் வருஷங்களுக்கு ஆகாரமும், அது இருக்க தீர்த்தமும் யார் கொடுத்தார்கள்? மைசூர் ராஜ்யத்தில் முன்னால் ஜக்கணாச்சாரி என்று ஒரு சில்ப சாஸ்திரி இருந்தான். அவன் வித்யாசங்கரர் கோவில் முதலியன கட்டி இருக்கிறான். அவனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அதன் ஜாதகத்தைச் ஸரியாய் கணிப்பதற்காக, கற்பகிருஹத்தில் இருந்தவர்களை பிள்ளை பிறந்ததும் ஒரு எலுமிச்சம்பழத்தை உருட்டிப் போடும்படி ஏற்பாடு செய்திருந்தான். அவர்களும் அப்படியே செய்தார்கள். ஆனால் அது திரும்பி வந்ததால் மறுபடி எடுத்து வீசினார்கள். இதனால் ஜாதகம் பிசகி, குழந்தை தனக்குப் பிறந்ததல்ல என்று தீர்மானித்து தேசாந்திரம் போய் அனேக கோவில் கட்டி சிவபிரதிஷ்டை செய்துவந்து கொண்டிருந்தான். பிறந்த பையனுக்கு வயது பத்தொன்பது ஆனதும், தகப்பனைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். சுற்றிக்கொண்டு வந்து ஜக்கணாச்சாரி புதிதாய்க் கட்டிக் கொண்டிருக்கும் தேவஸ்தானத்தில் வைக்கப் போவதாயிருக்கும் லிங்கம் தூஷிதமாயிருப்பதைக் கண்டு பஹிரங்கமாய் அந்த தோஷத்தை எடுத்துச் சொன்னான். இந்த விஷயமாய் பிதா புத்திரர்களுக்கு வாக்குவாதம் ஏற்பட்டு சபதம்

செய்துகொண்டார்கள். அந்த லிங்கத்தைத் தட்டிப் பார்த்ததில் அது உடைந்து அதனுள்ளே இருந்து ஒரு தேரையும் கொஞ்சம் ஜலமும் கண்டார்கள். பிரகிருத விஷயத்தில் இருந்த தேரைக்கு இத்தனை நாள் ஆகாரம் யார் கொடுத்தார்கள்? இந்த ஜலத்தை யார் அங்கு வைத்தார்கள்? இதெல்லாம் ஈசன் செயல் அல்லவா. இந்தத் தேரைக்கு ஆக்ாரம் கொடுக்கவில்லையா?

நமக்கு சாப்பாடு கர்மானுஸாரமாய் நிச்சயமாய்க் கிடைக்கின்றது. ஒருவன் தரித்திரனாய் இருக்க வேண்டுமானால் எவ்வளவு பணம் கொடுத்தாலும் அவன் தரித்திரனாகவேதான் இருப்பான். ஸமுத்திரம் பெரியதுதான். நாம் ஒரு குடம் மட்டும் கொண்டுபோனால் குட அளவு நீர்தானே கொண்டுவர முடியும். கிணற்றில் போட்டு சேந்தினாலும் அவ்வளவுதான் கிடைக்கும். நாம் வனாந்திரத்திலிருந்தாலும் பெரிய பட்டணங்களிலிருந்தாலும், நமது கர்மானுஸாரப்படி வருவது வந்தே தீரும்.

ஸந்தோஷம் நமக்கு வருகிறது. சில ஸமயத்தில்தான் வருவானேன்? நாமாய்த் தேடிவிட முடியுமென்றால் எப்பொழுதும் இருக்கிறதுதானே? பகவத் பிரஸாதத்தால்தான் வருகிறது. அவன் சொன்னபடி நடக்க வேண்டியது, துஷ்கிருத்யம் செய்யப்படாது. அப்படியானால் சுகம் நிச்சயம்.

त्रिभिर्वर्षैस्त्रिभिर्मासैस्त्रिभिर्पक्षैस्त्रिभिर्दिनैः ।
अत्युत्कटैः पुण्यपापैः इहैवफलमश्नुते ॥

என்றபடி நம்முடைய பலிஷ்டகர்மங்களின்படி நமக்கு பலன் இந்த ஜன்மத்திலேயே வரலாம்.

ராவணன், முதலில் தெய்வபலத்தை ஸம்பாதித்துக் கொண்டு ஸகல ஐச்வர்யத்தையும் அடைந்தான். பிறகு அவனுடைய தௌஷ்டியத்தாலேயே ஸகலமும் நசித்துப்போய் அவனும் இறந்தான். இதெல்லாம் அவனுககு ஒரே ஜன்மத்தில் வந்தன.

இப்பொழுது பகவத் பிரஸாதம் இல்லை; துஷ்டத்தனம் மட்டும் இருக்கின்றது. சீக்கிர நாசத்திற்குக் கேட்பானேன்?

தசரதன் தேவஸஹாயன், அவனுக்குக்கூட பிள்ளை இல்லை. புத்திரகாமேஷ்டி செய்து பகவானுடைய அனுக்கிரஹம் பெற்று புத்திரர்களை அடைந்தான். ஸ்ரீகிருஷ்ணன் பகவானுடைய

அவதாரம். அவருடைய நாமத்தை ஜபித்து அவரை ஆராதித்து இப்பொழுது பிள்ளையில்லாமல் போனால் சந்நானகோபால மந்திரத்தை உபதேசம் செய்துக்கொண்டு உபாஸனை செய்து புத்திரஸம்பத்தை உலகத்தில் அடைவது வழக்கமாய் இருக்கின்றது. அவர்கூட தனது மகிஷி ஜாம்பவதி புத்திரன் வேண்டுமென்று யாசித்தபோது ஸ்ரீ கிருஷ்ணனும் அவளுமாய் உபமந்யு ரிஷியிடம் போய் ஸ்ரீ சிவஸஹஸ்ரநாமமும், பஞ்சாக்ஷரமும் உபதேசம் பெற்றுக் கொண்டு கந்தமாதன பர்வதத்தில் தபசு செய்து பெற்றதாகச் சொல்லி இருக்கிறது. இந்த விஷயம் கிருஷ்ணனுக்குத் தெரியாததா? தானே செய்ய முடியாததா! அவரே லோகோத்தாரத்திற்காக நடத்திக் காட்டி இருக்கிறார். அதேமாதிரிதான் ஸாந்தீபனி முனிவரிடம் போய் குருவாய் அவரை வரித்து அத்யயனம் செய்திருக்கிறார்.

கீதையில் அவரே,

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥

என்று சொல்லுகிறார். அவரே கர்மானுஷ்டானம் செய்கிறார் என்றால் என்னத்திற்காக? லோகஹிதார்த்தமாகத்தான், அவர் செய்து காட்டினாலுங்கூட நாம் செய்கிறதில்லை. அவரும் விட்டுவிட்டால் கேட்க வேண்டியதே இல்லை. அதுவே காரணமாகும் கர்மலோபத்திற்கு. ஞானியானாலும், அக்ஞானியானாலும் கர்மம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகின்றது. எந்த விஷயமானது பிரத்யக்ஷமாயோ அல்லது ஊஹையாலோ தெரியாதோ அதைப்பற்றிச் சொல்வதுதான் வேதம்.

प्रत्यक्षेणानुमित्या वा यस्तूपायो न बुध्यते।
एनं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता ॥

ஒருவனுக்கு நிரம்ப தனம் வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அப்பேற்பட்டவனை வாயுயாகம் செய்யச் சொல்லி இருக்கின்றது. யாருக்கு இல்லையோ அவர்கள் செய்யட்டும். ஸம்பத்து வந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்டால், தற்காலத்தில் பணம் இருக்கிறவர்களும் லோகாந்தரத்தில் செய்திருக்கலாம். இதேமாதிரி பிள்ளை முதலியவைகளுக்கும்,

இப்படித்தான். ஒன்று, இரண்டு, மூன்று ஜன்மம் எடுத்து கிரமேண பலப்படுத்தி, பூர்ணத்துவம் கிடைக்கின்றது. அப்படித்தான் பிரம்மத்துவத்திற்கும். புண்ணியம் ஏற்பட வேண்டும். லோகாந்தரத்திற்கு சாஸ்திரம்தான் பிரமாணம். சாஸ்திரத்தை சோதித்து வழி தெரிந்துகொண்டு, அதன்படி செய்தால் லோகாந்தரத்திலாவது அனுபவிக்கலாம். இங்கேயே இல்லாமற் போனால் அங்கே எப்படி முடியப் போகிறது?

இன்னொரு வித ஸம்சயம் ஆஸ்திக்கியாதிக்யத்தால் வருகின்றது. அதென்ன என்றால், பவிஷ்யத் புராணம் முதலான புராணங்களில் கலியுகத்தில் ஜாதி சங்கிரமம் முதலிய துஷ்கிருத்யங்கள் பரவப் போகின்றன, பிராம்மணர்கள் ஸந்த்யாவந்தனாதிகளை விட்டுவிடுவார்கள், சுராபானாதிகளை ஏற்றுக் கொள்வார்கள் என்று அநேக அனாசாரங்களைப் பற்றிச் சொல்லி இருக்கின்றதே, இவைகளோ ஸித்தமாய் நடக்கப் போகின்றனவே, ஏன் வீணாய் இந்த ஸந்தியாவந்தனாதிபாரத்தைத் தாங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், இப்பொழுது கலி 5000 வருஷங்கள்தான் ஆகியிருக்கின்றது. இப்பொழுதே ஸந்தியாவந்தனாதிகள் விட்டுவிடப்பட்டுப் போகும் என்று சொல்லப்படவில்லை. தவிர இந்தப் புராணங்களில் மேல் கண்டபடி ஏன் சொல்லப்பட்டது என்றால், கலியுகம் வந்துவிடும். நீங்கள் ஜாகரூகர்களாய் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கைக்காகவே தவிர, தர்மகர்மங்களை விட்டுவிடத் தூண்டுவதற்காக அல்ல. தர்மகர்மாதிகளை விட்டதால்தான் நம் தேசத்தில் துர்பிக்ஷமும், ரோகங்களும், ஜலபிரவாஹத்தால் நாசமும் ஏற்படுகிறது.

ராவணன் தனது துர்நடத்தையால் கெட்டான். ஆனாலும் அவன் ஸாமான்யன் அல்ல. தனது தலைகளை ஒவ்வொன்றாய் அறுத்து ஈச்வரார்ப்பணம் செய்து, அதனால் பகவத் ப்ரீதியை ஸம்பாதித்தான். ராவணன் கெட்டவன் என்றால் ராமரை உத்தேசித்துக் கெட்டவனே தவிர வேறல்ல. ஸ்ரீராமர் தர்மாத்மா, ஸத்யஸந்தர், புண்ணியஸ்வரூபி. ராவணன் கெட்டவன், பாபி, இவ்வளவுதான்.

இந்தக் காலத்தில் பிராம்மணத் துவேஷம் வந்திருக்கின்றது. அப்படி வருமென்று மத்ஸ்ய புராணத்தில் சொல்லி இருக்கின்றது.

ஏன்? இவர்கள் கெட்ட குணத்தால். பிராம்மணேதரனும் செய்யத்தகாத காரியத்தை பிராம்மணன் செய்யத் தயாராகிருன்.

நாங்கூனேரி என்ற கிராமத்தில் நாம் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போது ஒரு கவுண்டன்,

दैवाधीनं जगत्सर्वं मन्त्राधीनं तु दैवतम् ।
ते मन्त्रा ब्राह्मणाधीना ब्राह्मणो मम देवता ॥

என்ற சுலோகத்தைச் சொன்ஞன். இதேமாதிரி சம்பு ராமாயணத்தில் இரண்டாவது சுலோகத்தில் போஜராஜன் சொல்லி இருக்கிருன்.

उच्चैर्गतिर्जगति सिद्ध्यति धर्मतश्चेत्
तस्य प्रमा च वचनैः कृतकेतरैश्चेत् ।
तेषां प्रकाशनविधा च महीसुरैश्चेत्
तानन्तरा हि निपतेत् क्व नु मत्प्रणामः ॥

இதையெல்லாம் பிராம்மணர்களே செய்தார்களா? அவர்களே செய்தார்கள் என்று வைத்துக் கொண்டாலும், அவைகளைப் பிரசாரம் செய்தவர்கள் எல்லாம் பிராம்மணர் அல்லாதவர்கள்தானே. அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் தானபத்திரங்கள்தானே.

போகட்டும், செய்த புஸ்தகங்கள் எல்லாம் பிராம்மணர்களாலேதாஞ? மாந்தாதா என்ற ராஜன் ''கர்மவிபாகம்'' என்ற பெரிய கிரந்தம் செய்திருக்கிருன். அதில் பிராம்மணர்களைப் புகழ்ந்திருக்கிருன். இப்படியேன் ஏற்பட்டது? இதுவும் பிராம்மணன் செய்துவிட்டு அரசன் பெயரை வைத்து பிரகாசிக்கப்படுத்தப் பட்டது என்று சொல்லக்கூடும். அப்படியாஞல் இதையேன் தடுக்கவில்லை? இதெல்லாம் அல்ல காரணம். பிராம்மணன் மற்றவர்களின் சிரேயோவிருத்தியை பிரார்த்தித்துக் கொண்டிருந்ததால்தான்.

இப்பொழுது ஐகமத்யம் வேணும் என்று பேச்சு மட்டும், பண்ணுவது எல்லாம் துவேஷகாரியம். பரஸ்பர ஸஹாயம் போச்சு, இவர் ஸஹாயம் அவருக்கில்லை, அவர் ஸஹாயம் இவருக்கில்லை. ஐகமத்யம் எங்கிருந்து வரும். கிழவனும் அவனுடைய நான்கு புத்திரர்களும் என்ற கதை தெரியாதவர்கள் இல்லை. ஒருவனுக்கு பசி என்று வைத்துக் கொள்வோம். அதற்கு உபசமனம் இன்னும் நான்கு மைல் ஓடுகிறதோ. இந்த விபரீத நிஷ்கிருதி எதற்காக?

பிராம்மணனுடைய ஸஹாயத்தால் இத்தனை நாள் முன்வந்தவர்கள் இப்பொழுது மட்டும் கெட்டுப் போவார்களோ? இப்பொழுது ஏன் இந்த கிருதக்னதாபுத்தி வந்திருக்கின்றது. कृतघ्ने नास्ति निष्कृतिः என்று சொல்லி இருக்கின்றது. அபத்யம் செய்தால் நோய் வருகின்றது. மருந்து சாப்பிட வேண்டாமா? அதற்கு பதிலாய் மேலும் அபத்யமா செய்கிறது? ஆகையால் கலியுகத்தில் கர்மத்தை விடாமல் இன்னும் அதிக ஜாகரூகமாய் இருந்துகொண்டு கர்மத்தைச் செய்துகொண்டு வரவேண்டும்.

ஜாக்கிரதையாய் இருந்தபிறகு பலன் கிடைக்காமற் போனால் அது நமது தோஷமல்ல. இரண்டு பேர்கள் பரீக்ஷைக்குப் போகிறார்கள். ஒருத்தன் ஸரியாய் வியாஸங்கம் செய்தான், மற்றவன் செய்யவே இல்லை. இவன் ஜயமடையாமல் போனால் யாருடைய தப்பு? காலத்தின் தோஷமா அல்லது கர்மத்தின் பலனா? இந்த இரண்டுமல்ல. இவனுடைய குற்றமேதான். இரண்டு பேரும் ஸரியாய் வியாஸங்கம் செய்து பரீக்ஷையில் ஒருவன் மட்டும் ஜெயித்து மற்றவன் தோற்றால் அப்பொழுதுதான் அதிருஷ்டம் காரணமாகிறதே தவிர மற்ற காலத்தில் இல்லை. துஸ்ஸஹவாஸத்தால் ஒருவன் கெட்டால் அதற்கு கலிகாலமா காரணம்?

ஸநகாதிகள் கலிகாலம் வரட்டும் வரட்டும் என்று பிரார்த்தனை செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன்? கலியுகத்தில் மேலேருதல் வெகு சுலபம். சீக்கிரத்தில் பலன் கிடைத்துவிடுகிறது. எந்தப் பலனானது கிருதயுகத்தில் தியானத்தால் கிடைக்கின்றதோ, எந்தப் பலன் திரேதாயுகத்தில் யக்ஞத்தால் கிடைக்கிறதோ, எது அர்ச்சனையால் துவாபரத்தில் கிடைக்கிறதோ அதேபலன் கலியுகத்தில் கேசவ சங்கீர்த்தனத்தால் கிடைக்கின்றது, என்று பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ध्यायन्कृते यजन्यज्ञैस्त्रेतायां द्वापरेऽर्चयन् ।
यदाप्नोति तदाप्नोति कलौ सङ्कीर्त्य केशवम् ॥

அதேமாதிரி பத்து வருஷம் செய்தால் என்ன பலனோ கிருத யுகத்தில், அது திரேதாயுகத்தில் ஒரு வருஷத்திலும், துவாபர யுகத்தில் ஒரு மாசத்திலும், கலியுகத்தில் ஒரு நாளிலும் கிடைக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் கலி

ஸாது, கலியுகம் மிகவும் நல்லது. நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு ஸ்ரீ கேசவ பஜனம் பண்ண வேண்டியது.

இதனுல் ஸந்தியாவந்தனுதிகளை விட்டுவிட வேண்டியது, அல்லது விட்டுவிட்டாலும் தோஷமில்லை என்று அர்த்தமல்ல. பஜனம் பஜனம் என்ருல் என்ன அர்த்தம். भज सेवायां பஜனம் என்ருல் ஸேவைதானே. ஒரு ஸேவகன் யஜமானன் சொன்ன வேலையைச் செய்கிறதே இல்லை. ஆனுல் தினம்பிரதி யஜமானனுடைய வீட்டுக்குப் போய் தர்சனம் செய்து கொண்டு வந்தால் அவனுக்கு பலன் கிடைக்குமோ? பலன் கிடைக்காமல் போவதுமல்லாமல் சிக்ஷைக்குப் பாத்திரமாவானல்லவா? நாம ஸங்கீர்த்தனம் மட்டும் போதாது.

இந்தக் காலத்தில் ராஜபக்தியை விசேஷமாய்க் கொண்டாடுகிருர்கள். அதேகாரணமாய் இந்தக் காலத்திற்கு கலிதான் அரசன். ஆகையால் அவன் சொன்னபடி செய்துவிடுவோம், என்று சிலபேர் சொல்லிக் கொள்ளுகிருர்கள்.

இந்த விஷயமாய் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு பிராம்மணன் நல்லவன், வெகு யோக்கியன், நல்ல சிஷ்டன். பாதசாரியாய் ஒரு சபைக்கு வந்து கொண்டிருந்தான். வெகு தாகமானதால் தீர்த்தத்தைத் தேடி எங்கு சுற்றியும் தேடியும் கிடைக்கவில்லை. இப்படியே சுற்றித் தேடி வருகையில் ஒரு தோட்டத்தில் அனேக தர்பூசணிப் பழங்கள் பழுத்துக் கிடந்தன. ஆனுல் தோட்டக்காரனைக் காணுேம். சும்மா பறித்து எடுத்துக்கொள்ள இஷ்டப்படாமல் அந்தப் பழம் இருந்த இடத்தில் இரண்டணு போட்டுவிட்டு பழம் பறித்துத் தின்று கொண்டிருக்கிற ஸமயத்தில் கலிபுருஷன் வந்து இவன் செய்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு, ''இதென்ன அவிவேகம்? இத்தனை பழங்களில் ஒன்று எடுத்தால் அவன் கண்டுபிடித்து விடவா போகிருன்? இதற்காக ஏன் வீணுய் இரண்டணுவை வைத்துவிட்டுப் போகிருய்? எடுத்துப்போ'' என்று சொன்னுன். பிராம்மணன் சத்தியஸந்தன் ஆகையால் என்ன சொல்லியும் கேட்கவில்லை. பணத்தை வைத்துவிட்டே போய்விட்டான். பிராம்மணன் போய் சபைக்குள்ளே உட்கார்ந்துகொண்டு வாக்கியார்த்தம் சொல்லிக் கொண்டிருந்தான்.

கலிபுருஷன் விடுவானு அவனைச் சும்மா? அதே சமயத்தில் கலி பறையன் வேஷம் போட்டுக் கொண்டு, உள்ளே வாக்கியார்த்தம் செய்துக்கொண்டிருக்கும் பிராம்மணன் பறையன் என்றும், தனக்கு மாப்பிள்ளை என்றும் சொல்லி சாக்ஷியமாக அவன் அன்றைய தினம் மத்தியானம் ஸாப்பிட்டது மாம்ஸம் என்றும், வேண்டுமானுல் வமனம் கொடுத்துப் பார்த்தால் விசதமாகும் என்றும் சொன்னுன்.

பிராம்மணனுக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று. ஆகா! என்ன கலிப்பிரபாவம்! என்று யோசித்தானும்.

இந்த மாதிரி ஸர்வசுத்தமாய் ஒரு வேளை இருக்க முடியாமல் இருக்கலாம். இருந்தாலும் இந்த 5000 வருஷத்துக்குள் அவ்வளவு கேடு வந்துவிடவில்லை. போகட்டும் கலிராஜ பக்திக்கே இவ்வளவு பிரபாவம் இருந்தால், ஜகத்ரக்ஷகனுன ஸர்வேசுவரன்மேல் எவ்வளவு பக்தி இருக்க வேண்டும்? அந்த பக்தி எங்கே என்று நாம் கேட்கலாமல்லவா?

இது எல்லாம் நமக்கு சுகத்தைக் கொடுக்கமாட்டாது. வெறுமனே புத்தி இல்லாமல் ஏதோ லௌகிகமாய்த் தெரிந்துகொண்டு, பிராந்தியை ஸம்பாதித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேமே தவிர வேறென்றுமில்லை. சாஸ்திரத்தால் சுகம் வருமே தவிர, நம்ம புத்திப் பிரகாரம் நடப்பதென்பது துக்ககரமாய் முடிந்தாலும் முடியும்.

ஆகையால் வித்தை என்பது எது? தர்மத்தைத் தெரிவித்து, எது பரமசுகத்தைக் கொடுக்கின்றதோ அதுதான் வித்தை. ஏதோ உபஜீவனத்திற்காக லௌகிக வித்தையை அப்யாஸம் செய்துக் கொண்டோம் என்று திருப்தி அடையக்கூடாது. அந்த உபஜீவனம்கூடப் போய்விட்டது. ஏன் வீணுன சிரமம் நமக்கு? எது சாச்வதமான சுகத்தைக் கொடுக்கக்கூடியதோ அந்த வித்தையை ஸம்பாதித்துக் கொண்டு நிரந்தர சுகத்தை அனுபவிக்கப் பாத்திரர்களாக, சாஸ்திரத்தை நம்பி, அதில் சொல்லியிருக்கிற பிரகாரம் நடந்தால் நிஸ்ஸந்தேஹமாய் சுகம் உண்டு என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது.

சென்ற இரு நூற்றாண்டுகளில் நம் புனித பாரத தேசத்தில் அவதரித்து தம் வாழ்க்கையினாலும் உபதேசங்களினாலும் ஜனங்களை சிரேயோ மார்க்கமென்னும் உயர்ந்த நல்வழியைக் காட்டி நடத்திச் சென்ற மஹாபுருஷர்களில் சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மிக முக்கியமானவர். அவர் ஸ்ரீ சாரதாபீடத்தின் முப்பத்தி நான்காவது பீடாதிபதியாக விளங்கிய காலத்தில் அவரைத் தரிசித்து வணங்கி நல்லோபதேசங்களைப் பெற்ற புண்ணியசாலிகளின் உயர்ந்த அனுபவங்களை கட்டுரைகளின் வடிவத்தில் ஏற்கெனவே **ஸ்ரீ குருகிருபா விலாஸம்** என்ற தலைப்பில் இரு புஸ்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளுக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது. இது மூன்றாவது புஸ்தகம்.

யாரை ஸ்மரித்த மாத்திரத்திலேயே உள்ளம் பரிசுத்தமடைந்து வைராக்யத்தின் உதயம் ஏற்படுமோ அந்தப் பரம புருஷரைப் பற்றிய பல தெய்வீக நிகழ்ச்சிகள் மிக சுவாரஸியமாக இதில் கூறப்பட்டுள்ளன. அவர் முதன் முதலில் தமிழில் செய்த சில உபந்யாஸங்களும் இதில் அடங்கியுள்ளன. அனைவரின் க்ருஹங்களிலும் அவசியம் இருக்கவேண்டிய புஸ்தகம்.

விலை ரூ. 100